# திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத
# ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்
# மகா கும்பாபிஷேக மலர்



5-7-70 ஞாயிறு

திருப்பணிக் குழு

# BHEL BOILER PLANT

## creating the power to prosper

A nation with plenty of power to build itself up with, is a nation well set on its way to prosperity and plenty. BHEL Boiler Plant is busy creating this power for India.

**POWER STATION BOILERS**

for Thermal Power Stations at Ennore (Madras), Harduaganj (U.P.), Obra (U.P.), Indraprastha (Delhi), Kothagudam (A. P.), Pathrathu (Bihar), Namrup (Assam), Bhatinda (Punjab), Badarpur (Delhi) and Ukai (Gujarat).

**PROCESS STEAM BOILERS**

for Chemical Industries at Rasayani (Bombay), for Aluminium Industries at Korba (Bombay), for Petroleum Industries at Haldia (W. Bengal), Baroda (Gujarat) and for Fertilizer Industries at Durgapur (West Bengal), Barauni (Bihar), Namrup (Assam) and Manali (Madras).

**BHARAT HEAVY ELECTRICALS LTD.**

High Pressure Boiler Plant, Tiruchirapalli-14, S. India.

BHEL-5569

உ

சிவமயம்

# திருவானைக்கா
# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
# ஜம்புகேஸ்வரர்

## மகா கும்பாபிஷேக மலர்

21–8–1970

மண்டலாபிஷேக வெளியீடு

ணடேஸ்வரி

கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ்
திருவல்லிக்கேணி, சென்னை–5
(ஆகஸ்ட் 1970)




திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி

# பதிப்புரை

திருவானைக்கா என்றும் இறையொளி விளங்கும் தலம். அன்புடன் ஓரிரு முறை வந்து வணங்கிச் செல்பவர்களுக்கும் நிலையான தெய்வீக பத்தியை வழங்கும் தலம். ஸ்ரீ ஜம்புநாதரும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியும் பூர்ண கலையோடு இருந்து திருவருள் பாலிக்கும் திருத்தலம்.

ஜம்பு முனிவர் முதலான முனிபுங்கவர்கள் தத்தம் தவ வலிமையால் செந்தமிழ் நாட்டையே வாழவைக்கும் தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகப் பெருமான், ஐயடிகள் காடவர்கோன் நாயனுர், கபிலதேவ நாயனுர் முதலிய சிவனடிச் செல்வர்கள் நாவாரப் பாடியும் உளமார வணங்கியும் மக்கள் அனைவரும் உய்ய வழிகாட்டிய தலம்.

ஸ்ரீ அருணகிரிநாதர் செந்தமிழ் முருகனைத் திருப்புகழ்பாடி வழிபட்ட தலம். தாயுமான அடிகள், பட்டினத்தார் போன்ற மெய்ஞ்ஞானிகள் போற்றிய தலம். கச்சியப்ப முனிவர், மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை போன்ற முனிவர்களும் பாவலர்களும் பாடிச் சிறப்பித்த தலம்.

கோச்செங்கட்சோழ நாயனுர்முதல் சோழர்கள் பலரும், பாண்டிய சேர மன்னர்களும், பல்லவ ஹொய்சள மன்னர்களும், நாயக்க மன்னர்களும், சதாசிவேந்திரர் முதலிய பெரியோர்களும் தத்தம் அன்புப் பெருக்கால் ஆலயத்தைக் கட்டியும் புதுக்கியும் பெருக்கியும் சிவ புண்ணியப்பேற்றையடைந்த தலம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அன்னை அகிலாண்டேஸ்வரிக்கு ஸ்ரீ சக்ரதாடங்கப் பிரதிஷ்டை செய்து அருள் விளக்கங்கண்ட தலம்.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸ்ரீ ஜம்புநாதராகவும், ஸ்ரீ ஜம்புநாதர் அகிலாண்டேஸ்வரியாகவும் திருவுருத்தாங்கி சக்தி சக்தனை யின்றி இயங்காது சக்தனும் சக்தியையின்றியியங்கான் என்பதை மக்களுக்கு உணர்த்தி, உடையாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடுவுள் நீயிருத்தி என்ற சம்மேளன முறையைத் தெளிவாக உணர்த்திய தலம்.

இத்தகைய தலத்தை என்றும் புதுமையும் பெருமையும் அழகும் குன்றுமல் பாதுகாத்து வரவேண்டியது அன்பர்களுடைய கடமையும் பெருமையுமாகும். அங்ஙனமே பலர் பாதுகாத்து வந்தனர் என்பதைப் பழைய வரலாறுகளும் கல்லெழுத்துக்களும் காட்டும்.

இன்றும் அப்படியே அரசியலார் கருத்திலும் அன்பர்கள் உள்ளத்திலும் பொது மக்கள் எண்ணத்திலும் திருவருள் புரிந்து திருப்பணி செய்யத் தூண்டியது.

திருவாளர் தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்ட தலைமைக் குழுவும், மாவட்டங்கள்தோறும், பேரூர்கள்தோறும், சிற்றூர்கள்தோறும் கிளைக் குழுவும் இயங்கத் தொடங்கின.

மடாதிபதிகள் கலைஞர்கள் கல்விமான்கள் அதிகாரிகள் வணிகர்கள் உழவர்கள் அனைவரும் தம் பரந்த அன்பையும் அறவழியீட்டிய பொருள்களையும் காணிக்கையாக உதவினர்.

திருப்பணி, திருக்கோபுரங்கள்—திருமதில்கள் சுற்றுலை மண்டபங்கள் விமானங்கள் பரப்புகள் விரிப்புகளாக இனிது நிறைவேறியது.

5–7–70 ஞாயிற்றுக்கிழமை $9\frac{3}{4}$ மணிக்கு மந்திரலோபம், கிரியாலோபம், திரவிய லோபம் முதலான குறைகள் சிறிதுமின்றிக் கும்பாபிஷேகம் வந்த மக்களுடைய அன்பு வெள்ளத்தோடு இனிது நிறைவேறியது.

அதன் நினைவாக எழுத்தாளர்களுடைய ஞான வியலில் தோன்றிய அனுபவத் தேன் சுரக்கும் தெய்வத் தாமரை மலர் ஒன்று மலரவேண்டும். அதனை ஸ்ரீ அகிலாண்டேஸ் வரியின் திருவடித் தாமரையில் சாத்தி மகிழவேண்டும் என்று திருப்பணிக் குழுத் தலைவரும், அறங்காவலர் தலைவரும், பொருளாளரும், தலைவரும் கருதினர்கள். எண்ணம் திண்ணியதாக இருந்தால் எண்ணியாங்கு எளிதில் நிறைவேறத் திருவருள் துணை செய்யு மல்லவா ! அதனல் விரிந்த மனத்தன்பர் R. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை யில் மலர்க் குழு ஒன்று தொடங்கிச் செயற்படத் தொடங்கியது. மலர் நன்ருக மலர வேண்டும் முழு வளர்ச்சியும் பெற்று மலரவேண்டும் என்பது அன்னையின் திருவருள். அதனல் மகா கும்பாபிஷேகமும் முடிந்து ஒரு மண்டலம் நாடோறும் நான்கிற்குக் குறை யாத மகாபிஷேகங்களையும் ஆயிரமாயிரந் திருநாம அர்ச்சனைகளையும் பெற்று, மண்டலாபி ஷேக நிறைவில் அதுவரை கமழ்ந்த சிவமணத்தையும் பெற்று மலர்கிறது. பூரணமான சிவம், பூரணமான மலரைத்தானே ஏற்றருள் சுரக்கும்; ஆதலால் கும்பாபிஷேக மலர் மண்டலாபிஷேகத்தில் மலரச் செய்த திருவருளை நயந்து பாராட்டுகிறேம்.

இம்மலரில் ஞானச் செல்வர்கள், அநுபூதிச் செல்வர்கள், அறிவுச் செல்வர்கள், புலவர்கள், நாவலர்கள், பாவலர்கள் பலருடைய கட்டுரைகள் மணக்கின்றன. சிறப்பாக ஆகம சம்பந்தமானவையும், ஆலய நித்யநைமித்திக பூஜைகள் சம்பந்தமானவையுமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றல் அவற்றின் தத்துவங்களும் மணக்கின்றன· அதனல் தமிழுலகம் ஆலயங்களை அமைத்து மக்களுக்கு மன அமைதி காட்டிய நம் பண்டையோர் சிறப்பை உள்ளவாறு உணர்ந்து பாராட்டும்; பயன் கொள்ளும் என்பது உறுதி.

மூர்த்திபேதங்கள் என்ற இம்மலரின் இதழ் கணபதி, நடராசர், சிவம், சத்தி முதலான திருவுருவச் சிறப்புக்களையும் அவற்றல் மக்களடையும் பயனையும் உணர்த்துவன.

பண்ணும் பரதமும், சிற்ப சித்திரங்கள் முதலிய பகுதிகள் நுண்கலைகளைத் திருக் கோவில் காத்த பெருமைகளையும், அவற்றல் நமக்கு உண்டான தனிப் பெருமையையும் காட்டுவன.

வரலாற்றுப் பகுதி நம் பண்டைப் பேரரசர்களுடைய ஆட்சித்திறம், போர்த்திறம், வெற்றிச் சிறப்பு, வென்ற பொருளால் நின்ற புகழைத் தேடிக்கொண்ட முறை முதலிய வற்றைத் தெரிவிப்பன.

சமயப்பகுதிகள் அனைத்தும் சமய சாதனங்களையும், சாதனமின்றிச் சாத்தியங்களை எய்த இயலாது என்பதையும் அறிவிப்பன.

சிறப்பிற் சிறப்பாகக் கோடக நல்லூர் சுந்தரசுவாமிகளுடைய திருவைந்தெழுத்து விளக்கம் பேரணி செய்கிறது. இங்ஙனம் பல்லாற்றும் இம்மலர் சிவமணங் கமழும் செந்தாமரையாக அன்னையின் திருக்கரங்களில் அணி செய்யும் செந்தாமரை மலரில் ஒன்ருக விளங்கும் என்று எண்ணுகிறேம். அன்பர்களுடைய கண்தாமரை வழியாக மனத்தாமரையில் எழுந்தருளி மலர்மேல் மலராக விளங்கத் திருவருள் துணை செய்யும் என்றும் எண்ணுகிறேம்.

இம்மலர் செம்மையாக வரவேண்டும் என ஊக்கங்காட்டிய வணிகப் பெருமக்கள் அனைவரும், மலர்க்குழுத் தலைவரும், திருப்பணிக்குழுத் தலைவரும், அறங்காவலர்களும் அதன் தலைவரும், அலுவலர்களும் அன்னையின் திருவருளை என்றென்றும் பெற்று இன்ப முடன் வாழ்வார்களாக.

இம்மலரைத் திருத்தி அச்சிட புரூப் முதலியன பார்த்துதவிய அறிஞர்கள், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்கள் புலவர் சீனிவாசன், புலவர் புண்ணியகோடி முதலியவர்களுக்குப் பெருநன்றி. 'சொல்லாமலே செய்வர் பெரியர்' என்பதற்கு இலக்கியமாக ஆங்கிலக் கட்டுரைகளைப் புரூப் திருத்தியவர்கள் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள். அவர்கள் என் ஆசிரியப் பெருந்தகை மகா மகோபாத்யாய ஐயர் அவர்கள் பெயரர். சிறந்த சிவபக்த சீலர். ஆதலால் சிவப் பணி எனக் கருதி நான் வேண்டிக் கொள்ளாமலே படிகளைத் திருத்தஞ் செய்துதவினுர்கள். அவர்கட்கு அன்னை அருள் சுரப்பாராக.

இம்மலரில் உள்ளன யாவும் திருவானைக்காவிலுள்ள பல உருவங்களின் நிழற் படங்களே. அவை இயற்கையான எழிலோடு காட்சியளிக்கின்றன. அவற்றைப் புகைப் படமாக உதவியவர் தொல் பொருளாராய்ச்சித் துறை அறிஞர் பெருமான் திரு. நாகசாமி அவர்களும், புதுவை பிரஞ்ச் தொல்பொருளாராய்ச்சித் துறையும் ஆகும். அவர்கள் காலத்தால் நன்றி செய்தவர்களாக ஆவார்கள். ஏனைய படங்களை நல்ல முறையில் எடுத்து உதவியவர்கள் மதுரை டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் கிளை மானேஜர் அவர்கள். இங்ஙனம் இம்மலர் வண்ண ஓவியங்களுடன் திகழச்செய்த அனைவருக்கும் அன்னையருள் என்றும் விளைவதாகுக.

மகாகும்பாபிஷேக மலரை மண்டலாபிஷேகத்தில் வெளியிடும் வண்ணம், அழகாக, அன்புடனும் சிரத்தையுடனும் எதிர்பாராது விளைந்த சில இடையூறுகளையும் பொருட் படுத்தாமல் அச்சிட்டு உரியகாலத்தில் தவருதுதவிய கபீர் பிரிண்டர்ஸ் அவர்களுடைய நற்பணி மிகமிகப் பாராட்டுக்குரியது.

இம்மலர் வெளியீட்டு வகையில் ஒத்துழைத்த அனைவருக்கும் அன்னை யருள் என்றும் நின்று நிலவுவதாக.

எல்லார் கையிலும் கண்ணிலும் கருத்திலும் இம்மலர் விளங்குவதாகுக.

இங்ஙனம்
கௌரவ பதிப்பாசிரியன்
ச. தண்டபாணி தேசிகன்

# இம்மலரில் அடங்கியவை


பக்கம்

ஆசியுரைகள் ... 2–14

வாழ்த்துக்கள் ...16–22

மூர்த்தி பேதங்கள்

விக்கிரக வழிபாடும் கும்பாபிஷேகமும் ... 24
—மதுரை ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளியது.

சிவலிங்க தத்துவ விளக்கம் ... 27
—சிவாகமப் பிரவீண குமாரசாமி குருக்கள், யாழ்ப்பாணம்.

சக்தி தத்துவம் ... 30
—வி. விஸ்வநாத சிவாச்சாரியார், வேத சிவாகம பாடசாலை, தலைமை ஆசிரியர், அல்லூர்.

ஓங்கார கணபதி ... 35
—மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

முருகன் ... 42
—அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்.

மஹா கும்பாபிஷேக விளக்கம் ... 45
—ம. வெ. மு. நாகராஜ குருக்கள், சிறுதையூர், லால்குடி.

கும்பாபிஷேக முறைகள் ... 49
—சிவத்திரு. K. வைத்தியநாத சிவாசாரியார் அவர்கள், சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், திருப்புகலூர்.

நித்திய பூஜையும் அதன் தத்துவமும் ... 52
—சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள், தலைமையாசிரியர், சிவாகம பாடசாலை, தருமபுர ஆதீனம், தருமபுரம்.

மகோற்சவ விளக்கம் ... 55
—சைவ பிரகிரியாதீப எம். ஸியாமணி சிவம், திருவாடானை.

ஆகமம்

சிவாகமம் ... 60
—சாமிநாத சிவாசாரியார், திருவாவடுதுறை.

காமிகாகமம் ... 53
—மு. அருணசலம், M.A,

பக்கம்

சமய பேதங்கள்

சைவம் ... 72
—ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஜூனியர் ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள்.

வீரசைவம் ... 75
—வித்துவான் வை. இரத்தினசபாபதி, பி.ஓ.எல்., எம்.ஏ., தத்துவத்துறை விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தேவீ உபாசனையில் ஆதாரயோகம் ... 83
—பி. கே. ஷண்முகநாதன், B.A., B.L.

சைவசித்தாந்தமும் சிவாலயங்களும் ... 91
—திருவாவடுதுறை ஆதீனவித்வான் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., காஞ்சிபுரம்.

வைணவ தத்துவம் ... 95
—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், தமிழ்த் துறைத்தலைவர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சித்தாந்தம் ... 107
—சுவாமி பரமாத்மானந்தா, ஸ்ரீ ராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர்.

வள்ளலார் கண்ட சமயநெறி ... 113
—நா. மகாலிங்கம், பி.எஸ்ஸி., எம்.ஐ.இ.

சித்த மார்க்கம் ... 116
—மா. இரத்தினசபாபதி.

Yoga—The Psychophysical Discipline ... 120
—by professor M. S. Srinivasa Sarma, M.A.

Saiva Siddhanta and Kashmir Saivisn ... 125
—by Professor P. Thirugnama sambandam

Diviane Grace and Human Freedom ... 129
—by Dr. V. A. Devasanapathi

பக்கம்

## சைவ சாதனங்கள்

திருநீற்றுப் பெருமை ... 132
—சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், சி. அருணை வடிவேல் முதலியார், தரும புரம்.

ஸ்ரீ பஞ்சாக்கர சிந்தனை ... 135
—திருவனந்தபுரம், மனோன்மணீய ஆசிரியர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களுடைய குரு, கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் எழுதியது [கி.பி. 1855–1897]

திருவைந்தெழுத்தின் நுண்மை ... 138
—திரு. வை. தட்சிணாமூர்த்தி, M. A., சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை–12.

நால்வகை நெறிகள் ... 144
—திரு. T. P. சித்தலிங்கம், M.A., சித்தாந்தப் பேராசிரியர், இந்து பல்கலைக்கழகம், காசி.

வழிபாடும் அதன் தத்துவங்களும் ... 147
—நா. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

திருத்தொண்டு ... 154
—புலவர் பெருநாவலர் திரு. அ. நடேச முதலியார்.

## இலக்கியம்

திருமுறைச் சிறப்பு ... 160
—திருமுறைக் கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஒதுவார்.

திருவானைக்காவும் திருஞான சம்பந்தரும் ... 166
—அ. மு. பரமசிவானந்தம்.

அப்பர் அடிகளும் ஆனைக்கா அண்ணலும் ... 170
—பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், M.A., தமிழ்த்துறைத் தலைவர், U.G.C. பேராசிரியர், சென்னைக் கிறித்துவக் கல்லூரி.

திருவானைக்காவும் சுந்தரரும் ... 172
—வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

திருவானைக்காவும் அருணகிரிநாதரும் ... 175
—கி. வா. ஜகந்நாதன், M.A.

திருவானைக்காப் புராணம் ... 178
—சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், தேவகோட்டை.

திருவானைக்காவும் காளமேகமும் ... 181
—புலவர் கு. திருமேனி அவர்கள், எம்.ஏ., பி.ஓ.எல்., தமிழ்ப் பேராசிரியர், தேசியக் கல்லூரி., திருச்சி.

பக்கம்

ஸ்ரீவித்தையும் ஸௌந்தர்ய லஹரியும் ... 184
—டாக்டர் டி. எம். பி. மஹாதேவன், எம்.ஏ., பிஹெச்.டி.

The Mysticism of Manickavasagar. 186
—by G. Vanmikanathan

## பண்ணும் பரதமும்

தேவாரப் பண்ணிசை ... 194
—இசையரசு M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள், பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பண்ணார் தமிழ் ... 201
—வித்துவான் திரு. க. வெள்ளைவாரணன், துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

நட்டபாடைப் பண் ... 206
—பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன், குடந்தை ப. சுந்தரேசன்.

ஆனந்த தாண்டவத்தின் அபிநயச் சிறப்பு ... 213
—சித்தாந்தச் செல்வி, சிவபிருந்தாதேவி, புதுக்கோட்டை.

நாதசுரத்தின் பெருமை ... 218
—இசைப் பேறிஞர் P. வீருசாமிப்பிள்ளையவர்கள், திருவிடைமருதூர்.

## சிற்பம்

திருவானைக்கா கோயிலின் சிற்பங்கள் (அன்றும் இன்றும்) ... 222
—திரு. பட்டாபிராமன், B,A., பிரஞ்ச் தொல்பொருளாராய்ச்சித்துறை, புதுச்சேரி.

The great Wall of Thiruvanaika Temple ... 227
—by A. V. Jeyechandran, M.A., B.L.

Thiruvanikka (Jambukeswaram) The Centre of Jambulingam or Appulingam ... 232
—by Dr. T. N. Ramachandran, F.A.S. (Padma Bhushanam)

## வரலாறு

திருவானைக்கா ... 242
—இரா. நாகசாமி, எம்.ஏ.

திருவானைக்காவில் சோழர் திருப்பணிகள் ... 253
—ஔவை. துரைசாமிப் பிள்ளை

பக்கம்

சோழன் கோச்செங்கணன் திருக் கோயில்கள் ... 259
—ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

ஹொய்சள மன்னரும் திருவானைக் காவும் ... 263
—ச. திருஞானசம்பந்தன் M.A., Lecturer in History, Annamalai University.

மதுரை நாயக்க மன்னர்களும் திருவானைக்காவும் ... 268
—ச. திருஞானசம்பந்தம் ஷை

கவிதைகள்

சாகாக்கலை ... 272
—கவியோகி சுத்தானந்தபாரதியார்

அன்னையின் அருள் வேட்டல் ... 273
—ஆ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்

திருவானைக்காவின் இயற்கை எழில் ... 276
—கலைவாணன் அப்புலிங்கம்.

போற்றி போற்றி ... 281
—சௌந்திரம் கைலாசம் அவர்கள்.

பக்கம்

பொதுக் கட்டுரை

பழமொழியும் சமய உண்மைகளும் ... 284
—பேராசிரியர் பெருமாள், M.A.

திருவானைக்காத் திருப்பணி ... 288
—ஜி. வரதராஜன், பி.ஏ., தலைவர், ஆனைக்கா அறங்காவலர் குழு.

அகிலாண்டநாயகி அருட்பிரசாதம் ... 291
—திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள், M.A., B.L.

திருவானைக்கா உலா ... 294
—புலவர், S. சீனிவாசன், சென்னை.

என்கடன் பணிசெய்து கிடப்பதே ... 299
—சங்கீதபூஷணம், புலவர், திரு. மு. கு. புண்ணியகோடி, சென்னை.

கல்வெட்டுகளின் குறிப்புகள் ... 303
—திரு. நாகசாமி, M.A.

நிகழ்ச்சி

நன்றாக நடை பெற்றது ... 320

விளம்பரங்கள் ...330–43



உ

# பாராட்டு

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புநாதப் பெருமான்
திருக்கோயில் திருப்பணியைத்
திருவருள் துணைக்கொண்டு நன்கு நிறைவேற்றிய
திருப்பணிக் குழுத்தலைவர்
**திரு தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை,** M.A., B.L.,
அவர்களுக்கும் அவர்களுடன் முழு மனத்துடன் ஒத்துழைத்த ஏனைய திருப்பணிக் குழுவினருக்கும் மகா கும்பாபிஷேகத்தில் எல்லா வகையிலும் பங்குபற்றிய அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் பாராட்டும் நன்றியும் என்றென்றும் உரியதாகுக.

இங்ஙனம் அறங்காவலர் குழு :
ST. Rm. வேங்கடாசலம் செட்டியார்
M. நாராயணசாமி அய்யர்
C. நமசிவாயம் பிள்ளை
P. K. ஜயமணி
G. வரதராஜ பிள்ளை (தலைவர்)

மகராசன், B.A., L.T.,
நிர்வாக அதிகாரி & திருப்பணிக் குழுச் செயலாளர்



வெண்ணாவற் பெருமானை அன்னை அகிலாண்டேஸ்வரியும், சிலந்தியும், யானையும் வழிபடுதல்

# ஆசியுரைகள்

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
# ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள்
# ஸ்ரீமுகம்

பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் அப்பு க்ஷேத்திரமாக விளங்குவதும், ஜம்பு முனிவர் இத்தலத்தில் வாசம் செய்ததால் ஜம்புகேஸ்வரம் என்றும், யானையால் பூஜிக்கப்பெற்றதால் திருவானைக்கா வென்றும், மேலும் பல காரணப் பெயர்களால் போற்றப்படுவதும், அடியார்களால் பாடல் பெற்றதும், ஸ்ரீ ஆதி சங்கரரால் ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டை செய்யப்பெற்றதுமான இந்த திவ்ய க்ஷேத்திரத்தின் ஆலயத் திருப்பணிகளை முன்னாட்களில், சோழ, பாண்டிய, நாயக்க மன்னர்களும், பிற்காலங்களில் சிவ பக்தர்கள் பலரும் நடத்தி வந்துள்ளார்கள்.

இந்த ஸ்ரீ அகிலாண்டேச்வரி திருக்கோயில் திருப்பணிக் காரியங்களை டி. எம். நாராயணஸ்வாமி பிள்ளை அவர்கள் தலைமையில் திருப்பணிக் குழு அமைத்துக்கொண்டு திருப்பணிக் காரியங்களை நடத்தி முக்கியமாக விபூதித் திருமதிலைப் புதுப்பிக்கும் காரியத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தத் திருப்பணிக் காரியங்களிலும், கும்பாபிஷேகக் காரியங்களிலும் ஈடுபட்ட யாவரும் ஸ்ரீ அகிலாண்ட நாயகி ஸமேத ஸ்ரீ ஜம்புநாதரின் அருளால் எல்லா நன்மைகளையும் அடைவார்களாக.

ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரம்,
சாதாரண வருஷம்
வைசாக சுக்ல நவமி

**நாராயணஸ்ம்ருதி :**

### திருவாவடுதுறை ஆதீனம் குரு மகாசந்நிதானம்

### ஸ்ரீலஸ்ரீ

## அம்பலவாண பண்டாரச் சன்னதி அவர்கள்

உலகங்கடந்த முதல்வன், உலகில் உயர்ந்த பிறப்பெடுத்த மக்கள், தன்னை ஒருவாறு விளங்கக்கண்டு வழிபட்டு, மனக் கவலையும் துன்பமும் இன்றி இன்பநல்வாழ்வு வாழ்தற்பொருட்டுத், திருவுருவங்களையும், உண்மையாம் பெரிய நல் அடையாளங்களையும் கொண்டு, எழுந்தருளியுள்ள அருள்நிலைத்தானங்களே திருக்கோயில்கள் ஆகும். நம் தமிழகத்தே பண்டுதொட்டுத் தலையாய அறிவுடைய பெருமக்கள் திருக்கோயில் வழிபாட்டை மேற்கொண்டு வந்ததோடு, திருக்கோயில்களைத் தாம் வாழும் ஊரின் இதயத்தானமாகவே கொண்டு போற்றியும் வந்துள்ளனர்.

இக்கருத்துப்பற்றியே திருநாவுக்கரசர் நாயனர் திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் எனவும்,

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே

எனவும் அருளிச் செய்வார் ஆயினர்.

இத்தகைய சிறப்பு உள்ள பெரிய திருக்கோயில்களுள் ஒன்று ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியோடு உடனுகிய திருஆனைக்கா அண்ணல், தான் அட்டமூர்த்தி என்பதனை விளக்குதற்பொருட்டு, நீர் வடிவில் நின்றருளும் ஸ்ரீ ஜம்புகேஸ்வரம். நம் பண்பாட்டின் உயிர் நிலையாகவும் தெய்வக் கலையின் முடிநிலையாகவும் திகழும் இத்தகைய திருக்கோயில்களைப் பண்டைய வனப்பும் சிறப்பும் மாருதபடிப் பாதுகாத்துவருதல் தலையாய அறிஞர்களின் கடனே ஆகும். நந்தமிழக அரசு இத்துறையில் மக்களை ஊக்குவித்து வருவது பாராட்டத்தக்கது.

இத்திருக்கோயில் திருப்பணியைப் பல்லாண்டுகள் அரிதின் முயன்று முற்றுவித்து, வரும் ஆனி மாதம் 21ம் தேதியன்று மகா கும்பாபிஷேகம் நிகழ்த்த இருப்பதும், அதன் சார்பில் இனிய நல்ல கட்டுரைகள் தாங்கிய மகா கும்பாபிஷேக மலர் ஒன்று மலர்ந்து வெளிவர இருப்பதும் நமக்கு மிக்க மகிழ்ச்சியை ஊட்டுகின்றன. மகா கும்பாபிஷேகம் நன்கினிது சிறப்பாக நடைபெறவும், கும்பாபிஷேக மலர் பலர்க்கும் நல்லுணர்வும் இன்பமும் பயந்து இறவாத இன்ப அன்பையாங்கணும் பெருக்கவும் ஸ்ரீ ஞானமா நடராஜமூர்த்தியின் பாத தாமரைகளைச் சிந்தித்து வழுத்துகின்றோம்.

## தருமயாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை குரு மகாசந்நிதானம்
## சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

"வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெல்லாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே."

என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கு. திருவானைக்காவில் வீற்றிருக்கும் சிவபிரானை வஞ்சமில்லாமல் வணங்குதல் வேண்டும் என்பதும், அதனால் இனிய சொற்களை பேசி வாழ்தலைப் பெறவேண்டும் என்பதும், உள்ளம் நைந்து நைந்து அவனைப் பணிவதால் உள்ளம் குளிர்ந்திடும் என்பதும், 'அஞ்சேல்' என்று அன்னவர்க்கே அருளுவான் என்பதும் அப்பர் அடிகள் இதில் வற்புறுத்தும் செய்திகள் ஆகும்.

திருவானைக்காவில் கோச்செங்கட்சோழர் பிறப்பிற்குக் காரணமான திருவரலாறு நிகழ்ந்தது. இங்குச் சிலந்தியின் திருத்தொண்டும், ஆனையின் திருத்தொண்டும் மனித சமுதாயத்திற்கு அறிவுறுத்தும் நெறி யாது? தொண்டு நெறியே அன்றோ? அத்தொண்டு நெறியே அரனடிக்குச் செய்யும் பெரும்பணி ஆகும்.

திருவானைக்காப் பெருமானைச் சென்று தொழுது, அங்கு அப்பு லிங்கமாக—நீர்த்திரளாக—விளங்கும் பெருமானைப் பரவி இன்புற்ற அப்பரடிகள் தொண்டின் உருவமாகவே விளங்கிய பரமாசாரியர். அந்த ஆசாரியப் பெருமக்களின் அடிபரவித் திருக்கோயில் திருப்பணியில் பல்லாண்டுகளாக ஈடுபட்டு உழைத்து வரும் குழுவின் திறம் பாராட்டற் குரியது. இத்திருப்பணிக் குழுவின் தலைவராக விளங்கும் நம் அன்பர் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள் தெய்வ பக்தியும், செயல்வளமும் உடைய பெருந்தகையார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராயிருந்த அனுபவமும், அறநிலையங்களின் ஆட்சித் துறைக் கண்காணிப்பில் நிறைந்த அனுபவமும் உடையவர்.

அவ்வன்பருடைய தலைமையில் இயங்கும் இந்தத் திருப்பணிக் குழு தன் பணியைச் செம்மையாக முடித்து, கும்பாபிஷேகம் நிகழ்த்துவது தமிழகத்தின் பாராட்டிற்குரிய பெருஞ்செயல். மகா மந்திரங்களின் வடிவமாக விளங்கிவரும் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் திருவருளை உலகிற்கு வாரிவழங்கும் இவ்விழா இனிது நிகழ்வதாக. இத்திருப்பணியில் ஈடுபட்ட திருத்தொண்டர்கள் எல்லா நலங்களும் பெற்று நீடுவாழ்க.

கும்பாபிஷேக மலர் பக்தி மணம் வீசித் தமிழ்கூறு நல்லுலகமெல்லாம் உலவி நலம் விளைக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல சொக்கலிங்கப் பெருமான் சேவடிகளை இறைஞ்சுகின்றோம்.



ராஜ கோபுரம்

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்,

## ஸ்ரீலஸ்ரீ

# காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

சோழ நாட்டில் தேவார மூவரது மெய்ஞ்ஞானத் திருநெறிய தமிழ் பெற்ற தலமானதும், பஞ்சபூதத் தலங்களில் அப்புத்தலமாக விளங்குவதுமான தலம் திருவானைக்கா. வெள்ளையானை வழிபட்டதாதலின் திருவானைக்கா என இத்தலம் பெயர் பெறுவதாயிற்று. 'சிலந்தியும், ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து' வழிபட்டு, மறு பிறவியில் கோச்செங்கோட் சோழனான வரலாறு இத்தலத்துக்குரியது. கோயிலில் கருவறையில் எப்பொழுதும் நீர் நிரம்பி இருத்தலின் இறைவனைச் "செழுநீர்த்திரள்" என்று தேவாரம் கூறும். திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டப் பெற்ற நீறிட்டான் மதில் என்பது இருத்தலும் இத்தலத்துக்குரிய சிறப்புக்களில் ஒன்று.

காவிரியில் நழுவி விழுந்த உறையூர்ச் சோழனது மாலை திருமஞ்சனக் குடத்தில் புகுந்து இறைவனை அடைந்த வரலாறும் இத்தலத்துக்குரியது. இத்தகைய சிறந்த தலத்துத் திருக்கோயில் திருப்பணி பெருஞ்செலவில் முடிக்கப்பெற்றுக் கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெறுகிறது. இத்திருப்பணியை நன்கு நிறைவேற்றியவர்கள் திருவானைக்கா, திருப்பணிச் செல்வரும், சமயம், கல்வி பொதுஸ்தாபனங்களில் முதன்மையாக நின்று தொண்டு பல புரிபவரும், இந்த அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையராக இருந்தவரும், தில்லை நடராசப் பெருமான் திருவடிகளிடத்து இடையறாப் பேரன்பு பொருந்தியவரும், பக்த சிரோமணியும் ஆகிய திருவாளர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள் ஆவர். இவருக்குத் திருவானைக் கோவிலில் எழுந்தருளியுள்ள ஆதிச் செல்வராகிய ஜம்புகேஸ்வரப் பெருமான் திருவருள் நிறைவதாகுக. மகா கும்பாபிஷேக மலர் வாசகர்களுக்குப் பயன் தருவதாகுக.

## திருவண்ணாமலை ஆதினம்,

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழகம் தெய்வ மணங்கமழும் திருநாடு. தமிழ் நாகரிகத்திற்கு ஊற்றுக்கண் தமிழர்கள் கொண்டொழுகிய சமய நெறியேயாகும். தமிழரது அறிவில் பூத்துச் செழித்த சிவநெறி உலகத்தின் பொதுநெறி. தமிழக வரலாற்றின் மூலமும் முதலும் சமய நெறியேயாகும். தமிழகத்தின் வாழ்க்கை சமயநெறியை மையமாகக் கொண்டே வட்டமிட்டு வளர்ந்து வந்திருக்கிறது. கல்லெல்லாம் கலையாக்கிக் கலையெல்லாம் கடவுளாகக் கண்ட பேராற்றல் தமிழினத்திற்குத் தனியுரிமையுடையதாகும்.

தமிழகத்தை, அன்னை காவிரி வலம் வந்து வளப்படுத்தி வாழ்விக்கின்ருள். தமிழக மண்ணுக்கு வளம் சேர்ப்பது காவிரிப் பேராறு. தமிழ்மொழிக்கு வளம் சேர்ப்பது திருக்கோயில்கள். தமிழரின் மனத்திற்கு வளம் சேர்ப்பது அவர்கள் கொண்டொழுகிய அருளியல். தமிழகத்தை அணிசெய்து நிற்கும் திருக்கோயில்கள் பலப்பல. ஆயினும், பொங்கு பேரருள் தலமென விளங்கும் திருஆனைக்கா, திருவருளின் வைப்பு. இத்திருத்தலத்திற்குக் கல்லா உயிர்களையும் கசிந்துருகி நிற்கத் தெரியா உயிர்களையும் கூட ஆட்கொள்ளும் தகுதி உண்டு. இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை ஆனைக்கா அண்ணலை அப்பரடிகள் அகங் குளிரப் பாடுகின்ருர். அப்பரடிகளின் அருளார்ந்த நெஞ்சு, நின்று திளைத்த திருத்தலங்களில் திருஆனைக்காவும் ஒன்று. இத்திருத்தலத்தில் அப்பரடிகள் திருமுறை பாடியருளும்பொழுது, இறைவனை மட்டும் எண்ணுமல் இவ்வுலகிடை வாழும் மக்களைப் பற்றியும் எண்ணுகின்ருர். இவ்வுலகியலே, உண்மை என்று கருதி, உண்மை உணராது, நாத்திகம் பேசுவோரைப் பரிவுடன் அணுகி, ‘நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே’! என்று கேட்டுக்கொள்கின்ருர். நாத்திகம் பேசுதல் மட்டும் தீங்கல்ல. ஆத்திகத்தில் நின்ருெழுகினுலும் தீயனவற்றிலிருந்து விலகவேண்டும் என்றும் எடுத்துரைக்கின்ருர்.

வஞ்சனை, மனித மரபுக்கே மாறுபட்டது. மனிதகுல உறவுக்கு உலை வைப்பது வஞ்சனையேயாகும். மாணிக்கவாசகருங்கூட ‘வஞ்சப்புல னைந்து’ என்று பேசுவார். வஞ்சனையென்பது, நன்மைபோலக் காட்டித் தீமை செய்வதாகும். நடிப்பால் நம்பவைத்துப் பின் பொழுது பார்த்துத் தீமை செய்தல் வஞ்சனையின் இலக்கணம். இந்த வஞ்சனை, கொள்வோனையும் கெடுக்கிறது. அவனைச் சார்ந்தோனையும் கெடுக்கிறது. வஞ்சனை உள்ளத்தோடு ஆனைக்கா அண்ணலைத் தொழுதல் நன்றன்று. அவன் அன்பன் அப்பரடிகளே “என்பொன் ஈசன், இறைவன்” என்று உள்குவார்க்கு அன்பணுகிடும் ஆனைக்கா அண்ணலே” என்று கூறுகின்ருர். வஞ்சனையும் அன்பும் ஒன்ருேடொன்று முரண்பட்டன. ஆதலால் முதலில் ‘வஞ்சனையை விடுமின்’ என்று ஆணையிடுகின்ருர். அடுத்து வஞ்சனையைப் போலத் தீமையுடையது கொடுஞ்சொல் பேசுதல். கொடுஞ்சொற் பேதலும் கொடிய வழக்கமேயாகும். ஆதலால், அடிகள், ‘வெஞ்சொல் இன்றி விலகுமின்’ என்று ஆணையிடுகின்ருர். அடுத்து ‘நெஞ்சம் அன்பினுல் நைந்து நைந்து எந்தை ஈசனை நினைந்துருகும் பொழுதே உள்ளம் குளிரும். திருவருளும் கோயில் கொள்ளும்’ என்று அடிகள் ஆற்றுப்படுத்துகின்ருர்.

திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள பெருமானை உள்கி நினைத்தால் அவன் அஞ்சலென்று அருள் வழங்குவான் என்று அப்பரடிகள் உறுதி கூறுகிருர். ஏன், இன்னும் ஐயம்? ஆனைக்கா அண்ணலை வழிபடுவோம்; அவலம் தீர்ப்போம். எங்கும் ஆனைக்கா அண்ணலின் இனிய அருள் தழைப்பதாக. ஆனந்தத் தேனிருக்கும் பொந்தாகிய ஆனைக்காத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து, திருமுழுக்குச் செய்து பெருஞ் சாந்தி விழாக் காண முன்னின்ருேர் அனைவர்க்கும் நெஞ்சு நிறைந்த பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

### தொண்டை மண்டலாதீனம்
### மெய்கண்ட தேவர் சந்தான ஞானபீடத்துக் குருமஹா சந்நிதானம்
### ஸ்ரீலஸ்ரீ
## ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவானைக்கா ஒரு பெரிய சிவஸ்தலம். திருநீற்று மதில் ஒன்றே அதன் மாட்சியை வெளிப்படுத்துகின்றது. அது கட்டிய முனிவர் திரு நீறு அளித்து மக்களை உய்வித்தருளினர். அத்திருக்கோயிலமைப்பு வேறு யாண்டும் காண்டலரியது. அங்குத் திருமூலர் முதலிய பெருந்தவத்தோர் ஞானியர் வாழ்ந்து மக்களைத் திருவருள் நெறியிற் செலுத்தினர். 'ஸ்ரீ புவனை கலைஞானதீபம்' எனப் பெயரிய ஞான நூலை அருளியவர், அத் தலத்தில் இருந்து அதனைப் பாடியவர். அவர் திருமூலர் பரம்பரையினர். சிவபிரானை எட்டுருவில் ஆகமவிதிப்படி வழிபடும் விருப்பினர். நீரில் வழிபட்டு உய்யவேண்டின் அத்தலத்தை எய்தி அருள் பரப்பாளர் திரு வாரூர் திருவேகம்பம் நிலத்தில் வழிபடற்கும், திருவண்ணுமலை நெருப் பில், திருக்காளத்தி காற்றில், தில்லை விண்ணில் வழிபடற்கும் உரியன. சூரியனூர் கோயில் மூன்று இடங்களில் உள்ளன. சூரிய சந்திரர் வழி பாடு எல்லாக் கோயிலிலும் உண்டு. வழிபடும் ஆன்மா சிவவழிபாடு செய்தலைச் சிவபூசை செய்வோர் அறிவர். எட்டுருவிலும் சிவனை வழி பட்டு உய்ய உணர்ந்தோர் **'எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றவர்!** ஆவர். அவரே சீவன் முத்தர். அவ்வெட்டனுள் ஒன்றன் உருவில் திருவானைக்காவில் வழிபடின் ஞானம் பெறுவர். திரு வானைக்காவில் உறைசிவனை ஞானம் ஆனுய் என்றருளிய அப்பர் திரு வாக்கு அறிக.

அத்தகு சிவத்தலம் நெடுங்காலத்திற்குப் பின், ஒரு திருப்பணிக் குழுவை நிறுவிப் பெரிதும், திருத்தியும், புதுப்பித்தும் திருப்பணி செய்த பெருமை மாட்சிமை சான்ற டி. எம். நாராயணசாமிப் பிள்ளை எம். ஏ., பி. எல்., அவர்களுக்கு உரியதாகும். அவர்களுக்கும், திருப்பணிக் குழுவினர் அனைவர்க்கும், செயலாளர், புலவர் குரு. வரதராஜப் பிள்ளை பி. ஏ., அவர்களுக்கும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருவருளால் எல்லா நலங்களும் வளங்களும் உண்டாகுக. எல்லாரும் இன்பம் எய்தி இனிது வாழ்க.

சிவம்

## திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயம்

## ஸ்ரீலஸ்ரீ

# ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

## (ஏழாம் தலைவர்)

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே !
வெங்கண் விடையாய் ! எம்வெண் வலுளாய் !
அங்கத் தயர்வா யினளா யிழையே.

—திருஞானசம்பந்தர்

விண்ணகத் தேவரும் நண்ணக் கருதும் சிறப்பிற்குரிய இம் மண்ணகத்தே, "பரமசிவன் உணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையும் பாரில் விரவிய துயிர்க் கீறெய்தி வீடுபேறு அடை"தல் இல்லை. இறைவன் தனிப்பெரும் பசுபதியாக ஐம் பெரும் பூதமுதலாம் எல்லாப் பொருள்களிலும் நிறைந்துளன். எவ்வெப்பொருளும் அவனேயாகி நிற்கும் நிலை அவனுக்கே உரிய தன்மையாம்.

இந்நெறியினை மக்கள் யாவரும் உணர்ந்து கடைப்பிடிக்கவேண்டுமென்னும் குறிக்கோளுடன் தோன்றிய தலங்களே, ஐம்பூதத்தலங்கள். ஐந்து சபைத் தலங்கள், ஏழு விடங்கத் தலங்கள், எட்டு வீரட்டத் தலங்கள் அனைத்தும் தேவரும், முனிவரும், மானிடரும் வழிபட்டுப் பேறுபெற்ற திருத்தலங்களேயன்றி. ஈ, எறும்பு, குரங்கு, அணில், பாம்பு, பசு, யானை, சிலந்தி முதலிய அஃறிணையுயிர் களும் வழிபட்டுப் பேறு பெற்ற தலங்களும் ஆம்.

கோச்செங்கோட் சோழர் முன் பிறவியிற் சிலந்தியாயிருந்தபோதே வாய் நூலாற் கோயில் கட்டினர். அப்புண்ணியத்தாலும் சிந்தனையாலும் சோழ மன்ன னாகத் தோன்றிய பின்னும் எழுபது கோயில்கள் கட்டினர். அவற்றுட் சிறந்தது திருவானைக்கா. இன்று புனைவு பெற்றுத் திகழ்கிறது. திருவானைக்காத் திருக் கோயில் மதிலினை அன்று திருநீற்றையே கூலியாக இட்டுத் திருப்பணியினை நிறை வேற்றிக் கொண்டான் நிமலன். இன்று, புண்ணியசீலர்கள் வாயிலாகத் தானமர் தானத்தினைச் செப்பஞ் செய்வித்துக் கொள்கிறான்.

இப்பெரும் புண்ணியப் பனியினைத் தொடக்கநாள் முதலாகவே தலைமை யேற்றுச் செப்பமுற நிறைவேற்றும் திருவினர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., ஆவார்கள். தம் திருக்கோயிற் பணிக்குத் திருநீற்றினையே கூலி யாக அளிக்கச் செய்து முற்றுவித்துக்கொண்ட முதற் குருநாதரைப் பெற்ற இம் மடாலய அன்பராவார். இம் மடாலய ஐந்தாங் குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளிடம் தனிப்பற்றுக் கொண்ட பெரியார். அறநிலையக் குழுவின் தலைவராக விளங்கிய நாளிலே அவ்வருங் குருமூர்த்திகளின் ஆலோசனைகளை ஏற்றுச் செயலாக்கிய செம்மையார்.

பல பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு, அயராது பணியாற்றி வரும் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்களும் இச்சீரிய அறப்பணியிற் பங்கு கொள்ளும் ஏனையோரும், பொருளாலும், உழைப்பாலும் ஆதரவளித்த அன்பர்களும் எம் மயிலூர்தி முருகவேள் இன்னருளால் நீடு வாழ்க.

திருவானைக்கா கோயிலைக் கட்டிய,



சிலந்திச் சோழன் எனப்பெறும்
கோச் செங்கண்ணன்

## ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்க இராமசாமியடிகள்

ஸ்ரீ சாந்தலிங்கசாமிகள் மடம், பேரூர்

(க)

காவிரி நடுவண் மிகப்பெரி தாகக் கவின்திரு மதிலுட னோங்கி
பூவிரி சோலை சூழ்ந்தகோ புரங்கள் புறநகர் நிற்பன தமக்கும்
நாவிரி சொல்லால் ஏத்திட அருளும் நலம்பொலி ஆனைக் காவதனை
பாவிதந் தோதும் பான்மையை எல்லாம் பகர்ந்திடல் எளிய தொன்
[றன்றே.

(உ)

ஊனைக் காவல் கைவிட் டுள்ளே உகப்போர்க் குணர்பொருளாய்
ஆனைக் காவில் அமரும் பெருமான் அருள்சேர் குடமுழுக்கு
தேனைப் பாலை அமுதை நிகர்க்கும் செந்தமிழ் நன்மலரால்
வானைப் பெரிதா எண்ணு வண்ணம் மகிழ்வு தருமன்றோ.

(ங)

மன்னர் துறவோர் வாழ்த்தும் பணியும் வளர்த்த ஆனைக்கா
பின்னர் பணிபல்லோர் செய்திடவே பிறங்கி யிந்நாளில்
நன்னர் நெஞ்சத் தன்பர் குழாங்கள் நாடிப் பணிசெய்ய
முன்னர்த் தலைமை யேற்றூர் திருச்சி மெய்யர் நல்லன்பர்

(ச)

ஆயநா ராயண சாமிப்பேர் அண்ணல் அவர்முயற்சி
ஏயவிட மெல்லாமிது வேயாய் இருந்தவத னாலே
தாயன் னுன்எம் எந்தை அருளால் சாரும்குட முழுக்கு
தூயதான வாழ்வில் வுலகில் துளங்கச் செயும் வழிகாட்டும்

(ரு)

வாழ்கதிரு வானைக்கா வாழ்க பணிபுரிவோர்
சூழ்கதமிழ் பண்பு தழைத்து.

### கௌமார மடம்

## ஸ்ரீலஸ்ரீ சுந்தர சுவாமிகள்

தேனேக்கா வின்மலர்கள் சிந்துமெழிற் சீர்திகழும்
ஆனைக்கா விற்குலவும் ஆதிபரன்—மானைக்
கரத்தேந் தருட்சம்பு மாதேவன், நீர்சூழ்
தரக்கோயி லுள்மருவுற் ருன்.

சைவக் குரவருடன் தாயுமா ணுர்,முதலோர்
செய்துதிப்பா மேவும் சிறப்பினதே—தெய்வவருட்
சங்கரப்பேர் மாமுனிசெய் தாடங்கம் ஏற்றன்னை
தங்கியதா னைக்காத் தலம்.

அகிலாண்ட கோடிகள்போற் ருனைக்கா மேவும்
அகிலாண்ட நாயகிப்பே ரன்னை—முகில்போலும்
கூந்த லழகி குலவுகடைக் கண்ணருட்சீர்
வாய்ந்தவர்கொள் வார்பலநல் மாண்பு.

ஐரா வதமும் அணிச்சிலந்தி யும்பூஜை
செய்மேன்மை யுற்ற திருத்தலமாய்—மெய்தோயும்
கோச்செங்கட் சோழன்செய் கோயிலினில் மன்னுமுயர்
ஈச்சுரன் வெண் ணுவல் இறை.

ஈசனே சித்தவுரு வெய்தித் திருநீற்றைத்
நேசமுடன் தந்துசெயு நீண்டமதில்—வீசுபுகழ்
மண்டித் திகழுமுயர் வான்வரையென் ருவதன்சீர்
விண்டிடயா ராலாகு மே.

நாட்டுக்கோட் டைப்பதியில் நண்ணு சிதம்பரனுர்
ஈட்டுப்பொரு ளாற்புதுப்பித் திட்டபணி—காட்டும்
திருக்கோயில் கொண்ட திருவானைக் காவில்
விருப்புடன்செய் தார்பணிகள் மேல்.

மண்டபம், விமானம், மதில், குளங்களின் பணிகள்
கொண்டஅர சாங்கம் கொடுத்தநிதித்—தொண்டு
நிறைவுற்றுக் கும்பநீர் நீடுவிழா இந்நாள்
இறையருளால் எய்திற் றினிது.

நாரா யணசாமி நண்பர், திருப்பணியின்
சீரார் குழுத்த லைமை சேருயர்வால்—பாரார்
புகழ்கும்ப நீராட்டு பொற்புறக்கண் டின்பம்
திகழ்வுற்ருேர் வாழ்க சிறந்து.

# ஸ்ரீபாத–பூசை அம்பலத்தாடும் சுவாமிகள் மடம்

## புதுச்சேரி

வெண்ணாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள விண்ணவர் பெருமான் வெயிலுகந்தவன்; மழையில் மகிழ்பவன்; தீயேந்தியவன்; காற்ருகக் கலந்தவன்; வெளியாய் விரிந்தவன், அடியார்கள் செய்யும் அனுசிதங்களைப் பொறுப்பவன் என்பதை அறியாத சிலந்தியும், யானையும் போட்டியிட்டுப் பூஜை செய்ய, அவைகளுடைய அன்புக்காக மெச்சி இறைவன் யானைக்கு வீட்டுலகத்தை அளித்தார். சிலந்தியைச் சோழர் தம் குலத்தினில் பிறப்பித்திட்டார். அவனே கோச்செங்கோட் சோழன்.

பழம்பிறவியின் நினைவு மாருமல் அவன் எழுப்பிய கோயில்களே மாடக் கோயில்கள். யானை ஏருப் பெருங்கோயில்கள். அவற்றுள் சிறந்தது திருவானைக்காத் திருக்கோயில். அது மிக விரிந்தது. ஐந்து சுற்ருலைகளை உடையது. ஏழு கோபுரங்களை உடையது. திருநீற்றுத் திருமதில் முதலான மூன்று மதில்களை உடையது. இத்தகைய பெரிய ஆலயத்தில் இயற்கை காரணமாக இடிபட்டுப்போன இடங்களையெல்லாம் செப்பஞ் செய்யச் சிவப் பணியில் திருவருளால் ஈடுபட்ட பெருந்தகையாளர் திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள்.

அவர்களுடைய அருமுயற்சியாலும், அடியவர் குழாத்தின் துணையாலும் தவச் செல்வர்களுடைய பொருளுதவியாலும் ஆலயம் புதுப்பிக்கப் பெற்று, மஹா கும்பாபிஷேகம் நிகழ இருப்பதை அறிந்து மகிழ்கிருேம்.

அம்பலத்தாடும் ஆனந்தக் கூத்தன் திருவருளால் திருப் பணிக் குழுவினரும், கொடை வள்ளல்களும், உழைப்பாளர்களும் என்றும் இன்பம் பெருக வாழ்வார்களாக.

வாழ்க சீர் அடியார் எல்லாம்.

ஸ்ரீ புவனேஸ்வரி அதிஷ்டானம்

## ஸ்ரீ சாந்தானந்தா ஸ்வாமிகள்

### புதுக்கோட்டை

சைவம் செழித்த நம் தென்னுடு புண்ய க்ஷேத்திரங்கள் நிறைந்தது. அதிலும் நாயன்மார்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவைகள் பல. நால்வர்கள் மனமுருகிப் பாடிய—ஸாந்நித்யம் நிறைந்த பண்டைக்கால ஆலயங்கள்தான் எவ்வளவு எவ்வளவு? இவ்வாறு பாடல் பெற்றதும் புராணப் பெருமை வாய்ந்ததுமான புண்யத் திருப்பதிகளில் ஜம்புகேஸ்வரம் மிகச் சிறந்தது.

திருவானைக்கா க்ஷேத்திரத்தில் இறைவன் அப்புலிங்கமாக விளங்குகிருர். பஞ்ச பூதங்களில் நீர் (அப்பு) பிராணிகளுக்கு உயிரைக் கொடுக்கவல்லது.

'' யோ, அபாம் ஸ்வரூபைரைந்ருணும் கரோதிஸஞ்ஜீவனம் ''

என்று சிவகவச ஸ்தோத்திரத்தில் சொல்லப்படுகிறது. அன்னமில்லாமல் பிராணதாரணம் செல்ல இயலாது. அதனுல்தான் கடவுள் ஜலரூபமாயிருந்து ஜீவராசிகளை உயிர்ப்பிக்கிருர் என்று கூறுகிறது, மேலே சொல்லப்பட்ட மந்திரம். ஸஞ்ஜீவினியான அப்பு ரூபமாய் விளங்கும் இப்பரமேச்வரனுக்கு உற்ற துணைவியாய் நின்று ஜீவராசிகளைக் காப்பாற்றி வருகிருள் அகிலாண்டகோடி ப்ருமாண்ட நாயகியாம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி.

இந்த ஸ்தலத்தில் அமைந்திருக்கும் திருக்கோயில் பஞ்சப்பிரகாரங்களுடன் விளங்குகிறது. சரீரத்தின் பஞ்சகோசங்களையும் தாண்டி ஹ்ருதய குஹையில் தங்களை விட்டு வேருகநில்லாத சேதன சக்தியுடன் ஒளி வீசி நிற்கும் அச்சைதன்ய ரூபமான ப்ரும்ம தத்வமாம் அகப்பொருளை நமக்குக் காட்டிக்கொடுக்கும் வகையிலல்லவா அமைக்கப்பட்டிருக்கிறது இந்தத் திருக்கோயில்.

விபூதிப் ப்ராகாரத்தை அமைத்தவர்களுக்கு இறைவன் விபூதியைக் கூலியாகக் கொடுத்தவர் என்று கூறுகிறது சரித்திர வரலாறு. பகவானுக்கு ஆலயம் கட்டிப் ப்ராகாரம் அமைப்பதில் ஈடுபட்டவர்களுக்கு கருணைக்கடலாம் கடவுள் விபூதியை (அணி மாதிஅஷ்ட சித்திகளையும்) அளிக்கிருன் என்பதைத்தான் இவ்வரலாறு தெளிவுபடுத்துகிறது.

இவ்வாலயம் எக்காலத்தில் நிர்மாணம் செய்யப்பட்டதோ அறியோம். கல்வெட்டுக்களிலிருந்து சரித்திரகாலத்துக்கு முன்பே என்று சொல்லப்பட்ட கோவிலரசுகள் ஏற்பட்ட காலம் முதல் இக்கோவில் விளங்கியதாய்த் தெரியவருகிறது.

இப்புராதனக் கோவிலுள்ள அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரரின் அருளை நாம் என்றும் அடைந்து கொண்டேயிருக்க வேண்டுமாயின் இவ்வாலயத்துக்குத் திருப்பணி செய்து புதுப்பிப்பது மூலம் நாம் பக்தியையும் புதுப்பித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

நூதனமாய் ஆலயம் நிர்மாணம் செய்கிற பெருமக்கள் உத்தமமான கதியை அடைகிருர்கள் என்கிறது ஸ்காந்த மஹா புராணம்.

'' நூதனம் யே ப்ரகுர்வந்தி இஷ்டகை ரச்மனுபிவா
ஸ்வர்க்கே ஹி தே ப்ரபோதந்தே யாவத் திஷ்டதி நிர்மலம் ''
யஸோ பூமௌ த்விஜஸ்ரேஷ்டா: நாத்ரகார்யா விசாரணு ''

(செங்கல்களாலோ கல்லினுலோ புதிதாக யார் ஆலயம் நிர்மாணம் செய்கிருர்களோ அவர்கள் இக்கோவில்கள் சாசுவதமாய் உள்ளவரையில் ஸ்வர்க்கத்திலிருந்து ஆனந்தத்தை அடைகிருர்கள். கீர்த்தியுடன் விளங்குகிருர்கள். இதில் சந்தேகம் வேண்டாம்.)

எந்த உத்தமர்கள் ஜீரணமான ஆலயத்துக்குத் திருப்பணி செய்கிருர்களோ அவர்கள் இதைப்போல் இரட்டிப்புப் பலனை அடைகிருர்கள், என்று கூறுகிறது ஸ்காந்த புராணம்.

பக்நம் சிவாலயம் யேச ப்ரகுர்வந்தி நரோத்தமா:
ப்ராப்னுவந்தி பலம் தே வை த்விகுணம் நாத்ரஸம்சய: "

அதனுல்தான் மனுஸ்ம்ருதியிலும் தானத்தைக் காட்டிலும் தர்ம பாலனம் பெரியது என்று சொல்லப்படுகிறது.

தானத்தால் ஸ்வர்க்கத்தை அடைகிருன். அத்தர்மத்தை பாலனம் செய்வதால் அச்யுத பதத்தை அடைகிருன் என்கிறது ஸ்ம்ருதி :

ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வது தர்மபரிபாலன கர்மாவில் சிறந்தது என்று சொல்லத் தேவையில்லை. " அறஞ் செய்தான் செய்தான் அறம் காத்தான் பாதம் சென்னி மேல் " என்கிறது தமிழ் முதுமொழி.

இப்பெருங் கோவிலுக்குத் திருப்பணி செய்வது சுலபமான காரியம் அல்ல. இப்பெரும் பாரத்தை ஏற்று நிர்வாகம் செய்து கும்பாபிஷேகம் நடத்தும் பாக்கியம் டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்களுக்குக் கிடைத்துள்ளது. இத்தெய்வப் பணியை அன்னை அகிலாண்டேஸ்வரியின் ஆக்ஞையாகச் சிரமேலேற்றுக் கருமமே கண்ணுகி வெற்றிகரமாக நடத்தி முடிவு கண்ட திருவாளர் பிள்ளையவர்களுக்கும், இப்பணியில் பொருளுதவி செய்தும் மற்ற வகைகளிலும் ஈடுபட்ட எல்லா அன்பர்களுக்கும் அஷ்டைஸ்வர்யங்களும் அரோக திடகாத்திரமும் சகல சம்பத்துக்களும் சித்திக்க அன்னை அகிலாண்டேஸ்வரி அருள் புரிவாளாக.

இச் சிறந்த தர்மமும் பரிபூரணமாகிக் கும்பாபிஷேகமும் வெற்றிகரமாக முடிந்து உலக மக்கள் அனைவரும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் அருட் பிரசாதத்தை அடைந்து, பல்லாண்டு பல்லாண்டு வாழ்வார்களாக. இத்தர்மம் மேலும் மேலும் செழிக்க அன்னை அருள் புரிவாளாக.

நெரூர்

## ஸ்ரீலஸ்ரீ சதாசிவானந்தா அவர்கள்

கோச் செங்கட் சோழன் முதலான சிவ புண்ணிய சீலர்கள் பலரால் திருப்பணி செய்யப் பெற்ற சைவத்திற்கும், நாட்டுக்கும், சனாதன தர்மத்தைப் பாதுகாத்து வந்த திருவானைக்கா திருக்கோயில் சிதைந்திருப்பதை அறிந்து அரசினரும், அறங்காவலரும் ஆய்ந்து அறிவு ஒழுக்கங்களிலும், கடவுள் வழிபாட்டிலும் முதிர்ந்து வளர்ந்து முதிர் பருவம் பெற்றுள்ள திரு டி. எம். நாராயணஸ்வாமி பிள்ளை அவர்களைத் திருப்பணிக் குழுத் தலைவராக வேண்டினர். அவர்களுக்கு மஹரிஷிகளும், பிரபுக்களும், பொது மக்களும், ஒத்துழைத்து 1962-ல் திருப்பணியைத் தொடங்கினர். பிள்ளையவர்களின் பெருமுயற்சியாலும், அன்பர்களின் ஆதரவாலும் பல இலட்ச ரூபாய்கள் சேர்ந்தன. திருப்பணி இனிது நிறைவேறி வருகிறது. 5-7-70-ல் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. சமயாசாரியார்களால் பாராட்டப் பெற்றதும், சங்கராச்சாரிய ஸ்வாமிகளால் போற்றப் பெற்றதும் ஆகிய இத்திருக்கோயிலைப் புனிதப்படுத்திய தலைவருக்கு நன்றி நவிலக் கடமைப் பட்டுள்ளோம்.

சிறப்பாகப் பிள்ளையவர்களுக்கு ஒத்துழைத்த அறநிலைய அமைச்சர், ஆணையர் முதலியோர்கட்கும், தம்முடைய தவச் செல்வத்தைச் சிவப்பணிக்குக் கொடுத்த கனதனவான்களுக்கும் நீண்ட ஆயுளும், ஆரோக்யமும், ஐஸ்வரியமும் அளித்தருளும் வண்ணம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் அடிமலரைப் போற்றுகின்றோம்.



இறைவனை 'நீர்த்திரள்' என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்
நீர்த்திரள் என்றதற்கு ஏற்பத் தலையிலே இளநீர்களைத் தாங்கிநிற்கின்ற தென்னஞ்சோலைகளின் நடுவிலே
அடுக்கடுக்கான மதில்களின் நடுவிலே திருக்கோவில்.
முடியுமானால் இருளடர் சோலைகளை யூடுருவிச் சென்று சோதிப்பெருமானைக் காணுங்கள்.

# வாழ்த்துக்கள்

## கே. வி. சுப்பையா அவர்கள், பி. ஏ.,

*அறநிலைய அமைச்சர்*

அன்புடையீர்,

தமிழகக் கோவில்கள் கலைகளின் கருவூலங்களாகும். வரலாற்றுப் பார்வையோடு தமிழகத்தை ஆய்கின்றவர்கள் கோவில் வளர்த்த கலை உணர்வுகளை அறிவர். அப்படிப் பட்ட கூடங்களாகக் கோவில் திகழ்வதற்காகப் பழந்தமிழ் மன்னர்கள் வரி விதிக்கப்படாத நிலங்களையும் அளித்தனர். அவை 'இறையிலி' எனப்பட்டன. திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் கோவில் பெருஞ்சாந்தி விழா இத்தகைய உணர்வு களை எனக்குத் தருகிறது. கோவில்களில் அத்தகு பழம் பெருமையை நிலைநாட்ட நாம் முயல்வோம். விழா மலருக்கு என் வாழ்த்துக்கள்.

## டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள்

*வேளாண்மை, அரிசன நல அமைச்சர்*

திருவானைக்காவில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி, ஜம்புகேஸ்வரர் தேவஸ்தானம் திருப் பணிக் குழுவினர் திருவானைக்கா கோயில் பெருஞ்சாந்தி விழா நடத்துவதையும் பெருஞ் சாந்தி மலர் வெளியிடுவதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்கள் தலைமையில் அமைந்த திருப்பணிக் குழுவினரின் பணிகளுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெருஞ் சாந்தி விழாவும் சிறப்பு மலர் முயற்சிகளும் நாட்டின் கவனத்தைக் கவரும் முறையில் சிறப்பாக நிறைவெய்த என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## வேழவேந்தன் அவர்கள், பி. ஏ., பி. எல்.,

*தொழிலாளர் நலத்துறை அமைச்சர்*

சங்கத் தமிழ் வளரச் சமய குரவர் ஆற்றிய அருந்தொண்டு நாடறிந்த செய்தியாகும்.

கண் நுதற் கடவுள் கழகமோடு அமர்ந்தாய்ந்த ஒண்தீந்தமிழ் நம்மொழி. நம்நாட்டு வரலாறும், சமயமும் பிரிக்க முடியாத இணைகள். சமயம் மக்களின் அகத்தூய்மை வளர்க்கும் பேரற அமைப்பாக மிளிரவேண்டும்.

திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் தேவஸ்தானத் திருப் பணிக்குழு பெருஞ்சாந்தி விழாவினையொட்டி வெளிவிடும் மலர், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட ஆத்மமணம் பரப்பும் கற்பக மலராக அமைய என் வாழ்த்துக்கள்.

## புலவர் கா. கோவிந்தன் அவர்கள், எம்.ஏ.,

பேரவைத் தலைவர், தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை

அன்புடையீர்,

திருவானைக்கா கோவில் பெருஞ்சாந்தி விழா அண்மையில் நடக்க இருப்பதை யொட்டி ஒரு மலர் வெளியிட ஏற்பாடாகி இருப்பது கேட்டு மகிழ்ச்சி யடைகிறேன். திருவானைக்காவின் சிறப்பையும், கோயிலின் தொன்மையையும் தற்போது நடந்து வரும் திருப்பணி பற்றிய விவரங்களையும் மலர் விரிவாக விளக்கும் என்று நம்புகிறேன். பெருஞ் சாந்தி விழாவிற்கும், மலர் சிறப்புடன் வெளிவரவும் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## கு. காமராஜ் அவர்கள்

அன்புள்ள நண்பருக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. திருக்கோயில் திருப்பணி நிறைவெய்திப் பெருஞ் சாந்தி விழா நடைபெறுவது அறிந்து மகிழ்ச்சி.

விழா, சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்த முறையில் நடைபெறப் பிரார்த்திக்கிறேன்.

## எம். பக்தவத்சலம் அவர்கள்

அன்புள்ள திரு நாராயணசாமிப் பிள்ளை அவர்களுக்கு,

திருவானைக்கா ஸ்தலத்தில் பெருஞ்சாந்தி விழா அண்மையில் நடைபெற இருப்பது கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இது வரலாற்றுச் சிறப்பும், புனிதமும் பொருந்திய க்ஷேத்திரமாகும். நம் முன்னோர்கள் கட்டிவைத்த இந்தப் பெரிய கோயிலின் கட்டிடத்தைப் பழுதுபார்க்கும் திருப்பணியைத் தாங்களே பக்தியுடன் ஏற்றுக்கொண்டு மகத்தான சாதனைகளைச் சாதித்திருக்கிறீர்கள்.

தாங்கள் வெளியிடும் சிறப்பு மலர் வசீகரம் மிகுந்ததாக இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் அருள் தங்களுக்கும், தங்கள் சகாக்களுக்கும் பரிபூரணமாக உண்டு. விழா இனிது நடைபெற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். நரசிம்மன்,** பி. ஏ., பி. எல்., ஐ.ஏ. எஸ்.,
ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை சென்னை-34

**“ ஆனைக் காவல் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதம் இல்லையே ”**

தமிழகத்திலுள்ள தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டுச் சிவத்தலங்கள் பலவற்றுள், திருவானைக்கா என்னும் தலம் மிகவும் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். இஃது ஒரு காலத்தில் வெள்ளையானை தவமிருந்து பூசித்து வழிபட்ட சோலையாக இருந்தமை பற்றி, இதற்கு ஆனைக்கா என்னும் காரணப் பெயர் அமைந்தது. அம்பிகை இறைவனைப் பூசித்து ஞானோபதேசம் பெற்ற தலம் இது. ஆதி சங்கர பகவத் பாதர், இங்குள்ள அகிலாண்ட நாயகிக்கு ஸ்ரீ சக்கரம் அமைந்த தோட்டினை அணிவித்தருளினார்.

நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் பஞ்ச பூதங்களைப் படைத்தவனும், அவற்றின் பயனாகத் திகழ்கின்றவனும் இறைவனே என்னும் உண்மையை, உலக மக்களுக்கு உணர்த்தும் வகையில் பஞ்சபூதத் தலங்களுள் திருவாரூர் காஞ்சிபுரம் என்பன பிருதிவித் தலமாகவும், சிதம்பரம் ஆகாயத்தலமாகவும், கூறப்படும் முறையில், அப்புத் தலமாக விளங்கி வருவது திருவானைக்கா.

திருவானைக்கா அப்புத் தலம் எனப்படுவதற்கேற்ப, இக்கோயிலின் கருவறையில் சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளியுள்ள இடத்தைச் சுற்றிலும், இடையறாது எப்பொழுதும் நீர் ஊறிக்கொண்டிருத்தலைக் காணலாம். அதனால் இங்குள்ள ‘ ஆனைக்கா அண்ணல் ’ ஆகிய சிவபெருமானுக்கு ‘ நீர்த்திரள் நாதர் ’ என்பது பெயர். “ திருவானைக்காவுளானைச் செழுநீர்த் திரளைச் சென்று ஆடினேனே ” என்று, திருநாவுக்கரசர் அருளிச் செய்திருக்கின்றார்.

இத்தலம் சைவ சமய ஆசிரியர் ஆகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பாடலும் பெற்றது. ஐயடிகள் காடவர்கோன், காளமேகப் புலவர், தாயுமானவர் முதலிய சான்றோர்களால் புகழ்ந்து போற்றப்பெற்றது. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த கச்சியப்ப முனிவர், இதற்கு ஒரு புராணம் இயற்றியுள்ளார். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், அகிலாண்ட நாயகி மாலை, அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ் என்னும் சிறந்த பிரபந்தங்களைப் பாடியிருக்கிறார்.

சைவ சமயத்துச் சான்றோர்களாகிய, அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய கோச்செங்கட் சோழ நாயனார் என்பவர், இப்பிறவியில் சிலந்தியாக இருந்து இத்திருவானைக்காவில் உள்ள சிவபெருமானுக்கு வலை பின்னி விதானம் அமைத்து வழிபட்டு வந்ததன் பயனாகவே, மறு பிறவியில் சோழநாட்டின் பெரு வேந்தராகத் தோன்றும் பேறு பெற்றார் என்பது வரலாறு.

" சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இழந்த போதே கோச்செங்க ணனுமாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீரட்டனாரே"

என்னும் திருநேரிசைச் செய்யுளில், இவ்வரலாற்றைத் திருநாவுக்கரசர் பெருமானும் குறிப்பிட்டருளியிருக்கின்றார்.

இத்தகைய பல பெருமைகள் வாய்ந்த இத்தலத்தில், இறைவனே ஒரு சித்தராகப் போந்து, திருநீற்றையே கூலியாகக் கொடுத்து இங்கு ஒரு திருமதிலைக் கட்டுவித்தார். ஆதலின் இங்குள்ள ஒரு திருமதில் திருநீறிட்டான் திருமதில் என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்குகின்றது. ஐந்து சுற்றாலைகளும், ஏழு கோபுரங்களும், தனித்தனியே உயர்ந்த மதில்களும் கொண்டு விளங்கும் இத் திருக்கோயிலில், சோழர், பாண்டியர், ஹொய்சளர், நாயக்கர் முதலிய குலத்தைச் சேர்ந்த அரசர்கள், பற்பல காலங்களில் பற்பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர், நாட்டுக்கோட்டை தனவணிகச் சைவப் பெருந்திருவாளர் ஆகிய சா. ராம. சி. த. சிதம்பரம் செட்டியார் அவர்களின் பெருமுயற்சியால், மூலத்தானங்களும் உட்பிரகாரங்களும் மிகவும் நல்ல முறையில் திருப்பணி செய்து புதுப்பிக்கப்பட்டன.

பழமையும், பெருமையும் வாய்ந்த இந்தத் தலத்தின் திருக்கோயில் முழுவதையும், 18 லட்சம் ரூபாய்த் திட்டத்தில் திருப்பணி செய்ய, 1962-ஆம் ஆண்டில் தமிழக அரசினர் முயற்சியால், ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பெற்றது. திருப்பணிக் குழுத் தலைவராக டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் அமைந்தமை, ஒரு நற்பேறு எனலாம். அவர்களது அரிய தலைமையின்கீழ் அமைந்த திருப்பணிக் குழுவினரின் முயற்சியால் 13 லட்சம் ரூபாய் செலவில் 7 கோபுரங்களும், 3 தீர்த்தங்களும் ஆயிரக்கால் மண்டபம்-விமானங்கள்-கிழக்கு மேற்குப் பக்கத் திருமதில்கள் முதலியனவும், சிறப்புறத் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. தென்புற மதிலின் வேலையும் பிறவும், விரைவில் நிறைவுறும் நிலையில் இருக்கின்றன.

எட்டாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் திருப்பணிகள், பெரும்பாலும் நிறைவுறும் நிலையில் இருப்பதனால், அண்மையில், 5-7-70 அன்று, இக்கோயிலுக்குப் 'பெருஞ் சாந்தி' என்னும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சமய உலகம் போற்றிப் பாராட்டிப் பங்கு கொண்டு மகிழ்ந்த ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

மகா கும்பாபிஷேகம் நன்கினிது நடைபெறவும், அதன் சார்பில் வெளிவரவிருக்கும் விழா மலர் சிறப்புற அமையவும், அருள்செய்த அகிலாண்டநாயகி சமேத ஜம்புகேஸ்வரரின் திருவடிகளை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன். திருப்பணிக் குழுவினருக்கு என் உளம் நிறைந்த மகிழ்ச்சியினையும், பாராட்டுதலையும் பெரிதும் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

## திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்கள், B.A., B.L.,

அன்புடைப் பெரியீர்,

திருஆனைக்காப் பெருங்கோயில் பெருஞ்சாந்தி விழா மலர் வெளியீட்டினைக் குறித்துத் தங்களது மடல் கிடைத்தது. மிக்க நன்றி.

சேக்கிழார் பெருமானால் '' மாதவஞ் செய்த தென்திசை '' எனப் போற்றப்பட்டுள்ள நந்தமிழ்நாட்டில் பல்லாற்றானும் சிறந்ததாக உள்ள திருத்தலங்களுள் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வர ஆலயமும் ஒன்று. இந்த உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும் உலகம் முழுதுடையாளாகிய அன்னை அகிலாண்ட நாயகி இறைவனைப் பூசித்து ஞானோபதேசம் பெற்ற பெருஞ் சிறப்பினையுடையது. இதன் அண்மையிலுள்ள காவிரியாறு ''அண்ணல் பாகத்தை யாளுடையநாயகி உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது '' எனப் பாராட்டப் பெற்றுள்ளது.

இத்திருத்தலத்தின் வரலாற்றில் மிக்க தவத்தோர் வெள்ளானையும், ஞானமுடைய ஒரு நற் சிலந்தியும், என்றும் நீங்கா இடம் பெற்றுள்ளன. இறைவன் விறல் மிக்க கரிக்கருள் செய்தமை திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகத்திலும், சிலந்திக்கருளிய உயர்பெற்றி சேக்கிழாரால் திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாற்றுப் பாடலிலும் குறிக்கப்பெற்றுள்ளன.

இவ்வாலயத்தின் முதற்பகுதி கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்றது. பின்னர் பலவேறு காலங்களில் பலவகை அன்பர்கள் திருப்பணி செய்துள்ளனர். 80 ஆண்டுகளுக்கு முன் திரு சா. ராம. சித. சிதம்பரஞ் செட்டியாரவர்களது பெரு முயற்சியால் மூலத்தானங்களும் உட்பிரகாரங்களும் புதுப்பிக்கப்பெற்றும், ஏனைய பகுதிகள் திருப்பணி செய்யப் பெறாமலிருந்தன. இந்தப் பெருங் குறையை அந்நாளமைச்சர் உயர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் அறிந்து அதை நிவர்த்திக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு உழுவலன்பர், சைவ-வைணவப் பெரும்பக்தர், திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்களை வேண்டி அவரது சீரிய தலைமையில் ஆர்வம் மிக்க பல பேரன்பர்களடங்கிய குழு ஒன்றினை அமைத்தார்கள். அக்குழு இயங்க ஆரம்பித்து இதுவரை சுமார் பதின்மூன்று லட்ச ரூபாய் செலவில் பல சீரிய திருப்பணிகளைச் செய்திருக்கின்றது. இதற்கு எண்ணிறந்த அன்பர்கள் உறுதுணையாயிருந்தனர். அவர்களது ஒத்துழைப்பும் ஊக்கமும் மிகமிகப் பாராட்டுதற்குரியன.

இனியும் சில திருப்பணி வேலைகள் எஞ்சியுள்ளன. இவற்றையும் நிறைவு செய்ய வேண்டிய நிலையுள்ளது. அன்று காவிரியில் கைதவறவிட்ட ஆரத்தை மன்னன் வேண்டலால் மிக உவந்து அதை ஆரமாகப் பூண்ட அத்தன் எஞ்சியுள்ள திருப்பணிக்கு உதவி செய்வோரின் அன்பையும் ஆதரவையும் ஆரமாகத் தரித்து அவர்களனைவர்க்கும் அருளுவான் என்பதில் ஐயமில்லை.

இத்திருப்பணியில் ஆரம்ப முதல் எண்ணற்ற இடர்ப்பாடுகள் உற்றனவேனும், சிறிதும் அஞ்சா நெஞ்சினராய், ஆண்டவன்மேல் பாரத்தையிட்டு, அல்லும் பகலும் தமிழ்நாடு முழுவதும் சுற்றியலைந்து ஆக்கமும் ஊக்கமும் தேடி, இப்பணியினை நிறைவேற்றியுள்ள பெருமை திருப்பணிக் குழுவினரையும், சிறப்பாக தலைவரையும் சாரும்.

கல் திருப்பணி மட்டும் நிறைவுற்றால் போதாது. எங்கும் நிறைந்த புகழாளர் ஈறில் தொண்டர் அன்று ஆனைக்காவில் இருந்ததாகச் சேக்கிழார் கூறுகிறார். எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை என்பதால், பூசனை சிறப்பாக நடைபெறுவதற்குரிய வழிவகைகள் செய்வதும், மற்றும் ஆலயத்தைச் சுற்றி வதியும் முப்போதும் திருமேனி தீண்டுவாரது இல்லங்களில் வேத முழக்கமும் தமிழ்த் திருமுறை முழக்கமும் ஓங்கவும், யோக சிந்தை மறையோர்கள் வளர்க்கும் ஓமதூமம் உயர்வானில் அடுப்பவும், எல்லையில் மறையவர் பயில் வேள்விச் சிவந்த வரும்பயனுடைய ஆகுதிகளின் செழும்புகைப் பரப்பினால் தவந் தழைப்பவும், ஆவன செய்யவேண்டும் என்ற ஆவல் திருப்பணிக்குழுத்தலைவர்க்குண்டென்பதை அன்பர் பலர் அறிவர். இப்புனிதத் தொண்டுகளும் நிறைவெய்த அருளுமாறு எல்லாம் வல்ல வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை மன மொழி மெய்களால் வழுத்தி இறைஞ்சுகின்றேன்.

**வாழிய தெய்வத் திருத்தொண்டு.**



கார்த்திகைக் கோபுரம்　　மணிமண்டபம்　　சங்கரேஸ்வரம்

என்ற மூன்று கோபுரங்களைக் காணுகிறோம்

**நா. சீனிவாசன்,** பி. ஏ., பி. எல்.,
உதவி ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

பேரன்பு கொண்ட பெரியார் அவர்களுக்கு,

தங்கள் 7–5–70-ந் தேதிய கடித விருப்பத்திற்கிணங்க எனது கருத்துக்களை அனுப்பியுள்ளேன்.

நமது நாட்டின் தொன்மையையும் பண்டைக் கலைச் சிறப்பையும் உலகிற்கு இன்று காட்டி நிற்பது நமது திருக்கோயில்களே. எந்நாட்டினரும் எத்துணை முன்னேற்றம் பெற்ற வரும் அவற்றால் சிரம் தூக்கி நிற்போரும் சிரம் தாழ மனம் நெகிழ அங்கம் குறுகி நின்று ஒப்பதும் மிக்கதும் இல்லை என்று ஒத்துக்கொள்வதாய் அமைந்து நம் பண்டைக் கலைத் திறனையும் சமய உணர்வையும் நம் தாயகத்தின் தெய்வீகத்தையும் உணரவைத்து, உல கெங்குமுள்ளோரிடையே நம் நாட்டிற்கும் கலாசாரம்–பண்பாட்டிற்கும் பெருமதிப்பைத் தேடித் தருவது நம் முன்னோர் நமக்குச் சமைத்துத் தந்த–நமக்குச் சொத்தாக விட்டுச் சென்ற விண்ணளாவிய கோபுரங்களும், வியத்தகு சிற்பங்களும் கொண்ட கட்டிடக் கலையின் கரையையே எட்டிவிட்ட எழில்மிக்க இத்திருக்கோயில்களே. காலம் கடந்து நிற்கும் இக் கோயில்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சரிதம் பேசி ஆதி–திறம்பேசி நிற்பன.

இவ்வாறாய சிறப்புகள் மிக்க இத்திருக்கோயில்களாம் நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற சொத்தைப் பேணிக் காத்து நம் பின்னோருக்கு விடுதல் நம் கடமை ஆகின்றது.

அதிலும் இக்கோயில் புறநானூறு முதலிய சங்க நூல்களால் போற்றப்படும் கோச் செங்கட் சோழனால் நிறுவப்பெற்று, சித்தாய வேடத்தினாய சிவபெருமானால் திருநீற்றைக் கூலியாகத் தந்து திருமதில் எடுத்துக் காக்கப்பெற்ற பெருமையுடையது. சமய குரவர் களால் பாடப்பெற்றது.

இத்தகு பெருமைகள் சான்ற இம்மாபெரும் திருக்கோயில் திருப்பணியைத் தகுதியும், திறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பெரியார் திரு. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் ஏற்றுத் தன் முழு நேரத்தையும் இத்தெய்விகத் திருப்பணிக்கு அர்ப்பணித்து யாரும் வியக்க வெற்றி வாகையும் சூடிவிட்டார்கள். அவர்களுக்கு நம் சமயமும், தமிழும் நமது சந்ததியும் நன்றி சொல்லும். கோச்செங்கட் சோழன், திருநீற்றான் திருமதில் எடுத்த சத்திய வேடத்தான், பெரியார் ராம. சிதம்பரம் செட்டியார், திரு நாராயணசாமி பிள்ளையவர்கள், அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக்குழுவு, நமது அரசு, இவைகள் என இக்கோயில் வரலாறு பகரும்.

இம்மாபெரும் வெற்றிக்கு எம்மனோர் பாராட்டுக்களையும் நன்றிகளையும் உரித்தாகத் தருகிறோம்.

**டாக்டர் ந. சஞ்சீவி**

மைலாப்பூர், சென்னை-4

அகிலாண்ட நாயகியே! ஆனைக்கா வாழ்வே!
அகிலாண்ட கூந்தலார் ஆற்று—நகிலாண்ட
மையல் மனத்தால் மறுகியான் மாயாமல்
தையால்! நினதருள் தா!

தாயுமா னூர்போற்றும் தாயே! தருநிழலே!
பாயுமா னூர்கரத்தார் பங்காஞய்!—தீயுமாய்
நீர்நிலம் வான்வளியாய் நின்ருர்க்கு நெஞ்சாஞய்!
பார்புலம் சீர்பெறக்கண் பார்!

நாரா யணன்போற்றும் நல்லமுதே! நாவலன்றன்
ஆரா அருளூற்றே! அம்மையே!—தேரா
மதியும் தெளியா மனமும் தொலைப்பாய்!
கதியும் நினதருளே காண்!

**அன்பு தி. கருணையானந்தா**

செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

அகிலாண்டதேவி ஆனைக்கா ஆவி
மகிமைத் திருநாவல் மாதா—அகிலத்தர்
இன்பக் குடமுழுக்கால் எண்ணும் நலமனைத்தும்
அன்புறக்கொண் டுய்வான் அருள்.

வளர்க பாராயணம்! வாழ்க நாராயணன்!

# மூர்த்தி பேதங்கள்

# விக்கிரக வழிபாடும் கும்பாபிஷேகமும்

மதுரை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளியது.

'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்' என்பது யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய உண்மை. ஆண்டவனே பின்னர் அறிகின்ற அன்னையும் பிதாவும் ஆகின்றான். அதனாலேயே அருளாளர்கள் எல்லாரும் 'அம்மையே அப்பா' என்றும், 'அப்பன் நீ அம்மை நீ' என்றும், தாயும் நீயே, தந்தை நீயே என்றும், 'எந்தையாய், எம்பிரான் மற்றும் யாவர்க்கும் தந்தையாய் தம்பிரான்' என்றும் தமிழ்நாட்டில் செந்தமிழால் ஆண்டவனைத் துதித்திருக்கிறார்கள். இயேசு நாதர் பரமண்டலத்திலிருக்கிற என்னுடைய பிதாவும், உங்களுடைய பிதாவும் என்றும் நாமெல்லாம் கடவுளுடைய குழந்தைகள் என்றும் பைபிளில் பல இடங்களில் கூறி யிருக்கிறார். முகமது நபியும் திருக்குரானில் நாம் எல்லோரும் சகோதரர்கள் என்றும், அல்லாஹ்ுத்தாலாவாகிய கடவுளே மனிதர்களைப் படைத்தார் என்றும் கூறியிருக்கிறார். ஆனால் கடவுள் உருவத்தோடு இருக்கிறாரா? இருந்தால் எந்த உருவத்தில் இருக்கிறார் என்பது கேள்வி.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் வியாபித்திருக்கிற பரம்பொருளாகிய கடவுள் உலகத்தைப் படைப்பதற்காகவும், பலதரப் பட்ட உயிர்களுக்குப் பலதரப்பட்ட உடல்கள் கொடுப்பதற்காகவும், அவற்றை ஆள்வதற்காகவும் அவர் தானாக எடுத்துக்கொண்ட உருவத் திருமேனி உண்டு என்பதனை எல்லா மதங்களும் ஒப்புக் கொள்கின்றன. அருவமாய் உள்ள சிவ பரம்பொருள் கருணை காரணமாகப் பிறருக்குக் காட்சி கொடுப்பதற்கென எடுத்துக்கொண்டே 25 திருமேனிகளும் தோன்றுவதற்கு மூலாதாரமாக உள்ள, உருவமும் உருவமில்லாத அருவுருவ நிலையுமான சோதி சொரூபத்தை முதற்கண் தாங்கிக் கொள்ளத் திருவுள்ளம் கொண்டது. அந்தச் சோதி சொரூபமே சிவலிங்க வடிவவாகும். அந்தச் சோதி சொரூபத்திலிருந்து 25 திருமேனிகள் தோன்றி ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரியத்தினை நிகழ்த்தி துஷ்டநிக்கரகமும், சிஷ்டபரிபாலனமும் செய்ய வேண்டியதாயிற்று.

அவையாவன :

(1) சோமாஸ்கந்தர், (2) நடராஜப் பெருமான், (3) இடபாரூடர், (4) சந்திரசேகரர், (5) கல்யாணசுந்தரர், (6) பிட்சாடனர், (7) காமாரி, (8) காலாரி, (9) சவந்தராரி, (10) திரிபுராரி, (11) கசாரி, (12) வீரபத்திரர், (13) தக்ஷிணாமூர்த்தி, (14) கிராதர், (15) நீலகண்டர், (16) கங்காளர், (17) சக்ரதானர், (18) கசமுகானுக்ரகர், (19) சண்டேசானுக்ரகர், (20) ஏகபாதர், (21) லிங்கோத்பவர், (22) சுகாசீனர், (23) உமாமகேஸ்வரர், (24) அரியர்த்தர், (25) அர்த்தநாரீஸ்வரர்.

"அருவமும் உருவுமாகி அனாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள்ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன்வந்து ஆங்குதித்தனன்
உலகம் உய்ய"

என்று முருகப் பெருமானது தோற்றத்தை நமது கச்சியப்ப சிவாச்சாரியர் அருளிச் செய்திருக்கிறார். ஆகவே யாரும் அறிய முடியாத அருவமாய் இருந்த பரமசிவம், பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் காட்சி கொடுக்கவும், தமது ஆட்சியின் சட்ட திட்டங்களாகிய வேதாகமங்களை அருளிச் செய்யவும் எடுத்துக் கொண்ட மூர்த்தமே சிவலிங்க வடிவமாகும்.



நின்ற திருக்கோலத்திலே, இடக்கையொன்றிலே மோதகங்களை ஏந்திக்கொண்டு,
துதிக்கையால் எடுத்தெடுத்து உண்கிறார் பாருங்கள்.
திருவானைக்காவில் உள்ள எழுந்தருளுந் திருமேனி

சிவலிங்கம் மூன்று கூறுகள் உடையது. அடிப்பாகம் நாற்கோண வடிவமாய்ப் பூமிக்கு அதிபதியான சிருஷ்டி கர்த்தாவான பிரம்ம பாகத்தை உணர்த்துவதாகும். மத்தியபாகம் எட்டுப்பட்டம் உடைய அட்டகோண வடிவமாய், வாமை சேஷ்டை ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரத மனி, சர்வபூத தமனி என்னும் மகா விஷ்ணுவின் எட்டு சக்திகளும் அதனோடு பொருந்த இருக்கும் ஆவுடை எனப்படும் மனோன்மணியாகிய ஒன்பதாவது சக்தியும் சேர்ந்து நவசக்திகளாகி நீருக்கு அதிபதி யான காத்தல் எனப்படும் ''ஸ்திதி'' கர்த்தரான விஷ்ணுபாகத்தை உணர்த்து வதாகும். அரன் என்பதன் பெண்பாலே அரி என்பதாகும். அதனாலேயே 'அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்று திருநாவுக்கரசு நாயனாரும், 'மாதாய மால வனை மாயவனை' என்று திருமழிசையாழ் வாரும் அருளிச் செய்திருக்கிறார்கள். மேலுள்ள பாகம் நெருப்பிற்கு அதிபதி, அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும் முத்தொழில்களுக்கும் அதிபதியாகிய சிவ பாகம். இம்மூன்றும் சேர்ந்த அருவமும் உருவமுமற்ற ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி வடிவே சிவலிங்க மாகும். சிவலிங்கத்தை வழிபட்டால் பிரம்மாவை வழிபட்ட பலனும், மகா விஷ்ணுவின் 10 திரு அவதாரங்களை வழி பட்ட பலனும் சிவபெருமானின் 25 மூர்த்தங் களை வழிபட்ட பலனும் ஒருங்கே கிடைக்கக் கூடியதாகவும் இருக்கிறதென்பதை வேதாக மங்கள் வலியுறுத்துகின்றன. புராண இதி காசங்களும் அனுபூதிமான்களது அனுபவங் களும் அந்த உண்மையை உறுதிப்படுத்து கின்றன. அரசமரம் சுற்றிவரும் சைவ வைஷ்ணவ அன்பர்கள் ''மூலதோ பிரம்ம ரூபாய, மத்யதோ விஷ்ணி ரூபிணி, அக்ரதஸ்சிவ ரூபாய விருக்ஷ ராஜாயதே நமஃ'' என்று சொல்லுகிற மந்திரமும் சிவலிங்க தத்துவத்தை வலியுறுத்து கின்றன அல்லவா?

மேலுலகத்தில் அதிகாரம் பெற்ற சகலருமே சிவபூஜை செய்தே அவ்வப் பதவிகளைப் பெற்றிருப்பதாக நமது நாயன் மார்களும் மாணிக்கவாசகரும் தேவார திருவாசகங்களில் அருளிச் செய்திருக் கிறார்கள்.

ஆகவே இம்மண்ணுலகிலுள்ள நாம் மேலே சொன்ன சிவலிங்க வடிவிலோ அல்லது அவர் எடுத்துக்கொண்ட 25 மூர்த் தங்களில் ஏதாவது ஒரு வடிவத்திலோ ஒரு சிலையைச் செய்து அதற்கு வேதாகமங் களில் சொன்ன முறைப்படி ஆவாகனம், ஸ்தாபனம், சந்நிதானம், சந்நிரோதானம் முதலிய கிரியைகளைச் செய்து அதில் அந்த மூர்த்தியை எழுந்தருளியிருக்கும்படி வேண்டிக் கொண்டால் முன்னே வெறும் சிலையாக இருந்த அது முருகப் பெருமான், நடராஜப் பெருமான், விநாயகப் பெருமான் என்ற அந்தந்தச் சிறப்புப் பெயர் பெற்று, அந்தந்த மூர்த்தத்தில் என்னென்ன அதி காரம் செலுத்தினார்களோ அந்தந்த அதிகார மூர்த்தியாக வேதாகமச் சட்டப்படி அமைந்து விடுகிறார்கள்.

ஆண்டவன் எடுத்துக்கொண்ட திரு மேனிகளின் விவரங்களை எல்லாம் விண் ணுலகிலிருந்து விளங்கி, இம்மண்ணுலகில் அந்தந்த உருவங்களைச் சிற்ப சாஸ்திர முறையில் சிலைகளாகச் செய்து அவற்றில் அததற்குரிய மூர்த்திகளைப் பக்தர்களுக்காக எழுந்தருளி வீற்றிருக்கும்படிப் பிரார்த்தனை செய்து விக்ரக ஆராதனை செய்து வருகிறார் கள். அதிகநாள் கெடாமல் இருப்பதற் காகவும், விஞ்ஞான ரீதியாகவும், அவற்றைக் களிமண்ணால் செய்யாமல் கருங்கல்லாலும், செம்பாலும் அமைத்திருக்கிறார்கள்.

கல்லினது ஆற்றல் செம்பின் ஆற்றலை விடப் பன்மடங்கு அதிகமானது. கல் லானது எந்தப் பொருளையும் தன்பால் இழுத்துக் கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்தது. உதாரணமாக மலையானது ஆகாயத்தில் சென்று கொண்டிருக்கும் மேகத்தைத் தன் பால் இழுத்துக் குளிர்வித்து, மழையாகப் பொழியும்படிச் செய்கிறது. அல்லாமலும் கல்லில் பஞ்ச பூதங்களின் தன்மையும் விசேடமாக அடங்கியிருந்து வெளிப்படுதல் போல மற்ற உலோகங்களில் இல்லை.

பஞ்சபூதங்களாவன : (1) ஆகாயம், (2) காற்று, (3) நெருப்பு, (4) நீர், (5) நிலம் என்பன.

1. வெளியில் உள்ள சப்தத்தைத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கி, பின்னர் வெளியிடும் ஆற்றல் ஆகாயத்திற்கு உண்டு. அதே தன்மை கல்லுக்கும் உண்டு. கல் மண்டபங்களிலும், மலைப் பிரதேசங்களிலும் சப்தங்கள் எதிரொலியாவது போல் வேறு எந்த இடங்களிலும் ஒலிப்பதில்லை என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

2. கல்லிலே காற்று உண்டு என்பதைக் ''கல்லினுள் தேரைக்கும்'' என்ற தொடரை ஆய்வதிலிருந்து தெரியலாம். காற்று இல்லாத இடத்தில் எந்த ஜீவராசியும் உயிர்வாழ முடியாது. கல்லினுட் தேரை வசிக்க வேண்டுமானால் கல்லிலே காற்று இருக்க வேண்டுமல்லவா? எனவே கல்லில் இரண்டாவது சொல்லப்பெற்ற காற்றும் உள்ளது.

3. இனிக் கல்லிலே நெருப்பு தங்கியிருப்பது போல் வேறு எந்தப் பொருளிலும் இல்லை. அதனால்தான் பழங்காலத்தில் நெருப்பு உண்டாக்க வேண்டுமானால் இக் கற்களை ஒன்றோடொன்று உராயச் செய்து நெருப்பினை உண்டாக்கி உபயோகித்தார்கள். அரணி மரக்கட்டைகளைக் கடைந்தும், நெருப்பை உண்டாக்கினார்கள். இருந்தாலும் கல்லில்தான் நெருப்பின்சக்தி மிகுதியாக இருக்கிறது. அதிலும் சிகி முகிக் கற்கள் அந்த வகையில் மிகுந்த ஆற்றலுடையவை. அநேகமாக அவைதாம் தீயினை உண்டாக்க அந்நாளில் உபயோகப்படுத்தப்பட்டன. ஆகவே கல்லில் நாம் மூன்றாவதாகச் சொன்ன நெருப்பும் உள்ளது.

4. மேற்கூறிய மூன்று ஆற்றல்களை உடையதாக இருந்தாலும் கல்லானது தன் இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமல் இருக்கும். சாதாரணமாகக் கல்லைத் தொட்டால் அது தண்ணீர் போன்று தண்ணென்றிருப்பதையும், சில பாறைகளில் நீரூற்று இருப்பதையும் எல்லோரும் அனுபவத்தில் உணரலாம்.

5. இனி ஐந்தாவதாகக் கல்லில் நிலம் என்ற கடைசிப் பூதம் இருக்கிறதா என்பதைக் கேட்கவே வேண்டாம். கல்லே நிலத்தைச் சேர்த்ததுதான் அல்லவா? ஐம்பூதங்கள் அடங்கியிருப்பதற்கும் ஆண்டவனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். ஆண்டவனே ஐம்பூதங்களில் கலந்துதான் இருக்கிறார் என்பதற்கு மாணிக்க வாசகர் திருவாசகம் சான்று தருகிறது,.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என்பது திருவாசகத்தில் போற்றித் திருவகவலில் வரும் அவ்வழகமைந்த பகுதியாகும். ஐம்பூத வடிவாகி விளங்கும் ஆண்டவனது உருவத்தை ஐம்பூதங்களும் அடங்கிய ஒரு பொருளில் வீற்றிருக்கும்படி வேண்டுதல் செய்து வழிபடுதல் சாலச் சிறந்ததல்லவா? அதனால்தான் நமது முன்னோர்கள் நாம் வழிபடும் மூர்த்திகளுடைய விக்ரகங்களைக் கல்லால் அமைத்தார்கள்.

ஆனதால் மூர்த்தி, தலம், தீர்த்தம் சிறப்புக்கள் கொண்ட ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு இம்மை, அம்மை, மறுமை நலங்களைப் பெற்று நல்வாழ்வு வாழ்வார்களாக.

# சிவலிங்க தத்துவ விளக்கம்

சிவாகமப்பிரவீண. குமாரசாமிக் குருக்கள், யாழ்ப்பாணம்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும்படி, கொண்டருளிய தத்துவங்கள் மூன்றும். அவை சிவதத்துவம், சாதாக்கிய தத்துவம், மகேசுவர தத்துவம் என்பன. அம்மூன்றினுள் அருவத்திருமேனியையுடைய சிவம் ஒன்று. அருவுருவத் திருமேனியையுடைய சாதாக்கியமானது சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கர்மசாதாக்கியம் என ஐந்து பேதங்களையுடையது. உருவத் திருமேனியையுடைய மகேசுவரமானது சந்திரசேகரர், உமா மகேசர், இடபாரூடர், நடேசர், கல்யாணசுந்தரர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, கஜாரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்த நாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கிரதானர், விக்கினேசுவரானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர். சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என இருபத்தைந்து பேதங்களையுடையது. ஆக மூர்த்தங்கள் முப்பத்தொன்றாகும்.

கந்தபுராணம்

" ஒன்றுயிரு திறமாயோ ரைந்தாயை யைந்தா
யன்றுதியிம் மீட்டுமைந்தாயளப்பிலவாகப்
நின்றுய் சிவனே யிந்நீர் மையெல்லாந் தீங்ககற்றி
நன்றுவி கட்கு நயம்புரிதற்கே யன்றே "

### அருவ (நிஷ்களா) சிவம்

எல்லாப் பொருள்கட்கும் மேலானதாய், இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியதாய், எண்ணிறந்த ஆன்மாக்களுக்கு உணர்வாய், அறியாதார் சென்று கூடுதற்கரியதாய், வழிபட்டவர் சென்று கூடுதற்கிடமான முத்தித்தானமாய் சர்வவியாபியாய், பராசக்திக்குக் காரணமாயிருக்கும் உண்மைப் பொருளை நிஷ்கள சிவமென்று சிவாகமங்கள் கூறும்.

### நிஷ்கள சத்தி

சத்தியானது, அக்கினியும் சூடும், பூவும் மணமும், சூரியனும் கிரணமும் போல சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமையாம். அதன் வடிவம் ஞானமேயாம். அந்த ஞானமானது பராசக்தி எனப்படும், அது ஆன்மாக்களுக்கு மலபரி பாகம் வருதற் பொருட்டுத் திரோதான சத்தியாய் நின்று இச்சாசத்தி, ஞான சத்தி, கிரியா சத்தி எனத் தொழிற்படும். நிஷ்கள சிவத்திலிருந்து தோன்றினமையால் இவர்கள் நிஷ்கள சத்தி எனப்படுவர்.

இந்தப் பஞ்சசத்திகளிலிருந்து யோகிகளும், ஞானிகளும், கிரியையாளரும் செய்யும் தியானபூசைகளின் பொருட்டுச் சாதாக்கியங்கள் தோன்றின.

### அருவுருவத் திருமேனி, சாதாக்கியம்,

சாதாக்கியமென்பது எப்பொழுதும் புகழப்படுவது. எனவே நாமரூபாதிகளில்லாத சுத்தசிவம் நாமரூபாதிகள் உடையவராய் அன்பர்களாற் புகழப்படுவர் என்பது கருத்து. சாதாக்கியங்கள், சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என ஐந்தாம்.

பராசத்தியிடமாய்ச் சிவசாதாக்கியம் தோன்றியது. இது அதிசூக்குமமாய் அளவற்ற சோதிமயமாய், மின்னல் போல விளங்கி வியாபித்திருப்பதாய்த் தியானத்தால் அறியப்படுவதாய் லயத்தானமாய் இருக்கும்.

ஆதிசத்தியின் அம்சமாய் அமூர்த்தி சாதாக்கியந் தோன்றியது. இது கோடி சூரியப் பிரகாசமாய், அரூபமாய், கலைகளுக்கு அப்பாற்பட்டதாய் இலிங்க நடுவில் வடிவைக் கற்பித்திருப்பதாயுள்ளது. இது திவ்விய லிங்கமென்று சொல்லப்படும்.

இச்சா சத்தியின் அம்சமாய் மூர்த்தி சாதாக்கியந் தோன்றியது. இது பிரளய காலத்தில் அக்கினி போன்றதாய், திவ்விய லிங்காகிருதியாய், அதன் மேற்பாகத்தில் ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்களும் எல்லா அவயவங்களும் மான், மழு, அபயம், வரதம், தாங்கிய நான்கு திருக்கரங்களுடைய தாய், லிங்கமூர்த்தி என்னும் பெயரைப் பொருந்தியிருக்கும்.

ஞானசத்தியின் அம்சமாய்க் கர்த்திரு சாதாக்கியம் தோன்றிற்று. இது படிகம் போன்ற ஒளியுடையதாய், திவ்விய லிங்க முமாய், மத்தியில் நான்கு திருமுகங்களும், பன்னிரண்டு திருக் கண்களும் வலத் திருக் கரங்களில் சூலம், மழு, வாள், அபயம், இடத் திருக்கரங்களில் பாசம், மணி, பாம்பு, வரதம் என்னும் ஆயுதங்களுடையதாய் நிறைவான லக்ஷணங்களோடு கூடியனவா யிருக்கும். இதனை ஞானலிங்க மென்று சொல்லுவர்.

"நாலு கொலாமவர் தம்முக மாவன
நாலு கொலா ஞ்சனனம் முதற்றோற்றமும்
நாலு கொலா மவரூர்தியின் பாதங்கள்
நாலு கொலா மறைபாடின தாமே"

—திருநாவுக்கரசுநாயனர்

கிரியா சத்தியினம்சமாய், கன்மசாதாக் கியந் தோன்றியது. இதுவே பஞ்ச சத்தி களினிடமாகப் பஞ்ச சாதாக்கியங்கள் தோன்றிய கிரமமாம்.

### கந்தபுராணம்

"ஐந்தியற் சத்திக ளாயினோர் தமைத்
தந்தது மருவுருத் தாங்கி யவ்வழிச்
சிந்தனை யருச்ச னைசெய்து யாவரு
முய்ந்திடச் சதாசிவ வுருவைந் துற்றதும்"

சிவ சாதாக்கிய அதிபர் சதாசிவரென்றும், அமூர்த்த சாதாக்கிய அதிபர் ஈசரென்றும் மூர்த்தி சாதாக்கியதிபர் பிரமீசரென்றும், கர்த்திரு சாதாக்கியதிபர் ஈசுவரரென்றும், கன்மசாதாக்கியதிபர் ஈசானரென்றும் சொல்லப்படுவர்.

சிவசாதாக்கிய முதல் பஞ்ச சாதாக்கியங் களும் தத்துவமென்று சொல்லப்படும். சதா சிவர், ஈசர், பிரமீசர், ஈசுவரர், ஈசான ரென்னுமிவர்கள் மூர்த்திகளென்று சொல்லப் படுவர். தத்துவங்களும், மூர்த்திகளும் கூடின அவசரத்தில் ஈசானுதிகள் தோன் றின. அந்த ஈசானுதிகள் பிரபாவமென்று சொல்லப்படும்.

நிஷ்களமாகிய சிவசாதாக்கியம் சதா சிவரென்னும் மூர்த்தியும் பொருந்தியகுணம் ஈசானம். அமூர்த்திசாதாக்கியம் என்னும் தத்துவமும் ஈசன், என்னும் மூர்த்தியும் பொருந்திய குணம் சத்தியோசாதம், மூர்த்தி சாதாக்கியமென்னும் தத்துவமும் பிரமீசன் என்னும் மூர்த்தியும் பொருந்திய குணம் வாமதேவம்.

கர்த்திரு சாதாக்கியமென்னும் தத்துவமும் ஈசுரன் என்னும் மூர்த்தியும் பொருந்திய குணம் அகோரம்; கர்ம சாதாக்கியமென்னும் தத்துவமும் ஈசானமென்னும் மூர்த்தியும் பொருந்திய குணம் தற்புருஷம்.

### சதாசிவரூபம்

"தத்துவ மூர்த்தி தரும்பிர பாவமென்
றித்தகை மூன்று யியைத்திடு மிவையே
சிவசா தாக்கிய முதலிய தத்துவர்
அவமில் சதாசிவர் முதலும் மூர்த்திகள்
ஒன்றிய போதீ தாளு திகளாய்
நின்றன முறைநிரல் நிறைபிர பாவம்"

இவ்வுண்மைகளைச் சுத்தவாதுளாகம முத லியவற்றில் காண்க.

சிவசாதாக்கிய முதலிய நான்கும் ஒன்றை யொன்று பற்றி ஐந்தாவதாகிய கன்மசாதாக் கியத்தை அடைந்திருத்தலின் இது மற்றைய சாதாக்கியங்களிலும் விசேடமுடையது. நாதமயமான லிங்கமும், பிந்துமயமான பீட மும் கூடியது கன்ம சாதாக்கியமெனப் படும். அது பஞ்சகிருத்திய காரணமாயிருக் கும். கன்மசாதாக்கியர் லிங்கமும் பீடமுமா யிருப்பினும் ஈசானுதி ஐந்து திருமுகங் களும், பத்துத் திருக்கரங்களுமுடைய தியான ரூபியாயிருப்பர்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியான பூஜா நிமித்தமாக நிஷ்கள சகளத் திருமேனி கொண்ட நிலை ஆவுடையாருடன் கூடிய லிங்கமாம். இலிங்கத்திலே சிருட்டி காலத் தில் தோற்றமும் சங்கார காலத்தில் ஒடுக்கமு மாம். "சங்கார காலத்தில் எல்லாச்

சேதனுசேதன பிரபஞ்சங்களும் ஒடுங்கி, சிருட்டி காலத்தில் அங்ஙனம் தோன்று கின்றமையால் லிங்கமெனப்படும், என்று சுப்பிரபேதாகமம் கூறுகின்றது. படைத்தல் முதலியவற்ருல் உலகத்தைச் சித்திரிப்பதா கிய பரமேசுவரப் பிரபாவமே லிங்கமெனப் படும் எனினுமையும்.

இலிங்கமெனும் சப்தமானது சித்திரித்தல் எனப் பொருள்படுகின்ற 'லிங்' என்னும் தாதுவினின்றும் பிறந்தமையால் சிவபெரு மான் சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங் களால் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்ருர் என வருணபத்ததியுடையார் கூறுவர்.

ஞானசக்தியாகிய லிங்கத்தின்கீழ்க் காணப் படும் ஆவுடையார் கிரியா சத்தியைக் குறிக் கும். பரவெளியைக் குறிக்கும் சிவலிங்கத் திலே எப்பொழுதுமோர் அசைவுண்டு.

அதுவே பராசத்தி எனப்படும். ஆன்மாக் களின் பாசத்தைக்கெடுப்பதற்காக அசைதற் சத்தி லிங்கத்தைச் சுற்றிக்கொண்டு இருக் கிறது. அவ்வசைவு இலிங்கத்தில் உண் டென்பதை உணர்த்துவதற்கு ஆவுடையார் லிங்கத்தைச் சுற்றிக் கீழடங்கி அமைந்திருக் கின்றது.

ஆவுடையாரின் ஓர்பக்கத்தில் நீண்டிருப்ப தாகிய கோமுகியானது, ஆன்மாக்களைத் திருநோக்கஞ் செய்கின்ற குறிப்பாக அமைந்திருக்கின்றது.

சிவலிங்கம் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என்னும் மூன்று பாகங்களை யுடையதாயிருக்கும். அவற்றுள் பிரமபாகம் நபுஞ்சக லிங்கமும், விஷ்ணுபாகம் ஸ்திரீ லிங்கமும் உருத்திர பாகம் புல்லிங்கமுமாம். ஆண்ரூபம், பெண்ரூபம், அலிரூபமா யிருப்பது. அவன், அவள் அதுவென இருக்கும் உலகத்திலேயுள்ள உயர்திணைப் பொருளும் அஃறிணைப்பொருளும் தம்மிடத் தில் தோன்றி ஒடுங்குகின்றன என்பதை உணர்த்துவதாகும்.

சிவலிங்கமே பிரணவ முதற்பொருள், இதன் சோதித் தன்மையே அ உ மகரமா யிருக்கும். அகரம் சிவமும், உகரம் சத்தி யும், மகரம் கலை வடிவமுமாகும். நாத விந்துக்கள் அகர உகரங்களுள் அடங்கும். அகரம் கண்டமும், உகரம் கோமுகமும், மகரம் வட்டவடிவமும், பிரணவம் லிங்கமுமா யிருக்கும்.

### சிவஞானசித்தியார்

" சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்
ஒத்தொவ் வாவாதலானும் உயர் குணகுணியுமாகி
வைத்தனன வளால் வந்தவாக்க மிவ்வாழ்க்கையெல்லாம்
இத்தையுமறியார் பீடலிங்கத்தினியல்பு மோரார் "

### திருமந்திரம்

" அகார முதலா வனைத்துமாய் நிற்கும்
உகார முதலா வுயிர்ப்பெய்தி நிற்கும்
அகார உகார மிரண்டு மறியின்
அகார உகார மிலிங்க மதாமே "

சிவலிங்கமென்பது சிவமேயாம். சிவத் துக்குப் பெயராகிய லிங்கம் என்னும் பதம் உபசாரத்தால் பக்குவம் நோக்கி ஆன்மாக் களின் தியான பூஜை நிமித்தம் அச் சிவம் விளங்கப் பெறும் ஆதாரமாகிய சைவ முதலியவற்றிற்கும் வழங்கப்படுகின்றது.

## அமுதமான பெருமான்

முன்னனை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னனைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னனை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னனை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னனை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானய்.

—மாணிக்கவாசகர்

# " சக்தி தத்துவம் "

வி. விஸ்வநாத சிவாச்சாரியார், வேதசிவாகம பாடசாலை, தலைமை ஆசிரியர், அல்லூர்.

கீழைத்தேசத்தவர்களாகிய நமக்குத் தத்வ ஞானம் பரம்பரைச் சொத்து. இது ஒன்றுதான் நமது முன்னோர்கள் தேடி வைத்த செல்வம். இதைத் தவிர வேறு எதையும் அவர்கள் நமக்காக வைத்து விட்டுச் செல்லவில்லை எனச் சொல்ல வேண்டும்.

தத்வம் என்ற சொல்லுக்கு நித்தியம் உண்மை என்பது பொருள் ஆகும். தத்வ ஞானம் என்பது உண்மையை அறிவதாகும். உண்மை என்பதற்கு என்றுமே உள்ளது எனப் பொருள். நமது உடல் உள்பட நாம் காணும் பொருள்கள் யாவும் என்றும் உள்ளவை அல்ல. என்றுமே உள்ள பொருள் ஏதாவது உண்டா? உண்டாயின் அது எது? அதன் இயல்புகள் என்ன? என்பதை ஆராய்வது தத்வஞானம் ஆகும்.

இப்பிரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி லயத்திற்குக் காரணமாக ஒரு வஸ்து இருக்க வேண்டுமென அறவழி நூல்கள் கூறுகின்றன. மனிதனின் வளர்ச்சியும் உணர்ச்சியும் நாளும் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. நேற்று இருந்த வளர்ச்சியும் உணர்ச்சியும் வேறு. நாளைய நிலை வேறு. அவ்வேகத்தை நினைக்குந்தோறும் வியப்பும் விம்மிதமும்தான் அடையவேண்டும். இவ் வளர்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அவை தினமும் வளர்ந்துகொண்டே போகின்றமைக்கும் காரணம் என்ன? இவ்வேகத்தால் நன்மையா அல்லது தீமையா? இவற்றைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். உலகியல் ஒன்றையே பற்றுக் கோடாக உள்ள சிலர் இவற்றிற்கெல்லாம் காரணம் அறிவு என்பர். அவ்வறிவிற்குக் காரணம் என்னவெனில் அது இயற்கை என்பர்.

மண் தானகவே பல வடிவங்கள் கொண்ட மட்பாண்டங்களாக மாறுவதை நாம் கண்டதில்லை. குயவன் ஒருவன் ஆக்கவே அவை அங்ஙனமாகின்றன. பஞ்சபூதங்கள் உடல்களாகவும், ஏனைய பொருள்களாகவும் ஆக்க ஆக்குவிப்போன் ஒருவன் வேண்டாவோ வெனில் பூதங்கள் அப்படி மாறுவது இயற்கை என்பர். இஷ்டப்படிச் சேர்ந்த பூதங்களின் சேர்க்கையில் தோன்றியதே இவ்வுலகு எனில் இதில் ஓர் ஒழுங்கோ நியதியோ ஏற்பட இடமில்லை. ஒருவன் சிந்தித்துச் சிருஷ்டி செய்தது போன்ற ஒழுங்கு இவ்வுலகில் காணப்படுகின்றது என்றால் அது தற்செயலாய் ஏற்பட்டது என்பர். கண்ணால் கண்டது மட்டுமே மெய். ஏனைய யாவும் பொய் எனக்கொள்ளும் அவர்களே உலகாயதர்.

சிந்தித்துப் பார்த்தால் இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம் திருவருளே ஆகும். திருவருளே சக்தி என்பர். அதன் வடிவமே ஞானம். "சக்தி தன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்." என்பது சித்தியார் வாக்கு. முழுமுதற் கடவுளாய் விளங்கும் அம்மையப்பராகிய சிவபெருமானை விட்டுப் பிரியாது, அவருடனாய் நிற்கும் அருள், சக்தி எனப்படும். அந்தச் சக்தியின் சேர்க்கையினால் தான் சிவன் ஐந்தொழிலையும் புரிகின்றான். அக்னிக்கு உஷ்ணம் போலவும் சூரியனுக்குக் கிரணம் போலவும் சந்திரனுக்குச் சந்திரிகை போலவும் சிவனுடன் சக்தி இணைபிரியாமல், கூடவே தோன்றியவள்; சிவன் எப்படி ஆதியில்லாத

பரம்பொருளோ அதேபோல சக்தியும் அனுதி.

ஒன்ருய், வேருய், உடனுய், மூன்றுமாய் இருப்பது சக்தி. அச்சக்தியுடையவன் சக்தன். ஒரேபொருள், சக்தனும் சக்தியும் என இரு திறப்படும். சூரியனும் பிரகாசமும் போல்; சூரியன் தன்னையும் விளக்கிக் கொண்டு பிறபொருள்களையும் காண்பிக்கச் செய்யும். தன்னைக்காண்பித்து விளக்குங்கால் சூரியன் எனவும் இதர பொருள்களை விளக்கும்போது பிரகாசம் எனவும் கூறப்படுகிறது. இது தாதான்மிய சம்பந்தமாகும். புறப்பொருளை நோக்காமல் ஞான அறிவு மாத்திரமாய்த் தன் இயல்பில் நிற்பது சிவம். புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையில் சக்தி என்பதாகும். 'அவன் அருளால் அவன் தாள் வணங்கி' என்ற குறிப்பை உணர்த்தும் நிலையிலே, உலக நியாயத்திலே அம்மை காட்டினுலன்றி அப்பனை அறிய முடியாததுபோலத் தாயாகிய அருள் காட்டத் தந்தையாகிய சிவத்தை ஆன்மா அடைந்து அருள் அழியாத ஆனந்தமயமான உய்வு பெறும். அதையே சக்தி நிபாதம் எனச் சித்தாந்த சாத்திரம் கூறுகின்றது. சக்தி - அருள். நி-மிகுதி. பாதம் - பதிதல். அருள் மிகுதியாக ஆன்மாவிடத்திலே பதிதல் சக்தி நிபாதம் ஆகும். சக்தி நிபாதத்தினுல் சிவாத்வைதம் உண்டாகும். புண்யம் பாபம் என்ற இரண்டும் நமக்குப் பிறவியைக் கொடுக்கின்றன. புண்யம்–பொன்விலங்கு. பாபம் - இரும்பு விலங்கு. இரண்டும் பந்தமானதே. பாபம் செய்யாது ஒழித்தல் வேண்டும். புண்யம் பயன் கருதாது செய்யவேண்டும். அதாவது நமது விருத்திகள் அனைத்தையும் ஈசன் வசமாக்கினுல் புண்யகர்மா பாபகர்மா இரண்டும் துலையொத்து நிகழும். செம்பில் களிம்புபோல ஆன்மாவிடம் உடனுய் உள்ள சகசமலமான ஆணவ மலமும், ஆகந்துக மலமான கன்ம மலமும், மாயா மலமும் இது மூன்றும் ஒன்றன்பின் ஒன்ருக நீக்கப்படும். முடிவில் ஆணவம் வலிமைகுன்றி நிற்கும். அதாவது ஆணவமலம் வலியிழந்து சூரியன் முன் நட்சத்திரம் போல் நிற்கும், என்பதாகும். ஒரு காரியத்தைச் செய்ய ஒரு ஆற்றல் தேவை. சிவன், சிருஷ்டி முதலிய ஐந்தொழிலைச் செய்கின்ருன். அக்னியில் சூடு போல அவ்வாற்றல் சிவனிடத்தில் ஒடுங்கிக் கிடக்கின்றது. அதுதான் சக்தி என்பது. இந்தச் சக்தியைப் பெண்பாலாகக் கூறுவது மரபு. ஆற்றல் பெண்ணுகும்போது அதனை உடைய வஸ்துவை ஆண்பாலாகக் கருதும் நிலை ஏற்படுகின்றது. அந்தச் சக்தியினுலேயே சிவன் ஜகத்தை உண்டு பண்ணுகின்ருன். ரக்ஷிக்கிருன். ஒடுக்குகின்ருன். சிவனிடத்தில் உள்ள துடிப்புச் சக்தியினுல் ஏற்படுகிறது என ஸௌந்தர்ய லஹரி கூறுகின்றது. அந்தச் சக்திக்கு விமர்சம் என சாக்தகிரந்தங்கள் கூறுகின்றன.

சக்திக்கும், சிவனுக்கும் உள்ள உறவை, திருமூலர்,

> வாயும் மனமும் கடந்த மனேன்மணி
> பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
> ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
> தாயும் மகளும் தாரமும் ஆமே.

எனக் கூறுகின்ருர். சக்தி - ஈஸ்வரி, சக்தன்- ஈசன்; சக்தியின் அருள் சேர்ந்தாலன்றிச் சிவத்தின் அருள் கிடைக்காது. இதைத் தான் சித்தாந்த சாத்திரம் சத்திநிபாதம் எனக் கூறுகின்றது.

சக்தியைப் பெண் தெய்வமாக உபாசிப்பது சாக்தம் எனப்படும். அம்பாளுடைய உபாசனையானது மிக உயர்ந்தது. நாம் அமைதியாக வாழ்ந்து அளவில்லா ஆனந்தத்தை அடைய, அருளும் அன்னையாகிய பராசக்தியை உபாசிப்பதனுல் மிக எளிதில் அருள்பெறுவோம். தகுந்த குருவை அடைந்து ஶ்ரீ வித்யா மந்திரத்தை உபதேசம் பெற்று ஶ்ரீசக்ர விவரணங்களை நன்கு ஆராய்ந்து அறிந்து பூஜிப்பவர்களுக்குக் கிடைக்காத பேறு ஒன்றுமே கிடையாது. எவனுக்கு மறுபிறவி என்பது கிடையாதோ அவனுக்குத்தான் அந்த பாக்யம் கிடைக்கும். அம்பிகையின் உருவபேதங்கள் பலவாயிருக்கின்றன. இறைவனின் அஷ்டமூர்த்தங்களுக்கு ஏற்ப அஷ்ட சக்தியாய் விளங்கு

கிறாள். ஜகத்தின் பரிபாலனத்தைச் சேர்ந்த வெவ்வேறு காரியங்களைச் செய்வதாகப் பாவனை செய்யும்போது வெவ்வேறு ரூபங்களோடு இருக்கின்றாள். உபாசனைக்குரிய மூர்த்தி, வழிபடும் முறை, மந்திரம், யந்திரம் முதலியவைகள் சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. மனிதனின் ஐந்து பொந்துகள், மனஸ், புத்தி, தான் என்ற ஓர் உணர்வு இந்த எட்டையும் தன் வயப்படுத்தி ஓரிடத்தில் நிறுத்தி ஆழ்ந்த-கூடியநிலை இருக்குமானால் அவன் முழுமையாக அதில் தன்னை மறந்து விடுவான்.

குரு உபதேசப்படிப் பாரம்பரியமாக அனுஷ்டித்து வந்ததை அனுசரித்து கண், காது முதலிய இந்திரியங்களை, அவற்றின் தன்மாத்திரைகளான ரூபம், சப்தம், முதலிய விஷயங்களிலிருந்து திருப்பி மனத்தில் சேர்த்து அந்த மனத்தைப் புத்தியில் ஐக்கியப்படுத்தி அந்த புத்தியின் விருத்தியைச் சித்சக்தியில் பொருத்தி இடையிடையே வேறு எண்ணங்களின்றி நெடுநாள் நிரந்தரமாய் ஆதரவோடு உபாஸ்யமான தேவியின் திருவுருவத்தை, புத்தி விருத்தியில் நிறுத்தி, நிலைபெறச் செய்வதே உபாஸனை ஆகும்.

நான் மனுஷ்யன் என்ற எண்ணம் யாவருக்கும் இயல்பாய் இருப்பது. சித் சக்தியே நான் என்னும் திடமான எண்ணம் ஏற்படும் வரை இந்த பாவனை செய்யவேண்டும். இவை பாஹ்யம் ஆந்திரம் என இருவகைப் படும். பாஹ்ய உபாசனையில் மூர்த்தங்கள், சக்கரங்கள், சந்தனம், புஷ்பம், தூப தீப நைவேத்யம் முதலியவைகள் வேண்டும்.

ஆந்திரமான உபாசனையில் வாக்கினால் துதித்து மந்திரங்களை ஆவ்ருத்தி செய்து மனத்தினால் த்யேயரூபத்தை அறவழி நூல்களில் வகுத்தபடி தியானித்தல் வேண்டும்.

ஆந்திர உபாசனை மூன்று வகைப்படும். (1) ஸ்தூலம், (2) சூக்ஷ்மம், (3) பரம் (சிரேஷ்டம்)

1. ஸ்தூல ஆந்திர உபாசனை: இது உபாஸ்யத்தின் ஸகுண ஸாகார ரூப தியானமாகும். இது சாஸ்திரப் பிரதிபாத்தியமானது. கரசரணாதி அவயங்களோடு கூடியது.

2. சூக்ஷ்ம ஆந்திர உபாசனை: உபாஸ்ய தேவதையின் மந்த்ராத்மகமான எழுத்துக்களின் ஸ்வரூபமே ஆகும். அகாரம் முதல், க்ஷகாரம் இறுதியாயுள்ள 51 அக்ஷரங்களும் சர்வ விஷயம் ஆவதாம். இத்தகைய சூக்ஷ்ம ரூபமானது மந்த்ர, த்ராஷ்டாக்களாகும். சம்யமீந்தரர்களுக்குப் ப்ரத்யக்ஷமாகும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

3. பரா ரூபா ஆந்திர உபாசனை: இது ஞானரூப சைதன்ய மந்திரத்தை அறியும் சுத்த ஸத்வ ப்ரதான மனோவிருத்தியோடு கூடியதாகும்.

மேற்கூறிய ஸ்தூல சூக்ஷ்ம பரமான மூன்றுவித ஆந்திர உபாஸ்திகளுக்கும் அப்பாற்பட்டதாகும். மனோவாசாமகோசாரம் என்ற நிலையிலே பரமானந்த ப்ராப்தி ஆகும்.

பாஹ்ய பூஜைசெய்யும்போது ஆந்திர பாவத்தோடும் உள்ளவர்கள் பராபரவாமி மதத்தைச் சேர்ந்தவர்கள். கேவலம் பாஹ்ய பூஜை செய்பவர்கள் கௌலர்கள் எனப் படுவர். அந்த மார்க்கமும் சாக்தத்தில் கூறப் பட்டிருக்கிறது.

அம்பிகையின் உபாசனை சபல சித்தத்தை உடையவர்களுக்குச் சாத்தியமில்லை. அம்பாளைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத்திற்கு ஸ்ரீ வித்யை என்றும் அம்பாளுடைய மந்திரத்திற்கு ஸ்ரீவித்யை என்றும் பெயர். அண்டத்திலே உள்ளது பிண்டத்திலேயும் என்றபடி பிரம்மாண்டத்திலுள்ள சூரியன் சந்திரன் மற்றுமுள்ளவைகளையும் சரீரத்திலேயே பாவனை செய்வது முறையாகும். அவர்கள் யோகிகள்.

பிந்து சிவனும் நாதம் சக்தியும் ஆகும். இவையிரண்டும் முறையே சூரிய சந்திர வடிவங்களாகும். பிந்து நாதம் கலை இம் மூன்றையும் கடந்து நிற்கும் தத்துவத்தை எவன் அறிகின்றானோ அவனே யோகி ஆவான், என யோக சாத்திரம் கூறுகின்றது. என்றபடி சரீரமானது ஜீவனுக்கு எப்



சந்திர சேகர மூர்த்தி
உற்சவர்



பார்வதி தேவி
உற்சவர்

படி அவஸ்தானமாக இருக்கின்றதோ அப்படியே ஸ்ரீ சக்ரமானது சிவன், சக்தி இருவர்களுக்கும் இருப்பிடமாகஇருக்கிறதென்று அறியவேண்டும். பிந்து திரிகோணங்களாகிய நவயோன்யாத்மகமான அம்பாளுடைய சக்ரத்தை ஸ்ரீ சக்கரம் என்றும் சக்ரராஜம் என்றும் சொல்வது வழக்கம். நாதம் பிந்து இவை இரண்டும் ஸ்ரீசக்ர வடிவமாகத் திகழும் ஸ்ரீ அகிலாண்ட நாயகியின் சரீரமென சக்தி உபாஸகர்களால் உருவகம் செய்து கொள்ளப்படும்.

ஸ்ரீ சக்ரத்திற்கு 43 முக்கோணம், அவை முறையே சிவகோணம் 3, சக்தி கோணம் 5, அஷ்டதளம் ஷோடசதளம், மூன்று வலயங்கள், 4 சக்ரங்கள், பிந்து நாதம் கலை இவைகளுமாகச் சேர்ந்து அமைவது ஆகும். இந்த ஸ்ரீ சக்ரத்திலே யோக சாஸ்திரங்களிலே விளக்கி உள்ள மூலாதாரம். சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனுஹதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களும் அடங்கியுள்ளன.

அதாவது முக்கோணம் மூலாதாரமாகவும், அஷ்டாரம் சுவாதிஷ்டானமாகவும், தசாரம் மணிபூரகமாகவும், பஹிர்தசாரம் அனுஹதமாகவும் மன்வச்ரம் விசுத்தியாகவும், பிந்து ஆக்ஞையாகவும் கூறப்பட்டிருக்கின்றது. அண்டத்திலே சுவாதிஷ்டான க்ஷேத்ரமாகத் திருஆனைக்கா விளங்குகின்றது.

சரீரத்திலே மூலாதாரத்திற்கு மேலே இரண்டு அங்குலத்தில் ரெத்னம் போன்ற ஒளியுடன் விளங்குகின்ற நான்கு தளங்களைக் கொண்டு சுவாதிஷ்டானம் என்னும் சக்ரமானது, விளங்குவதாகும். ஆறு இதழ்களோடு ஆறு அக்ஷரங்களோடு செந்நிறப் பொலிவுடன் விளங்கும் அத்தாமரையை அறிஞர்கள் சுவாதிஷ்டானம் என அழைப்பார்கள். அவ்விடத்தில் பாலன் என்ற சித்தனும், ராகினி என்ற தேவியும் வசிக்கின்றனர். ஆறு இதழ்களிலும் பந்தினி, பத்ரகாளி, மஹாமாயா, யசஸ்வினி, ரமா, சம்பேஷ்டி என ஆறு தேவிகளும் வசிக்கின்றனர். அந்த ஆதாரமானது தனக்கு மேலான அக்னி தத்துவத்துடன் இணைந்து இலங்குவது ஆகும். இவ்விடத்திலேதான் குண்டலினி தானே அதிஷ்டானமாகி கிரந்திகளைச் செய்து கொண்டிருக்கும், எனச் சாத்திரங்கள் கூறுவதால் அந்த ஆதாரத்திற்குச் சுவாதிஷ்டானம் எனப்பெயர். யோகியானவன் தனது இடையருத பயிற்சியினுல் இந்த ஆதாரத்திலுள்ள அக்னியைப் பிரகாசிக்கச் செய்யும்போது குண்டலினி சக்தியானது பெருவெளியில் சிவனேடு உறைவது ஆகும்.

சித்தாந்த சாத்திரமானது சரஸ்வதியோடு கூடிய பிரமாவை, அபயம், வரதம், கமண்டலு, அக்ஷமாலை இவைகளை நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு அக்ஷரங்களோடு கற்பனை செய்யப்பெற்ற பத்மத்திலே காந்தியுடன் சிந்தனை செய்யவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. சக்தி உபாசகர்கள் மேதஸ் என்ற தாதுவைத் தனது இருப்பிடமாகக் கொண்ட காசினி என்ற தேவதையைத் தியானம் செய்கின்றுர்கள். இதே போன்று மற்ற ஆதாரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சக்ரத்தைப் பூஜிக்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் குருவினுடைய பரம்பரை வழிவந்த உபதேசம் பெற்று ஒவ்வொன்றையும் நன்கு கவனித்துச் செய்யவேண்டும். குருவினுடைய முன்னிலையில் பூஜைகள் செய்து அவருடைய அனுமதியைப் பெற்றுத் தனிமையில் பூஜை செய்யவேண்டும் என்பதும் நமது முன்னேர்களுடைய மரபாகும். தினந்தோறும் தோன்றுகின்ற சூரியன் சந்திரன் ஐம்பெரும் பூதங்களையும் அண்டசராசரங்களையும் சக்தியுடன் இயங்கச் செய்கின்ற மாதாவான அகிலாண்டநாயகியை அனுதினமும் வணங்கித் தரிசித்து வந்தால் மிகுந்த பாக்கியம் உண்டாகும். இந்த க்ஷேத்ரமானது அன்னமய, பிராணமய, மனேமய, விக்ஞானமய, ஆனந்தமய என்ற பஞ்சகோசங்களாகின்ற பஞ்சபிரகாரமத்தியில் பஞ்சபூத க்ஷேத்திரத்திலே அப்புலிங்க வடிவத்திலே ஈசனைப் பூஜித்து, ஆனைக்கா அண்ணலை அமைத்து, யாவரும்

வழிபட்டு உய்யும் பொருட்டுக் கருணாமூர்த்தியாய் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி பிரகாசிக்கின்ருள். ஆதி சங்கரராலே ஸ்ரீ சக்கராகாரமான தாடங்க இரட்டையைப் பிரதிஷ்டை செய்யப்பட்டு அர்ப்பணிக்கப்பட்ட காதணிகளை உடையவளாய் விளங்குகின்ருள். ஈசனே சித்தர் வடிவங்கொண்டு திருமதில் வேலை செய்பவர்களுக்கு அளித்த திருநீற்றினுல் அவரவர்கள் வேலைக்குகந்த ஊதியத்தைப் பெற்ருர்கள் எனக் கூறும் க்ஷேத்ர மஹாத்மியத்தாலே ஆனைக்கா அண்ணலின் அடிச்சுவடுகள் பதிந்த ஐந்தாம் பிரகாரமான திருநீற்ருன் மதில் திருப்பணி நடந்தது அஹோ! பாக்கியம். மூல பண்டாரமே ஊதியம் கொடுத்து நிர்மாணம் செய்த திருநீற்ருன் மதில் மன்னர்கள் கட்டிய இராஜ கோபுரங்கள், சோழ மன்னர்கள் கட்டிய விமானம் முதலியவற்றைத் திருப்பணிச் செய்ய, திரு தி.மூ. நாராயணசாமி பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின் அருளாசியைப் பெற்றுச் செயல்பட்டது. இக்குழுவினரின் பாக்கியமே பாக்கியம்! ஸகல சக்தியின் வடிவினளான அன்னை அகிலாண்டநாயகியை வழிபட்டு அனைவரும் இம்மையிலும் மறுமையிலும் நீங்காத செல்வம் பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டுகின்ருேம்.

## யானைக்கு அருள் செய்த அண்ணல்

சுறவக் கொடிகொண் டவணீறதுவாய்
உறநெற் றிவிழித் தவெமுத்தமனே
விறல்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமெனு யிழையே.

## கருணைக்கடல்

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண்நா வலுளாய்
அங்கத் தயர்வா யினளா யிழையே.

—திருஞானசம்பந்தர்

## எம்மையாளுடையார்

தந்தை யாயுல குக்கோர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான் பரிசுடையவர்திரு வடிகள்
அந்தண் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
எந்தை யென்றடி சேர்வார் எம்மையு மாளுடையாரே.

# ஓங்கார கணபதி

மகாவித்வான் ச. தண்டபாணிதேசிகர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானேரும் யானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

—கபிலதேவ நாயனர்

உலகில் எதனையும் இயற்ற உறுதி வேண்டும். உறுதி எண்ணத்தி லிருந்து செயலாக மாறிக் கருவிகள் வழி யாகக் காரியமாக உருக்கொண்டு நமக்கும் பிறர்க்கும் பயனளிக்கிற வகையில் நிலைக்க வேண்டும். இதனையே வள்ளுவர் நினைத் ததை நினைத்தபடி நிறைவேற்றிக் கொள்ள லாம், நினைத்தவன் உறுதியுடன் இருந் தால் என்று கூறுவார்.

உதாரணமாக, இளமையின் துடிப்பு, இதயத்தின் எழுச்சி, உடம்பின் வலிவு தேவைக்கு இன்றியமையாத பொருள்களின் வாய்ப்புக்கள் அனைத்தும் வாய்க்கப்பெற்ற ஒருவன் உறுதியுடன் நீளப் பயணம் தொடங்கினுன் என்று வைத்துக் கொள் வோம். அவனுக்கும் நடுவழியில் ஒரொரு காலத்து ஊன்றுகோலும் உசாத்துணையும் தேவைப்படத்தான் செய்கிறது. அதுபோல உறுதியுடன் ஒன்றைத் தொடங்கினுலும், நமக்கு உதவியும் தேவைப்படுகிறது.

அவ்வுதவியோ, ஒப்புக்காகவோ—பிறர் மெச்சவோ உதவமுன்வராததாக உண் மைக்கே உதவுவதாக அமைதல் வேண்டும். அதுபோலவே உதவி பெறுபவனும் உண் மையாக உதவுபவனை நம்பவேண்டும். இப்படி, உறுதியும், உதவியும், உண்மையும் ஒன்று கூடினுல் ஆகாத காரியம் எதுவுமே இல்லை. எண்ணிய எண்ணியாங்கு எய்த லாம்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

—திருக்குறள்

ஆனுல் உண்மையாக உதவி செய்பவர் யார் என்று தேடிக்கண்டு துணிவதிலேயே சிரமம் இருக்கிறது. மனித அறிவு மயங்கிப் போகிறது; துணையில்லாதவரைத் துணை யெனத் துணிகிறது. களைத்துப் போகிறது. தம் சமுதாயத்தை இத்தகைய அவல நிலைக்கு விட்டுவிடாமல், நம் தாய் தந்தை யர்கள், தாத்தாக்கள் தம் மக்களுக்கும், பேரன் பேத்திகளுக்கும் உண்மையான துணையை உணர்த்திவிடவேண்டும். அதனை உறுதியாகப் பற்றி நடக்க உபதேசிக்க வேண்டும் என்ற உணர்வு வேகத்தால் தம் குழந்தைகளை விடியற்காலையிலேயே எழுப்பி உட்கார வைத்துக் கொண்டு,

வெள்ளைக் கொம்பனை விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடரும் வினைகளே!
குள்ளக் குள்ளனைக் குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பனை விநாயகனைத் தொழு.
வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்.

என்பன போன்ற எளிமையான—இனிமை யான ஆனுல், வாழ்விற்குத் தேவையான கருத்தமைந்த பாடல்களைச் சொல்லிக் கொடுப்பார்கள். குழந்தைகள் பொருள் தெரியாமலே பாட்டின் இசையமைப்பிலே—தாளக் கட்டிலே மயங்கிப் பாடிக்கொண்டே துள்ளி ஓடும். அதைக்கண்டு தாத்தா பேரானந்தம் பெறுவர். இந்தப் பழக்கம் குழந்தைகளே! உங்களுக்கு இடையூறு வந்தபோது உற்றதுணை கணபதியை நினை யுங்கள்; குட்டிக் கொண்டு கும்பிடுங்கள். அவர் உங்களுக்குத் துணையாவார் என்ற

எண்ணத்தைக் குழந்தைகளிடம் பதிய வைக்கிறது. ஆதலால் குழந்தைகள் தமக்குத் துணை—உண்மையான துணை கணபதியே என்று கருதுகின்றன. அதனால் கணபதியைக் கைதொழுது வாழ்க்கைப் பயணத்தில் உல்லாச நடைபோட்டு உயர்கின்றன. இதனால் நாமும் உயர்கிறோம் உற்றதுணை—உண்மைத்துணை ஓங்கார கணபதியே என்று.

ஓங்கார கணபதி திருவானைக்கா என்னும் இத்தலத்திலே, மேற்குநோக்கி வெண்ணாவல் மரத்தடியிலே வீற்றிருக்கும் விடையேறும் பெருமானாகிய ஆனைக்காவிலண்ணலார் திருமுன் தென்மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். இவரே இத்தல விநாயகர்.

கச்சியப்ப முனிவர் திருவானைக்காப் புராணம் செய்தவர், கவிராட்சதர் எனக் கவிஞருலகத்தில் போற்றப் பெறுபவர். அவர் நம் ஓங்கார விநாயகரைப்பற்றி உரைப்பதைக் கேளுங்கள்.

'ஓங்கார விநாயகர், தன்னை உள்ளன்புடன் வழிபடுகின்ற உண்மை அடியார்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயனையும் அளித்து அறக்கருணை செய்கின்றார்.

அங்ஙனமே, வழிபடாதவர்கட்கு அவர்களால் எவ்வகையிலும் நீக்கிக் கொள்ள இயலாதவாறு இடர் விளைத்து மறக்கருணையும் புரிகின்றார். அடித்தலும் அணைத்தலும் இரண்டுமே அன்பர்களை ஆட்கொள்கின்ற முறைகளே. தந்தை தீமை செய்யும் பிள்ளையையே அடித்துத் திருத்துகிறார். நல்லனவே செய்யும் பிள்ளையைக் கொடுத்தே உயர்த்துகிறார். அதுபோலத்தான், உலகத் தந்தையாகிய பிரணவப் பொருளாகிய பிள்ளையாரும்.

பிள்ளையார் உருவமோ அறிவே உருவம்; உலகம் எங்கும் வியாபித்திருக்கும் உருவம். எழுத்துக்கள் எல்லாவற்றிலும் கலந்து நின்று எழுத்துக்களை இயக்கும் அகரம்போலச் சடமாகிய உலகம் எங்கும் கடந்து நின்றும், சித்தாகிய உலகம் எங்கும் கலந்து நின்றும் இயங்குவ நிற்பவான எல்லாவற்றையும் அடக்கித் தாம் அவற்றில் வியாபித்துள்ள ஞான உருவம்.

அம்மட்டோ! 'ஓம்' எனக் (சமஷ்டி) கூட்டுருவாயும், அ-உ-ம் என்னும் மூன்றெழுத்துக்களாய் (வியஷ்டி) வேற்று வடிவாயும் விளங்குகிறார். இதுவே ஓங்கார விநாயகரும், அவரை வழிபாடு செய்வார் எய்தும் பயனும், வழிபடாதார் எய்தும் தீமையும் ஆம் எனச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லுகிறார்கள். அந்தப் பாடலைப் பாருங்கள்; படியுங்கள்; பாராயணம் செய்யுங்கள்;

அகரமென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்தகர உகரமக ரங்கள்தம்மால்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

ஒலி உலகில் முதலாவதாக ஓங்காரவடிவமாக விளங்கும் பிள்ளையார் பொருள் உலகிலும் இல்லாத இடமில்லை.

பிள்ளையாரின் திருவுருவம் தமிழ் ஓங்காரத்தின் வடிவமாகவே அமைந்திருப்பது பிள்ளையாருக்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள பழமையான தொடர்பைக் காட்டுகிறது. பிள்ளையாருக்குப் பிடித்த நிவேதனம் மோதகம் என்ற பணியாரம் செய்யும் வகை தமிழ் நாட்டினருக்கு அன்றி வேறு யாருக்கும் இன்றைக்கும் தெரியாது. பழந்தமிழ் இலக்கியங்களில் மோதகம் கவவு என்ற பெயரால் குறிக்கப் பெறுகின்றது.

பிரமம், அல்லது சிவம் ஒன்றே உயர்ந்த குடிமக்களால் வணங்கப்படுவன. கணபதி சூத்திரர் தெய்வம் என்று மனு கூறுவதாக மிஸ் கெட்டி என்பவர் கூறுகிறார். பழங்கால இந்தியப் போர்முறை என்ற நூல் விநாயகரை வெற்றிக்காகவும், இடையூறு விலகவும் இந்துக்கள் வணங்குகிறார்கள் என்று கூறுகிறது.

"ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு [மோ"
ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டா

என்றாற் போல விநாயகருக்கும் பல பெயர்

கள் உண்டு. அவை ஒவ்வொன்றும் அவர் அடியார்களுக்கு அருள் செய்த சிறப்பினுல் உண்டானவை.

ஆகமத்தை ஒட்டியும், புராண வரலாறு களை ஒட்டியும் பிள்ளையாரில் 32 வகைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் அவர் அடியார்களுக்காக எடுத்த திருமேனி யின் வேறுபாட்டை விளக்குவன. அவற் றுள் ஏரம்ப கணபதியின் உருவம் இத் தலத்திலே அகிலாண்டேஸ்வரியின் பின் பக்கத்தில் கன்னி மூலையில் இருக்கிறது. இதோ பாருங்கள் இந்த உருவத்தை. சிறிது சிதைந்திருந்தாலும் அழகு மனத் தைக் கொள்ளை கொள்கிறதல்லவா?



ஐம்முகப் பிள்ளையார். ஏரம்ப விநாயகர் என ஆகமங் கள் சொல்லும். தந்தைக்குள்ள ஐந்து முகம் இவருக்கும். தெய்வத் திருவுருவங்களின் தலையின் மிகுதி ஞான விசேடத்தையும் கைகளின் மிகுதி செயல் மிகுதியையும் காட்டுவன அல்லவா! ஆதலால் தந்தையைப் போல பிள்ளை.

இத்தலத்து அம்மன் கோயில் உட்பிரகாரத்தில் கன்னி மூலையில் உள்ளது.

ஒரு முகத்தை ஒரு முகம் மறைக்காதபடி அடுக்காக ஐந்து முகங்களும் சுருண்ட துதிக்கையோடு விளங்குவதைப் பாருங்கள். இவருக்குப் பத்து கைகள். பத்து கைகளிலும் பாசம், தந்தம் முதலான ஆயுதங்களும், அக்ஷமாலை, பழம் முதலிய பொருள்களும் விளங்குகின்றன. இப்படி இவர் ஆயுதங் களையும், பழங்களையும் மாலை முதலான போகப் பொருள்களையும் தாங்கி இருப்ப தால் வெற்றி வீரராகித் துன்பங்களைப் போக்கியும், போகி ஆகி இன்பங்களைக் கொடுத்தும் நம்மை எல்லாம் பாதுகாக்கிருர் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிருர்.

மற்ருெருவர் முன் சொல்லிய ஏகாட்சர கணபதி. ஏகாட்சரம் என்பது ஓங்காரம். அவரைப் பற்றிய அமைப்பின் அழகை இத் தலத்திலுள்ள ஓங்கார கணபதியின் உருவத்தை உற்று நோக்கி உணருங்கள்.



ஸ்தல விநாயகர் ஓங்காரப் பிள்ளையார். இவரைப் பிரார்த்தித்துக் கொண்டே திருப்பணி தொடங்கப் பெற்றது. இத்தனை லட்சம் ரூபாய்கள் சேர்ந்தன. திருப்பணி இனிமையாக நிறைவேறியது. மகா கும்பாபி ஷேகமும் நடந்தது. இன்னும் வருகின்றவர் வரட்டும் வரங்கொடுப்போம் என்று காத்திருக்கிருர். இது உயர்ந் தவர்களின் உதார குணம்.

பிள்ளையார் நமது நாட்டில் மட்டுமா இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார். ஜாவாவில், ஜப்பானில், சைனாவில், நேப்பாளத்தில் எங்கும் காணுங்கள்.



பீடத்தைப் பார்த்தால், பயங்கரமாக இருக்கிற தல்லவா? கபாலங்களின் வரிசை.

கணபதி களிப்புடன் வீற்றிருக்கிறார். துதிக்கை மோதகத்தை எடுக்க முயற்சிக்கிறது. கருணை வழியும் கண்கள். உயர்த்திய கைகளில் வாழைப்பழமும் ஒடிந்த தந்தமும். இவர் ஜாவாத் தீவில் இருக்கிறார்.



அன்பரை இறுகத் தழுவிக் கொள்வதைப் பாருங்கள். தம்மைக் காண ஜப்பான் நாட்டிற்கு அழைக்கிறார்.

அந்தந்த நாட்டு மக்களுடைய மன அமைதிக்கு ஏற்றவாறு பிள்ளையாருடைய திருவுருவங்கள் அமைந்திருக்கும் அழகைப் பார்க்கலாம். ஜப்பான் பிள்ளையார் அன்பனை இரண்டு கைகளாலும் தழுவிக் கொண்டிருக்கிற கருணைச் சிறப்பைக் காணுங்கள். சைனா விநாயகர் தலையில் மகுடம் அணியாமல் வெயிலில் வாடி வதங்கியவர் காற்றுக்காக உல்லாசமாக உட்கார்ந்திருப்பதைப் போல இருக்கிறார்.

நம்முடைய நாட்டிலே எந்த விழா எடுத்தாலும் பசுஞ் சாணியால் பிள்ளையாரைப் பிடித்து வைத்து வழிபடுகின்ற வழக்கம் உண்டு. அதனாலேயே 'பிடிச்சு வைத்தால் பிள்ளையார்' என்ற பழமொழி வழங்குவதாயிற்று. பிள்ளையாருக்கு அறுகு, வன்னிப்

பத்திரம், மந்தாரைப்பூ இவைகளில் விருப்பம் அதிகம். இவைகளைக் கொண்டு பூசித்தால் மிக மகிழ்வார். தாழம்பூவும், துளசியும் அவருக்கு அறவே பிடிக்காது.

**விரதங்கள் :**

நம்முடைய மனம் இருக்கிறதே அது ஒரு பொல்லாத குரங்கு. எப்போதும் ஒன்றைப் பற்றி இராது. அங்கும் இங்கும் தாவிக் கொண்டே இருக்கும். அந்த மனத்தைக் கட்டுப்படுத்தி ஏதோ ஒரு பொருளை நிலைக்கச் செய்து விட்டோமானல் நாம் உயரலாம். மனம் உயர மனிதன் உயருகிறுன் என்பது பழமொழி. இல்லறத்தில் வாழ்கின்ற நமக்கு மனம் ஒருமைப்பட ஒரே ஒரு வழிதான் உண்டு அதுதான்



யாரோ அழைக்கிருர்கள் போலிருக்கிறது. எழுந்து தண்டுன்றிச் செல்ல முயற்சிக்கிருர். பரபரப்பில்லாத அமைதியான பார்வை. இவரை மகாபலேஸ்வரம் போனல் காணலாம்.



இரண்டே கைகள். வலக்கையில் அங்குசம் இடக் கையில் பாசம். கிரீடமில்லாமல் யோகவஸ்திரத்துடன் வழிமேல் விழி வைத்து வரமருளக் காத்திருக்கிருர். கணபதி எங்கே, சைனவில்.

விரதம் இருத்தல். விரதம் என்பது என்ன? நம்மை நாமே உணவாலும், ஒழுக்கத்தாலும் கட்டுப்படுத்திக் கொள்ளுதல். ஆகவே பிள்ளையார் கருணையைப் பெறுதற்குரிய விரதங்கள். வெள்ளிக்கிழமை விரதமும், சதுர்த்தி விரதங்களும், குமார சஷ்டி விரதமும் ஆம்.

வெள்ளிக்கிழமை விரதம் வைகாசி மாதத்துச் சுக்ல பட்சத்து முதல் சுக்ரவாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் தவருது அனுஷ்டிக்கப்படுவது. அன்று விடியற்காலையில் நீராடி விநாயகரை அறுகும் பூவும் இட்டு வழிபட்டுப் பகல் முழுவதும் உண்ணுமல் இருந்து மாலையில் மறுபடியும்

நீராடி விநாயகரை வழிபட்டு ஏதாவது பழங்களை உண்ணுதலாம். இந்த விரதத்தை அனுஷ்டித்ததாலேயே குபேரன் சங்கநிதி பதுமநிதிகளைப் பெற்று பணக்காரனுனன்.

**விநாயக சதுர்த்தி :**

இந்த விரதத்தை நம் நாட்டுப் பெரியவர்கள் மறந்தாலும் சிறியவர்கள் மறக்க மாட்டார்கள். ஏன் தெரியுமா ? அன்று நிறைய



இவர் தான் யோக விநாயகர். ஆறுகைகள். இரண்டு கைகள் யோக நிலைக்கு ஏற்பத் தொடைகளின் மேல். அடுத்துள்ள வலக்கையில் மாம்பழம். இடக்கையில் மோதகம். மேலுள்ள வலக்கையில் வாழைப்பழம். இடக்கையில் தாமரை மொட்டு. எல்லாருக்கும் யோக நிலையில் தாமரை மொட்டுப் போல இதயங் குவிய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறுர். முடி நேபாள நாகரிகத்தைக் காட்டுவது. இவரை நேபாளத்திற்குப் போனுல் பார்க்கலாம்.



இவர்தான் காசியிலுள்ள துண்டி விநாயகர். காசி ராஜன் மகளுக அவதரித்த குழந்தை நிலையிலே காட்சியளிக்கிறுர்.

மோதகம் கிடைப்பதால். இந்த விரதத்தை எப்படி மேற்கொள்ளவேண்டும் தெரியுமா ? ஆவணி மாதத்து சுக்லபட்சத்து சதுர்த்தியிலே பகலில் ஒரு வேளை மட்டும் உண்டு இரவில் பழம் அல்லது பால் மட்டும் உண்டு விநாயகரை எண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும். இரவில் சந்திரனைப் பார்க்கக் கூடாது. இவ்விரத காலத்தில் விநாயகருக்கு மாசிப் பச்சை, வில்வம், ஊமத்தை, அறுகு முதலான இருபத்தோரு பத்திரங்

களைக் கொண்டு அர்ச்சிக்க வேண்டும். விநாயக மந்திரத்தை எண்ணவேண்டும். இப்படி ஒவ்வொரு சதுர்த்தியும் செய்து வந்தால் இடையூறுகள் விலகும். இன்பம் உண்டாகும்.

குமார சஷ்டி :

கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்ல பட்சம் சஷ்டி வரை இருபத்தொரு நாள் நிகழ்த்தப் பெறும் விரதம். இதனைப் பிள்ளை யார் நோன்பு என்பார்கள். 'சஷ்டி தொட்டு சதயம் விட்டு' என்ற பழமொழியும் இந்த விரதம் அனுஷ்டிக்கும் காலத்தை வரை யறுக்கிறது. இந்த நோன்பை மேற்கொள் பவர்கள் இருபத்தோரு இழைகளாலான காப்பைக் கட்டிக் கொள்ளவேண்டும். முன் கூறியபடி விநாயகருக்கு நீராட்டி விதவித மாக நிவேதித்தல் வேண்டும். ஒரு வேளை உண்டு எப்போதும் தியானத்தில் இருக்க வேண்டும்.

சங்கட ஹர சதுர்த்தி :

மாசி மாதம் தேய் பிறையில் செவ்வாய்க் கிழமையோடு சேர்ந்துவரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டுக்காலம் விதிப்படி அனுஷ்டித்து வந்தால் துன்பங்கள் நீங்கி செல்வம், செல்வாக்கு, கல்வி முதலான எல்லா இன்பங்களையும் எய்தலாம்.

இவ்வண்ணம் ஆண்களும், பெண்களும் அனுஷ்டிக்கும் விரதங்களேயன்றிப் பெண் கள் மட்டும் நோற்கும் நோன்புகளும் உண்டு. அவை வெள்ளிப் பிள்ளையார், செவ்வாய்ப் பிள்ளையார் நோன்புகள். அவைகளை நோற்கும் வகை, பயன் அதைப்பற்றிய வரலாறு இவைகளைப் பெண்கள் தங்களுக் குள் இரகசியமாக வைத்துக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் ஆடி, தை மாதங்களில் இவைகளை விடாமல் நோற்பதால் ஏதோ பயனை அடைகிறார்கள் என்பது மட்டும் துணியலாம்.

இப்படிப் பிள்ளையார் வழிபாடு பலவகை களில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் வாழ்க்கையில் கலந்திருக்கிறது. பிள்ளை யாரையே முதற் கடவுளாக வழிபடும் மதம் ஒன்று உண்டு. அதுதான் காணுபத்தியம். அவர்களுக்குக் கணபதியே முதல் தெய்வம். அவரே உலகத்தைப் படைக்கிறார், காக் கிறார், அழிக்கிறார். அவர் வாழும் உலகத் திலே அவரைப் போல உருவந்தாங்கி அவரையே வழிபட்டுக் கொண்டு அவருக்குப் பக்கத்தில் இருப்பதுதான் முக்தி என்பது அவர்களது கொள்கை.

இத்தகைய விநாயகரை எந்தக் காரியம் செய்தாலும் முதலில் வழிபடவேண்டும். வழி படுவது தான் வழக்கம்.

"எப்போத கத்தும் நினைவார்க்கு இடர்இல்லை
கைப்போதகத்தின் கழல்.

## திருவானைக்கா வரலாறு

அப்பூங் கானில் வெண்ணுவ லதன்கீழ் முந்நாளரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக் கமழ்பூங் கொத்து மணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை நாளும் வழிபட்டொழுகுமால்.

ஆன செயலால் திருவானைக் காஎன் றதற்குப் பெயராக
ஞான முடைய ஒருசிலந்தி நம்பர் செம்பொன் திருமுடிமேல்
கானல் விரவுஞ் சருகுதிரா வண்ணங் கலந்த வாய்நூலால்
மேனற் றிருமேற் கட்டிஎன விரிந்து செறியப் புரிந்துளதால்

—சேக்கிழார்

# முருகன்

அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

" ஊரிலான் குணங் குறியிலான்
செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான்
பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான்
மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய்
என்னுளே நின்றான் "

என்பது கந்தபுராணத் திருவாக்கு. இறைவனுக்கு ஊர், குணம், அடையாளம், செயல், பேர், காலம், பற்றுக்கோடு, போக்கு, வரவு, உயர்வு, ஒப்பு முதலிய ஒன்றும் இல்லை.

பேரும் ஊரும் இல்லாத பெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டுப் பேரும் உருவும் தாங்கி வருகின்றான்.

இத்திருவருளின் இயல்பை உள்ளவாறு உணராதார் இறைவனுக்கு நாமரூபம் நம்மால் கற்பிக்கப்பட்டன என்பார்கள்.

மூவாண்டுடைய சீகாழிப் பிள்ளையார் அழுதலும், அவருடைய பண்டைத் தவ வலிமையால் இறைவன் திருவுருவுடன் காட்சி தருகின்றான். வெள்ளை விடையும், பவளமலை போன்ற திருவுருவமும் அருகில் மரகதக்கொடி போன்ற அம்பிகையும், பிறையணிந்த திருமுடியும், மான்மழு ஏந்திய திருக்கரங்களும், நீலகண்டமும், தோடணிந்த தாழ் செவியும், கருணை பொழியும் மலர்க் கண்களும், நீறணிந்த திருமேனியும் கண்டு அச்சிறிய பெருந்தகையார் "தோடுடைய செவியன்" என்று பாடுகின்றார். அத்திருமேனியை மூவாண்டுக் குழந்தை கற்பனை புரியவில்லை. கண்ட காட்சியைக் கழறுகின்றது.

சூரபன்மனுக்குச் சிங்கமுகன் கூறுகின்ற அறவுரையைக் கந்தபுராணத்தில் காண்க.

" வாலிதா மதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியும் முக்கணும் நாற்பெரும் புயமும்
நீல மாமணிக் கண்டமும் கொண்டுநின் றனனால்
மூல காரணம் இல்லதோர் பராபர முதல்வன் "

" தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக் கொண்டது
என்ன காரணம் என்றியேல், ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்
பின்னை வீடுபே றருளுவான் நினைந்த பேரருளே "

இவ்வண்ணம் சிவமூர்த்தி ஆன்மாக்களின் நலன் கருதி எடுத்துக்கொண்ட திருவுருவங்கள் பல. அவற்றுள் மிகவுந் தொன்மையானது ஆறுமுக வடிவம்.

" அந்திக்கு நிகர்மெய் யண்ணல்
அருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத்
திருமுகம் ஆறுங் கொண்டான் "

—கந்தபுராணம்.

" பழைய வடிவாகிய வேலா "

—திருப்புகழ்.

தேவர்கள் துயர் தீர்க்கும் பொருட்டு, வடிவும் வண்ணமும் இல்லாத, முடிவிலாப் பரம்பொருள், மூவிரு முகங்களும் ஆறிரு புயங்களும், மூவாறு நயனங்களும், அமைந்த திருமேனி கொண்டு அருள் புரிந்தார்.

" அருவமும் உருவும்ஆகிஅநாதி யாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர்
மேனி யாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்
பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன்
உலகம் உய்ய."

எம்பெருமான் சரவணப் பொய்கையில் இத்திருமேனி கொண்டு உதிக்கு முன்னரேயே முருகன் என்ற திருநாமத்தை யுடையவன் என்பதை இப்பாடலால் அறிக.

முருகன் வந்து உதித்தான்....

"சாத்தன் வந்தான்" என்றால் வந்தது பின்னர், சாத்தன் என்ற பெயர் முன்னர் என்பது விளங்குந்தானே.

மிகப் பழைமையான திருநாமம் முருகன் என்பது, முருகனுடைய திருநாமங்கட்கெல்

லாம் சிவபெருமான் உமாதேவியிடம் காரணங் கூறுகின்றார். "இன்ன காரணத்தால் இன்ன பெயர் அமைந்தது என்று கூறுகின்றார்.

"ஆறுமுகங் கொண்டதால் சண்முகன்"

"கங்கையில் தவழ்ந்ததனால் காங்கேயன்"

"கார்த்திகை மாதர் வளர்த்ததனால் கார்த்திகேயன்"

"ஆறு திருவுருவம் ஒன்று கூடியதனால் கந்தன்"

"மயிலை வாகனமாக உடையவனாதலால் விசாகன்"

இன்ன காரணத்தால் முருகன் என்ற நாமம் அமைந்தது என்று அந்த வரிசையில் கூற வில்லை. இதனால் அத்துணைத் தொன்மை வாய்ந்த திருநாமம் முருகன் என்பதைத் தெற்றென உணர்க.

எம்மொழிக்கும் முதல்வனான செம்மொழி யான தமிழுக்குச் சிறப்புடைய தலைவன் ஆவான். தமிழில் மூன்று இனம் உண்டு. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப்படும். இவற்றுள் மெல்லினம் மென்மையும் இனிமையும் உடையது.

ஆதலால்

மெல்லினத்தில் ஒரு எழுத்து மு

இடையினத்தில் ஒரு எழுத்து ரு

வல்லினத்தில் ஒரு எழுத்து கு

என முருகு என்று மூவினத்தில் மூவெழுத்தைக் கொண்டு எந்தை கந்தவேளின் திரு நாமம் அமைந்துளது.

ஆண்டவன் ஆறு ஆதாரங்கட்கும், ஆறு சமயங்கட்கும், ஆறு அத்துவாக்களுக்கும், ஆறுபடை வீடுகட்கும் அதிபன்.

முருகா என்ற பெயரும் ஆறு பொருள் களைக் கொண்டது. தெய்வத்தன்மை, அழகு, இளமை, மகிழ்ச்சி, மணம், இனிமை என்ற ஆறு தன்மைகளையும் உடைய சொல் முருகு.

"முருகு கள் இளமை நாற்றம்
முருகவேள், விழா வனப்பாம்.

என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது.

இதனைப் புலப்படுத்தவே அருணகிரி நாதர்,

"..................மெய்ம்மை குன்றா

மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்" என்று கூறுகின்றார். இப் பாடலில் முருகா என்பது ஒருமை. நாமங் கள் என்பது பன்மை.

பல நாமங்களின் பொருள்களையுடையது முருகா என்ற நாமம் என்பதை இப்படி உணர்த்துகின்றார்.

இறைவன் பல்லாயிரம் நாமங்கள் கொண்டவன். அவற்றுள், சிறந்த நாமம் மூன்று. முருகன், குமரன், குகன் என்பவை. இம்மூன்றனுள்ளும் மிகச் சிறந்தது முருகன் என்ற நாமம்.

"முருகன், குமரன் குகன் என்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்"

என்று கந்தரநுபூதியில் கூறுகின்றார்.

உலகமெல்லாம் அஞ்சுகின்ற முகமாகிய கூற்றுவனுடைய கோரமுகந் தோன்றுகின்ற போது முருகா என்றால் அப்பனுடைய ஈரமுகம் ஆறுந் தோன்றும்.

அக்கூற்றுவனுக்கும் நமக்கும் ஒருவேளை போர் நிகழுமாயின் அப்போது முருகா என்று ஓதினால் அஞ்சல் என அவனுடைய அயில்வேல் தோன்றும்.

ஒருகால் முருகா என நினைத்தாலும் போதும். அக்கருணாமூர்த்தியின் இருகாலும் தோன்றும்.

முருகா முருகா என்று ஓதினால் போதும். முருகா என்று—கூறக்கூடாது. ஓதவேண்டும்: கூறுவது வேறு; ஓதுவது வேறு. கூறுவது வாக்கு மட்டும், தொழில்படுவது. ஓதுவது உணர்வுடன் காதலாகி உள்ளங் கசிந்து கண்ணீர் மல்குவது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்"

—ஞானசம்பந்தர்

"அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்"

ஓ என்ற பிரணவ எழுத்து அ உ ம என்ற மூன்று எழுத்துக்களின் சம்மேளனம்.

அகரத்தில் தொடங்கி உகரத்தில் மடங்கி, மகரத்திலே ஒடுங்குகின்றது.

அ—சிருஷ்டிக்கின்றது.
உ—இரட்சிக்கின்றது.
ம—சங்கரிக்கின்றது.
(சம்ஹாரம் ஒடுக்கம்)

இந்த மூன்றில் சிருஷ்டி எழுத்தைப் பார்க்கிலும் சங்கார எழுத்தாகிய மகரத்தைப் பார்க்கிலும், ரக்ஷக—எழுத்தாகிய உகரந்தான் உயர்ந்தது. நாம் கடவுளை நோக்கி, என்னை உண்டாக்குவாய், என்னை ஒடுக்கிக் கொள்வாய் என்று வேண்டுகின்றோம்? இல்லை; "இறைவனே என்னைக் காப்பாற்று" என்று தானே வேண்டுகின்றோம்.

எனவே காத்தலுக்கு உரிய எழுத்தாகிய உகரத்தையே பெரிதாகக் கொள்ள வேண்டும்.

குகையில் கற்கிமுகி என்ற பூதத்தால் அடைபட்ட ஆயிரம் பேரையும் காப்பாற்று என்று பாடிய நக்கீரர் ரட்சக எழுத்தாகிய உகரத்தை முதலில் அமைத்து

"உலகம் உவப்ப வலனேர்பு திரி தரு"

என்று தொடங்கினார்.

தனியடியார் அறுபத்து மூவர்களையும், தொகையடியார் ஒன்பதின்மர்களையும் சிவபெருமான் காத்தருளிய வரலாற்றைக் கூறும் திருத்தொண்டர் புராணம் உகரத்தை முதலாகக் கொண்டே "உலகெலாம்" என்று தொடங்குகின்றது.

தேவர்களைக் காத்த திருமால் இராமாவதாரம் எடுத்த வரலாற்றைக் கூற வந்த கம்ப நாடரும் உகரத்தை முதலில் அமைத்தே "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்று ஆரம்பிக்கின்றார். அ உ ம என்ற மூன்றில் ரக்ஷக எழுத்தை முதலில் வைத்துச் சொன்னால், உ ம அ—உமா என்று ஆகின்றது. இது அம்பிகையினுடைய உயர்ந்த திருநாமம்.

இதுகாறும் கூறியவற்றால் ஒருவாறு உகரத்தின் பெருமையை உணர்ந்திருப்பீர்கள்.

இனி, முருகு என்ற திருநாமத்தைச் சிந்தியுங்கள்.

மகர மெய்யில் உகர உயிர் ஏறி மு
ரகர மெய்யில் உகர உயிர் ஏறி ரு
ககர மெய்யில் உகர உயிர் ஏறி கு

முருகு என்ற மூன்றெழுத்துக்களிலும் காத்தற்குரிய உகரமே ஊடுருவி நின்று இம் முருக மந்திரமே அகில உலகங்களையும் காத்தருளும் திருநாமம் என உணர்த்துகின்றது.

இப்படி மூன்று உகர உயிர் அமைந்த வேறு மந்திரம் இல்லை என்பதும் ஒரு தலை.

ஆதலால் முருகா என்று ஓதுவார் மும்மை நலன்களும் பெற்று உயர்வு பெறுவார்கள்.

ஆதலால், முருகா என்ற திருமந்திரம் சகல வினைகளையும் போக்கும்.

"முருகா" என்று ஒருமுறை கூறியவுடன் முருகம்மையாருக்குக் கணவன் வெட்டிய கரமலர் வளர்ந்தது.

"முருகன் எனவோர் தரமோ தடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே"

என்று அருணகிரிநாதர் பாடி இதன் பெருமையை உணர்த்துகின்றார்.

"முருகா எனவுனை ஓதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்; வியாதி யடைந்துடையார்;
ஒரு காலமுந் துன்பம் எய்தார்; பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே"

என்று சிதம்பரசுவாமிகள் திருப்போரூர்ச் சந்நிதி முறையில் பாடியிருக்கின்றார்.

ஆதலால், கண்கண்ட தெய்வமாம் கலியுக வரதன் என்னப்பன் மூவர் தேவர் தொழும் முழுமுதற் கடவுளின் திருவடியைச் சிந்தித்து வந்தித்து, முருகா என்ற இனிய கனியமுதம்அன்ன நாமத்தை உள்ளம் உருகி ஓதி அன்பர்கள் பெற்ற பிறவியின் பயனைப் பெற்று இனிப் பிறவாப் பெற்றியைப் பெறுவார்களாக.

முருகா! முருகா!! முருகா!!!

# மஹா கும்பாபிஷேக விளக்கம்

ம. வெ. மு. நாகராஜ குருக்கள், சிறுதையூர், லால்குடி

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக் கோயில்களில் நடைபெறும் நித்ய பூஜைகள், திருவிழாக்கள் எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக முதற்பெரு விழா ஒன்று திருக்கோயில்களுக்கென உண்டு. அத் தகைய முதன்மையான மஹோத்ஸவத் திற்கே மஹா கும்பாபிஷேகம் என்று பெயர்.

மஹா என்ற சொல் உயர்வையும், உண் மைத் தத்துவச் சிறப்பையும் குறிப்பிடு கின்ற ஒரு சுருக்கமான சொல் ஆகும். கும் பம் என்ருல் குடம். அபிஷேகமாவது :— வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரிய தெய்வ வடிவங்களின் மீது மந்திர சான் னித்யமான தூய ஜலத்தைப் பணிவுடனும், பக்தியுடனும் ஊற்றுவதாம். இத்தகைய மஹா கும்பாபிஷேகம் பல ஆண்டுகளுக்குப் பின் நடைபெறுவதால் மற்ற வழிபாடுகள், மஹோத்ஸவங்களைக் காட்டிலும் மிகச் சிறப் புடையதாகப் போற்றப்பெறுகிறது.

'' பிரதிஷ்டை ஆனதிலிருந்து பன்னிரண் டாவது ஆண்டு முடிவிலோ அல்லது அதற் குட்பட்ட நாட்களிலோ மூலலிங்கத்தி லிருந்து தேவதேவனுகிய சிவபெருமானைக் கும்பங்களில் ஆகர்ஷணம் செய்து (யாக சாலை பூஜை ஹோமங்கள் செய்தபின்) முடி வில் அவ்விதமே மஹா கும்பாபிஷேகத்தால் மூல லிங்கத்தில் சேர்ப்பித்து வைக்க வேண் டும்,'' என்று காமிகாகமத்தில் சொல்லப்பட் டிருக்கிறது.

தமிழ்நாடு திருக்கோயில்கள் நிறைந்த நாடு. மிகப் பழைமையான, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் கால வேகத்தால் பழுதடைதல் அல்லது ஜீரணமாவது இயல் பாகும். புதியதாகக் கோயில்கள் அமைப் பதைவிட இத்தகைய புராதனமான திருக் கோயில்களின் ஜீர்ணமடைந்த இராஜகோபு ரங்கள், விமானங்கள், மண்டபங்கள், கருப் பக் கிருகக் கோயில்கள், சுற்றுப் பிரகாரங் கள் முதலிய கோயில் கட்டடங்களைப் பழுது நீக்கிப் புதுப்பித்தும், வர்ணங்கள் வைத்தும் திருப்பணிகள் செய்தும் பாதுகாப்பதே பெருமைக்குரியதாகும். இத்தகைய சீரிய திருக்கோயில் திருப்பணிகள் தமிழ்நாட்டில் பரவலாகப் பற்பல ஆலயங்களில் நிறைவு பெற்று மஹா கும்பாபிஷேகங்களும் நடை பெற்றுள்ளன. சோழ வளநாட்டிலிருக்கும் மிகப் பழைமையான திருக்கோயில் திரு வானைக்காவல் ஆலயமாகும். இத்திருக் கோயில் கோச்செங்கட் சோழ மன்னரால் யானை புகாத வண்ணம் மாடக் கோயிலாக அமைக்கப்பெற்ற வரலாற்றுச் சிறப்புடைய ஆலயமாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரத்தில் முன் (பிறவியில்) ஜன் மாவில் சிலந்தியாயிருந்த வெண்ணுவல் மரத் தடியிலிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்குத் தம் சிலந்தி வலையினுல் நிழல்படும்படித் திருத்தொண்டு செய்த பெருமையினுல் மறு பிறவியில் கோச்செங்கட் சோழ அரச மர பிலே பிறந்து சிவப் பணிகள் செய்தமை யைப் பாடியுள்ளார்கள்.

'' சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்தபோதே கோச் செங்கணுனுமாகக்
கலந்த நீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனுரே ''

என்பது அப்பர் திருவாக்கு. வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கை மன்னன், இச் சோழ மன்னர் எழுபது மாடக் கோயில்கள் சிவபெருமானுக்குக் கட்டியிருப்பதாக,

'' இருக்குமவனிவாய் எண்டோள் ஈசற்கு எழில் மாடம்
எழுபது செய்துலக மாண்ட திருக்குலத்து வளச்
சோழன் ''

என்ற பெரிய திருமொழிப் பாடலில் குறிப் பிட்டிருக்கிருர்கள். திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப் பெற்ற திருப்பதிகங்கள் திருவானைக் கோயி லுக்குண்டு. சேக்கிழார் பெருமான், தாயு மானவ சுவாமிகள், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் முதலிய அருளாளர்களும் இக்கோயிலைப் பணிந்து பாடியுள்ளார்கள்.

காளமேகப் புலவர், கச்சியப்ப முனிவர், மஹா வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள், முதலிய பெரும் புலவர்களின் நெஞ்சைவிட்டு நீங்காத திருக்கோயில் திரு வானைக்காவலாகும். இத்தகைய சிறப்பு மிக்கத் திருக்கோயிலின் திருப்பணிகள் நிறைவுபெற்று மஹா கும்பாபிஷேகம் நடை பெறுகிறது. சிவ புண்ணியம் நிரம்பிய இந்தச் சமயத்தில் மஹா கும்பாபிஷேகத் திற்கெனச் செய்யப்படும் சில முக்கிய கிரியைகளின் தத்துவங்களை மிகச் சுருக்க மாக இங்கு எடுத்துக் காட்ட விரும்பு கிறேன்.

சிவாகம நூல்கள், அநுஞ்ஞையிலிருந்து மஹா கும்பாபிஷேகம் வரை எத்தனையோ வகையான கிரியைகளைப்பற்றிக் கூறியுள் ளன. கிரியை, என்பதற்குச் செயல், நல் வினை, புண்ணியம், காரியம், சடங்கு முதலிய பெயர்களும் இங்கு ஒருமித்த தொழிலையே சிவாகமங்கள், கிரியை என்று குறிப்பிடுகின்றது. மனத்தில் பாவனைகளும், அதற்கேற்ப வாக்கில் மந்திரங்களும், உடம் பில் அதற்குரிய செயல்களும் ஒன்றுபட் டிருக்கும் நிலையே பூஜை அல்லது வழிபாடு ஆகும். காரணுகமம் பூஜை என்பதற்கு விளக்கம் கூறுகிறது.

பூர்யந்தம் ஸர்வகர்மானி ஜாயதே ஞானமாத்மனி!
பூரணுத் ஞானதாத்யஸ்மாத் பூஜாசப்தமி ஹோச்யதே!

எதனுல் எல்லாச் செயல்களிலும் நிறைவும், தன்னிடத்தில் (தூய அறிவும்) ஞானமும் உண்டாகிறதோ அதே பூஜை ஆகும். பூ என்பது நிறைவையும் ஜா என்பது ஞான வளர்ச்சியையும், பூஜை என்றசொல் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லுகிறது, எனக் காரணு கமம் நவில்கிறது. ''சைவஞ் சிவனுடன் சம்பந்தமாவது'' என்பது திருமூலர் திரு மந்திரம். திருக்கோயிலில் செய்யப்படும் செயல்கள் யாவும் சிவசம்பந்தமுள்ளன வாகும். மந்திரம், கிரியை, பாவனை இம் மூன்றும் சைவ சித்தாந்த தத்துவப்பொருள் பொதிந்து விளங்குகின்றன. பாவனை என்பது சிவ சம்பந்தமான எண்ணங்கள். மந்திரம் இந்த எண்ணங்களைக் கொண்ட சொற்களாகும். மனனம்—திராணம், என்ற இரண்டு சொற்களின் சேர்க்கையால் மந்திரம் எனச் சொல்லப்படுகிறது. மன னம் என்பது எல்லாவற்றையும் அறியும்படி உள்ள நினைவுகள்; இந்த நினைவுகளை ஸம் சார சாகரத்திலிருந்து காப்பதே ''திராண மாகும்'' என்று காமிகாகமத்திலே சொல்லப் பட்டிருக்கிறது. எனவே சைவ சித்தாந்த சிந்தனைக் கருத்துக்களைப் பாதுகாத்து வரும் சொற்களே மந்திரங்களாகும். மனத் தில் பாவனைகளும், வாக்கில் மந்திரங்களும் எழும்புகின்றன. மந்திரம்—பாவனை இவ் விரண்டினையும் வெளிப்படுத்தும் செயல் களே கிரியை எனப்படுகிறது. திருக்கோயில் கள் கட்டப்படுவதிலிருந்து பூஜைகள் முடி யும் வரை மந்திர மில்லாமற் கிரியைகளில்லை என்பது சிவாகமக் கருத்து. மஹா கும்பாபி ஷேகச் சடங்குகளில் சைவ சித்தாந்த தத்து வக் கருத்துக்கள் நிரம்பியிருப்பதை நன்கு உணரலாம். உதாரணமாக, சிவாகமகங்கள் இறைவன் (சிவம்) எல்லாம் வல்லவர், எங் கும் நிறைந்தவர், ஆன்மாக்களுக்கு அருள் புரிவதற்கென, மனம் வாக்கிற்கு எட்டாத இறைவன், அருவம், அருஉருவம், உரு வம் என்ற மூன்று நிலையில் வடிவம் கொண் டுள்ளார், என்றெல்லாம், இறைவனைப் பற் றித் தத்துவ உண்மைகள் கூறப்படுகின்றன. மனம் என்பது கருத்துக்கள் தோன்றுமிடம். இது அரூபமாகும். எனவே பாவனைகள் அரூபமாகும். வாயிலிருந்து உச்சரிக்கப் படும் சொற்களே எழுத்து வடிவமாக ஆவதி ளுல், உருவமும் அரூபமும் கூடிய உருவ அருவமாகும். இது மந்திரங்களாகும். நம் புறக்கண்களுக்குத் தோன்றும் செயல்கள் உருவங்களாகும். எனவே சிவபெருமானைப் போலவே கிரியைகளுக்குரிய முத்திரைகள், மந்திரங்கள், பாவனைகள் மூன்றும் உருவம், உருவ அரூபம்—அருவம் என்று மூன்று வடி வில் அமைந்துள்ளன எனலாம்.

மஹா கும்பாபிஷேகக் கிரியைகளிலே கும் பஸ்தாபனம் என்று ஒன்றுண்டு. நம் புறக் கண்களால் கும்பமாகிய குடத்தைப் பார்க் கிரேம். ஆனல் ஆசாரியார், தெய்வ வடி வங்களான சிவமூர்த்திகள் மஹாகும்பாபி ஷேகம் ஆகும்வரை மூலஸ்தானத்திலிருந்து

எழுந்தருளி (உட்புகும்) பிரவேசித்திருக்கக் கூடிய கும்பத்தை ஈஸ்வரனுகிய பரமாத்மா (பேருயிர்) தங்குவதற்குரிய உடம்பாக மனத்தால் அங்க கற்பனை செய்துகொள்ள வேண்டும். யோகஜம் என்ற சிவாகமம் சரீரமாக கும்பத்தை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதற்கு விபரமாகச் சொல்லு வதாவது: ''கும்பமாகிய குடம் மாமிச மாகும்; குடத்திலுள்ள தண்ணீர் இரத்த மாகும்; கும்பத்தினுள் போடப்பட்டுள்ள கும்பரத்தினங்கள் சுக்லமாகும்; கும்பத்தின் உள்ளே இருக்கும் அந்தக் கூர்ச்சம் என்ற தர்ப்பைக் கட்டு நாடியாகும்; குடத்தின் மேல் நெருக்கமாகச் சுற்றப்பட்டுள்ள முப் புரி நூல்களே நரம்புகளாகும்; கும்பத்தைப் போர்த்திக் கட்டியுள்ள வஸ்திரமே தோல் ஆகும். உச்சரிக்கப்படும் மந்திரங்களே பிராணனுகும்; குடத்தின் மீதிருக்கும் தேங் காயைச் சிரசாகவும், முகமாகவும் கூறப்படு கிறது. தேங்காயின் மேலே விரித்துள்ள லம்பகூர்ச்சம் சிகை; மாவிலைகள் சிவபிரா னின் ஜடாபாரங்கள்.'' இவ்வாருக அங்க கற்பனைச் சிவாகமத்தில் சொல்லப்படுகிறது.

திருக்கோயிலும் அதனுள் இருக்கின்ற தெய்வ வடிவங்களுமே மஹாகும்பாபிஷே கத்திற்கு ஆதாரமாக உள்ளனவாகும். யாக சாலை, சிவகும்பங்கள், ஹோமகுண்டங்கள், வேதிகைகள் முதலிய யாகோபகரணங்கள், மூலலிங்கம், அம்பிகை, கணபதி முதலிய பரிவார தேவர்கள், விமானங்கள், இராஜ கோபுரங்கள் ஆகிய தெய்வ வடிவங்களின் பிரதிபிம்பங்களாகவும், கும்பாபிஷேகம் ஆகும்வரை தெய்வ விக்ரஹங்களின் பிரசா தங்களை அல்லது தெய்வ சக்தியைத் தாங்கி வரும் இடங்களாகவும் பாவித்தல் வேண்டும். இறைவன் எல்லாப் பொருள்களிடத்தும் தோன்ருத் துணையாகக் கலந்திருந்து உயிர் களின் வினைக்குத் தக்கவாறு உயிர்களையும், உலகினையும், இயக்குகின்ருர் என்பது சைவாகம நூற்றுணிபு. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும்பூதங் களும் கூடியதே உலகம். நமது உடம்பும் பஞ்சபூதச் சேர்க்கையாலாகியதாகும். சூரி யன், சந்திரன், ஆன்மா ஆகிய இம்மூன்றை யும் சேர்த்து எண்வகைப் பொருள்களையும் இறைவன் இடமாகக் கொண்டு இயக்குவத ருல் ''அஷ்டமூர்த்தி'' என்ற பெயர் சிவபெருமானுக்குரியதாகச் சொல்லப்படு கின்றது.

யாகசாலை, வேதிகையாகிய மேடைகள் முதலியன பிருதிவியாகிய நிலத்தத்து வத்தைக் குறிப்பிடுகின்றது. கும்பங்களி லுள்ள புனித தீர்த்தங்கள் ஜல தத்துவமா கிறது. ஹோமகுண்டங்களில் அக்னியாகிய நெருப்பு வழிபாட்டிற்குரியதாகிறது. மந்திர ஒலிகளாலும், வேத பாராயணங்கள், திரு முறை முழக்கங்கள் முதலியன வாயுவாகிய காற்றின் செயலாகப் போற்றப் பெறுகின் றது. இடைவெளியான ஆகாயம் மனம் வாக்குக்கு எட்டாத பரமாகாச வடிவமா யுள்ள பரம்பொருளாகப் பாவிக்கப் பெறுகின் றது. யாகசாலையில் அதிகாலையில் சூரிய பூஜையிலிருந்து வழிபாடுகள் தொடங்கு கின்றன. மாலையில் சந்திர பூஜைகளி லிருந்து பூஜைகள் நடைபெறுகின்றன. ஆசாரியர்கள், அடியார்கள் முதலிய பெரி யோர்கள் தமது ஆன்மாவில் பஞ்சபூதச் சேர்க்கையாலுண்டாகும் ஐம்புல அழுக்கு களைச் சிவ மந்திரங்களால் தூய்மையுற்றதா கப் பாவித்து ஆன்மசுத்தி செய்து தூய்மை யான உயிரையே சிவமாகக்கொண்டு ஆன்ம வழிபாடு செய்கின்ருர்கள். இவ்வாருக அஷ்டமூர்த்திகளிலும் வழிபாடுகள் செய்யப் படுவது அன்பிற் சிறந்த நன்மக்களின் நன்றியுணர்ச்சியைப் புலப்படுத்துவதாகும். நிலம் முதலிய ஐம்பூதங்களாலும் வானத்தி லுள்ள சூரிய சந்திரர்களாலும் உயிர்களின் வாழ்க்கை வளர்ச்சியடைவதையும் இவற் றின் வழியே இறைவனின் படைத்தல், காத் தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள் நடைபெறுவதையும் அறி விற் சிறந்த பெருமக்கள் நன்கு உணர்ந்து செய்யும் செயலே நன்றிப்பெருக்கு மிக்க வழிபாடாக ஆகிறது.

மிகப் புராதனமாகச் சிவ க்ஷேத்திரங்களில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்போது மூலவராக உள்ள சிவலிங்கப் பெருமானின் தத்துவச் சிறப்புக்களை உணர்ந்துகொண்டு

தரிசித்தால் விமானம், கோபுரங்கள் முதலியனவெல்லாம் பக்தியுள்ளத்தில் சிவலிங்க வடிவமாகக் காட்சி தரும். எல்லாம் வல்ல இறைவனைச் சித்திரிக்கும் வடிவமே சிவ லிங்கமாகும். சிவலிங்கம் என்பதற்கு குறி அல்லது அடையாளம் என்று பொருள்.

" குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம்ஓதினும்
பொறியிலீர் மனம்என்கொல் புகாததே "

என்றார் அப்பர் அடிகள். ஆகமங்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் திருக்கோயில் ஒரு புருஷ வடிவமாகப் புறஉடம்பாகக் கற்பிக்கப் பட்டுள்ளன. ஆலயக்கட்டடப் பகுதிகளின் பெயர்களே நமது அங்கங்களின் பெயர் களான பாதவர்க்கம், க்ரீவம் (கழுத்து) நாசிகை (மூக்கு) முதலியனவாக சாஸ்திரங் களில் சொல்லப்பட்டுள்ளன. திருமூலர் சொல்லுகிறார் :

உயிர் சிவபெருமான், உள்ளம் சிவபெரு மானிருப்பிடம் அல்லது கருப்பக்கிருஹம், ஊன் உடம்பு-முழு ஆலயம். வாய்இல் (வாயில்) இராஜகோபுரங்கள்.

" உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற்பி ரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புல னைந்தும் காளா மணிவிளக்கே "

என்பது திருமந்திரம்.

திருமூலரடிகள் இன்னுமொரு இடத்தில் ஆலய விமானம் தூலதேஹம் அல்லது தூல லிங்கம், உள்ளிருக்கும் சதாசிவலிங்கம் சூக்ஷ்மதேஹம், பலிபீடம், பத்ரலிங்கம் இவ் வாறு திருக்கோயிலைக் காண்க என்கிறார்.

" தூய விமானமும் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அறநிலை ஆய்ந்துகொள் வார்கட்கே "

என்பது திருமந்திரம்.

மஹா கும்பாபிஷேகக் கிரியைகளில் "கலாகர்ஷணம்" ஸ்பரிசாஹுதி - மஹா கும்பாபிஷேகம். இம்மூன்றும் சிவலிங்கத்தி லுள்ள பிராசாத கலைகளையும் - ஆறு அத்து வாக் களையும், ஆன்ம தத்துவம், வித்யா தத்துவம் - சிவ தத்துவம் இவற்றினை யும், நியாசங்கள் மூலமும், மூலமந்திர ஆவாஹனங்களாலும், கும்பத்தினிடத்தில் ஆகர்ஷணம் செய்தும், பின்னர் யாகசாலை யிலிருந்து மூலஸ்தானத்திலுள்ள இறைவன் பால் இவற்றினைத் தொடர்புபடுத்தியும் மஹா கும்பாபிஷேகத்தினால் மந்திரபூர்வமான தெய்வ சக்திகளை மூல பிம்பங்களிடத்தில் சேரும்படி (லயாங்க கலாகர்ஷணத்தால்) பிரதிஷ்டை செய்வதால் மிக முக்கிய தத்துவப் பொருள் நிறைந்ததாகின்றது. திருமூலரடிகள் தமிழாகமமாகிய திருமந்தி ரத்துள் சிவலிங்க வழிபாடு தமிழ்நாட்டின் மிகப் பழைமையான பழக்கமாகக் கருதப்படு கிறது. திருவானைக்காவல் சிவலிங்கம் விதிப் படி சுயம்பு இலிங்கமாகவும் அம்பிகை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியினால் வழிபடப் பெற் றதனால் தேவிக இலிங்கமாகவும் கருதப்படு கிறது. சிவபெருமான் ஸ்ரீ ஜம்புகேஸ்வர லிங்கத்தில் எப்போதும் சான்னித்தியமாக இருக்கிறார் என்பது ஆகமங்களின் துணிவு ஆகும். ஸ்ரீ அகிலாண்டநாயகி சமேத ஜம்பு கேஸ்வர ஸ்வாமியின் அநேக ராஜகோபுரங் கள், விமானங்களின் மஹா கும்பாபிஷேக தரிசனத்தாலும், சிவகைங்கர்யங்களினாலும் உலகம் சிவனருள் பெற்று இன்புற்று மாறிலா மகிழ்ச்சியில் திளைப்பதாக.

## முத்தாரங்கொண்ட முதல்வன்

தாரமாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரி னின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே
ஆரங்கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளும்
ஈர முள்ளவர் நாளும் எம்மையு மாளுடை யாரே.

—சுந்தரர்



ஆரவிட்டான் கோபுரம் என வழங்கும்

இது ஆரம் இட்டான் கோபுரம். காவிரியில் நீராடும்போது நழுவிய முத்தாரம் திருமஞ்சனக்குடத்தின் வழியாகச் சம்புகேசப் பெருமான் கழுத்தணியாக விளங்க வேண்டிக்கொண்ட சோழமன்னன் செய்த திருப்பணியாதலின் இப்பெயர்பெற்றது.

# கும்பாபிஷேக முறைகள்

சிவத்திரு. K. வைத்தியநாத சிவாசாரியார் அவர்கள்,
சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், திருப்புகலூர்.

அகில அண்டங்களையும் படைத்துக் காக்கும் தெய்வம் அருவமாக எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் நிர்மலர் பரிபூரணர். அவர் ஆங்காங்குக் கோயில் கொண்டு விளங்கும் மூர்த்திகளில் அருள் பாலிக்கிறார். ஆகமங்களில் கூறப்பட்டிருக்கிறபடி மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகளில் உருக்கொண்டு ஜீவராசிகளுக்கு அருள் புரியும் இடமே ஆலயம். ஆலயத்தில் கர்ப்ப கிருஹம் அர்த்தமண்டபம், மஹா மண்டபம் முதலியவைஅமைக்க வேண்டியதற்கு அளவுகளுள் லக்ஷணங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிற்ப விற்பனர்களால் தயாரிக்கப்பட்ட மூர்த்திகளில் சிவாகமங்களை நன்கு கற்றுணர்ந்த மந்திரபலத்தைக் கொண்டு பிரதிஷ்டை செய்யப்படும் பொழுது அந்த அந்த மூர்த்திகளும் நம் வழிபாட்டுக்கு உகந்தவைகளாக அமைகின்றன. மூர்த்திகளும் அந்த சிவாசாரியர்களாலேயே பூசை செய்யப்படும் பொழுது ஜீவராசிகளுக்குக் கருணையுடன் அருள் பாலிப்பவர்களாக அமைகிறார்கள்.

ஒரு இடத்தில் புதிதாகஆலயம்அமைத்துப் பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்படுவதை ஆவர்த்தம் எனவும், வெகு காலமாகக்கோயில்களில் பூஜை செய்யப்பட்ட மூர்த்திகளுக்குத் தற்சமயம் பூஜை இல்லாமல், ஆறுகளாலும், சமுத்திரத்தாலும் கோயில் சலனமடைந்ததைப் புதிதாக நிர்மாணம் செய்து அதே மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் செய்வதை அனுவர்த்தம் எனவும், கர்ப்பகிரஹம், விமானம் பிரகாரம் கோபுரம் முதலிய கட்டடங்கள் பழுதாகியிருந்தாலும் அஷ்டபந்தனம் இல்லாவிட்டாலும் பாலாலயம் செய்து கட்டடங்களையும், கோபுரங்களையும், பிரகாரங்களையும் புதுப்பித்து அஷ்டபந்தனம் சாத்தித் திரும்ப மூலத்தில் அந்தந்த மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வதைப் புனராவர்த்தம் எனவும், சரிவரப் பூஜைகள் நடைபெற்று வரும் கோயில்களில் துவஜஸ்தம்பத்திற்கு உட்புறத்தில் ஆசௌசமுள்ளவர்கள் விலங்குகள் பிரவேசித்தால், செய்யப்படும் சம்புரோக்ஷணம் என வழங்கப்படும் சாந்திக்கு அந்தரிதம் எனவும் பிரதிஷ்டை நான்கு வகைகளாகும்.

சரியா, கிரியா, யோகம், ஞானம் என்கிற நான்கு பாதங்கள் சைவாகமங்களில் இருக்கின்றன. சிவபூஜை செய்பவர்கள் சௌசாதி நியமங்களுடன் ஹோமயாகாதிகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் கூறுவது சரியாபாதம். ஒரு இடத்தில் ஈசுவரனை யந்திரபலத்தாலும் மந்திரபலத்தாலும் பிரதிஷ்டை செய்து உலகத்திலுள்ள மக்களனைவருக்கும் பிரதிநிதியாக ஆங்காங்கு ஒருவர் இருந்து எல்லோருடைய க்ஷேமத்தையும் கோரிப் பூஜை செய்வது பரார்த்தபூஜை. கிரியா பாதத்தில் பிரதிஷ்டை முதலாக, பிராயச்சித்தம் வரை நடத்தும் காரியங்களும் நன்கு கூறப்பட்டிருக்கின்றன. இதிலேயே சிற்பமும் அடங்கியிருக்கிறது. யோக பாதத்தில் பூஜை செய்பவர்களுக்கு, ஆத்மசுத்தி, மனச்சுத்தி உண்டாவதற்கு, பிராணுயாமம், அந்தரியாகம் முதலிய கிரமங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. ஞான பாதத்தில் பிரபஞ்சம், ஜீவன், ஈசுவரன் இவைகளுக்கு ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தம் சாசுவதமான முக்திநிலை எவ்வித சிவோஹம் பாவனையால் ஏற்படுகிறது என்ற விஷயங்கள் வெளியாகின்றன.

அந்தர்யாமி ஒருவன் அனைவரின் உள்ளேயும் இருந்து கொண்டு எல்லா ஜீவன்களை

யும் ஏவுகிறுன். அவரைத் தீவிரமாகப் பாவனை செய்து யோக மார்க்கத்திலுைம், பிராணுயாமங்களிஞலும் அந்தர்மாத்ருகா நியாசங்களிஞலும் சில முத்திரைகளின் உதவியிஞலும் வெளியில் நம் பார்வைக்குக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் மூர்த்திகளில் ஸான்னித்தியம் உண்டாகும்.

" ஹிருத்ய மத்யகதம் பரமேச்வரம்
அரண்யாமிவ ஹவ்யஞ்ச மூர்த்தாவாவஹ யாம்யஹம் "

எதிரிலிருக்கும் மூர்த்தியில் நம்முடைய ஹிருதயத்திலிருக்கும் பரமேசுவரனைத் தியானம் செய்து இம்மாதிரி முறையோடு ஆவாஹனம் செய்கிறேன் என்று மூர்த்தியில் ஆவாஹனம் செய்ய வேண்டும். யாகசாலையில் இரண்டு கட்டைகளைக் கடைந்தால் அக்னிவருவது போல, 'இதோ இங்கே இருக்கவேண்டும்' என்று சிவபெருமானைப் பிரீதியுடன் பாவனு பூர்வமாய்ப்பிரார்த்தித் தால் மூர்த்தியில் பிரத்யக்ஷமாகிருர். விதிப் படி சிவதீக்ஷை பெற்ற ஒருவரால் பூஜை செய்யப்படும் பொழுது பக்தர்கள் அனைவருக்கும் அருள் புரிகிருர்.

காசியில் விசாலாட்சியும், காஞ்சியில் காமாட்சியும், மதுரையில் மீனுட்சியும் பரம சிவனுக்குச் சக்திரூபங்களாக விளங்கி வருகிருர்கள். பஞ்சபூத க்ஷேத்திரங்களில் ஒன்றுன ஜல க்ஷேத்ரமான திருவானைக்காவில் ஜம்புகேஸ்வரரின் நாயகியான ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அகில உலகங்களையும் காப்பாற்றி வருகிருள். பரிவார தேவதைகளுடன் இவ்விருமூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் மிகச் சிறப்புடன் இப்போது நடைபெறுவது சகல ஜீவராசிகளுக்கும் இகபர சுகங்களை என்றென்றும் அளிப்பதாகும்.

கும்பாபிஷேகத்தில் தனபூஜை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை முதல்சகல காரியங்களையும் இங்கு ஓரளவு விளக்குவோம். அதன் தத்துவங்களையும் காண்போம்.

உத்தம புண்ணியச் செயல்களால் சேகரிக்கப்பட்ட திரவியத்தைச் சிவார்ப்பணம் செய்து அதில் ஒரு பாகத்திரவியத்தைச் சுவர்ண பாத்திரத்தில் பட்டு விரித்து அதன் மேல்வைத்துப் பரமசிவார்ப்பணமாக ஆசாரியர் கையில் பிரார்த்தனையுடன் கொடுத்து அவர் மூலமாக முறைப்படித் தனபூஜை செய்யவேண்டும்.

அனுக்ஞை என்பது செய்யப் போகிற கும்பாபிஷேகத்தை ஆசாரியர் எஜமானராக இருந்து நடத்தத் தகுதியுள்ளவர் எனச் சபையோர்களிடம் அனுமதி பெற்றுப் பின் இறைவனிடமும் இறைவியிடமும் அனுமதி பெறுவதாகும். பசுவாகிய நமக்குப் பதியாக விளங்கும் பசுபதி-பரமேசுவரனிடம் சேகரிக்கப்பட்ட திரவியத்தை மும்மலங்களும் நீக்கக் கோரி அர்ப்பணம் செய்து அவருடைய அனுக்ரஹபூர்வமாகக் கிரஹித்துக் கொண்டு காரியங்களில் வினியோகம் செய்யப்படுவது அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அளிக்க வல்லது என்பதே இதன் தத்துவமாகும். செய்யப்படும் காரியத்தை இடையூறின்றி முடிக்க வேண்டியதன் பொருட்டு விக்கினத்தைப் போக்கவல்ல விநாயகரை வணங்கிப் பிரார்த்தித்து அமைதி பெறுவது விக்னேஸ்வரபூஜை. இறவாதவரம் வாங்கிய வாஸ்துபுருஷன் என்ற அசுரனின் தொந்தரவு இல்லாமலிருக்கப் பிரமன் முதலான தேவர்களை அவ்வசுரனைக் காவல் புரியும் ஐம்பத்து மூன்றுதேவர்களையும் பூஜை பலி முதலியவைகளால் திருப்தி செய்து இடையூற்றை நீக்குவதற்கு வாஸ்துசாந்தி செய்ய வேண்டும். அங்குரார்ப்பணம் எனக் கிரியை செய்வதற்கு மண்ணை மண்ணுக்கு அதிபதியான பூமியையும் காவல்களான இந்திரன் முதலிய திக்பாலர்களையும் தலைவரான பிரமனையும் பிரார்த்தித்து அவர்களின் அனுமதி பெற்று மண்ணை வெட்டி எடுப்பது மிருத்ஸங்கிரஹணம். வெட்டிய தோஷம் நீங்க ஏழு கடலை வரவழைத்துப் பூஜை செய்து வெட்டிய பள்ளத்தில் அபிஷேகம் செய்ய வேண்டும். பாலிகைகளின் பால் கலந்த தானியங்களை மந்திரபூர்வமாகத் தெளித்து முளைக்கச் செய்வது அங்குரார்ப்பணம். தெளிக்கப்பட்ட வித்துகள் முறையாகவும் பசுமையாகவும் முளைத்தால் கிரியை சரியான முறையில் அமைந்தது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். அது மாறுதலாக இருந்தால் குறைபாடு இருப்பதாக

உணர்ந்து அதற்குத்தக்க பிராயச்சித்தம் செய்ய வேண்டும். அங்குரம் இல்லாத கிரியை பயனற்றது.

ஆசாரியருக்குச் செய்யப்படும் ரக்ஷை யினால் கிரியை பூர்த்தியாவதற்குள் தெய் வீகமாய் ஆசௌசாதிகள் (தீட்டுகள்) நேர்ந் தாலும் அக்கிரியைக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் ஆசாரியனை ரக்ஷாபந்தனம் விஸர் ஜனம் செய்யும் வரையில் தீட்டு முதலான தோஷம் அணுகாமல் காப்பது ரக்ஷாபந்த னம். இறைவனை ஆவாஹனம் செய்யும் பொருட்டுக் கடத்தை மந்திரபூர்வமாக அலங்கரித்து வித்யா தேகமாகப் பாவித்துக் குடத்திற்குச் சாத்தப்பட்ட வஸ்திரம் தோலாகவும் மேல் பூசப்பட்ட மண் இரத்த மாகவும் செய் பொருள் மாமிசமாகவும் ஜலம் மேதா தாதுவாகவும் கூர்ச்சம் எலும் பாகவும், சுற்றப்பட்ட நூலை நரம்பாகவும் குடத்தில் போடப்பட்ட இரத்னம் சுவர்ணம் சுக்லமாகவும் நியாஸம் செய்யப்பட்ட மந்தி ரம் ஜீவனாகவும் போடப்பட்ட தானியம் ஆஸனமாகவும் உள்ளன. கும்பஸ்தாப னம், மூலஸ்தானத்தில் சுவாமியை அலங் காரம் செய்த வித்யாதேகமாக பாவிக்கப் பட்ட இடத்தில் குரூப தேச முறைப்படி ஆகர் ஷணம் செய்து குறிப்பிட்ட காலம் வரையில் கடத்தில் இருக்கச் செய்வது கலாகர் ஷணம். சுவாமியை முறைப்படி குடத்தில் ஆகர்ஷணம் செய்து அக்குடத்தை யாக சாலையில் வைத்து ஒன்பது, ஐந்து, ஏக, குண்ட முறைப்படி தேசகால கிரியை முதலி யவைகளை அனுசரித்து ஒவ்வொரு காலமும் பூஜை செய்வது யாகபூஜை. பீடத்தை யும், பிம்பத்தையும் சேர்த்துப் பலவருஷங் கள் மூர்த்தியை அசையாமல் காப்பது அஷ்டபந்தன மருந்தின் அபூர்வ சத்தியா கும். யாக சாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும் தத்துவங்களையும் தத்து வத்தில் அதிபர்களையும் (நாடீ சந்தானம்) தங்கக் கம்பி முதலியவைகளின் மூலம் அந்த அந்த மூலஸ்தானத்தில் சேர்ப்பது ஸ்பர்சாருதி.

யாகசாலையில் முறைப்படி கும்பங்களில் சிவலிங்கத்தைப் போலவே ஷடத்வா வடி வாக இருப்பதால் அதன் அடியில் ஆத்ம தத்துவமும், நடுவில் வித்யா தத்துவமும் முடியில் சிவதத்துவமும் பூஜிக்கப்படுகிறது. கும்பத்தில் ஸர்வ தீர்த்தங்களும் பஞ்சாவ ரண தேவதைகளும் பிரதிஷ்டை செய்து பூஜை செய்யப்படும். முறையாகப் பூஜித்த மூர்த்திகளை எழுந்தருளச் செய்து அந்தந்த மூலஸ்தானத்திலும் ஸ்தூபியிலும் முன் வைத்துக் குரூபதேச முறைப்படி கும்பத்தி லிருந்து பிம்பத்திலும், ஸ்தூபியிலும் கூர்ச் சங்களைச் சேர்த்து நியாஸ பூர்வமாகத் தியானம் செய்து அக்கும்ப தீர்த்தங்களை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்வது மஹாகும்பாபிஷேகம். மூர்த்தி சூஷ்ம ரூபமாகவும் ஸ்தூபி ஸ்தூலரூபமாக வும் கூறப்பட்டிருக்கிறது. ஸ்தூல ரூப மான ஸ்தூபியின் அபிஷேகத்தைத் தரிசிப் பவர்களும் மூலஸ்தானத்தின் அபிஷேகத் தைத் தரிசிப்பவர்களும் எல்லா நன்மைகளும் பெறுவார்கள். நாடு செழிக்கும். மஹா கும்பாபிஷேக தரிசனத்தால் அன்றுவரை செய்த பாவங்கள் தீரும். சிவாபராதங்களும் தீரும். கும்பாபிஷேகம் பெருஞ் சாந்தி என்று திருஞான சம்பந்தர் அருளினார்.

உரிஞ்சாய வாழ்க்கை யமனுடைய போக்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்,

(மயிலாப்பூர் தேவாரம்)

மஹா கும்பாபிஷேகம் செய்து பரிவார தேவதைகளுடன் பூஜிக்கப்படும் சிவாலயங் களில் விளங்கும் மூர்த்திகளில் இறைவன் சான்னித்யம் பெற்று வழிபடும் பக்தனுக்கு உரிய காலத்தில் கண்முன் தோன்றி, அனுக் கிரகம் செய்து வருகிறார் என்பதை நாம் சரித்திரங்கள் வாயிலாகவும் நம் காலத் திலேயே நேரிடையாகவும் காண்கிறோம். பக்தர்கள் அனைவரும் ஸ்ரீ அகிலாண்டேஸ் வரிசமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரரின் மஹா கும் பாபிஷேகம் தரிசனம் செய்து தீவினைகள் நீங்கியவர்களாய் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் புத்திரப் பேறுகளையும் என்றும் அழியாத சிவ பத்தியையும் பெற்றுச் சிவானந்தா னுபவம் பெறுவார்களாக.

# நித்திய பூஜையும் அதன் தத்துவமும்

சிவஸ்ரீ S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள், தலைமையாசிரியர்,
சிவாகம பாடசாலை, தருமபுர ஆதீனம், தருமபுரம்.

பிறவிகளுக்குள் சிறந்த மானுட சன்மத்தை முற்பிறப்பிற் செய்த புண்ணிய மேலீட்டால் எடுத்த அன்பர்கள் செய்யும் சிவபூசையானது ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை என இருவகைப் படும்.

ஆசாரியர் தீக்ஷை செய்து அருள்சுரந்து சீடனைப் பார்த்து நீ இறக்கும் வரையும் கைவிடாது இவரை நாடோறும் பூசி என்று அனுமதி செய்து 'அடியேன் இச்சரீரமுள்ள வரையுஞ் சிவார்ச்சனை செய்தன்றி ஒன்று முன்னேன்' என்று சம்மதி செய்வித்துக் கொண்டு ஆசாரியரால் கொடுக்கப்பட்ட இஷ்டலிங்கத்தை வாங்கிப் பூசிப்பது ஆன்மார்த்த பூசையாகும். எல்லா ஆன்மாக்களுக்கும் அனுக்ரஹஞ் செய்யுங் காரணமாகக் கோயில்களிற் பிரதிஷ்டை செய்து பூசிப்பது பரார்த்த லிங்கபூசையாகும்.

இவ்வாறு ஆன்மார்த்த, பரார்த்த பூசையின் வாயிலாகச் சிவபெருமானை உபாசிக்கும் கிரமங்களை அறிவுறுத்துவன முதனூல்களாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்கள்.

இத்தகைய சிவாகமங்களால் சிவாலயங்களில் விதிக்கப்படும் பூசைகள் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்று வகையின. தினந்தோறும் செய்யப்படும் பூசை நித்தியம். உற்சவம், பிரதிஷ்டை முதலியன நைமித்திகம். பேறுபேற்றினை அவாவிச் செய்யப்படும் கிரியை காமியமாகும்.

எல்லாக் காரியங்களையும் நிறைவு படுத்துவதாலும் ஆன்ம ஞானத்தை உண்டு பண்ணுவதாலும் பூஜை எனப் பெயர் பெற்றது. உத்தமோத்தமமாகக் கூறப்படும் எட்டுக்கால பூசை முதல், அதமத்தில் மத்தியமமான ஒரு கால பூசை வரையில் பரார்த்தாலயங்களில் செய்யுமுறை, ஆகமங்களால் கூறப்பட்டு விளங்குகின்றன. விடியற் பூசை முதல் அர்த்தயாமம் முதலிய பூசாகாலங்களில் தொடக்கம் முடிவு இவைகளில் சில மாறுதல்கள் காணப்படினும் அபிஷேகம் முதலிய உபசாரங்களில் விசேஷமாறுதல் இல்லை. பொதுவாக உபசாரங்கள் யாவும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களில் அடங்கும் எனச் சித்தாந்த சாராவளியால் அறியப்படுகிறது. அவை சந்தனம், கிழங்கு, பழம், வேர், புஷ்பம், அன்னம் இவைகளாற் செய்யப்பெறுவன பார்த்திவ உபசாரம். தீர்த்தம், பால், வேஷ்டி, பட்டு, தயிர் இவைகளாற் செய்யப்பெறுவன அப்பின் உபசாரம். நவரத்தினம், தீபம், பூஷணம் முதலானவற்றால் செய்யப்பெறுவன ஆக்னேய உபசாரம். தூபம், சாமரம், இவை வாயவ்ய உபசாரம். மணி, கானம் முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். எனவே இறைவனுக்குச் செய்யப்படும் எல்லா உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாம்.

'செய்ய மேனியன் தேனொடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மையலாய் மறவா மனத்தார்க் கெலாம்
கையி லாமல கக்கனி யொக்குமே'

—திருநாவுக்கரசர்.

சிவந்த திருமேனியனுய்த் தேனும், பாலும், தயிரும், நெய்யும் கொண்டு திருமுழுக்காட்டி நீலக்குடி அரன்மேல்காதல்

கொண்டு மறவாத மனத்தினர்க்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அப்பெருமான் புலப்பட்டு அருள்புரிவான்.

"தசாபராதம் தோயேன, க்ஷீரேன ஆயுஷ்யவர்த்தனம்" அதாவது நீரினுல் பத்து அபராதங்களைப் போக்குகிருர். பாலினுல் ஆயுளை விருத்தி செய்கிருர் என்று சிவாகமம் கூறுகிறது. இவ்வாறு எல்லா அபிஷேகத்திரவியங்களுக்கும் பயன் காணப்படுகிறது.

அகில், கர்ப்பூரம், புனுகு முதலிய வாசனைத் திரவியங்கள் கலந்து அருட்சத்திமயமான சந்தனத்தைச் சாத்துகின்றவர்கள் பிரபஞ்சவைராக்கிய முடையவர்களாய்ச் சிவலோகத்தைச் சேர்வார்கள். ஒருபோதும் இறைவனுடைய சிரசில் மலர் இல்லாமலிருத்தல் கூடாது. வெண்ணிறப் புஷ்பங்கள் சாத்துவிககுணமுடையன. அவைகள் வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, கொக்கிறகு, மந்தாரை, புன்னை, நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலியவைகளாம். இப்புஷ்பங்களால் சாயரக்ஷை அர்த்தயாமம் என்னுங் காலங்களில் அருச்சித்தவர்கள் மோக்ஷத்தையடைவார்கள். செந்நிறப் புஷ்பங்கள் இராசத குணமுடையன. அவை செந்தாமரை, செங்கழுநீர், செவ்வலரி, செங்கடம்பு முதலியனவாம். இப்புஷ்பங்களால் இராசத காலமாகிய மத்தியானத்தில் அருச்சித்தவர்கள் போகத்தையடைவார்கள்.

அக்ஷதை சத்துருசயத்தையும், அறுகு சகோதரருக்குச் செய்த குற்றத்தையும், எட்டி பிரமகத்தி தோஷத்தையும், கொன்றைப்பூ மாதாவுக்குச் செய்த குற்றத்தையும், வெள்ளெருக்கம்பூ அன்னிய ஸ்திரீகளைச் சேர்ந்த தோஷத்தையும், நீலோத்பலம் வாக்குத் தோஷத்தையும், குங்குமப்பூ நவக்கிரஹ பீடையையும், வில்வம் பொய் சொன்ன பாவத்தையும், கோங்கம்பூ கள்ளுண்ட பாவத்தையும், கத்திரி குட்டரோகத்தையும், துளசி வறுமையையும், தும்பைப் பூ சோகத்தி தோஷத்தையும், பலாசம்பூ பொன்திருடிய தோஷத்தையும், நெய்தலும், நெல்லியும் பலவகை ரோகத்தையும் சாந்தி செய்யும் என்று சைவபூஷணம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

நொச்சியே வன்னி கொன்றைமதி கூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடையூர்தியான்
கச்சியே கம்பம் மேவிய கறைக்கண்டனை
நச்சியே தொழுமி னும்மேல் வினையுமே!

—திருஞானசம்பந்தர்.

மிருதுவான இழைகளையுடையதும் வெண்மை நிறமுடையதுமாகிய பட்டு வஸ்திரத்தை அன்புடன் சாத்தியவர்கள் சிவலோகத்தையடைந்து ஒவ்வோரிழைக்கும் ஆயிரம் கற்பகாலம் வாழ்வார்கள். இது திரோதன சத்தி நீங்குதலென்னும் பாவனையாம்.

நறுமலர்களைக் கையில் எடுத்துக்கொண்டு இறைவனின் சிரசில் மும்முறை சாத்துதல் புஷ்பாஞ்சலியாகும்.

இது ஆன்மா ஆன்மபோதம் நீங்கிச் சிவ போதம் பதியுஞ் சமயத்தில் மனம் வாக்குக் காயத்தால் வந்த பாபமும் ஆகாமியம் சஞ்சிதம்பிராரர்த்தம் என்னும் வினைகளும் நீங்குதல் என்னும் பாவனையாகும்.

சிவபோகத்தை யடைந்த ஆன்மா, மீண்டும் பிரபஞ்சத்தை நோக்காவண்ணம் சிவபோகத்திலே திளைத்து நிற்கும் பாவனையே மணியடித்துத் தூபம் தீபம் ஆசமனம் அருக்கியங்களைக் கொடுத்து மனோரத முத்திரையுங் காட்டுதலாகும்.

தூப பாத்திரத்தின் முகத்தில் அக்னியும், தண்டத்தில் ஈச்வரனும் பாதத்தில் பிரஜாபதியும் அதிபர்களாக இருக்கிருர்கள். கிரியா சத்தி ரூபமாகிய தூபத்தைச் சிவ சன்னிதானத்திலிடுவதனுல் ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவ மல சத்தியாகிய அறியாமை நீங்கும் என்பது ஆகமங்களிற் கண்ட உண்மை.

சித் சத்தியின் வாசமாய் ஞானவிளக்கமாயிருப்பது தீபம், சிவசந்நிதானத்திலே தீபமேற்றி வருபவர்களுக்குச் சிவபெருமான் அபமிருத்யு நிவாரணத்தையும் பாப நீக்கத்

தையும் ஞான அறிவையும் இட்ட சித்திகளை யும் கொடுத்தருளுவர்.

அன்ன நிவேதனத்தினுல் தான்யவிருத்தி யும், சுபீக்ஷமும் உண்டாகும்.

கர்ப்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி அக்னி பற்றிய விடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஓர் பற்றுமில்லாமல் முற்றுங் கெட்டு ஆகாயத்துடன் கலந்து அத்துவித மாய் விளங்கல் போல் ஆன்மா வெண்மை நிறமான சாத்விதகுணத்தைப் பொருந்தி ஞானுக்னி பற்றிய விடத்தே பசுத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை விளங்கப் பெற்று ஸ்தூல சூஷ்ம சரீரங்கள் நீங்கப்பெற்று எல்லாப்பற்றுங்கழன்று சிவபெருமானேடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெரு வாழ்வு அடைதல் வேண்டும் என்னும் குறிப்பை உணர்த்துவதற்காகக் கர்ப்பூர ஆராதனை செய்யப்படுகிறது.

சிவாகமம் கடல் போன்றது. இறைவன் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவர். இறைவனுலேயே திருவாய் மலர்ந்தருளப் பட்ட சிவாகமங்களிலிருந்து சிவபூசையின் தத்துவம் என்பது பற்றி தினையளவு எழுதி இதை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் திருவடி யில் சமர்ப்பிக்கிறேன். பஞ்சபூத க்ஷேத் திரத்திற்குள் முக்கியமான அப்புக்ஷேத்திர மான திருவானைக்காவல் மஹாக்ஷேத்திரத் தைத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வது எத்தனையோ ஜன்மாவில் செய்த தவப்பயனுகும். எனவே ஸ்ரீ அகிலாண்டேஸ் வரி சமேத ஜம்புகேஸ்வரர் தேவஸ்தானம் திருப்பணிக்கமிட்டித் தலைவர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்களும் ஷெ கமிட்டிக் குழுவினர்களும் நோயற்ற வாழ்வுடன் நீடுழிக் காலம் வாழ வேணுமாய் எல்லாம் வல்ல இறைவனையும் இறைவியையும் வேண்டுகிறேன்.

## அன்றென்னுது இன்றே ஆனைக்கா அடைக

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம்—தழீஇயிருந்தும்
என்னுனைக் காவா இதுதகா தென்னுமுன்
தென்னுனைக் காவடைநீ சென்று.

—ஐயடிகள்காவடர்கோன் நாயனுர்

## அட்டசித்தியும் அருள் அகிலாண்டநாயகி

வட்டமிட்டொளிர் பிராணவாயுவெனு நிகளமோடுகம னஞ்செயும்
மனமெ னும்பெரிய மத்தயானையை என்வசமடக்கிடின் மும்மண்டலத்
திட்டமுற்றவளராச யோகமிவன் யோகமென்றறிஞர் புகழவே
ஏழையே னுலகில் நீடுவாழ்வன் இனி இங்கிதற்கும் அனுமானமோ
பட்டவர்த்தனர் பராவு சக்ரதர பாக்யமானசுப யோகமும்
பாரகாவிய கவித்வநான்மறை பாராயணஞ் செய்மதியூகமும்
அட்டசித்தியுந லன்பருக்கருள விருதுகட்டியபொன் அன்னமே
அண்டகோடிபுகழ் காவைவாழும் அகிலாண்டநாயகியென் அம்மையே.

—தாயுமானவர்

# மகோற்சவ விளக்கம்

சைவபிரகிரியாதீப எம். ஐயாமணி சிவம், திருவாடானை.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினு லவர்நல் விழாப்பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனின் உலகர்முன் வருகென உரைத்தார்.

—சேக்கிழார்

உலகத்து உயிர்கள் எல்லாம் உய்தி பெறுவான் வேண்டி அருட்டிருமேனி தாங்கி ஆண்டவன் எழுந்தளிய திருவடிவங்கள், பலப்பலவாகும். அத்திருமேனிகளின் பொலிவு தோன்றிய நாட்களெல்லாம் உயிர்கள் அனைத்திற்கும் நல்விழா நாட்களெனவே அமையும். இதனை

உற்சவ விளக்கந்தன்னை யுரைத்திடில் உயிரதற்கு
முற்செனனங்கள் விட்ட முகிழ்த்ததோர் கருணையாலே
தற்பரன் தருமமாய தனிக்கொடி கட்டியுண்மை
சிற்பரத் துயிர்கள் முத்தி சேர்த்திடச் செய்வார் மன்னே.

—பண்டார சாத்திரம்

பண்டார சாத்திரங்கள் பேசாநிற்கும், உற்சவம் என்ற வடமொழிச் சொல்லுக்கு உத்-சப்தபாஹிதம் ஸவம்-சிருஷ்டி. அதாவது சிருஷ்டி மார்க்கத்தைக் குறித்தது என்பது ஆன்றோர் கண்ட முடிவாகும்.

'सव' इत्युच्यते सृष्टिः, तदुस्याच्छब्दगाविवतम् ।
उद्भूत सृष्टिकारित्वाद्युत्सवः करयतः क्रयातु ॥

என்பது காரணுகமவாக்கு.

உலகத்தோற்றத்திற்குக் காரணமாகப் போதமில் உயிர்கள் தம்மைக் கதியினிற் போக்க வேண்டியே தகுங் கருணையாலே உமையவளோடுங் கூடித் தத்துவங்களை நோக்குதலும், அதிலிருந்து உலகம் யாவையும் தோற்றுதலும் நிறுத்தலும் ஒடுக்குதலுமாகிய முத்தொழிலின் துவக்கமே 'உத்சவ' என்ற சொல்லின் பொருளாகுமென்பர் மேலோர். உயிர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் வினைத் திட்பத்தால் நல்வினைத் தீவினை வயப்பட்டுக் கறங்கும் சகடமும் போல உழலுகின்ற நிலையில் எல்லா வினைகளையும் திருநோக்காலகற்றி ஆணவமான படலங்கிழித்துத் தன்மயமாக்கும் தனிப்பெருங்கருணைப் பொழிவே உற்சவமெனக்கண்டு வந்தனர். இந்தப் பெருவிழாக்களைப் பற்றிச் சைவ, வைணவ, ஆகமங்களில், மிக மிக விரிவாகப் பேசப்படுவதைக் காண்கிறோம். இந்த விழாக்களையே இறைவன் செய்யும், ஐந்தொழில்களாகவும் சிவாகமங்களில் பேசப்படுகிறது. இந்தப் பெருவிழாக்கள், நித்திய விழா, சிறப்புவிழா, வேண்டுதல் விழா, என மூவகைப்படும். நாள்தோறும் பூஜையில் இருக்கையில் இருத்தி, நீராட்டி, மலர்தூவி, முறையே வழிபாடாற்ற முடியாத நுண் வடிவங் கொண்ட சில தேவர்கள் வழிபாடாகப் பலிசிந்தி வணங்குதல் ''நித்தியவிழா'' வாகும்.

ஆண்டுதோறும் ஒவ்வொரு திங்கள், முழுமதி உடுவில் வரும் நாளினை முடிவாகக் கொண்டு செய்வது ''சிறப்பு விழாவாகும்.'' (நைமித்திக உற்சவம்)

நித்தியத் திருநாள் பக்க விழாநிகழ் திங்கட்கிழமை
புத்தலரிளவேனிற்கட் பொருவரு வசந்தங் கோடை
மெத்திய முதுவேனிற்கண் மிதவைநீ ராட்டு மாரி
மெய்த்த கார்ப் பருவந் தன்னிற் பவித்திர முது விழாவும்.
அன்புறு கூதிர்க்காலை யைப்பசிப் பூரச் சாறும்
முன்பனிப் பருவந்தன்னில் வைகறை எழுச்சிப்பூசை
பின்பனிப் பருவந் தன்னிற் பிறங்கு பொன்னூ சலாட்டும்
என்பன சிறப்புமாக வியற்றுவோர் வீடு சேர்வார்.

—உற்சவ விளக்கம்

இவைகள் பயன்கருதாது செய்யப்பெறும் விழாக்களாகும். இன்ன பயன் வேண்டுமென இறைவனை வேண்டிப் பணிந்து, தன்னுடைய பிறந்த நாட்களிலோ, அல்லது அரசன் பிறந்தநாள், வெற்றி பெற்ற நாட்களிலோ, விழாவெடுப்பது (காம்ய உற்சவம்)

வேண்டுதல் விழாவாகும். இம்மூவகை விழாக்களையும், ஆகமங்கள், சாகல்யம், பாவனம், சாந்திகம், மாங்கல்யம், என நால் வகையாய்ப் பேசுகின்றன. முதற்கண் கூறிய சாகல்யம் அல்லது நலம் பெறுதல், என்ற விழா, கொடிகட்டுதல் தொடங்கி நீராட்டுதல் இறுதியாகச் செய்யப்படும் விழாவாகும்.

இரண்டாவது பாவனம் அல்லது தூய்மை பெறுதல் என்ற விழா கொடிகட்டுதல் மட்டு மின்றி மற்றெல்லா வழிபாடுகளுடனும் செய்யப்படும் விழாவாகும்.

மூன்றுவதான சாந்திகம் அல்லது கழு வாய் எனும் விழா, காலையில் ஓமமும், பலியிடுதலும் மாலையில் திருவீதியுலாவும் செய்வதாகும்.

நான்காவதான மாங்கல்யம் அல்லது மங்கலப்பேறு எனும் விழா எசமானனும், குருவும் சேர்ந்து ஒரு நாளை முடிவு செய்து அந்நாளில் மேற்கூறிய கொடி கட்டுதல், நீராட்டுதல் முதலியன இன்றி விழா எடுத் தல் மட்டும் செய்வதாகும்.

இந்த விழாக்கள் ஒரு நாள் முதல் 27 நாட் கள் முடியக் கொண்டாடும் முறைகளும் காணக் கிடக்கின்றன.

ஒரு நாள் விழாவிற்குச் ''சைவம்'' என்று பெயராகும். இவ்விழாவும் '' கோஷணம் '', ''கேவலம்'' என இருவகைப்படும். பேரிகை கள் முழக்கிக் காப்புக்கட்டி விழாவெடுத்தல் கோஷணமாகும். இவ்விரண்டு மின்றி உலாப்போந்து அருளுதல் மட்டும் கேவலம் என்ற விழா.

மூன்று நாட்கள் செய்யும் விழா :
கௌணம்

ஐந்து நாட்கள் செய்யும் விழா :
பௌதிகம்

ஏழு நாட்கள் செய்யும் விழா : பௌவனம் இவ்வைந்து விழாவிற்கும் கொடி கட்டுதல் வேண்டாவாம்.

9 நாட்கள் விழா : தைவிகம்
11 நாட்கள் விழா : பைத்ருகம்
13 நாட்கள் விழா : கௌமாரம்
15 நாட்கள் விழா : சாவித்ரம்
17 நாட்கள் விழா : சாந்திரம்
27 நாட்கள் விழா : சௌரம்

ஆகமங்களில் இவ்வாறு விழாக்கள், பிரமோற்சவம் என்ற பெயரில் பேசப்படு கின்றன.

இவ்விழாக்களில் 27, 17, 15 நாட்கள் நடைபெறும் விழாக்களில் எட்டுக் கொடி களும், பிரதான கொடியும், ஐந்து கொடி களும் ஏற்றம் பெறுதல் வேண்டும். இவ் விழா நமது திருவானைக் கோவிலிலும் ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இவ் விழாக்கள் இறைவனின் ஐந்தொழிலையும் நினைவூட்டுகின்றன என மறைகள் பேசும். அவையாவன :

அனுமதி பெறுதல், மண் எடுத்தல், முளை யிடுதல், பேரி ஒலித்தல் முதலான வெல்லாம் சிருஷ்டி என்னும்—தோற்றம், திருவீதி வுலா, ஓமம், பலியிடுதல் முதலியன திதி—காத்தல் பரிவேட்டை, தேரூர்தல், சாந்தம் அணிதல், சம்மாரம் என்னும்—ஒடுக்கம் பொடியிடித்தல், நீராட்டு முளைவிடுதல், கொடி இறக்கல் முதலியன—திரோபவம் என்னும்—மறைப்பு. திருஊடல் பக்தர் விழா—குருவணக்கம். அனுக்கிரகம் அரு ளுதல் என ஐந்தொழிலும் பேசப்படு கின்றன.

இந்தப் பெருவிழா நாட்கள் கொண்டாடுத லின் பயன், உலகத்து உயிர்கள் அனைத்தும் சாம்பவீ தீக்கை என்ற முறைப்படி இறை வன் திருநோக்கால் உய்தி பெறுதல், உண்மை. இதனையே '' தம்முதற் குருவு மாய்த் தவத்தினில் உணர்த்த '' என்று சிவஞான போதம் பேசா நிற்கும். தீக்கை என்னும் சடங்குகளில், இறைவன், மண்ட லம், கும்பம், அக்னி, குரு, சீடன் என்னும் ஐந்து இடங்களையும் கலந்து நின்று அருள் பாலிப்பான் என்பது சிவாகமங்களின் முடிந்த முடிபாகும். அவ்வாறே இவ்விழாக் காலங்களில் ஐந்து இடங்களில் நின்று அருள் பாலிக்கும் முறைமையும் பேசப்படு கிறது.

மண்டலம் —பலிநாயகர்
கும்பமூர்த்தி —அத்திர தேவர்
அக்னிமூர்த்தி —சோமாஸ்கந்தர்



**சங்கரேசுவரர் கோபுரம்**

இது மூன்றும் பிரகாரத்தில் கீழ்வாயிலாக இருப்பது
சங்கரேசுவரர் கோயிலையடுத்திருப்பதால் இப்பெயருடன் வழங்குகிறது

ஆசாரியமூர்த்தி—காப்புக்கட்டு நம்பியார்
சீடர்கள் —தீக்கை பெற்றோரும் பெரு
தோருமாகிய அனைத்துயிர்களுமாகும்.

தீக்கை என்னும் சடங்கில் அக்னி முதன்மை யானதாகும். அவ்வக்னியும் வாகீசர், வாகீசுவரி ஆகிய உலகத்து மாதா பிதாக் களின் கருப்பத்தில் தோன்றியதாக அமை தல் வேண்டும். ஈண்டு வாகீசர்—சம்பு, வாகீசுவரி—போக சக்தி, குழந்தை அக்னி, கந்தப் பெருமான், இவ்வடிவத்தையே, சத்து, சித்து, ஆனந்தம் எனவும், உண்மை, அறிவு, ஆனந்தம் எனவும் கூறுவர் மேலோர். சிவபெருவிழாக்களில் மேலே குறிப்பிட்ட ஐந்து இடங்களிலும் நிறைந்து நின்று பிறப்பாலும், சாதியாலும், அறிவா லும், ஆற்றலாலும், செல்வத்தாலும், யோகம் முதலிய சித்திகளாலும் எல்லா வகையாலும் மேம்பட்டவர் எனவும் எத்துணை நலனுமில்லா மூர்க்கர், மூடர், கல்வி அறிவில்லாதவர், ஒழுக்கம் இல்லாத வர் முதலிய தாழ்ந்தோர் அனைவரையும் கருணைத் திரு நோக்கால் வினைகளைந்து முத்தராந்தகுதி தந்து அருள் புரிதலே திருவீதியுலாவின் தத்துவம் எனவும், மறைகள் பேசுகின்றன. இப்பெருவிழாக் கள் 18 விதமான முறைகளை உடையன வாம். அவையாவன : இடபவேள்வி, கொடி கட்டுதல், பாடி மகிழ்வித்தல், முளை யிடுதல், வேள்வி, முத்திரை பெறுதல், பலி தூவல், திருஉலா, ஒப்பனை செய்தல், கண்படாது காத்தல், காப்பணிதல், புண் ணிய நீர் கொணர்தல், மஞ்சள் இடித்தல், நீராட்டுதல், கொடி இறக்கல், குடமுழுக்கு, திருமணம், அடியார் வழிபாடு எனப் பதினெட்டாகும்.

இப்பெரு விழாக்கள் எடுத்தலின் பயன்க ளாவன :

ஒரு நாள் விழா—அரசு உயர்தல்
3 நாட்கள் விழா—இறை மகிழ்ச்சி
5 நாட்கள் விழா—வாழ்வாங்கு வாழ்தல்
7 நாட்கள் விழா—இறையருள் பெறல்
9 நாட்கள் விழா—மன நிறைவு
11 நாட்கள் விழா—நிறைவு
13 நாட்கள் விழா—எல்லாம் கைகூடுதல்
15 நாட்கள் விழா—மக்கட் பேறு
17 நாட்கள் விழா—புண்ணிய மிகுதி
19 நாட்கள் விழா—கழுவாய்
21 நாட்கள் விழா—வெற்றி காணல்

இவ்வாறு ஒவ்வொரு உருவில் விழாச் செய்தலின் பயன்களைக் காண வேண்டியது இன்றியமையாதது.

இவ்விழா காண்பதன் பெருமையைப் பற்றி "ஆளுடைய பிள்ளையார் கபாலீச் சரத்தின் பதிகத்தில்", ' பங்குனி உத்திர நாள் ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய் ' என்று அருளியமை காண்க :

" கொடிகொள் செல்வ விழாக் குணலையறைக்
கடிகொள் பூம்பொழிற் கச்சி மூலகம்பனுர் "

—திருநாவுக்கரசு சுவாமிகள்

" பரமிகு நாட்-சான்ற நிலத்தோர் பொருமணித்தேர்
சங்கத் தலைவரு ருட்டினர் "

—திருவானைக்காப் புராணம்

" கல்வரைப் பிராட்டி செவ்வேளைங்கரன் கணங்கள் சூழ
பல்வகை யூர்தி யும்பர் படரொளி யரச வீதி [துப்
யெல்லை யிலுயிர்கட் கெல்லா மென்னருங் கருணைபூத்
புல்கொளித் திருவேகம்பன் திருவுலாப் போதச்
செய்வார் "

என ஐம்பெருங்கடவுளார் உலாவை—காஞ் சிப் புராணமும்,

" திரி மலத்தே குளிக்கும் உயிர் அருள்
கூடும்படி கொடி கட்டினனே "

என உமாபதி சிவாசாரியார் கொடிக்கவியி லும் இவ்விழாக்களைப் பற்றியும், இப்பெரு விழாக் காண்டலால் விளையும் நற்பயன் களைப் பற்றியும் கூறப்பெற்றிருத்தல் காண்க. விரிவஞ்சி ஒரு சிலவே ஞாபகப் படுத்தினேன்.

எல்லாம்வல்ல அகிலாண்ட நாயகியுட னுகிய அமுதீசர் திருவருளைச் சிந்தித்து, ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஒரு பொரு ளாகக் கருதி இக்கட்டுரை எழுதுமாறு பணித்த திருப்பணிக் குழுவிற்கும் மலர் வெளியீட்டுக் குழுவினர்க்கும் என் உளங் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகின்றேன்.

# ஆகமம்

# சிவாகமம்

சாமிநாத சிவாசாரியார், திருவாவடுதுறை.

சைவாகமங்கள் சைவம், பாசுபதம், சோமம், வாகுளம் என நான்கு வகைப்படும். இந்நான்கினுள் சைவமென்பது வாமம், தக்ஷிணம், சித்தாந்தமென மூகைப்படும். வாமமென்பது காபாலம். காளாமுகம், அகோரம் முதலிய மூன்றும் ஆம். இவை திரிகம் எனப் பெயருடையன. காச்மீரசைவதர்சனம் ஸ்வச்சந்த பைரவம் முதலிய தொண்ணூற்றிரண்டும் தக்ஷிணமென்பதிலும் காமிக முதலிய இருபத்தெட்டும் ஸித்தாந்தமென்பதிலும் அடங்குவனவாம்.

ஸித்தாந்தமென்னும் பதப்பொருளாவது: எந்த முடிவு பரீக்ஷகர்களால் வெகுவிதமாகப் பரீக்ஷை செய்து ஏதுக்களால் சாதித்து நிர்ணயஞ் செய்யப்படுகிறதோ அது சித்தாந்தமாகும்; என்பது கௌதம ஸூத்ரவ்யாக்யானமாகும். இக்காமிகம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களே சித்தாந்தமென்று காமிகாகமம் பூர்வபாகம் முதல் படலத்தில் கூறப்படுகிறது. மேலும்:

ஸ்ரீ பகவானை சதாசிவ பட்டாரகருக்குக் காமிகம் முதலிய சிவஞானம் சிரமாகவும் மேல் கூறப்பட்ட மற்றவைகள், மார்பு, கண்டம் முதலிய அங்கங்களாகவும் சொல்லப்படுகின்றது. ஆகையால், ஏனைய ஆகமங்கள் பூர்வபக்ஷமேயாகும். ஆனதால் கொள்ளத்தக்கனவும் விடத்தக்கனவுமான விஷயங்களில் அந்தப் பாசுபதம் முதலியவைகளை ஒதுக்கிவிட்டு இச்சைவ சித்தாந்தாகமங்கள் ஸ்ரீசதாசிவ பட்டாரகரால் கூறப்பட்ட இருபத்தெட்டுமே எனலாம்.

இவ்வாகமங்களும் மீண்டும் சைவம், ரௌத்ரம் என இருவகைப்படும். இவைகளுள் சைவம் பத்தும், ரௌத்ரம் பதினெட்டுமாக இருபத்தெட்டாகும். இவைகளைப் பரப்பிரமம் என்றுஞ் சொல்லப்படும். நிஷ்கள (உருவமில்லாத)மான ஸ்ரீ பரசிவமே ஈசான தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத மந்திரங்களாலான சரீரமுடையவராக இருந்து சப்தபிர்மமென்ற ஸ்ரீ சதாசிவர் எனும் பெயர்தாங்கிப் பசுக்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கி ஞானமுண்டாக்கவே, முதலில் பிரணவர் முதலான பத்து சிவர்களை உண்டுபண்ணி அவர்களின் பொருட்டுச் சைவ பேதங்களான காமிகம் யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், ஸூக்ஷ்மம் - ஸகஸ்ரம், அம்சுமான், ஸுப்ரபேதம் என்ற பத்து ஆகமங்களையும் பின்பு பதினெட்டு ருத்ரர்களையும் உண்டுபண்ணி, விஜயம் நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அனவம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞ் ஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லளிதம், ஸித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம், என்ற பதினெட்டு ஆகமங்களையும் உபதேசித்தார்.

பத்து சிவர்களாவார்: பிரணவர், ஸுதர், ஸுதீப்தர், காரணர், ஸுசிவர், ஈசர், ஸூக்ஷ்மர், காலர், சம்பு, தசேசர் எனவும் பதினெட்டு ருத்ரர்களாவார்: அநாதிருத்ரர், தசானனர், நிதனேசர், வியோமர், தேஜசு, பிராம்மணேசர், சிவர், ஸர்வாத்மகர், அனந்தர், ப்ரசாந்தர், சூலி, ஆலயேசர், பிந்து, சிவநிஷ்டர், ஸோமர், ஸ்ரீ தேவி, தேவாதிபர், சிவர் என்னும் இவர்கள் சதாசிவர்: இவ்வுலகங்களோடு ஆகமங்களையும் ஸ்ருஷ்டி செய்ய அந்த ஸ்ரீ நிஷ்கள (உருவமற்ற) பரமசிவர். பூர்ணிமாசந்திரன் தன் ஒளியை வீசுவது போலத் தன் சக்தியின் மீது பிரகாசத்தைச் செய்கிறார். அந்தச் சக்தியும் அக்னியில் உஷ்ணம் போன்று அவரிடமே விளங்கும். இக்காரியங்களைச் செய்ய அச்சக்தியும், இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்பனவாகின்றன.

இச்சை உருவமில்லாவிடினும், விரும்பிய காரியங்களைச் செய்வதால் இச்சாசக்தி என்றும், ஞானம் ரூபமில்லாவிடினும் ஞான மென்னுங் காரியத்தைச் செய்வதால் ஞான சக்தி என்றும், கிரியாரூபமாக இல்லாவிடினும் கிரியை எனுங் காரியத்தைச் செய்வதால் கிரியாசக்தி என்றும் கூறப்படுகின்றன. ஆக இச்சாசக்தியே நிஷ்கள (உருவமற்ற) ஸ்ரீ பரமசிவத்தின் அளவற்ற மகிமை என்பதாகும். இவ்விச்சா ஞானசக்திகளின் சமமான ஸ்ரீ பரமேசுவரருடைய அவசரமே மந்திர சரீரமுடைய ஸ்ரீ சதாசிவ உருவமாகும். இவரது உருவமே யோகிகள், ஞானிகள்; இவர்களது பூஜாமூர்த்தியாகிச் சிவலிங்கங்களில் பூஜிக்கப்படுவது, இச்சதா சிவரே. ரூபாரூப மூர்த்தியாவார், இப்படியே நிஷ்கள சிவாத்வித சிற்சக்தியே நிஷ்களமாகவும், சதாசிவரது சக்தியாகிய மனோன்மணியே சகள நிஷ்கள (ரூபாரூப) ரூபியான சக்தியுமாவான்.

இச்சதாசிவ மூர்த்தியின் மேல் முகமான ஈசானத்தினின்றும் சித்தாந்தமென்ற இக்காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள சிவாகமங்களும் அதனதன் பேதங்களான மிருகேந்திரம் முதலான இருநூற்று ஏழு உபாகமங்களும் கிழக்கு முகமான தத்புருஷத்தினின்று ரிக்வேத வகைகளும், தெற்கு முகமான அகோரத்தினின்று யஜுர் வேதமும், மேற்கு முகமான ஸத்யோஜாதத்தினின்று அதர்வண வேதமும், வடக்கு முகமான வாம தேவத்தினிடமிருந்து ஸாம வேதமும் தோன்றின. ஆதலால் சிவாகமங்களுடன் ரிக் வேதம் முதலிய நான்கு வேதங்களும் ஸ்ரீ மந்திர வடிவமான ஸ்ரீ சதாசிவரது முகங்களில் நின்றுமுண்டானதால் இச்சிவாகம வேதங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துடையன அல்ல. ஆகவே வேதங்கள் பொது நூலாகவும், சிவாகமங்கள் சிறப்பு நூலாகவும் கொள்ளப்படுகின்றன. இன்னமும் இவைகளுக்குள் மாறுபட்டதான கருத்துக் கொள்வதும் அறிவாளர்களது புத்தி வலிமையின் குறைவே. இச்சித்தாந்த மென்ற பெயருடையதான காமிகம் முதலியவைகளே பரமாப்தரான ஸ்ரீ சதாசிவரால் ஆன்மாக்களுக்குப் போக மோக்ஷ சித்திகளைக் கொடுப்பதாகவும் வேதக் கருத்துக்களுடன் ஒத்துள்ளதால் வைதிகமெனவும், வேதஸாரம் சிவாகமம் எனவும் ஏனைய பாசுபதம், ஸோமம், வாகுளம் முதலானவைகள் வேதாசாரங்களுக்கு முரணான ஆசாரங்களையுடையன. ஆதலால் அவைதிக மெனவும், சிவாகமங்கள் போலக் கிரியை, சரியை, யோகம், ஞானம் இவைகளைப்பற்றிக் கூறுததால் பூர்வபக்ஷ சாஸ்திரங்கள் எனவும் கூறப்படுகின்றன.

இவ்வாகமங்களைக் கேட்டவர்கள் முறையே சிவ பேதங்களான காமிக முதல் ஸுப்ர பேதம் வரை மூன்று மூன்று பேர்களும், விஜயம் முதல் வாகுளம் வரையுள்ள பதினெட்டு ஆகமங்களைக் கேட்டவர்கள் முறையே இருவர் இருவர்களுமாவர். இந்தச் சிவபேதங்களைக் கேட்ட பிரணவர் முதலிய முப்பது சிவர்களும், ருத்ர பேதங்களைக் கேட்ட அநாதிருத்ரர் முதலான முப்பத்தாறு ருத்ரர்களும், பின்பு தேவர்களும் அத்தேவர்கள் ரிஷிகளுக்கும், அந்த ரிஷிகள் மனுஷ்ய குருமார்களுக்கும் உபதேசித்தார்கள். இவ்வுபதேசக்ரமங்கள் சிவருத்ரர்கள் இவர்களிடமிருந்து தேவர்கள் ஞானரூபமாகக் கேட்டுக் கொண்டதால் மஹௌககிரமம் எனவும் ரிஷிகளிடமிருந்து மனுஷ்ய குருமார்கள் சப்த வடிவமாகக் கேட்டுக் கொண்டதால் பிரதி ஸம்ஹிதாகிரம மெனவும் வழங்கப் பெறும். சிவாகமங்களில் நான்கு வருணத்தாருடைய தர்மங்களும் கூறப்பட்டுள்ளன.

இவ்வாகமங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கின் விவரமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவைகளுள் கிரியா பாதத்தில் மந்திரங்களுடைய உச்சாரணமும் ஸ்நான ஸந்தியாவந்தனங்கள் ஆன்மார்த்த பரார்த்த பிரதிஷ்டா பூஜை ஜபம் ஹோமம் ஸமயம் விசேஷம் நிருவாணம் ஆசார்யாபிஷேகம் போக மோக்ஷம் சித்திகளுக்கு உபாயமான தீக்ஷை முதலியவைகளும், சரியா பாதத்தில் பிராயச்சித்த விதிகளும் பவித்ரவிதியும் சிவலிங்க லக்ஷணம் உமாமஹேசர் முதலிய வ்யக்தாவ்யக்த

லிங்க லக்ஷணங்கள் நந்தி முதலிய கண நாதர்களது லக்ஷணங்கள் ஜபமாலை, யோக பட்டம், தண்டம், கமண்டலம் முதலியவற் றின் லக்ஷணங்களும், அந்தி யேஷ்டி, சிரார்த்த விதிகளுள் இவைகளும், யோக பாதத்தில் முப்பத்தாறு தத்துவங்கள் அவற் றினதிபர்கள் ஆன்மாவும், ஸ்ரீ பரமேசுவர ரும் சந்தியும் ஜகத்திற்குக் காரணமான மாயை மகாமாயையை இவைகளின் வல் லமை அணிமாதி சித்திகள் மூலாதாரம் முதலிய ஆருதாரங்களின் முறைமை இவை யனைத்தும் கூறப்பட்டுள்ளன. ஞானபாதத் தில் ஸ்ரீ பரமசிவ ஸ்வரூபத்துடன் விஞ்ஞான கலர், பிரளயாகலர், ஸகலர் என்னும் ஆன் மாக்களது ஸ்வரூபமும், ஆணவம், கார்மி யம், மாயேயம், வைந்தவம், கிரோதானம் என்ற பாசஸ்வரூபமும், சக்தியின் ஸ்வரூப மும் சிவதத்வம் முதல் பிருதிவீதத்வம் வரை முப்பத்தாறு தத்வங்களது உற்பத்தியும் இவை. ஆன்மாக்களுக்குப் போகம் புசிக் கைக்குக் கருவியாகும் முறைமையும் புவ னங்களும் அவ்வதிபதிகளது ஸ்வரூபமும், யோஜனைப் பிரமாணங்களும் அதமம், மத் யமம், மகாப்ராயங்களது ஸ்வரூபங்களும் அப்பிராயங்களுக்குப் பின்னர் சிருட்டியா கும் முறைமையும் பாசுபதம், மகாவிருதம், கபாலம் முதலிய மதங்களது ஸ்வரூபங் களும் கூறப்படும். இக்கிரியா சரியா யோக பாதாசாரங்களது அனுட்டானத்தால் சிவ ஞானமே பெற்று அச்சிவஞானத்தாலேயே மோக்ஷ சித்தியும் உண்டாகும் எனக் கூறப் படுகிறது. இன்னும் இக்கிரியா, சரியா யோகானுட்டானங்கள் சிவஞானம் பெறவே சாதனமாகும். ஆனதால் கிரியாதி அனுட் டானங்களிலும் நான்குங் கலந்தே கூறப் பட்டுள்ளன. இந்தக் கிரியைகளும் மந்திரம், தந்திரம், கிரியை பாவனையுடனேயே செய்ய வேண்டு மெனவுங் கூறப்படும்.

## அகிலாண்டநாயகி மாலை

அளவறு பிழைகள் பொறுத்தரு ணின்னை
யணியுருப் பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றே பொறுப்பவ டன்னைச்
சடைமுடி வைத்தன னதனுற்
பிளவியன் மதியஞ் சூடிய பெருமான்
பித்தனென் றெருபெயர் பெற்றுன்
களமர்மொய் கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (7)

விழியிடந்தப்பி மகவரிந் தூட்டி
விருப்புறு தந்தைதா டடிந்து
பழியகன்மனையை யுதவிமற் றின்னும்
பலசெயற் கரியசெய் தார்க்கே
மொழியுநின் கொழுந னருள் செய்வா னென்ளுன்
முடிதரா தென்றுனை யடைந்தேன்
கழியுணர் வுடையார் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (10)

# காமிகாகமம்

மு. அருணசலம், M.A.

சைவாகமங்கள் 28 ; அவற்றுள் காமிகாகமம் என்பது முதலாவது ஆகமம்.

**ஆகமங்கள் :**

சைவ மரபின்படி எல்லா நூல்களுக்கும் மூலமாய் உள்ளவை, இறைவன் அருளிச்செய்த வேதம், ஆகமம் என்ற இரண்டும். வேதம் பொது நூல், சைவம் சிறப்பு நூல். வேதம் சூத்திரம் என்றும் ஆகமம் பாடியம் என்றும் ஆன்றேர் கருதுவர். இவ்விரு வகை நூல்களும் ஆராய்கின்ற முடிந்த பொருள் ஞானம் ; அஃதாவது உயிர்கள் தம்மை அறிந்து, தலைவனை அறிந்து, இடையே பந்தித்து நிற்கும் தளையை அறிந்து, அத்தளையிலிருந்து விடுபட்டுத் தலைவனேடு ஒன்ற வேண்டும் என்ற உண்மை அறிவு. வேதம் தலைவனைப் பற்றிக் கூறும் போது, உபநிடதத்திலும் வேறு இடங்களிலும், எடுத்துக் கொண்ட அவ்வப்பொருளே தலைவன் என்று கூறும் ; எல்லாப் பகுதிகளும், ஒரே பொருள் அல்லது மூர்த்தி பரமானது என்று சொல்வதில்லை. ஆனல், ஆகமம் அவ்வாறு இல்லாது, சிவம் ஒன்றே தலைவன் என்று கூறும். இக் காரணத்தாலேயே வேதம் பொது என்றும் ஆகமம் சிறப்பு என்றும் சொல்லப் பெறுகின்றன. வேதம் கூறுவது வேதாந்தம் ; ஆகமம் கூறுவது சித்தாந்தம்.

வேதாந்தம் என்ற சொல், வேதத்தின் இறுதிப் பகுதியாகிய உபநிடதத்தைக் குறிக்கும். வேதசிரஸ் என்றும் சொல்வதுண்டு. உயிர் தளை இறை என்ற முப்பொருள்களையும் உபநிடதம் கூறும் ; இதை வேதத் தலைதருபொருள், வேத சிரப்பொருள் என்று சைவ சாத்திரம் குறிப்பிடும் ; வேதாந்தத்தின் தெளிவாம் சைவ சித்தாந்தம் '' என்றும் உமாபதி சிவாசாரியார் கூறுவர். ஆனல் இன்று உலக வழக்கில், வேதாந்தம் என்ருல் மாயாவாதத்துக்கு மறு பெயராக வழங்குகிறது. நானே பிரமம் என்று சொல்லுகின்ற வேதாந்தத்தைச் சைவம் ஒப்புக் கொள்வதில்லை ; ஆகவே, வேதாந்தம் வேறு சித்தாந்தம் வேறு என்று சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

வேதம் நான்கு என்று சொல்வது போல, சிவாகமங்கள் 28 என்று சொல்லப்படும். இவை சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களிலிருந்தும் உதித்தன. சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், என்ற நான்கு முகங்களில் இருந்து ஐந்து ஆகமங்கள் வீதமும், ஈசானமுகத்திலிருந்து எட்டு ஆகமங்களும் வெளிவந்தன என்று தந்திராவதாரப் படலம் சொல்லும். வெளிவந்தன என்ருல் இறைவன் உபதேசித்தான் என்பது பொருள். எல்லா ஆகமங்களிலும் முகப்பில் உள்ள தந்திராவதாரப் படலம் என்ற பகுதி ஆகமங்களின் உற்பத்தியைச் சொல்லும். முதல் பத்து ஆகமங்களும் சிவபேதம் என்றும், அடுத்த பதினெட்டும் ருத்ரபேதம் என்றும் பெயர் பெறும். சிவபேதம் என்பது, சதாசிவரால் அட்டவித்தியேசுவரர்களுக்கு உபதேசித்த காரணத்தால் வந்த பெயர், அனுதிருத்திரர் முதலான 36 ருத்திரர்களுக்கு உபதேசித்த காரணத்தால் மற்றவை ருத்திர பேதம் எனப்படும். இவ்வாகமங்கள் யாவும் அனந்தேசுரர் ஸ்ரீ கண்டருத்திரர் தேவர் முனிவர் மனிதர் என்ற முறையில் உபதேசக் கிரமமாக உலகில் பரவின. தீட்சை பெற்றவர்களே ஆகமம் பயிலும் தகுதியுடையவர்கள்.

எல்லா ஆகமங்களும் இன்று கிடைக்கவில்லை. ஆகமங்களை அச்சிட்டோர் மூவர். சென்ற நூற்ருண்டின் பிற்பகுதியில் கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் சிலவற்றைக் கிரந்த லிபியில்

அச்சிட்டார். இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் தேவ கோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தார் சிலவற்றைக் கிரந்த லிபியிலும் சிலவற்றை நாகரலிபியிலும் அச்சிட்டனர். அவற்றின் பின்னர், இந்நூற்றுண்டின் பிற்பகுதியில் புதுச்சேரியிலுள்ள பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சிக் கழகத்தார் மூன்று ஆகமங்களின் பகுதிகளை நாகரலிபியில் படங்களோடு மிகவும் அழகாக அச்சிட்டுள்ளனர். இவர்களுடைய அச்சு வேலை நெடுங்காலத்து முன்னமேயே நின்று போயிற்று. புதுச்சேரிக் கழகத்தார் 23 ஆகமங்களைச் சேகரித்திருக்கிறுர்கள். இன்னும் ஐந்து அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பௌஷ்கராகமம் மட்டும் சிதம்பரம் அம்பலவாண நாவலரால் 1925-ல் அச்சிடப்பட்டுள்ளது.

**ஆகமத்தின் பொருள் :**

சதாசிவருடைய மந்திர வடிவமான திருமேனிக்கு எல்லா ஆகமங்களும் உறுப்புக்களாய் அமைந்துள்ளன என்பர்.

இனி மேலான இடத்திலிருந்து வந்தமையால் இந்த நூல் ஆகமம் எனப் பெயர் பெற்றது. ஆகமம் என்ற சொல்லுக்குப் பின்வருமாறு பொருள் சொல்லுவர். ஆ–பாசம் ; க–பசு ; ம–பதி ; ஆன்மாக்கள் முத்தி பெறும் பொருட்டு மலநாசம் செய்விப்பதனுல் ஆகமம் என்ற பெயர் வந்தது. வேதம் அந்தணர் மட்டுமே ஓதுதற்குரியது என்றும், ஆகமம் அனைவரும் ஓதுதற்கு உரியது என்றும், இதனுலேயே இது சிறப்பு என்ற பெயர் பெற்றது என்றும் சொல்லுவர். எல்லா ஆகமங்களும் வித்தியாபாதம் கிரியாபாதம் யோகபாதம் சரியாபாதம் என்ற நான்கு பிரிவுகளை உடையன. வித்தியா பாதம் என்பது ஞானபாதமாகும். பொதுவாக முதல் இருபாதங்கள் மட்டுமே ஆகமங்களில் மிக்க விரிவாய் உள்ளன. ஏனையவை சுருக்கம். ஆகமங்களைத் தந்திரம் என்று சொல்வதும் உண்டு. (தந்திரம்—தன்னை யடைந்தோரைக் காப்பாற்றுவது) சிறப்பாகத் தந்திரம் என்ற சொல் சாக்த ஆகமங்களாகிய சாக்த தந்திரங்களையே குறிக்கும். சிவாகமங்கள் ஆகமம் என்றே சொல்லப் பெறும். காமிகாகமம், உதாரணமாகக் காமிகாக்ய மகா தந்திரம் என்று சொல்லப் படும். ஆயினும், வித்தியாபாதமானது பதி இலக்கணம், மூவகை ஆன்ம இலக்கணம், பாச இலக்கணம், சக்தியின் இலக்கணம் தத்துவங்களின் உற்பத்தி, அவற்றை ஆன்மா அனுபவிக்கும் முறை, புவனங்கள் சிருஷ்டி, பிரளயம், சைவ பேதங்கள் சில— முதலான பகுதிகளைச் சொல்லும். சில ஆகமங்கள் இவற்றுள் சிற்சில பகுதிகளை மட்டுமே எடுத்துக் கூறுவன. கிரியா பாதத்தில் மந்திரங்கள் ஆன்மார்த்த பரார்த்த பூஜைகள் தீக்ஷைகள் முதலியன மிகவும் விரிவாகச் சொல்லப்படுகின்றன. இப்பகுதியில் ஐந்தெழுத்து, பீஜமந்திரங்கள், அங்கமந்திரங்கள் முதலிய மந்திர விளக்கம் சிறப்பானது.

யோக பாதத்தில், தத்துவங்கள் அத்துவாக்கள், சித்திகள், அட்டாங்க யோகம், நாடி, கலை முதலியன சொல்லப்படுகின்றன. பிராசாத யோகம் பொதுவாய்ச் சொல்லப் பெறவில்லை. சரியாபாதத்தில் நித்திய கரும விதிகள், பிராயச்சித்த விதிகள், சோட சக்கிரியைகள் போன்ற சடங்குகள் சொல்லப் படுகின்றன.

**காமிகாகமம் :**

வேதச் சிறப்பு ஆகமச் சிறப்பு என்ற இரு பகுதிகளைக் கூறிய திருமூலர், தமது திருமந்திரத்தில் ஒன்பது ஆகமப் பெயர்களைச் சொல்லுகிறுர். அவை முறையே காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலாத்திரம், சுப்ரபேதம், மகுடாகமம், என்பன. முதலாவது குறிப்பிட்ட காரணகமம் கிரியா பாதம் மட்டும் 16, 150 கிரந்தங்களை உடையது ; இரண்டாவதாகிய காமிகம் 12,000 கிரந்தங்களை உடையது. இந்த முறையில் பார்த்தால், திருமூலர் குறிப்பிட்டது கிரந்த அளவின்படி முறைப் படுத்தினர் என்று சொல்லக்கூடும்.

சத்தியோஜாத முகத்தினுல் உபதேசிக்கப் பட்ட ஐந்தும், காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்பன.



உச்சிக்காலப் பூசைக்கு எடுபிடிகளுடன் அகிலாண்ட நாயகி எழுந்தருள்கின்ருர். அம்மையின் கோலத்தில் வருவது அம்மன் கோயில் அன்றன்றைய பூசை முறையுள்ள பண்டிதர்.



அதிகார நந்தி
எழுந்தருளும் திருமேனி

இவற்றுள் காமிகம் முதலாவது என்பது முன்னமே சொன்னேம்.

'காமிகா சிவாதுளாந்தம்' என்பது வழக்கு. வாதுளம் இருபத்தெட்டாவது ஆகமம்.

காமிகம் என்பது மந்திரமயமான சதாசிவருக்குத் திருவடிகளாகும். இதன் கிரந்தங்களின் எண் பரார்த்தம். (பரார்த்தம் என்பது ஒரு பேரெண். கோடி கோடி.) கிரந்தம் என்பது ஓர் அளவு; 32 எழுத்துக்கள் கொண்ட ஒரு பாடல் அல்லது சுலோகம். காமிகாகமம் கேட்டவர்கள், பிரணவர் திரிகலர், ஹரர் என்ற மூவர். எல்லா ஆகமங்களுக்கும் உபாகமங்கள் உள்ளன. இவற்றின் மொத்தத் தொகை 207. காமிகாகமத்தின் உபாகமங்கள் மூன்று; அவை வக்தாரம், பைரவோத்தரம், நாரசிம்மம் என்பன. இந் நாரசிம்மம் என்பதே மிருகேந்திராகமம் எனப்படும்.

இவற்றுள் காமிகாகமமானது பூர்வ காமிகம் உத்தரகாமிகம் என்று இரண்டு பாகங்களாக உள்ளது. பூர்வ பாகம் 5166 கிரந்தம்; உத்தரம் 6477; கிடைக்காமற் போன சுலோகங்களாக 357; ஆக 12,000 கிரந்தம் கொண்டது. இதன் முதல்பாகம் விரிவான தமிழ் உரையோடும், உத்தரபாகம் மூலம் மட்டும் சேர்த்தும் கொ. சண்முக சுந்தர முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. காமிகம் என்பதன் கருத்து, விரும்பிய பொருள் என்பதாகும். அஃதாவது ஆன்மாக்களுக்கு விரும்பிய பொருளைத் தந்து பாச நீக்கத்தைத் தருவது என்பது.

பொதுவாக எல்லாக் கோயில்களிலும் அனுஷ்டானத்தில் இருப்பது காமிகாகமமே. வேறு ஆகமங்கள் ஆட்சியிலிருப்பது அருமை. அளவால் காமிகத்தை ஒத்த பெருமையுடையது காரணகமம். ஆனால் ஆகமங்களை உரையோடு வெளியிடத் தொடங்கிய சண்முக சுந்தர முதலியார், காமிகபூர்வ பாகத்தை மட்டும் விரிவாக உரை எழுதி வெளியிட்டார். உரை எழுதி உபகரித்தவர் திருவொற்றியூர் விசுவேசுவர சாஸ்திரிகள். அப்புத்தகம் 1,900இல் அச்சாயிற்று. டபிள் ராயல் அளவில் 1,320 பக்கம் கொண்டது. பின், உத்திர பாகம் மூலமும் சேர்த்து மொத்தம் 1,700 பக்கம். அக்காலத்தில் முப்பத்தைந்து ரூபா விலைக்குக் கொடுத்தார்.

காரணகமத்துக்கு இவ்வாறு விரிந்த தமிழுரை இன்மையால், அதைப் பயின்றவர் அருமை. எனினும், சில ஆலயங்களில் இதுவும் வழிபாட்டில் கொள்ளப்பட்டுள்ளது. ஆகமங்கள் எல்லாம் ஒரே பொருளைக் கூறிய போதிலுங்கூட, இவற்றிற்கிடையில் சொற்ப வேறுபாடுகள் இருப்பது உண்மை. திருவெண்காட்டில் சுவேதாரண்யேசுரருக்கு காமிகாகமமும், அத்தலத்துக்கே சிறப்பாய் உரிய அகோரமூர்த்திக்குக் காரணகமமும், அங்கேயே நடராசப் பெருமானுக்கு மகுடாகமமும் உரியன என்பர். தில்லை நடராசப் பெருமான் பூசை மகுடாகமப்படி நடைபெறுவது; இதை 14-ஆம் நூற்றாண்டில் இரட்டையர்பாடிய தில்லைக் கலம்பகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது போலவே, நடராசாவுக்குச் சிறப்பு அமைந்திருக்கும் பிரசித்தமான பிற தலங்களிலும் பூசை மகுடாகமப்படி நடைபெறுகிறது என்பர். திரு ஈங்கோய்மலையில் பூசை வாதுளாகமப்படி இல்லாது சிற்சில இடங்களில் பிற ஆகம முறைகள் வழங்கிய போதிலும், அதிகம் ஆட்சியிலுள்ளது காமிகாகமம் பூசையே.

சரியை கிரியை யோகம் ஞானம் என்ற சோபானநெறியில் தமிழ்ச்சுவை சித்தாந்த சாத்திரங்கள் அமைத்துக் கூறுகின்றபடி கிரமத்தை ஆகமங்கள் ஞானம் (வித்தியா பாதம்) கிரியை யோகம் சரியை என்ற கிரமத்தில் கூறுகின்றன. இவற்றுள்ளும் கிரியையே மிகவும் விரிந்தது. மற்ற மூன்றும் இதனுள் அடங்கும் என்று ஆசிரியர் கூறுவர். பொதுவாய் ஆகமம் கூறும் பகுதிகளுள், கிரியையும் ஞானமும் மிக்க விரிவு. யோகமும் சரியையும் பார்க்க யோகபாதம் மிகவும் சுருக்கமாயுள்ளது. யோகபாதத்துள் இங்குச் சொல்லப்பட்ட பொருள் அட்டாங்கயோகம் முதலியன; அட்டாங்க யோகம் ஹிந்து மதப் பிரிவுகள் அனைத்துக்கும் பொதுவானது. சைவத்

துக்கே சிறப்பாயுள்ளது பிராசாதயோகம் என்பது. மேதை முதலான கோடச கலை களையும் தரிசித்து மேற்சென்று சிவதரிசனம் செய்வதை இந்த யோகம் பொருளாகக் கொண்டது. இதை ஆகம யோகபாதம் கூறவில்லை. பின் ஆகம சாரமாய் வந்த சித்தாந்த சாராவளி முதலான நூல்களே விளக்குகின்றன.

காமிகத்துள் கிரியாபாதம் மட்டுமே அச்சிட்டு வழங்குகிறது. ஏனைய பாதங்கள் அச்சிடப்படவில்லை. அவை ஏட்டு வடிவத் தில் உள்ளனவா என்பதும் தெரியவில்லை. இப்பாதத்துள் ஏனைய ஞானம் யோகம் சரியை என்ற மூன்றும் அடங்கியிருத்தலால் இதுவே அதிகம் வழங்குவது என்றும் மற்றவை வழங்கவில்லை என்றும் பதிப்பாளர் உத்தரபாக முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். ஏழு பிரதிகள்கிடைத்து அவற்றை ஒப்பு நோக்கி இவர் அச்சிட்டுள்ளார். ஆயினும் பல இடங்களில் பொருள் விளங்காமலும், சுலோகங்களின் சொற்கள் சிதைந்தும் உள்ளன என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். இவ்வாறு உருவம் சிதைந்து கிடைக்காமற் போனவை 357 சுலோகங்கள்.

கிரியா பாதம் :

இனி கிடைக்கும் காமிகாகமத்தை ஆராய லாம். இதன் பூர்வ பாகம் 75 அத்தியாயங் களும் 5166 கிரந்தங்களும் கொண்டது. முதலில் பாயிரப் பகுதி. இதனுள் முதற் பாடல் கணபதி வணக்கம். இரண்டாவது காஞ்சி சதாசிவகுரு என்ற ஆசாரிய வணக்கம் ; இவரைக் குறிப்பிடும்போது இந்தக் குருசதாசிவ புரத்தில் இருந்து வந்த பரமேசுவரனே என்று சொல்கிருர். இவ்விரு பாடல்களும், பிற்காலத்து ஆன்றேர் வாக்காய் இருக்கக்கூடும். அடுத்து, அனுக் கிரமணி. இது முறையே 16, 18-ஆம் சுலோகங்களால் காமிகாகமம் இரண்டு பாகத்திலும் உள்ள அத்தியாயப் பெயர் களைத் தொகுத்துச்சொல்கின்றது. (தமிழ்க் காப்பியங்களில் பதிகம் என்ற பெயரோடு வரும் பகுதியை ஒத்தது) இவற்றின் பிறகு நூல் தொடங்குகிறது.

முதல் பகுதி ஆகம உற்பத்தி ; இரண்டு அத்தியாயங்களில் சொல்லப்பட்டுள்ளது ; இவை எல்லா ஆகமங்களிலும் தொடக்கத் தில் அமைக்கப்பட்டுள்ள தந்திராவதாரப் படலம், மந்திராவதாரப் படலம் என்பன. தந்திர அவதாரம், ஆகமங்களின் உற்பத்தி. இப்பகுதியில் தென்முகக் கடவுளானவர் முனிவர்களுடைய வேண்டுகோளுக்கிணங் கிப், பரசிவத்தின் ஐந்து திருமுகங்களிலிருந் தும் சொல்லப்பட்ட 28 சிவாகமங்களையும் விளக்கமாய் உபதேசித்தார் என்று சொல்லு கிறது. இங்கு ஆகமத்தின் பெயர், அதன் செய்யுள் தொகை, கேட்டோர், அது சிவபெருமானுக்கு எந்த அங்கம் என்பது, அதன் உட்பிரிவான உபாகமங்கள் ஆகியவை சொல்லப்படுகின்றன. பொது வாகப் பிரிதிஷ்டை என்பது மூலாகமத் தால் செய்யப்படவேண்டியது. எந்த ஆக மப்படி கர்ஷணம் முதல் அர்ச்சனை ஈருகத் தொடங்கப்படுகின்றதோ அந்த ஆகமத் தினலேயே சகல கிரியைகளையும் செய்து முடிக்கவேண்டும் என்பது கட்டளை.

காமிகம் தொடங்கி வாதுளாந்தரமான 28 ஆகமங்களும் சதாசிவ மூர்த்திக்குப் பாதாதி கேசமாகத் திருவடியில் தொடங்கித் திரு முகம் திருநெற்றி வரையில் சென்று சில ஆபரணங்களாகவும் அமைந்திருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளன. அப்படியே உபாக மங்களில் சில உபாகமங்கள் சிறப்பாக நாடி யாகவும் புஷ்பமாலையாகவும் சொல்லப்பட் டுள்ளன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் சதாசிவ மூர்த்திக்கு நைவேத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது. சித்தாந்தத்தில் காருட தந்திரம் முதலியன பரபட்சம் என்று சொல்லப்படும்.

சிவப் பிராமணராகிய ஆதிசைவர் மட் டுமே ஆன்மார்த்த பரார்த்தங்களிலும் பரார்த்தமான சகல கிரியைகளிலும் பூரண அதிகாரம் உடையவர்கள். ஏனையோர் ஆன் மார்த்தம் ஒன்றே செய்தற்கு உரியவர். பிறர் யாவராயினும் பரார்த்த பூஜையாகிய உலக உபகாரமான சிவபூஜை செய்தற்கு உரியர் அல்லர் என்பது மிகவும் வற்புத்திச் சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவதாகிய

மந்திராவதாரப்படலம் என்பது மந்திரங்களின் உத்தாரத்தைக் கூறுவது. மந்திரம் என்ற சொல்லின் பொருள் சம்சாரம் என்னும் பெருங்கடலிலிருந்து கரையேற்றிக் காப்பாற்றுவது. இப்படலத்தில் மந்திரங்களின் பிரிவுகள், சக்கரங்கள், பூசனை, பலன் முதலியன சொல்லப்பட்டுள்ளன. சிந்தாமணி மந்திரம், காலாந்தக மந்திரம், மேளா மந்திரம், மாலா மந்திரம் முதலியன இங்குச் சொல்லப்பட்டுள்ளன. பிறர் கேட்காதபடியும் மானதமாகவும், கிழக்கு அல்லது வடக்கு முகமாகவும் இருந்து காலை நேரத்தில் உச்சரித்தல் சிறப்பு.

இரண்டாம் பகுதி நித்தியாங்கம் என்பது. இது ஆறு அத்தியாயங்கள். ஸ்நானம், திருநீறு அணிதல் என்பவை இதன்முதல் அத்தியாயம். அடுத்ததாகிய அர்ச்சனை விதி என்பது மிகவும் நீண்டபடலம். இது ஒன்று மட்டும் 537 சுலோகம் கொண்டது. இங்கு ஆன்மார்த்த பூஜையின், தொடக்கம், மூன்று விக்கின நிவாரணம், பஞ்ச சுத்திகள், நியாசங்கள், மந்திர தியானங்கள், சதாசிவ தியானம் ஆவாகனம், பூஜை, அலங்கார நைவேத்தியங்கள், உபசாரங்கள், ஆவரண பூஜைகள், நித்யோத்சவம், தியானம், சண்டேச பூஜை நிர்மால்யம் என்பன சொல்லப்படுகின்றன. இதன்பின் அர்ச்சனங்க விதி, நைவேத்திய விதி, குண்டலக்ஷணவிதி, அக்கினி காரியவிதி ஆக நான்கு படலங்கள் நித்தியாங்க பூஜையின் அங்கங்களாக உள்ளன.

அடுத்த பகுதி—ஆன்மார்த்த பூசாக்கிரியைகள் பரார்த்த பூசாக்கிரியைகள் ஆகிய இவற்றுக்கு இன்றியமையாத கிரக ஆலய நிர்மாணங்களின் விதிகள் சொல்லப்படுகின்றன. காலம், நிமித்தம், பூமி வாஸ்து முதலான எல்லா விவரங்களும் இங்கு விளக்கமாக வருகின்றன. வாஸ்துசாந்தி வரையில் 26 அத்தியாயங்களில் இப்பகுதி நிறைவேறுகிறது.

பின்னர் சாலாலக்ஷணம் ஆகிய வீட்டின் அமைப்பு தொடங்குகிறது. இதில் பலவித சாலாபேதங்களும் அங்கங்களும் அறுபதாம் அத்தியாயம் வரையில் வளர்ந்து செல்லுகின்றன.

இவற்றின் பின்னர் பலவகையான பிரதிஷ்டா விதிகள், லிங்கப் பிரதிஷ்டை, பிரதிமை, திரிசூலம், தேவதை ஆகிய பிரதிஷ்டைகள் பிறகு விமானம், மண்டபம் பிராகாரம் பரிவார ஸ்தாபனம் ரிஷபஸ்தாபனம் கோபுரஸ்தாபனம் வரையில் சொல்லப்படுகிறது. ஒவ்வொன்றுக்கும் காலம் பூஜை பலி ஆசாரிய தட்சணை முதலான அங்கங்கள் திட்டமாகச் சொல்லப்பட்டுள்ளன.

### உத்தரபாகம் :

காமிகாகம உத்தரபாகமானது 98 அத்தியாயங்களுடையது. இவற்றுள் கூறப்பட்ட பொருளைப் பின்வருமாறு ஆறு பகுதிகளாகப் பாகுபாடு செய்யலாம். முதல் பகுதி பூர்வாங்கம்; அத்தியாயம் 1 முதல் 7 வரை இவற்றுள் சொல்லப்பட்ட பொருள், துவாராச்சனமும் உற்சவங்களும் இங்கு மந்திர பூர்வமாயுள்ள கிரியைகளும் அவற்றின் அளவுகளும் விரிவும் மந்திரங்களும், காலம் தொடங்கி தக்ஷிணைவரையில் விளக்கிச் சொல்லப்பட்டுள்ளன. கிரியைகளின் கிரமம், ஆவரணங்களின் விளக்கம் முதலியன இங்கு விளங்கக் காணலாம். நித்ய பூஜாங்கங்கள், திக்குகளுக்குரிய வாத்ய பேதங்கள், பொது மகோற்சவ விதிகள், இங்கு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. துவஜாரோகணம் தொடங்கிச் சகல உற்சவ முறைகளும் சொல்லிச் சாந்தி ஹோமம் வரையில் இங்குக் காணலாம்.

இரண்டாம் பகுதி மாத விழாக்கள். இங்குக் கார்த்திகைத் தீபம் தொடங்கிப் புரட்டாசி மாதம் வரையில் மாதந்தோறும் வரும் சிறப்பு உற்சவ முறைகள் வருணிக்கப்பட்டுள்ளன. கார்த்திகைத் தீபவிழா, தீப ஆவலி என்ற உற்சவமாகச் சொல்லப்படுகிறது. மற்றவை முறையே ஆருதிரை; மகா புஷ்ப அபிஷேகம்; மகாமாசக்கிருத கம்பள பூசை; சிவராத்திரி; பால்குன மாச கந்த பூசை; சைத்நமாச தனமபூசை; வசந்தோற்சவம்; சாக வைகீத கும்பம்;

ஆனி மாச பல பூசை; ஆடி தேவி உற்சவம்; புரட்டாசி பவித்ரோற்சவம் என்பன.

மூன்றும் பகுதி தீட்சைகள் (அத்தியாயம் 20–33) சமயவிசேஷ தீக்ஷைகள், தீக்ஷைகளுடையவர்களின் சொப்பனப்பலன், நிர்வாண தீக்ஷை, ஆசார்யாபிஷேகம்; பின்னர் கோத்திர நிர்ணயம் என்ற அத்தியாயத்தில் கௌசிகர் முதல் ஆங்கீரசர் வரை ஒன்பது ரிஷிகோத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சதாபிஷேகம், அந்தியேஷ்டி, பித்ருயக்ஞம், சைவ சிரார்த்தம் என்பன பிறபகுதிகள். பிராயச்சித்தம் முதலான சில அத்தியாயங்களும் இங்குச் சேர்ந்துள்ளன.

நான்காம் பகுதி பிரதிஷ்டை. இது 34 முதல் 66 வரை 33 அத்தியாயங்கள். சம்புரோக்ஷணம், சிவலிங்கம் பிரதிஷ்டை என்று தொடங்கி, விநாயகர், அம்பிகை, குகன், சண்டேசர், இருபத்தைந்து மூர்த்தி பேதங்கள் வரையில் பிரதிஷ்டாவிதிகள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. சிவபக்தப் பிரதிஷ்டை என்பதில் ஆடவர் வடிவம் பெண் வடிவம் என்பன தனித்தனி எப்படிப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஐந்தாம் பகுதி. பிரதிஷ்டை வழிபாடு சம்பந்தப்பட்ட அம்சங்கள், இங்குச் சொல்லப்பட்டுள்ளன. கரவைக்ஷணம் என்பது, சமித்து தோரணம் அஷ்டமங்கலம், வாகனம் சிருக்கு சிருவம் முதலியன கூறும். அடுத்த அத்தியாயம், ருத்திர கணிகையரையும் நிருத்தத்தையும் கூறுவது. ஆசாரியர் ஐவர், அவருக்குரிய இடம், அரங்க அமைப்பு அலங்காரம் கிரியை முதலான பகுதிகள், பிற்காலத்தில் சிலப்பதிகாரம் கூறும் நாடகத் தமிழ்ப் பகுதியில் ஐந்து ஆசிரியரைக் கூறியிருப்பது ஒப்பிட்டு அறியத்தகுவது. வியாதி நாகனவிதி என்பது சிறப்புடைய ஒரு பகுதி. ஸ்நபன தீர்த்தம் புரோக்ஷணத்தால் வியாதிகள் விலகும் என்ற கருத்துச் சொல்லப்பட்டுள்ளது. யானை குதிரை பசு முதலியவற்றுக்கு ரோக சாந்தி கூறப்பட்டுள்ளது. எங்குமே நவக்கிரகப் பிரதிஷ்டை சொல்லப்படவில்லை. புஷ்பயாபிஷேகவிதி என்ற 80ஆம் அத்தியாயத்தில் நவவிருக்ஷ விதானம் கூறுமிடத்து, த்வீப்நியாசம், சாகரம், பர்வதம், நாகம், லோகபாலகர், கணுதிபதிகள், ரிஷிகள், வேதம், வசு, ருத்திரர், சூரியர், கந்தருவர், யக்ஷர்சித்தர், நவக்கிரகம், நக்ஷத்திரம், மாத்ருகா, திக்குப்பாலகர், வேத தேவஸ்திரீகள் என்ற இடத்தில்தான் நவக்கிரகம் வைக்கப்பட்டுள்ளது. அடுத்த அத்தியாயம், கிரகயக்ஞத்தைச் சொல்லும் போது, நவக்கிரகப் பூசையைத் தனியே சொல்லுகிறது.

இறுதிப் பகுதி 16 அத்தியாயங்கள், தான விதிகளைக் கூறுகின்றன. முதலில் துலாபாரம் இரணியகர்ப்பதானம் என்பன சொல்கிறது. தஞ்சையில் ஆண்ட பிரசித்திபெற்ற சோழசக்ரவர்த்திகள் பலர் துலாபாரம் இரணிய கர்ப்பம் புகுந்தார்கள் என்று சாசனங்கள் விரிவாகக் கூறுவதும் சில நினைவுகளாம். அவ்வகை கிரியைகளும் தானங்களும் விதி ஆகமத்திலேயே சொல்லப்பட்டது என்பது இங்கு அறியத்தக்கது. இங்குச் சொல்லியுள்ள பிற தானங்கள் திலம், சொர்ணம் பூமி கணேச லஷ்மி வடிவங்கள், பொற்பசு, பொற்குதிரை, சன்னி, யானை, ஆயிரம் பசு முதலியன.

இவ்வாறு உத்தரபாகம் முடிகிறது. ஏடுகளில் முன் பின்னுகப் பல பகுதிகள் மாறியுள்ளன என்று பதிப்பாளர் குறிப்பிட்டிருக்கின்றுர். வியாதி நாசன விதி, நீராஜனம் என்ற பகுதிகளுக்கிடையில் துர்க்கா பூஜா விதிகள் என்பது அச்சிடப்பட்டுள்ளது; இது வேறிடத்தில் இருத்தற்குரியது என்பது தெளிவு.

## முடிவுரை :

காமிகாகமம் என்பது ஒரு மகோததி; பெரும் சமுத்திரம். இந்தச் சமுத்திரத்தின் ஆழமும் அகலமும் காண்பது அரிது. இதன் கரையைக் கண்டவர்கள் இல்லை. அவரவர்கள் ஆங்காங்குச் சிலசில பகுதிகளை மட்டும் பயின்று அவற்றைக் கடைப் பிடித்துத் தங்கள் பூஜாகாரியங்களை நடத்திக் கொள்கிருர்கள். ஆனுல் உண்மையில் இவ்

வாகமம் இவ்வனைத்தையும் தழுவியிருந்த போதிலும், இவற்றைக் கடந்து மிகவும் விரிவாய் இயன்றுள்ளது. பலர் பொதுவாக நினைக்கிறபடி இது சிவாலயம் பிரதிஷ்டை வழிபாடு என்பவற்றைச் சொல்வதோடு மட்டும் நிற்கவில்லை ; தனி மனிதர் வாழ்க்கையில் அமைய வேண்டிய எல்லா ஒழுகலாறுகளையும் விவரித்துக் கூறி ஒவ்வொன்றுக்கும் வரம்பு கோரித் தருகின்றது. சைவ மக்கள் வாழ்க்கையில் இவ்வாகமம் தழுவிக் கொள்ளாத பகுதியே இல்லை. தாயின் வயிற்றில் கருக் கொள்ளத் தொடங்கியதிலிருந்து ஆன்மா சிவானந்தப்பேறு அடைகிற வரையில் உள்ள வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் இது விதியமைத்துத் தருகிறது. எந்தப்பொருளும் இதற்கு விலக்கன்று. உதாரணமாகச் சைவர் குடியிருக்கும் வீட்டில் படுக்கையறையானது தெற்கு நோக்கி இருக்கவேண்டும் என்று ஆகமம் கூறுகிறது. தமிழ்நாட்டில் இது இன்றைக்கும் பொருந்துவதே.

நுட்பமான கருத்துக்கள் மிகப்பல-ஆங்காங்கு காணப்படுகின்றன. உதாரணமாக ருத்ர மூர்த்திக்கு எதிரில் சாந்தமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யவேண்டும் அல்லது குளத்தையாவது அமைக்கவேண்டும் என்பது ஒரு விதி. இல்லாவிடில் கிராம நாசம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இது சாஸ்திரம் மட்டுமல்ல வாழ்க்கையில் அமையக் கூடிய பெரும் தத்துவம். துன்பமும், துக்கமும் மலிந்துள்ள உலகில் இவற்றுக்கு நிவாரணவழி புலப்படவில்லை என்றால், உலகில் ஒழுக்கத்தையும், வழிபாட்டையும் வலியுறுத்திப் பயனில்லை. மனித இயல்பு, எவற்றின் முடிவாகவும் ஆறுதல் தேடுவது ; ஆறுதல் தராதது பயனற்றது. மேலைநாட்டுக் காவியங்களின் போக்குத் துன்ப இயலாக முடிவது. ஆனால் இந்தியப் பண்பாட்டின் சிறப்பு அதுவன்று ; துன்பத்தின் முடிவிலும் சாந்தத்தின் ஒளிக்கிரணம் வீசவேண்டும். தர்மமே ஜெயிக்கும் சத்தியமே வெல்லும் என்பதாகத்தான் நம் நாட்டுக் காவியங்கள் முடியும். சத்தியத்துக்காக அரிச்சந்திரன் துன்பமுற்றாலும், இறுதியில் இறைவன் அருளால் துன்பங்கள் நிவர்த்தியாகி, சத்தியம் வென்று மீண்டும் அவன் நல்ல நிலைமைக்கு வருவதைப் புராணங்கள் கூறுகின்றன. தமிழ்க் காவியமும் இதே கருத்து உடையதே. கண்ணகி மதுரையை எரித்ததோடு கதை முடிந்து போகிறது ; ஆனால் சிலப்பதிகாரக் காவியம் முடியவில்லை. அங்கேயே முடித்து விட்டால் சோகமும் திகிலும் எஞ்சிநிற்கும். வாழ்க்கையில் பெற வேண்டுவது சாந்தி ; ஆதலால் கோவலன் தெய்வமாகித் தேவ விமானத்தில் தேவ உலகம் செல்லுகிறான். கண்ணகியும் பத்தினிக்கடவுள் ஆகிறாள், என்று தனியாக ஆசிரியர் வஞ்சிக்காண்டம் பாடி முடிக்கிறார். இது ஆகமங்கள் காட்டிய வழி. திருக்கடவூரில் மார்க்கண்டேயன் உயிரைக் கவர வந்த யமனைப் பரமேசுவரன் சங்காரம் செய்து வருகிறார். யமனாய் இருந்தாலும், அவனுடைய நாசத்தோடு முடிப்பது தருமமன்று. ஆதலால் அங்குக் கால சம்மார மூர்த்திக்கு எதிரில், அருள் பெற்று உயிர்த்தெழுந்த யமனும் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கிறான். பெரும்பாலான ஆலயங்களின் எதிரில் கீழ்த்திசையில் தீர்த்தம் அமைக்கப் பெற்றிருப்பதும் இவ்வியல்பு பற்றியே. சிவதீர்த்தத்தில் நீராடினால் சகல பாவங்களும் நிவர்த்தியாகும் என்று சாத்திரங்கள் சொல்கின்றன. இங்கு நாம் காட்டவந்தது, நம் நாட்டுக் காவியப் போக்கையும் ஆகமங்கள் அனாதி காலமாக ஒழுங்கு படுத்தியுள்ளன என்பதாகும்.

இன்று சிவசம்பந்தமான எந்தக் காரியத்துக்கும் மூலாதாரமாக விளங்குவது ஆகமம். ஆன்மார்த்த பரார்த்த பூஜைகள் மட்டுமில்லாமல், கோயில் நிர்மாணம், அதன் அங்கங்கள், அவற்றின் அளவு, காலம் முதலிய எல்லாம் இங்குச் சொல்லப்பட்டுள்ளன. இவை மட்டுமல்ல ; மரவேலையாய் இருந்தால் எந்தெந்த வேலைக்கு என்ன மரம் உபயோகிக்கலாம் என்பதும் திட்டமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. இக்காலத்துப் பாணியில் சொல்வதானால், ஓர் எஞ்சினியர் கட்டடத்துக்கு எவ்வாறு படம் அமைப்பாரோ அவ்வாறு அந்த ஆகமத்தில்

அளந்து படம் அமைத்துச் சொல்லப் பட்டுள்ளது. கோட்டுப்படம் ஒன்று இல்லாத குறைதான். பிரதிமைகளைச் சொல்லுமிடங்களில் அப்படியே சிற்பிகளுக்குப் பயன்படக்கூடிய முறையில் முழு விவரங்கள் தரப்பட்டுள்ளன.

ஆகமாசிரியர்கள் இவ்வாறு சாத்திரத்திலும் கட்டடக் கலையிலும் சிற்பக் கலையிலும் வல்லவர்கள் என்பதோடு சோதிடக் கலையிலும் வல்லவராய் இருந்திருக்கிறார்கள். அன்றியும் ஆசாரியர்களை நன்கு மதித்து, தக்கபடி சம்பாவனை செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். நிருத்தம் கீதம் முதலியவற்றையும் விளக்கிச் சொல்வதோடு அவற்றுக்கான ஆசாரியர்களுக்கும் தக்க சம்பாவனை செய்ய வேண்டும் என்றும் சொல்கிறார்கள். அக்காலத்தில் சிவாச்சாரியர் சிவப்பணியே பணியாக வாழ்ந்த காரணத்தால் அவர்களுடைய யோகக்ஷேமங்களை வகித்து வருகின்ற பொறுப்பை அரசுக்கும் கர்த்தாவுக்கும் ஆகமம் விதிக்கிறது.

ஆகமம் செய்தோர் வாழ்க்கையின் எல்லா அறிவியல் துறைகளையும் கரை கண்டவர்கள். இந்தியப் பண்பாட்டுக்குப் பொருத்தமாக இவர்கள் பேருண்மைகளையும் சிறு செய்திகளையும் குறிப்பிட்ட இடங்களிலெல்லாம் தங்கள் பெயரை வெளிப்படுத்திக் கொள்ளாமல் கடவுள் பெயரையேசொன்னார்கள். ஆகமங்கள் சிவ பெருமானுடைய ஐந்து முகங்களிலிருந்தும் வெளிவந்தன. இவற்றைக் கேட்டவர்கள் இன்னார் என்றெல்லாம் தந்திராவதாரப்படலம் சொல்லும் போது, நாம் ஆராய்ச்சியில் புகக்கூடாது. சொல்லிய பொருள் கடவுளே சொல்லியது போன்ற சிறப்புடையது. சாசுவதமானது, மக்கள் வாழ வழிகாட்டுவது. அறம், பொருள், இன்பம் காட்டி, முடிவில் பரமானந்தப் பெரும்பயனாகிய முத்தியையும் காட்டுவது என்றே நாம் கருத வேண்டும். இப்பொருளை யார் சொன்னால் என்ன? வேதங்களை ரிஷிகள் சொன்னார்கள் என்பது வடமொழி மரபு. ரிஷிகள் கண்டார்கள் என்பதே வாக்கு. அதுபோல ஆகமங்களும் இன்ன ரிஷிக்குச் சொல்லப்பட்டது என்றே வரலாறு கூறும்.

காமிகாமத்துள் கிரியாபாதம் ஒன்று மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது. ஏனைய பாதங்கள் அச்சிடப்படவில்லை என்று குறிப்பிட்டோம். இதனுடைய ஞான, யோக, சரியா பாதங்களும் கிடைத்து வெளிவருமானால், தமிழ் மக்களுக்கு இவை எல்லையில்லாத ஒரு பெருஞ் செல்வமாக அமையும். மூலாகமங்களில் சுப்ரபேதம் கிரணகமம் இரண்டுமே நான்கு பாதங்களுடையன. மற்றவற்றில் சில சில பகுதிகள் மட்டுமே வெளியாகியிருக்கின்றன. அப்படியே உபாகமங்களில் மிருகேந்திரம் மட்டுமே நான்கு பாதங்களும் வெளியாகியுள்ளது. பிற ஐந்து ஆகமங்களில் சில பகுதிகள் வெளியாகி இருக்கின்றன. ஏனையவை போன இடம் தெரியவில்லை. இப்போது உள்ள மூலாகமம், உபாகமங்களாவது, கிடைத்த அளவில் நாகர எழுத்தால் விளக்கமான தமிழ் உரையோடு அழகான தொகுதிகளாய் அச்சிட்டு வெளிப்படுத்தினால், அவை தமிழ் மக்களுக்கு இகத்திலும் பரத்திலும் உதவவல்ல வற்றாத ஒரு பொக்கிஷமாக இருக்கும் என்பது உறுதி. சைவமடங்களில் வீண்விரயமாகும் பெரும்பொருள் இத்தகைய சிவ புண்ணியச் செயல்களுக்குப் பயன்பட்டால் அது சைவத்துக்குப் பெரும் சிறப்பு என்பது மட்டுமின்றி, உலக முழுமைக்குமே சைவத்தின் புராதன நூற் செல்வத்தை உணர்த்துவதற்கான பெரும் பணியுமாகும். ஆனால் இவ்வேண்டுகோள், ''செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று பக்தி செய் மனப் பாறைகட்கு ஏறுமோ?'' தவமும் தவமுடையார்க்கே ஆம் அல்லவா?

# சமய பேதங்கள்

# சைவம்

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
ஜூனியர் ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்.

மனிதன் தன்னைப்பற்றியும் தன்னைச் சார்ந்துள்ள பொருள்களைப் பற்றியும், என்று அறியவும், உணரவும் தொடங்கினனே அன்றே அவன்பால் சமய உணர்வும் குடி கொண்டு விட்டது. தன்னுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும், தன்னையும் தன்னைச் சூழ உள்ள பொருள்களையும் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும் அருள் செய்து வருகின்ற ஒரு பொருள் எதுவோ அதுவே இறைவன் என்றும் கடவுள் என்றும் கருதத் தொடங்கினன். காலப் போக்கினல் அப்பொருட்கும் தனக்கும் உள்ள இயைபையும், அதனை அடைதற்குரிய நெறிகளையும், அதனை அடைவதற்குத் தடையாக உள்ளவற்றையும் ஆராயத் தலைப் பட்டான். அவ்வுணர்வே சமய உணர்வாயிற்று.

இந்நெறியில் தொன்மையும், சிறப்பும் வாய்ந்த சமயம் சைவ சமயமாகும். முழுமுதற் கடவுளாகிய சிவ பரம்பொருளைத் தலைவனுகக் கொண்டு அப்பரம்பொருளை வணங்கி உய்யும் நெறியை வகுத்துக் கொடுக்கும் சமயமே சைவ சமயமாகும். சங்க இலக்கியங்களாலும், ஹரப்பா, மொஹஞ்சதாரோ முதலிய இடங்களில் கிடைக்கும் புதை பொருள்களாலும் இதன் பழமை நன்கு அறியப்படும்.

சமயங்கள் எல்லாவற்றையும் நான்கு வகையில் அடக்கிக் கூறுவர் :—

(1) புறப்புறச் சமயம், (2) புறச் சமயம், (3) அகப்புறச் சமயம், (4) அகச் சமயம். இப்பெரும் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் ஆறு உட்பிரிவுகள் உண்டு.

**1. புறப்புறச் சமயம் :** வேத சிவாகமங்களைப் பிரமாண நூல்களாக ஒப்புக் கொள்ளாததைப் புறப்புறச் சமயம் என்பர். உலகாயதம், மாத்தியமிகம், யோக சாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம், என்பன இவ்வகையில் அடங்கும். இவற்றுள் முதலது நாத்திகமாகும். இரண்டு முதல் ஐந்து வரையுள்ளது பௌத்தம் என்றும், ஆருவது சைவம் என்றும் வழங்கப்படும்.

**2. புறச்சமயம் :** வேதங்களில் சிற்சில பகுதிகளையும், சிவாகமங்களையும் பிரமாண நூல்களாகக் கொள்ளாததைப் புறச் சமயம் என்பர். நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வ மீமாம்சம், உத்திர மீமாம்சம் என்பன இவ்வகையில் அடங்கும். உத்திர மீமாம்சத்திற்கு வேதாந்தம் என்ற பெயரும் உண்டு.

மாயாவாதம், கிரீடாப் பிரம வாதம், ஏகான்ம வாதம், பேதா பேதவாதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், சுத்தாத் துவைதம், முதலிய பல பிரிவுகள் இதன்கண் உண்டு.

**3. அகப்புறச் சமயம் :** வேத சிவாகமங்களை மட்டுமின்றிப் பாசுபதம் முதலிய வேறு பலவற்றையும், பிரமாண நூல்களாகக் கொண்டு வேத சிவாகமங்கட்கு மறுதலையான தாழ்ந்த பல ஒழுக்கங்களையும் ஒப்புக் கொள்வதை அகப்புறச் சமயம் என்பர். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாதம் என்பன இவ் வகையில் அடங்கும்.

**4. அகச் சமயம் :** வேத சிவாகமங்களையும், முப்பொருள் உண்மையையும் ஒப்புக் கொண்டு முப்பொருளைச் சொல்லப்படும் வகையில் மட்டும் சிற்சில வேறுபாடுகள் கூறுவதை அகச் சமயம் என்பர். பாடாண வாதம், பேத வாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுவர அவிகாரவாதம்



உச்சிக்காலத்தில் அகிலாண்ட நாயகி காராம் பசுவைப்
பூஜை செய்கிறார்
அன்பர்கள் தரிசிக்கிறார்கள்



அம்மன் கோவிலுக்குச் செல்லும் வழியில் உள்ள
இரண்டடுக்கு மண்டபக்காட்சி

சிவாத்துவைதம் என்பன இவ்வகையில் அடங்கும்.

இவ்விருபத்து நான்கு பிரிவுகளிலும் பல உட்பிரிவுகள் உண்டு. இவற்றிற் கெல்லாம் மேலான நிலையில் உள்ளது சைவ சித்தாந்தம் ஆகும்.

[1] " ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆராவின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தம் "

1. பண்டார மும்மணிக் கோவை.

[1] " திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம்"

[2] " மறை முடிவாம் சைவம் "

[3] " அருட் பெரும் சைவம் "—எனக் குமரகுருபரர் இதன் பெருமையை விளக்கிக் கூறுவர்.

[4] " வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க "

[5] " வேதப்பயனும் சைவம் "—எனப் புகழ்வர் சேக்கிழார். 'இராஜமங்க சமயம்' என்பர் தாயுமானுர்.

**சைவசித்தாந்தத்தின் உண்மைகள் :**

1. **முப்பொருள் உண்மை :** தானே அறியும் பொருள் ஒன்று. அறிவிக்க அறியும் பொருள் ஒன்று. அறிவித்தாலும் அறியாத பொருள் ஒன்று. இவற்றை முறையே பதி, பசு, பாசம் எனக் கூறும் சைவசித்தாந்தம். இம்மூன்றும் தொன்மை யானவை.

[6] பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அனுதி.

[7] " என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ ", [8] " நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் சொல்லில் புதிதன்று தொன்மையே " என வருவன இவ்வுண்மையை விளக்கும்.

2. **ஐந்தொழில்கள் :** இறைவன்—ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழில்களையும் உயிர்கள் உய்வதற்காகவே செய்கிருன்.

[9] " அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம்
அல்லவர் கன்மமெல்லாம்
கழித்திடல் நுகரச்செய்தல் காப்பது
கன்ம வொப்பில்
தெழித்திடல் மலங்களெல்லாம் மறைப்பருட்
செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின்
அருளே எல்லாம்.

[10] " ஆவிப்புலனுக்கு அறிவிப்ப ஐந்தொழிலும் ஏவித்தனி நடத்தும் எங்கோவே " என்பன இவ்வுண்மையை விளக்கும்.

3. **மூவகை வினை :** உயிர்களால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும், பிறந்த உடம்பான் முகந்து நின்றனவும், ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய் நிற்பனவற்றைச் " சஞ்சிதம் " என்பர். பிறந்த உடம்பான் முகந்து நின்றவற்றைப் 'பிராரத்துவம்' அல்லது 'ஏன்ற வினை' என்பர். ஏன்ற வினையை அனுபவிக்கின்றபொழுது பின்னும் செய்து கொள்ளுகின்ற வினையை 'ஆகாமியம்' அல்லது 'ஏறும்வினை' என்பர். திருவருளைத் துணை கொண்டு [11]இந்திரியம் நாமல்ல நம் வழியின் அல்லநாமும் அரன் உடைமை என நினைந்து எல்லா வினைகளையும் ஆற்றின், ஏறும் வினையும் (ஆகாமியம்) முன்கிடந்த வினையும் (சஞ்சிதம்) நீங்கும்.

[12] " ஏன்ற வினை உடலோடேகும் இடையேறும் வினை
தோன்றில் அருளே சுடும் "

என்பது இவ்வுண்மையை விளக்கும்.

**முத்தி நிலை :** உயிர் திருவருளை நினைந்து நினைந்து உருகியதன் வாயிலாகப் பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு முதலிய யாவும் இன்றி இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து பேரின்பம் நுகர்தலே முத்தி நிலையாகும்.

---

1. ஏ பண்டார மும்மணிக்கோவை(ரு)
2. கந்தர்கலி வெண்பா(கoச, க(ரு)
3. பண்டார மும்மணிக்கோவை. (2)
4. திருத்தொண்டர் புராணம்-திருஞானசம்பந்தர்(க)
5. திருத்தொண்டர் புராணம்—சண்டேசுவரர்(க)
6. திருமந்திரம் (க)
7. தாயுமானுர்
8. சிவஞானபோதம்-2-ம்சூத்-(எ)
9. சிவஞான சித்தியார்—சுபக்கம் (ருஎ)
10. கந்தர்கலி வெண்பா (சாசி, சாகி)
11. சிவஞான போதம் (சூத். க–2.)
12. திருவருட் பயன் (கூஅ)

அது பொழுது உயிருக்குத் தோன்றும் இன்பம் [13] "கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியை" ஒத்திருக்கும்.

முத்தி அடைதற்குரிய நெறிகள்: முத்தி அடைவதற்கு இல்லறம், துறவறம் ஆகிய இரு நெறிகளுமே சிறந்தனவாகும். [14] "எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்ச்சங் கரன்தாள் மறவாமையைப்" பொருளாகக் கொள்ள வேண்டும். [15] "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும் அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள் எனும் அறிவும்" கைவரப் பெறுதல் வேண்டும். [16] "எவ் வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி இரங் கும்" அருளுணர்வு வேண்டும். ஞானா சிரியர்களையும், திருக்கோயில்களில் இருக் கும் திருமேனிகளையும் சிவனெனவே கண்டு வழிபடல் வேண்டும். இங்ஙனம் மேற் கொண்டு செய்யும் குருலிங்க சங்கம வழி பாடே உயிர்களை ஈடேற்றி முத்தி நிலைக்கு உரித்தாக்க வல்லதாகும். திருவைந் தெழுத்தை உபதேசமாகப் பெற்று இடை யறாது ஓதுதல் வேண்டும். ஈனமாம் பிறவி தீர யாவரும் ஓத வேண்டுவது இத்திருவைந் தெழுத்தேயாகும்.

[17] "அப்பா இம்முக்திக் கழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள்—ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறில்இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்"

"கற்றுற் மனம் போல் கசிந்து கசிந்தே உருகி
உற்று சான் லிங்கம் உயர்வேடம் பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்."

"அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராண மனைத்தும்
—அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆறுறுக் கப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்"

எனவரும் ஞானப் பாடல்கள் இவ்வுண் மையை விளக்கும்.

"வாழி யவனை வணங்கும் முடிச் சென்னி
வாழி யவன் சீர்பாடும் வாய்"

---

13. சிவஞான சித்தியார்—சுபக்கம் (கூஉக)
14. திருத்தொண்டர் புராணம். (சாக்கியர்–ச)
15. திருத்தொண்டர் புராணம்—திருஞானசம்பந்தர்–(எசு)
16. தாயுமானர்.
17. உண்மை விளக்கம். ரு௫, ரு௨ (ச)

# வீர சைவம்

வித்துவான் வை. இரத்தின சபாபதி, பி. ஓ. எல்., எம். ஏ.,
தத்துவத்துறை விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை :

சிவன் எனும் பெயரைத் தனக்கேயுடைய செம்மேனி எம்மானை முழுமுதற் பொருளாகக் கொண்டு அவனை வழிபட்டு உய்வதற் கேற்ற வழி வகைகளை வரையறுத்துக் கூறும் நெறியைச் சைவம் என்பது மரபு. சிவனே முழுமுதற் கடவுள் என்பதை ஒப்புக் கொண்டாலும் அவனை அறியும் நெறி, அணையும் நெறி, அணைந்த காலத்து நிலை ஆகிய வற்றில் எழுந்த வேறுபாடுகள் காரணமாகச் சைவ சமயத்திலும் பற்பல பிரிவுகள் உளவாயின. அவ்வாறுள்ள பிரிவுகளுள் ஒன்றே வீர சைவம்.

வரலாறு :

சதாசிவப் பரசிவத்தின் சத்யோஜாத முதலான ஐம்முகங்களிலிருந்தும் வெளிப்பட்ட தேவணுத்ரியர், மருளராத்ரியர், பண்டிதராத்ரியர், ஏகோராத்திரியர், விஸ்வராத்ரியர் என்ற ஐவகை ஆசாரியர்களால் கிருதயுகத்தில் தோற்றுவிக்கப் பெற்றதே வீர சைவம் என்பது சுப்ரபோதாகமம் முதலிய நூல்களால் தெரிய வருகிறது. இவர்கள் யுகந்தோறும் அவதாரம் செய்து வீர சைவ சமய உண்மைகளை நிலைநாட்டியும் பரப்பியும் வந்தார்கள் எனவும், இவர்கள் முறையே மைசூர் மாநிலத்துக் கடூர் மாவட்டத்தில் உள்ள ரம்பாபுரி, உஜ்ஜயினி, ஸ்ரீசைலம், பதரி கேதாரம், காசி என்ற ஐந்து இடங்களிலும் வீர சைவப் பீடங்கள் அமைத்தார்கள் எனவும் வீர சைவ மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன. ஆனுல் மேலே குறிப்பிடப் பெற்ற ஊர்களில் இவ்வைந்து ஆசாரியர்களின் பெயரால் அமைந்த திருமடங்கள் இன்றும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. இவ்வைவரின் வழி முறையினர் முறையே பிருங்கி, வீர, விருஷப, ஸ்கந்த, ஹந்தி கோத்திரத்தினர் எனக் கூறி, அவ்வவற்றிற் கேற்ற நெறிமுறைகளை மேற்கொண்டு ஒழுகி வருகின்றுர்கள்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் வரலாற்றுச் சிறப்புடைய அருளாளராகவும், மைசூர் மாநிலத்தை அப்போது ஆட்சி புரிந்த விச்சலமன்னனின் முதல் மந்திரியாகவும் வாழ்ந்த பசவேசர் என்பார் ‘ அல்லமாப் பிரபு தேவர் ’ என்பவரை ஞான குருவாகக் கொண்டு சமய உண்மைகளை நிலைநாட்டியும் பரப்பியும் தொண்டு செய்தார். தக்க வரலாற்றுச் சான்றுகள் இல்லாமையால் பஞ்சாசாரியர்களே வீர சைவ சமயத்தைத் தோற்றுவித்தவராகக் கொண்டனர். இவ் விருவகைக் கருத்துக்களால் வீர சைவத்தில் பஞ்சாசாரியம், பசவாசாரம் என இரு பிரிவுகள் தோன்றலாயின.

அல்லமாப் பிரபு தேவர், பசவேசர் ஆகியோர் வரலாறுகளைக் கூறும் பிரபுலிங்க லீலை, வசவபுராணம் ஆகிய தமிழ் நூல்களை இன்றும் காணலாம். நூல்களேயன்றிக் கல்வெட்டுச் சான்றுகளாலும், பசவேசர் அல்லமாப் பிரபு தேவரின் துணைகொண்டு, தத்துவ வல்லுநர்களைப் பல நாடுகளிலிருந்தும் அழைப்பித்து வீர சைவ தத்துவ உண்மைகளை வரையறை செய்தார் என்பதை உறுதியாகக் கொள்ளலாம். பசவேசர் காலத்துக்கு முன்னுள்ள வீர சைவ சமய உண்மைகளைப் பசவேசர் வரையறை செய்து நிலைநாட்டினுர் என்று கொள்ளுவது வரலாற்றுக்கு ஒத்ததே. பிரபுலிங்கலீலையைத் தமிழில் அருளிய கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் வீர சைவ சமய உண்மைகளை விளக்கும் சித்தாந்த சிகாமணி என்ற நூலைத் தமிழில் மொழி

பெயர்ப்பு நூலாக அமைத்துத் தந்துள் ளார்கள்.

மைசூர் மாநிலத்தில் தோன்றி, பசவர் காலத்திற்குப் பின்பே வீரசைவம் தெலுங்கு, தமிழ் மாநிலங்களில் பரவியது என்று கூறு வோர் உள்ளனர். பசவேசர் வீர சைவத் தத்துவ உறுதிப்பாடு செய்வதற்குப் பல் வேறு மாநிலங்களிலிருந்தும் தத்துவ வல்லு நர்களைத் தருவித்து மாநாடு நடத்தினர் என்பதிலிருந்தே பசவர் காலத்திற்கு முன்னமேயே பல்வேறு மாநிலங்களிலும் வீர சைவ சமயம் வாழ்ந்திருந்தது என்பது உண்மை. கி. பி. 12ஆம் நூற்றாண்டிலேயே கும்பகோணத்தில் இன்றுள்ள சாரங்க தேவர் திருமடம் 'பெரிய மடம்' என்று குறிப்பிடும் அளவுக்குச் சீரும் சிறப்பும் பெற்ற மடமாக இருந்து வந்துள்ளது. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக் கூத்தர் தாம் பாடிய தக்கயாகப் பரணியில்,

'குடந்தையம் பதிதனில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மாகேஸ்வரர் வாழியே!'

என்று கூறுவது இவ்வுண்மையை விளக்கும். முருகனுக்கே திருப்புகழ் பாடும் அருணகிரி நாதர் இப் பெரிய மடத்தைப் பற்றி ஒரு திருப்புகழ் பாடியிருக்கின்றார். அங்கே உள்ள ஞானசாரியரிடம் அருணகிரிநாதர் உபதேசம் பெற்ற குறிப்புக் காணப்படு கிறது.

திருமூலர் காலத்திலேயே தமிழகத்தில் வீர சைவம் விளக்கமுற்றிருந்தது என்பதைக் காலஞ் சென்ற டாக்டர் மா. இராச மாணிக்கனார் தெளிவுறுத்தியுள்ளார். திரு மூலர் பிரிவுபடுத்திக் கூறும் நால்வகைச் சைவத்தில் கடுஞ்சுத்த சைவம் வீர சைவ மாக இருந்திருக்கவேண்டும். கி. பி. 12ஆம் நூற்றாண்டில் பெரிய மடமாக விளங்கிய கும்பகோணம் சாரங்கதேவர் திருமடத்தின் கிளை மடங்களாகப் பல வீர சைவ மடங்கள் தமிழகத்தில் விளங்கியிருந்தன. வீர சைவத் திற்குத் தாயகம் தமிழகமே என்பதைத் தொல்காப்பியம் போன்ற நூல்களைக் கொண்டு நிறுவமுடியும். ஆயினும் அது பல்கி விரியும். கும்பகோணம் பெரிய மடமேயன்றி, மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் திருமடம், சிதம்பரம் அம்பலத்தாடிகள் திருமடம், மௌன சுவாமிகள் திருமடம், கோவை பேரூர், சாந்தலிங்க சுவாமிகள் திருமடம், திருப் போரூர் சிதம்பர சுவாமிகள் திருமடம், விருத்தாசலம் குமாரதேவர் திருமடம் முதலியவை சிறப்பு மிக்க வீரசைவத் திரு மடங்களாக இன்றும் விளங்கி வருகின்றன.

**வீர சைவம்—பெயர்க் காரணம் :**

புலால் உண்ணாதவர்கள் சைவர்கள் என்ற கருத்தே பரவி வரும் இக்காலத்தில் சமரசம் என்ற போர்வையில் சமய உண்மைகள் பரவவேண்டும் என எண்ணும் இக் காலத் தில் 'வீர சைவம்' என்ற சொல்லே கேட் பவர்களுக்கு ஒரு வெறுப்பைத் தருகிறது. தத்துவ அமைப்புக்கிணங்க, வீர சைவத் துக்குச் சக்தி விசிஷ்டாத்வைதம், விசே- ஷாத்வைதம் போன்ற பல பெயர்கள் இருக்கு மேனும் 'வீரம்' என்ற அடைமொழியைச் சைவம் என்ற சொல்லோடு இணைத்து வழங்குவதே பெரும்பான்மை. இலிங்கத் தைக் கழுத்தில் தரித்திருப்பதால் வீர சைவர் களுக்கு 'இலிங்காயதர்கள்' என்ற பெயரும் உண்டு. தமிழகத்திற் சில இடங்களிற் பண்டாரங்கள் என்றும், மலையாளப் பகுதி களில் 'தேவர்' என்றும் வீர சைவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். 'ஐயர்' என்ற சொல்லைத் தம் பெயரோடு இணைத்துக் கொள்வது வீர சைவர்களுக்கு உண்டு. சைவத்தோடு வீரம் இணைவானேன்?

1. உலகொடுபட்ட வீரம், உலகிறந்த வீரம் என வீரம் இருவகை. போர் முதலிய வற்றிற் காட்டும் வீரம் உலகொடுபட்ட வீரம். பரம்பொருள் ஒன்று உண்டு என்று கொண்டு அப்பரம்பொருளைத் தவிர வேறு எதற்கும் ஆளாகாத வீரம் உலகிறந்த வீரம். இது ஒருவகைக் கற்புநெறி. கணவனைத் தவிர மற்றெவரையும் ஏறெடுத்துப் பாராத மனத்தாண்மையே வீரம். உலகனைத்தும் தோன்றுவதற்கும் தோன்றியவாறே ஒடுங்கு வதற்கும் மூலமாக உள்ள இலிங்கமெனும்

பரம்பொருளைத் தவிர அவ்விலிங்கத்தின் பேதங்களாக வரும் சோமாஸ்கந்தர், அர்த்த நாரீஸ்வரர் போன்ற மூர்த்தங்களைக் கூட வணங்காத கற்புத்தன்மை. குரு, இலிங்க, சங்கமத்தைத் தவிர வேறு யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத வீரம். முருக வணக்கம் செய்யும் வீர சைவர்கள் முருகனைச் சங்கமர்களில் ஒருவராகக் கொண்டே வழிபடுவர். இத்தகைய வீரத்தை மேற்கொண்டதால் 'வீர சைவம்' எனப் பெற்றது.

2. இறைவழிபாட்டில் வணிகமுறையை எதிர்த்த வீரம் உடையவராதலின் வீரசைவர் எனப்பட்டனர் என்பது இரண்டாவது கருத்து. பயன் விரும்பிச் செய்கிற எத்தகைய வழிபாட்டையும் வீரசைவர் ஏற்பதில்லை. கூடும் அன்பிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினராய் விளங்கும் அவர் உடலில் வந்துற்ற நோய் நீக்கத்துக்காகவோ, வறுமை முதலியன போகவேண்டும் என்பதற்காகவோ திருக்குளத்தில் மூழ்குதல், சிவனுக்கு அபிஷேகம் செய்தல் போன்ற வாழிபாடுகளை அவர்கள் செய்வதில்லை. 'பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன், நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா' என்பது போன்ற வாக்கியத்தை அறவே வெறுக்கும் வீரநெறியமைந்தவர்கள். இறைவழிபாடு என்பது செய்நன்றிக் கடன் என்று கொள்ளுபவர்கள்.

3. மூன்றாவதாக வேறு ஒரு காரணம் காட்டப் பெறுகிறது. சதாசிவத்தில் கிழக்கு நோக்கிய ஈசானமுகம் தம்மை வழிபடுபவர்களுக்கு இவ்வுலகப் பயன்களைத் தரவல்லது. வீரசைவர்கள் ஈசானமுக வழிபாட்டை மறுத்தார்கள். இலிங்கத்தோடு ஐக்கியமாகும் ஞானம் ஒன்றையே பொருளாகக் கொண்டு, மேற்கு நோக்கிய சத்யோஜாத நாதமுக வழிபாட்டையே மேற்கொள்வர். இலிங்கத்தோடு ஐக்யமாகும் ஞானம் ஒன்றைத் தவிர வேறு எல்லாவற்றையும் வெறுத்த வீராதலின் வீரசைவர் எனப்பட்டனர். திருவானைக்கா, மயிலைக்காபாலி, புள்ளிருக்கு வேளூர் போன்ற திருத்தலங்களில் அமைந்த இலிங்கங்கள் வீரசைவர்கள் வழிபாட்டுக்குரியவை என்பது பொதுக் கருத்து.

மேலே குறிப்பிடப் பெற்ற மூன்றனுள் சமயநெறியில் வணிகமுறையை வெறுத்து ஒதுக்கிய வழிபாட்டு நெறியானது இறந்த வீரநெறியே. இறைவனுக்குத் தேங்காய் உடைத்து நிவேதனம் செய்தே எல்லாவற்றையும் பெற்றுவிடலாம் என்ற வணிக முறையானது சமயவளர்ச்சிக்குத் தடையாகும் என நினைத்து எதிர்த்தவர்கள் வீரசைவர்கள் என்பதை எண்ணும்போது இறைவழிபாட்டில் அவர்களுக்கு இருந்த வீரவுணர்ச்சியை யாரும் போற்றாமலிருக்க முடியாது. சோமவார விரதம் போன்ற விரதங்களும் பயன் கருதியவைகளே யாதலின் அவைகளையும் வீரசைவர்கள் ஏற்பது இல்லை.

### வீரசைவத் தத்துவ அமைப்பு :

வீரசைவம் ஆகமச் சைவமே. கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவநாயனார் சைவசித்தாந்த தத்துவங்களை வரையறை செய்தருளியமை போன்றே வீரசைவ தத்துவ வரையறைகளும் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் பசவேசரால் மைசூர் நாட்டில் செய்யப் பெற்றது. தமிழகத்து வீரசைவ நெறிக்கும் மைசூர் வீரசைவ நெறிக்கும் சிற்சில வேறு பாடுகள் உள்ள போதிலும் சில அடிப்படை உண்மைகளை மட்டும் இங்கே காணலாம்.

'அறுவகைநெறி' என வீரசைவம் தன் தத்துவத்தை வரையறை செய்கிறது. ஷட்ஸ்தலம், ஷடுத்தலம் என்ற வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன.

நெருப்பிற் சூடுபோலப் பிரிப்பறநின்ற சக்தியோடு கூடிய சிவமே பரம்பொருள். இப்பரம்பொருளை நிரஞ்சன சூனிய நிஷ்கள லிங்கம் என வரையறை செய்கிறது வீர சைவம். எல்லாப் பிரபஞ்சங்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாக இருப்பதால் அதனைப் பரசிவத்தலம் என்று கூறும். தலம் - இடம். 'சொல்லும் இடம் அன்று சொல்லப்புகும் இடம்' என்ற

திருவுந்தியார்த் தொடரையும் இங்கே இணைத்துக் காணலாம்.

ஒன்றாய் நின்ற இப்பரசிவத்தலம் தன்னொடு பிரிப்பற நின்ற சக்தியின் ஆற்றலால் இரண்டாகப் பிரிவு கொள்கிறது. இரண்டாகப் பிரிந்து நின்ற பரசிவத் தலத்தின் ஒரு கூறு இலிங்கம் என்றும், மற்றைக்கூறு அங்கம் என்றும் பெயர் பெறுகிறது. இலிங்கம் இறை; அங்கமே உயிர். இலிங்கமாம் பிரிப்பற நின்ற சக்தி என்பதே பெயர். அங்கமாம் பிரிப்பில் பிரிப்பற நின்ற சக்திக்குப் பக்தி என்பது பெயர். இலிங்க சக்தி உலகத்தோற்ற ஒழுக்க முறைகளுக்குக் காரணமாக இருந்து இலிங்கத்தை அங்கத்தோடு (இறையை உயிரோடு) இணைக்கப் பாடுபடுகிறது. அங்கத்தில் அமைந்த பக்தி சக்தியும் அங்கத்தை இலிங்கத்தோடு இணைக்கப் பாடுபடுகிறது. இலிங்க சக்தி இறங்குமுக சக்தியாகவும், அங்கசக்தியாக பக்தி ஏறுமுக சக்தியாகவும் தொழிற்படுகின்றன.

இலிங்கமும் இலிங்க சக்தியும் ஆறுவகையாகப் பிரிந்து நிற்கின்றன. ஆறுவகையாகப் பிரிந்து நின்ற இலிங்கத்தோடு அங்கமும் ஆறுவகைப் படிநெறிகளில் உயர்ந்து ஐக்யம் கொள்ளுகின்றது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? என்பதுதான் ஐக்யநிலை. அதற்கும் மேல் உள்ள அனுபவ நிலையம் ஒன்றுண்டு.

இறைவன் வேறு, உயிர்கள் வேறு எனக் கொள்ளும் சைவ சித்தாந்தத்தோடு மாறுபடும் தன்மையுடைய வீரசைவம் பிரமமும் ஆன்மாவும் ஒன்றெனக் கொள்ளும் ஏகான்ம வாதத்தோடும் மாறுபடுகிறது. பேதம், பேதம், பேதாபேதம் என்ற மூவகை நிலைகளில் சைவசித்தாந்தத்தைப் போன்றே பேதாபேதத்தை மேற் கொள்ளும் வீரசைவம் அப்பேதாபேத அனுபவத்தை வேறு வகையாக விளக்கம் செய்கிறது. அங்கமும் இலிங்கமும் இணைந்து நின்ற நிலை 'அங்க இலிங்க ஐக்யம்' அதற்கு மேல் நிலையில் உயிர்கள் பெறும் அனுபவநிலையை 'இலிங்காங்க சாமரஸ்யம்' என்று வீரசைவம் விளங்கக் கூறுகிறது.

உயிர்கள் பல என்பதை வீரசைவம் ஒப்புகிறது. சார்ந்துள்ள மலத்தின் அடிப்படையில் விஞ்ஞானகலர், பிரளயகலர், சகலர் என உயிர்களை மூவகைப் படுத்துகிறது சைவ சித்தாந்தம். ஆனால் பக்குவ முதிர்ச்சிக்கேற்ப உயிர்கள் உயிர், ஆன்மா, அங்கம் என்ற மூவகையாக நிற்கின்றன என்று வீரசைவம் கூறுகிறது. இம்மூவகை நிலைகளுக்காக வீரசைவம் மூவகையான உலகப் படைப்பு முறையைத் தடுக்க முறைப்படி அமைத்துக் காட்டுகிறது.

### அடையும் நெறி - சாதனம் :

வீரசைவத் தத்துவ அமைப்பை உணர்வதால் வரும் ஞாலம் 'ஷட்ஸ்தலஞானம்' எனப்பெறும். ஷட்ஸ்தலத் தத்துவ அடிப்படையில் சாதனம் - அடையும் நெறி வகுக்கப் பெறுகிறது. அடையும் நெறி இரு வகைப்படும். சமயக்காப்பு நெறி, சமுதாயக் காப்பு நெறி என அவ்விரு நெறிகளையுங் கொள்ளலாம். அன்றி, தனிமனிதன் தன்னைக் காக்கும் அகநெறி என்றும் அவனே சமுதாயத்தோடு இணைத்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் புறநெறி என்றும் அவ்விருவகை நெறிகளையும் அமைத்துக் கொள்ளலாம். அவ்விருவகை நெறிகளையும் முறையே 'அட்டாவரணம் பஞ்சாசாரம் என வீரசைவம் கூறும்.

### (அ) அட்டாவரணம் :

அட்டம் - எட்டு; ஆவரணம் - கோட்டை. அரசனுக்குத் தீமை நேராத வண்ணம் காக்கும் கோட்டைகளைப்போல உயிர்களைக் கோட்டைகளாக இருந்து காக்கும் எட்டினை வீரசைவம் உயிர்களுக்குரிய அகக் காவலாகக் கூறுகிறது. அவை குரு, இலிங்கம், சங்கமம், விபூதி, அக்கமணி, மந்திரம், பாதோதகம், பிரசாதம் என்பன. இவ்வெட்டுக் கோட்டைகளையும் பழுதுறாமற் காத்து, அவற்றோடு இணைந்து வாழ்ந்தால் தான் ஷட்ஸ்தல ஞானம் பெறும் உரிமையும் தகுதியும் அவனுக்கு உண்டாகும். இங்கே கூறப்பெறும் எட்டும் சைவசமயத்தின் ஏனைப் பிரிவுகளுக்கும் உடன்பாடேயாயி

னும் வீரசைவம் சிற்சில மாறுபாடுகளோடு விளக்கங் கூறுகிறது.

1. குரு : அறியாமையை அழிக்கும் ஆற்றல் உள்ளவனே குரு. இறைவனே குருவாக வந்து உயிர்களை ஈடேற்றுவான் என்பது வீரசைவத்துக்கும் சைவசித்தாந்தத்துக்கும் ஒத்த கொள்கையே. தீட்சாகுரு, இட்சாகுரு, ஞானகுரு என மூன்ருகப் பிரிந்து நின்று உயிர்களை ஞானநெறியில்—ஷட்ஸ்தலப் பிரமஞான நெறியில் ஈடுபடுத்தும் குருவை ' ஞானத்தாய் ' என்று வீரசைவம் இயம்புகிறது. தீட்சை முறையிலும் வீரசைவம் ஏனைச் சைவசமயப் பிரிவுகளோடு வேறுபடுகின்றது.

2. இலிங்கம் : இலிங்க வழிபாடு வீரசைவம் கொண்ட சிறப்பு நெறி. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரப் புதைபொருளாராய்ச்சியால் வெளிப்படும் மிக முற்பட்ட கால நாகரிகம் முதலாக, புராணம் மற்றும் கோயிலமைப்பு ஈருக உள்ள தொன்மைச் சமய வழிபாட்டு முறையை நோக்குவோமாயின் இலிங்க வழிபாடே சிறந்திருந்தமை தெளியலாம். இவ்வாராய்ச்சியை விரிவஞ்சி விடுக்க வேண்டியதாகிறது. உலகம் என்பது நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பெரும் பருப்பொருள்களின் கூட்டமைப்பே. இவற்ருேடு உயிரும் இணைந்தால்தான் உலகம். இவ்வறுவகைப் பொருளிலும் ஒளிவடிவாய் எழுந்தருளியிருக்கும் இறையம்சமே இலிங்கம். தண்ணீரில் ஒளிவடிவாய் எழுந்தருளியிருக்கும் இறையம்சத்தை உணர்த்துவதே திருவானைக்கா. இங்கே உள்ள இலிங்கத்தை அப்புலிங்கம் என்பர். இவ்வாறே மக்களுடம்பிலும் ஆறு இடங்களில் இலிங்கம் - ஒளிவடிவாய் இறையம்சம் அமைந்துள்ளது. உயிரில் அதன் இயல்பாகிய சீவகலையும், இறையம்சம் எனப்பெறும் சிவகலையும் இணைந்துள்ளன. குருவானவர் தன் சீடனுடைய உயிரில் விளங்கும் சீவகலைக்கும் சிவகலைக்கும் உள்ள இணைப்பை எடுத்துக் காட்டி, அவற்றைத் தம் சக்தியால் வெளிப்பட்டு வருமாறு செய்து, அச்சீவசிவகலைகளை, அச்சீடனின் உடம்பில் ஆறு இடங்களில் விளங்கும் இலிங்கங்களோடு ஒளிவடிவாய் இறையம்சங்களோடு முறையாகப் பொருந்தச் செய்து, பின் அச் சீவசிவகலைகளை இஷ்டலிங்கமாக அமைத்து அச்சீடன் கரங்களில் கொடுக்கிருர். குருவால் அளிக்கப்பெற்று, நாளும் பூசனைக்குரியதாய், மார்பில் தரித்துக் கொள்ளப் பெறுவதாய் அமைந்த அந்த இலிங்கம் வேருென்று மன்று, ஏற்றுக் கொண்ட சீடனுடைய உயிர்க்கலையும் அதனேடு இணைந்து நின்ற சிவகலையுமே. இஷ்டி - பார்க்கப் பெறுவது. உயிரையுங் காணுது, உயிரின் உள்ளே அமைந்திருக்கும் சீவசிவகலைகளின் இணைப்பையும் அறியாது விளங்கும் சீடனுக்கு அவனுடைய உயிரிற் கலந்துள்ள சீவ சிவகலைகளையே எடுத்துக் கொண்டு வந்து கையிலளித்து அவனுல் பார்க்கப்படுவதாகக் குருவானவர் அமைத்துக் கொடுக்க, அவனுல் பார்க்கப் பெறும் இலிங்கமாதலின் இஷ்டலிங்கம் எனப் பெயர் பெற்றது. அதுவே இஷ்டலிங்கம் ; இனி, இஷ்டலிங்கம் என்பது சீடன் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அறிவு வரப்பெருத காலத்திலேயே இறையானது உயிர்களின்மேற் கருணை கொண்டு வந்து அமர்ந்த இலிங்கம் என்ற பொருளையும் தரும். தானே இஷ்டப்பட்டு - விரும்பி வந்து கையகத்தமர்ந்த இலிங்கம் இஷ்டலிங்கம்.

> " தானே உவந்து என் கரதலத்து மேவா அமர்ந்த மாமணி "

என விளக்கிக் காட்டினுர்கள் சிவப்பிரகாச சுவாமிகள். இங்கே தான் வீரசைவம் சைவசித்தாந்தம் முதலியவற்ருேடு பெரிதும் மாறுபடுகின்றது. பரம்பொருளின் அருவுருவ வழிபாட்டுக்கு உரிய மூர்த்தமான இலிங்கத்தைக் கொள்வது சைவசித்தாந்தம். வீரசைவம் உருவவழிபாட்டை ஒத்துக் கொள்வதில்லை. வீரசைவன் தன் உயிரில் அமைந்துள்ள சிவசீவகலைகளையே பார்க்கிருன். கோயில்களில் உள்ள மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மருந்து அமைக்கப்பெறுவது போல இஷ்டலிங்கத்திற்கும் உண்டு. பக்தி என்னும் அஞ்சனமே—மருந்தே அஷ்டபந்தனம். பக்தியால் சிவசீவகலைகளின்

இணைப்பு அமைந்திருக்கிறது என்பதை உணர்த்துவதே இஷ்டலிங்கம். நாள் தோறும் வீரசைவன் இஷ்டலிங்கத்தின் சத்யோஜாத முகத்தில், அகங்காரம் ஆசை முதலியவைகளை அபிஷேகப் பொருளாக ஆக்கி அபிஷேகம் செய்து, பக்தி என்னும் கண்கொண்டு இஷ்டலிங்கத்தையே பார்த்துப் பாவனை செய்வான். கர்மாக்களைக் குறைவறச் செய்தால் வீடுபேறு சித்திக்கும் என்று கூறும் சமயங்களும் உண்டு; ஞானமே மோக்ஷ சாதனம் எனக் கூறும் சமயங்களும் உண்டு. ஞானமும் மோக்ஷ கர்மமும் ஆகிய இரண்டுமே தேவை எனக் கொள்வனவும் உள. ஆனுல் ஞானம், கர்மம், பாவனை என்ற மூன்றன் இணைப்பினுலேயே வீடுபேறு எய்தப் பெறும் என்று வலியுறுத்துவது வீரசைவம்.

கர்ப்ப லிங்கதாரணம், அங்கலிங்கதாரணம் என இலிங்கந்தரிக்கும் முறை இரண்டு. குழந்தையானது தாயின் வயிற்றில் இருக்கும் போதே அக்குழந்தைக்கெனத் தாயின் கழுத்தில் ஒரு இலிங்கத்தைத் தரிப்பது கர்ப்பலிங்கதாரணம். குழந்தை பிறந்தவுடனேயே தாயின் கழுத்தில் உள்ள இலிங்கத்தை எடுத்துத் தரித்துவிடுவார்கள். குழந்தை வளர்ந்து சில ஆண்டுகள் கழிந்தபின் தீட்சை முறைப்படி இலிங்கதாரணம் செய்வது அங்கலிங்கதாரணம். இஷ்டலிங்கம் தவறுதல் கூடாது. பின்னப்பட்ட காலத்து வேறு இலிங்கத்தைக் கொள்ளலும் கூடாது. ஏனெனின் சீடனுடைய உயிரே அதுவாக இருத்தலின்.

சைவசித்தாந்தத்தில் சமய தீட்சை முதலிய தீட்சைமுறைகளும்சிவபூசையும் பெண்களுக்கு உரியனவாகக் கூறப்பெறவில்லை. வீரசைவத்தில் பெண்களுக்கும் இலிங்கதாரணம் உண்டு. வீரசைவம் தத்துவமுறையிலும் சமயநெறியிலும் ஆடவர்களுக்கு வழங்கிய அத்துணை உரிமைகளையும் பெண்மைக்கும் வழங்கியிருக்கிறது.

3. **சங்கமம் :** சங்கமம் – கலப்பு. உயிரில் சிவம் வந்து கலந்த தன்மையை உலகினர்க்கு உணர்த்துபவர்களே சங்கமர்கள். இவர்களைச் சீவன் முத்தர்கள் எனலாம். பல்வகை அற்புதங்களைச் செய்து காட்டி உயிரில் இறைவன் கலந்து விளங்குவதைக் காட்சியளவையால் விளக்கிக் கொண்டிருப்பவர்களே இவர்கள்.

வீரசைவ முறைப்படி ஒரு சீடன் குரு, இலிங்க, சங்கமம் ஆகிய மூன்றையும் ஒரு பரசிவத் தலத்தின் மூன்று நிலைகள் எனக் கொண்டு போற்றுதல் வேண்டும். குரு, இலிங்க, சங்கமங்களின் கூட்டுறவால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல ஒழிப்பை முறையுறச் செய்யவேண்டும்.

4. திருநீறு.
5. அக்கமணி.
6. மந்திரம் – திருவைந்தெழுத்து.

இம்மூன்றும் சைவமாம் சமயம் சார்ந்தோர் அனைவர்க்கும் பொது. ஆனுல் வீரசைவம் தனி விளக்கம் காண்கிறது. பூதவுடம்பை ஞானவுடம்பாக மாற்றி ஞானவுடம்பை அருளுடம்பாக மாற்றும் பணியை முறையே இம்மூன்றும் செய்கின்றன எனக் கொள்ளுவதே வீரசைவம். பிற்காலத்தே சாகாக்கலை எனச் சுட்டி, புன்புலால் யாக்கையைப் பொன்னென மின்னும் ஒளியுடம்பாக-அழியாவுடம்பாக மாற்றிக் காட்டிய இராமலிங்கப் பெருந்தகைக்கு மூலமாக நின்றது வீரசைவ நெறியே. திருநீற்றை வெறும் சமயச் சின்னம் எனக் கருதாது பூத அணுக்களை ஒளியணுக்களாக மாற்றுவதற்குரிய சாதனமே திருநீறு எனக் கண்டு, அதற்கு விஞ்ஞான வழியில் விளக்கம் கண்டது வீரசைவம். அதனுலேயே,

"சாதனத்துள் எல்லாம் முந்து திருநீறு"

எனக் கூறினுர் சிவப்பிரகாச அடிகளார்.

திருவைந்தெழுத்து ஓதுதலிலும் நம, சிவ, ஆய என மூன்றுகப் பிரித்துத் தத்வமசிப் பொருளை விளக்கியது வீரசைவம்.

7. **பாதோதகம் :** பாத உதகம் – திருவடி நன்னீர். குரு, சங்கமம் ஆகியோர்களின் திருவடிகளுக்கு அபிஷேகம் செய்த நீரையும் பிரசாதமாகக் கொள்ளுதல். இது பத்து வகைப்படும். இந்த நன்னீரைக் கொண்டே சமையல் முதலியன செய்ய வேண்டும் என்பதும் விதி.

8. பிரசாதம்: குரு, இலிங்க, சங்கமங்களுக்கு நிவேதனம் செய்த பொருள்களைப் பிரசாதமாகக் கொள்ளவேண்டும். வினைப் பயனை எவ்வாறு நுகரவேண்டும் என்பதற்குக் கீதை முதலாகப் பல நூல்கள் விளக்கங் கூறின. அவைகள் வெளியிட்ட கருத்துக்கள் பலவற்றுக்கும் மாருக, 'பிரசாதம்' என்னும் கொள்கையின் மூலம் விளக்கங் கூறியது வீரசைவம். மனோ தத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நிறுவப் பெற்றதே பிரசாதக் கொள்கை.

(ஆ) பஞ்சாசாரம் - ஐவகை ஒழுக்கம்.

இருவகைப்பட்ட சாதனங்களுள் அட்டாவரணம் முற்கூறப்பெற்றது. எஞ்சியது பஞ்சாசாரம். வீரசைவன் சமுதாயத்தோடு தன்னை இணைத்துத் தன்னையும் சமுதாயத்தையும் இணைத்துக் காக்க வகுக்கப்பெறும் நெறியே பஞ்சாசாரம். பஞ்சாசாரத்தைக் கடைப்பிடிக்காத எந்த ஒரு வீரசைவனும் அட்டாவரண நெறியிலோ, ஷட்ஸ்தல ஞானத்திலோ வல்லவன் ஆக முடியாது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, என்ற அடிப்படையில் வகுக்கப் பெற்ற நெறியே பஞ்சாசாரம்.

1. இலிங்காசாரம்: இஷ்டலிங்கத்தைத் தவிர வேறு எதையும் உயர்வெனக் கருதாதிருத்தலோடு, இஷ்டலிங்கத்திற்கு நிவேதனம் செய்யாத எந்த ஒன்றையும் ஏற்றுக் கொள்ளாதிருத்தல். உலகியலில் கணவனும் மனைவியும் இணைந்தாற்றும் இல்லற நெறியில் மனைவிக்குச் சில உரிமைகள் உண்டு. இலிங்கத்தைப் பதியெனக் கொண்ட வீரசைவன் தன்னை ஒரு மனைவியென நினைத்து இஷ்டலிங்கமாகிய பதிக்கு அனைத்துக் கடமைகளையும் ஆற்றவல்லவன். 'நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்றுற் போல எத்தகைய உரிமைகளையும் விரும்பாமல் இஷ்டலிங்கத்தையே பதியென நினைத்துக் கடனுற்றல் வேண்டும். இலிங்காசாரம் பெண்களுக்கு அமையும் போது அவர்கள் இஷ்டலிங்கத்தைச் சிறப்பாகக் கொள்வதா? கணவரைச் சிறப்பாகக் கொள்வதா? என்ற ஐயம் எழுவது இயற்கை. இதற்கு,

> "எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
> எம் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க"

என்ற திருவெம்பாவைப் பாடல் வரிகளிற் கண்ட வேறுபாடுகளை உணர்ந்து ஐயமறுத்தல் வேண்டும்.

2. சதாசாரம்: வீரசைவன் அறவாழ்க்கையில் வழுவாது நிற்றலோடு நல்வழியில் உழைத்துப் பொருளீட்டுதல் வேண்டும். உழைப்பின்றி வாழும் எவனும் வீரசைவனுகான். சாதி, மத வேறுபாடில்லாமல் அனைத்துயிர்களையும் ஒன்றெனக் கண்டு அவைகளின் முன்னேற்றத்திற்காக உழைத்தல் வேண்டும். உழைப்பால் வந்த ஊதியத்தின் ஒரு பகுதியை மட்டுமே துய்த்து, மற்றவைகளைச் சமுதாயத் தொண்டுக்கெனப் பயன்படுத்தல் வேண்டும்.

3. சிவாசாரம்: வீரசைவன் ஏனையோரிடத்தும் அமைந்த சிவத்தைக் காணுதலும், சிவம் பெருக்கும் தொண்டில் ஈடுபடுதலும் வேண்டும். இலிங்கதாரணம் செய்தவர்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வு கருதாமை வேண்டும். வீரசைவன் தன் இனத்துக்குள்ளேயே வேறுபாடு கருதாமையோடு அனைத்து மக்களிடத்தும் சிவம் இருக்கும் தன்மையை உணர்ந்து அனைத்து மக்களும் முன்னேறப் பாகுபாடின்றித் தொண்டாற்றுதல் வேண்டும். தொண்டின் மூலம் சகோதர ஒருமைக் காட்சியை வாழ்த்தல் வேண்டும்.

4. பிருத்யாசாரம்: விலங்கு முதல் தாவரம் வரை உள்ள உயிர்களிடத்தில் அன்பு கொண்டு சீவகருணையை வளர்க்க வேண்டும். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிக் கலங்கும் மனநிலை அமைந்த ஒழுக்கமே பிருத்தியாசாரம்.

5. கணாசாரம்: சிவம் என்னும் செம்பொருள் விளங்குவதற்குத் தடையாக உள்ள எல்லா ஒழுக்கங்களையும் நீக்கி ஒழுகுதல் வேண்டும். சிவம் விளங்கத் தடை செய்தவரைத் தந்தையென்றுங் கருதாது காலைத் தடிந்த விசார சருமரைப் போன்ற ஒழுக்கத்தை மேற்கொள்ளுதல் வேண்டும்.

முன்னே கூறிய நான்கும் மெல்வினை ; கணுசாரம் வல்வினை. சிவ அபராதத்தைத் தண்டித்தல் இக் கணுசாரத்தில் அடங்கும். இறத்தலால் வருந் தீட்டு, பெண்கள் மாத விலக்கினுல் வருந் தீட்டு, எச்சில் தீட்டு முதலிவைகளை எல்லாம் வெறுத்தல் வேண்டும். அவைகளைத் தீட்டு எனக் கருதுதல் சிவ அபராதத்துடன் ஒத்தது.

மேலே குறிப்பிடப்பெற்ற பஞ்சாசாரம், அட்டாவரணம் ஆகிய நெறிகளில் நின்று சடுத்தலப் பிரம்ம ஞானம் பெறுதலே சிவ யோகம்.

**பயன் :** அங்க லிங்க ஐக்யம் என்ற நிலையை அடைந்து, அதன்மேல் உள்ள சூனியமாம் ஆதனத்தில் அமர்ந்து, பேரின் பம் துய்த்தலே பயன். 'மானுட ராக்கை வடிவு சிவலிங்கம், என்ற திருமூலர் வாக்கினுக்கேற்ப இவ்வுடம்பை அழியாத உடம் பாக்கி, இலிங்கமாக்குதலே பயன். இலிங்கமாம் நெறிபெற்ற உடல் ஏனையோர் உடல் போல் இவ்வுலகில் கீழே விழாது. ஐக்யத்தை மட்டுமே முடிந்த முடிவு எனக் கொள்கிறது, என்று கொண்டு வீரசைவத்தை 'ஐக்கிய வாதசைவம்' என்று கொள்ளுவோருமுளர். வீரசைவம் நிரதிசய இன்பப் பேற்றை ஒத்துக் கொள்ளுகிறது.

முடிப்புரை :

ஆகமச் சைவமாகிய வீரசைவம் திருமூலர் காலத்திலேயே தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய ஒன்ருகும். வழிபாட்டுக் கொள்கைகளில் சடங்குமுறை, வணிகமுறைகளை வெறுத்து, நன்றிக் கடனென அதனை நடாத்தி, ஷடுத்தலம், அட்டாவரணம், பஞ்சாசாரம் ஆகிய மூன்றும் இணைந்த சிவயோகத்தில் தலை நின்று, ஞானம் கர்மம் பாவனை என்ற மூன்றும்இணைய நிற்பதால் மும்மலக்கட்டு நீங்க, ஐக்யமாம் நிலைபெற்று, அப்பாற் சென்று, சூனிய சிங்காதனத்தமர்ந்து நிரதிசய இன்பப் பேற்றை அடைய வழிவகுப்பதே வீரசைவம். சமுதாய முன்னேற்றத்தையும் பெண்கள் முன்னேற்றத்தையும் முக்கிய நெறிகளாகக் கொண்ட சாதன முறைகளாற் சிறப்புற்று விளங்குவதே வீர சைவம்.

## அகிலாண்டநாயகி மாலை

லழிபடு மடிய ராயினுர் தமக்கே
வழங்குதுங் கருணை வேருய
பழிபடு மவர்க்கு வழங்குரு மென்னின்
பயோதர மருதமு னன்றிப்
பொழிசுவை நறுநீர் புல்லுவர் நிலத்தும்
பொழியுமே புண்ணியப் பொருளே
கழிதலி றென்னங் காத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (11)

# தேவீ உபாசனையில் ஆதாரயோகம்

பி. கே. ஷண்முகநாதன்

உலகத்தில் மக்கள் யாவரும் விரும்புவது இன்பத்தையே. துன்பத்தை யாரும் விரும்புவதில்லை. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் பின்னிப் பிணைந்து இருப்பதால் துன்பத்தை அறவே விலக்கி இன்பத்தை மட்டும் அடைவது இயலாததாய் இருக்கின்றது. இதுதான் லௌகீகத்தில் நாம் ஒவ்வொருவரும் காணும் அனுபவ உண்மை. ஆனால் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று அப்பமூர்த்திகள் பாடியுள்ளார். இன்பம் என்பதை வட நூலார் "ஸுகம்" என்பர். ஸுகம் என்பது "கருத்ரிமஸுகம்" "அக்ருத்ரிம ஸுகம்" என இரண்டு வகைப்படும். கருத்ரிமஸுகம் என்பது நாமாகக் கற்பித்துக் கொள்வது. "அகம், மாடை, மடந்தையர் என்றயரும் ஜகமாயை" என்கிறார் அருணகிரியார். இது நிலையில்லாதது. இன்பம் போல் காட்டித் துன்பத்தையே தருவது. "ஸம்ஸார சாகரம்" என்ற பிறவிப் பெருஞ்சுழலில் சிக்கவைப்பது. அக்ருத்ரிமஸுகம் என்பது அழியாதது. அதுதான் மோக்ஷம் அல்லது விடுதலை என்று கூறப்படுவது. கறங்கும் சகடமும் போல மாறி மாறி வரும் ஜன்மச் சுழலிலிருந்து விடுதலை யளிப்பது. இதனை யடையவே நாம் முயற்சி செய்யவேண்டும். இந்நிலை யடைந்தோரே "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்று கூற முடியும்.

மக்கள் மோக்ஷம் அடைவதற்குப் பரம கருணாமூர்த்தியான இறைவன் மக்களின் சித்த பரிபாகத்துக்கு ஏற்றபடி பல்வேறு வழிகளை வழங்கியுள்ளான். அவ்வழிகளைத் தான் சமயங்கள் என்றும், மதங்கள் என்றும், தர்சனங்கள் என்றும் கூறுகிறோம். அச்சமயங்களும் புறப்புறச் சமயங்கள், புறச் சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச் சமயங்கள் என நான்காகப் பிரித்துக் கூறுவர். இவற்றுள் அகச் சமயம் என்பது ஆறு. ஷண்மதங்கள் எனப் பேசப்படும். அவை சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், ஸௌரேயம் என்பன.

ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையினாலான இந்தப் பிரபஞ்சத்துக்கு ஓர் முதற் காரணம் இருந்தே தீரவேண்டும். இந்த ஜகத் காரண வஸ்து எத்தகையது ?

"காணொணாதது"

"காணொணாதது உருவோடருவது
பேசொணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது"

என்கின்றார் அருணகிரியார். வேதோபநிஷதங்கள் யாவும் இதையே சொல்லுகின்றன. அது மனத்திற்கும் எட்டாதது.

யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ர்ரர்ப்ய மனஸாஸஹ.

நாம்பார்க்கும்நாமரூப பேதங்களோடு கூடிய ஸகல வஸ்துக்களும் எதனின்று தோன்றினவோ, தோன்றிய அவையாவும் எதில் ஜீவிக்கின்றனவோ, முடிவில் அவை யாவும் எதில் ஒடுங்கி விடுகின்றனவோ அதுவே பிரஹ்மம் என்று பேசுகின்றது தைத்திரீய உபநிஷத். ஞானேந்திரியங்களால் அறியப்படாததாயும், கர்மேந்திரியங்களால் எட்ட முடியாததாயும், கோத்ரம் அல்லது குணம் இல்லாததாயும், கண்காசு போன்ற ஞானேந்திரியங்களற்றதாயும், கை கால் போன்ற கர்மேந்திரியங்களற்றதாயும் நித்திய வஸ்துவாயும் நாநாவிதமாய்த் தோற்றமளிக்கும் "விபு" வாயும், எங்கும் நிறைந்ததாயும், ஆதி சூக்ஷுமமானதாயும், யாவற்றிற்கும் பிறப்பிடமாயும் இருப்பதாக மகான்கள் அதனை அறிகின்றார்கள் என்று கூறுகின்றது முண்டகோபநிஷத். அதற்குத்

தோன்றுதல், இருத்தல், வளர்தல், தேய்தல், மாறுதல், மறைதல் என்ற ஷட் விகாரங்களற்றதாய், அதனின்று பிர பஞ்சம் தோன்றினாலும் தன்னிறைவில் குறையில்லாததாய் இருப்பது அந்த ஜகத் காரணவஸ்து. இதைப் பெண்பாலாகக் கருதி வழிபடுவது "சாக்த தரிசனம்". உண்மையில் அது ஆணுமல்ல, பெண்ணு மல்ல, அலியுமல்ல. வாக்குக்கும் மனத்திற் கும் எட்டாத ஒன்றை மக்கள் மனத்தில் அநுசந்தானம் பண்ணமுடியாது. ஆகை யால் நாம் நம்மனத்திற்கு உகந்த ஓர் உருவத்தை அமைத்துக் கொள்கிறோம். உடம்பெடுத்தோர் அவ்யக்த நெறி எய்துதல் மிகக் கடினம் என்று கீதையும் சொல்லு கின்றது. காரணாகமத்தில் மந்த்ரோ பாஸகர்களும், அதிவர்ணாச்ரமிகளும், யோகி களும், ஞானிகளும், பூஜை செய்வதற்கும் தியானம் செய்வதற்கும் யோக்யமாகத் தானே விளையாட்டாக ஓர் உருவத்தை இறைவன் மேற்கொள்ளுகிறான் என்று கூறப்பட்டிருக்கின்றது.

யதீநாம் மந்த்ரிணாம் சைவ
யோகிநாம் ஞானிநாம் ததா
தியான பூஜா நிமித்தம் ஹி
தநும்க்ரஹ்ணாதி லீலயா

இவ்வாறு சமயங்கள் பலவும் நாமரூப ரஹிதமான ஒன்றுக்கு உருவத்தையும், நாமத்தையும், வழிபாட்டு முறைகளையும் ஆரோபணம் செய்திருக்கின்றன.

"ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு
ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்கிறார் மணிவாசகப் பெருமான்.

சாக்த தரிசனம் ஜகத்காரண வஸ்துவைப் பெண்ணாக வைத்து "ஜகத் ஜனனீ" என்று அழைக்கின்றது. சாக்தம் என்றால் சக்தி வழிபாடு என்று பொருள். சக்தி என்றால் ஆற்றல் என்று பொருள். வேதம் எந்த வஸ்துவை சைவ "ஸத்" என்றும் "ப்ரஹ்மம்" என்றும் கூறுகின்றதோ அதே வஸ்துவை சைவ சித்தாந்தம் "சிவம்" என்ற சொல்லால் குறிப்பிடு கின்றது. பிரபஞ்ச காரணமான வஸ்து பரத்வ நிலையில் நாமரூபரஹிதமாய், குணம் குறியற்றதாய், ஸவரூப விச்ராந்தியாய், உபாதி ரஹிதமாய், தான் ஒன்றிலும் பற்றிக் கொள்ளாமல் ஸர்வ ஸாக்ஷியாய், யாவற்றிற்கும் ஆதியாய், தனக்கென்று யாதொரு ஆதியுமற்றதாய், "நிருபாதிக ஸம்வித்ரூபமாய்" இருக்கும். இதைத்தான் உபநிஷதங்கள் "ஸத்" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. அது ஒன்றே முதலில் இருந்தது. "ஸதேவ ஸௌம்ய இதம் அக்ர மாஸீத்: (சாந்தோக்ய உபநிஷதம் 6.2.1)

இந்த ஸத் என்றது யாதொரு விகார மற்றதாய் இருக்கும் நிலையில் ஆங்கிலத் தில் (Static energy) என்று கூறப்படும். இதற்கு "ஸ்தாணு" என்ற பெயர் வழங்கப் பட்டிருக்கின்றது. இவ்வாறு நாம ரூப ரக்ஷிதமான நிர்குண "ஸத்" திலிருந்து இந்தப் பிரபஞ்சம் விரிந்தது. எப்படி?

நிர்க்குண சிவத்தில் அதன் ஆற்றல் அக்னியின் சூடு போன்று அதனுள்ளேயே ஒன்றிக் கிடக்கின்றது. இந்த ஸத்தும் அதன் ஆற்றலும் வேறல்ல. சூரியனும் அதன் ரஸ்மியும் போல பிரஹ்மமும் அதன் சக்தியும் ஒரே வஸ்துவின் இரண்டு பரிணாமங்களே.

"அருளது சக்தியாகும் அரன்றனக் கருணையின்றித்
தெருள் சிவமில்லை யந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"

இந்த ஆற்றல் இருப்பதாலேயே சிவம் தொழிற்படுகின்றது. சாந்தோக்ய உப நிஷத் 6·2·3ல் "த தைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" அந்த 'ஸத்' என்றது சுதா வது "நான் பலவாக விரிவேன் என்று நினைத்தது" என்று கூறப்பட்டிருக் கின்றது. இப்பொழுது அதற்கு ஆங்கிலத் தில் (Potential energy) என்று பெயர். ஸத்ததாக இருந்ததென்று "தான்" என்ற பாவத்தை எப்பொழுது அடைந்ததோ அப்பொழுதே "சிருஷ்டியோந் முகமாகி பிரபஞ்சத்தை உண்டாக்க முற்பட்டு விட்டது.

சிவம்சக்தி தன்னையீன்றும் சக்திதான் சிவத்தை யீன்றும்
உவந்து இருவரும்புணர்ந்து இங்கு உலகுயிரெல்லாம் ஈன்றும்

என்கின்றது சிவஞான சித்தியார் என்ற

சீரிய நூல். இப்பொழுது ஆக இருந்தது (Potential) ஆக மாறிவிட்டது. நாநாவித நாமரூப குணங்களோடு கூடிய பிரபஞ்சம் தோன்றிவிட்டது. ஆக சக்தியின் செய லில்லாமல் சிவத்தால் ஒன்றும் செய்ய முடியாது. இதைத்தான் பகவத் பாதாள் ஸௌந்தர்யலஹரி முதல் சுலோகத்திலேயே,

> ஷிவ : ஷக்த்யா யுக்தோ யதிபவதி ஷக்த: ப்ரவவிதும்
> நசே தேவம்தேவோ ந கலு குஷல: ஸ்பந்திதுமபி.

அதாவது இறைவனனவர் சக்தியோடு கூடி யிருப்பாரேயாகில் பிரபஞ்சத்தை நிர் மாணம் பண்ண சமர்த்தராவார். அப்படி இல்லாவிட்டால் சிவனல் கொஞ்சம் அசை யக் கூடமுடியாது என்கின்ருர். முக்கிய கருத்து என்னவெனில் சக்தியின் துணை யின்றிச் சிவம் தொழிற்படாது. இதை ஸுதஸம்ஹிதையின் 4 வது காண்டமாகிற யக்ஞவைபவ காண்டத்தில் 13 வது அத்தியா யத்தில் 30 சுலோகங்களில் சக்தியில் பிர தான்யம் கூறப்பட்டிருக்கிறது. சிவத்துக் கும், சக்திக்கும் உள்ளத் தார தம்மியத்தைத் திருமூலர்

> வாயு மனமுங் கடந்த மனோன்மணி
> பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
> ஆயு மறுவுங் கடந்த வரனுக்குத்
> தாயு மகளுநற் ருரமு மாமே.

என்று நாலாந் தந்திரம் 1178 வது பாடலில் கூறுகின்ருர். இதைத்தான் முன்பு காட்டிய சிவஞான சித்தியார் பாடலும் குறிக்கின் றது. சிவம் சக்தியை ஈன்றது; சக்தி சிவத்தை ஈன்றது. இருவரும் புணர்ந்து பிரபஞ்சத்தை ஈன்றனர். மணிவாசகப் பெருந்தகை,

> " எம்பெருமானிமவான் மகட்குத்
> தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன் "

என்று சகோதர உறவு கூடக் கூறுகின்ருர்.

ஜகத் காரணவஸ்துவை பெண்பாலாக வும், உலகத்தில் தருமம் தாயாராகவும் போற்றித்துதித்துவழிபடுவது நமது சமயத் தின் தனிப் பெருமை, வேதாகமங்களில் ஒப்புக் கொள்ளப்பட்டதேயாகும். தைத்தி ரீய அரண்யகம் போன்ற வேத பாகங்களில் கூறப்பட்டிருக்கின்றது. கேனோபநிக்ஷத்தில் " உமா ஹைமவதிஸர்வ லோப மானு " என்று கூறி அவளே இந்திராதி தேவர் களுக்கு ப்ரஹ்மஸ்வரூபத்தை உபதேசித்த தாகக் காண்கிறோம். வஸிஷ்டர் சுகர், நைகர், ஸநந்தனர், ஸநத்குமாரர் போன்ற மஹரிஷிகளும்தேவியை உபாஸித்தது மட் டுமேயன்றி அவரவர்களுடைய அனுபவங் களையும், வழிபாட்டு முறைகளையும் எழுதி யிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவ் வைவர் செய்த நூல்களுக்கு ஸுபாகம பஞ் சகம் " என்று பெயர். இவ்வைந்து நூல் களும் சமயாசாரம் அல்லது தக்ஷிணசாரம் என்று கூறப்படும் நம் போன்ருேர் அனுஷ் டிக்கும் தேவீ உபாஸனைக்கு மூலகிரந்தங்கள். இவற்றைப் பின்பற்றியே துர்வசஸ் போன்ற ரிஷிகளும், பகவத் பாதாள் போன்ற அவ தார புருஷர்களும், பாஸ்கராயர் போன்ற உபாஸகர்களும் அநேக நூல்கள் செய்திருக் கின்ருர்கள். ஆகையால் சக்தி பூஜை, தேவீ உபாசனை என்பது பற்றி யாரும் நிஷத்த மாகக் கூற ஞாயமில்லை.

ஆயினும் வடநாட்டில் வங்காளம் போன்ற பிரதேசங்களில் " வாமாச்சாரம் " என்ற முறையைக் கையாண்டு, பஞ்ச மகார பூஜை செய்து நரபலி கொடுத்து சாக்த மதத்துக்கு ஓர் கெட்ட பெயர் உண்டாக்கி விட்டார்கள். அதுபோலவே சைவத்திலும் " காபாலிகர் " என்ற உபாஸகர்கள் இருந்து வந்தார்கள்.

தேவீ உபாசனையின் அதிசிரேஷ்டத்வத் தைப் பற்றி எவ்வளவோ கூறலாம். எவ னொருவனுக்கு இது கடைசி ஜன்மாவோ, அவனுக்கே தேவீ உபசானை கிட்டும். தேவீ உபாசனை அல்லது ஸ்ரீ வித்யை என்பது மோக்ஷப்ராப்தியைத் தருகின்றது என்பதில் சந்தேகமே கிடையாது என்று லலிதா த்ரி சதியின் பலச்ருதி பாகத்தில் 24, 25 வது சுலோகங்களில் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் ப்ரம்ஹக்ஷாத்காரத்தை அத்வ தீயமாக அடைந்து அனுபவிக்க ஸ்ரீ வித் யையே சிறந்த சாதனமாகும். ஜீவப்ரஹ்ம ஐக்கியமே மனிதனின் முக்கிய லக்ஷியமாக இருக்கவேண்டும். அதையடைய நமது முன்னோர்களால் பல மார்க்கங்கள் வகுக்கப்

பட்டும், அனுஷ்டிக்கப்பட்டும் வந்திருக்கின்றன. அவைகளைச் சுருக்கமாக நான்கு விதயோகம் என்று கூறுவார்கள். யோகம் என்ற பதம் ''யுஜ்'' என்ற தாதுவினடியாகப் பிறந்தது. அதற்கு சேர்த்தல், பிணைத்தல், (to write) என்ற பொருளும், ஓர் முகப்படுத்துதல் (To concentrate) என்ற பொருளும், தியானம் செய்தல் (To meditate) என்ற பொருளும் உண்டு. பதஞ்சலி யோக சூத்ரத்தில் ''யோக: சித்தவ்ருத்தி நிரோத:'' அதாவது யோகம் என்பதுமனத்தினுடைய விருத்திகளை யடக்குதல் என்பது என்று கூறப்பட்டிருக்கின்றது. சித்தவிருத்திகளை அடக்குதல் என்றால் பொறி புலன்களின் வாயிலாக மனமானது அதிக சலனத்தை யடைந்து அநாத்ம விருத்தி (செயல்)களில் செல்லாமல் அடக்குதல். இந்தயோகம் நான்காகக் கூறப்பட்டிருக்கின்றது. சித்த விருத்தி. அவை 1. கர்மயோகம், 2. பக்தியோகம், 3. ராஜ யோகம், 4. ஞானயோகம் என்பன. இவை நான்கும் ஒன்றோடொன்று இயைபுடையன. பக்தியில்லாத கர்மமோ, ஞானமில்லாத பக்தியோ, பயன்தரா. ஸ்ரீ வித்யை என்று தேவீ உபாசனையில் இந்நான்கும்சமநிலையில் விரவி இருக்கின்றன. கிரஹஸ்தனாக இருந்து கொண்டே யோக சித்தியை அடையலாம் என்று போதிக்கும் சித்தாந்தம் இது ஒன்றே. அதுபோலவே தேவியை உபாசனை பண்ணுவதாலேயே ஜீவப்ரம்ஹ ஐக்கியத்தைப் பெறலாம் என்றும், தேவியின் கடாக்ஷத்தைப் பெறலாம் என்றும், தேவியின் கடாக்ஷத்தால் இக பரசுகங்களை இலகுவில் அடையலாம் என்றும் ஸ்ரீ வித்யை அறுதியிட்டுச் சித்தாந்தப் படுத்துகின்றது.

இந்தக் கட்டுரையில் தேவீ உபாசனையில் யோகசித்தி எவ்வாறு அடைவது என்பதை மட்டும் விவரிக்குமாறு என் அம்மைஅகிலாண்டேஸ்வரியின் ஆணை. அதனைக் கும்பாபிஷேகக் குழுவினர் அடியேனுக்கு அறிவித்தனர். அதன்படி என் சிற்றறிவுக்கும் சொல்ப அனுபவத்துக்கும் எட்டியபடி பல நூல்களின் துணை கொண்டு இதனை எழுதலானேன். உலகெங்குமுள்ள ஸகல சாக்த உபாசகர்களுக்கும் என் பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொண்டு அவர்களை இக்கட்டுரையிலுள்ள குற்றம் குறைகளை க்ஷமித்து குணம் எதுவேனும் இருந்தால் அதுவும் தேவியின் கடாக்ஷம் என்று ஏற்றுக் கொள்ளுமாறு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்; எடுத்துக் கொண்ட பொருளோ கடலினும் ஆழமானது. இமயத்திலும் உயர்ந்தது. இதனைப் பற்றிக்கூறும் தந்த்ர சாஸ்திரங்களோ ஏராளம். உபாசனையில் அவரவர் ஆன்ம விகாஸத்துக்கு ஏற்ற படிதான் அனுபவமும் இருக்கும். இத்தகைய பெரிய விஷயத்தை நான் எழுத முயன்றது கம்பன் கூறுவது போல்,

> '' ஓசைபெற்றுயர் பாற்கடல் உற்றொரு
> பூசை முற்றவும் நக்குபு புக்கென''

மாதிரி தான் இருக்கும். சாதாரணமாய் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகள் இருப்பதாகவும் அவற்றிற்கு முறையே ஸாலோக, ஸாமீப்ய, ஸாரூப, ஸாயுஜ்யம் என்ற பத முக்திகள் இருப்பதாகவும் கூறுவர். இவற்றில் யோக பாதத்தை ராஜயோகம் என்றும் சொல்வார்கள். யோகதர்சனத்துக்கு ஆதிகர்த்தா பதஞ்சலிமுனிவர் என்றும் கூறப்படுகின்றது. பதஞ்சலி யோக சூத்ரப்படி அஷ்டாங்கங்கள் என்ற இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு அங்கங்களையும் முறையே அனுஷ்டித்துச் செய்யும் சாதனையே யோகம் எனப்படும். இந்த சாதனை நம் போன்ற கிரஹஸ்தர்களுக்கு இயலாததொன்று. தேவீ உபாசனையில் கிரஹஸ்தனாக இருந்து கொண்டே முறைப்படி தேவியை வழிபடுவதால் யோகசித்தியும் அடையலாம் என்று கூறப்பட்டிருக்கின்றது. இது எவ்வாறு என்பதை சுருக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அப்பர் பெருமானுக்குத் திருவையாற்றில் கயிலாய தரிசனம் அருளியபோது அவர் எங்கும் சிவசக்தியாகவே பார்த்தார் என்பது வரலாறு. அதுவே உண்மை. யாவும் சிவசக்தி சம்மேளனமே. சக்தியின்றிச்

சிவமில்லை சிவமின்றிச் சக்தியில்லை என்று முன்பே சொன்னோம். அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்பது பழமொழி. பிண்டம் என்பது நமது சரீரம். பிரபஞ்சத்திலுள்ள எல்லா தத்துவங்களும் நமது சரீரத்திலும் உள்ள காரணத்தால் இந்த சரீரத்தை வட மொழியில் க்ஷுத்ரபிரம்மாண்டம் என்று கூறப்படுகின்றது. அஃதாவது சிறிய அண்டம் என்று பொருள். பிரம்மாண்டம் சமஷ்டி. சரீரம் வியஷ்டி. அதாவது ஒன்று பெரியது. மற்றொன்று சிறியது. ஆகவே சிவசக்தி சம்மேளனமான பிரபஞ்சத்தைப் போன்றே நமது சரீரமும் சிவசக்தி சம்மேளனமே. இந்தச் சரீரத்தில் சிவத்தின் அம்சம் ஆன்மா. சக்தியின் கூறு குண்டலினி. சாந்தோக்ய உபநிஷத்தில் (6.3.3) ஆத்மா ஹிருதயத்திலிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கின்றது. அதுபோல நமது பிராணன் குண்டலினியில் இருக்கின்றது. சக்தியின்றிச் சிவம் செயல் படாதது போல குண்டலினியின்றி ஆன்மா வேலை செய்யாது. இந்தக் குண்டலினி சக்தியை உபாசனா கிரமத்தில் எழுப்பி ஷட்சக்ர பேதனம் செய்து ஸஹஸ்ரதள பத்மத்துக்கு அழைத்து வந்து அங்குச் சிவாம்சமான அகுலகுண்டலினியோடு சேர்த்து சாமரஸ்யம் உண்டு பண்ணுவது தான் தேவீ உபாசனையின் அதிரஹஸ்ய லக்ஷியம். பிரபஞ்சத்திலிருக்கும் சகலவஸ்து களுக்குள்ளும், பிரளய காலம் வரை இருந்து கொண்டு சகல சிருஷ்டிகளுக்கும் போகத்தைக் கொடுக்கும் வஸ்துக்களுக்கு "தத்துவங்கள்" என்று பெயர்.

"ஆ பிரளயம் யத்திஷ்டிதி ஸவேஷாம்
போகதாயி பூதானும்
தத் தத்வமிதி ப்ரோக்தம்"

என்று சூத ஸம்ஹிதை தத்துவத்தை விளக்குகின்றது.

பஞ்ச பூதத் மகம் சர்வம்
சராசர மிதம் ஜகத்

அதாவது பிரபஞ்சத்திலுள்ள சகல சராசரங்களும் பஞ்சபூதங்களாலாயின என்று சாதாரணமாகக் கூறினாலும், உண்மையில் தத்துவங்கள் 25 என்றுதான் கணக்கிட வேண்டும். அவை (1) பஞ்சபூதங்கள் 5 (2) பஞ்ச தன்மாத்ரைகள் 5. (3) பஞ்ச ஞானேந்திரியங்கள் 5. (4) பஞ்சகர்மேந்திரியங்கள் 5. மனஸ் 1. மாயா 1. சுத்தவித்யா 1. சுமஹாச்வரம் 1. சதாசிவம் 1. ஆக 25. பரப்ரஹ்ம ஸ்வரூபிணியான அம்பாளானவள் இந்தத் தத்துவங்களைக் கடந்து சிவத்துடன் இரண்டறக் கலந்து ஸாமரஸ்ய பாவமடைந்து இருப்பது "ஸதாக்யம்" என்ற 25 வது தத்துவமாக விளங்குகின்றாள் என்பது சாக்தர்களுடைய சித்தாந்தம். இத்தகைய ஸாதாக்யத் தத்துவத்தில் சிவமும் சக்தியும் அர்த்தநாரியாக இரண்டறக் கலந்து சேஷ சேஷ பாவம் இல்லாமல் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த நிலைமை அடையவே தேவீ உபாசனை செய்யப்படுகின்றது. (சைவ சித்தாந்தத்தில் வரும் சாதாக்ய தத்துவத்துக்கும் இதற்குமுள்ள வித்யாசத்தை அறிந்தவர்கள் கண்டு கொள்க).

இனி ஷட்சக்ர பேதனம் என்பது பற்றிச் சுருக்கமாகக் கூறுவாம். மனித சரீரத்தில் முதுகெலும்பு ஓர் முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றது. அது 33 சிறு எலும்புகள் கொண்ட ஓர் எலும்புக் கோர்வை. அதற்கு மேருதண்டம், என்றும் வீணாதண்டம் என்றும் பல பெயர்கள் உண்டு. நமது சிரசில் இருக்கும் முதல் மூலையிலிருந்து சுழுமுனை (சுஷீம்னா) என்றநாடி இந்த மேருதண்டத்தின் உள்புறத்தில் இருக்கின்றது. இந்த சுஷீம்னா என்ற நாடிதான் நமது சரீரத்தில் இருக்கும் (72,000) எழுபத்தீராயிரம் நாடிகளுக்கும் ஐக்யஸ்தானம் அல்லது பிறப்பிடம். இந்த நாடியில் ஆறு ஆதார ஸ்தானங்கள் உள. அவை கீழிருந்து மேல் வரிசையாக 1. மூலாதாரம் இது திருமூலர் கூறுவதுபோல எருவிடும்வாசலுக்கும் கருவிடும் வாசலுக்கும் மத்தியில் 4 இதழ் கொண்டதாமரை போல் இருக்கும். இது பிருதிவியின் கூறு. இங்குத்தான் குண்டலினி சக்தியானது தன்னை 3½ சுற்றுச் சுற்றிக் கொண்டு உறங்கிக் கொண்டிருக்கும் என்று கூறப்படுகின்றது. இதற்கு மேல் 2-வது ஆதார ஸ்தானமாக இருப்பது ஸ்வரிதிஷ்டானம். இது ஆறு

தளபத்மமாக இருப்பதாகவும்இது சுழு முனையில் லிங்கத்தின் மூல பிரதேசத்தில் அப்புவின் அம்ஸமாக இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு மேல் மூன்றுவதாக மணிபூரகம் என்ற பத்து இதழ் கொண்ட பத்மம். அக்னி அம்ஸமாக நாபிக்கு நேராக சுழு முனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டி ருக்கின்றன. இதற்கு மேல் நான்காவதாக அனுகதம் என்ற பன்னிரண்டு இதழ் பத்மம் வாயுவின் அம்ஸமாக சுழுமுனையில் ஹ்ரு தயப் பிரதேசத்துக்கு நேராக இருக்கும். இதற்கு மேல் பதினுறு இதழ்கொண்ட விசுத்தி ஆகாஸத்தின் அம்ஸமாக நமது கண்ட (கழுத்து)ப் பிரதேசத்துக்கு நேராக சுழுமுனையில் இருக்குமாம். அதற்கு மேல் புருவ மத்திக்கு நேராக சுழுமுனையில் இரண்டு இதழ் கொண்ட ஆதாரம் சக்ரம் ஆக்ஞை எனப்படும். இது மனஸ் தத்து வம். இவற்றைத் தான் ஆருதாரங்கள் என்று கூறுவர். இந்த ஸ்தானங்களிலி ருந்துதான் சரீரத்தில் வியாபிக்கும் எல்லா நாடிகளும் பிரிகின்றன. சுழுமுனை நாடிக்கு வெளியே கீழிருந்து மேலே இரண்டு நாடிகள் இருக்கின்றன. அவை இடது பீஜத்திலிருந்து மேலே போவது இட கலைநாடி என்றும், வலது பீஜத்திலிருந்து புறப்படுவது பிங்கலைநாடி என்றும் கூறுப. இந்த இரண்டு நாடிகளும் சந்திக்கின்றன. இப்படி மூன்று நாடிகளும் சந்திக்கும் இடங் களுக்குக் கிரந்திகள் என்று பெயர். கிரந்தி என்றுல் முடிச்சு என்று பொருள்.

இடகலை பிங்கலை என்ற நாடிகளை முறையே சந்திர நாடி சூரிய நாடி என்றும் சுழுமுனையை அக்னி நாடி என்றும் கூறு வார்கள். இந்த ஆறு ஆதாரங்களுக்கும் மேலே ப்ரஹ்மரந்திரத்தின் முடிவில் ஸஹஸ்ராரபத்மம் இருக்கின்றது. இம் மூன்று நாடிகளும் மூன்று இடங்களில் சந்திப்பதால் இவ்வாதார கமலங்கள் இருக் கும் பிரதேசமும் மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்படுகின்றது. அவைகள் கீழ் இருந்து மேல்வரிசையாக அக்னி கண்டம், சூரிய கண்டம், சந்திர கண்டம் என்று பெயர். ஒவ்வொரு கண்டத்தின் முடிவிலும் ஒவ்வொரு கிரந்தி இருக்கின்றது. அவை கீழ் இருந்து மேல் வரிசையில் பிரம்மகிரந்தி, விஷ்ணு கிரந்தி, ருத்ர கிரந்தி என்று பெயர். ஆறு ஆதாரங்களும் மண்டலத்துக்கு இரண் டாகப் பிரிக்கப்படுகின்றது. மூலாதாரமும், சுவாதிஷ்டானமும்அக்னி மண்டலத்திலும் அதற்கு மேல் விஷ்ணு கிரந்தியும், விசுத்தி யும் ஆக்ஞையும் சந்திரமண்டலத்திலும், அதற்கு மேல் ருத்ர கிரந்தியும் இருக் கின்றன. இவை யாவற்றிற்கும் மேலாக சந்திரா கலாமண்டலம் அல்லது துரீய மண்டலம் இருக்கின்றது. ஆறு ஆதாரங் கள் மூன்று மண்டலங்கள், மூன்று கிரந்தி கள் ஆக மொத்தம் பன்னிரண்டு. இதற்கு மேலிருப்பது துவாதசாந்தம் அல்லது பன்னிரண்டின் முடிவு. அதுதான் சஹஸ் ராரம் என்பது. பிண்டத்தில் இவ்வாறு இருப்பதைத்தான் அண்டத்தில் பஞ்சபூதஸ் தலங்கள் என்று அழைத்திருக்கின்றனர் நமது முன்னேர். பிருதிவிஸ்தானமாகிய மூலாதாரம் திருவாரூர். அப்புஸ்தான மாகிற ஸ்வாதிஷ்டானம் திருவானைக்கா. அக்னிஸ்தான மாகிற மணி பூரகம் திருவண்ணுமலை. வாயுஸ்தானமாகிற ஆனு கதம் திருக்காளத்தி. ஆகாஸ ஸ்தான மாகிற விசுத்தி சிதம்பரம். மனஸ்தத்துவ மாகிற ஆக்ஞை காசி. சஹஸ்ராரம் பன்னிரண்டுக்கப்பால் இருக்கும் துவாத சாந்தம் மதுரை. இவற்றில் சிலர் திருவா ரூருக்குப் பதிலாகக் காஞ்சியைச் சேர்த்துக் கொள்வர். இதுவரை கூறி வந்ததிலிருந்து ஒருவாறு சுஷும்னு, இடது, பிங்கலா என்ற மூன்று நாடிகளையும், அவற்றின் சந்திப்பினுல் ஏற்படும் கிரந்திகளையும் ஆறு ஆதாரங்களையும் யாவற்றுக்கும் மேலாக இருக்கும் சஹஸ்ரார பத்மத்தை யும் நேயர்கள் புரிந்து கொண்டிருக்க முடி யும். ஓர் விளக்கப் படமும் சேர்த்திருக் கிறேம்.

முன்பு தத்துவங்கள் 25 என்று சொன்னே மல்லவா ? அவற்றில் 21 தத்துவங்களும் இந்தப்பன்னிரண்டில்அடங்கி விடும். மேலே இருக்கிற சஹஸ்ராரத்தில் மாயா, சுத்த



**மன்மதன் மனத்தைப் பிணித்த**
**அழகுத் தெய்வம் இரதி தேவி**
அவளைக் கல்லிற் செதுக்கி யுயிரோவியமாகச் சமைத்த சிற்பியின் சிந்தனையைக் காணுங்கள்.
ஆயிரக்கால் மண்டபத்தூண் சிற்பம்.



**ஸ்வஸ்திக பாதத்தில், இடைஒடிய எழிலொழுக இளமை நலங் கொழிக்க நிற்கும் மோகினி.**
ஆயிரக்கால் மண்டபத்தின் சிற்பம்.

வித்யா, மஹேச்வரம் சதாசிவம் என்ற நான்கு தத்துவங்கள் இருக்கும். அவற்றில் முதல் மூன்று ஆக்ஞையிலிருந்து சஹஸ் ராரம் வரையிலும் பிந்து. அர்த்தசந்திரம், ரோதினி, மைனு, உன்மனி என்ற ஒன்பது கலைகளாக இருக்க சதாசிவத் தத்துவம் பத்தாவது கலையாக இருக்கும். இதற்கு சாக்த தந்திரங்களில் அகுல குண்டலினி என்று பெயர் கூறப்படுகின்றது. மூலா தாரத்திலிருந்து மேலேறி வரும் குண்டலினி இந்த அகுல குண்டலினியோடு சேரும் காலத்தில் அமிர்தம் பெருகிடும் என்று கூறப்படுகின்றது. இதுவே சாக்த தந்த்ர சாஸ்திரங்களின்படி ஆதாரயோகம் என்றும், குண்டலினி யோகம் என்றும் கூறுவர். கயிலாய சித்தராகிய புஷ்ப தந்தர் என்பவர் எழுதிய 'ஷட்சக்ர நிரூபணம்' என்ற சீரிய கிரந்தத்தில் கூறியிருக்கின்ற முறையும் இதுவே. சைவ சித்தாந்த திருமுறைகளில் பத்தாவதாகிய திருமூலர் திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் முக்கியமாய் 'ஆதார ஆதேயம்' என்ற பகுதியில் குண்டலினி யோகம் கூறப்பட்டிருக்கின்றது. அதற்கு மஹா வித்வான் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய சைவ சித்தாந்த பாமரன உரையும் திருவாவடுதுறை ஆதீனத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது. ஏழாம் தந்திரத்திலும் ஆருதாரங்களைப் பற்றியும் கூறப்பட்டிருக் கின்றது. சைவ சித்தாந்த பரமாகப் பார்ப் பதற்கும் சாக்த சித்தாந்த பரமாகப் பார்ப் பதற்கும் சில வித்யாசங்கள் இருக்கவும் கூடும்.

சாதகனுனவன் சமய மார்க்கமாக அம் பாளை உபாசனை செய்வதைப் பின்வருமாறு கூறலாம். குரு முகமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய பகுதியாகையால் சற்று குப்தமாகவே ஈண்டுக் கூறப்பட்டிருக் கின்றது. பூர்வபுண்ய வசத்தாலும், இறைவி யின் அருளாலும் சிறந்த குரு மூலம் தீக்ஷை பெற்று 'பஞ்சதாசாக்ஷரீ' என்ற அதிரஹஸ் மான மந்த்ரத்தை உபதேசிக்கப் பெற்றுத், தேவியின் சக்ரரூபமான 'ஸ்ரீ சக்ரத்தை' நன்கு அறிந்து அதிலுள்ள ஒன்பது ஆவர ணங்களையும் அவற்றின் அதிதேவதை களான யோகனீ கணங்களையும் அவர்களின் பீஜ மந்திரங்களையும் அறிந்து, ஸ்ரீ சக்ரத்தை தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற தகடுகளில் லேகனம் செய்து அதைக் குரு மூலமாக 'ஜீவ பிரதிஷ்டை' செய்து பெற்று அதையே தேவியாக வைத்து 'ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி'யின் முறைப்படி பூஜை செய்து வரும்பொழுது தன் மனத்தை ஏகாக்ரமாக மூலாதாரத்தில் வைத்து ஜபித்து வர முதலில் குண்டலினியின் சலனம் அல்லது அசைவு சாதகனுடைய அனுபவத்துக்கு வரும். சில நாள் சென்ற பின் ஓர் சதங்கை ஒலி போன்றும், தும்பி பறப்பது போன்றுமான நாதமும் கேட்கும். மேலும் இடைவிடாது ஸ்ரீ சக்ர பூஜையும் ஜபமும் செய்துவர குண்டலினி உறங்கிக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் உள்ள (பாற்கடல் என்று பரிபாஷையாக அழைக்கப் படும்) சுக்லத்தேக்கம் மூலக்கனலின் உஷ் ணத்தால் வற்றிப் போக குண்டலினிக்கு ஆகாரம் இல்லாததால் அது சுழுமுனை வழி யாக ஏறத் தொடங்கும். அவ்வாறு ''பாவ னுத்ராட்யத்தாலும்'' உபாசனு பலத்தாலும் இடைவிடாது ஜபம் செய்துவர குண்டலினி ஒவ்வொருஆதாரமாகப்பேதித்துக் கொண்டு மூன்று கிரந்திகளையும் உடைத்து மூன்று மண்டலங்களையும் தாண்டி சஹஸ்ராரத்தை அடையும். அப்பொழுது பெருகும் அம்ரு தத்தை இரைப்பையில் போகவிடாமல் தடுத்து கேசரிமுத்ரையால் 'இந்த்ர யோநி' என்று சொல்லப்படும் உண்ணுக்கு உள்ள தொண்டைக்குழியை நாக்கை மடக்கி விழுங்குவதால் அடைத்து அம்ருதம் சுஷூம்தன வழியாகச் செலுத்தினுல் அந்த அம்ருதம் சரீரத்தின் 72,000 நாடிகளையும் நனைத்து இறவாத பிறவாத பலனைக் கொடுக்கும். இவ்வாறு செய்வதைத்தான் திருவள்ளுவரும் ''மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்'' என்றுர். அதாவது ஆயிரம் இதழ்கொண்ட மலராகிய சஹஸ்ராரத்தில் உள்ள சதாசிவத் தத்துவத்தோடு மனேன் மணியாகிற குண்டலினியைச் சேர்த்தவர்கள் நிலமிசை நீடு வாழ்வார் என்றுர்.

இது பற்றிப் பழைய சித்தர் பாடல் ஒன்றுண்டு. அது நமது சிறுவர்கள் மூச்சையடக்கி ஓடும் விளையாட்டுக்களான ''கிட்டிப்புல்'', 'ஏத்துத்திரி; (பலீன் சடுகுடு' (பழியஞ்சினுர் அடிகிட்டு கிட்டு என்பது மூலபாடம்) போன்ற விளையாட்டு களில் பாடுவது,

'' பரஜையன் வந்தான், தமுக்கு அடிச்சான்
பனிரண்டுக் கம்ப(ா)ல் ஏத்தி வச்சான்
இரும்புனுலே கோட்டை கட்டி இழுத்
தடிச்சான் நா ஆப்பு''

என்று பொருள் சொல்ல விரியும். சுருக்க மாக பரஜையன் (இறைவனே குருநாதனுக வருதல்) வந்தான் தமுக்கு என்பது நமது சரீரம். அது தோலாலும் நரம்பாலும் கட்டப்பட்ட தல்லவா, தமுக்கு அடி வயிற்றில் (மூலாதாரக்ஷேத்ரம்) கட்டிக் கொண்டு அடிப்பது மரபு. அடிக்கும் கோல் இரண்டு பிராணன், அபானன் என்பவை. அவற்ருல் பிராணுயாமம் (திருமூலர் திருமந் திரம் மூன்ரும் தந்திரம் 564–577 முடிய) செய்தால் குண்டலினி மேலே ஏறி பன்னி ரண்டுக் கப்பால் (துவாதசாந்தம்) சென்று சரீரம் வஜ்ரதேஹமாகி (இரும்பினுலே கோட்டை கட்டி நாவாகிற ஆப்பை(நவாப்பு) கழுத்து அடித்து விடுதல். (இது கேசரி முத்ரையும், சாதகனுக்குப் ''பேசா அனு பூதி'' ஆகிறமாமோன நிலேயும்) என்று பொருள் கொள்ளலாம்.

ஸ்ரீ வித்யையின் முக்கிய லக்ஷியமும், குறிக்கோளும் குண்டலினி யோகம் அல்லது ஆதாரயோகமே. இதைத் தேவி உபாசனை யில் உபாசனுபலத்தாலேயே அடைய முடியும் என்பது சாக்த சித்தாந்தம். ஸ்ரீ சக்ரமும், பஞ்சத சாக்ஷரீ மந்தரமும் அவற் றின் பல்வேறு அம்சங்களும் ஸௌந்தர்ய லஹரி, லலிதா திரிசதிஸ்தோத்திரம், தந்திர ராஜ தந்திரம், சக்தி மஹிம்நஸ்தோத்திரம், ஷட் சக்ர நிருபணம், வரிவஸ்யா ஹஸ்யம், காமகலா விலாசம் போன்ற இன்னும் எண் ணில் அடங்காத கிரந்தங்களைப் பார்க்க லாம். ஏதோ சிறியேன் அறிந்த அளவு கூறினேன். அதுவும் தேவி அகிலாண் டேஸ்வரியின் அருள். குற்றம் களைந்து குணம் கொள்வது ஆன்ருேர் கடன். சகல சாக்த உபாசகர்களுக்கும் என் பணிவான வணக்கம்.

தாயுமானுரும், அருணகிரிநாதரும் இதனை அவலம்பித்திருக்கின்றனர். சமீப காலத் திலிருந்த அபிராமி பட்டர், அவ ருக்கு முன்பு பாஸ்கரராயர் போன்றவர் களும் சாக்த உபாசகர்களே. இராம கிருஷ்ண பரமஹம்ஸர் தமது அனுபவத் தைப் படிப்படியாகக் கூறியிருக்கின்ருர். (Vide page 141 of ''Life Sri Rama Krishna'' Published by Swami Pavitrananda, Maravati Ashrama. Almera fourth edition 1936.)

மஹாத்மாகாந்தியும் கூட இதை அப்பிய ஸித்ததாகத் தெரிகின்றது. ஆங்கிலேய ராகப் பிறந்து கல்கத்தாவில் ஹைகோர்ட் பிரதம நீதிபதியாக இருந்த Sir Tohu Woodroffe (ஆர்தர் எவலன்) எழுதிய Serpant Ponon என்ற நூலை யாவரும் அவசியம் படிக்க வேண்டும். அது தவிர சாக்தபரமான நூல்கள் பலவும் அவர் மொழி பெயர்த்தும் பிரசுரித்தும் இருக்கிருர். தேவி யின் அருள் விலாசத்துக்கு ஜாதி, குலம், கோத்திரம், மதம், ஊர், பெயர் என்ற வித்யாசம் ஏது?

'' நாயே னையுமிங் கொருபொரு
ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்
டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்
தாய்என்ன பேறு பெற்றேன்
தாயே! மலைமகளே! செங்கண்
மால்திருத்த தங்கைச்சியே''

# சைவசித்தாந்தமும் சிவாலயங்களும்

திருவாவடுதுறை ஆதீனவித்வான் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.,
காஞ்சிபுரம்.

உலகத்தில் உயர்ந்த பிறப்பு எடுத்த மக்களுக்கு விருப்பமும் துன்பக் கலப்பில்லாத, நீடும் இன்பமும் பயப்பது நல்லொழுக்கம் ஒன்றே ஆகும். ஆதலினால் மக்கள் தம் மனஅமைதிக்கும் இனஒருமைக் கும் (Individual contentment and social cermony) வழிவகுக்கும் சமயம் எல்லாம் நல்லொழுக்கத்தையே அடிநிலை யாகக் கொண்டு அமைந்துள்ளன. தாம் அடிப்படையாகக் கொள்ளும் ஒழுக்க நெறியை உணர்த்தினவன், தம் சமயத்தை நிறுவிய மெய்யுணர்ந்த ஆசிரியனே எனக் கொள்ளும் சமயங்களும் பல. அதனை, மெய்யுணரவல்ல ஆசிரியர்க்கு முதற்கண் உணர்த்தினவன், உலக முதற்பொருளாக என்றும் உள்ள இறைவனே எனக் கொள்ளும் சமயங்கள் இவ்விருவகையுள், பின்னைய வகையைச் சேர்ந்ததே சைவ சித்தாந்தம் என்பது. இஃது உலகு, உயிர், இறைவன் என்னும் முப்பொருள் உண்மை யாகிய அறிவடிப் படையோடு கூடிய ஒழுக்க நெறி.

முதல் வகையைச் சேர்ந்த சமயங்களின் தலைவர்கள் உலகமுதல்வனைப் பற்றி விவரித்துக் கூருமையின், அவை கூறும் சாதனங்கள் தனிமகனுக்குப் பிறமக்களோடு உள்ள தொடர்பு பற்றிய விதியும் விலக்கு மாகவே அமையும். உலகமுதல்வனைப் பற்றியோ, ஒழுக்கத்தைக் கடைபிப்டிக்கும் உயிரைப் பற்றியோ அவை திட்டமாக ஒன்றும் கூறுவதில்லை.

இனி, இரண்டாவது வகையைச் சேர்ந்த சமயங்களை விளக்கிய தலைவர்கள் உலக முதல்வனைத் தாம் கண்டவாறும், அவன் பொருள்சேர்புகழும், உயிரின் பிறப் பிறப்புக்களும், உயிர் தனக்குப் பகையாக உள்ள பாசப்பற்றறுத்து முதற்பொருளைக் கூடுமாறும் விவரித்துக் கூறுவனவாக அமைந்துள்ளன. இங்ஙனம், உண்மையின் எம்மருங்கும் பற்றிய பெற்றிகளைப் பின் முன்மலைவின்றித் தெளிவிக்கும் திருநெறி சைவ சித்தாந்தமே என்பது தலையாய அறிவினர் துணிவு.

> " தேவர் குறளும், திருநான் மறைமுடிவும்,
> மூவர் தமிழும், முனிமொழியுங்-கோவை
> திருவா சகமும், திருமூலர் சொல்லும்
> ஒருவா சகம்என் றுணர். "

என்னும் ஔவையார் உறுதிமொழியைக் கடைப்பிடிக்க வல்லார்க்கு மேற்கூறிய வற்றின் உண்மை தெளிவாகும்.

உலகத்தைப் படைத்து நடத்தும் முதல்வன் ஒருவன் உளன்; அவன் தன் அருட்குணங்கள் பற்றிப் பல பெயர்களாலும் குறித்தற்கு உரியவன்; ஆயினும் அவனைச் சிவன் எனக் குறித்து உணர்தல் சிறப் புடையது என்பது இந்நெறியின் முதன்மை யான கொள்கை. இதனால் இது சைவம் எனப்படுகிறது. இதன் அறிவியல் அடிப் படை (The rational of the religion) சித்தாந்தம் எனப்படும்.

சிவன் என்னும் சொல் மங்கலக் குணத்தினன் (பிறப்பில்லாதவன்) தூய தன்மையன், முற்றுணர்வினன், பேரின்பத் துக்குக் காரணன் என்னும் பொருள்களை ஒருங்கே குறிப்பது ; தன்னை மெய்யுணர் வால் தலைப்பட்டுப் பிறபற்றுக்களை நீக்கித் தன்வண்ணமாக்கித் தூய பேரின்பத்தில் அழுத்துவன் என்னும் கருத்தைத் தோற்று விப்பதாக இருத்தலின், சிவன் என்னும் பெயர் இந்நெறிக்கண் முதன்மையான மறைமொழியாக வைத்து உணர்த்தப் படுகின்றது

" நமஸ்ஸம்பவேசம ஸோபவேச, நமஸ் ஸங்கராயசமய ஸ்ங்கராயச, நமஸ்ஸிவாய

சலிவதராயச '' (உலகவின்ப காரணருக்கு வணக்கம்; துறக்க இன்பப்பிராணருக்கு வணக்கம்; இம்மை இன்பத்தை அளிப் போர்க்கு வணக்கம்; மறுமை இன்பத்தை அளிப்பவருக்கு வணக்கம்; இறவாத இன்ப வடிவினர்க்கு வணக்கம்; தன்னை அணைந் தாரை இறவாத இன்பவடிவமாக்கும் அதி மங்கள் வடிவினர்க்கு வணக்கம்) என்ற பகுதி வேதத்தின் இதயபாகமாக உள்ள யசூர் வேதருத்ர ஆக்கத்தின் உயிர்ப்பகுதி.

இந்நெறி, ஒழுக்கநெறியை இறைவனது உண்மையினை அடிப்படையாக வைத்து உணர்த்தும்; தத்துவக் கொள்கையை உயி ரின் இயல்பை அடிப்படையாக வைத்து உணர்த்தும். ''எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு'' என்பது இந்நெறிக்கண் ஒழுக்கநெறி பற்றிய அடிப்படை முதல்விதி; ''தம்மை உணர்ந்து தமையுடையதன் உணர்வார் எம்மை உடைமை எமைஇக ழார்–தம்மை உணரார் உணரார்'' என்பது சிவஞானபோத நூற்பாயிர அவை யடக்கு.

இந்நெறிக்கண் கூறப்படும் ஒழுக்கம் இரு வகைப்படும்; ஒன்று பொது ஒழுக்கம்; ''ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உப சாரம், உறவு, சீலம்–வழுக்கிலாத் தவம் தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அடக்கம், அறிவொடு அர்ச்சித்தல் ஆதி–இழுக்கிலா அறங்களானல் இரங்குவான் பணி அறங் கள் என்றபடி, இறைவன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் (obedience to god) மற்றையது சிறப்பொழுக்கம்; இறைவனது அருளாற்றலை ஒரு நெறிய மனம் வைத்து உணர்ந்து தலைப்பட்டு, அவன் அருட் குணங்களில் தோய்ந்து, முடிவில் அவன் வண்ணமாய் ஒன்றுதற்கு முயலுதல் [To be in tone with the infinite or the Inner presence (To be in tone with the infinite)] இச்சிறப்பொழுக்கமே சரியை, கிரியையோகம், ஞானம் என நான் காக வைத்து உணர்த்தப்படுவது.

'' இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (9)

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் '' (359)

என்னும் குறட்பாக்கள் இச்சிறப்பொழுக்கத் தைக் குறிப்பனவாதல் ஓர்ந்து உணர்ந்து கொள்க.

இத்தகைய திருநெறியின் உருவகவிளக்க மாக, ஆய்வுப் பயிற்சிக் கூடமாக, சிவனைத் தெளியக்கண்டு உறவுகொள்ளும் அருள் நிலைத்தானமாக அமைந்ததே சிவாலயம்.

'' குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே ''

என்பது பார்பரவும் திருநாவுக்கரசர் திரு மொழி.

இதில் குறிகள் என்றது சிவலிங்கம் முத லிய திருமேனிகளை; அடையாளம் என் றது அத்திருமேனிகளில் உள்ள முக்கண், சடைமுடி, கறைக்கண்டம், ஊர்தி, கொடி பிறைமதி, மூவிலை வேல் முதலியவும், திருக்கூத்துப்போன்ற முதல்வன் செயல் களும் ஆகிய நெறிகள் சரியை முதலியவை யும் அவற்றின் கூறுபாடுகளும்; நேர்மை கருதுவோர் கருதும் உருவாய் நின்று, அவர் செய்யும் வழிபாட்டை ஏற்றுக் கொண்டு எளிதின் அருள்புரிதல். ஊன் கணுர்க்குப் படிமமாகவும், அந்தணர்க்கு வேள்வித்தீயினும், கிரியா யோகநெறி யினர்க்குப் பஞ்சமந்திரம் சாத்திய மந்திரங் களினும், ஞானத்தால் தொழுவார்க்கு எவ்விடத்தும் எதிர்ப்பட்டு அருளுவன் முதல்வன் என்பது முன்னோர் துணிவு. இவை அனைத்தும் பற்பல வேதங்களின் உள்ளுறையாக அமைந்திருப்பினும், திருக் கோயிலுள் செல்லாமல் தடுப்பதும், சென் றும் முதல்வனை நினையாது வேறுபலவற்றை நினைப்பதும் தீவினைப் பயன் என்பது அப் பர்அடிகள் திருவுள்ளக்கிடை.

கண்டபெருமந்திரம் எனப்படும் மூவர் தமிழ் உணர்த்தும் சாதனங்கள் எட்டு. அவை குருவருள், திருநீறு, திருஎழுத் தைந்து, திருக்கோயில், முதல்வன்திருவுரு,

திருவடி, அர்ச்சனை, தொண்டு என்பன. இவற்றுள் திருக்கோயிலும், திருவுருவும் நடுவண் அமையும் முதன்மையுடையவாதல் காண்க.

தமிழ்மறை முடிவாகிய பெரியபுராணம் திருக்கோயில் முதல்வன் உறையும் அருள் நிலைத்தானம் என்பதைச் சுவைபட முதற் சருக்கத்திலே உணர்த்துகிறது;

நம்பிஆரூரர் உலகியல்முறையில், மணம் வந்த புத்தூரில், மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொங்க, திருமணஞ் செய்து கொள்ள முற்படுகின்ருர். அவரைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டிவந்த முதல்வன் விருத்த வேதியராய், திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் பேரவையில், பழஆவணம் காட்டித் தம் பக்கத்தை மெய்ப்பிக்கின்ருர்.

"அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபு ளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்;
இதற்கிவை என்எழுத்து"

என்பது ஆவணத்தில் உள்ள வாசகம்.

எழுதிக் கொடுத்தவர் கையெழுத்து, மேல் எழுத்து இட்டவர்கள் (சாக்ஷிகள்) எழுத்து, இவை அங்குத் தேடிக் கொண்டு வரப்பெற்ற பிற ஓலைகளில் உள்ள கையெழுத்துக்களோடு ஒப்பு நோக்கி—இவை ஒக்கும் சரியானவையே என்று அவையினர் துணிந்தனர்.

"நான்மறை முனிவ ஞர்க்கு, நம்பி ஆரூரர்:
தோற்றீர்"

எனத் தீர்ப்புக் கொடுத்தாய்விட்டது. நம்பி ஆரூரர் விரும்பாத முடிவு ஆயினும் சட்டத்திற்குக் கட்டுப்படுகிருர். ஆவணம் முனிவர் கைக்குத் திருப்பப்பட்டது.

தீர்ப்பை நிறைவேற்றும் சட்டம்: முதன்மையான தடை வருகின்றது. ஆவணம் அங்கு வந்துள்ள விருத்த வேதியர்க்குத் தான் எழுதிக் கொடுப்ப என்பதில் ஐயம் ஏற்படுகிறது.

"அவர்தாமா வெண்ணெய் நல்லூர்ப் பித்தன்?"

"அருமுனி! நீமுன் காட்டும்
ஆவண மிதனில் எங்கள்
பெருமை சேர்பதியே யாகப்
பேசியது; உமக்கிவ் வூரில்
வருமுறை மனையும் நீடு
வாழ்க்கையும் காட்டுக"

என்று அவையினர் வினவுகின்றனர்.

ஆவணத்திற் குறிக்கப்பெற்ற பித்தன் தாமே என வேதியர் மெய்ப்பிக்கவேண்டும். (has to Stablish his identity)! ஆவணம் எழுதப்பட்ட நாளிலிருந்து அன்று வரை தாம் வாழ்ந்துவந்த தமக்கே சொந்தமான வீட்டைக் காட்டினுல்தான், நம்பி ஆரூரரைத் தடுத்து அடிமை கொள்ள முடியும்!

இப்படிச் சட்ட நுணுக்கத்திற்கு இடங் கொடுக்கும் சுவையான சூழ்நிலையை உண்டு பண்ணி எல்லா மக்களையும் திரட்டிய பெருமுனிவர் (விசுவாதி கோருத்ரோ மகர்ஷி: என்பது வேதமொழி) மேல் என்ன செய்கிருர்?

"என்னை ஒருவரும் அறியீர் ஆயின், போதும்" என்றுரைத்து, "திருவருட்டுறையே" புக்கார்.

சிவபிரானது நீடுவாழ்க்கைக்கு உரிய மனையாவது திருக்கோயில் அன்ருே! அங்கு நியதியாகச் சென்று இறைவனை வழிபடுவது இன்றியமையாதது என்பது இறைவன் ஆணை.

நம் உடம்பில் உள்ள அறிவுப் பொறிகள் (மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை) தாமே வெளியிலிருந்து வரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை, புத்தி, ஆங்காரம் என்னும் அகக்கருவிகள் மூலம் இப்பொறிகளை அறியும்படிச் செய்தால்தான் அறியும்; அதுபோல, உயிர்களும், உயிர்க்குயிராய் உள்ள சிவனுல் அறிவிக்கப் பெற்றபோது தான் அறியும். காணப்படும் பேருலகமே இறைவனுக்கு உடம்பு. இறைவனை இக்காரணம் பற்றி விச்சுவரூபி என்கின்றன வேதங்கள்; உலகில் உள்ள சர அசரங்களாகிய உடம்புகளெல்லாம் உறுப்புக்கள்;

அவற்றில் உள்ள உயிர்களே ஞானேந்திரியங்கள் எனப்படும் அறிவுப் பொறிகள். இறைவனே உயிர்; அவனுடைய ஞான சக்தி, கிரியாசக்தி, இச்சாசக்திகளே அந்தக் கரணங்கள்; இப்படி இருந்து, உயிர்களுக்கு உணர்வை விளக்கி வருதலினுல் அவன் உணர்வின்தமி, வாழ்முதல் எனக் குறிக்கப் பெறுகின்ருன்.

"உலகமே உருவமாக யோனிகள் உறுப்ப தாக
இலகுபேர் இச்சா ஞானக் கிரியைஉட்கரணமாக
அலகிலா உயிர்ப்பு லன்கட்கு அறிவினை ஆக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்.

என்பது சிவஞான சித்தித் திருவிருத்தம்.

இந்த ஆழ்ந்த உண்மையை உணர்த்தவே பஞ்சபூதலிங்கத் தலங்கள் உள்ளன. மண், புனல், அனல், வாயு, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களும் ஞாயிறு, மதி, உயிர் என்னும் மூன்றும் ஆகிய எட்டும் சிவனுக்கு வடிவமே. இதனுல் சிவனுக்கு அட்டமூர்த்தி என்னும் பெயர் வழங்குகின்றது. திருப்பெருந்துறையில் சிவன் ஆன்மரூபமாக உளன்.

"சத்தாகிய ஒருவனையே இந்திரன், வருணன், மித்திரன், அழகிய மேலான கருடன் எனப் பலவகையாக அந்தணர் கூறுகின்றனர்" என்பது இருக்கு (மண்டலம் 1. 164. 46) வேத மந்திரம்.

இப்பொருளையே சுவேதாச்சுவதாம், மூன்ரும் அத்தியாயம் இரண்டாம் மந்திரம்:

"ஒருவனே உருத்திரன், இரண்டாமவனுக நிற்பான் அல்லன்; எவன்தன் ஆளும் சத்திகளால் இவ்வுலகங்களைத் தன்வயப் படக் கொண்டு ஆளுகின்ருனே அந்த மக்களே! அவன் உள்ளே மறைத்து உளன்; எல்லா உலகங்களையும் படைத்துக் காத்து முடிய வேண்டிய காலத்தில் தன்கண் ஒடுக்கிக் கொள்கிருன்" என விவரிக்கின்றது.

சிவாலயங்களில் வாயில் காவலராகக் கருவறையின் முன்னே இரு பக்கங்களிலும் நிற்போர் ஒரு கையில் சுட்டு விரலைமட்டும் நிமிர்த்திப் பிற விரல்களை மடக்கிக் காட்டுவது "ஏகோவிறிருத்ரோ" ஒருவனே உருத்திரன் என்பதைக் குறிக்கின்றது; மற்ருெரு கை "இல்லை" "உள்ளே" என்னும் பொருள்பட; நீட்டி விரல்களை உட்பக்கம் மடக்கிக் காட்டுவது; "நத்வீதியாயதஸ்து:" (உலகந்தன் வியாபகத்தில் அடங்கித் தன் வழியினல்லது சுதந்தரமின்றி நிற்றலின்) தானே எல்லாம் ஆதல் பற்றி—இரண்டாமவனுக நிற்பான் அல்லன் எனவும் "பிரத்யங் ஜநாததிஷ்டதி" மக்களே! உள்ளே உளன் எனவும் வந்த உபநிடத அபிநயமாக உள்ளது. இப்படி வேதமொழிகள் உருவகப் படுத்தி அமைக்கப்பெற்றிருத்தல் உணர்ந்து பயனும் இன்பமும் பெறுதற்கு உரியது.

இறைவன் ஒருவனே என்பதை "ஏகனுக அமைந்து நிற்கும் நாதரூப லிங்கம்" உணர்த்துகின்றது. அவன் ஒரு நாமம் ஓர் உருவும் ஒன்றும் இல்லான் ஆயினுங், கருதுவார் கருத்தின்படி, கணேசனுக, தென்முகக் கடவுளாக, சோதிப் பிழம்பாகத்தான் திருமாலாகத்தான், பிரமனுக, துர்க்கையாக இங்ஙனம் நானுவித உருவாய் நமை ஆள்வான் என்பதைக் கருவறையின் வெளிச் சுற்றில் உள்ள கோட்டங்களிலும் விமானத்திலும் அமைக்கப்பெறும் திருவுருவங்கள் குறிக்கும்.

இங்ஙனமே சிவாலயங்கள் அம்பலக் கூத்தர், நாயகர், தென்முகக் கடவுள் முதலிய குறிகளாலும், அடையாளங்களாலும் சைவ சித்தாந்தத்துட் கூறப்படும் பேருண்மைகளை உணர்த்துவனவாகவும் அருள் வடிவாகவும் அமைந்துள்ளமை ஆய்ந்து உணரத்தக்கது.

# வைணவ தத்துவம்

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்,
தமிழ்த்துறைத் தலைவர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

## 1. தொடக்கம் :

இந்நிலவுலகம் தோன்றியநாள்தொட்டு மக்களிடையே ஏதோ ஒருமுறையில் சமய வளர்ச்சி நிலவி வருகின்றது. காலப் போக்கில் மக்களின் அறிவு முதிர்ச்சிக் கேற்ப இச் சமய உணர்ச்சியும் வளர்ந்து பல்வேறு கொள்கைகளுடன் கூடிய பல்வேறு பிரிவு களாக விரிந்தன. இங்ஙனம் பல்வேறு பிரிவு களாக வளர்த்த சமயம் ஏதோ ஒருமுறையில் மக்களின் உயிரோடும் உடலோடும் ஒன்றி நிற்கின்றது. பகலவனையும் கதிர் களையும் வெவ்வேருகப் பிரித்தற்கியலாதது போலவே, சமயத்தையும் மக்களையும் தனித்தனியே பிரித்தற்கியலாது. இங்ஙனம் சமய உணர்ச்சி மக்களை விடாமற் பற்றிக் கொண்டுள்ளது ; அவர்களும் அதனைவிட்டு நீங்கித் தனித்து வாழ இயலாத நிலையி லுள்ளனர். இதனுல் சமயம் என்பதற்கு நெறி, கொள்கை என்ற பொருள்களும் ஏற்படலாயின. மக்கள் அன்ருட வாழ்க்கை ஒழுங்கு பெற நடத்துவதற்கு அமைத்துக் கொண்ட நன்னெறிகளின் தொகுதியே சமயம் என வழங்கப்பெறுவதாகக் கொள்ள லாம். மேற்கூறியவாறு பல பிரிவுகளாகப் பிரிந்த சமயங்களுள் வைணவ சமயமும் ஒன்று. இது திருமாலை முதற்கடவுளாகக் கொண்ட பல உயரிய கொள்கைகள் அடங்கிய ஒரு பரந்த சமயமாகும். தொன்றுதொட்டு வளர்ந்து வரும் இச்சமயத்தின் கருத்துக்கள் பழுத்த திருமாலடியார் களாகிய ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆங்காங்கு பொதிந்து கிடக்கின்றன. அக் கொள்கைகள் ஈண்டுத் தொகுத்துச் சுருக்க மாகக் கூறப்பெறுகின்றன.

வைணவ சமயத்தின்படி இறைவனை அடைவதில் இச்சையுடையவனை சேதனனுக்கு (முமுட்சுவுக்கு) மோட்சம் பெறுங் காலத்தில் மூன்று தத்துவங்களைப்பற்றிய அறிவு உண்டாக வேண்டியது இன்றியமையாதது. அம்மூன்று தத்துவங்களும் சித்து, அசித்து, ஈசுவரன் என்று வழங்கப் பெறுவன. சித்து என்பது, உயிர்களின் தொகுதி. அசித்து என்பது, மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதி என்பது. பிரகிருதியை மூலப்பகுதி என்பர். ஈசுவரன், இறைவன். இவை மூன்றும் '' தத்துவத் திரயம் '' (திரயம் - மூன்று) என்ற பெயரால் வழங்கி வருகின்றன.

## 2. சித்து :

ஞானத்திற்கு இடமான ஆன்மா சித்து என வழங்கப் பெறுகின்றது. இஃது அன்னமயம், பிராணமயம், மனேமயங்கட்கு அப்பாலா யிருப்பது. தேகம், இந்திரியங்கள், மனம், பிராணன், ஞானம் இவற்றிற்கு வேறுபட்டது. அறிகின்ற தலைவனும், அறிவும், அறியப் பெறும் பொருளும் தானுகவே இருப்பது. அணுவின் அளவினையுடைய இந்த ஆன்மா ஆனந்த வடிவத்தைக் கொண்டது ; என்றும் நிலைபெற்றிருப்பது. இது கண் முதலிய இந்திரியங்கட்குத் தோற்ருது ; மனத்தாலும் இதனை நினைக்க முடியாது. இதனைப் பகுதிகளாகப் பிரிக்கவும் முடியாது ; அவயவமும் அற்றது. வளர்த்தல், பருத்தல், குறைதல் முதலிய வேறுபாடுகள் இதற்கு இல்லை. அறிவுமயமாக இருக்கும் இந்த ஆன்மா அறிவுக்கும் இருப்பிடமானது. இந்த அறிவு 'தர்மபூத ஞானம்' என வழங்கப்பெறும். ஆன்மா இறைவன் ஏவியபடி நடப்பது ; அவனுல் தரிக்கப்பெற்று அவனுக்கு அடிமையாக இருப்பது.

ஆன்மா தனக்குத்தானே தோற்றுவது என மேலே சொல்லப் பட்டதல்லவா? எந்தப் பொருளும் காணப்பெறுவதற்கு விளக்கின் ஒளி வேண்டும். ஆனால், விளக்கு மற்றொரு விளக்கு வேண்டாமலேயே தனக்குத்தானே நன்கு விளங்கச் செய்வது போலவே, ஆன்மாவும் ஞானத்தை எதிர்பாராமலேயே தனக்குத்தானே விளங்கும். விளக்கும் அதன் ஒளியும் ஒளியுள்ளவைகளாக இருப்பினும் ஒளிக்கு விளக்கு இருப்பிடமாக இருப்பது போல, ஆன்மாவும் தான் ஞான மயமாக இருப்பினும் தனக்குத் தர்மமான ஞானத்திற்கும் தான் ஆதாரமாக உள்ளது. ஆன்மா ஞானத்திற்குத் தான் இருப்பிட மன்றி ஞானமாத்திரமானால் ‘ நான் அறிவு ’ என்று தன்னை ஞானமாத்திரமாகச் சொல்ல வேண்டும். ‘ நான் இதை அறியா நின்றேன் ’ என்று தன்னை ஞாதாவாக (அறிபவனாக)ச் சொல்லக் கூடாது.

ஆன்மாவுக்கு இன்ப துன்பங்கள் உடம்பின் தொடர்பால் ஏற்படுகின்றன. இத் தொடர்பு தொடக்கம் என்று ஒன்றிராத வினையினால் (கர்மத்தால்) ஏற்படுகின்றது. ஆன்மா எக்காலத்திலும் உளதாயின் பிறப்பு, இறப்பு என்பது என்ன என்ற வினா எழுகின்றது. பிறப்பு என்பது உடல் தொடர்; அஃதாவது ஒருடலை விட்டு பிறிதோருடலை அடைவதேயாகும். இறப்பு என்பது, ஆன்மா உடலைத் துறப்பதாகும். அங்ஙனமே ஆன்மா அணுவளவாக இதயத்தில் மாத்திரம் இருக்குமாகில் அஃது உடலினுள் எல்லாப்பகுதியிலும் உண்டாகும் இன்ப துன்பங்களை அறிவ தெங்ஙனம் என்ற வினாவும் எழுகின்றது. இரத்தினங்கள், கதிரவன், விளக்கு ஆகிய ஒளியுள்ள பொருள்கள் ஓரிடத்திலிருப்பினும் அவற்றின் ஒளி எங்கும் ஒக்கப் பரவுவது போல, ஆன்மாவும் இதயத்தில் இருப்பினும் அதனுடைய தர்ம பூத ஞானம் உடல் முழுவதும் பரவுவதனால் உடலின் எப்பகுதியில் உண்டாகும் இன்ப துன்பங்களையும் அஃது அனுபவிக்கத் தடை இல்லை.

மேலும் சரீரத்தின் எல்லாச் செயல்களும் சரீரியினுடைய நினைவினடியாக உண்டாவது போலவே ஈசுவரனுக்குச் சரீரபூதமான இவ்வான்மாவினுடைய எல்லாச் செயல்களும் சரீரியான பரமாத்மாவினுடைய நினைவினடியாகவே உண்டாகும். வீடு, நிலம், மனைவி, பிள்ளை, தனம், தான்யம், தோட்டம் முதலியவை உடையவனுடைய (ஆண்டானுடைய) செயல்களுக்காகவே நிலைபெற்றிருக்கும். ஆனால், அவை அவனை யொழியவும் தனித்து வேறாக நிலை பெற்றிருக்கும். ஆயினும் ஈசுவரனுக்கு அடிமையாகவுள்ள (சேஷமாக வுள்ள) ஆன்மா, ஆன்மாவை விட்டுப் பிரிந்திராத உடலைப்போல் சேஷியான (ஆண்டான்) ஈசுவரனை ஒழியவும் தான் வேறாகக் காணப்படுதல் இல்லை. இந்த முறையில் ஒவ்வோர் ஆன்மாவும் ஈசுவரனின் உடலாக இருக்கும்.

இந்த சித்து எனப்படும் ஆன்மாவின் தொகுதி பத்தர் (தளைப் பட்டிருப்பவர்), முக்தர், நித்தியர் என்னும் வேற்றுமையால் மூவகைப்பட்டிருக்கும். இவர்களுள் பத்தர் என்பவர், ‘‘மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய’’ பகவானின் மாயையால் மறைக்கப்பட்ட சொரூபத்தையுடையவராய், அநாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவமாகிய வினைகளால் சூழப்பட்டவராய், அவரவருடைய வினைக்குத் தக்கபடி மாறிமாறித் தேவ, மனித, விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்று, துக்க பரம்பரைகளை அநுபவிக்கும் சம்சாரிகளாவர். முக்தர் என்பவர், இவ்வுலகத் தளைகள் கழிந்து பரமபதத்தில் பகவதநுபவ கைங்கர்ய போகரானவர்களாவர். நித்தியர் என்பவர், ஒருநாளும் சம்சார சம்பந்த உணர்வு இல்லாத அனந்தன், சேனை முதலியார் (விஸ்வக்சேனர்), பெரிய திருவடி தொடக்க மானவர்களாவர்.

### 3. அசித்து :

அசித்து என்பது அறிவில்லாத பொருள். இது விகாரத்திற்கு இடமானது; அஃதாவது முன்னைய முன்னைய நிலையைவிட்டு வேறு வேறு நிலைகளை அடைவதாகின்ற வேறுபாட்டிற்கு இடமாய் இருக்கும். இந்த அசித்து இராஜஸ தாமஸங்கள் கலவாத சுத்த சத்து



வீரர் விழிகளிலே வெகுளி

வலக்கையிலுள்ள குத்துவாள் காலடியிற் கிடக்கும் பகைவன் மார்பிலே அழுந்துகிறது

இவ்வுருவம் ஆயிரக்கால் மண்டபம் முகப்புத்தூணில் உள்ளது

வம் என்றும், இராஜஸ தாமஸங்கள் கலந்த மிச்ர தத்துவம் என்றும், சத்துவம் முதலிய குணங்களற்ற சத்துவ சூனியம் என்றும் மூன்று வகைப்படும்.

முதலாவதான இந்த சுத்த சத்துவம் ஆதல், அழிதல் இல்லாதது; ஞானத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கக் கடவது. இறைவனின் அநுபவத்தின் பொருட்டே உண்டான இச்சையாலே நித்திய விபூதியில் (பரமபதத்தில்) விமானம், கோபுரம், மண்டபம், உப்பரிகை முதலிய வடிவுடன் தோற்றக் கடவது. தீ, கதிரவன் முதலிய ஒளியுள்ள பொருள்களும் மின்மினிக்கு ஒப்பாம்படி அளவிறந்த ஒளிவடிவினது. இது நித்தியர், முத்தர், ஈசுவரன் இவர்களாலும் அளவிடுவதற்கு அரியது; கணநேரத்திற்குக் கணநேரம் முன்பில்லாத வியப்பினை உண்டாக்க வல்லதாக இருக்கும். நித்தியர், முக்தர், ஈசுவரன் இவர்கள் ஞானத்தால் தன்னை அறியவேண்டாதபடி ஒளிவிட்டுத் திகழும். ஆனல், சம்சாரிகட்கு அங்ஙனம் தோற்ருது.

இரண்டாவதாகிய மிச்ர தத்துவத்தில் சாத்துவிகம், இராஜஸம், தாமஸம் ஆகிய மூன்றுங்கூடி கர்மவான்களாகிய சம்சாரி சேதனருடைய ஞான ஆனந்தங்கட்கு மறைவை உண்டாக்கும்; அதுவல்லாததனை அதுவாக நினைக்கும் விபரீத அறிவினையும் விளைவிக்கும். இஃது உற்பத்தி விநாசமில்லாதது. இஃது ஈசுவரனுடைய உலகப் படைப்பு முதலியவற்றிற்கு விளையாட்டுக் கருவியாக இருந்து ஏற்றத்தாழ்வு உள்ள இடம் அவை இல்லாத இடம் என்ற இடவேறுபாட்டாலும், அழிக்குங்காலம், படைப்புக்காலம் ஆகிய இரண்டு வகையான கால வேற்றுமையாலும் சூக்கும விகாரங்களையும் தூலமான விகாரங்களையும் உண்டாக்கக் கடவது. இந்த மிச்ர தத்துவம் பிரகிருதி, அவித்யை, மாயை என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்.

இந்த மிச்ர தத்துவம் இருபத்து நான்கு வடிவங்களாக இருக்கும். இவற்றை ஆழ்வார்,

"பொங்கு ஐம்புலனும் பொறிஐந்தும்
கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்கு இவ்வுயிர்ஏய் பிரகிருதி
மான்ஆங்காரம் மனங்களே."[1]

என்று குறிப்பிடுவர். அஃதாவது சேதனரைப் பூரிக்கும்படிச் செய்யும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன்கள் ஐந்தும்; மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறி ஐந்தும்; வாக்கு, கால், கை, வாய், உபத்தம் ஆகிய கருமேந்திரியம் ஐந்தும்; மண், நீர், எரி, கால், ஆகாயம் என்னும் பூதங்கள் ஐந்தும்; இங்குள்ள இந்த ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப் பிரகிருதி ஒன்றும்; மகத் (மான்) தத்துவம் ஒன்றும்; அகங்கார தத்துவம் ஒன்றும்; மனம் ஒன்றும் என்ற இருபத்து நான்காம். அசித்தின் இந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் கலந்துதான் ஈசுவரன் தானுகவும், நான்முகன் மூலமாகவும் இந்த அகிலத்தைப் படைக்கின்ருன்.

அசித்தின் மூன்ருவது வகை காலதத்துவம் ஆகும். இதில் சத்துவம், இராஜஸம், தாமஸம் என்ற பிரகிருதியின் மூன்று குணங்களும் இல்லை. இஃது ஈசுவரப் படைப்பின் பரிணமங்களுக்குக் காரணமாய், தோற்றம் ஈறு அற்றதாய், அவனுடைய படைப்பு, அளிப்பு, அழிப்பு ஆகிய விளையாட்டிற்குக் கருவியாய் அவனுக்கு உடலாகத் திகழும்.

மேற்கூறிய சுத்த சத்துவம், மிச்ர தத்துவம் ஆகிய அசித்தின் இரண்டு பகுதிகளும் ஈசுவரனுக்கும், நித்தியர், முக்தர், பத்தர் என்ற மூன்றுவித ஆன்மாக்களுக்கும் போக்கியமாயும், போகத்திற்கு உபகரணமாயும், போகத்தை அநுபவிக்கத் தக்க இடங்களாயும் இருக்கும்.

### 4. ஈசுவரன் :

இறைவனுகிய ஈசுவரன் சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும், காலத்தாலும் அளவிடப்பெருதவன்; எங்கும் நிறைந்திருப்பவன். மூன்றுவித சேதன அசேதன

1. திருவாய். 10. 7; 10.

பரிணாமரூபமான வேறுபாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப்பட்ட பலன்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலிடமாக இருப்பவன்; தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் முதலிய மங்களகுணக் கூட்டங்களால் அலங்கரிக்கப் பெற்றவன். அவனிடம் இக்குணங்கள் ஆதல் அழிதல் இன்றி எப்பொழுதும் நிறைந்திருக்கும். இவற்றைத் தவிர வாத்சல்யம், சௌசீல்யம், சௌலப்யம் முதலிய எண்ணற்ற குணங்களையும் கொண்டவன். இவ்வுலகினைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரணபூதன். சிறுர் வீடு கட்டி அழிக்குமாப்போல இவை யாவும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாகும் கேவல விளையாட்டேயாகும். இக் கருத்தினையே கம்பநாடன்,

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே."[2]

என்று விளக்குவான். ஆழ்வார் பாடல்களில் அவன் தோய்ந்து நின்ற நிலையே இக்கூற்றுக்குக் காரணமாகலாம். மேலும், அசித்து மாறுபாடடைவதற்கும், உயிர்கள் தத்தம் வினைகட் கேற்ப உடல்களை அடைவதற்கும், பிறகு அவை வீடுபேறு அடைவதற்கும் இவனே காரணன். நித்திய விபூதியாகிய பரமபதத்தில் அவனுக்கெனத் தனியான திவ்வியமங்கள உருவம் உண்டு. அவ்வுருவம் ஈடும் எடுப்புமற்ற பேரொளியினையுடையது; பேரழகு வாய்ந்து கண்டாரை ஈர்ப்பது, யோகியரின் தியானத்திற்கேற்றது. அந்த உருவத்தோடு பெரிய பிராட்டியார், பூமிதேவி, நீளாதேவி ஆகியோர்களுக்கு நாயகனாக இருப்பவன்.

இறைவனுடைய திவ்வியமங்கள உருவம் பரத்துவம் என்றும், வியூகம் என்றும், விபவம் என்றும், அந்தர்யாமித்துவம் என்றும், அர்ச்சாவதாரம் என்றும் ஐந்து வகையோடு கூடியிருக்கும். அவற்றுள் பரத்துவம் காலம் நடையாடாததும், ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாயுமுள்ள வைகுந்தத்தில் (நித்திய விபூதியில்) அயர்வறும் அமரர்கள் என்று வழங்கப்பெறும் அனந்தன், கருடன், விஸ்வக்சேனர் முதலிய நித்தியசூரிகளும் இவ்வுலகத்தளைகளினின்றும் விடுபட்டமுக்தரும் அநுபவித்தற்கு உரியவனாய் எழுந்தருளியிருக்கும் இருப்பாகும். வியூகமாவது, லீலா விபூதியில் (இவ்வுலகில்) அதன் படைப்பு, அளிப்பு, அழிப்பு இவற்றை நடத்துவதற்காகவும், சம்சாரிகட்கு வேண்டியவற்றை ஈந்து, வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தற் பொருட்டும், மோட்சத்தை விரும்பி, தன்னை இடையறாது நினைப்பவர்கட்கு (உபாசிக்குமவர்கட்கு) அவர்களது தளைகளைப் போக்கித் தன்னை வந்து அடைவதற்குக் காரணமான பேரருளைச் சுரப்பதற்காகவும் வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் வடிவங்கொண்டு இருக்கும் நிலையாகும். இவற்றுள் வாசுதேவரூபமான பரத்துவத்தில் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். ஏனைய மூன்றில் அவரவர் மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும். சங்கர்ஷணரானவர் ஞானம், பலம் என்ற இரண்டு குணங்களோடு கூடிப் பிரகிருதிக்குள் உருமாய்ந்து கிடக்கும் உயிர்த் தத்துவத்திற்குத் தலைவனாக நின்று (அதிஷ்டித்து) அதனைப் பிரகிருதியினின்றும் வேருக்கி பிரத்யும்ன நிலையையும் அடைந்து வேதம் முதலிய சாத்திரங்களை வெளியிடுவதையும், உலக அழிப்பையும் செய்பவராக இருப்பார். பிரத்யும்னரானவர் ஐசுவரியம், வீரியம் என்ற இரண்டு குணங்களோடு கூடி ஞானத்திற்கு ஊற்றுவாயான மனஸ்தத்துவத்திற்குத் தலைவனாக நின்று சாத்திர முறைப்படி ஒழுகவேண்டிய தர்மோபதேசத்தையும் சுத்தவர்க்க சிருஷ்டி

2. கம்பரா. காப்பு.

யையும் செய்பவராக இருப்பார். அநிருத்த ரானவர் சக்தி, தேஜஸ் என்ற இரண்டு குணங்களோடும் கூடி உலகப் பாதுகாப்பிற்கும், உயிர்கள் ஈடேறுவதற்குத் தகுதியான தத்துவ ஞானங்களைக் கொடுத்தற்கும், காலப் படைப்பிற்கும், மிச்ரவர்க்க சிருஷ்டிக்கும் உரியவராக இருப்பார். இந்த நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பன்னிரண்டு கிளை வியூகங்களாகப் பிரிந்து கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன் என்ற பெயர்களைப் பெறும்.[3] இவை யாவும் பன்னிரு திங்களின் தலைவர்களாக இருக்கும். இவற்றின் அறிகுறியாக வைணவர்கள் தம் உடலில் துவாதசமாகத் திருமண் காப்பிட்டுக் கொள்வர்.

விபவ அவதாரங்கள் எண்ணிறந்தவை. அவை ஆவேச அவதாரம், முக்கிய அவதாரம் என்று இருவகைப்படும். முன்னவற்றில் கபிலர், தத்ராத்ரேயர், பரசுராமர் போன்ற அவதாரங்கள் அடங்கும். பின்னவற்றில் "ஆதிஅம் சோதி உருவை அங்கு வைத்து, இங்குப் பிறந்த"[4] இராமர், கிருஷ்ணர் முதலான அவதாரங்கள் அடங்கும். இவற்றுள் முக்கிய அவதாரங்கள் யாவும் ஒரு விளக்கினின்று கொளுத்திய மற்றொரு விளக்கு தனக்குக் காரணமான மற்றொரு விளக்கின் தன்மையைப் பெற்றிருக்குமாப்போல, அசாதாரண விக்கிரகத்தின் தன்மையைக் கொண்டிருத்தலால் மோட்சத்தை விரும்புவோர்கட்கு உபாசிக்கத்தக்கவை. இந்த அவதாரங்கள் யாவும் ஈசுவரனின் இச்சை காரணமாக ஏற்பட்டவை. இவற்றின் பலன் அடைந்தாரைக் காக்கை, அவர்களின் விரோதிகளைப் போக்குகை, வைதிக தர்மத்தை நிறுத்துகை ஆகியவற்றின் பொருட்டாகும்.[5] ஈசுவரனுடைய அந்தர்யாமித்துவமானது, சேதனர்களின் உள்ளே புக்கிருந்து எல்லாச் செயல்கட்கும் தான் ஏவுபவனாக இருப்பதோடன்றி, அவர்கட்குத் தியானருசி பிறந்தபோது தியானத்திற்கு உரியவனாதற்காகவும், அவர்களைக் காப்பதற்காகவும் அழகே வடிவெடுத்தாற் போன்ற மங்களகரமான திருமேனியுடன் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவனாய்ப் பெரிய பிராட்டியோடு கட்டைவிரல் அளவாக இதய கமலத்துக்குள்ளே எழுந்தருளியிருக்கும் இருப்பே இந்நிலையாகும். அர்ச்சாவதாரம் என்பது,

> "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்"[6]

என்ற பொய்கையாழ்வாரின் பாசுரப்படி அன்பர்கள் எதைத் தனக்குத் திருமேனியாகக் கொள்ளுகின்றனரோ அதனையே இறைவன் தனக்கு வடிவமாகக் கொண்டுள்ள நிலையாகும். இந்நிலையில் இறைவன் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தோன்றி சந்நிதி பண்ணவேண்டும் என்கின்ற நியமமில்லாதபடி விரும்பிய எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும், எவரிடத்திலும் தோன்றச் சந்நிதி பண்ணி நீராட்டம், தளிகை, இருப்பு முதலிய எல்லாச் செயல்களையும் உடையவனாகக் கொண்டு திவ்விய தேசங்களிலும் அன்பர்களின் திருமாளிகையிலும் எழுந்தருளியிருப்பான். உலகியலில் மண்டியிருப்போருக்குத் தன்பக்கல் ருசியை உண்டாக்குதலும், ருசிபிறந்த பிறகு தன்னைத் துதிப்பவர்களுடைய கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனிதாம்படி போக்கியத்திற்கு இடமாயிருத்தலும், தன்னை உபாயமாகப் பற்றுமளவில் எல்லா உலகினரும் உபாயமாகப் பற்றுதற்குத் தகுதியாயிருத்தலும் பரமபதத்தில் போய் அநுபவிக்க வேண்டாமல்,

> "அண்டர்கோன் அணிஅரங்கன் என்அமுதினைக்
> கண்டகண்கள் மற்றுஒன்றினைக் காணுவே."[7]

என்று திருப்பாணாழ்வார் அநுபவித்தவாறு அநுபவிக்கத் தக்கதாக இருத்தலும் இந்த அர்ச்சாவதாரத்தில் முற்றுப் பெற்று இருக்கும். இந்த ஐந்து நிலைகளையும்,

---

3. திருவாய் 2. 7. (பன்னிரு திருநாமப் பாட்டு).
4. திருவாய் 3. 5 : 5
5 பகவத் கீதை 4 : 8
6 முதல் திருவந். 44
7. அமலனாதிபிரான். 10.

" விண்மீது இருப்பாய் ! மலைமேல் நிற்பாய் !
கடல் சேர்ப்பாய் !
மண்மீது உழல்வாய் ! இவற்றுள் எங்கும்
மறைந்து உறைவாய் !"[8]

என்ற பாசுரத்தில் குறிப்பிடுவர் நம்மாழ்வார். இவ்வாழ்வாரும் பிற ஆழ்வார்களும் இந்த ஐந்து நிலைகளையும் பல இடங்களில் தம் பிரபந்தங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

**5. மூன்றும் இயைந்த நிலை :**

மேற்கூறிய மூன்று தத்துவங்களும் தனித் தனி இயல்புடைய வேறு வேறு பொருள்கள்; என்றும் அழிவில்லாதவை. ஆயினும், இவை மூன்றும் எக்காலத்தும் சேர்ந்தே உள்ளன. இங்ஙனம் மூன்றும் ஒன்றோடொன்று இயைந்துள்ள நிலையை,

" திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும் ஆய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே." [9]

என விளக்குவர் ஆழ்வார். இவற்றுள் இறைவன் சித்து (உயிர்), அசித்து (உடல்) இவை இரண்டினுள்ளும் அந்தர்யாமியாக உள்ளான். இதுவே இவற்றின் நுண்ணிய நிலை (சூக்குமநிலை). மூலப்பகுதி விரிவடைந்து மக்கள், விலங்கு முதலியவற்றின் வடிவங்களாகவும், மற்றுமுள்ள பொருள்களாகவும் பரிணமிக்கின்றது. உயிர் தன்னுடைய புண்ணிய பாவங்கட்கேற்ப ஒவ்வோருடம்பை அடைகின்றது. அதுவே உயிருக்குப் பிறப்பாகும். இறைவன் மூலப் பகுதியின் விகாரமாகிய எல்லாப் பொருள்களுள்ளும் எல்லா உயிர்களுள்ளும் அந்தர்யாமியாக மறைந்துள்ளான். இதுவே இவற்றின் பருநிலை (தூலநிலை).

மேற்கூறிய பாசுரத்தில் 'திடவிசும்பு எரிவளி நீர்நிலம்' என்ற பகுதியால் இப் பெரிய உலகங்களுக்குக் காரணமான ஐந்து பூதங்களைக் கூறுகின்றார் ஆழ்வார். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஐந்து பூதங்களின் கூட்டுறவால் உண்டாவதை,

" அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவுஎனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபாடு உற்ற வீக்கம். [10]

என்று கம்ப நாடனும் குறிப்பிடுவன். 'இவைமிசைப் படர் பொருள் முழுவதும் 'ஆய்' என்பதில் 'ஆக்கி' என்னாது 'ஆகி' என்றது 'இறைவனே எல்லாப் பொருள்களாகவும் விரிந்துள்ளான்' என்பதை வற்புறுத்தும் பொருட்டு.

" அனைத்தும் நீ அனைத்துப் பொருளும் நீ." [11]

என்ற பரிபாடலின் அடியும் இதனை உணர்த்தும். 'அவை அவை தொறும் சுரந்து எங்கும் பரந்துளன்': அங்ஙனம் உண்டாக்கப் பெற்ற ஒவ்வொரு பொருளிலும் அந்தர்யாமியாக மறைந்து நின்றும், அவை எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி எங்கும் வியாபித்தும் உளன்; இந்த இரு தன்மைகளையும் 'அந்தர்யாமித்துவம்', 'வியாபகத் துவம்' என்று மெய்ப்பொருள் நூலார் கூறுவர், இந்த இரண்டையும் ஆழ்வார்,

" அறிகிலேன் - தன்னுள் அனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்." [12]

என்று மற்றோர் இடத்திலும் விளக்குவர். 'தன்னுள் அனைத்துலகம் நிற்க' என்றது வியாபகத் தன்மையை. 'தானும் அவற்றுள் நிற்கும் பிரான்' என்றது அந்தர்யாமியாம் நிலைமையை இங்ஙனம் இறைவன் பொருள்களினுள் மறைந்துறைவது எதுபோல எனின், 'உடல்மிசை உயிர் எனக் கரந்துளன்'—உடலினுள் உயிர் எவ்வாறு உளதோ அவ்வாறு அவ்வுயிர் உட்பட எல்லாப் பொருள்களினுள்ளும் இறைவன் உள்ளான்.

இதனை இன்னும் சற்று விரிவாக விளக்குவோம். உயிர் உடம்பினுள் இருந்து அதனைத் தரித்திருக்கச் செய்கின்றது. உயிரின்றேல் உடல் வீழ்ந்து விடுதல் கண்கூடு. மேலும், உயிர்தான் உடலை இயக்குகின்றது. உயிர் உடலுக்குத் தலைவனாக உள்ளது. அங்ஙனமே இறைவன்

---

8. திருவாய் 6. 9 : 5

9. திருவாய். 1. 1 : 2

10. கம்பரா. சுந்தர. காப்பு. இதே கருத்தினை "மண்திணிந்த" என்ற புறப்பாட்டிலும் (புறம்-2) " நிலம், தீ, நீர், வளி என்ற தொல்காப்பிய நூற்பாவாலும் (தொல். பொருள். மரபு-39) காணலாம்.

11. பரிபா. 3. வரி, 68.

12. திருவாய். 9. 6 : 4.

எல்லாப் பொருளுள்ளும் இருந்து அவற்றைத் தரிக்கச் செய்து, அவற்றைத் தன் விருப்பம்போல் நடத்தி அவற்றிற்குத் தலைவனாக இருக்கின்றனன். ஆயினும் உடம்பினுள் உயிர் இருப்பதற்கும், எல்லாப் பொருளினும் இறைவன் இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. உயிர் அணு அளவினதாய் உடம்பினுள் ஓரிடத்திலிருந்து, தன் ஞானத்தால் (தர்மபூதஞானம்) உடல் முழுவதும் வியாபித்து இவ்வுடலைப்பற்றிய நிகழ்ச்சிகளை உணர்த்துகின்றது. இறைவன் அங்ஙனமின்றி ஒவ்வொரு பொருளுள்ளும் முழுவதும் தன் சொரூபத்தோடு வியாபித்துள்ளான். அன்றியும், உடலினுள் உயிர் இருப்பதற்கும், உடல் உயிர் ஆகிய இரண்டினுள் இறைவன் இருப்பதற்கும் மற்றொரு வேறுபாடும் உண்டு. உயிர் உடலினுள் இருக்கும்போது அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வுகள் (விகாரங்கள்) உயிருக்கு உண்டாவதில்லை. ஆனால் அவ்வுடலைப்பற்றிய இன்பதுன்ப உணர்ச்சிகள், அறிவின் சுருக்கம் பெருக்கம் ஆகியவை உயிருக்கு உண்டு. உடலின்மீது தண்ணிய காற்று வீசுங்கால் இன்புறுதலும், தீ சுடுங்கால் துன்புறுதலும் உடலினுள் இருக்கும் உயிருக்கு நேரிடுகின்றன. இனி, குழந்தைப் பருவத்தில் அதனுள் இருக்கும் உயிரின் அறிவு சுருங்கிய நிலையிலிருந்து பின்பு வளர்ச்சியுறுதலைக் காண்கிறோம். மற்றும், மக்கள் உடம்பினுள் உள்ள உயிர் ஐம்பொறியறிவும் உடையதாக உள்ளது. அவ்வுயிரே மரம், எறும்பு முதலிய உடல்களில் புகுந்தால் ஐம்பொறியறிவு மின்றிச் சில குறையவும் பெறுகின்றன. இனி உயிர் பருவுடலைப் பெறாத நிலையில் அறிவு சுருங்கியிருத்தலும், பருவுடலைப் பெற்ற நிலையில் அறிவு விரிந்திருத்தலும் உண்டு. இங்ஙனமாக உடலைப் பற்றி நிற்கும் உயிர் அவ்வுடலுக்கேற்ப இன்பதுன்ப உணர்ச்சிகளும், அறிவின் சுருக்கமும் பெருக்கமும் அடைதல் தெளிவாகும். ஆனால், உடல் உயிர் இவ்விரண்டினுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை இவ் வேறுபாடுகள் சிறிதும் அடைவதில்லை. இக்கருத்தினை ஆழ்வார்,

"புலனொடு புலன் அலன்"[13]

எனச் சுருக்கமாக உரைத்துள்ளார். பிறிதோரிடத்தில் இதனையே,

"யாவையும் எவரும் தானாய்,
அவரவர் சமயம் தோறும்
தோய்வுஇலன்; புலன்ஐந் துக்கும்
சொலப்படான்; உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்று இலாத
பாவனை அதனைக் கூடில்,
அவனையும்கூட லாமே"[14]

என விரிவாக வெளியிட்டுள்ளார் அவர். உயர்திணை அஃறிணையாகிய எல்லாப் பொருளுள்ளும் இறைவன் கலந்து நின்று அவற்றின் அவத்தைகள் தன்னைத் தொடாதபடி இருக்கின்றான். உடலிலுள்ள உயிர் அவ்வுடலுக்குரிய வளர்ச்சி, தேய்வு, நரை, திரை முதலிய விகாரங்களை அடைவதில்லை என்பதை நாம் உணர்வோமாயின், அவ்வுடல் உயிர் இரண்டின் விகாரங்களும் இறைவனை அடைவதில்லை என்பதையும் உணரலாம் என்பது இதற்கு இராமானுஜர் அருளிய விளக்கம் ஆகும்.[15]

திருக்குறளின் உரையாசிரியராகிய பரிமேலழகர் இக்கருத்தினையே,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு"[15a]

என்னும் குறளுரையில் விளக்கியுள்ளார். 'செம்பொருள்' என்ற தொடர் இறைவனையே குறிக்கின்றதாகக் கொள்ளலாம். "தோற்றக்கேடு இன்மையின் நித்தமாய், நோயின்மையால் தன்னை ஒன்றுங் கலத்தலின்மையின் தூயதாய், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல்பற்றி அதனைச் 'செம்பொருள்' என்றார்" என அவர் கூறியது காண்க. இதனையே ஆழ்வாரும்,

"உயர்வுஅற உயர்நலமுடையவன் யவன்"[16]

---

13. திருவாய். 1 : 3.
14. திருவாய், 3, 4 : 10.
15. ஈட்டின் தமிழாக்கம், 3, 4 : 10. உரை காண்க.
15a. குறள்–358.
16. திருவாய். 1. 1 : 1.

என்று குறிப்பிட்டார். 'இதற்குமேல் செவ்விய பொருள் வேறொன்றும் இல்லை' எனச் செப்புவதற்கான செம்மையுடையது இறைவனைத் தவிர வேறு உயரிய பொருள் இல்லையன்றோ? இங்ஙனம் உடலினுள் இருக்கும் உயிருக்குச் சில வேறுபாடுகள் உண்டாவதற்கும், உடல் உயிர் இரண்டினுள்ளும் இருக்கும் இறைவனுக்கு யாதொரு வேறுபாடும் உண்டாகாமைக்கும் காரணம், வினைத்தொடர்பு உண்மையும் வினைத் தொடர்பு இன்மையுமே ஆகும். உயிர் தான் செய்த நல்வினை தீவினைகளின்[17] காரணமாக அவற்றின் பயனை நுகர்வதற்கு ஒருடலை அடைவதனால் அதற்கேற்பச் சில வேறுபாடுகள் உண்டாகின்றன. இறைவன் தன் அருளே காரணமாக அவற்றுள் கலந்து நிற்கின்றனனாதலின் அவனை ஒரு வேறுபாடும் எய்வதில்லை. இதனை "ஈடு" ஓர் அருமையான எடுத்துக் காட்டால் விளக்குகின்றது. பிறருக்குத் தீங்கிழைத்த ஒருவன் அதன் காரணமாக ஒறுக்கப்பெற்றுச் சிறையில் உள்ளான். சிறைச்சாலைச் செயல்கள் செவ்வனே நடைபெறுகின்றனவா என்பதைக் காண்பதற்கு அரசன் சிறையுள் புகுகின்றான். அந்நேரத்தில் தீங்கிழைத்தவன், அரசன் ஆகிய இருவரும் சிறைச்சாலையினுள் உள்ளாராயினும், இருவர் மனநிலையும் ஒன்றாகாது. தீங்கிழைத்தவன் மனம் துன்புறுதலையும் நாடாளும் அரசனின் மனம் அருளுதலையும் உடையனவாகுமன்றோ? தீங்கிழைத்தவன் அநுபவிக்கும் சிறைத்துன்பம் அரசனுக்கு இல்லை. உயிரின் நிலை தீங்கிழைத்தவனின் நிலையினையும், இறைவனின் நிலை நாடாளும் மன்னனின் நிலையினையும் ஒத்துள்ளன. இங்ஙனம் இறைவன் எப்பொருளுள்ளும் தங்கியிருத்தலால்தான் அவை பொருள்களாக ஒவ்வொரு பெயரையுடையனவாக உள்ளன. இறைவனாகிய திருமால் உயிருக்குள் உயிராக விளங்குவதைப் பரிபாடலும்,

> "வடுவில் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த
> கெடுவில் கேள்வியுள் நடுவா குதலும்
> இந்நிலைத் தெரிபொருள் தேரின் இந்நிலை"[18]

என்று அழகாக உணர்த்துகின்றது. தவறில்லா விரதங்களையுடைய ஞானிகள் ஆராய்ந்த வேதத்தால் தெரிந்துணரின் உயிர்தோறும் அந்தர்யாமியாய் நிற்றல் நினக்கே உள்ள சிறப்பாகும்' என்ற கருத்தினைக் காண்க.

எல்லாப் பொருளுள்ளும் அந்தர்யாமியாகவுள்ள இறைவனே ஊழியிறுதியில் அப்பொருள் எல்லாவற்றையும் அழிக்கின்றான். அஃதாவது, செயல் உருவமாக நின்ற எல்லாப் பொருள்களையும் காரண உருவமாக ஒடுங்கச் செய்து தன்னிடத்து அமைத்துக் கொள்ளுகின்றான். 'அழித்தல்' என்னாது "உண்ட" என்ற சொல்லின் பொருள் கருதத்தக்கது. சுடர்மிகு சுருதியுள் (உளன்)—இங்ஙனம் எல்லாப் பொருளுள்ளும் கலந்து நிற்கும் அவன் வேதத்தின் கண்ணே உளன். அஃதாவது, இங்ஙனம் கூறியதற்கு வேதமே சான்று என்பது கருத்து; அவனுடைய நிலை வேதத்தினால் உணரப்பெறும் என்று கொள்ளினும் அமையும். அழிவில்லாததாய்க் குற்றமற்றதாய் இருக்கும் காரணத்தால் வேதம் 'சுடர்மிகு சுருதி' எனப்பட்டது. வேதம் அழிவில்லாதது என்பது சமயக் கொள்கை.

> "மாயா வாய் மொழி"[19]
> "முன்னை மரபின் முதுமொழி"[20]

என்ற வேதத்தைக் குறிக்கும் பரிபாடலின் சொற்றொடர்களையும் காண்க. வாய்மொழி-வேதம், மேலும், இறைவன் ஐம்பூதங்களில் அவற்றின் பண்பாகவும் இருக்கும் நிலையை,

> "கரவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
> வரன்நவில் திறல்வலி அளிபொறை ஆய்நின்ற
> பரன்"[21]

என வெளியிட்டுள்ளார் ஆழ்வார். ஆகாயத்

---

17. ஒருவருடைய நல்வினை தீவினையாகிய வினைத்தொகுதியை, **சஞ்சிதம்**, **பிராப்தம்**, **ஆகாமியம்** என மூவகையாகப் பகுத்துப் பேசுவர் மெய்ப்பொருளியலார். இப்பிறப்பில் அநுபவித்தற்கென்று அளந்துகொள்ளப்பட்ட வினை **பிராப்தம்** என்பது; எஞ்சிய வினைத்தொகுதி **சஞ்சிதம்**; இப்பிறப்பில் செய்யப்பெறும் வினைகள் **ஆகாமியம்** ஆகும்.

18. பரிபா. 2, வரி (24–26). 19. பரிபா. 3, வரி 11 20. பரிபா. 3, வரி 47 21. திருவாய். 1. 1 : 11

தின்கண் ஒலியாகவும், தீயின்கண் அழிக்கும் ஆற்றலாகவும், காற்றின்கண் வன்மையாகவும், நீரின்கண் அளியாகவும், நிலத்தின்கண் பொறுக்கும் தன்மையாகவும் இறைவன் உள்ளான். எனவே இறைவன் ஐம்பூதங்களாகவும், அவற்றின் பண்புகளாகவும் இருக்கின்ருன். இங்ஙனம் பரம் பொருளாகிய திருமால் எல்லாப் பொருள்களுள்ளும் எக்காலத்தும் விட்டுப் பிரியாது கலந்து அந்தர்யாமியாக இருக்கும் நிலேயே ‘சரீர - சரீரி - பாவனே’ (உடல் - உயிர்த் தொடர்பு) என்று கூறப்பெறும்.

## 6. மூன்று மந்திரங்கள் :

வைணவ சமயத்தில் வீடுபேற்றை அடைய விரும்புகின்றவன் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் ஆகிய மூன்று மறைமொழிகளேத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். திருமந்திரத்தில் ‘ஓம்’, ‘நமஃ’, ‘நாராயணுய’ என்ற மூன்று பதங்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் ‘ஓம்’ என்ற பதத்தின் பொருளேயே ‘நமஃ’ ‘நாராயணுய’ என்னும் மற்ற இரு பதங்களும் விரிவுபடுத்துகின்றன. இவ்விரு பதங்களின் பொருளேயே துவயம் விரிக்கின்றது. இத்துவயத்தின் பொருளேயே சரம சுலோகம் விரிவாக விளக்குகின்றது. இம்மூன்று மந்திரங்களும் சகல வேதங்களின் சாரமான பொருளேத் தெரிவிப்பதனுலும், இவற்றின் பொருளே உணராதார் காதில் விழாதவாறு இவற்றை மறைக்க வேண்டியிருத்தலினுலும், இவைகள் “இரகசியங்கள்” (மறை மொழிகள்) எனப் பெயர் பெற்றன.

இவற்றுள் ‘நாராயணன்’ என்ற பெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் ‘பெரிய திருமந்திரம்’ என்ற சிறப்பினேப் பெறுகின்றது. இதற்கு நம் முன்னேர் விரிவாகப் பொருள் எழுதியுள்ளனர். நாராயணன் என்பது, ‘நாரம்’, ‘அயனம்’ என்னும் இரண்டு சொற்களால் ஆன தொடர். இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறப்பெற்றுள்ளது.[22] நாரம் - அழிவில்லாத பொருள்களின் கூட்டம்; அதை மூலப் பகுதியின் விகாரமுள்ள எல்லாப் பொருள்களும், எல்லா உயிர்களும் மோட்சமாகிய பரமபதத்திலுள்ள எல்லாப் பொருள்களுமாம். அயனம்-இடம். ‘நாராயணன்’ என்னும் இத்தொடர், ‘அழிவில்லாத பொருள்களின் கூட்டத்திற்கு இடமாக உடையவன்’ என்றும், ‘அழிவில்லாத பொருள்களே இடமாக உடையவன்’’ என்றும் இருபொருள் கொள்ளுதற்குரியது. அழிவில்லாத பொருள்களின் கூட்டத்திற்கு இடமாக உள்ளவன் என்பது, இறைவன் எல்லாப் பொருள்களேயும் தனக்குள் அடக்கி எங்கும் வியாபித்துள்ள நிலேயை உணர்த்தும் (வியாபகத்துவம்). அழிவில்லாத பொருள்களே இடமாக உள்ளவன் என்பது, இறைவன் எல்லாப் பொருள்கட்கும் அந்தர்யாமியாகவுள்ள நிலேயை உணர்த்தும் (அந்தர்யாமித்துவம்). இங்ஙனம் நம் முன்னேர் பொருள் கொண்டமைக்கு அடிப்படையாகவுள்ளது ஆழ்வாரது பாசுரமேயாகும்.

> “அறிகிலேன் தன்னுள் அனேத்துலகும் நிற்க
> நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும்பிரான்.”[23]

என்று திருவாய்மொழிப் பாசுரத்தில் ‘தன்னுள் அனேத்துலகும் நிற்க’ என்பது அழிவில்லாப் பொருள்களின் கூட்டத்துக்கு இடமாக உள்ளவன் என்ற கருத்தினே உணர்த்துவதாகவும், ‘நெறியினுல் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்’ என்பது, அப்பொருள்கட்குள்ளே அந்தர்யாமியாக உள்ளவன் என்ற கருத்தைக் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய நற்றிணேயின் கடவுள் வாழ்த்துப் பாடல் இக்கருத்துக்களே மிக அழகாக விளக்குகின்றது.

> “மாநிலம் சேவடி யாகத் தூநீர்
> வளேநரல் பௌவம் உடுக்கை யாக
> விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
> பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணுக

22. முமுட்சுப்படி : திருமந்திரம்—சூத்திரம் 95, 96.

23. திருவாய் 9. 6 : 4.

இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே."[24]

என்ற அப்பாடலில் 'இயன்ற வெல்லாம் பயின்று அகத்தடக்கிய வேத முதல்வன் என்ப' என்பதே ஈண்டு வேண்டப்படுவது. 'உலகத்தில் தோன்றியுள்ள எல்லாப் பொருள்களினுள்ளும் (உயிர் உயிரல் பொருளாகிய எல்லாப் பொருள்களினுள்ளும்) அந்தர்யாமியாய் நின்று, அவ்வெல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே அடக்கியுள்ள (வியாபகமாகவுள்ள) வேதத்தால் உணர்த்தப் பெறும் முதற்பொருள் என்று மெய்யுணர்ந்தோர் கூறுவர்' என்ற நம் முன்னோர் கொண்ட கருத்தும் ஆழ்வார் கொண்ட கருத்தும் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிய கருத்தேயாகும். திருமங்கை யாழ்வாரும் இதனையே,

" பவ்வநீர் உடையாடை ஆகச் சுற்றி
பார்அகலம் திருவடியா பவனம் மெய்யா
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்."[25]

என்று மிக அழகாக விளக்குவதையும் காண்க. எட்டெழுத்து மந்திரத்தின் பெருமையை ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் ஆங்காங்கு விளக்கியுள்ளனர்.[26] இவற்றுள் திருமங்கை யாழ்வாரின்,

" குலந்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்."[27]

என்ற பாசுரம் நாராயண மந்திரம் தரும் பலன்களைப் பகர்ந்து போற்றுகின்றது. எட்டெழுத்து மந்திரத்தில் 'நாராயணன்' என்பது நீங்கலாக ஏனைய பகுதிகட்குக் கூறப்பெற்ற பொருள்களும் ஆழ்வார்களின் பாசுரங்களில் இலைமறை காய்கள்போல் ஆங்காங்கே மிளிர்வனவாகும்.

## 7. ஆன்மா இறைவனை அடையும் வழிகள் :

ஆன்மா இறைவனை அடைவதற்கு வைணவ சமயத்தில் இரண்டு வழிகள் கூறப்பெறுகின்றன. ஒன்று, பக்தி; மற்றொன்று, பிரபத்தி. கருமயோகம், ஞானயோகம் மூலம் பக்தியோகம் சரியான பக்குவ நிலையினை அடைகின்றது. யாதொரு பலனையும் எதிர்பாராது செய்யப்பெறும் கருமத்தால் மனம் தூய்மை யடைகின்றது. இஃது ஆன்மா தியானத்தில் அழுந்த வழியாகவும் அமைகின்றது.

" பரிவதுஇல் ஈசனைப் பாடி
விரிவது மேவல் உறுவீர்!
பிரிவகை இன்றிநல் நீர்தூய்
புரிவதும் புகை பூவே."[28]

என்ற பாசுரத்தில் பலனை எதிர்பாராது இறைவனுக்குச் செய்யப்பெறும் கருமம் கூறப்பெறுகின்றது. கருமத்தின் அடுத்த நிலையாகிய ஞானயோகம்,

" ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்தன் நாமங்கள்
தானத்தால் மற்றுஅவன்பேர் சாற்றினால், வானத்து
அணிஅமரர் ஆக்குவிக்கும்."[29]

என்ற பாசுரத்தில் பகரப்பெறுகின்றது. தியானத்தின் மூலம் ஆன்மா தன் உண்மை நிலையை உணர்ந்துதான் இறைவனைச் சார்ந்திருக்கும் நிலையை அறிகின்றது. அதன் பிறகு அஃது இறைவனை அடைய 'அவாக்' கொள்ளுகின்றது.[30] இந்த 'அவா' ஆழ்வாரிடம் படிப்படியாக வளர்ந்து பேருருவங் கொள்வதை அவரது பாசுரங்கள் வாயிலாக அறிகின்றோம்.[31] இந்நிலையிலும் ஆன்மா தியானத்தில் அழுந்துகின்றது. ஞானத்தைப்போல் பக்தியிலும் தியானநிலை உண்டு. இந்த தியான நிலையில்தான் ஆன்மா தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை அறிகின்றது.

24. நற்றிணை. 1.
25. பெரிய திருமொழி. 6. 6 : 3.
26. திருவாய். 10. 5 : 1 பெரிய திருமொழி 1. 1 : 6 10. மு. திருவந். 51, 95; இரண்டாம். திருவந். 3, 8, 39, 44, 92. நான்காம் திருவந். 4, 13, 63, 64, 69; பெரிய. திருவந். 49, 59.
27. பெரிய திருமொழி 1. 1; 9.
28. திருவாய், 1. 6 : 1.
29. இரண்டாம். திருவந் 2.
30. திருவிருத். 84.
31. திருவாய் 5. 3 : 4; 7. 3 : 6, 8.



மல்லப்பக்கட்ட கோபுரம்

இது ஆதித்யதேவன் மகன் சந்திரபேந்திரன் செய்த பணி.
இது ஏனைய கோபுரங்களைக் காட்டிலும் சிறியதாதலின்
கட்டைக்கோபுரம் என வழங்கலாயிற்று.

" உய்த்துஉணர்வு என்னும் ஒளிகொள் விளக்குஏற்றி
வைத்துஅவனை நாடி வலைப்படுத்தேன்."[32]

என்ற பேயாழ்வாரின் பாசுரத்தில் இந்த நிலையினை அறியலாம். ஞானமே பக்தி நிலையாக முதிர்கின்றது : இதுவே " ஞானம் கனிந்த நலம் "[33] என்று அமுதனர் குறிப்பிடுவது. பக்தி முதிர்ந்து முழுநிலையினை அடையுங்கால் ஆன்மா இறைவனையே காண்கின்றது. ஆழ்வார்களின் பாசுரங்களில் இந்நிலை ஆங்காங்கு சுட்டியுரைக்கப் பெறுவதைக் காணலாம்.

பக்தி வழியை எல்லோரும், எல்லா நிலையினரும் மேற்கொள்ள எளிதாக இருப்பது 'பிரபத்தி' எனப்படும் 'சரணுகதி' நெறியாகும். பாகவதமரபுப்படி இந்நெறியே ஆன்மா சம்சாரத்தினின்றும் விடுதலை பெறுவதற்குரிய செந்நெறியாகும். ஆழ்வார்கள் பக்தி நெறியை ஆங்காங்கு வலியுறுத்தினுலும் அதிகமாக வலியுறுத்துவது இந்நெறியினையே யாகும்.

" ' அகலகில்லேன் இறையும் ' என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா !
நிகர்இல் புகழாய் ! உலகம்மூன்று
உடையாய் ! என்னை ஆள்வானே !
நிகர்இல் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே !
புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே."[34]

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் இந்நெறியினை வற்புறுத்துவதைக் காண்க. இந்த இரண்டு நெறிகளையும்பற்றிய விரிவினை வைணவ மறை நூல்களில் கண்டு தெரியலாம்.

## 8. வீடுபேற்றின் தன்மை :

வீடுபேறு என்பதுபற்றிச் சமய நூல்கள் பலவகையாகப் பகரும். வைணவ சமயக் கருத்தின்படி வீடு என்பது ஒரு தனி உலகம் ஆகும். இதனை ஆழ்வார் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

" புலன் ஐந்து மேவும் பொறிஐந்தும் நீங்கி
நலம் அந்தம் இல்லதுஓர் நாடு புகுவீர் "[35]

என்ற பாசுரத்தில் ' நலம் அந்தம் இல்லது ஓர் நாடு' என்றது காண்க. இதில் 'அந்தம் இல்லது' என்பதை நலம், நாடு என்ற இரண்டிற்கும் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். அந்தம் இல்லதோர் நாடு - அழிவில்லாத ஒப்பற்ற நாடு. நலம் அந்தம் இல்லதோர்நாடு - அழிவில்லாத இன்பத்தையுடைய நாடு. நலம் - இன்பம் : நாடும் அழிவில்லாதது ; அதனை அடைந்தார்க்கு உண்டாகும் இன்பமும் அழிவில்லாதது. " அந்தமில் இன்பத்து அழிவில் வீடு "[36] என்பர் பரிமேலழகர். திருவள்ளுவரும்,

" மலர்மிசை ஏகினுன் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."[37]

என்ற குறளில் வீட்டை (மோட்சத்தை) நிலம் என்றுர். இக்கருத்தினையே அவர் " வரன் என்னும் வைப்பு "[38]—எல்லா உலகத்திலும் மேம்பட்ட வீட்டுலகம்; "வானேர்க்கு உயர்ந்த உலகம் "[39] - தேவர்களாலும் அடைய முடியாத வீட்டுலகம்; "வானம்"[40]- வீட்டுலகம் ; என்று மேலும் விளக்குவர். இறுதியில் கூறப்பெற்ற 'வானம்' தத்துவ ஞானம் பெற்றவர் அடையும் இடமாகக் கூறப்பெற்றமையால் இங்கு 'வானம்' என்பது வீட்டுலகத்தைக் குறித்தது. தத்துவ ஞானம் பெற்றவர்கட்கு இவ்வுலகத்தைவிட வீட்டுலகம் அண்மையில் இருப்பதாகத் தோன்றும். இதனையே ஆழ்வாரும்,

" பொன்னுலகு ஆளீரோ
புவனிமுழுதும் ஆளீரோ "[41]

என்பதனுல் தத்துவ ஞானிகட்கு இவ்வுலகத்தினும் வீடு அணித்தாகத் தோன்றும் என்ற குறிப்பினை வெளியிட்டுள்ளமையைக் காண்க. மேலும் அவர் வீட்டினை "வைகுந்தம்"[42] "இலங்குவான்"[43] "பொன்

32. மூன்றும். திருவந். 94.
33. இரா. நூற். 66.
34. திருவாய். 6. 10 : 10.
35. திருவாய். 2. 8 : 4
36. அறத்துப்பால் - உரைப்பாயிரம்.
37. குறள் - 3.
38. குறள் - 24.
39. குறள் - 346
40. குறள் - 353
41. திருவாய் - 6. 8 : 1
42. திருவாய். 1. 2: 11 ; 2. 5 : 11 ; 4. 4: 11; 4. 7 : 11; 5. 10 : 11 முதலியவை.
43. திருவாய். 3 8 : 11

உலகு''[44] என்றெல்லாம் குறிப்பிட்டுள்ள மையையும் காண்க. வீடுபேற்றில் ஆன்மா இறைவனுக்குச் செய்யும் கைங்கர்யத் தையே ஆழ்வார்களின் பாசுரங்கள் வற்புறுத்துகின்றன.[45] இதுவே சிறந்த வைணவ சமய நெறியுமாகும்.

" ஒழிவுஇல் காலம்எல்லாம் உடனாய் மன்னி
வழுஇலா அடிமை செய்ய வேண்டும்.''[46]

என்று இதனை ஆழ்வார் வற்புறுத்துவதைக் காண்க.

9. முடிவு :

மேற்கூறப்பெற்ற சமயக் கருத்துகள் யாவும் பண்டுதொட்டு வழங்கி வருபவையே யாயினும் ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆங்காங்கு ஒருசேரக் காணப்பெறுவன. இந்த வைணவ சமயக் கருத்துக்கள்தாம் நாதமுனி, ஆளவந்தார், இராமானுசர் ஆகிய ஆச்சாரியர்கள் காலத்தில் நெறிப் பட ஒழுங்குபடுத்தப்பெற்று 'விசிட்டாத் வைதம்' என்ற சித்தாந்த நிலையினை அடைந்தன. உபநிடதங்களினாலும் பிரம்ம சூத்திரங்களினாலும் தெளிவு பெற முடியாத கருத்துக்கள் யாவும் ஆழ்வார்களின் பாடல் களினால் இராமானுசர் தெளிவு பெற்றதாகக் கூறப்பெறுகின்றது.

" பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல் லருங் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையம்எலாம் மறை விளங்க வாள்வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே.''[47]

என்ற வேதாந்த தேசிகனது வாக்கினாலும் இதனை நன்கு அறியலாம்.

---

44. திருவாய். 6. 7:11
45. திருப்பாவை 29 ; திருவாய். 6. 5 : 11 ; 7. 3 : 11 முதலியவை.
46. திருவாய். 3. 3. 1
47. தேசிகப்பிரபந்தம் - 40.

# ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சித்தாந்தம்

சுவாமி பரமாத்மானந்தா, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்.

தன்மம் நிறுவினரைச் சர்வதர்ம மேனியரைப்
பன்மை யவதாரப் பண்புயர்ந்த—நன்மையரை
எஞ்சா அருள்வார் இராம கிருட்டினரை
நெஞ்சே வணங்குதும்வா நீ.

அனுபூதி மலையின் சிகரம் :

"இரும்பிறவித் தளை நீங்கி, இன்புறுவார் தாம் வாழ, விரும்பிவரும் ஞானமலிவியன் பரதகண்ட மதில், பொதுவாக மன்னுயிரின் நலங்கருதியும், சிறப்பாக முத்திப்பேற்றில் அவாவுடையாரது நலனைக் கருதியும், செம்பொருட் காட்சி யென்னும் சீரிய இலட்சியத்தை எய்துதற் பொருட்டு, பன்னிரண்டு ஆண்டுக்காலம் அதில் மாலாகி, ஊனையும், உறக்கத்தையும் பொருட்படுத்தாது இடையருது, ஞான சாதனங்களில் ஈடுபட்ட மாண்புடையவர் ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருமான். அத்தகைய தீரச் செயலின் பயனைகப் பல்வகையான ஞான அனுபூதிகள் என்னும் மலைத்தொடரில் உயர்வற உயர்ந்த கொடுமுடியின்மீதே, அவர், இயல், உண்மை–அறிவு–இன்ப வடிவாய்த் திகழ்கின்ருர் என்பது மதிநுட்பம் நூலோடுடையார் அனைவர்க்கும் எளிதே புலனைகக்கூடிய ஓர் உண்மையாகும். அத்தகைய வியத்தகும் ஞான அனுபூதிகளின் பயனை விளைந்த மெய்ஞ்ஞான வளத்தால் அவர் பத்தொன்பதாம் நூற்ருண்டின் ஒப்பற்ற மாபெருந் தீர்க்கதரிசியாகின்றனர். பிறவிப் பெருங்கடலிலே அமிழ்ந்து துயருழக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அவர் குன்றின் மேலிட்ட பேரொளி விளக்காக ஒளிர்ந்து, அக்கடலைக் கடந்து கரையேற வழிகாட்டியாகிருர். யாதேனும் ஒரு நெறியைப் பற்றுங்கால் அவர் தமது முழு வலிமையையும் அதன் கண் உய்த்து, விரைவாக முன்னேறி, எந்தக் குறிக்கோளைச் சார்ந்தபின் அப்பால் செல்லல் இயலாதோ அதுவரை சென்று, ஒவ்வொரு நெறியிலும் நிறைவுத் தன்மை நிலையெனக் கருதப்படும் நிர்விகற்ப சமாதி நிலையை நண்ணுவார். உரைமனங் கடந்த மாண்புற்ற அந்நிலையில் முற்றத் துறந்த மொய்ம்பும், மனித ஆன்மா பரம்பொருளோடு இரண்டறக் கலந்த நிலையில் இடையருது நிற்கும் உணர்வும் அல்லாத வேறெதுவும் தலையை நீட்டவும் இயலாததாகும். அங்ஙனம் அவர், கைக்கொண்ட ஒவ்வொரு சாதனத்திலும் மிகச் சுருங்கிய காலத்தில் வெற்றி பெற்றமையை அற்புதம் எனல் சற்றும் மிகையாகாது.

பல்வகை அனுபூதிகள் :

ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதன் முதலாகப் பெற்ற ஞான அனுபூதியாவது, தக்ஷிணேசுவரத்தில்காளிகோவிலிலுள்ள அம்பிகையின் காட்சியே ; அதை இவ்வாறு அவர் வருணித்துள்ளார் ; "திடீரென மங்களம் அருளும் ஜகன்மாதா தன்னை எனக்குக் காட்டியருளினுள் ; யான் தரைமீது உணர்விழந்தவனைய் வீழ்ந்தேன் ; என் கண்முன் அனைத்தும் மறைந்தன. எல்லையற்ற அகண்டமான ஞானஜோதிக் கடலே இருந்தது" என.

அவர் ஒரு சன்னியாசியின் துணையால் அறுபத்துநான்கு தந்திர சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள சாதனங்கள் அனைத்தையும் பழகினுர் ; ஒவ்வொரு சாதனத்திலும் மூன்றே நாளில் மிகவுயர்ந்த நிலையினை எய்தினுர். தமது முதுகெலும்புக்குள் இருக்கும் நரம்பு வடத்தில் அமர்ந்துள்ள ஆதாரங்களின் வழியாகக் குண்டலினி சக்தி மூலா

தாரத்தினின்றும் மேல் நோக்கிக் கிளம்பி, ஸஹஸ்ராரம் வரை சென்றதை உணர்ந்தார். அதன் இயக்க வகைகள் ஐந்தினையும்– எறும்பு, தவளை, பாம்பு, பறவை, குரங்கு போன்று செல்லும் கதிகளையும் எடுத்துரைத்தார். பிரபஞ்சத்தின் அறுதியான காரணத்தை ஒரு பெரும் ஒளி வீசுதல் முக்கோணமாகவும், ஒவ்வொரு கணமும் அதனின்றும் எண்ணிறந்த பிரபஞ்சங்கள் உற்பத்தியாவதையும் கண்டார். வைணவர்க்குரிய ஐவகைச் சாதனங்களான– சாந்த, தாஸ்ய, ஸத்ய, வாத்ஸல்ய, மதுர பாவனைகளில் ஒவ்வொன்றையும் பழகி, ஒவ்வொன்றிலும் பூரண நிலையினை அடைந்தனர். "ஒரே மனிதனிடம் பகவானைப் பற்றி எழுபத்தொன்பது வகைப்பட்ட பக்தி பாவனைகளும் வெளிப்படும்போது அது மஹாபாவனை என்று பெயர்பெறும் என்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அம்மாண்புற்ற அரிய நிலையின் உருவமாக அவர் திகழ்ந்தார்.

தோதாபுரி என்ற குருவினிடமிருந்து சன்னியாசம் பெற்று, அவரது உபதேசப்படி அத்வைத சாதனம் பழகினர். அந்தச் சாதனத்தின் அறுதியான நிர்விகற்ப சமாதி நிலையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரேநாளில் அடைந்ததைச் சோதித்தறிந்து பெரு வியப்புற்று குரு அவரது உள்ளத்தைப் பின்னர் வியாவகாரிக நிலைக்கு இறக்கினர். பின்னர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரம்மமோடு முற்றிலும் ஒன்றுபட்ட நிர்விகற்ப சமாதி நிலையினில் மீண்டும் அமரும் உறுதிபூண்டு, ஆறுமாத காலம் தொடர்ந்து அந்நிலையில் இருந்தனர். அதன்பின், "மன்னுயிரின் நலனைக் கருதி வியாவகாரிக உணர்வின் வாயிற்படியிலே இரு" என்ற அம்பிகையாரின் கட்டளையை ஏற்றுக்கொண்டார்.

பயங்கரமான வயிற்றுளைச்சல் நோயின் தாக்குதலுக்கு உட்பட்டு, அல்லும் பகலும் ஆறு மாதம் அவர் சித்திரவதை யனைய வயிற்றுவலிக்கு உள்ளாகி, அதன் பயனாக அவரது உள்ளம் மிகத் தாழ்ந்த உணர்வு நிலைக்கு இறங்கி உடலுணர்ச்சியைப்பெற்றது. அதன் பின்னர் வியாவகாரிக உலகிலோ பாரமார்த்திக உலகிலோ நினைத்த போது உள்ளத்தை வைத்திருக்கும் திறனை அடையலானார்.

பிறகு மகம்மதிய குருவினிடமிருந்து ஸூஃபி ஸம்பிரதாயமுறை அனுபூதிக்குரிய தீக்ஷை பெற்று மூன்று நாளைக்குப் பின் அந்த பக்தி பாவனையின் குறிக்கோளை எய்தினர். இன்னும், நீண்ட தாடியும், சிந்தனையார்ந்த முகமும் கொண்ட ஒரு தேசுற்ற மனிதரை (முகம்மது நபியை)க் கண்டார். சிறிது நேரம் சென்றதும் அவரது உள்ளம் சகுணப் பிரம்மத்தின் காட்சி வழியாக ஏகி, நிர்க்குணப் பிரம்மத்தில் இறுதியாக அழுந்திற்று.

பிறகு கிறிஸ்துவரது இலக்ஷிய அனுபூதி பெறும் அவா அவரது உள்ளத்தில் எழ, கன்னிமேரியம்மையார் தெய்வீகக் குழந்தை இயேசுவை மடியில் வைத்திருக்கும் படத்தை அவர் உற்று நோக்கிக்கொண்டு, இயேசு நாதரது ஆச்சரியமான வாழ்க்கையைச் சிந்தித்து வந்தார். அதன் பயனாகக் கிறிஸ்துவின் காட்சியைப் பெற்றார். கிறிஸ்து தம்மைத் தழுவியதையும், தம்மிடம் இலயித்ததையும் கண்டார். இந்நிகழ்ச்சியால் அவர் புற உணர்வை இழந்து சமாதியடைந்து சகுணப் பிரம்மத்தோடு தாம் ஒன்றுபட்டதை உணர்ந்தார்.

ஒரு காளி பூஜை தினத்தன்று அவர் தமது பத்தினியாரான சாரதா தேவியைத் தேவிக்குரிய பூஜைப் பீடத்தில் அமரும்படி வேண்டினர். அந்த அம்மையாரையே காளி தேவியாகக் கருதிப் பூஜைக் கிரியைகள் அனைத்தையும் இயற்றினர். பூசாரியும் தேவியும் சமாதியில் ஆழ்ந்தனராக மன வாசகங் கடந்த நிலையில் பிரம்மத்தோடு ஒன்றித்தவரானார். சுருங்கக் கூறின், அவர் முழு மனத்தோடும் ஆவியோடும், இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்து மதம் மூன்றிலுமுள்ள துவைதக் கிரியைகளுக்கு ஏற்பட்டுள்ள சாதனங்களில் அழுந்தி, அவற்றில் ஒவ்வொன்றுக்கும் உரிய அனுபூதிகளை வழிபடுவோன் வழிபடு தெய்வம் என்னும் துவைத பாவனைக்கு உள்ளடங்கி அவற்றை எய்திய பின்னர், ஒவ்வொரு சாதன முறையிலும் இன்னும்

முன்னேறி அத்துவிதக் குறிக்கோளைச் சார்ந்தார்.

### உள்ளது ஒன்று : உரவோர் விள்ளுப பலவாக :

இத்தகைய மெய்யான ஞான அனுபூதி களின் விளைவாகவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் ''எத்தனை மதங்களோ அத்தனை மார்க்கங் கள்'' என்னும் சர்வசமய சமரசக் கொள் கையை உலகிற்கு வெளியிட்டனர். இந்திய ஞானப் பண்பாட்டின் சரிதையில் அவரே நால்வகை நெறிகளான ஞானயோகம், ராஜயோகம், பத்தியோகம், கருமயோகம் என்பவற்றை, அவற்றிற்குரிய வெற்றியின் மாண்பும், பயன்தரும் மேன்மையும் திகழ, அனைத்தையும் உள்ளடக்கி ஒன்ருக இணைத்த ஒரு தொகுப்பின் வடிவமானுர். அவரது ஒரே வாழ்வில் பலப்பல தனித்தனி வாழ்க்கைகளில் வெளிப்பட்ட ஞானத் திறன் கள் அனைத்தும் ஒருங்கே உணர்வுக்கு இலக் காகி, (இன்னும் விடப்படாது) முழுமையா கத் தொகுத்து இணைக்கப்பட்டமையால், ஒருமை ஞான இலக்ஷியம் உலகத்தார்க்கு முன் நிலைநாட்டப்பட்டதாகும். ஆனுல், ஈண்டு நினைவுறத்தக்கதொன்று யாதெனின் இந்தச் சமரசம் அறிவுத் திறமையால் வந்த இணைப்போ, சிந்தனையால் விளைந்த சாமர்த் தியமோ மட்டும் ஆகும் அளவில் நின்றுவிட வில்லை. எவ்வாறெனின் அவர் அறிவின் தொழில்கள் அனைத்திற்கும், அப்பாலா யிருந்த ஞான அனுபூதிக்குன்றேறியவ ராய்ப் பன்முறையும் ஒளிர்ந்தார். ஞானமும் பக்தியும் மன அடக்கமும் அகங்காரமற்ற செயலும் அதீத நிலையில் ஒன்றேயாகும் என்பது உண்மையன்ரே? இவை தாமா கவே ஒன்றுகூடி ஞான நிலையில் ஒருமை யாக ஒளிரும் மெய்ஞ்ஞான (பாரமார்த்திக) உலகினை எய்தியிருந்த அனுபூதியை அடிப் படையாகக் கொண்டதாகும் அது. ரிக் வேதத்தில் ''ஏகம் ஸத்விப்ராபஹுதா வதந்தி''—'உள்ளது ஒன்று; உரவோர் விள்ளுப பலவாக' என்ற பேரனுபூதியில் அடங்கிய பாரமார்த்திக உண்மையை மெய்ப்பிக்கும் தீபமாகும். அவரது வாழ்க்கை பாரமார்த்திக ஞான அனுபூதி ஒன்றேயா யினும், சமயக் கொள்கைகள் பலவிதம் ஆவ தற்கு இவ்வாக்கியம் விளக்கத்தைத் தரு கின்றது. அனுபூதி பெறும் ஞான நிலத் திலே அதே சமயம் அதை இன்னவாறு என்று எடுத்துரைத்தற்கு எவரும் இல்லை. மனம் அந்நிலையினின்றும் கீழிறங்கி வந்த பின்னரே அனுபூதியைப் பற்றிய நினைவு நிகழ்கிறது. அவ்வமயம் அனுபூதி பெற்றவ னது சுபாவத்திற்கு ஏற்றவாறு அது மனித அறிவால் வருணிக்கப்படுகிறது. ஆதலால் 'அனுபூதி ஒன்றே, உரைபல' என்பது அறியப்படுகின்றது. மனிதனது மனத் திற்கு அறிதல், இச்சித்தல், சங்கற்பித்தல் என்னும் மூன்றே தொழில்கள் உண்டு. அம் மூன்றும் ஒரே சமயம் நிகழ்கின்றன. ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி என்று மூன்று சக்திகள் உள்ளன என்பர்—ஒரு சாரார். அவற்றில் ஒன்று தலையெடுத்து நின்று மற்ற இரண்டையும் அடக்கி வைக் கும் என்பர் மன நூலார். எனவே மக்கள் இயல்புபற்றி மூவகைப்படுவர். அறிவு தலை யெடுத்தவர், அன்பு தலையெடுத்தவர், செயல் தலையெடுத்தவர். அக்காரணத்தால் அதே வரிசையில் மூன்று ஞான சாதன முறை களே ஞானயோகம், பக்தியோகம், கரும யோகம் என்பனவே இருத்தல் இயலும். மனத்தைப் பிரிவுபடுத்தாது முழுமையான ஒரு காரணமாகக் கொண்டு சித்தவிருத்தி யொன்றும் எழாதபடி அடக்கப்படும்போது—அதாவது, மனம் அலையற்றதாகும்போது—மனத்திற்கு அப்பாலான அனுபூதிநிலை எய்தப்படுகிறது. இந்நெறியே இராஜ யோகம் எனப்படுகிறது. இன்னும் உரை மனங்கடந்த அனுபூதி நிலையினின்றும் கீழிறங்கி வியவகார நிலைக்குச் சிறிது தொலை வில் இருக்குங்கால், அனுபூதியை ஆராயும் போது 'நானே பிரம்மம்' என்ற அத்வைத சித்தாந்தம் எழும்; அதனினும் அதிக தொலை இறங்குங்கால், ஜீவன் வேறு பிரம் மம் வேறு; ஆயினும், இரண்டும் ஒன்ரே டொன்று இயல்பாகவே (ஆன்மத்) தொடர் புற்றன என்ற விசிஷ்டாத்வைத சித்தாந்தம் எழும்; அதனின்றும் வெகுதொலை கீழிறங்

கும்போது பிரகிருதி ஜீவன் ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களுக்குள் (பஞ்சபேதம்) ஐவகை பேதம் உண்டு என்ற துவைத சித்தாந்தம் எழும். ஒரு கோடியில் அத்வைதமும், மற்றொரு கோடியில் துவைதமும் இடையிலே பலவகைப்பட்ட சித்தாந்தங்களும் (அவ்வவற்றின் நோக்கு நிலைகளுக்கு ஏற்ப) எழும். வேறொரு வகையாகவும் சித்தாந்தங்களின் வேறுபாட்டுக்கு விளக்கம் தரலாகும். அறிவின்தன்மை பன்மையுள் ஒருமையைக் கண்டுபிடிப்பது; ஆதலின் அறிவு தலையெடுத்த இயல்பினர் அத்வைதமே உண்மை என்பர். அன்பின் தன்மையாவது இரு வேறு உயிர்கள் ஒருவருக்கொருவர் உறவு கொள்வதால் அன்பு வளர்ந்து முற்றி, இறுதியில் மனம் ஒன்றுபடும் நிலையிலே எய்துவர்; ஆதலால் விசிஷ்டாத்வைத சித்தாந்தமே உண்மை என்பர். அன்பு தலையெடுத்தவர் தொழில் புரிவதில் ஈடுபட்டவர் 'ஆண்டான் வேறு, அடிமை வேறு; இருவரும் ஒரு நாளும் ஒன்றாகார்' என்றே கருதுவர்; ஆதலின் அத்தகையார்க்கு துவைத சித்தாந்தமே உண்மை என்று உணர்வு எழும். இம் மூன்று இயல்புகளும் கலந்து நிற்கும்போது ஒவ்வொன்றின் அளவு வேறுபாட்டுக்கு ஏற்ப மற்ற சித்தாந்தங்களும் தோன்றுவனவாம்.

**சமரஸ அனுபூதியின் கொடுமுடி :**

ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையில், ஞானம் பக்தி யோகம் கருமம் என்னும் நான்கு சாதன முறைகளும் பூரணமாக ஒன்றாயிணைந்த மாண்பு குடி கொண்டுள்ளது. 'பூரணமாக' என்பதன் பொருளானது: அந்த நான்கு முறைகளும் இணைந்து ஒன்றாயுள்ளபோதும், அவற்றில் எதுவும் முதிருங்கால், தனக்குரிய வளத்தில் எள்ளளவையும் விட்டுக் கொடுக்கும் அவசியம் இல்லை. அம்மட்டோ: அதற்கு மாறாக ஒவ்வொன்றும் தனது முன்னேற்றத்தின் உச்ச நிலையை அத்தொகுப்பில் காண்கிறது. அவை நான்கும் ஒருங்கே முரண்பாடின்றி ஒன்றின் பக்கத்தில் ஏனையவை அனைத்தும், அவற்றில் எந்த ஒன்றும் ஏனையவற்றை விட மேலானது என்ற உணர்ச்சியின்றி விரவியும் உள்ள சிறப்பு நிலவுகிறது. சகுணப் பிரம்மம், நிர்க்குணப் பிரம்மம் இரண்டையும் உருவக்கடவுள் அருவக்கடவுள் கடவுளின் பல்வகை வடிவங்கள் இவற்றையும், வேதாந்தம், சித்தாந்தம் என்னும் இரண்டையும், பிரமம் சக்தி என்னும் இரண்டையும், நித்தியம், லீலை என்ற இரு பகுதிகளையும் இன்னும் பலவற்றையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமரஸப்படுத்தி இணைக்கின்றவர். அவரே சமரஸ அனுபூதியின் கொடுமுடியானவர்.

**அவரது சித்தாந்தம் :**

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்வைதத்தையும், விசிஷ்டாத்வைதத்தையும், துவைதத்தையும் ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் பின்வருமாறு கூறுவார்; "மனிதனது மனம் அம் மூன்று கொள்கைகளையும் அதன் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு ஒப்புக்கொள்ளுகிறது. மனித மனம் ஒரு படியிலே நிற்கும் போது துவைதம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்போது மற்ற இரண்டும் தவறானவை என்பது நன்கு உணரப்படும். அதனினும் உயர்ந்த ஞான முன்னேற்றப் படியில் விசிஷ்டாத்வைதம் உண்மை எனக் கருதப்படுகிறது. தன்னளவிலே நிர்க்குணமாக நித்தியமாயுள்ளதாக மெய்ப்பொருள் லீலையில் எப்போதும் சகுணமாகயிருப்பதாக அப்போது ஒருவன் உணர்கிறான்; அப்போது துவைதம் தவறானது என்பது மட்டுமன்று, அத்வைதமும் உண்மையில்லை என்று அவன் உணராமலிருக்க இயலாது. இறுதியாகச் சாதனத்தைத் துணையாகக் கொண்டு, ஞான முன்னேற்றத்தின் அறுதியான எல்லையை ஒரு மனிதன் அடையும் போது அவன் தெய்வீக அம்பிகையின் நிர்க்குண நிலை அனுபூதியைப் பெற்று, ஒன்றித்த நிலையில் நிற்கிறான். அப்போது, நான்-நீ, காண்பான்-காணப்படும் பொருள், பந்தம்—மோக்ஷம், பாவம்—புண்ணியம், புகழ்—இகழ் பிறவும் எல்லாம் ஏகத்திலே ஒன்றாகிவிடுகின்றது.

அவர் மேலும் பின்வருமாறு கூறியுள்ளார். "பிரம்மத்தின் உண்மை ஒன்றே அஃதாவது, தெய்வீக அம்பிகையின் நிர்க்குண நிலையொன்றே—மனிதனது வாயினின்றும் வெளிவந்து எச்சிற்படாதது; அது மனிதனது வாக்கினுல் வெளிப்படுத்தப்படவில்லை. இந்த உண்மை மனிதனது மனத்திற்கும் புத்திக்கும் அப்பாற்பட்டது. வார்த்தைகளால் அதைப்பற்றிப் பேசவோ, விவரிக்கவோ எவ்வாறு இயலும்? குழந்தைகளே, அறுதியான அத்வைத உண்மையை உணரத்தான் வேண்டும். ஆதலால் "நான் நீ, என்ற கருத்துக்களும், பேசுதல் நடத்தல் போன்ற உடலின் தொழில்களும் நிகழும் வரை ஒருவர் அனுபவ வாழ்க்கையில் நிர்க்குணம், சகுணம் இரண்டையும்—அதாவது பாரமார்த்திகம் வியாவகாரிகம் இரண்டையும் ஒப்புக்கொள்வது கட்டாயம். அந்தக் காலத்தில் நீங்கள் அத்வைதத்தைப் பற்றிப் பேசினுலும், அனுபவத்தில் விசிஷ்டாத்வைதியாகவே இருந்து தீரவேண்டும்."

"ஒரு வில்வப் பழத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். வெளித்தோல், விதைகள், சதை என்ற மூன்றில் எது பழம் என்பதைக் கண்டுபிடிக்க முயலுக. முதலில் வெளித்தோலை அப்பழமன்று என்று தள்ளிவிடுகிருய். விதைகளும் அதுவன்று என்று அவ்வாறே தள்ளிவிடுகிருய். சதையைப் பிரித்தெடுத்ததும், அதுவே உண்மையான வில்வப் பழம் என்கிருய். பிற்பாடு சதை எதனுல் ஆக்கப்பட்டுள்ளதோ அதற்கே தோலும் விதையும் சொந்தமானவை என்று முடிவு வருகிறது. தோலும் விதைகளும் சதையும் மூன்றும் சேர்ந்தே வில்வப் பழம் ஆகின்றன. அதுபோன்றே பாரமார்த்திகத்தை நேரில் உணர்ந்தபின், அதே பாரமார்த்திகம் லீலையில் வியாவகாரிகமாக, உலகமாக உள்ளது என்ற முடிவு வருகின்றது.

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரது அந்திம தசையில் அவரிடம் ஒரு வரம் வேண்டினுர். அது யாதெனில், தொடர்ந்து மூன்று நாளோ, நான்கு நாளோ சமாதியில் அழுந்தியிருக்கும் வரமே. அதற்குப் பதிலாகக் குருதேவர், "அதனினும் உயர்ந்த நிலை உள்ளது; பகவானே, இருப்பதெல்லாம் நீரே என்று உணரும் நிலை" என்ருர். இதன் பொருளாவது அனைத்துயிர்களிலும் பகவானைக் கண்டு, அவற்றுக்குப் பணி செய்யும்போது பகவானுக்குச் செய்யும் வழிபாடாக அதைச் செய்தலே. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி கூறியதாவது: "பகவானை விட்டு விட்டு உலகத்தை மட்டும் காணல் அறியாமை, அஞ்ஞானம்; உலகத்தை விட்டு விட்டுப் பகவானை மட்டும் காணல் ஒருவகையான தத்துவ அறிவு, ஞானம்; ஆனுல் எல்லா உயிர்களையும் பகவானுல் வியாபிக்கப்பட்டிருப்பதாகக் காணல் பரமஞானம், விஞ்ஞானம். பாக்கியமுற்ற ஒரு சிலரிடத்தே எல்லாவற்றிற்கும் மேலான பகவான் வாசம் பண்ணுவதைக் காண இயலும்."

ஸ்ரீ ராமகிஷ்ணர் போதித்த உண்மையான தத்துவ இயல் இன்னது என்பதைப் பற்றி அவருடைய நேர் சீடரும், துறவியும், அனுபூதி பெற்றவருமான சுவாமி துரியானந்தர் இவ்வாறு எழுதினுர்:

"தாகூரின் (ஸ்ரீ ராமகிருஷ்ணரின்) தத்துவ இயல் முடிவைப் பற்றிப் பேசுவது அவ்வளவு எளிதன்று. அவர் கூறியதாவது: 'எத்தனை சமயங்கள் உண்டோ, ஒரே குறியைச் சேர்வதற்கு அத்தனை நெறிகள் அவை'—இவ்வாறு எல்லாச் சமயங்களைப் பின்பற்றுவார்க்கும் அவர் ஆதரவளித்தார். பல சமயங்களின் சாதன முறைகளைத் தாமே பழகிய பின், ஒரே அதீத உண்மையை அவர் உணர்ந்தார்.

அறுதியான உண்மை அத்வைதமே. இரண்டற்றதே. அதைப் பெரியார் பல பெயர்களால்—பிரம்மன், பரமாத்மன், பகவான், கடவுள் இன்னும் பலவாருக அழைப்பர். அந்த உண்மையை உணர்ந்தவர் எவரும், அவரவரது சுபாவத்திற்குத் தக்கவாறு அதற்கு ஒரு குறிப்பிட்ட பெயரை அளித்து, அதனைப் பற்றிக்கூற முயன்றுள்ளனர். ஆனுல் முழு உண்மையையும் கூற எவர்க்கும் இயலவில்லை. 'அவர் இருக்கிறபடியே இருக்கிருர்'—அவரை (பரம்

பொருளை) உணர்ந்துள்ளவர்களுடைய அறுதியான முடிவு அதுவே.

பற்பல நிலைகளினின்றும் நோக்கும் போது, கௌடபாதரது அஜாதவாதமும், சங்கரரது அத்தியாசக் கொள்கையும், இராமானுஜரது பரிணமவாதமும், சைவர்களின் சிவாத்வைத வாதமும்—இவற்றில் ஒவ்வொன்றும் உண்மையே; ஆயினும் பரம் பொருள் மனிதனது வாக்கிற்கு அப்பாற் பட்டது. மனத்தினால் அறிவதற்கும் அப்பாற்பட்டது; இத்தத்துவ சித்தாந்தங்களை நிலைநாட்டியவர்கள் அனைவரும் தவம் பழகினர்; பரம்பொருளின் அருளைப் பெற்ற பின்னர் அவரது கட்டளையின்படி பல வகைப்பட்ட கொள்கைகளைப் போதித்தனர். இக்கொள்கைகள் அனைத்தையும் வளர்த்து வரும் பொருள் அவரே. ஆனால் அவரோ அவற்றுக்கு அப்பாற்பட்டவர். இந்த உண்மையை வெளிப்படுத்துவதே ஸ்ரீ ராமகிருஷ்ணரது தத்துவ இயல் முடிவு. இது எனது கருத்து.

நினைப்புக்கும், வாக்குக்கும் எட்டாத ஒரு நிலையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடைவது வழக்கம். அந்த நிலை நாம ரூபங்களையும், வார்த்தையையும், மனத்தையும் கடந்துள்ளது. பிரகிருதி மண்டலத்திற்கு அப்பால் இரண்டற்ற ஒன்றே உள்ளது. அப்போது அத்யாசவாதமோ அஜாதவாதமோ போன்ற ஒன்று எங்கு உள்ளது? இன்னும் அத்தியாசமோ, அஜாதமோ, பரிணமமோ வேறெதுவுமோ—இக்கொள்கைகள் யாவும் அவரிடம் அமர்ந்துள்ளன.

அவரே சத்தியம், மெய்ப்பொருள். நாம் அவரை மறக்காமல் இருப்போமாயின், தனித்தனியான எல்லா உயிர்களுக்கும், பிரபஞ்சத்திற்கும் மூலம் அவரே என்பதும் உண்மை. நாம் அவரை மறந்துவிடின், நாமமும் ரூபமும் 'உண்மையற்றவை'யாய் விடுகின்றன. காரணம் யாதெனில், அவரின்றி அவை இருக்க இயலாதவை. ஆனால் அவர் நம் நினைவுகளில் உறைவாராயின், அப்போதுதான், 'உள்ளிருக்கும் பொருள் மேலுள்ள தோலுக்குச் சொந்தம்', தோலும் உட்பொருளுக்குச் சொந்தம். (வாழைமரம் போன்ற பொருள்களில் உள்ளவாறே) என்ற உண்மையை நாம் அறிய இயலும்.

'இவையனைத்துள்ளும் நான் வியாபித்துள்ளேன்', 'மணிகள் ஒரு கயிற்றில் கோர்க்கப்பட்டிருப்பது போல, இவை என் மீது அமர்ந்துள்ளன.' மெய்யான உண்மை யாதெனில், நாம் அவரைக் கட்டாயம் காண வேண்டும் என்பதே. நாம் அவரைக் காணும்போது வேறெதுவும் மறைந்து விடுகிறது. அவரே ஒவ்வொன்றும் என்ற அனுபூதி உண்டாகிறது. அவரைத் தரிசிக்கும் முன் நம்மிடம் ஐயங்களும் எல்லாக் கொள்கைகளும் உள்ளன. அவரை அறிந்த பின் எல்லா ஐயங்களும் உடனே மறைந்து விடுகின்றன. அப்போது கொள்கைகளே இல்லை; அவர்மட்டும் உள்ளார். அவரே அதீத மெய்ப்பொருள். எல்லாக் கொள்கைகளும் அவரிடம் அமர்கின்றன. அவரைக் காணும் போது சாந்தி அடைகிறது.

ஆதலால் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தத்துவ முடிவானது, எவ்வாறாயினும் அவரை நாம் அடைந்தே தீரவேண்டும் என்பதே. 'உன் ஆடையின் ஒரு மூலையிலே அத்வைத அறிவைக் கட்டி வைத்துக் கொள்; பின் உன் பிரியப்படிச்செய்' என்பது அவரது வாக்கு. இதன் கருத்தாவது, ஒரு முறை அவரை நீ அடைந்து விடின், உனது சுபாவத்தால் நீ எந்தக் கொள்கையை ஆதரித்தாலும், அது ஒரு பொருளன்று என்பதே.

# "வள்ளலார் கண்ட சமயநெறி"

நா. மகாலிங்கம், பி. எஸ்ஸி., எம். ஐ. இ.

உலகில் காலந்தோறும் மாறுதல்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. புதுப்புது எண்ணங்கள் சாதனைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. சமயத் துறையிலும் இந்த நிலை ஏற்படுவது இயற்கை. வள்ளலார் கண்ட சமய நெறியும் அவ்வாறு காலத்துக்கு ஏற்பத்தோன்றிய ஒரு புது நெறியேயாகும்.

மாறுதல்கள் எத்தனை ஏற்பட்டாலும் சில அடிப்படைத் தத்துவங்கள் மாறுவதில்லை. உதாரணமாக உலகம் என்றும் ஒரே சீராக உருண்டு வருகின்றது. பருவ காலங்கள் முறையே பூக்கின்றன. அப்படியே ஆண்டவன் என்றும் இருக்கின்றான். அவன் அருள் முதலிய பண்புகள் என்றும் நிலையானவை. அவ்வாறே வள்ளலார் கண்ட சமய நெறியும் தொன்று தொட்டு நமது பாரத நாட்டில் தோன்றி வளர்ந்து நிலை பெற்று வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வரும் சமயக் கோட்பாட்டின் விளக்கமே ஆகும்.

வள்ளலார் வாழ்வையும் அருட்பா என்னும் அவரது வாக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒருவாறு அவருடைய சமய நெறி எப்படி உருவாயிற்று என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

சைவக் குடும்பத்தில் பிறந்தவர் இராமலிங்கர். குழந்தைப் பருவத்திலேயே தில்லையம்பலக் கூத்தன் அருட்பார்வைக்கு இலக்கானவர். சிறுவராயிருந்த காலத்தில் சென்னை கந்த கோட்டம் அவரைத் தன்பால் இழுத்தது. குமரப் பெருமான் குழந்தை இராமலிங்கரைத் தோழமை பூண்டு, குருவாகவும் விளங்கிக் கல்வி புகட்டி விட்டான். அதன் பலனாக இராமலிங்கம் எல்லாக் கலைத் துறைகளுக்கும் மேலான உணர்வரிய மெய்ஞ் ஞானக் கல்வியையே கற்றவராய் விளங்கினார். பள்ளிப் படிப்பில் நாட்டம் செல்லவில்லை. உண்மையில் இராமலிங்கருக்குக் கந்த கோட்டமே கல்விக் கோட்டம்.

நாளடைவில் ஆசிரியர் சபாபதி முதலியார் இராமலிங்கர் பெருமையை உணர்ந்தார். அண்ணியாரின் இரக்கம் சிறுவர்க்குத் தனியே இருந்து தியானம் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தியது. வீட்டு மாடி அறையிலேயே கண்ணாடி விளக்கொளியில் தணிகை ஆறுமுகப் பெருமான் தோன்றிக் காட்சி அளித்தான். திருத்தணிகை முருகப் பெருமான் மீதும் கந்தகோட்டத்துள் வளர் கந்தவேள் மீதும் அருட்பாக்கள் மலர்ந்தன.

> "நிலைகொள் ஆனந்த நிருத்தனுக்கு ஒரு பொருள்
> நிகழ்த்திய பெருவாழ்வே
> தலைமை மேவிய சத்குரு நாதனே
> தணிகையம்பதியானே"

என்ற பாடலில் முருகனே வள்ளலாருக்கு ஞான குருவாய் விளங்கியதை அறியலாம். ஐந்தாம் திருமுறை முழுதும் முருகப் பெருமான் மேல் பாடிய தொகுதியாகவே இருப்பது அறியத்தக்கது.

> "செல்வ அருட் குருவாகி நாயினேனைச்
> சிறுகாலை ஆட்கொண்ட தேவதேவே"

என்ற வரிகள் இவ்வுண்மையைத் தெளிவாக விளக்குகிறது.

திரு. வி. க. அவர்கள் கூறுவது போல் சைவ சமயாசாரியர்களுள் திருஞான சம்பந்தரை இராமலிங்கர் தம் குருவாகக் கொண்டார். நான்காம் திருமுறையில்,

> "என் செல்வமே எனது வாழ்வே என் இன்பமே
> என் அருட்குரு வடிவமே"

என்று ஞானசம்பந்தரைக் குறிப்பிடுகின்றார்.

அருணகிரிநாதரைப் போலவே வள்ளலாரும் ஞானசம்பந்தரைக் குமரப் பெருமான் அவதாரமாகவே கருதினர். சண்முகர் கும்மியில்,

" சைவம் தழைக்கத் தழைத்தாண்டி—ஞான
சம்பந்தப் பேர் கொண்டழைத் தாண்டி "

என்று பாடினர்.

ஆகவே ஓதாதுணர்ந்த இராமலிங்கருக்கு முருகனே வழிபடு தெய்வமாக நின்று உண்மையை உபதேசித்தருளினன்.

வாலிபப் பருவத்தில் ஒற்றியூர்த்தியாகேசன் வள்ளலார் உள்ளத்தைக் கொள்ளை கொண்டான். ஒற்றியூர்க்கே உள்ளத்தைக் கொள்ளை கொடுத்த வள்ளலார் ஒரு நாயகியாகவே ஆகி விட்டார். அஃதாவது பேரின்ப அனுபவம் கிடைத்து விட்டது. அந்நிலையில் அவரால் திருமண வாழ்க்கையை ஏற்க முடியாமல் போனதில் வியப்பொன்றும் இல்லை.

பின்னல் தில்லைச் சிற்றம்பலம் வள்ளலாரின் உள்ளத்தை தன்னிடம் இழுத்துக் கொண்டது. தில்லையம்பலக் கூத்தன் வள்ளலாருக்கு அதுவரை காணுத காட்சியெல்லாம் காட்டியருளினன். ஆண்டவனுடைய அருட் பிரகாசம் வள்ளலார் உள்ளத்தில் பரவியது. அருட்பெருஞ்சோதியாக ஆண்டவன் திரு நடம் புரிவதையும் அவனுடைய தனிப் பெருங்கருணையினலே அண்ட சராசரங்கள் எல்லாம் இயங்குவதையும் இராமலிங்கர் உணர்ந்தார். ஆரும் திருமுறை உருவாயிற்று.

அருள் ஒளியில் இராமலிங்கர் கண்ட உண்மையாவது சாதி சமய ஆசார சங்கற்ப விகற்பங்களை எல்லாம் கடந்து நிற்பது கடவுள் என்பதாகும். அவற்றின் மேல் ஏற்பட்டுள்ள மோகத்தால் மக்கள் அடிப்படை உண்மையாகிய இறைவனையே மறந்து விடுவதை உணர்ந்தார். ஆகவே அவற்றில் ஏற்பட்டிருக்கும் ருசியை மறக்கவேண்டும் எனக் கருதினர்.

அதற்காக அவர் வகுத்த வழியே சன்மார்க்கம் என்பதாகும். " என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே " என்பது அவர் வாக்கு. சமரச சுத்த சன்மார்க்கம் என்பது அதன் முழுப்பெயர்.

" எத்துணையும் பேதமுறு தெவ்வுயிரும்
தம்முயிர் போலெண்ணியுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றுர் யாவர் "

அவர்களே சன்மார்க்க நெறியில் செல்பவர் என்பது வள்ளலார் கொள்கை.

சன்மார்க்கத்தை மேற்கொண்ட அருட் பெருஞ்சோதியையே நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து உருக வேண்டும். அதன் தனிப் பெருங் கருணையை மனத்தில் கொண்டு சீவ காருணிய ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும். சீவகாருணியமே மோட்ச வீட்டின் திறவுகோல்.

சுருக்கமாகக் 'கருணையும் சிவமே பொருள் எனக் காணும் காட்சி' பெறுவதே சன்மார்க்கம் எனப்படும் அருள் நெறி. மற்றவை எல்லாம் மருள் நெறி என்று உணரலாம். இறைவனே தனக்கு இதனை அறிவித்ததாக இராமலிங்கர் கூறுகின்றுர். இறைவனிடத்தில் அன்பும் உயிர்களிடத்தில் இரக்கமுமே வள்ளலார் கண்ட சமய நெறி என்றறியலாம்.

அருட்பெருஞ்சோதியை " நினைந்து நினைந்து " என்ற அருட்பாவில் உள்ளபடி வனைந்து வனைந்து ஏத்தினல் மரணமிலாப் பெருவாழ்வு எய்திடலாமெனச் சத்தியம் செய்கின்றுர் வள்ளலார். அந்த ஞான நடத்தரசின் அருளைப் பெற்று அந்த அருள் வலியின் துணை கொண்டு சீவகாருணிய ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அதனல் அசுத்த தேகம் சுத்த தேகமாகும். சுத்த தேகம் படிப்படியே பிரணவ தேகமாகும். முடிவாக இந்தத் தேகத்தையே நித்திய தேகமாகக் கொண்டு எஞ்ஞான்றும் எதனுலும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடையலாம். இதுவே மரணமிலாப் பெருவாழ்வு எனப்படும்.

வள்ளலார் கூறும் மரணமிலாப் பெருவாழ்வு சீவகாருணிய ஒழுக்க நெறி அருட் பெருஞ்சோதியின் இயல்பு இவை இதுவரை விளக்கம் பெற்றுள்ள சமய நெறிகளின் சாரமாகவும் அவற்றின் முடிவாகவும் அவற்றையும் கடந்து சென்று வழி காட்டும் புதிய விளக்கமாகவும் அமைந்திருக்கின்றது.

தனது சமய நெறியில் செல்லும் சன்மார்க்க அன்பர்க்காக இவர் அமைத்துக்

கொடுத்து இருக்கும் சாதனங்கள் உத்தர ஞான சிதம்பரம் என்னும் வடலூர் சத்திய ஞானசபையும், ஊர் தோறும் ஏற்படுத்திய சமரச சன்மார்க்க சங்கமும் ஆகும்.

மனிதனுக்குள்ளேயே உயிர்க்குயிராய்ப் பேரின்ப வடிவாய் ஒளி வீசும் அருட்பெருஞ் சோதியை ஏழு திரைகள் எனப்படும் ஏழு தத்துவங்கள் மறைத்திருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக விளக்கிக் கொண்டு சென்று முடிவாக அருட் பெருஞ்சோதியைச் சந்திக்க வேண்டும். அவற்றின் புற விளக்கமாகவே சத்திய ஞானசபை ஏற்பட்டிருக்கின்றது. பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற வள்ளல் பெருமானின் நெறியைக் கடைப்பிடிப்பதற்கேற்றவாறு அன்பர்கள் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் என்னும் நான்கு ஒழுக்கங்களையும் மேற்கொண்டு, அருட் சோதியையே நினைந்து நினைந்து உருகிப் புடமிட்ட பொன்னாகிப் பாடி ஆடிக் களிக்க ஏற்பட்ட அமைப்பே சன்மார்க்க சங்கம். '' தங்கமே அனையார் கூடிய ஞான சமரச சுத்த சன்மார்க்க சங்கம் '' என்பதைக் காணலாம்.

'' சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றுனைப்பாடி
ஆடவும் இச்சை காண் எந்தாய் ''

என்பது அருட்பாவின் அருள்வாக்கு.

'' அப்பா நான் வேண்டுதல்
கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர் கட்கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்
நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை
இயம்பியிடல் வேண்டும் ''

இது வள்ளலார் வேண்டுகோள்.

இவற்றை எல்லாம் விட மேலாக வள்ளலார் தாம் பெற்ற இன்பத்தை உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாம் பெற்றுப் பேரின்ப வாழ்வை அடைந்துய்ய வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார். '' வாழையடி வாழையென வந்து '' என்ற அருட்பாவில் வள்ளலார் தம் தந்தையிடம் கெஞ்சும் அருமையைக் கண்டால் யாருக்காக இப்படிக் கெஞ்சுகின்றார் என்று தோன்றும்.

'' ஏழை உலகுயிர்த் துயரம்
இனிப் பொறுக்கமாட்டேன்
கொடுத்தருள் நின்அருள் ஒளியைக்
கொடுத்தருள் இப்போதே ''

என்று அவர் மனமுருகி வேண்டுவது வேறெந்த அடியாரிடத்திலும் எளிதாகக் காண முடியாத சிறப்பாகும்.

மேற்காட்டியவற்றையெல்லாம் பார்க்கும் போது வள்ளலார் நெறி இந்து சமயத்தின் விளக்கமாகவும் வளர்ச்சியாகவும் அமைந்திருக்கக் காணலாம்.

## அகிலாண்டநாயகி மாலை

குற்றியை யடைந்த பசும்புலை யுழுநர்
கொடியவன் றுஞ்சிலென் செயுமப்
பெற்றியி னின்னை யடைந்தநா யேனைப்
பிறையெயிற் றந்தகன் கரத்துப்
பற்றிய தண்டப் படைசெய லென்னே
பரவிய கருணைவா ரிதியே
கற்றினி மதில்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (15)

# சித்த மார்க்கம்

மா. இரத்தினசபாபதி

சித்-அறிவு ; அன்விகுதி சேர்ந்து சித்தன் ஆயிற்று. அன்னோர்கண்ட அறிவின் விளக்கம் சித்தமார்க்கம் அல்லது சித்தா சமயம் ஆயிற்று. இன்னோர் ஏகான்ம வாதத்தையும் துவைத நெறியையும் இணைத்துப் படிமுறையில் உயிர்கள் உய்ய வழிவகை செய்த பெரியோர் ஆவர். சித்த தருமத்தை நன்கு மறைபொருளின்றி உலகோர் அறிய உண்மையை விளக்கியது திருமூலரியற்றிய திருமந்திரமாகும். அதில் உள்ள கருத்துக்களைக் கொண்டு சில உண்மைகளைச் சுருங்க விளக்குவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

வேத நெறி மிகப் பழமையானது. அதன் முடிவான "தத்துவமசி" (நீ பிர்மமாகின்றாய்) என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதே. துவைத நெறி பக்தன் நெறி. பக்தன் முன்னிலையில் ஒரு பொருளைக் கண்டு களித்து, அகக் காட்சியில் அதில் ஈடுபட்டு அதுவேயாய்த் தனது தனிவிய கதியான ஜீவ போதத்தை அழித்துவிட்ட நெறியாகும். இதனைச் சைவசித்தாந்தத்தில் பிரளயாகலர் நெறி என்பர். இவர்கள் மாயையை விட்டவர்கள்தான். இதனையும் முத்தி சாதனமாகக் கொண்டனர். மிகச் சிறந்த பக்தன் உருவத்தை விட்டு அகண்டமான சிவத்தையும் சக்தியையும் அறிந்து தானும் அகண்டாகாரதையாய், சடத்தைச் செயித்துச் சித்துருவாகி சடலத்திலும், சித்திலும் விளங்கிப் பெரும் பேறு சித்த மார்க்கமாகும். வேதாந்த நெறி சடத்தினின்றும் விலகிச் சித்துருவாகி பிரமத்தில் லயமடைந்து விடுதலாகும். அதனால் வேதாந்த நெறி அறிவையும், வைராக்கியத்தையும் பெருக்கி உலகியலில் ஆற்றின் எதிர் நீச்சல் போலமைவதாகும். சித்தநெறி உலகியலில் ஒத்து அறிவும் அன்பும் பொருந்தி உலகியலில் உள்ள அன்பையே சக்தியாக மாற்றி அதன் வழி சிவத்துடன் பொருந்தலாகும். அதனால் இது நொதுமல் நெறியாகும். உலக வாழ்க்கையையே சிவ சக்தியாக மாற்றிப் படைக்கும் நெறியாகும். இது விஞ்ஞானத்தால் அகன்ற விஞ்ஞான கலா நெறியாகும்.

வேதாந்தநெறி உலகம் பிரமத்தினிடம் தோன்றி பிரமத்தில் லயமடைகிறது என்ற கொள்கையில் பிரமத்தின் விரிந்த நிலை உலகம் என்னும் சுருங்கிய நிலையிலும் அது வேதான் உள்ளது. அதனால் இவர்களை ஏகான்ம வாதிகள் என்பர். சாக்த தந்திரம் சைவாகமங்கள் ஆன்மவர்க்கம் சிவ சத்தியை அறியாதிருந்த போது சடத்தன்மையிலும், அறிந்த போது சிவமாந்தன்மையைப் பெற்றும் விளங்கும் என்று கூறின. சிவமாந் தன்மையைப் பெற்று இறப்பில்லா வாழ்வு பெறுவர் என்று அறுதியிடுகின்றன. அதனால் உடல் அழியாவகையில் யோக நெறி உள்ளது. அதற்கேற்ப படிமுறைகளும் அமைந்துள்ளன. அகண்டா காரதையான சிவத்தையும் அறியும் வரையில் துவைதத்தையும் அறிந்தபிறகு அத்வைதத்தையும் இணைத்து ஒன்றுகினர்.

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன்தோய்ந்துந்தோ யாதவர்
முத்தாம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. (2526)

சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவமவ மாகு மவ்வவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் செய்தொன்றுனல்
நவமான வேதாந்த ஞானசித் தாந்தமே. (2393)

சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற் போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. (2394)

சிவனைப் பரமனுட் சீவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானுன்
நவமுற் றவத்தையில் ஞானஞ் சிவமாந்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே. (2395)

மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்
சென்னிய தானசிவ யோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்ப்பொருள்
துன்னிய ஆகமநூ லெனத் தோன்றுமே. (2403)

முதலாகும் வேத முழுதா கமமப்
பதியான ஈசன் பகர்ந்த திரண்டு
முதிதான வேதமுறை முறை யாலமர்ந்
ததிகாதி வேதாந்த சித்தாந்த மாகவே. (2404)

திருமூலர் வேதங்களை ஓதி நிலையாமையை உணர்ந்து வேத நெறியை விட்டு ஆகம நெறிக்கு வந்து உயிரை உடலில் நிலை பெறும் உபாயத்தைக் கண்டவர். மனிதன் திருமூலர் நெறியைப்பற்றி, சாதனம் புரிந்தால் இறப்பின்றி நெடுநாள் எடுத்த உடலில் உயிர் வாழலாம் என்பதைப் பல இடங்களில் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே. (724)

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. (725)

அதனால் காலத்தை வெல்லும் உபாயத்தையும், காலன் வசப்படாமலிருக்கவும் சித்த தருமம் முதலில் முயலுகின்றது. ஆகமங்களை சாமான்யர் உணர புராணங்களும், அறிஞர் உணரயோகநுட்பமும் புராணங்களில் மறைபொருள்களாக உள்ளன. இவ்விதமான பல புராணங்களின் கதைகளுக்கு உண்மையில் ஒரு தத்துவ ரகசியம் உண்டென்று சொல்லி அவற்றில் சிலவற்றை விளக்கிக் காட்டினவரும் திருமூலரேதான்.

காலனை வெல்லும் உபாயம் கொண்ட மார்க்கண்டன் வரலாற்றுக்குக் கூறும் விளக்கம்.

மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே. (345)

இதன் பொருள்.

மூலாதாரத்துக்கு மூண்டெழுகின்ற சோதியாகிய தலைவனை, பிர்மமந்திரமாகிய சகஸரதளத்தில் மேலாகப் பன்னிரண்டு விரற்கிடையில் பொருந்திய ஒளியாகக் கண்டு அங்கு மேலுற்றுப் பொருந்தியவர், சுழிமுள் நாடி விளங்குவதனால் காலனை வென்று விளங்கும் தரைக் கிடையை அறிந்தவராவர். இதை விளக்க பூமியில் திருக்கடையூர் என்ற தலம் அமைத்துக் காட்டியுள்ளனர் என்றார்.

அமிர்தகடேஸ்வரர் என்பது ஒளி விளங்கும் சிரசே ஆகும்-அபிராமி என்றால் சரஸ்வதிக்கும் பெயர், பார்வதிக்கும் பெயர். சரஸ்வதி என்றபோது சூக்கும வாக்குகளையும், பார்வதி என்றபோது கண்கவரும் ஒளியையும் குறிக்கும். கடையூர் என்றது கடைசியாக உள்ள துவாதசாந்த வெளி.

இவ்விதமாக அட்டவீரட்டம், பிரமச்சிரச்சேதம், தக்கயாகம், விஷாப கரணம், குமார சம்பவம், திருப்பாற்கடல் கடைதல் போன்றவைகள் ஒவ்வொருயோக நுட்பம் என்றும் உணர்த்தியே சென்றுள்ளார்.

திருமூலர் ''தத்துவ மசி'' வாக்கியத்தை உறுதிப்படுத்தியுள்ளார். சீவனே சிவனை அறிந்த பிறகும் சிவம் என்றார். அதை அறியாதபோது பசுவாக விருந்தது என்றார்.

சீவ னெனச் சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே. (2017)

அறிவாய் அறியாமை நீங்கி யவனே
பொறிவாய் ஒழிந்தெங்குந் தானான போதன்
அறிவாய் யவற்றினுட்டானா யறிவன்
செறிவாகி நின்ற அச் சீவனு மாகுமே. (2019)

ஆறாறின் தன்மை அறியா திருந்தேனுக்
காறாறின் தன்மை அறிவித்தான் பேர் நந்தி
ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆறாறுக் கப்புற மாகி நின்றானே. (2020)

முத்திநிலையில் ஆன்மா, சிவத்தினின்றும் தனிவியக்தியாக விளங்கும் என்று கூறும் துவைத வாதி கொள்கையை ஒப்புக் கொள்ள வில்லை.

ஆன்மாக்களுக்குப் பிரகிருதியில் தொடர்புள்ள ஒன்றும், தொடர்பில்லாத நிலையொன்றும் உள்ளதாக ஆகமங்கள் விளக்கின. ஆன்மா பிரகிருதியின் சம்பந்தமான 36 தத்துவங்களை விட்டபோது பரம்

என்றும், விடாது தத்துவங்களுடன் கலந்திருந்தபோது அதற்கு ஆன்மா என்றும் பேரிட்டுள்ளன. பரம் என்ற நிலையில் சிவ சத்தியில் பிரிப்பின்று விளங்குவதே அதன் நிலை என்றும் அந்த நிலையை விட்டுக் கீழிறங்கிய போது ஆன்மா வென்றும் தெளிவுபடுத்தினர். இதனை வேறு பாஷையில் ஆன்மசமஷ்டியே சிவ நிலையென்றும், அதன் வியஷ்டியே ஜீவனும் பிரபஞ்சமும் என்றும் விளங்குகிறது.

சமஷ்டியையும் வியஷ்டியையும் இணைக்கும் நிலைக்குப் பிரணவம் என்றும், சாதாக்கியம் என்றும் பேரிட்டுள்ளனர். இத்தகைய பிரவத்தை உயிர் உள்ளபோது அறிந்து அநுபவத்தில் உணர்ந்தால் அதுவே வேதம் கண்ட பெரு நெறியாகும்.

பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொரூபம தானேர் துகளில்பார்ப் பாரே. (227)

ஆகமம் புகழ்வதும் இதையே தான். உலகில் உள்ள பல மொழிகளிலும் பல மதங்களிலும் தலைசிறந்த மந்திரம் பிரணவந்தான். இதுவே தான் சிவத்தினின்றும் பிரியாத சக்தியுமாகும்.

தூலப் பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலைச் சொரூபப் பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலைப் பிரணவம் வேதாந்த வீதியே. (2675)

ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே. (2676)

ஓங்காரத் துள்ளே யுதித்தலும் ஐம்பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே. (2677)

வருக்கஞ் சுகமாம் பிரமமு மாகும்
அருக்கஞ் சராசர மாகும் உலகில்
தருக்கிய வாதார மெல்லாந் தன்மேனி
சுருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந் தோரே. (2678)

குறிப்பு :- பிரமமே ஜகத்தாயும் சீவனுமாயுள்ளது என்ற ஏகான்ம வாதக் கொள்கையையும் நிலை நாட்டியுள்ளார்.

ஞானயோகம் :

தனது பிரணவ தேகத்தை அறிவதில் ஜீவனின் ஞானம் உள்ளது. இது தன்னுண்மை என்ற சமய தீட்சையாகும்.

பிரணவ சத்தி என்ற ஒளி வெளிப்படுவது விசேட தீட்சை என்ற பராசக்தியின் வெளிப்பாடு. பிரணவசக்தியின் அறிவு பதிதலை அருள்நிலை என்றும், நிர்வாணம் என்றும் கூறுவர். நிர்வாணம் என்றால் சகல பந்தங்களினின்றும் விடுபட்டவர் என்று பொருள்.

ஜீவனின் தனி வியக்தியை அகண்ட சக்தியில்கரைத்து நிற்பதே ஞானபிடேகம் ஆகும்.

ஞானச் சமயமே நாடுந் தனைக் காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதய
ஞான நிர்வாணமே நன்றறி வானருள்
ஞானபிடேகமே நற்குரு பாதமே. (1476)

இந்தப் பிரணவமேதான் சிவம், சத்தி, பரம், ஆன்மா என்று பிரிக்க முடியாத பெருநிலை. பிரணவத்தை மூலமனு, ஒருமொழி, மௌனம், கூறாத மந்திரம் ஓரெழுத்தொரு மொழி, ஒரு வார்த்தைஒளிநெறி, நாதநெறி, பெருநெறி என்று பல பேர் கொண்டழைப்பர்.

ஓங்காரி என்பாளவ ளொருபெண் பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. (1073)

தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுயிர்வித்துத் தந்த பதினும்
வானோர் தலமும் மனமும் நற்புத்தியுந்
தானே சிவகதி தன்மையு மாமே. (1074)

இத்தகைய பிரணவத்தை உணர்வினாலும் ஒளியாலும், ஒலியாலும் (விந்து நாதங்களால்) அறியத்தக்கது. இது நிராதார யோக நெறியாகும். அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் என்று ஐவகைப் பிரிவினையுடையது. நிராதார யோகம் நாதோபசனையாகும்.

மாதவர் எல்லாம் மாதேவன் பிரான் என்பர்
நாதம தாக அறியப் படுநந்தி
பேதஞ் செய் யாதே பிரான் என்று கைதொழில்
ஆதியும் அந்நெறியாகிநின் றானே. (1542)

ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த வுருவது வாமே. (1545)

அந்நெறி நாடி அமரர் முனிவருஞ்
தெந்நெறி கண்டார் சிவனெனப் பெற்றூர்பின்
முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்
சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. (1546)

வழிசென்ற மாதவம் வைகின்ற போது
பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
டுழிசெல்லில் உம்பர் தலைவன் முன்னுமே. (1549)

இத்தகைய பிர்ம வித்தையைத் தென்னாட்டுக் குணர்த்தவே தான் வடநாட்டிலிருந்து வந்ததாகக் கூறுகின்றார்.

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாகமொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே. (77)

நேரிழை யாவாள் நிரதி சயானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ னுவடு தண்டுறை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. (78)

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைப்
சேர்ந்திருந் தேன்சிவ னுவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. (79)

இருந்தேன் இக் காயத்தே எண்ணிலிகோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. (80)

இவ்வளவு பெரும் நிலையை விளக்கியவர் சிவத்தின் நிழலில் கலந்து உறைந்ததாகவே கூறி முடித்தார். சிவம் உணர்த்த உணர்ந்த தாகவே கூறி முடித்தார்.

சமரச நன்னிலை பெற்ற சித்தர் அருள் பெற்றுச் சாதி சமயப் பிணக்கின்றி வையகந் தழைத்தோங்குக.

## அகிலாண்டநாயகி மாலை

பெருவள னமைந்த நீருருவாய
பெருந்தகை நீருரு வாய
ஒருகுல மகளை மலர்மிசைத் தேவு
முணர்தராக் காட்டிடை மறைத்தான்
அருகுநுண் ணிடைநிற் கஞ்சியே யன்றே
லணியுருப் பாதிமற் றிலையோ
கருமுகி றவழு மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (17)

இடையரு வன்பின் மெய்கொடு துதிப்பா
ரின்றுதி முன்னர்மெய்ந் நிழல்போல்
புடையரு வினையேன் பொய்கொடு துதிக்கும்
புன்றுதி யெங்ஙன மென்னில்
நவடயருத் தேமாங் குயிற்குர லெதிரோ
ரரிட்டமுங் கதறுதல் பொருவும்
கடையரு மருதஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (23)

# YOGA—THE PSYCHOPHYSICAL DISCIPLINE

## A PEEP INTO PATANJALI

BY

Professor M. S. SRINIVASA SARMA, M.A.

**The Hindu Technique of Religion:**

Yoga is a unique Hindu concept extremely difficult to translate into English. It is religion on the experimental side and sums the aspirations and achievements of Hindu Thought. Philosophy with the Hindus is not simply an intellectual pursuit; it is also a dedicated life; and Yoga is the name for it. If philosophy is the vision of Truth, the Yoga is its practical side making for its realisation. Yoga is thus both an intellectual system and a practical discipline of life. It is harmonised knowledge making possible a harmonised life. It is the system of self discipline that lifts us to serenity and freedom and gives a healing unity of soul.

The ordinary meaning of Yoga is to "meditate" but its technical meaning is "to join". It measures our capacity for God and comprises the practical discipline which points the road to the mystic realisation of the oneness of all and is thus the Crown and completion of spiritual life.

**"Be Ye Perfect"**

Man's instinct for fullness of life finds its articulation in the Upanishadic dictum "*Tat-Tam-asi*" and in Christ's extenuation "Be Ye perfect even as your Father in Heaven is perfect." This call to perfection is addressed to each of us and lends order and dignity to our existence. Therefore the poet's words "A man's reach should exceed his grasp" is not merely a command of what *ought to be*; they are a description of "*what is*". Man has always been stretching himself beyond his own measure. He has a sense of the Infinite. Eternity has been set in his heart. He has not been content to look only on the things seen; his gaze has ever been towards the unseen. He always seeks for and strives after what is above and beyond himself and his world. Yoga is the sovereign method in Religion for spiritual perfection. The simultaneous culture and co-ordination of the keenness of the intellect and intensity of concentration, the favour of emotion and the power of will, consummated in the Supreme surrender to the Divine constitute the core of Yoga.

**Coordinate Living:**

Yoga is concerned with the "whole" individual and aims at the symmetrical development of all his powers. It recognises that the body is the instrument and apparatus of spiritual life, gives to it as much dignity as it gives to the mind and demands that in the interest of

spiritual freedom both body and mind must be under perfect control. The Hindu philosophy declares that *Pushti* (vitality), Tushti (Happiness) and Santi (Peace) are the triple ideas of life ; the fulfilment of this depends on the integration of the activities of the body with those of the mind and spirit.

Yoga, then, may be defined as the process as well as the result of balancing the different sides of our nature, body, mind and spirit. It may be thought of as an efficient and scientific method of bringing about the development of man's *triune* nature by means of mental concentration upon the various bodily functions, mental powers and spiritual forces experienced in and through the human organism. It is a set of practices which cure the body of its restlessness and free it from its impurities. It is a system of mental and moral discipline by which we can purify the intellect, free the mind of its illusions and have a direct experience of Reality. The physical body, the active will and the clamant emotions are brought under control and become veritable dynamos of spiritual Energy. The increased vitality secured through these austerities is then employed in the Supreme task of the salvation of the soul.

**Mind-Control :**

The harnessing or disciplining of the mind is fundamental to all systems of Yoga. According to Patanjali, Yoga is the restraining of the fluctuations of the mental tendencies. Where this control and discipline are lacking, the self identifies itself with the interminable flux of the desires and impulses and modifications of the mind, so that there prevails a condition of mental obscurity called *Avidya* or Ignorance. Egoism is the immediate result of Avidya ; it fills us with desires and aversions, hatred and avarice and dulls spiritual vision and keeps us in a state of perpetual subservience. Thus Avidya is the main cause of all our troubles ; and the Supreme ethical task of Yoga is the uprooting of Avidya. The elaborate mental and moral disciplines help us to discriminate that our real nature is that of the spirit and the body and mind, relatively speaking, exist only as instruments for the actual realisation of the spirit. Thus Yoga is the practical means whereby the senses and the mental processes are held in restraint ; it is the recognised means of purifying the body and delivering the soul from the vicious and oppressing tendencies of the mind, as preperatory to the pursuit of *Jnana* which brings about salvation.

**A Synopsis of Yoga :**

A long and painful process of preparation is imposed upon us so that we may triumph over all the obstacles inherent in the feebleness of man. The programme of this spiritual gymnastics consists of *eight stages*, *five* of which are physical and ethical and *three* psychological and metaphysical.

The first five aim at bringing the body under control and comprise injunctions and prohibitions in everyday conduct and rules and

regulations relative to the positions to be taken in meditation and others which have for their aim the control of breathing, the restraining of the senses and the destroying of the communications between the mind and the eternal world.

There is a special insistence upon the regulation of the breath on the ground that individual life and thought are bound up with respiration and that to control the one is to dominate the other. When finally the body has been purified by these five stages it becomes possible to exercise control over it.

Three kinds of exercises lead progressively through Meditation and contemplation to the final beatitude of unification with the Absolute.

Thus in eight steps the soul obtains liberation first of all from the external world and then from the hindrances which come to it through its association with the organs of intelligence and Will. Liberated from the world of results, the soul rejoices in pure tranquility; dissociated from the internal organs, it takes the effable delights of ecstasy, and reaches without any distraction the state of integration—*Kaivalya*, in which is its salvation.

**The Spiritual Athleticism :**

The religious consciousness gives meaning and vitality to the whole striving of man. It stimulates the imperfect and finite soul towards the approximation to Truth, Beauty and Goodness. The religious life means contact with the Perfect. It creates unity and harmony in our life. The Kingdom of Heaven is always "at hand" as it is "within us". It is the noblest of saying that "God is love". Love and Friendship are the choicest fruits of the tree of life; and love means harmony, truth and beauty. God is purifying love, constructing love, healing love pervading the cosmos. But God cannot enter our life without our asking and seeking.

**Ethical :**

The *first* steps in our spiritual quest is *Yama* which consists of ethical disciplines of abstentions corresponding to "Thou Shall Not's". Yama is negative discipline which asks us to refrain from causing injury to any living being, falsehood, theft, incontinence and acceptance of gifts. Of these, the first one non-injury—is the most important; and a proper fulfilment of it will automatically take care of the rest. This is the sublime doctrine of *Ahimsa* which asks us to cultivate a spirit of friendliness to all and go through life bearing malice towards none. It is the nature of personality to be separative and possessive; this separativeness can be overcome by loving and this possessiveness by giving.

The *second* step *Niyama* constitute positive directions regarding what we ought to do to develop serene frame of mind. They are purity (Sancha), contentment (Santhosha) austerity (Tapas) Study (Avadhyaya) and devotion to God (Iswara Paridhana). These discipline us in cleanliness, control of body and mind and surrender to God. They elevate us by cleansing ourselves of its

sensuality covetousness, immoderation in sex, drink and food, envy, hatred and lethargy. Ordinarily our desires and aversions cloud our whole understanding. So long as we are full of desire for sense-enjoyment and for possession, egoism and vanity, God has no place in our life. This office-psychological preparation of Niyama develops *Vairagya* or freedom from attachment to objects or results of one's own deeds, which is a prerequisite for success in spiritual exercises and brings about a moral transformation and a redirection of psychic energy in the path towards god-realisation.

**Physical:**

In the progressive development of spiritual life, special attention is paid to the building up of a healthy body. The *third* of eight stages of Yogic discipline deals with a series of gymnastic exercises intended to improve the various parts of the bodily organism. These exercises are called *Asanas* or Postures and aim at an all-round development of the body. Some of these postures have specific therapeutic value.

The breathing exercises (Pranayama) constitute the *fourth* step. These help us to maintain our bodies at a high level of physical efficiency.

The *fifth* step is *Pratyahara* or withdrawal of the senses from their objects. Here a deliberate effort is made to diminish the impulses streaming through the sense organs. In this condition, the state of mind is one of detatchment from the external world; it is responsive only to those stimuli that have a spiritual value and is dead to those stimuli that are useless for spiritual progress.

When this stage has been reached, we are ready for *Dharana*-the dynamic, one-pointed concentration *Dhyana* (Meditation) and finally *Samadhi*, the Crown and completion of all religious disciplines. Samadhi is either *Samprajanata* accompanied by deliberation, reflection and joy, or *Asamprajnata* in which the ultimate truth dawns on the Yogin and the Purusha abides in itself. It is the door that leads to a new insight an insight which is considered superior to the knowledge derived through perception, inference and valid testimony.

**Basis of sane living:**

Now the practical value of these yogic exercises for everyday life is enormous. "I see the better but follow the worse"—is the pathetic cry of most of us. What is this weakness due to? The root cause is that we have not disciplined ourselves and cultivated sweetness of temper, sanity of mind and strength of spirit. But Yoga guarantees these. It makes our body healthy and sound, controls the senses, corrects our conduct and establishes the right attitude towards others. Though the more intensive practice of Yoga is not for everybody, yet an honest beginning should be made by all of us in the interests of sane and happy living. We will then be astonished at the progress we make and the results we enjoy; and then we will find it easy to climb from one step to another till atlast we establish com-

plete mastery over our body and mind.

**Strength of Body:**

The two essentials for successful living are the strength of body and purity of mind. The integration of the activities of the body with those of the mind is a basic principle in the culture of the soul. Moral and social habits are essentially physical and hygeienic habits. Bodily health therefore is the foundation of personal morality. The need to struggle is the salt and saving of true life and poor health affects efficiency, spoils plans and keeps the individual from the things for which he is best equipped. Heightened vitality means efficiency, more work done and greater usefulness to society. It develops the power of hard work and is a safeguard against self centredness and energy.

**Purity of Mind:**

"Blessed are the pure in heart, for they shall see God"—said Christ. We must free ourselves from the tyranny of lust and greed and pride. Psychology points out that two things stand in the way of our having right relationship to other people, namely, selfishness and insincerity. We live in a world the order of which is truth and love. We must have pure hearts and unbiassed minds if the real values of life are to be revealed to us. Selfishness and insincerity are at the root of all our personal miseries and social misunderstanding. These can be got rid of only when we have achieved *Chitta Suddhi* as a result of these yogic practices.

This is what Aristotle calls "*Catharsis*" or cleansing of the mind of all its selfcentredness and prejudice; and filling it with great ideals which however moved men to noble deeds and righteous actions. Love, compassion and sympathy are natural to the purified mind.

**"Yoga is skill in action"**

"What shall I do to inherit Eternal Life?"—was the question put to Christ and the answer was "Do the duty for duty's sake". Kant saw no practical opening to the Kingdom of Ends except through the gateway of duty for duty's sake. "Stand up, Parantapa"—Commands Krishna the Yogeswara. For what? To do his Duty. The life of Atman demands the discipline of deeds. Sree Krishna's call is to break the three bonds of evil desires, selfish actions and weak will and to enter the Life of Freedom. Yoga insists that any task irrespective of its dignity should be done gracefully for its own sake. We feel ourselves at rest when we give up all selfish desires and surrender ourselves completely to HIM body mind and soul. With this surrender comes a newly experienced peace of mind which gives feelings of ecstasy too subtle for analysis.

# SAIVA SIDDHANTA AND KASHMIR SAIVISM

Professor P. THIRUGNANASAMBANDAM

IN the Modern Age when integration of peoples, cohesion of systems and union of minds are talked about and rightly so, it would be appropriate to consider the common links that are found in the two systems of Saivism, one in the extreme north in Kashmir and the other in the extreme south in Tamil Nad known respectively as Kashmir Saivism and Saiva Siddhanta. Although the former is monistic in character and the latter pluralistic, they are not without some common grounds. That some link had been effectively forged in the distant past between the different aspects of Saivism in the several parts of the country, with of course local variations conditioned by the varying forces and currents of religious and philosophic thought that swayed at different periods, is evident from a perusal of the doctrines and practices of those different Saiva schools of thought.

It is the object of this paper to indicate in a brief compass how Saiva Siddhanta agrees in some respects with Kashmir Saivism and disagrees in some others.

Exclusiveness is no virtue. Saivism in the South is noted for its catholicity. Its doors are open to every one. There is no distinction of high or low, rich or poor, learned or lay. A perusal of the list of Saiva saints would bear testimony to this. Monarchs and mendicants, priests and laity nay even a shrub have the potentiality to rise to the heights of sipiritual perfection and ultimate release.

Kashmir Saivism also is a democratic religion. Its appeal is not confined to the three privileged castes alone. Sudra is as much eligible to pursue the path of liberation as the learned brahmin. Universal brotherhood is one of the planks of this system. Like Saiva Siddhanta it too does not consider Veda alone as the sole authority. It is based on the sixtyfour monistic Saiva Agamas which however are different from the twentyeight Sivagamas held as scriptural authority by the Siddhantin.

Just as a work of art is the product of the time when it was produced and inherited traditions, so the doctrines of a particular school of philosophy have some relevance to the inherited traditions and contemporary trends. Buddhism, the school of philosophical grammarians, the Sankhya school and the Advaita system of Sankaracharya, each in turn moulded the thought of the Kashmir Hindus at various periods from the days of Asoka in the 3rd century B. C. to Adi Sankar in the 9th century A. D. and we find the culmination in monistic Saivism of

the 9th century Kashmir, with the doctrines and categories of these several schools impressed on it.

According to Saiva Siddhanta, God, soul and bondage are all real and different from one another though the last two may be considered to be dependent on the first. It may be described as 'Pluralistic Realism' whereas Kashmir Saivism may be described as 'Realistic Idealism.' While Realism believes in extra-mental reality which exists independently of any relation to any mind, Idealism maintains that every thing is essentially of the nature of thought and as such no being independently of the mind. Kashmir Saivism, has synthesised the two. The Realistic Idealism puts forth its theory of all-inclusive universal consciousness which is the Highest Reality or 'Purna Samvit'. This corresponds to the 'Suddha Brahman' of the Advaitin. The Ultimate is both transcendental and immanent. It possesses the five powers or saktis, viz., cit, ananda, iccha, jnana and kriya. Saiva Siddhanta also agrees broadly with this concept of the Supreme.

In regard to the evolution of the Universe, the two systems differ. The Universal mind, technically called Mahesvara according to Kashmir Saivism, brings forth everything from itself. The manifestation of the world of varied objects and subjects is nothing but the concretisation of its aspect of will. The ultimate metaphysical principle is 'swatantriya' of which the phenomenal world is only a manifestation (abhasa). At all times, before, after and at the time of manifestation, the abhasas or manifested things are within the Absolute, as the waves are within the sea. The abhasas shine only on the background of the Absolute just like reflections in a mirror and as such have no independent existence. They are mere transitory appearances. According to this system the subject as well as object are mere momentary collections of a certain number of abhasas or manifestations. The Jivabhasa is the limited sentient manifestation and Jadabhasa is the insentient manifestation. The former has the capacity to receive reflection while the latter has not. The individual self in its prakasa aspect is self-luminous and contains residual traces (samskaras) of varying affections and is capable of receiving reflection. Its 'vimarsa' aspect signifies the capacity of the self to know itself in all its purity and others, of controlling what it contains within and of giving rise to new psychic phenomena with the residual traces. It is the latter aspect that distinguishes the soul from the jada. This would show how this conception differs from that of the Siddhanta school which maintains that pasu and pasa are as eternal as God and quite distinct from Him and how they are 'real' and not mere 'appearances'.

While the Advaitins refer only to the three functions of the Brahman, namely, creation, sustenance and dissolution, the Kashmir school like Siddhanta, adds two more, namely obscuration and grace. It must however be remembered that the last two

are brought about by God's independent will, while the other three are dependent on the karma mala of the souls. Both the schools also agree in the soul being bound by the three malas, namely anava, karma and maya and their classification into Sakala, Vijnanakala and Pralayakala. They however differ in another respect. The plurality of selves is accounted for by Kashmir Saivism as being the result of the threefold powers of maya viz., obscuration, multiplication and differentiation. Every such soul is atomic and as such non-spatial like a mathematical point. Siddhanta on the other hand holds that the plurality of souls is inherent and true and the soul is pervasive. The five states of consciousness from 'jagrat' to 'turiyatita' are acceptable to both.

The theory of causation according to the Kashmir school may be stated thus. The ultimate Reality is conceived not only as universal consciousness (prakasa) but also as universal energy (Vimarsa). It is the latter which appear in the form of the innumerable physical phenomena because of the creative desire of the Ultimate. Just as innumerable lights being forms of electric energy do not impair its unity, so also the diverse phenomena of the world do not affect the unity of the Universal energy. This differs from the Satkaryavada of the Sankhyas accepted by the Siddhanta school. The Siddhantin explains that Isvara with maya as material cause creates the world even as a carpenter creates a tool with wood, whereas the Kashmir Saiva declares that Isvara by his mere will creates the world without any extraneous material cause just as a yogi who creates a plant without a seed. As Vasuguptacharya, the first great exponent of Kashmir school would put it, Mahesvara is a great Artist who can draw the picture of the world of sentients and insentients even without a canvas.

The Siddhantin argues that the Universe which an effect must have a material cause not different from it in nature. The Universe being insentient, a cause that is of like nature must be assumed and that is maya. Being insentient it cannot evolve itself. So it requires an intelligent agent and such an agent is God who operates on Maya through his cit-sakti. This is the Prakrti-parinamavada as distinguished from the Abhasavada of Kashmir Saivism.

The number and names of the thirty-six tattvas are the same in both the schools of Saivism. They include the twentyfour Sankhya tattvas plus the soul and eleven other Suddha tattvas.

While Siddhanta explains the four paths leading to liberation viz., carya, kriya, yoga and jnana, the Kashmir school refers to four means viz., kriyopaya or anavopaya, jnanopaya or Saktopaya; icchopaya or Sambhava marga, Anandopaya or Arupaya marga which raises a person from the knowledge of duality to that of Unity. Repetition of religious formulas comes under the first. Meditation like 'The self alone is all this' comes under the second. Mere exercise of the will power aimed at unification of ideas or elimination

thereof comes under the third. The realisation of the self by 'pratyabhijna' or Recognition of the Ultimate in the form 'I am Isvara' in consequence of instruction by a guru comes under the last. The first may be compared to a lullaby putting a child to sleep, the second to auto-suggestion which induces one to sleep, the third to a state immediately preceding sleep and the fourth to sleep in which consciousness is free from all affections.

While the Advaitin holds that the Universe is unreal, the Kashmir Saiva contends that the Universe is real in the sense that it is a manifestation of the Ultimate All-consciousness. According to the Advaitin with self-realisation facts of experience of the phenomenal world are negated, whereas according to Kashmir Saivism there is no such negation but only a new understanding of the Universe in its true perspective. This kind of realisation is called 'Pratyabhijna' where one realises himself as 'I am Isvara.' For its self-realisation there is a necessity for the removal of Maya, the principle that obscures the perfect will power (Swatantriya sakti) and of ignorance thereof. For removing this ignorance one must acquire 'bauddha jnana' or spiritual knowledge by a study of the Monistic Agamas and Paurusa jnana from diksa or initiation by a guru. It may be noted that the importance of a spiritual preceptor, the indispensability of his initiation and instruction are also the cardinal tenets of the Siddhanta school. It may however be noticed that in the state of mukti according to Siddhanta, the soul loses its individuality but retains its personality so that the soul may experience the bliss. The soul enjoys His nature with becoming identical with Him.



சுந்தரபாண்டிய கோபுரத்தின் நடுப்பகுதி

# DIVINE GRACE AND HUMAN FREEDOM

Dr. V. A. DEVASENAPATHI

CAN we think of God as all powerful and at the same time, think of man as a free agent? The question becomes more complicated if we think of God as not only all powerful but also all merciful. If God is all powerful why is there so much evil in the world? Is it because He is indifferent to the suffering of His creatures? On the otherhand, If He does care for His creatures, is He powerless to prevent their suffering? Again, if God is all powerful, is man free to make his own decisions? If he is not free, why blame him for his lapses? If he is totally free, how can God be all-powerful?

These questions have been faced by all believers in God—in the East as well as in the West. So far as the Hindu theists are concerned, there is an additional difficulty posed by their belief in Karma. By his actions in past lives, man has acquired a stock of merits and demrits. This stock determines his freedom of action in his fores but (and possibly future) life to a large extent. If the stock of merits is great, the chances are that a man may not only enjoy the rewards of these merits but also have a favourable predisposition for such conduct as will promote his progress. Likewise, if the stock of demerits is great, he may not only experience the illeffects of these demerits but will also be hampered by predisposition for conduct detrimental to his progress. The Hindu theists believe in previous births and the possibility of future births. While the belief in previous births is likely to generate a pessimistic or fatalistic attitude inimical to a life of healthy endeavour, belief in future births may engender a hopeful attitude in regard to fresh opportunities for improving one's future. It seems necessary to the Hindu theists that for achieving perfection, not one birth but several are required and that while freedom has its Hazards, it is indispensable for healthy spiritual growth.

The Hindu theists do not consider it necessary or profitable to answer the question as to how Karma started They say it is beginningless. But they are sure that it is not endless i.e. though action may not cease, action that bids one may desire to place to action that will not bind, as an individual grows in moral and spiritual stature. This growth occurs when he learns to do his duty with no thoughts of rewards and punishments and when he considers himself to be a mere instrument in God's hands. He discords at this state that not only has he not lost his freedom but that he has also actually enhanced it! Man is never so free as when he does an action actuated by love for all living creatures and with the utmost devotion to the Lord, who is the source of all that is true, good and beautiful.

How does God's grace operate? Does it operate without asking for man's co-operation or does it need such co-operation? The way of the monkey and its young ones and of the cat and its young ones are frequently referred to in this context. We have a variant of the same idea in the analogs of the ladder and the Goat. The young one of the monkey has to cling to its mother. This much effort is necessary on the part of the young monkey. The rest is the concern of the mother. On the otherhand, the kitten is picked up by the cat in its mouth and carried about. Can we say that all that the kitten has to do is not to struggle to get out of its mother's mouth? Likewise an individual who wishes to climb has to go up the steps of a ladder. The ladder will not pick him up. On the otherhand, when an individual sets into a boat, he floats effortlessly to his destination (but initially he has to get into the boat)

It may appear as though in these analogies the need for human effort and the omnipotent mercy of the Lord are contrasted. But actually, it is only a difference in emphasis. The monkey-ladder analogy emphasises the need for human effort; the cat-boat analogy stresses the over-all power of Grace. But may we not say that even where effort is stressed, it is in the context of God's omnipotent lore and that even where total sub-mission is emphasised, what appears to be a passive surrender is a deliberate surrender of one's free will?

When individuals believe and act on the maxim, 'Our wills are ours to make them thine', action becomes really free and spontaneous. Sages and saints show us a sure way to such freedom when they exhort us to offer worship to the Lord.

What is the aim of man's action? Is it not to overcome sorrow and gain ceaseless and unsurpassable bliss? Is it not to shake off the yoke of bondage and wear the livery of the servants of the Lord—'to serve whom is perfect freedom?' It will be appropriate to recall on this context what saints Tirugnanasambandhar, Appar and Sundarar say in their Tevaram relating to Tiruvanaikka—

> 'No harm will ever befall those who find their refuge in the Lord of Tiruvanaikka. What better protection, indeed than His grace?

The effects of mighty deeds will be nullified for those who worship in love the Lord of Tiruvanaikka

Yes, if we worship the Lord, we shall be emancipated from great sins.

Do you want freedom from bodily ills and from mental afflictions? Do you want to enjoy bliss? Worship the Lord day and night.

What is the most potent medicine against the effects of mighty deeds? It is the Lord!

The first and last word in spiritual life is Grace!

# சைவ சாதனங்கள்

# திருநீற்றுப் பெருமை

சித்தாந்தக் கலைமணி, மகாவித்வான், சி. அருணைவடிவேல் முதலியார், தருமபுரம்.

சைவ சமயத்தில் சொல்லப்படும் இன்றியமையாச் சாதனங்கள் ' திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து ' என்னும் மூன்றுமாம். இவற்றுள் மிக இன்றியமையாச் சாதனமாய் முதற்கண் நிற்பது திருநீறே. உருத்திராக்கம் அணியாமலும், திருவைந்தெழுத்தை ஓதாமலும் திருநீற்றை மட்டும் அணிபவர்கள் கூட ஓரளவில், ' சைவர் ' என்றே மதிக்கப்பெறுதல் கண்கூடு. ஆனால், திருநீற்றை அணியாமல் ஏனைய சாதனங்களைக் கொள்ளும் சைவர் ஒருவரும் இலர். இம்மரபு ஒன்றே திருநீற்றின் பெருமையை விளக்கப் போதிய சான்றாகும்.

திருநீறு இத்துணைப் பெருமையுடையதாய் விளங்குவதற்குக் காரணம் யாது? என்று ஆராய்தல் வேண்டும். ' நீறு ' என்பதைப் பொதுமக்கள் மொழியில் கூறினால் ' சாம்பல் ' என்று சொல்லுதல் வேண்டும். சமயாசாரியர்களும் சில இடங்களில் திருநீற்றைச் ' சாம்பல் ' என்று குறித்தல் காணலாம். அவ்வாறு குறிக்குமிடத்தில் அது சிறப்பில்லாத பல பொருள்களுள் ஒன்று போலத் தோன்றுகிறது. அங்ஙனம் தோன்றுகின்ற—எண்ணப்படுகின்ற—நீறு, ஏனை எல்லாச் சாதனங்களிலும் மிக மேலான பெருமை பெற்று விளங்குதல் எவ்வாறு என்பது பெரிதும் ஆய்விற்குரியதே.

' சாம்பல் ' என்பது யாது என்று உற்று நோக்கின் ' எப்பொருள் அழியினும் தான் அழியாது நிலை பெற்றிருக்கும் அடிநிலைப் பொருளே சாம்பல் ' என்பது தெளிவாகும். எனவே எல்லாம் அழிவெய்திய பொழுதும் அழியாது எஞ்சி நிற்கும் பொருளை அது குறிப்பதாம். ' சாம்பல் ' என்பதற்கு ' ஒடுங்குதல் ' என்பதே பொருள்.

பருப்பொருளாய்க் காணப்படும் உலகம் முழுதும் காரியம். அஃதாவது ஆக்கப் பொருளே. ஆக்கப் பொருள் யாதாயினும் அதற்கு ஆதி உண்டு. ஆதி உண்டாகவே அந்தமும் உண்டு என்பதைச் சொல்லத் தேவையில்லை. அஃதாவது ஆக்கப் பொருள் யாவும் ஒரு காலத்தில் அழிவெய்துவனவே. இத்தகைய ஆக்கப் பொருளாய் பருப்பொருட்கு முதலாய் நிற்பது நுண் பொருளாகிய ஆற்றலே. அவ்வாற்றலாய நுண் பொருளினின்றும் உருவாகிய பருப் பொருள், மீண்டும் அந்நுண்பொருளாகவே மாறிவிடும். இம்மாற்றமே ' அழிவு ' அல்லது ' ஒடுக்கம் ' எனப்படுகின்றது. உலகமாகிய பருப்பொருட்கு முதலாகிய நுண்ணிய ஆற்றலே ' மாயை எனப்படுகின்றது. எனவே, பருப்பொருளாகிய உலகங்கள் நுண்பொருளாகிய மாயையினின்றும், தோன்றி மீள அதன் கண்ணே ஒடுங்குவனவாம். அவ்வொடுக்க நிலையைக் குறிப்பது சாம்பல் என்றால், அது மாயையின் சின்னமாதல் தெளிவு.

உலகிற்கு முதலாகிய மாயை என்னும் ஆற்றல் தனித்து நிற்கக் கூடியது அன்று. அஃது இறைவனது ஆற்றலையே பற்றுக் கோடாகக் கொண்டு நிற்பது. ஆகவே ' இறைவன் ' திருமேனி முழுதும் சாம்பலைப் பூசியுள்ளான் என்றால், உலகிற்கு முதலாகிய மாயைக்கு அவனே பற்றுக் கோடாக நிற்கின்றான் என்பது தான் பொருள். ' உலகிற்குப் பற்றுக்கோடு இறைவனே ' என்று உணரும் உணர்வே மெய்ஞ்ஞானத்தின் முதற்படி. அதனால், அந்த உணர்வை உண்டாக்குகின்ற திருநீறு, சைவ சமயத்தின் முதற் சாதனமாய் விளங்குகின்றது.

இனி உயிர் இல்லையேல் உடம்பு நிலை பெறாதது போல், இறைவன் திருவருள் இல்லையேல் யாதொரு பொருளும் நிலைபெற மாட்டாது. அதனால் எல்லாப் பொருளையும்

நிலைபெறச் செய்யும் விருப்பமாகிய பெருங் கருணையாலே இறைவன் அவற்றிற்குப் பற்றுக் கோடாய் நின்று தாங்குதலேயன்றி, உயிர்ப்பொருள் அனைத்திலும் உடலில் உயிர்போல உள்ளீடாய்க் கலந்து நிற்கின்றான். அவ்வாறு கலந்து நிற்கும் நிலையே, 'சக்தி' அல்லது 'அருள்' எனப்படுகின்றது. அதுபற்றியே, 'எல்லாம் சிவமயம்' அல்லது 'சக்தி மயம்' அல்லது 'அருள் மயம்' என்னும் வழக்கு உண்டாயிற்று. உலகமே 'அருள் மயம்' என்றால், அதன் அடிநிலையாகிய திருநீறு 'அருள் மயமே' என்பது சொல்லாமலே விளங்கும். அக் கருத்தினால்தான் திருநீற்றைச் சைவ சமயம் 'சாம்பல்' என்று இகழாமல் இறைவனது அருள் எனப் போற்றுகின்றது. 'திருநீறு இறைவன் திருவருளே' என்பதை, "பராவணமாவது நீறு" என்று ஞானசம்பந்தர் தமது திருநீற்றுப் பதிகத்தில் அருளிச் செய்து, மற்றும் அதன் பெருமைகள் பலவற்றையும் அத்திருப்பதிகத்திலே அருளிச் செய்தார். 'பரா' என்பது பராசக்தி. 'திருநீறே மந்திரம்; தந்திரம்; (ஆகமம்) போதம் (ஞானத்தைத்) தருவது; புன்மையை (அஞ்ஞானத்தை) நீக்குவது; முத்தி தருவது; சத்தியம் (மெய்ப்பொருள்) ஆவது; சித்தி தருவது; சேணம் (உயர்கதியைத்) தருவது; உலக ஆசையைக் கெடுப்பது; அந்தம் (எப்பொருட்கும் முடிவு) ஆவது; அவலம் (மனக்கவலையைக்) நீக்குவது; இடையூறுகளை ஓட்டுவது; எயில் (திரிபுரத்தை) அழித்தது; புண்ணியத்தின் பயனாகக் கிடைப்பது; திருமால் பிரமனாலும் அறியப்படாத பெருமையுடையது. என்றெல்லாம் பலவாறாக ஞான சம்பந்தர் அருளிச் செய்த அனைத்தையும் தொகுத்து நோக்கினால், திருநீறாவது இறைவனது அருளாற்றலே' என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்படும். இது பற்றியே அத் திருப்பதிகத்தைக் குறிப்பிடுகின்ற ஓர் அகவற்பா,

> "நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை
> மாற்றுப் பரையின் வரலா றாகும்"

என்கின்றது. பரை—பராசக்தி; திருவருள்.

திருநீறு, 'விபூதி' எனப்படுகின்றது. பூதி—ஐஸ்வரியம். விபூதி—விசேட ஐஸ்வரியம். எனவே, திருநீறே விசேட ஐஸ்வரியம்—செல்வம் என்பது விளங்கும். ஞான சம்பந்தரும், "அருத்தமாவது நீறு" என்றார். அருத்தம்-செல்வம், திருநீறே உலகப் பொருள் அனைத்தும் என்பது முன்னே விளக்கப்பட்டது. உலகம் முழுவதும் இறைவனுக்கு உடைமை. ஆகவே, திருநீறே இறைவனது உடைமை—செல்வமாகின்றது. அதனால் திருநீற்றை இறைவனது திருவருட் செல்வமாகவே நாம் கருதுதல் வேண்டும்.

"சமயத்தில் உள்ளது நீறு" என்ற சம்பந்தர் திருமொழியின்படி வைதீக சமயிகள் அனைவரும் சமயச் சின்னமாகப் பண்டைக் காலத்தில் ஒருங்கே கொண்டது திருநீற்றையே. அதனைப் பிற சமயத்தவர் யாவரானும் தாம் மந்திரிக்கப் பயன்படுத்துவது திருநீறேயாதல் இன்னும் நடைமுறையில் இருத்தல் கொண்டு உணரலாகும். இது பற்றியே ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்று அருளிச் செய்தார். வானவர் மேலது நீறு" என்றபடி மக்களேயன்றி அரிபிரமேந்திராதி தேவர்களும், "இராவணன் மேலது நீறு" என்றபடி இராக்கதர், அசுரர் முதலிய அனைவரும் தாம் தாம் கருதிய பயனை அடைதற்பொருட்டு அணியும் கடவுட் சின்னம் திருநீறேயாகும். வேதத்தில் உள்ளது நீறு" என்றபடி வேதத்தில் திருநீறாகிய சமயச் சின்னமே பேசப்படுகின்றது. 'ஜாபாலோபநிடதம்' என்னும் உபநிடதம் திருநீற்றின் சிறப்பையே தனித்தெடுத்துக் கூறுவது. அது, 'திருநீறு இல்லாத நெற்றியைச் சுடு' என்று கூறுகின்றது. அதனை ஒட்டியே ஔவையார், 'நீறில்லா நெற்றி பாழ்' என்றார். இவ்வாறு வடமொழி தென்மொழி நூல்களில் திருநீறு பேசப் படுகின்றதேயன்றிப் பிற சமயச் சின்னங்கள் பேசப்படவில்லை. ஆகவே, மக்கள் உடம்பிலும், தேவர் திருவுருவங்களிலும் திருநீற்றையன்றிப் பிற சமயச் சின்னங்களை அணியும் வழக்கம் பிற்காலத்

தில் சிலர் தாம் நினைத்தபடி படைத்துக் கொண்டனவாகும்.

'திருநீறு அனைத்துத் துன்பங்களையும் அகற்றும்; அனைத்து நன்மைகளையும் தரும்' என்பதை ஞானசம்பந்தர் சொல்லளவில் மட்டுமின்றிக் கூன்பாண்டியன் வெப்பு நோய் நீங்கிப் பிற நலமும் பெற்றவாற்றால் கண்கூடாகவும் காட்டினார். இன்னும் பலர் திருநீற்றால் அத்தகைய நன்மைகள் பல வற்றையும் அடைந்து வருதல் கண்கூடு. இறைவனது திருநீற்றை அவனது திருப் பெயராகிய திருவைந்தெழுத்தைச் சொல்லி அணிந்தால், உடல் நோயும், உயிர் நோ யாகிய வினையும் அழிந்தொழிந்து போம் என்று அறிவுறுத்துகின்றார் அப்பர்.

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன்நல்வெள்ளூர்தி யான்றன்
மந்திர நமச்சி வாய வாகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட் டன்றே.

திருநீறு பசுவின் மலமாகிய சாணத்தை எரித்து உண்டாக்கப்படுவது; அதனால் அது பசுக்களாகிய ஆன்மாக்களது மலங்களை நீக்குதலைத் தெரிவிக்கும். திருநீற்றை மூன்று கீற்றாக அணிவது, 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களையும் நீக்கும் குறிப்பைக் காட்டும். பசுவின் சாணம் தூய் மையைத் தருவது. ஆகையால் அதன் உயர் நிலையாகிய திருநீறு பெருந் தூய்மை யைத் தருவதாகும். இதுபற்றியே, "சுத்தம் ஆவது நீறு" என்றும், "புன்மை தவிர்ப் பது நீறு" என்றும் அருளிச் செய்தார் ஞானசம்பந்தர். எனவே திருநீறு இல்லாத இடத்தில் தூய்மை உண்டாதல் இல்லையாம்.

இத்திருநீறு 'கற்பம், உபகற்பம், அநு கற்பம்' என்னும் வகையில் அமையும் முறையும், அவற்றை அணியவேண்டிய முறைகளும் ஆகமங்களிலும், பெரிய புராணம் முதலிய தமிழ் நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து அணிந்தால், ஞானசம்பந்தர் தமது திரு நீற்றுப் பதிகத்தில் அருளிச் செய்த நன்மை கள் பலவற்றையும் நாம் பெறுதல் உறுதி.

## அகிலாண்டநாயகி மாலை

மறைபல துதிக்கு நின்பெரும் புகழை
வழுத்திய வான்றவர் நாவும்
அறையுமோ மற்றைப் புல்லிய தெய்வந்
தமைபுக ழறையுமே லினிமை
நிறைதரு கருப்பஞ் சாறவா வியநா
நிம்பநெ யவாவுதல் போலும்
கறையறு வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (24)

முழுவதுங் குணமே நாடின்முற் றுது
முகுந்தனு தியரிடத் தீனுநீ
பழுதற வுணர்த்தா விடியுணர் வாரோ
பரமனைப் பண்டவர் புரிதோம்
எழுதரி தவரு மின்னரே லம்ப
வென்செயல் யாதெனப் புகல்கேன்
கழுவிய மணியிற் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (27)

# ஸ்ரீ பஞ்சாக்கர சிந்தனை

திருவனந்தபுரம், மனோன்மணீய ஆசிரியர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களுடைய குரு, கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் எழுதியது [கி. பி. 1855—1897]

(கையெழுத்துச் சுவடி)

அஞ்செழுத் தின்விதி எவ்வித மென்னின்
    அரிய தூலமொடு சூக்கும மேவும்
பிஞ்செ ழுத்தினைத் தள்ளிமேல் நின்ற
    பெருஎழுத் தினைப் பினும்முனும் நிறுவி
எஞ்சலில் உயர் நடுவினில் நிலவ
    இசைத்தல் காரண மாகும்என் றறிவாய்
விஞ்சி நல்லருள் இறையர்தா மிதனை
    விளங்கு பக்குவர்க் கருள்வது விதியே.

விரவியமும் மலர்த்தோர்க் கோம் நம சிவய
    விளங்குநம சிவயமென விளம்ப லாகும்
திருமருவு சிவயநம ஓம்ஆம்ஔம் சிவய
    நம எனஇரண்டு மலர்த்தோர்க் காகும்
ஒருமலத்தோர் சிவயவசி என்றே சொல்லியுரை
    உரைப்பது மாகும்மதி பக்குவர்க்கு மிவ்வாறே
பரவியமும் மலர்த்தோர்க்குப் பரிந்து வசி
    என அருளாற் பகர லாமே.

**திருவைந்தெழுத்தின் வகை :**

(1) தூலம். (2) சூக்குமம். (3) காரணம். (4) மகாகாரணம் என நான்கு வகைப்படும். அதன் விவரமும், அதனைச் செபிப்பதற் குரிய அதிகாரியின் விவரமும், அதனைச் செபிக்கும் முறைமையும், அதன் பொருளும், அதனைச் செபிக்கும் சாதுக்கள் அடையும் பயனும் வருமாறு.

1. தூலம்—ஓம் நமசிவய. இதனை மந்தரபக்குவனும் ;

2. சூக்குமம்...ஓம் ஆம் ஔம் சிவயநம. (இதற்குப் பிரசாத பஞ்சாக்கரம் என்றும் பெயர்) இதனை மந்தபக்குவனும் ;

3. காரணம்—சிவயவசி. (இதற்கு இருதலை மாணிக்கம், இருதலைக்கொள்ளி, முத்தி பஞ்சாக்கரம் என்றும் பெயர்.) இதனைத் தீவிரபக்குவனும் ;

4. மகாகாரணம்—வசி. இதனைத் தீவிர தர பக்குவனும் ஆக இவ்வாறு குருவின் உபதேசம் பெற்றுச் செபிக்கக் கடவது. ('' கலந்தருள் பெற்றதுமா வசியே—காழி அரனடிமா வசியே.''—தேவாரம். 4021.)

செபிக்குங்கால் உரை, மந்தம், மானதம், சுத்தமானதம் எனச் செபமும்—4 வகைப் படும்.

1. உரை—யாவருக்கும் கேட்கும்படிச் செபிப்பது.

2. மந்தம்—தன் செவிக்கு மட்டும் மென்மையாய்க் கேட்கும்படிச் செபிப்பது.

3. மானதம்—மனத்தினிடமாகச் செபிப்பது.

4. சுத்தமானதம்—அப்பஞ்சாக்கரத்தின் பொருளை அறிந்து அறிவு மாத்திரையாய்க் கணிப்பது.

இப்பாஞ்சாக்கரத்தின் பொருளாவது : சகளநிஷ்களரூபமாய் விளங்கும் சர்வக்ஞ பரமசிவத்தின் பொருட்டுச் சீவனது வணக்கமாம்.

சிவஞானத்தைப் பெற்று, அப்பொருள் பயக்கும்—5 எழுத்தே நாவாக இடைவிடாது செபிக்கின்ற மெய்ஞ்ஞானிகளும் சகலவடிவாகிய விக்ரகங்களை வணங்கினால் குற்றமாகாதோ என்றால் குற்றமாகாது. சிவானுபூதி, விக்கிரக ஆராதனை செய்தாலல்லது வாராது. †விக்கிரகம்—என்பதற்கு விசேட இடம் என்று பொருள்.

ஆன்மா இருப்பதற்குக் கிருகம் மனிதர் முதலிய சீவதேகங்கள்போல, சிவமிருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில், விதிப்படி பக்தியோடும் உபாசிக்கில், சிவம் அவரவர் கருதிய வடிவில் எளிதில் வெளிப்பட்டு அனுக்ரகிக்கும்.

† விசேட இடம் எனப் பொருள் கொள்ளின் சொல் விக்கிருஹம் என்றிருத்தல் வேண்டும். விக்கிரஹம் என்பது சிறப்பாகக் கவர்வது. அன்பு செய்வார்மனத்தை இழுப்பது எனப்பொருள்—பதிப்பாசிரியர்.

அவ்வாறு விசேட இடமென்று சொல்லப் படுகின்ற விக்ரகங்களில் சிவமிருந்து வெளிப்பட்டு அனுக்கிரகம் செய்வதற்கு அடையாளமாக இந்த உலகத்தில் ஏதாயி னும் உண்டா? உண்டு.

சிலகாலத்துக்கு முன் விக்ரக ஆராதனை செய்த பக்தர்கள் அசத்தியத்தாலும், அபசாரத்தாலும் நேரிட்ட குட்டம் குன்மம் முதலிய தீராத வியாதிகளைத் தீர்த்தும், இறந்தவர்களை எழுப்பியும், கல்லே புணை யாகக் கரை ஏறியும், படிக்காசு பெற்றும், மறைகள் பூசித்து அடைத்துச் சென்ற கதவை மறுபடி திறக்கவும் அடைக்கவும் செய்தும், ஊமைப் பெண்ணைப் பேசும்படிச் செய்வித்தும், ஊன்றிய பாதத்தைத் தூக்கி மாறியாடும்படி செய்வித்தும், திருச்சிராப் பள்ளியில் தாயாகவும், ஐயாறதனிற் சைவனாகியும், ஓரியூனிற்பாலனாகவும், இன் னும் அசாத்தியமான அநேக மகத்துவங் களை நடத்தியும் இருந்ததே போதுமான அடையாளமாக இருக்கின்றது. இன்னும் இதன் விரிவெல்லாம் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவிளையாடல் இவற்றிற் கண்டுகொள்க.

இஃதல்லாமலும், சொரூபத்துக்கு எவ் வளவு மகிமை இருக்கின்றதோ! அவ்வளவு மகிமை ரூபத்துக்கும், இருக்கவே இருக் கின்றது. அஃது எப்படி? என்னில், சொரூபமே ரூபமாய் விளங்குகின்றது. ரூபமே நாமமாய் விளங்குகின்றது. நாமம் ரூபத்தைத் தெரியப்படுத்தி, அந்த ரூப மாத்திரமாய் விளங்கிடும். அவ்வித ரூபம், தன்னைத் தியானஞ் செய்யாநின்ற சாதகர் களின் மனம், தன்னிடத்திலே லயிக்கத் தானும் சாதகர்களின் மனத்தோடு லயித் துத் தன்னுதாரமான ஞானசுபாவமாகத் திரிபுடி அற்று விளங்கிடும். ஆனால், செபகாலத்தில் இவ்வைந்தெழுத்தினின்றும் அப்பொருளுடைய பரமசிவம் அனுப்ர வேசித்துச் சாதுக்களின் மூலமாய் விளங்குந் தன்மை எப்படி? என்னில்:

இறைவன் இச்சாஞானக்கிரியா சத்தி யுடன் கூடி விளங்குவதால், அம் மூன்று சத்தியையுமுடைய பரமசிவம் சர்வ வல்லமை யுடைய பரிபூரண அறிவாகையால், அவ்வித அறிவாய் விளங்கிய பரமசிவம், சாதகர் அவ் ஐந்தெழுத்தைச் செபிக்கும் முறைமையை உணர்ந்து நாடோறும் இரவும் பகலும் இடைவிடாமல் செபித்து வருகையில், அச் செபவிசேடத்தால் காட்டத்தி (விறகி)ல் மறைந்து நின்ற அக்கினி கடைந்த விடத் தில் வெளிப்படத் தோன்றுவது போல, அவ் ஐந்தெழுத்தினின்றும் அப் பரமசிவம் விளங்கித் தோன்றித், தன் நாமத்தைச் செபித்து வரும் சாதுக்களிடத்தில் தன் கருணை பதிந்து, அகண்ட பரிபூரண பரம சிவானந்தானுபூதியை விளக்குகின்றமை யால், ஒரு திரி அக்கினியின் சம்பந்தத்தால் எப்படி மற்றொரு திரியைப் பிரகாச முடையதாக்கி வஸ்துக்களைப் பிரகாசிப்பிக் கும் வல்லமையுடையதாகின்றதோ! அப் படியே முமுட்சுக்கள் இப்பஞ்சாக்கர செப மாத்திரத்தால் அப் பரமசிவ மகிமையை இச்சையோடு நாடவே மனமிறந்து சிவ ஞானத்தைப் பெற்றுச் சீவன் முத்தராய் விளங்குவாரானால், செபாதாரமான திரு வைந்தெழுத்தில் பரமசிவ விளக்கமின்றி அந்த ஞான விளக்கம் உண்டாகாது.

ஆதலால், திருவைந் தெழுத்திற்கும் அதனை ஆலயமாகக் கொண்டு விளங்கும் பரமசிவத்துக்கும் பேதமில்லை எனத் தெளிந்து பிரேமாபத்தியுடன் செபித்திடு வோர் ஒப்பில்லாத சுவயஞ்சச் சிதானந்த சொரூபமாம் பரமசிவமாகியே விளங்கு கின்றார்கள். இதற்கு ஐயமில்லை. ("ஆலய மாக அமர்ந்த பஞ்சாக்கரம்...அமர்ந்திருந் தானே." என்னும் திருமந்திரமும் 919 ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.)

சத்தியம்! சத்தியம்! சத்தியம்! முக்கா லும் சத்தியம்! இதற்கு மேல் அறியற்பாலன ஒரு நூலினுமில்லை. (சிவஞானபாடியம். சூ-6. அ-2. வெ-39). வேத சிவாகம சாஸ் திரங்களின் கருத்தும் இதுவே.

மேலும், தேவர்களுக்குந் தேவராகிய மகாதேவரது சொரூபமும், ரூபமும் அவரது நாமத்தால் தெரிய வேண்டியதிருப்பதால்; நாமத்துக்கும், அவரது ரூபத்துக்கும், அவரது சொரூபத்துக்கும் பேதமில்லை

எனவும், அவைகளைத் தெரிய உபகாரஞ் செய்வதில் நாமத்திற்கு ஆதிக்கமெனவும் கொள்ளத்தக்கது.

ஆகையால், பரமசிவத்தினது சுபாவத்தை அடைய வேண்டுங் கருத்துடையவர்கள் அவரது திருநாமத்திலும், அவரது ரூபத்திலும் அதிக பக்தி உடையவர்களாக வேண்டும்.

நிவிர்த்தி முதலிய-ஐவகைத் திருவருளாவன :

1. மண், பெண், பொன் முதலிய பிரபஞ்சப் பற்றுக்களினின்றும் நிவர்த்தி செய்யும் சிவசத்திக்கு நிவிர்த்தி என்று பெயர்.

2. அங்ஙனம் நிவிர்த்தி பெற்ற ஆன்மாக்களை வாசனைபற்றி மீள நோக்காத வண்ணம் பிரதிஷ்டை செய்யும் சிவசத்திக்குப் பிரதிஷ்டை என்று பெயர்.

3. அங்ஙனம் நிலைபெற்ற ஆன்மாக்களுக்கு அநுமான ஞானம், ஆகம ஞானமின்றிச் சுவாநுபூதி ஞானத்தைப் பயப்பிக்கும் சிவசத்திக்கு வித்தை என்று பெயர்.

4. அங்ஙனம் சுவாநுபூதிஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கு, விருப்பு வெறுப்புச் சங்கற்ப முதலிய எல்லாத் துன்பங்களையும் சாந்தமாகச் செய்யும் சிவசத்திக்குச் சாந்தி என்று பெயர்.

5. அங்ஙனம் சாந்தமாய் நின்றதும் ஒழியச் செய்யும் சிவசத்திக்குச் சாந்தியதீதை என்று பெயர்.

அங்ஙனம் சிவசத்தியாகிய திருவருட்சத்தி ஒன்றே காரிய வேறுபாட்டால் ஐவகைப்பட்டன. (சிவஞான பாடியம். சூ-2. அ-4. வெ-15).

ஸ்ரீ பஞ்சாக்கர சிந்தனை முற்றிற்று.
அவதூத சுவாமிகள் திருவடி வாழ்க.

## திருவைந்தெழுத்தின் தத்துவம்

சிகாரம் சிவரூபந்து,
வகாரம் சக்திருச்யதே ।
யகாரம் ஆத்மரூபஞ்ச,
நகாரம் க்ரந்திரூபகம் ॥
மகாரம் மலரூபஞ்ச,
இத்யர்த்த:பஞ்சவர்ணக: ॥

சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ் சேர்ந்த பாச மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனர் சேர
அவஞ் சேர்ந்த பாசம் அணுககி லாவே.

—திருமந்திரம் 2710–11.

" சிவனருள் ஆவி திரோத மலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம் "
" ஈசனருள் ஆவி எழிலார் திரோத மலம்
ஆசில் எழுத்தஞ்சின் அடைவாம்."

—உண்மை விளக்கம் 40–41.

அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள்நூல் தெரியப் புகின்.
இறை சத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள்.

—திருவருட்பயன் 81–82.

பிரணவம், சூக்குமபஞ்சாக்கரம், தூலபஞ்சாக்கரம், அசபை, பிராசாதம், பெரும் பெயராகிய மகா வாக்கியம் என்பன தம்மின் வேறல்லனவாய் ஒரு பொருண் மேலனவாம் என்பதைச் சிவாகமங்களுட் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

—சிவஞானபாடியம்

பழமறையினுள்ளே பழுத்தனவாயுள்ள நமச்சிவாயத் தீங்கனியாம் திருவைந்தெழுத்தின் உண்மையை இவற்ருல் உணர்ந்து கொள்க.

" ஐந்தின் பெருமையே அகலிட மாவது "
—திருமந்திரம் 969.

# திருவைந்தெழுத்தின் நுண்மை

திரு. வை. தட்சிணாமூர்த்தி, M.A.
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை-12.

## திருவடிப் பேறு :

“ சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை ”

என்றுரைப்பது நல்வழி. சிவாயநம எனும் ஐந்தெழுத்துக்களும் சைவ சமயத்தின் உட்கிடையினையும் விரிவினையும் விளக்கும் மூல மந்திரமாகும். [1] நான்கு மறைகட்கும் மெய்ப்பொருளான நாத மாத்திரையான் நிற்கும் நமச்சிவாய மந்திரத்தை திருமூலர் இவ்வுலகுக்கு ஒரு கனி என்பர். [2] திருவைந்தெழுத்தின் விரிவே பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்களும். [3] மஞ்சுதவழ் கயிலை இறைவனை அஞ்செழுத்தால் நினைப்பார்க்கு அஞ்சல் தேவையில்லை என்பர். [4] சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தே திருவடியுணர்வாகும். [5] இம்மூலமந்திரத்தால் திருவடிப் பேறெய்தும். ஆளுடை அரசர்,

“ சித்தம் ஒருக்கிச் சிவாய நமஎன்
றிருக்கின் அல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார் அவர்பா
திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப்
பேதை நெஞ்சே ”

என்றார். [6] இல்லக விளக்காகி, இருளைக் கெடுத்து, சொல்லக விளக்காகி ஒளிவடிவாகி, நல்லக விளக்காவது நமச்சிவாய மந்திரம் என்பது ஐந்தெழுத்துப் பதிகம் [7].

“ அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் ”

என உண்மை விளக்கம் உரைக்கும். [8]

## ஐந்து சொற்கள் :

திருவைந்தெழுத்து செம்பொருட்டுணிவினராய சைவசித்தாந்தச் செல்வர்கள் இறைவனை அடையக் கைக்கொள்ளும் அரும் சாதனமாகும். நம சிவாய என்றும் “ சிவாய நம ” என்றும் திருவைந்தெழுத்து வழங்கப் பெறும். இம்மந்திரத்தின் கண்ணுள்ள ஐந்தெழுத்துக்களும் தனித் தனியே தனித்தனிச் சொற்களாக நின்று குறிப்பாகப் பொருளுணர்த்துவனேயன்றி ஒரு சொல் நீர்மைத்தன்று. மறைமொழியாக நிற்கும்பொழுது, ஒரு சொல் நீர்மைத்தாகுமேயன்றி, பொருள் கொள்ளும் பொழுதும் விரித்துக் காணும் பொழுதும் ஒரு சொல் நீர்மைத்தாவதில்லை. நமசிவாய என்ற சொற்கு நேராக சிவனுக்கு வணக்கம் என்று பொருள் கொள்ளுவாருமுண்டு. இவ்வாறு கொள்ளின் இச்சொல் வடமொழிச் சொல் எனக் கொள்ள வேண்டியிருக்கும். ஐந்தெழுத்துக்களும் தனித்தனியே தனித்தனி எழுத்துக்களாக நின்று, குறிப்பாக ஒவ்வொரு பொருளை உணர்த்துவனவாகவும், தனித்தனியே சொல்லாக நின்று, சொற்குரிய பொருளை உணர்த்துவனவுமாக அன்றி, பொருளாகவே யாகின்றன என்பதே நூல்களின் துணிவு. [9] ஆளுடை நம்பியவர்கள் “ அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி ” என்பதிலிருந்து ஐந்து எழுத்துக்களும் ஐந்து சொற்களே எனல் தகும்.[10]

---

1. திருமந்திரம், 2651
2. திருமந்திரம்,
3. திருமந்திரம், 2655 உரை
4. திருமந்திரம், 2657
5. திருமந்திரம், 2651
6. நாவுக்கரசர் “ வைத்த பொருணமக்க ” திருப்பாதிரிப்புலியூர்,
7. ஐந்தெழுத்துப்பதிகம்,
8. உண்மை விளக்கம், 44
9. சுந்தரர் திருவாரூர்,
10. “ அந்தியும் ”, 7-83-1

## மூவகைத் திருவைந்தெழுத்து :

திருவைந்தெழுத்தினைத் திருமூல நாயனார் தூல திருவைந்தெழுத்து, நுண்மைத் திரு வைந்தெழுத்து, மீநுண்மைத் திருவைந் தெழுத்து என மூவகையாக மொழிகின்றார். நமசிவாய என்பது தூலத் திருவைந் தெழுத்து. இத்தூல திருவைந்தெழுத்து மூல மந்திரம் எனப்படும்.[11] திருவைந்தெழுத்திற் காணப்படும் சிகரம் திருவருளாற்றல்களின் உள்ளொளியாக ஒளிரும் சிவத்தைக் குறிப் பிடுவது, சிகரத்தை முதலாக வைத்து "சிவாயநம" என ஓதப்படுகையில் இத் திருவைந்தெழுத்து நுண்மைத் திருவைந் தெழுத்தாகிறது.[12] இதனைச் சிவவேதம் என்பர். சிவயநமவென்றோதிச் சிந்தனை யைச் சிவனார்க்கு உறையுளாக்கி, சித்தத்தை ஒருக்கிய நிலையில், சிவ என்று, நீங்கா நினைவுரை யிருக்கையில் பேரிடர் அறும்; அடிமை நிலை கைகூடும்.[13] சிவயநம என் பதில் நகரம் மகரமாகிய ஈரெழுத்துக்களும் முறையே மறைப்பையும், மலத்தையும் குறிப்பன. மறைப்பும், மலமும் அகன்று திருவருளையே சிந்திக்கும் நிலையில், நம மறந்து சிவயநம என்றாகின்றது. இச் சிவய சிவ என்பதே மீநுண்மைத் திருவைந் தெழுத்து நிலையாகும்.[14] இவ்வாறு மூவகை யாகக் குறித்தன தனித்தனி நிலைகளாகா. ஒரே மறைமொழியினை உணர்ந்தோதும் உணர்ச்சி நிலைக்கேற்பக் கூடும். அருள் நிலையினையே குறிப்பன எனக் கொள்ளுதல் வேண்டும். 'ய' என்பது உயிரைக் குறிப்ப தால் சிவனுக்கிடையில் உயிர் கட்டுப்படுவது மீநுண்மையாகின்றது. இம்மீநுண்மைத் திருவைந்தெழுத்தினை நாயோட்டு மந் திரம் என்பர்.[15] நாயினைச் சீயென ஓட்டு வது இயல்பு. சீகரத்தின் குறுக்கமாய சிகரமே சிவன். சிவனே எல்லாமாதலை யுணர்ந்து சிகரத்தை ஓதுதல் மீநுண்மை யுள் அடங்கும். இச்சிகரத்தின் கண் சகரம் அகரம் இகரமாகிய மூவெழுத்துக்களும் அடங்கியுள்ளன. சகரம் மாயையும், இகரம் ஆருயிரையும், அகரம் பேருயிரையும் குறிப் பதால் சிகரமாகிய ஓரெழுத்தின் கண் முப் பொருண்மை மொழியப்பட்டது என்பர். சிகரம் பேசா எழுத்தாகையால் வகரமாய எழுத்துடன் இயைந்து 'சிவ' என்றாகிக் பேசும் எழுத்தாகும். இச்சிகரமாகிய மீநுண்மைத் திருவைந்தெழுத்தினை நாதன் இருப்பிடம் நான்மறைகள் அடங்குமிடம், மெய் முப்பத்தாறுக்கும் அப்பாலுள்ள இயற்கை நிலை, உண்மை அறிவின்பப் பேரொளி என்றெல்லாம் மொழிவர்.[16] மீநுண்மைத் திருவைந்தெழுத்தாகிய "சிவ சிவ" என்பதைக் காரணத் திருவைந் தெழுத்து என்றும், அதன் அடித்த நிலை ஆகிய 'சிவ' என்பதை மகாகாரண திருவைந்தெழுத்து என்றும், இறுதி அண்மை நிலையாகிய நாயோட்டு மந்திரம் எனப்படும் சிகரத்தை "மகாமனு திருவைந் தெழுத்து அல்லது முத்தித் திருவைந் தெழுத்து என்றும் மொழிவாருமுண்டு."[17]

## நுண்மைப் பொருள்கள் :

'சிவயநம' என்பது உயிரையும் உயிரின் உடம்பையும் மாற்றுயர்ந்த செம்பொருள் களாக்கும் குளிகை என்பர்.[18] இத்திருவைந் தெழுத்து செம்பொருள் ஐந்தினையும் இம் மையே அறிவிக்கும் செம்மறையாகும். இவ் வைந்தெழுத்துக்களும் தனித்தனியே ஒவ் வொரு பொருளை உணர்த்தும் ஒவ்வொரு சொல்லின் முதலெழுத்தாகும்.[19] அவை முறையே சிறப்பு (சி) வனப்பு (வ), யாப்பு (ய), நடப்பு (ந) மறைப்பு (ம) எனப்படும். இவற்றினை முறையே சிவன் (சி) சக்தி (வ), சீவன் (ய), திரோதாயி (ந), மலம் (ம) என் பர். திருவருளால் மலம் அடங்கும். மலம் அடங்கவே, சக்தியாகி திருவருளால் ஆரு யிர் கட்டத் தகுதியுடையதாகிறது. பெற்ற

---

11. திருமந்திரம், 2651
12. திருமந்திம், 2659, 2661
13. திருமந்திரம், 2657
14. திருமந்திரம், 2666
15. திருமந்திரம், 2672
16. திருமந்திரம், 2672
17. — —
18. திருமந்திரம், 2659
19. திருமந்திரம், 2660, உரை

ஆருயிரைத் திருவருள் சிவத்துடன் கூட்டுவிக்கின்றது. சிவத்துடன் கூடிய உயிர்க்கு பிறப்பிறப்பை நல்கும் பாசம் அழியும் [20] வகரம், குறிக்கும் சக்தியினைத் திருவருள் என்பதுமுண்டு. சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்று மெய்ப்பொருள் ஐந்து வகைப்படும். சைவ சித்தாந்தத்தின் அடிப்படை மெய்ப்பொருள் உண்மையாகும்.

சிவய நமவென்றோதி வருங்கால் சிவசம் பந்தத்தால் நகர மகரங்களாகும். மலங்கள் இரண்டும் ஒழிந்திடும். இவையொழிந்த விடத்து சிவயநம என்பதில் நம இருந்த விடத்து மீண்டும் சிவ சேர்ந்து சிவய சிவ என்றோத வேண்டும். உள்ளத்துத் திருவடியின்ப அமுது பெருகிறைக் காதலால் ஓவாது சிவாயநம வென்றோதும் போது புருவநடுவில் வெள்ளமெனத் திங்கள் மண்டிலத் திருவமுது தோன்றி அளவின்றி ஊறும். [22] இதனை அழுக்கற்ற ஆனந்தப் பேறென்பது [23] யகரம் சீவனுய உயிரைக் குறிப்பது. அடங்கா மனமும், ஒடுங்கா உயிர்ப்பும் அடங்கும் போது யகரமும் வீழ்ந்து சிவயசிவ என்பது சிவசிவ என்ருகும்.

தன்செயலென்பதொன்றின்றி அகநிலைச் செயலாகிய தன்மயமாய் நிற்பதாய், துரியமே தம்முடம்பான உயிர் நிற்கும் நிலையே சிகர முதலாக முழங்குவது [24] நமசிவாய என்னும் இவ்வைந்தெழுத்துக்களும் திரோதாயி என்னும் நடப்பாற்றலால் தூண்டப் பெறும் நனவாதிகள் எனப்படும்.

இந்நனவாதிகள் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்குதல், ஆகிய ஐம்பாட்டினையும் நிகழ்த்துவிக்கும் இயல்பினவாகும் [25] சிவாய நம எனும் மறைமொழியை ஓதுகையில் சீவ என்பதைச் சிந்தையில் பதியவைத்து ய என்பதை மிடற்றில் நிறுத்தி, நம என்பதை நாவில் ஒடுக்கி ஓதுதல் வேண்டும். [26]

சித்தாந்த நுணுக்கம் :

திருவைந்தெழுத்தின் நுண்மைப் பொருள் முறை சைவ சித்தாந்த நெறியை உள்ளவாறு விளக்கும் இயல்பினது. இவ்வுலகம், உயிரும் உயிரில் பொருளுமாகக் காட்சி அளிக்கின்றது. இறைவன் என்று உண்டோ அன்றே உயிர்கள் உண்டு. செம்பில் களிம்பு உடனிருப்பதைப் போல் உயிர்களிடத்தும் மலம் உடனிருக்கிறது. களிம்பு நீங்கின செம்பு ஒளிர்வன போல மல நீங்கிய உயிர்கள் ஞான வொளி சிறந்து பேரின்பம் எய்தும். இவ்வுலகத்திற்குமுதற் காரணம் ஒன்றுண்டு. உயிரில் பொருளாய இவ்வுலகம் முதலில் நுண்பொருளாய் ஒடுங்கும். அவ்வாற்றலை நூல்கள் மாயை எனப்புகலும். இறைவன் ஒளியும், ஒளிப் பொருளும் போன்றவன். ஒளிப்பொருளினின்று நீங்காமலிருக்கும் ஒளிபோன்ற இறைவனிடமிருந்து நீங்காமலிருப்பது அவனது அருள். அதனை அருட்சக்தி என்பர். ஆற்றலாய் ஒடுங்கின மாயை இறைவனது அருட் சக்தியில் தங்கும். அவ்வருட் சக்தி இறைவனுகிய சிவத்தில் ஒடுங்கியிருக்கும். உலகம் ஒடுங்குவதும் மீளத்தோன்றுவதுமான செயல்கள் சிவத்தினின்று தோன்றுவன. நுண்மைப் பொருளின்படி நகரம் மறைப்பாற்றலாகிய திரோபாவம் எனப்படும். மாயையையும் மகரம் அழுக்காகிய மலத்தையும், சிகரம் சிவபரம் பொருளாகிய சிவத்தையும் வகரம் இறைவனின் அருட் சக்தியையும் யகரம் உயிரையும் குறிக்கும். இவற்றினின்று திருவைந்தெழுத்து சித்தாந்த நுணுக்கமாதலை அறியலாம். [27]

திருமேனி :

நற்றவத்தார் தாம் காண, கூத்தப்பிரான் நாதாந்தத் தஞ்செழுத்தால் குறிப்பிட்ட எழுத்துக்களையே தன் திருமேனியின் குறியாகக் கொண்டிலங்குகின்ருர். ஆன்

20. திருமந்திரம், 2661
21. திருமந்திரம், 2665
22. திருமந்திரம், 2663
23. திருமந்திரம், 2665
24. திருமந்திரம், 2664
25. திருமந்திரம், 2664
26. திருமந்திரம், 2668
27. திருமந்திரம், 2660, உண்மை விளக்கம்

மாக்கள் பிறவியுற திருமேனியாகக் கொண்டு இறைவன் நடம்புரியும் காட்சியைச் சிவ ஞான போதம் அருளிய மெய்கண்ட தேவ நாயனாரின் நன் மாணாக்கர் நாற்பத்தொன் பதின்மரில் ஒருவராய திருவதிகை மனவா சகம் கடந்தார் தமது உண்மை விளக்க நூலில் மொழிகின்றார். உயிர்கள் நாடி நிற் கின்ற கூத்தப்பிரானின் திருமலரடி நகர மாகவும், பொருந்திய திருவுந்தி மகரமா கவும், வளர் தோள் சிகரமாகவும் திருமுகம் வகரமாகவும், திருமுடி யகரமாகவும் தோன்றுகின்றன. [28]

நாடக உறுப்பு :

முக்கட்பெருமானின் ஐந்தொழில்களாகிய அருளிப்பாடுகளை நாடகமாக உருவாக்கிய கற்பனையே, கூத்தப்பிரானின் திருவுருவும் செயல்களும். இறைவனின் முத்தொழில் கட்கு அவர்தம் உறுப்புகள் பயன்படுமாற் றைத் திருவைந்தெழுத்து நுண்மையாக விளக்குகின்றது. மழுவேந்திய இடது திருக்கை நகரமாகவும், முயல்களை அழுத்தி ஊன்றிய வலது திருவடி மகரமாகவும், துடியுடை வலது பொற்கை சிகரமாகவும், இடது வீசுகரம் வகரமாகவும், அபய முத்திரை காட்டும் மகிழ்வலக்கை யகரமாக வும் திகழ்கின்றன. [29] இவ்வுறுப்புக்கள் வழியாக ஐந்தொழில்களை நடாத்தக் கருவி கள் வேண்டுமன்றோ? நகரமாகக் குறிக்கப் பெற்று இடது திருக்கையில் ஏந்திய தீயினைக் கொண்டு அழித்தலையும், மகர மாகக் குறிக்கப்பெற்று முயல்களை அழிக்கும் ஊன்றிய வலது திருவடி திரோதம் எனப் படும் மறைத்தற்றொழிலையும் சிகரமாகக் குறிக்கப்பெற்று வலது பொற்றிருக்கையில் அமைந்த துடியின் ஓசையால் படைப் பையும், வகரமெனக் குறிக்கப்பெற்று திருவடியினைச் சுட்டிக்காட்டும் இடது வீசுகை அருளற்றொழிலையும், யகரமாகக் குறிக்கப்பெற்ற அணு அஞ்சலிக்கையாகிய மகிழ்வலக்கை திதியாகிய காத்தற்றொழிலை யும் செய்யும் கருவிகளாகஅமைகின்றன.[30]

ஆடும் அவைகள் :

திருவைந்தெழுத்துக்கள் கூத்தப்பிரான் நடமிடும் ஐந்து திருப்பதிகளையும் ஐந்து திரு அவைகளையும் குறிப்பதாக ஒரு வெண்பா குறிப்பிடுகின்றது. திருநெல் வேலி தாமிர அவையினை நகரமாகவும், திருக்குற்றால ஓவிய அவையினை மகரமாக வும், திருவாலங்காட்டுத் திருமணிமன் றினைச் சிகரமாகவும், திருத்தில்லைப் பொன்னம்பலத்தை வகரமாகவும் திரு மதுரை வெள்ளியம்பலத்தை யகரமாகவும் காட்டுகிறது அவ்வெண்பா.[31]

சிவலிங்கத்தின் உறுப்புக்கள் :

அருவுருவாகச் சிவபிரானை வழிபடும் சிவலிங்கத்தின் கீழ்ப்பீடத்தினை நகரமாக வும், நடுக்கண்டத்தினை மகரமாகவும், மேற் பீடத்தினைச் சிகரமாகவும், கலவ பாத்தி ரத்தை வகரமாகவும், பூசாங்கத்தினை யகர மாகவும் நவில்வர். திருக்கோயில் அமைப் பைக் குறிக்கையில் அம்பலவாணர் நிலையை நகரமாகவும், பலிபீடத்தினை மகரமாகவும் சிவலிங்கம் காணப்படும் கருவறையினைச் சிகரமாகவும் அர்த்த மண்டபத்துள் காணப் படும் மனோன்மணி நிலையினை வகரமாகவும் ஆனேற்று நிலையினை யகரமாகவும் சுட்டு வர்[32].

சொற் போக்கு முறையில் திருவைந் தெழுத்து சில சொற்களின் முதலெழுத் தாதலைத் திருமந்திரம் செப்பும்[33]. சிகரம் சிறப்பு என்னும் சொல்லின் முதலெழுத்

28. உண்மை விளக்கம், 32
29. உண்மை விளக்கம், 33
30. உண்மை விளக்கம், 35
31. வெண்பா : (திருமந்திர உரை 2715)
மேலாம் சிவயநம மேவும் பொன்வெள்ளி
பாலாம் செம்போடுமண் பற்றல்போல—மேலாம்
அவனுடல் செய்வணக்கம் ஆல்தில்லை கடல்
தவநெல்லை குற்றாலந் தான்.
32. திருமந்திரம், 948, 2372
33. திருமந்திரம், 2660, உரை வெண்பா

தாகும். சிறப்பென்னும் செம்பொருளாய சிவத்தைக் குறிப்பது இது. வகரம் வனப்பைக் குறிக்கும். அருளல்களைச் சிறப்பாகிய சிவத்துடன் கூட்டிப் பேரின்பம் உறச் செய்யும் அழகை வனப்பென்பர். யகரம் யாப்பின் முதலெழுத்தாகும். யாப்பெனின் பிணிப்பு. உயிர்களைச் செம்பிற் களிம்பு போல பிணித்தியங்கும் மலத்தின் பிணிப்பினைப் போக்க இறைவனை யீனமருந்தாவான் இறையாப்பே மலமகற்றும் மருந்து எனக்சுட்டுவது இது. நகரம் நடத்தல் என்ற சொல்லின் முதல்எழுத்து. ஆட்டுவித்தால் ஆடும் இயல்பினதாய உயிரை மலம் மாயை கன்மங்களில் நடத்திச் சென்று திருவருள் பாலித்தலை நடத்தல் என்பர். மகரம் மறைப்பென்ற சொல்லின் முதலெழுத்து. இறைவனைக் காணவொட்டாது மலம் மறைந்துள்ளமை இது சுட்டும்.

இதுகாறும் கண்டவற்றுல் திருவைந்தெழுத்து சைவ சித்தாந்த உண்மைகளை நுணுக்கமாக நுவலும் திருமந்திரம் எனல் பெறப்பட்டது. இக்கட்டுரையில் இரு பட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை படிப்போர்க்குப் பயன்படும் இயல்பின.

## பட்டி 1

### திருவைந்தெழுத்து சுட்டும் திருமேனியும் தொழில்களும்

| இறைவனது உறுப்புக்கள் | திருமேனி நிலை | நாடக உறுப்புக்கள் | ஐந்தொழில்கள் | ஐந்தொழில் கருவிகள் | மெய்ப் பொருள்கள் |
|---|---|---|---|---|---|
| சிவவாக்கியர் 97 | உண்மை விளக்கம் 32 | திருமந்திரம் 2751 2752 உண்மை விளக்கம் 33 | திருமந்திரம் 2753 உண்மை விளக்கம் 35 | திருமந்திரம் 2753 உண்மை விளக்கம் 35 | உண்மை விளக்கம் 41 திருமந்திரம் 2660 |
| ந திருவடிகள் | திருவடி | மழுவேந்திய இடக்கை | அழிப்பு (சங்காரம்) | அங்கி | திரோத சக்தி |
| ம வயிறு | வயிறு | ஊன்றிய வலது திருவடி (முயல்கன்) | மறைப்பு (திரோதம்) | ஊன்றுமலர்ப் பதம் | மலர் |
| சி தோள்கள் | தோள் | துடியுடை வலது பொற்கை | தோற்றம் (படைப்பு) | துடி | சிவம் |
| வ வாய் | முகம் | இடது வீசுகரம் | அருள் | நான்ற திருவடி | அருட்சக்தி |
| ய கண்கள் | முடி | மகிழ் வலக்கை | காப்பு (நிதி) | அமைவுக்கை | ஆன்மா |

## பட்டி 2

### திருவைந்தெழுத்து சுட்டும் வழிபாட்டு நிலைகள் முதலியன

| இலிங்கத்தின் உறுப்புக்கள் | எழுத்துக்கள் உணர்த்தும் திருக் கோயில் நிலைகள் 948 | கூத்துப் பயிலும் ஊர்கள் திருமந்திரம் 2715 வெண்பா | நடமியலும் அவைகள் திருமந்திரம் 2715 வெண்பா |
|---|---|---|---|
| ந கீழ்ப்பீடம் | அம்பலவாணர் நிலை | நெல்லை | தாமிரசபை |
| ம நடுக்கண்டம் | பலிபீடம் | திருக்குற்றாலம் | ஓவியசபை |
| சி மேற்பீடம் | கருவறை | திருவாலங்காடு | மணிமன்றம் |
| வ கலவ பாத்திரம் | அருத்தமண்டப மனோன்மணி நிலை | தில்லை | பொன்னம்பலம் |
| ய பூசாங்கம் | ஆனேற்று நிலை | மதுரை | வெள்ளியம்பலம் |

## பட்டி 3

### திருவைந்தெழுத்து சுட்டும் ஐம்பாடுகள் முதலியன

| | ஐம்பாடுகளாய நனவாதிகள் (திருமந்திரம் 2664) | சொற்களின் முதலெழுத்தாதல் (திருமந்திரம் 2660) | சக்திகள் |
|---|---|---|---|
| ந | நனவு | நடப்பு | ஆதார பிரம்ம சக்தி |
| ம | கனவு | மறைப்பு | ஊகாரவிட்டுணு சக்தி |
| சி | உறக்கம் | சிறப்பு | மகாரருத்திர சக்தி |
| வ | பேருறக்கம் | வனப்பு | விந்து மகேஸ்வர சக்தி |
| ய | உயிர்ப்படங்குதல் | யாப்பு | நாதம் சதாசிவ சக்தி |

# நால்வகை நெறிகள்

திரு. T. P. சித்தலிங்கம் M.A., (சித்தாந்தப் பேராசிரியர், இந்து பல்கலைக்கழகம், காசி.)

உலகத்தை வளப்படுத்தவும் மக்களின் வாழ்க்கையைச் செம்மையுறுத்தவும் ஆறுகள் பாய்கின்றன. எங்கோ பிறந்து காடும் மலையும் கடந்து, கூனிக்குறுகி, விரிந்து பரந்து ஓடுகின்றன. ஊருக்கருகே பாய்ந்து வரும் ஆற்றில் இறங்கி, அதன் நீரை எளிதில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஆற்றில் பல படித்துறைகளை முன்னோர் சமைத்துள்ளனர். இது ஒவ்வோராற்றிற்கும் பொருந்தும். அவ்வாறே உயிர்களின் கட்டாகிய மலத்தை நீக்க வென்றே இறையருள் எனும் பேராறு பொங்கிப்பரந்து பாய்கிறது. இவ்வாற்றில் இறங்கி நீராடவும் நீரைப் பயன்படுத்திக் கொள்ளவும் நம் முன்னோர்கள் பல படித்துறைகளை அமைத்தனர். புரண்டு செல்லும் அருளாற்றை அடைவதற்குரிய அருள் துறைகள் அவையேயாம். அவற்றையே நன்னெறிகள் என்று குறிப்பிடுகின்றோம்.

இவ்வருள் துறைகளை (நெறிகளை) நான்காகப் பெரியோர் வகுத்துள்ளனர். இவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று குறிப்பிட்டுள்ளனர். இவை நான்கினாலும் இறைவனை அடையலாம் [1]. இவற்றை நன்னெறி (சன்மார்க்கம்), நட்பு நெறி (சகமார்க்கம்), மகன்மை, நெறி (சற்புத்திர மார்க்கம்), அடிமை நெறி (தாசமார்க்கம்) எனவும் கூறுவர் [2].

இந்நெறிகளை முற்கூறிய நான்கினோடும் இணைத்துக் கூறுவதும் உண்டு. அடிமை நெறி சரியை எனவும், மகன்மை நெறி கிரியை எனவும், நட்பு நெறி யோகமெனவும், நன்னெறி ஞானமெனவும் கூறுவதுண்டு. சமயாசாரியர்கள் நால்வரும் இந்நான்கு நெறியில் நின்று இறைவனை யடைந்தனர் என்று கூறுவார்கள். அப்பர் அடைந்த நெறி அடிமை நெறி; சம்பந்தர் பின்பற்றிய வழி மகன்மை நெறி. சுந்தரர் மேற்கொண்டது நட்பு நெறி; மணிவாசகர் சென்ற வழி நன்னெறியாம்.

ஞானமொன்றே முத்தி தருவது. ஞானத்தை வழங்குபவன் இறைவன். உயிர்கள்மீதுள்ள கருணையால் இறைவனே குருவடிவாய் வந்து ஞானத்தைப் புகட்டுகிறான். ஆகவே இந்த நெறியை ஞான நெறி, நன்னெறி, (சன்மார்க்கம்) என்று குறிப்பிட்டார்கள். மணிவாசகர் இறைவன் திருவுபதேசம் பெற்றவராதலின் அவர் வழியைச் சன்மார்க்கம் என்று குறிப்பிடுதல் மரபு. இதனால் மற்றைய சமயகுரவர் சென்ற நெறிகள் தவறானவை என்றோ, தாழ்ந்தவை என்றோ பொருள்படா. சமய குரவர்கள் சைவ சமய நெறிகளுக்கும் மரபுகளுக்கும் வழிவகுத்துத் தந்தவர்கள். அவர்கள் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் அவர்கள் ஒழுகிய முறை, அருளிச் செயல்கள் முதலியவற்றைக்கொண்டே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிகளுக்குரிய இலக்கணங்கள் வகுக்கப்பட்டன. இறைவனருள் இந்நெறிகளையே ஒட்டி வருவதுமில்லை. ஆட்கொள்ளும் இறைவன் எவ்வெவ் வழிகளில் ஆட்கொள்வான் என்பதைக் கணக்கிட்டோ வகைப்படுத்தியோ, அறுதியிட்டோ கூறல் இயலாது [3].

1. ஞானயோகக் கிரியா சரியை நாலும் நாநன்தன் பணி—சிவஞான சித்தியார், சுபக்கம், 323.

2. சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்ர மார்க்கம், தாத மார்க்கம் மென்றும் சங்கரனையடையும் நன்மார்க்கம் நாலவைதாம் ஞானயோகம் நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்—சித்தியார் 270.

3. 'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான் புகிலளவில்லை; கிளக்க வேண்டா'—சம்பந்தர் தேவாரம்.

சரியை நெறியாவது திருக்கோயில் அலகிட்டு, பூக்கொய்து, மாலைகட்டி, திருவிளக்கிட்டுப் பூசைசெய்து அடியார் பணி புரிவதாம்[4]. இதனைத் திருநாவுக்கரசர் வாழ்விலும் வாக்கிலும் காண்கின்றோம்[5].

கிரியையென்பது சிவபெருமானை இலிங்க வடிவில் வழிபடுதலாம். எரியோம்புதல் முதலிய கிரியைகளைச் செய்வதும் ஆம்[6]. இதனைத் திருஞானசம்பந்தர் வாழ்க்கையில் காணலாம். திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டார் சம்பந்தர். திருநீறு, திருவைந்தெழுத்து முதலிய வற்றின் பெருமைகளை விளக்கி அவற்றைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார். தந்தையார் வேள்வி செய்வதற்குத் தேவையான பொருளை இறைவனிடம் வேண்டிப் பெற்றுத் தந்தார்[7].

இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டுவகைகளில் படிப்படியாக நிற்றல் யோகமாம்[8]. யோகம் என்னும் சொல்லின் பொருளே ஒன்றி நிற்றல் என்பதாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்யோக நெறியைப் பின்பற்றி நின்றனர். அவர் பரவையோடு வாழ்ந்தமையையும் யோக நெறியில் நின்றதாகவே சேக்கிழார் கூறுகிறார்[9]. உள்ளும் புறம்புமாய் இறைவனோடு ஒன்றியிருந்த நிலையினைச் சுந்தரர் திருவாக்கிலும் காண்கிறோம்[10].

ஞானாசிரியரின் உபதேசத்தைக் கேட்டலும், பின் அதனைச் சிந்தித்தலும், உபதேசப் பொருளைத் தெளிதலும், தெளிந்த வண்ணம் நிட்டையில் அழுந்தலும் ஞானமாம்[11]. இதுவே சிவப்பேறு. இந்நெறியில் நின்றவர் மணிவாசகர். இறைவன் குருவுருவில் வந்து தம்மை யாண்டு கொண்டதை அவர் பலபடப் புகழ்ந்து கூறுகிறார்[12].

ஒரு பொருளை நாம் காணும்போது, காண்கின்ற நாம், காணப்படும் பொருள்,

---

4. தாதமார்க்கம் சாற்றிற் சங்கரன் தன்கோயில், தலம்அலகிட்டிலகு திருமெழுக்கும் சாத்தி...சித்தியார், 271.

5. வழுவில் திருப்பணி செய்து—பெரிய புராணம் (திருநாவுக்கரசு நாயனார் புராணம்), 41.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப், புலவர்தன்முன் னலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கராசய போற்றி போற்றியென்றும் அலைபுனல் சேர்செஞ் சடையெம் மாதியென்றும் ஆரூரா வென்றென்றே அலறுநில்லே.
அப்பர் 6-31-3.

6. புத்திரமார்க் கம்புகலில் புதிய விரைப் போது.........பத்தியினால் அர்ச்சித்துப் பரவிப் போற்றிப் பரிவினொடு எரியில் வருகாரியமும் பண்ணி,.........சித்தியார் 272.

7. ஆதி மாமறை வீதியினால் ஆறுசூழ்வேணி, நாத ரைமுன் னகவே புரியுநல் வேள்வி, தீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து வேத வேதியர் அனைவரும் செய்யவும் மிகுமால்—பெரிய புராணம்.
(திருஞானசம்பந்தர் புராணம்) 429.

8. சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளியிரண்டுஞ் சலிப்பற்று...அட்டாங்க யோக முற்றும் உழத்தல்—சித்தியார், 273.

9. பன்னாளும் பயில் யோகம் பரம்பரையின் விரும்பினார்—பெரியபுராணம் (தடுத்தாட் கொண்ட புராணம்.) 181.

10. எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே—ஏழாம்திருமுறை, இப்பதிகம் முழுவதும் (திருவாரூர்-பண்-பழம்பஞ்சுரம்) இறைவனைப் பிரிந்திருக்க லாற்றாமை குறித்தே கூறுகிறது.

11. முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல், கேட்ட, சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அது தானாக, வந்தவா றெய்த நிட்டை மருவுதல் என்று நான்காம்—சிவப்பிரகாசம், 83. கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல், நிட்டை, கிளத்தலென ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்—சித்தியார் 276.

12. அவன் எனை யாட்கொண் டருளினன் காண்க—திருவண்டப்பகுதி, வரி 63, என்னைநீ ஆட்கொண்ட வண்ணம் தானே—திருச்சதகம் 24; என்னையும் தன்னின் னருளால் இப்பிறவி யாட்கொண்டு இனிப்பிறவாமே காத்து—திருவம்மானை 12. உருநா மறிய அந்தணனாய் ஆண்டு கொண்டான்—திருத்தெள்ளேணம் 1; செல்வன் பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத் தெனையாண்ட—குயிற்பத்து, 9—முதலிய.

இரண்டையும் இணைக்கும் காட்சி என மூன்று பிரிவாய் இயல்வதைப் பார்க்கிறோம். இவ்வாறு மூன்றுபட இயல்வதைத் ' திரிபுடி ஞானம் ' என்பர். இதில் அறிவோன் (ஞாதிரு), அறியப்படும் பொருள் (ஞேயம்), அறிவு (ஞானம்) என மூன்றுண்டு. இம் மூவகையின்றி ஒன்றேயாய் இருப்பதே சிவஞானம் ; சிவப்பேறு [13].

ஞானமொன்றே பிறவி யறுக்கும் ; முத்திப் பேரின்ப மளிக்கும் [14]. மற்ற நெறிக ளெல்லாம் ஞானத்திலே கொண்டு சேர்ப் பனவாய் [15]. சரியை சாலோகமும், கிரியை சாமீபமும், யோகம் சாரூபமும், ஞானம் சாயுச்சியமும் தருமென்பதைச் சிவஞான சித்தியார் தெளிவாகக் குறிக்கிறது [16].

ஆக, அருளிற் சேர்க்கும் நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கென்பதும், அவையே அடிமை நெறி, மகன்மை நெறி, நட்பு நெறி, நன்னெறி எனவும் வழங்கப்பெறும் என்பதும், இவற்றுக்குரிய இலக்கணங்களைச் சமய குரவர் வாழ்க்கையினின்று கொண்டுள்ளனர் என்பதும் இவற்றையும் இவற்றால் உறும் பயன்களையும் சிவஞான சித்தியார் (சுபக்கம்) தெளிவாகக் குறிக்கிறது என் பதும் பெற்றும்.

---

13. மேலாம் பதிபசுபா சம்தெரித்துப் பரசிவனைக் காட்டும் நல்மார்க்க ஞானத்தை நாடி ஞான ஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம், பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப் பெருமையுடை யோர் சிவனைப் பெறுவர் காணே—சித்தியார் 274.

14. ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமம் சொல்ல......இறைவனடி ஞானமே ஞானமென்பர்—சித்தியார் 279.

15. கிரியை யெனமருவுமவையாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்—சிவப்பிரகாசம் 10.

16. சித்தியார் 271—274.

# வழிபாடும் அதன் தத்துவங்களும்

ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

" வார மாய்வழி பாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே "

—சம்பந்தர்

**முன்னுரை : வழிபாடு :**

வழிபாடு என்பது மனித வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாத ஒன்று. உடல் நலத்திற்கு உணவு தேவை; அதுபோல உயிர் நலத்திற்கு வழிபாடு மிகவும் தேவை. தண்ணீர் நமது தாகத்தைத் தணித்து, நம் உடலுக்கு நன்மைகள் புரிகின்றது; அதுபோல வழிபாடு நமது ஆன்ம தாகத்தைத் தணித்து, நமது உயிர்க்கு நன்மைகள் பல விளைவிக்கின்றது. வாழ்விற்குக் காற்று மிக மிக வேண்டப்படுவது; மூச்சுக் காற்று இல்லாமற் போனால், நாம் ஒரு சில கணங்களும் வாழ்தல் கடினம்; அங்ஙனமே நமது ஆன்மிக வாழ்விற்குக் காற்று வழிபாடு என்பது பெரிதும் வேண்டுவதொன்றாக உள்ளது. மூச்சுவிடுதல் இயல்பாக நிகழ முடியாமற் போகுமாயின், நாம் பெரிதும் திக்குமுக்காடித் திணறிப் போவோம்; அவ்வாறே வழிபாடு என்பதனை நாம் நம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்காதொழிந்தால், நமக்கு வாழ்க்கையில் இடையறாத பல அல்லல்களும், தொல்லைகளும், கவலைகளும் நேர்ந்து கொண்டேயிருக்கும். இவ்வுலகில் தொல்லைகளும் கவலைகளும் இன்றி, நாம் இன்புற்று வாழ்வதற்கு உரிய நேரிய ஒரே வழி, " தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல் " ஆகிய வழிபாடு புரிதலேயாகும்.

நமது உடலிற் படியும் அழுக்குகளை, நீராடிக் குளித்துப் போக்கிக் கொள்ளுகின்றோம்; அவ்வண்ணமே நமது உள்ளத்தைப் பற்றியுள்ள பலவகை மாசுகளையும், இறைவனைத் தியானித்து வழிபாடு புரிவதன் மூலமே நாம் போக்கிக்கொண்டு மகிழ்வுடன் வாழ்தல் கூடும். உடலுக்கு நேரும் பிணிகளை மருந்துண்டு தீர்த்துக் கொள்கின்றோம். அம்முறையில் உயிரைப் பற்றியுள்ள மலப்பிணிகளை வழிபாடு புரிவதன் வாயிலாகவே நாம் தீர்த்துக் கொள்ளுதல் இயலும்.

**வழிபாட்டின் சிறப்பு :**

உணவும், நீரும், காற்றும், நீராடலும், மருந்துண்ணலும், உடல் வாழ்விற்குப் பல வகையான நலங்களை விளைவித்தலைப்போல, நமது உயிர் வாழ்விற்கு வழிபாடு மிகப்பெரிதும் இன்றியமையாததாகப் பெருநலங்களைப் புரிகின்றது. அதுபற்றியே, இற்றைக்குச் சற்றேறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

" வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே "

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் வழிபாடு பற்றிக் குறிப்பிட்டருளியுள்ளார். வழிபாடு இன்றியமையாததென்பதும், அது மனிதரையன்றித் தெய்வத்தைக் குறித்து நிகழ்தல் வேண்டும் என்பதும், வழிபடுவோரை வழிபடப் பெறும் தெய்வம் காத்தருளும் என்பதும், வழிபாட்டின் பயனாகப் பழிதீர் செல்வங்கள் பற்பலவற்றை எய்தலாம் என்பதும், வழிபடுவோர் மட்டுமேயன்றி அவர்தம் வழிவழியாக வரும் உற்றார் உறவினரும்கூட வழிபாட்டின் பயனாகச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பதும், நுண்ணிதின் எண்ணி யுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர், இந்நூற்பாவினால் விளக்கியிருத்தல் காணலாம். இங்ஙனமே ஆசிரியர் தொல்காப்பியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி,

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்,
மனக்கவலை மாற்றல் அரிது "

எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலும், நாம் சிந்தித்து உணர்தற்குரியது. தொல்காப்பியர் "தெய்வம்" என்றதனைத் 'தனக்குவமை இல்லாதான்' என்றும், வழிபாடு செய்தலைத் 'தாள் சேர்தல்' என்றும் திருவள்ளுவர் விரித்துரைத்து விளக்கியிருக்கும் நுட்பம் கருதியுணரற்பாலது.

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கெல்லாம்
மனக்கவலை மாற்றல் எளிது "

என உடன்பாட்டு முகத்தாற் கூறி அமையாமல், அக்கருத்தினையே "தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என இரண்டு எதிர்மறை வாய்பாட்டுச் சொற்கள் இட்டுக்கூறித், திருவள்ளுவர் பெருந்தகை வற்புறுத்தியிருக்கும் திறமும், நாம் பலகாற் பலவகையில் நயந்தினிது ஆராய்ந்து நன்குணரற்பாலது.

### வழிபாட்டின் பயன் :

அரசன் தலைவன் போன்ற மனிதர்களை வழிபடும் வழக்கம் பண்டைக் காலத்திற் பல திற மக்களிடையே இருந்ததாதலின், அது கூடாது என்பார் "தனக்குவமை இல்லாதான்" என்றும்; வழிபடும் தன் சிறுமையையும் வழிபடப் பெறுவோனது பெருமையையும் உள்ளவாறு உணர்ந்து புகலடைதலே வழிபாடு என்பார் "தாள் சேர்தல்" என்றும்; வழிபாட்டின் பயன் இஃதென்பார் "மனக்கவலை மாற்றல்" என்றும்; வழிபாடு ஒன்றினால் அன்றி வேறு எதனாலும் கவலை தீர்த்துக் கொள்ளல் இயலாது என்பார் "அரிது" என்றும், தெய்வப் புலவர் திறந்தெரிந்து இயம்பியருளினர். "உறற்பால தீண்டாவிடுதல் அரிது" என்றாற் போல, ஈண்டு அருமை இன்மைமேல் நின்றது" எனப் பரிமேலழகர் தந்துள்ள விளக்கவுரையும் இங்கு ஊன்றி நோக்கி, யுணர்தற்குரியது.

இம்மட்டோ! இத்திருக்குறளின்கண் வறிதே 'கவலை' என்னாமல் 'மனக் கவலை' என்றதனால், மனமுடையார் எவராயினும் அவரனைவர்க்கும் கவலையுண்டு என்பதும், அதனை அவர்கள் எவ்வாற்றானும் தாமே தீர்த்துக்கொள்ளுதல் ஒருபோதும் இயலாது என்பதும் குறிக்கப் பெற்றன. கல்வி செல்வம் புகழ் பதவி ஆற்றல் ஆணை முதலியன பலவும் பெற்றவரேயாயினும், அவரனைவரும் கடவுளை வழிபட்டேயாதல் வேண்டும் என்பது, இதனால் மிக மிக வலியுறுத்தப் பெற்றது. கண் காண்டற்கும், வாய்பேசுதற்கும், காது கேட்பதற்கும், பிறபிற ஏனைய செயல்களைச் செய்தற்கும் படைக்கப்பட்டவாறு போல, மனம் கடவுளை நினைந்து வழிபடுதற்கே அமைந்தது என்பதும், இவ்வாற்றாற் புலப்படுத்தப்பட்டது. மேலும், கடவுளை வழிபடாதவன் மனமுடைய மனிதனல்லன். உடலளவில் மனிதனாய், இயல்பினால் விலங்கு நிலையிலேயே இழிந்து தாழ்ந்துகிடப்பவன்-* என்பதும்

---

* "Prayer is the most powerful of energy one can generate. It is a force as real as terrestrial gravity. As a physician, I have seen men, after all other therapy had failed, lifted out of a disease and melancholy by the serene effort of prayer.

Prayer like radium is a source of luminous, self-generating energy......In prayer human beings seek to augment their finite energy by addressing themselves to the infinite source of all energy.

When we pray, we link ourselves with the inexhaustible motive power that sprigs the universe. We ask that a part of this power be apportioned to our needs.

Even in asking, our human deficiencies are filled and we arise strengthened and repaired. Whenever we address god in fervent prayer, we change both soul and body for the better.

It could not happen that any man or woman could pray for a single moment, without some good result.

Dr. ALEXIS CARREL

For what are men better than sheep or goats. That nourish a blind life within the brain. If knowing god, they lift not hands of prayer. Both for themselves and those who call them—friend!

*Alfred Tennyson.*

இங்குத் திருவள்ளுவர் பெருமானுல் அறிவுறுத்தப்பட்டது.

இனி வேறென்றும் நாம் இங்கு எண்ணியுணரத் தக்கதாக இருக்கின்றது. "மனக் கவலை தீர்த்தல்" என்று கூருமல், "மனக் கவலை மாற்றல்" என்று குறிப்பிட்டதன் சிறப்பு யாது என்று நாம் உன்னித்து உணர்தல் வேண்டும். 'தீர்த்தல்' எனின், துன்ப நீக்கம் ஒன்றுமே குறிப்பிடப் பெற்றதாகும். 'மாற்றல்' என்றதனுல் துன்ப நீக்கமும், அதன் மறுதலையாகிய இன்ப ஆக்கமும் ஆகிய இரண்டும் ஒருசேரக் குறிப்பிடப்பட்டன. இவ்வாற்ருல், கடவுளை வழிபடுவோர் அனைவரும் துன்பம் நீங்குவதோடு மட்டும் அன்றி, இன்பமும் ஓங்கப் பெறுவர் என்று வழிபாட்டின் பயனைத் தெளிவித்தருளினுர் ஆசிரியர் திருவள்ளுவர்!

துன்பம் இன்றித் துயர்இன்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்,
என்பொன் ஈசன் இறைவன்என் றுள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே

—திருநாவுக்கரசர்.

## வழிபடும் முறைமை :

வழிபாடு என்பது, நம்மை நாமே தூய்மை செய்துகொள்ள முனையும் ஒரு சிறந்த நன் முயற்சியாகும். நம்மிடம் பலவகை அழுக்குகள் உள்ளன. உடலின் புற அழுக்கை, நாம் நீராடி ஒருவகையிற் போக்கிக் கொள்ளலாம். ஆனுல் நம்முடைய மனம், மொழி, மெய் என்னும் மூன்றிலும் உள்ள அழுக்குகள், நீரினுல் கழுவிப் போக்கிக் கொள்ளக் கூடியன அல்ல. அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம் முதலிய மன அழுக்குகளைத் தியானத்தினுலும்; பொய், புறங் கூறல், இன்ஞச்சொல், பயனில்சொல் என்னும் வாய் அழுக்கைத் துதியினுலும் தீச் செயல்கள் புரிதலாகிய மெய் அழுக்கை அருச்சனையினுலுமே நாம் போக்கிக் கொள்ளமுடியும். இங்ஙனம் மனம் மெய் மொழி என்னும் முக்கரணங்களின் அழுக்கையும் தியானம் துதி அருச்சனை என்னும் மூன்றினுலும் போக்கிக் கொள்ள முனையும் சிறந்த நல்ல முயற்சியே 'வழிபாடு' எனப் படும். இவ்வாறு வழிபாடு புரியும் முறைமையினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் விளக்கியருள்கின்றுர்.

திருக்குறும் அழுக்காறு அவாவொடு வெகுளி
செற்றம் ஆகிய மன அழுக்கைத்
தியானம்என் புனலால்; பொய் புறங்கூறல்
தீச்சொல் என்கின்ற வாய் அழுக்கை
அருட்கிளர் நினது துதிஎனும் புனலால்;
அவத்தொழில் எனும்மெய் அழுக்கை
அருச்சனை என்னும் புனலினுற் கழுவா
அசுத்தனேன் உய்யும்நாள் உளதோ ?

—சிவப்பிரகாசர்

## மனத்தூய்மையும், வழிபாடும் :

1. தமிழ்நாட்டில் தோன்றியருளிய மெய்ஞ் ஞானச் சான்ருேர்கள் பலர். அவர்களுள் தலைசிறந்த ஒருவர் பட்டினத்தடிகள். பட்டினத்தடிகளின் பெருமையினை வியந்து, வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் செல்வர் ஆகிய தாயுமானவர்,

"பார் அனைத்தும் பொய்எனவே
பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆரும் துறக்கை அரிது அரிது"

எனப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். அத் தகைய சான்ருேர் ஆகிய பட்டினத்தடிகள் நம் மனத்தில் படிந்து படர்ந்து கிடக்கும் அழுக்குக் குப்பைகளையும், அவற்றைக் களைந்து கழித்துத் துப்புரவு செய்யும் முறைகளையும் பற்றித் தம்முடைய பாடல் ஒன்றில் அழகுறக் குறிப்பிட்டருள்கின்றுர். நம்முடைய மனம் ஒரு சிறந்த அற்புதமான கருவி. மிகவும் புனிதம் வாய்ந்தது. நாம் அதனைப் பயன்படுத்துவதற்கு ஏற்ப அஃது உயர்ந்ததாகவோ, இழிந்ததாகவோ அமைகின்றது. நமது மனம் ஒரு சிறந்த மாளிகையாக விளங்கத்தக்கது. அதனை நாம் ஒரு தொழுவம் அல்லது மாட்டுக் கொட்டிலாகச் செய்து விட்டிருக்கின்ருேம். அங்கே காமம் வெகுளி மயக்கம் முதலிய அழுக்குக் குப்பைகள் நீண்ட காலமாக

மாற்றி, அங்கே மெய் வாய் மூக்கு கண் செவி என்னும் ஐம்பொறிகள் ஆகிய கரிய எருமைக் கடாக்களைக் கட்டி வைத்திருக்கின்றோம். அத்தொழுவம் மிகவும் இருள் படர்ந்து மங்கிக் கிடக்கின்றது. அதன் தரையோ அசுத்தம் நிறைந்து தீ நாற்றம் மிகுந்து காணப்படுகின்றது.

பட்டினத்தடிகள் மனமாகிய மாளிகை, பராமரிப்பு இன்றிப் பாழ்பட்டுப் பாழறையாய்த் தொழுவமாகப் பழுதடைந்து கிடத்தலைக் காண்கின்றார். மிகவும் வருந்துகின்றார். அதனைத் தூய்மைப்படுத்த முனைகிறார். காமம் வெகுளி மயக்கம் ஆகிய குப்பைகளையெல்லாம் அரிதின் முயன்று போக்குகின்றார். ஐம்பொறிகளாகிய ஐந்து கடாக்களையும் அவிழ்த்து அகற்றி விடுகின்றார். அன்பு கொண்டு மெழுகி, அங்கே இருந்த மேடு பள்ளங்களைப் போக்கித் துப்புரவு செய்கின்றார். அருளுணர்வு என்னும் ஒளி விளக்கை ஏற்றி வைத்து, அறியாமை என்னும் துன்ப இருளை ஓட்டுகின்றார். உண்மை என்னும் விதானம் விரித்துப் பரப்பி, அப்பாழறையை அழகுபடுத்திப் பள்ளியறையாக்குகின்றார். அங்கே ஒரு நல்ல கணவனையும் மனைவியையும் குடியேற்றி வைக்க விரும்புகின்றார். அதன் கண் இருதயகமலம் என்னும் செழுமலர்ப் பூந்தவிசு ஆகிய கட்டில் ஒன்றை கொணர்ந்து இருக்கின்றார். அக்கட்டிலின் கண், இமயக் கொழுந்து ஆகிய பார்வதி தேவியையும், உடன் அழைத்துக் கொண்டு குடிவந்து எழுந்தருளியிருக்கும்படிச் சிவபெருமானைப் பட்டினத்தடிகள் வேண்டிக் கொள்கின்றார். இங்ஙனம் பட்டினத்தடிகளார் கூறுவது போல, நாமும் நமது பாழறையாகிய மனத்தைப் பார்வதியும் பரமேஸ்வரனும் ஒருங்கே எழுந்தருளி வணங்கத் தகுந்த சிறந்த பள்ளியறையாகும் வண்ணம், பல்லாற்றானும் தூய்மை செய்து பொலிவுற வைத்துக் கொள்ளும் செயலே, வழிபாடு எனப்படும்.

2. வழிபாடு இன்னது என்பதனை, வேறொரு வகையாகவும் பட்டினத்தடிகளார் விளக்குகின்றார். நம்முடைய மனம், ஒரு சிறந்த புனம் போன்றது. அதனை நாம் பாழாக்கிக் கொண்டிருக்கின்றோம். அதனால் அங்கே காமம், என்னும் காடு மண்டி வளர்கின்றது. அதன்கண் ஐம்புலன்கள் ஆகிய வேடர்கள் மறைந்திருந்து கொண்டு, வழிப்பறி செய்து வாழ்ந்து வருகின்றனர். இன்பம் என்னும் பேய்த்தேர் அங்கே சுற்றித் திரிந்து அலைந்து வருந்துகின்றன. அங்கு உலக ஆசை என்னும் விதை விழுந்து, அகந்தை என்னும் ஒரு பெரிய நச்சுமரம் வளர்ந்துள்ளது. அது பொய் ஆகிய கிளைகள் நீட்டிக்கொண்டும், பாவம் ஆகிய பல தழைகள் பரப்பிக் கொண்டும் இருக்கின்றது. கொடுமை ஆகிய அரும்பு, கடுமை என மலர்ந்து, துன்பம் ஆகிய பல காய்களைக் காய்த்து, மரணம் ஆகிய கனிகளைப் பழுத்து, எவருக்கும் பயன்படாத படி, நரகம் ஆகிய குழியில் வீழ்த்திக் கொண்டுள்ளது.

இத்தகைய மனம் ஆகிய புனத்தில், பரவிப் படர்ந்து கிடக்கும் வஞ்சம் ஆகிய அடிமரக் கட்டைகளை வேரோடு தோண்டி அகற்றிக் குழிகளைத் தூர்த்துச் செப்பனிடுதல் வேண்டும்; அதன்பின் அங்கே அன்பு என்னும் பாத்தி கோலி, மெய் என்னும் எருவினை நிரம்பப் பெய்து, பக்தி என்னும் விதையை விதைத்து, ஆர்வம் ஆகிய தண்ணீர் பாய்ச்சி, ஐம்புலன்கள் ஆகிய பட்டிமாடுகள் மேயாதபடிச் சாந்தம் ஆகிய வேலி கோலிப் பாதுகாத்து வருதல் வேண்டும்; அங்ஙனம் பாதுகாத்து வந்தால், சிவஞானம் என்னும் செழுமுளை தோன்றும்; கருணை இளந்தளிர் காட்டும்; அச்சிவஞானம் என்னும் பயிர் தழைக்கும் பொருட்டுக் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் முதலிய களைகள் வளராதபடி, அவ்வப்போது களையெடுத்து வந்தால், தண்ணீர் அரும்பும்; திருவைந்தெழுத்து, ஆகிய அருங்காய் தோன்றும்; அது பவளநிறம் பெற்றுத் தவளநிறம்பூசி, அறுசுவை யதனினும் உறுசுவையுடைத்தாய், காணினும் கேட்பினும் கருதினும் சுவைமிகப் பயக்கும் மருத மாணிக்கத் தீங்கனி ஆகிய சிறந்த பழத்தினை அளிக்

கும். அதனை நாம் இனிதின் அருந்திச் செம்மாந்து சிறப்புற்றுச் செழித்து மகிழ்ந்து வாழலாம்; என்கின்றார் பட்டினத்தடிகள்: இங்ஙனம் மனம் ஆகிய புனத்தினைத் திருத்தி வளம்படுத்திப் பயன்கொள்ளும் நற்பெருஞ்செயலே வழிபாடு எனப்படும்.

வழிபாட்டின் வகை:

வழிபாடு என்பது, புறவழிபாடு அக வழிபாடு என இருவகைப்படும். புறவழி பாட்டினும், அகவழிபாடே மேலானது. புறவழிபாடு புரியப் புரிய அது நம்மை அக வழிபாட்டிற் கொண்டு செலுத்தும். நெஞ் சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சன நீர் என்னும் நிலையில் அமையக் கொண்டு, இறைவனைத் தியானித்து முறைப்படி பூஜிக்கும் நெறியே, அக வழிபாடு ஆகும். இதன் இயல்பினை,

"காயமே கோயில் ஆகக்
கடிமனம் அடிமை யாக,
வாய்மையே தூய்மை யாக
மனமணி இலிங்கம் ஆக,
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே"

எனத் திருநாவுக்கரசர் முதலிய செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர்கள் விளக்கியிருத்தல் கொண்டு தெளியலாம்.

இத்தகைய சிறந்த அக வழிபாடு புரிந்த நமது செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர் கள், யோக ஞான நுண்ணுணர்வால் தமது உடம்பையே ஒரு கோயிலாகக் கண்டுணர்ந் தனர். அங்ஙனம் கண்டுணர்ந்தபடியே, புறத்தே பல கோயில்களைத் தமது உடம் பின்கண் முதல் கண்ட இயல்பிற்கேற்ப இனிதமைத்து வைத்தனர். நமது மனித உடம்பின்கண் முதன்மையான ஆறு இடங் கள் உள்ளன எனவும், அவை மூலம் கொப்பூழ் மேல்வயிறு நெஞ்சம் மிடறு புருவநடு என்கின்ற ஆறும் ஆகும் எனவும் நுண்ணிதிற் கண்டுணர்ந்தனர். யோக நூல்கள் இவற்றை முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களாகக் கூறும்.

மூலாதாரம் எருவாய் கருவாய்க்கு இடையே நிலத்தின் தன்மையும், கொப்பூழ் நீரின் தன்மையும், மேலும் வயிறு நெருப் பின் தன்மையும், நெஞ்சம் வளியின் தன் மையும், மிடறு விசும்பின் தன்மையும் உடையதாக விளங்கும். புருவநடு என்பது இடைகலை பிங்கலை சுழுமுனை நாடிகள் கலக்கும் இடமாகத் திகழும். இவ்விடங் களில் இறைவனின் அருள்விளக்கத்தைக் கண்டு தொழுது வழிபட்ட நம் தமிழ்ச் சான்றோர்கள், தாம் அகத்தே கண்டறிந்த இறையருள் நிலையினை ஏனைய எளிய பொதுமக்களும் உணர்ந்து பயன் பெறுதற் பொருட்டு, அவ்வியல்பு பிறழாமல் புறத்தே யும் ஆறு இடங்களில், ஆறு பெருந் திருக் கோயில்களாகப் பொருத்தமுற அமைத்து வைத்தருளினர்.

நிலத்தின் தன்மையுடைய மூலாதாரத் தலமாகப் புற்றிடங் கொண்ட பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற திருவாரூரை யும் (மணலால் இலிங்கம் அமைத்துக் காமாட்சியம்மை பூசித்த தலம் ஆகிய காஞ்சீபுரத்தையும்); நீரின் தன்மையுடைய கொப்பூழ் நீர் ஊறும் தலமாகிய திருவானைக்காவையும்; உணவைச் செறிப் பிக்கும் நெருப்பின் தன்மையுடைய மேல் வயிருக நெருப்பியற் பாறைகள் நிறைந்த திருவண்ணாமலையையும்; மூச்சுவழி இயங் கும் நெஞ்சமாக இறைவன் திருநடம் புரியும் தில்லைச் சிற்றம்பலத்தையும்; விசும்பின் தன்மை நிலைபெறும் மிடற் றின்கண் திருக்காளத்தியையும்; இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகள் கூடும் புருவநடுவாக, யமுனை, கங்கை, சரஸ்வதி என்னும் மூன்று ஆறுகள் கூடுகின்ற பிரயாகை அல்லது வரனை ஆசி என்னும் இரண்டு ஆறுகள் கூடுகின்ற காசியையும்; இவற்றிற்கு மேற்பட்ட பிர மேந்திரம் என்னும் தலையுத்தியாகத் திருக் கயிலையினையும்; அங்கே பெருகுகின்ற அமுத ஊற்றினை மானசசரோவரம் என்னும் தெய்வப் பொய்கையினையும், சிறந்த முறை

யிற் பலவகைகளிற் பொருந்துமாறு உருவகம் செய்து, நம் சான்றோர்கள் கோயில்கள் எடுப்பித்து அமைத்துள்ள அரும் பெரும் நுட்பங்கள், ஆழ்ந்து ஆராய்ந்து அகமகிழ்தற்குரியன.

புறவழிபாடு :

புறத்தே வழிபாடு புரியுங்கால், இறைவனுக்குப் பூச்சாத்துதல், சந்தனம் பூசுதல், நிவேதனம் படைத்தல், தூபம் இடுதல், விளக்கேற்றுதல், துதிபாடுதல் ஆகிய செயல்களைச் செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்யுங்கால், இறைவனுக்குத் திருமால் போலப் பூச் சாத்தியும், மூர்த்தி நாயனார் போலச் சந்தனம் பூசியும், அரிவாட்டாய நாயனார் போல நிவேதனம் படைத்தும், ஸ்ரீ குங்கிலியக் கலய நாயனார் போலத் தூபம் இட்டும், கலிய நாயனார் போலத் திருவிளக்கேற்றியும், திருஞானசம்பந்தப் பிள்ளையார் போலத் துதிபாடியும், நாம் மிக்க அன்புடன் வழிபாடு புரிதல் நலம் பயக்கும்.

"நிலங்கடந் தவன்முன் நறுமலர் சாத்த,
நிகரில்அம் மூர்த்திமுன் சந்து
நினக்கணி வுற, வாட் டாயர்முன் இருந்து
நிவேதனம் புரிந்திட அன்று
நலங்கிளர் கலயர் கலியர்முன் தூபம்
நல்விளக்கு அளிப்ப, நின் தன்னை
ஞானசம் பந்தப் பிள்ளைமுன் பாட,
நாணிலேன் பூசனை, புரிவேன்...

—சிவப்பிரகாசர்

அக வழிபாடு :

அகவழிபாடாவது, உடம்பின் அகத்தே இதயம் உந்தி புருவநடு என்னும் மூன்றினையும் முறையே பூசைத்தானம் ஓமத்தானம் தியானத்தானம் எனக் கருதிக் கொண்டு, புறம்பே பூசை செய்யும் முறைப்படி இதயபங்கயத்தில் திருவைந்தெழுத்தால் அமைந்த திருமேனியில் இறைவனை எழுந்தருளுவித்து, கொல்லாமை ஐம்பொறியடக்கல் பொறை அருள் அறிவு வாய்மை தவம் அன்பு என்னும் அட்டமாமலர் தூவி, திருவைந்தெழுத்தால் அருச்சனை செய்து, அத்திருமந்திரத்தாலே குண்டலித்தானம் ஆகிய உந்தியில் ஞான அனலை எழுப்பி, அதன்கண் விந்துத் தானத்து அமிழ்தம் ஆகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமம் செய்து, விந்துத் தானம் ஆகிய புருவநடுவிற் சிகரயகர வகரங்கள் மூன்றும் முறையே தற்பதப் பொருளும் துவம்பதப் பொருளும் அசிபதப் பொருளுமாம் முறைமை நோக்கி, அதனாற் சிவலோகம்பாவனை செய்தல். அங்ஙனம் செய்யின், அச் சிவலோகம் பாவனைக்கண் இறைவன் விளங்கித் தோற்றுவான் என்று, சிவஞான போதம் விளக்குகின்றது.

"தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தன்அன்பாம் மஞ்சனநீர் தாம் ஆட்டித்—தம்மைஒரு
பூவாக்கிப் பூஅழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை அன்றே உளன்"

எனத் திருக்களிற்றுப் படியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திர ஞானனுபவ நூலும், இவ்வக வழிபாட்டின் தத்துவ நுட்ப இயல்பை இனிது விளக்குகின்றது.

முடிவுரை :

"வழிபாடு என்பது, ஒருவன் தோற்றுவிக்கக்கூடிய மிகமிகச் சிறந்த வன்மை மிக்க ஒருபேராற்றல் ஆகும். இவ்வாற்றல், நிலத்தின் ஈர்ப்பு ஆற்றல் எங்ஙனம் உண்மையானதோ, அங்ஙனம் உண்மையானதாகும். ஒரு மருத்துவன் என்ற முறையில், எல்லாப் பிற மருத்துவங்களும் பயனற்றுத் தோல்வியுற்றுவிட்ட பிறகு, வழிபாடு என்னும் அமைதியான முயற்சியின் மூலம், பிணியினின்றும் கவலையினின்றும் மீட்டுவித்து உயர்த்தப்பெற்ற மனிதர்களை யான் கண்டிருக்கின்றேன். ரேடியம் என்னும் கதிரியைப் போல, வழிபாடு என்பது, தன்னில் இருந்து ஒருவன் தோற்றுவிக்கக்கூடிய ஒளிமிகுந்த ஆற்றலின் ஒரு பிறப்பிடம் ஆகும். வழிபாட்டின்கண், மனிதர்கள் தங்களுடைய ஓர் எல்லைக்குட்பட்ட ஆற்றலினை மிகுதிப் படுத்திக் கொள்வதற்கு, எல்லா ஆற்றல்

களுக்கும் தாயகமான எல்லையற்ற பரம் பொருளைத் துதித்து அதனோடு தொடர்பு கொள்ள முயல்கின்றார்கள்.''

''வழிபாடு செய்யும் பொழுது இவ் வுலகத்தைப் படைத்த குறைவிலா நிறை வாகிய இயவுள் ஆற்றலோடு, நம்மை நாம் தொடர்புபடுத்திக் கொள்கின்றோம். அப்பேராற்றலின் ஒரு பகுதியை நம்முடைய தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து அளிக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.''

''வேண்டிக் கொள்வதனுற் கூட, நம் முடைய மனித வாழ்வின் குறைபாடுகள் நிறைபாடுகள் நிறைவெய்துகின்றன; நாம் புத்தாற்றலும் புத்துயிர்ப்பும் பெறுகின் றோம். உள்ளார்ந்த அன்பு மேலீட்டால், நாம் கடவுளைத் துதித்து வழிபடும் பொழுது, நாம் நம்முடைய உடலையும் உயிரையும் புதிய சிறந்த நிலைக்கு மாற்றிக் கொள்கின்றோம். எந்த ஓர் ஆணே பெண்ணே ஏதாயினும் சில நலங்களைப் பெறுமல், ஒருகணமேனும் வழிபாடு புரிதல் என்பது, நடவாத செயலாகும். ஒரு கண நேரமேனும் உண்மையாக வழிபடுவோர் தாம் விரும்பும், நலன்களை அடைந்தே தீருவர்'' என்று அலெக்ஸிஸ் காரெல்* என்னும் அமெரிக்க நாட்டு மருத்துவப் பேரறிஞர் கூறுவது, வழிபாடும் அதன் தத்துவங்களும் பற்றி நாம் அறிந்து கொண்டு கடைப்பிடித்தற்கு, நமக்குப் பெரிதும் ஊக்கமூட்டித் துணைபுரிவதாகும்.

## அகிலாண்டநாயகி மாலை

உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு
முண்மையென் றுரைப்பதற் கேற்ப
இலகுசீ காழி மழவழ வளித்தா
யின்முலைப் பாலழா விடினும்
அலகற விரங்கி யளிப்பவ ரிலையோ
வத்தகு மழவியா னருள்வாய்
கலகமில் கழகஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (28)

விரும்புநின் செங்கை தாங்கலா லிரண்டாம்
வேற்றுமை விரித்துரை செய்யா
தரும்புதா மரைதாங் குவாரென லான்மூன்
றுவதும் படுசொலும் விரிக்கும்
பெரும்புவி மலர்பூ மாதெனும் பெயர்கள்
பெறும்வினைத் தொகைகுணத் தொகைப்பேர்
கரும்புபைங் கமுகிற் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (39)

# திருத்தொண்டு

புலவர் பெருநாவலர் திரு. அ. நடேச முதலியார்

தொண்டர் என்பவர் யார்? தொண்டினைச் செய்பவர் தொண்டர். தொண்டு என்பது தன்னலங் கருதாது, பிறர் நலம் பேணும் பெற்றி வாய்ந்தது. தன்னலம் என்பது தானுயர்வதற்கும், தான் இன்பமடைவதற்கும் செய்யும் முயற்சியும் செயலும் ஆகும். இங்கே மனித உள்ளம் எப்பொழுதும், உயர்வடையவும், இன்பம் பெறவுமே முயற்சி செய்யும் என்பதனை மறந்துவிடல் கூடாது. உலகமனைத்திலும் உள்ள மக்கள் சமுதாயமும் சரி, அரசியலும் சரி, தானும் தன் சமுதாயமும் உயர்வடையவும், இன்பமாய் வாழவுமே முயன்று கொண்டிருக்கின்றன என்பதை நாமறிவோமல்லவா? என்றால் அம்மக்கள் சமுதாயத்தின் ஒருவனுகப் பிறந்தவன் தானுயர்வடையவும், தானின்பமடையவும் முயல்வான். செயல் படுவானேயன்றி வேறென்ன செய்யமுடியும். ஆனல், உயர்வும், இன்பமும், ஓர் எல்லே உடையன அல்ல. மேலும் மேலும் இழுத்துச் செல்லும் அளவற்ற தன்மையுடையன. அங்ஙனமாக, மனிதன் ஓரளவு பெருமையும், செல்வ இன்ப வாழ்வும் பெற்றவுடனே போதும் என்ற எண்ணம் வரவேண்டுமே. அங்ஙனம் போதும் என்ற எண்ணம் பெறுவது மிக அரிது. அதனுல்தானே 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று போற்றினர் சான்ரேர். அங்ஙனம் பொன் மனம் பெற்று வாழும் பண்புடை வாழ்க்கையினர், வாழ்வில் ஒரு திருப்பம் பெறுவர். அங்ஙனமின்றி, மேலும் மேலும் உயர்விலும் இன்பத்திலுமே எண்ணம் செலுத்துவோர் அமைதி பெருது அல்லல் உழப்பர். அதனே யறிவதுதான் அறிவு. உயர்வல்லாதவற்றை யுயர்வென்றும், இன்பமல்லாதவற்றை இன்பமென்றும் மயங்கி மேலும், மேலும் அவாப்பட்டு அல்லலுழப்பதால் தான் பிறவி பாழ்போவது என்பது நம் முன்னேர் கண்ட உண்மை. இதனே வள்ளுவர் போன்ற உலகப் பெரியார்களும், சுந்தரர் போன்ற அனுபவ அறிஞர்களும் கூறுகின்றனர். வாழ்வு என்பது உயர்வையும், இன்பத்தையும் குறிக்கும் ஒரு நல்ல தமிழ்ச் சொல். தாழ்வு என்ற மறு சொல், இழிவையும், துன்பத்தையும் குறிக்கும் சொல். உண்மையான வாழ்வு எது? உண்மையான தாழ்வெது? என்பதனேயறிய முடியாமல், வாழ்வைத் தாழ்வாகவும், தாழ்வை வாழ்வாகவும் மக்கள் மயங்கி அதனுல் அல்லல்படுகின்றனர். இல்லேயேல் உண்மையான வாழ்வும் அவர்கட்குக் கிடைக்கும் என்ற உண்மையை உண்மை கண்ட வள்ளுவரும், அனுபவ ஞானியாகிய சுந்தரரும் ஒரு முகமாகக் கூறுகின்றனர்.

சமுதாயம் எண்ணுகிற, எண்ணி முயன்று பெறக் கருதுகிற வாழ்வு வாழ்வல்ல. அது உண்மையாகத் தாழ்வு. அத்தாழ்வினே வாழ்வெனக் கண்டதால்தான் பிறவி பாழாய்ப் போகிறது என்ற உண்மையைத் திருவள்ளுவர்,

> பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
> மருளானும் மாணுப் பிறப்பு

என்கிருர்.

இங்கே மருள் என்பது மயக்க உணர்வு. மயக்க உணர்வாவது, ஒன்றனே மற்றென்ருக அறியாமையால் அறிவது. தாழ்வை உயர்வென்றும் துன்பத்தை இன்பமென்றும் கொள்ளும் அறியாமையே அறிவெனப்பட்டு முயற்சியும் செயலும் மாட்சிமைப்படாது வாழ்நாள் வீழ்நாளாய்க் கழிவது. அதனேத் தான் மருளானும் மாணுப் பிறப்பு என்று கூறுகிருர். மருளுக்கு இலக்கணம் சொல்லுவார் போன்று உண்மையல்லாதவற்றை

உண்மை எனக் கொள்ளுவது மருள் என்று கூறுகிருர். இதனை விளக்குமுகத்தான் சுந்தரர் பெருமான், 'வாழ்வாவது மாயம் இது மண்ணுவது திண்ணம்' 'பாழ்போவது பிறவிக்கடல், பசிநோய் செய்த பறிதான்' 'தாழாதறம் செய்ம்மின்' என்று கூறி, மாயம் என்பதனை விளக்குகிருர். பொய் என்பது உண்மைக்கு மாருனது. பொய் எனினும் மாயம் எனினும் ஒக்கும் வாழ்வென்று நாம் கருதுவது மாயம். ஏன் எனில் அது அழிந்து போகிறது. துன்பமாய் முடிகிறது. உண்மையான வாழ்வெனில், அழியாததாய், இன்பமாய் நிலைக்க வேண்டும். நாம் கருதி அடைகிற வாழ்வு அப்படி நிலைத்தும் இல்லை, இன்பமாகவும் இல்லை. அதனுல் அது பொய். மாயம் என்று காரணம் காட்டி விளக்குகிருர் சுந்தரர் பெருமான். ஆகையால் நலம் பெற்றதைக் கொண்டு மகிழவும், பெருததில் அவாப்பட்டு அழியாமலும் இருக்கப் போதுமென்ற மனம் வேண்டும். இஃது இங்கே உலகியலுக்கு முரண்போலத் தோன்றும். அப்படியன்று, எண்ணங்கள் பெறுவதிலேயே சென்றுவிடக் கூடாது. பெறுவது பயன் துய்க்க என்பதனை மறந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் இவ்வுண்மை வெளிவருகிறது. பசித்தான் ஒருவனுக்குக் கிடைக்கும் கூழினை உயர்வெனக் கருதினுலன்றி அவன் பசி தணிந்து இன்ப அமைதி பெறமுடியாது. அறுவகைச் சுவையினை அவாவிப் பெற்ற கூழினைப் புறக்கணிப்பானுகில் அவன் பசியும் தணியாது அமைதியும் பெருது போகிருன். அதுபோல, ஒரு மனிதன் அமைதி பெறுதற்கே பெற்றதைக் கொண்டு மகிழவும் பெருததற்கு முயற்சியும் வேண்டுமெனில், வாழ்வு பயனடைதற்கு எத்தனை மாற்றம் வேண்டும். ஆகையால் தான் போதும்என்ற மனமே பொன்செய்யும் மருந்து எனப் பொருளுரை கூறினர் நம் முன்னேர். அங்ஙனம் பொன் மனம் பெற்ற சான்ருேர் தம் அமைதியான வாழ்க்கையில், பிறர்க்குப் பயன்பட வேண்டும் என்றும் கருதுவர். தான் பயனடைய வேண்டும் என்பவன் பிறரைத் தனக்குப் பயன்படுத்துவான். பிறர்நலம் பெறவேண்டும் என்பான் தன் வாழ்வைப் பிறர்க்குப் பயன்படுத்துவான். இங்கே நேர்மாருன மனமாற்றத்தை உணர்கிருேம். இது வாழ்விலேயே பெரிய திருப்பம். எப்படிக் கைகூடும் என்பது வியப்பு. அதற்குப் பயிற்சியும், பண்பும் தக்கார் கூட்டுறவும் வேண்டும். எவன் ஒருவன் இத்தகைய மாற்றம் பெறுகிருனே அவனே தொண்டன் ஆகிருன். தனக்குப் பிறர் பயன்படவேண்டும் என்ற எண்ணம் உள்ள வரையில் தொண்டு உள்ளம் தோன்றவே தோன்ருது. பிறர்க்குப் பயன்படவேண்டும் என்ற தோற்றம் எண்ணத்தில் பதிந்துவிடுமானுல் தன்னலம் தலையெடுக்காது. அதனுல்தான் தன்னலம் அற்றவன் செய்யும் செயலும், சொல்லுமே தொண்டு எனப் பெயர் பெறுகிறது. இங்ஙனம் எண்ணமாற்றம் பெற்ற மனிதன் தொண்டனுய்ச் செயலாற்ற முற்படும்போது மூவகை நிலை முன்னிற்கின்றன. உலகியல், அறிவியல், ஆன்ம இயல் என்பன. உலகியலுக்கு நாடு முன்னிற்கும்; அறிவியலுக்கு மொழி முன்னிற்கும்; ஆன்ம இயலுக்கு நாடு மொழி இரண்டுங் கடந்த சமயம் முன்னிற்கும். உடல் வாழ்வு, அறிவு வாழ்வு, ஆன்ம வாழ்வு என்ற மூன்றனுள், உடல் வளர்ச்சிக்குச் சமுதாயக் கட்டுக்கோப்பும் பொருளாதார வளர்ச்சியும் தொழில் முன்னேற்றமும், உரிமை மனப்பான்மையும் வழிவழி வரும் சமுதாய நலனும் குறிக்கோளாக அடைந்து அவற்றினுடைய முன்னேற்றத்தையும், அவற்றின் முன்னேற்றம் அனைத்தும், அரசியலைப் பொறுத்ததாகையால், அரசியல் பங்கும் கொண்டு சமுதாய நலம் பேணும் நாட்டுப் பற்றுடையவனுய்த் தொண்டன் எனப் பெயர் பெறுகிருன்.

அடுத்து, மனிதன், உயிரினங்களுள் தலைசிறந்த மனிதப் பிறவி எடுத்தவனன்ருே? அவனிடம் பிறவுயிரினங்களிடம் காண முடியாத நல்லறிவு உண்டு. அந்த அறிவு தொழிற்பட்டு, வளர்ச்சியடையத் துணை செய்வது மொழியல்லவா? மொழியைப் பற்றித் தானே எண்ணங்களே உருவாகின்

றன. இன்ப துன்ப நிகழ்ச்சிகள் அனைத் துயிர்க்கும் பொது. எண்ண வளர்ச்சி மனித னுக்கு உள்ள சிறப்பு. எண்ணங்கள் வளர் வது, அவனுடைய உள்ளத்தில், சொல்லுரு வம் பெறும்பொழுதுதான். அவ்வெண் ணங்கள் சொல்லுருவமாய் மொழியாய் வெளி வரும்போதுதான், அவன் தன் கருத் தையும் வளர்ச்சியையும், பிறருக்குத் தெளிவு படுத்த முடிகிறது. மொழியைப்பற்றி நின்றே அறிவு விளக்கம் பெறுகிறது என்பது ஒரு உயர்ந்த முடிவு. இங்கு இஃதன்று பேச்சாகையால் ஒன்றனை மாத் திரம் குறிப்பிட விரும்புகிறேன். கல்வியின் சிறப்பியல்பினைத் திருவள்ளுவர், கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை, என்ற பாகுபாட்டில் வளர்த்துக் கூறியுள்ளார். கல்வி என்பதே மொழியினை அறிவதும், மொழியினால் அறிவதும் ஆகும். எழுத் தினைக் கூட்டிப் படிக்க அறிவது, அங்ஙனம் மொழியினை அறிந்தவன் தான் அறியாத, தான் அறிந்துகொள்ள வேண்டியவற்றை, அம்மொழியறிவால் அறிவது மொழியினால் அறிவது. அதனால் படித்தறிவது என்ப தும், கேட்டறிவது என்பதும் கல்வியின் பாற்பட்டன. கற்றல் கேட்டலுடையார் பெரியார் என்பதும் அருள் வாக்காகும். இங்ஙனமாகத் தொண்டர், தன்னலம் கருதாத சொல்லும் செயலும் உடையாராய் வாழ்ந்தாரை நாம் போற்றுகிறோம். இரு வகையில்,

ஒன்று நாட்டுப்பற்று காரணமாகச் சமு தாயத் தொண்டு செய்தவர். மற்றொன்று மொழிப்பற்று அறிவுப்பற்று காரணமாகத் தாய்மொழித் தொண்டு செய்தவர். இவ் விருவரையும், வீரர் என்றும் கவிஞர் என்றும் கூறினும், நாட்டுத் தொண்டர் மொழித் தொண்டர் என்றும் கூறலாம் என்று கூறி தொண்டர் என்ற தலைப்பினை முடிக்கிறேன்.

அடுத்து திருத்தொண்டர் என்பவர் யார்? என்று காண்போம். தொண்டரோடு திரு என்பதனைக் கூட்டி அடைமொழியாகக் கொண்டு, திருத்தொண்டர் என்பதாகக் கூறிவிடலாம். அங்ஙனம் கூறிவிடமுடி யாதபடி திருத்தொண்டர் என்றாலே ஒரு பிரிவினரைக் குறிப்பதாக அமைந்துள்ளது அச்சொற்றொடர். பண்டைக்காலத்தில் திரு என்ற சொல், மிக உயர்ந்த பொருளுடைய சொல்லாகவும், அதனை அறிந்தே பயன் படுத்தும் சொல்லாகவும் இருந்தது என்ப தனை இலக்கிய அறிஞர் நன்கறிவர். பண் டைய நூல்களுள் வள்ளுவர் செய்த நூலுக் கும், வள்ளுவருக்கும் (திரு) என்ற அடைமொழி சேர்த்துத் திருக்குறள், திரு வள்ளுவர் என்று வழங்கினர். (திரு) என்ற சொல்லை யாரையும் கண்டவுடன் தன்வயப் படுத்தும் தோற்றத்திற்கும், பொருட்குமே பயன்படுத்தினர். வள்ளுவரும், குறளும், தோற்றத்தானும், பொருளானும், யாரையும் தன்வயப்படுத்தும் தன்மையால் திருவள்ளு வர் திருக்குறள் என்றழைப்பாராயினர் என் றறிகிறோம். அதனால்தான், (திரு) என்ற சொல்லுக்கு அங்ஙனம், கண்டாரைத் தன் வயப்படுத்தும் தன்மை நோக்கம் என்று உரை எழுதிக் காட்டினார் பேராசிரியர் திருக்கோவையர் உரையில். பின் செல்வத் திற்குப் பொதுப் பெயராய் செல்வ மகளுக் குரிய பெயராய், பின் சிறப்பினைக் குறிக்கும் அடைமொழியாய் வந்துவிட்டது. இன்றைய நாளில் யார்க்கும் கொடுக்கவேண்டிய மரி யாதை அடைமொழியாய் வழங்கியும் வரு கிறது. எனவே வள்ளுவர் பெருமான், மனி தனை உயர்த்துவது பிறப்பன்று. அவ னறிவே என்றும், அவ்வறிவும் கல்வி கேள்விகளான் பெறுவது என்றும், அக் கல்வியும் கேள்வியும் மொழியான் வருவன வென்றும் கூறிப் போந்தார். அதனை முடிக் கும்போதுகூட மக்களுக்கும் விலங்குக்கும் வேற்றுமை காட்டுவராய்த் தொடங்கி மொழி யறிவினைப் பெற்று விளங்கிய அறிவுடைய வன்—அஃதாவது கற்றவன் மக்களைச் சார்ந்த வன். அங்ஙனம் மொழியறிவு பெருதவன், அஃதாவது கல்லாதவன் விலங்கினத்தைச் சேர்ந்தவன் என்று கூறி முடிக்கிறார்.

"விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்"

என்ற குறள் எவ்வளவு தெளிவு செய்கிறது பாருங்கள். இங்ஙனம் மனிதன் மனிதனாக வாழ வகை செய்வதும், மனிதனைப் பிறவி

யினல் உயர்த்துவதும், அப்பிறவிதானும் அறிவால் சிறப்படைவதும், மொழியைப் பற்றியே யன்ருே. ஆகவேதான் நம் நாட்டிலும், பிறநாடுகளிலும்கூட அனைவரும் மொழியறிவைக் கல்வியைக் கண்ணெனப் போற்றி வளர்ப்பாராயினர். அங்ஙனமே மனிதனை உயர்த்துகிற அனைத்தினும் சிறந்தன இரண்டு. ஒன்று குறையினும் மனிதன் உயர்வடைய முடியாது. ஆகவேதான், அரசியலார் பொருளாதாரத்தையும், கல்வியையுமே சமுதாயத்தின் இரு கண்களாகப் போற்றி வளர்க்க முயல்கின்றனர். அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி இவ்விரண்டுமே தலைசிறந்தன என்பதை நாமறியலாம். உண்மை என்றைக்கும் உண்மைதான். ஆனல் பிறநாட்டாரும், அரசியலாரும், பொருளை முன்னுகவும், அறிவை அதனுற் பெறும் சார்பாகவும் வைத்துப் போற்றுவர். போற்றி வருகின்றனர். சமுதாயமும்கூட முதலில் உணவு, உடை, இடம் முதலியன பெறுதற்குப் பொருளை முன்னுகவும் அவை பெற்றபின், நல்வாழ்வு வாழவும் உயர்வடையவும், கல்வியைப் பின்னுகவும் வைத்தே போற்றி வருகின்றனர், மதிக்கின்றனர். என்னதான் பேசினுலும், உண்மையில் பொருள் முன்னுக நின்று அனைத்தையும் கூட்டிவைக்கும் கருவியாகப் பயன்படுவதை யாரும் மறுக்க முடியாதல்லவா ?[2] ஆனல், வள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் ஆகையால், கல்வியை அரசியலில் முன்னுக வைத்துப் பொருள் செயல் வகையினை அதன்பின், அவ்வறிவினல் நல்வழியில் செயல்வேண்டும் என்று காட்டுவராய்ப் பின்வைத்து ஓதியுள்ளமை நன்கு உணரவேண்டிய ஒன்ருகும். ஆகவே மனித வாழ்வினைப் பெரிதாக விளங்கச் செய்யும் மொழியறிவினைப் பெரிதாகப் பெற்றவன், அம்மொழியினையே தாயெனவும், தெய்வம் எனவும் போற்றி சமுதாயத்துக்குத் தன்னலம் கருதாது தொண்டு செய்ய முன்வருகிருன். அறிவுப் பணி செய்கிருன். சமுதாயம் பண்புடையராய், அறிவுடையராய், முயற்சியுடையராய், ஆக்கச் செயலுடையராய், கொடைக் குணமுடையராய் வாழவும் மலரவும் பயன்படவும், மொழியை வளர்த்து, மொழியைப் பரப்பிப் பயன்படுகிருன். இவன் மொழித் தொண்டன் ஆகிருன். அவனை உலகம் புலவன் என்றும், கவிஞன் என்றும், சான்ருேன் என்றும் போற்றிப் புகழ்கிறது. சாவா நிலை பெறுகிருன். அவன் கொடுத்து உதவிய, மொழிதான் நம்மறிவை வளர்த்து நம்மை வாழவும் வைக்கிறது. ஆகையால் அவன் பெருந் தொண்டன் ஆகிருன். இதனைத் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமான் புராணத்தை முடிக்கும்போது, இவ்வரலாற்றில் கூறியுள்ள, அடியார் எத்தகையார் என்பதனைக் கூறி முடிக்கிருர்கள்.

“என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார்அடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெல்லாம்”

என்பது அத்திருப்பாசுரம். இப்பாசுரத்தில் இன்பம் என்றும் பெருகும் இயல்பினது என்றும் அவ்வின்பம் ஒன்றையே காதலித்து என்றும், அதனல் உள்ளமாகிய உயிர் ஓங்கும் என்றும், அதனைப் பெற்றவர் திருத்தொண்டராம் அடியார் என்றும், அவர்கள் புகழ் உலகமெங்கும் நின்று நிலவியது என்றும் கூறியுள்ள சிறப்பினைச் சிந்திப்போமாக.

தாம் உயிர் இன்பத்தைப் பெற்றதனல் உயர்ந்தோர் ஆவரேயன்றி, தொண்டராவதெப்படி? என்ற வினு எழும். எவன் ஒருவன் இரக்கமுடையவனுகிருனே, தான் பெற்றதைக் கைம்மாறு கருதாது இரக்கத்தால் பிறர்க்குக் கொடுக்கிருனே அவனே தொண்டன். அவனே உயர்ந்தோன். செயலால் உயர்ந்தோன். பிறரெல்லாம் அவன் செயலையும், அவனல் அடையும் பயனையும் அடைந்து அவனை யுயர்ந்தோன் என்று போற்றிப் பணிவர். ஆனல் அவன் கண்ட உலகத்தில் அனைத்துமாய் நிற்கிற, இவனுக்கு முன், தான் ஒரு அணு என்றும், தான் பிறந்த பிறவியிற் பெரும் பயன் பிறர்க்கு உதவியாய் வாழ்வதே என்றும், இச்செயலைச் செய்து பயன்படக் கிடைத்ததே இந்த வாழ்வென்றும், தன்னை மிக

எளியவனாகவே எண்ணுவான். செயலாற்று வான், பணிந்து மொழிவான், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று உண்மை கண்ட ஞானிகள் நினைப்பர். செயலாற்றுவர். இந்நிலை எல்லாச் சமயத் தார்க்கும், எல்லா மொழியினர்க்கும், எல்லா நாட்டினர்க்கும், பொது நிலை தானுயர்ந்து காட்சியளிக்கவேண்டும் என்றபோது அறி யாமை முன்னின்று, அவர் செயல் படுவ தனை நாமறியலாம். பிறவி ஒழியாது. அங்ஙனம் வந்த உயர்வும், அதனின் மேம் பட்ட உயர்வின் முன், தாழ்வாகவே முடியும். அதனால் உயர்வை முற்றும், பெற்றவனாகவும் முடியாது. ஆகையால் தனக்கென்று ஒரு உயர்வில்லை. நாம் பெற்ற உயர்வெல்லாம் எல்லாமாய் இருக்கிற ஒரு பெரும் பொரு ளினது அணுவளவுதான். ஆகையால் அத் தகு பெரும் பொருள் முன், நான் ஒரு பொருளாக ஆக முடியாது. அதனைப் பெற் றதனைப் பிறர்க்குப் பயன் படுத்தலே சாலச் சிறப்புடையதாகும், என்ற உண்மையறி வால் தன்னை மிக எளியனாக மதித்தும் தனக் கென ஒரு பொருளும் இன்றித் தன்மாட் டுள்ள, உடல் பொருளாவி மூன்றும், அச் செம்பொருளுடைமை என அறிந்தும் செயல்படுவானே, உயர்ந்தோருள் உயர்ந் தோன். அதே நேரத்தில் தொண்டருள் தொண்டன் திருத்தொண்டன் ஆகிறான்.

## அகிலாண்டநாயகி மாலை

நறையிலா மலரோ நயமிலா மொழியோ
நயனமில் லாதவன் முகமோ
பொறையிலாத் தவமோ மகவிலா மனையோ
புனலிலா வோடையோ நீதி
முறையிலா வரசோ மதியிலா விரவோ
மூடனேன் பத்தியில் பாடல்
கறையிலா வளமை மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (59)

குணமிலேன் மொழிபா நயமில தெனினுங்
குறித்ததை யேற்றருள் செய்ய
இணர்மலி குழானிற் கேதகுஞ் சிலம்பி
யியற்றுநூற் பந்தரு முவந்து
புணரருள் புரிந்தா னின்பதி யந்தப்
புராணநீ யோர்ந்தனை யன்றே
கணமலி முனிவர் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (60)

# இலக்கியம்

# திருமுறைச் சிறப்பு

திருமுறைக் கலைஞர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்

**தோற்றுவாய் :**

ஆதியும் அந்தமும் இல்லாத பரமபதி யாகிய சிவபெருமான் திருவருளைப்பெற்ற திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் ஈருக உள்ள இருபத்தேழு அருளாசிரியர்களால் அருளிச் செய்யப் பெற்றதும், வேதாந்தத் தெளிவாம் சைவசித் தாந்தத் திறனைத் தெரிவிப்பதுமான தேவாரம் முதல் திருத்தொண்டர்புராணம் இறுதியாக உள்ள திருப்பாடல்களே, ' திருமுறை ' எனப் பெயர் பெறும். இத்திரு முறைகளில் உள்ள திருப்பாடல்கள் தமிழ்த் தோத்திரப் பாடல்களுள் தலை சிறந்து விளங்குவனவாம்.

**திருமுறை என்பதன் பொருள் :**

திருமுறை என்பது திரு+முறை எனப் பிரிந்து நிற்கும். திரு - கண்டாரால் விரும் பப்படும்தன்மை நோக்கம் - அழகு என்பர் பேராசிரியர். இங்கும் தெய்வத்தன்மை. திரு என்ற சொல் உபசாரமாக உலகியல் செல்வங்களைக் குறித்தாலும் இங்கே அழியாத்தன்மையுடைய சிவபோகமாகிய மோட்சச் செல்வமாகும். " சென்றடையாத திருவுடையானை " (சம்பந்தர்—திருச்சிராப் பள்ளி) எனவும், " போகமும் திருவும் புணர்ப்பானை " (சுந்தரர்—திருவாரூர்) என வும் வருவன காண்க.

திரு என்பது திருக்கோயில். திருவாசல், திருவிளக்கு, திருவலகு, திருத்தொண்டு, திருநீறு எனப்பெரும்பாலும் தெய்வ சம்பந்தமான பொருள்களுக்கு அடை மொழியாக வழங்கப்பெறும்.

முறை என்பது பழமை, நெறி, முறைமை முதலிய பல பொருள் குறித்த ஒரு சொல். பழமை-பழமை யாகிய வேத சிவாகமங் களின் உட்கருத்தினை உடையது. நெறி- சிவத்தை அடையும் நெறி ; அதாவது வழி. முறைமை - கடவுளின் வடிவு, அவர் தன்மை, எழுந்தருளிய இடங்கள், வழிபடும் முறை, வழிபட்டவர் வரலாறு முதலிய வற்றை முறைப்படுத்தி (ஒழுங்குபடுத்தி)க் கூறுவது.

ஆகவே இறைவன் திருவருளால் சிவ போகமாகிய திருவினை அடைந்துய்ய அரு ளாளர்களால் வெளிவரப்பெற்ற சிறந்த மெய்ந்நூலே திருமுறை எனப்படும்.

முதன் முதலின், ' திருமுறை ' என்ற சொல் வழக்கைத் ' திருமுறை எழுதுவோர் ; வாசிப்போர் ' எனக் கணநாத நாயனர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் குறிப் பிடுகின்ருர். அதன் பின்னர் கல்வெட்டுக் களிலும் வழங்கலாயிற்று. திருஞானசம்பந் தர், ' திருநெறிய தமிழ் ' எனத் திருமுறை யினை உணர்த்துகின்ருர்.

சிறப்பு என்பது திருமுறையின் பெருமை யினை உணர்த்துவது.

**திருமுறையின் பகுப்பு :**

திருமுறை பன்னிரண்டு பகுப்புடையது. அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் 384 திருப்பதிகங்களாக 4,158 திருப்பாடல்களாக அமைந்தவை. இவற்றைத் திருஞான சம் பந்தர் பாடியருளினர். அடுத்துள்ள நான்கு ஐந்து, ஆறு திருமுறைகள் 312 திருப்பதிகங்களாக 3,066 திருப்பாடல்களாக அமைந்தவை. இவற்றைத் திருநாவுக்கரசர் பாடியருளினர். ஏழாம் திருமுறை 100 திருப்பதிகங்களாக 1,025 திருப்பாடல்களாக அமைந்துள்ளது. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளினர். எட்டாம் திரு முறை திருவாசகம், திருக்கோவையார் என இரண்டாக அமைந்துள்ளது. இவற்றுள் திருவாசகம் 51 பகுதிகளாகவும், 658 திருப் பாடல்களாகவும், திருக்கோவையார் 400 திருப்பாடல்களாகவும் கொண்டுள்ளவை.



வீரபத்திர மூர்த்தி
உற்சவர்



போதையார் பொற்கலத்து அடிசில்
பொல்லாதெனத் தாதையார் முனிவுற
ஆட்கொள்ளப் பெற்ற திருஞான
சம்பந்தப் பிள்ளையார் (உற்சவர்)



திருவாசகத் தேன் தந்த திருவாதவூரர்
உற்சவமூர்த்தி இடக்கையில்
இருப்பது திருவாசக ஏடு

இத்திருமுறையை மாணிக்கவாசகர் பாடியருளினர்.

இந்த முதல் எட்டுத் திருமுறைகளேயும் அருளிச் செய்த ஆசிரியர் நால்வரும் சமயாசாரியர் எனப் பெயர் பெறுவர்.

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரண்டு பிரிவாக அமைந்துள்ளது. அவற்றுள் திருவிசைப்பா 28 திருப்பதிகங்களாகவும் 288 திருப்பாடல்களாகவும் திருப்பல்லாண்டு ஒரு திருப்பதிகமாகவும் 13 திருப்பாடல்களாகவும் கொண்டு விளங்குபவை. இத்திருமுறையினேத் திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி, கண்டராதித்தர், வேணுட்டடிகள், திருவாலியமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் பாடியருளினர்கள். பத்தாம் திருமுறை திருமந்திரம் - தந்திரங்களாகவும், ஒவ்வொரு தந்திரமும் பல பிரிவுகளாகவும் $3047+61=3108$ திருப்பாடல்களாகவும் அமைந்துள்ளது. பொதுவாகத் திருமந்திரம் மூவாயிரம் என்பர். இத்திருமுறையைத் திருமூலர் திருவாய்மலர்ந்தருளினர். திருமந்திரம் திருமந்திரமாலே எனவும் பெயர் பெறும்.

பதினேராம் திருமுறை திருஏகாதச மாலே ஈருக 40 பிரபந்தங்களாக 1416 திருப்பாடல்களாக அமைந்துள்ளது. இதனே திருவாலவாயுடையார் (மதுரை-சொக்கலிங்கப் பெருமான்) காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர் கோன் நாயனர், சேரமான் பெருமாள் நாயனர், நக்கீர தேவ நாயனர், கல்லாட நாயனர், கபில தேவ நாயனர், பரணதேவ நாயனர் இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளேயார், நம்பியாண்டார் நம்பிகள் ஆகிய பன்னிருவர் பாடியருளினர்கள். பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) இரண்டு காண்டங்களாக அமைந்து 13 சருக்கங்களாக 4286 திருப்பாடல்களாக அமைந்து, 63 தனியடியார்களின் பெருமையினேயும் 9 தொகையடியார்களின் சிறப்பினேயும் உள்ளவாறு புகல்வது. இத்திருமுறையினேச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தவர் ஆவர்.

ஆகவே பன்னிரண்டு திருமுறைகளும் இருபத்தேழு அருளாசிரியர்களால் பாடியருளப் பெற்றவை ஆகும். நட்சத்திரம் இருபத்தேழு போலத் திருமுறை ஆசிரியர்களும் இருபத்தேழாக விளங்குகின்றன. 27 நட்சத்திரங்களும் மேஷம் முதலிய 12 இராசிகளுக்கும் (வீடுகளுக்கும்) உரியனபோல 27 அருளாசிரியர்களும், 12 திருமுறைகளுக்கும் உரியவர்களாகத் திகழ்கின்றனர்.

பன்னிரண்டு திருமுறைகளிலும் சுமார் பதினெண்ணுயிரத்திற்கு மேற்பட்ட திருப்பாடல்கள் உள்ளன.

### திருமுறை ஆசிரியர்களின் காலம் :

திருஞானசம்பந்தரும், கி. பி. 7-ஆம் நூற்ருண்டிலும், சுந்தரர், கி. பி. 8-ஆம் நூற்ருண்டின் இறுதியிலும் 9-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராவர். மாணிக்கவாசகர் கி. பி. 3-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது. ஆராய்ச்சியாளர் மாணிக்கவாசகர் சுந்தரர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பவர். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆசிரியர்கள் ஒன்பதின்மரும் சுமார் கி. பி. 9-ஆம் நூற்ருண்டு முதல் 11-ஆம் நூற்ருண்டு வரையுள்ள காலத்தில் வாழ்ந்தவர்கள். திருமூலரும், காரைக்காலம்மையாரும் வாழ்ந்த காலம் கி. பி. 5ஆம் நூற்ருண்டு என்று சொல்வர். பதினேராம் திருமுறையினே அருளிச் செய்த ஆசிரியர்கள் பன்னிருவரும் கி.பி. 2 ஆம் நூற்ருண்டு முதல் 10-ஆம் நூற்ருண்டு வரையில் உள்ளவர் ஆவர். சேக்கிழார் பெருமான் கி. பி. 12-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் ஆவர்.

### திருமுறை அமைப்பின் பெருமை :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிச் செய்த முதல் ஏழு திருமுறைகளும் சேர்ந்து தேவாரம் எனவும், அடங்கன்முறை எனவும் பெயர் பெறும். பண்கள் வரிசையாக அமைந்த தேவாரம் தலமுறை என்றும், பெயர் பெறும். மூவர் பாடிய திருப்பதிகங்

கள் யாவும் அடங்கியுள்ளதால் அஃது அடங்கன்முறை எனப்பெற்றது என்பர். அகத்தியர், சிவாலயமுனிவர் வேண்டு கோளின் பொருட்டுத் தேவாரப்பதிகங் களைத் திரட்டி 25 பதிகங்களாக அளித் ததை அகத்தியர் தேவாரத் திரட்டு என்றும், குட்டி அடங்கன்முறை என்றும் வழங்கப் பெறும்.

முதல் ஏழு திருமுறைகள், "நம, சுவாஹ; சுவதா, வௌஷம், வஷட், பட், ஹூம், (அல்லது ஹூம்பட்)" என்ற சட்டக் கோடி மகா மந்திரங்களுக்கு ஒப்பாகும். (கோடி-இறுதி மந்திரங்களின் இறுதியில் நிற்பது.)" கண்ட பெருமந்திரம் மூவர் பாடல்" என்பது திருமுறை கண்ட புராணம்.

மூவர் தேவாரத்தை முதலாம் இராசராச சோழன் (கி. பி. 985–1014) வேண்டு கோளின்படி திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் ஏழு திருமுறைகள் ஆக வகுத் தருளினுர்.

திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இவற்றை எட்டாம் திருமுறையாகவும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இவற்றை ஒன்பதாம் திருமுறையாகவும் திருமந்திர மாலை என்பதை பத்தாம் திருமுறையாகவும், திருமுகப் பாசுரம் முதல் திருநாவுக்கரசர் திருஏகாதசமாலை ஈருகியவற்றைப் பதினொராம் திருமுறை யாகவும் நம்பியாண்டார் நம்பிகளே வகுத் தருளியதாகக் கூறுவர். ஆனுல் சில ஆராய்ச்சியாளர் நம்பியாண்டார் நம்பிகள் காலத்திற்குப் பின் தோன்றிய மூதறிஞர் களால் அம்முறையில் 8, 9, 10, 11 திரு முறைகள் தொகுக்கப்பெற்றிருத்தல் வேண் டும்; இதுவே கால ஆராய்ச்சிக்கு ஒத்து நிற்கின்றது, என்று கூறுகின்றனர்.

முதல் பதினொரு திருமுறைகள், பஞ்சப் பிரம மந்திரம் ஐந்து ஷடங்கமந்திரம் ஆறு ஆகச் சங்கிதா மந்திரம் பதினொன்றுக்கு ஒப்பாகும்.

திருத்தொண்டர் புராணம் இரண்டாம் குலோத்துங்க சோழனுகிய அநபாயன் (கி. பி. 1133–1146) காலத்திலே பன் னிரண்டாம் திருமுறையாக வகுக்கப் பெற்றது.

முதல் பன்னிரண்டு திருமுறைகள், சங்கிதாமந்திரம் பதினொன்றும் வித்தியா தேகமந்திரம் ஒன்றும் சேர்ந்து நின்ற பன்னிரண்டு சிவமந்திரங்களுக்கு ஒப் பாகும். அன்றியும் புறவிருளைப் போக்கிப் பொருளைக் காட்டும் பன்னிரு சூரியர்போல அகஇருளை (அஞ்ஞானத்தை) அகற்றி உண்மை ஞானத்தை உணர்த்தத் துணை புரியும் திருமுறையும் பன்னிரண்டு வகை யாக அமைந்துள்ளது என்றும் கூறலாம்.

தேவாரத்தின் பொருளும் வேறு பெயர் களும் :

தேவாரம் என்பதை, தேவ+ஆரம்= தேவாரம் எனவும் பிரித்து தேவ–கடவுளுக் குரிய, ஆரம்–பூமாலை போன்ற பாமாலை என்றும், தே–தெய்வத்தின் பால், வாரம்– அன்பு. அதாவது ஓதுவோர் கேட்பவர் களுக்குப் பேரன்பை பக்தியை உண்டு பண்ணுவது என்பதாம். 'வாரம் பாடும் தோரிய மடந்தை' என்பது சிலப்பதிகாரம். வாரம் இசைப் பாட்டுமாம். வாரம் பாடுதல் இசைப் பாடல்களால் கடவுளைத் துதித்து வழிபடல் என்பது. ஆகவே தேவாரம் தெய்வ சம்பந்தமான இசைப்பாட்டு என்ற பொருளிலும் நிற்றலை அறிக.

முற்காலத்தில் பண்ணோடு கடவுளை வாழ்த் தும் இசைப் பாடல் தேவபாணி என்றும், பிற்காலத்தில் பண்ணோடு கடவுளைத் துதிக் கும் இசைப்பாடல் தேவாரம் என்றும் வழங் கினர் என்பர். (பாணி–பண்ணோடு கூடிய இசைப்பாட்டு)

அவிரோதவுந்தியார் என்ற நூலுக்குத் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் எழுதிய விருத்தியுரையில் உதாரணம் கூறும்போது, சம்பந்தர் பாடிய திருமுறைகளைத் திருக் கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் பாடிய திருமுறைகளைத் தேவாரம் என் றும், சுந்தரர் பாடிய திருமுறையினைத் திருப்பாட்டு என்றும் கூறுகின்றுர். ஆனுல் தற்பொழுது மூவர் பாடல்களும் தேவாரம் என்றே வழங்குகிறது. கல்வெட்டுக்கள்

தேவாரத்தைத் திருப்பதியம் என்று கூறு கின்றன.

தேவாரம் முதலிய திருமுறைகள் இறைவ னின் பொருள் சேர் புகழைத் தோத்திரவடிவ மாகக் கொண்டவை ஆகும்.

### திருமுறைகள் தமிழ் வேதம் :

சிவபெருமான் உலகுய்ய அருளிய வட மொழி வேதம் எழுதாமறை என்பது போலத் திருஞானசம்பந்தர் முதலிய அருளாசிரியர் கள் பாடியருளிய திருமுறைகளும் தமிழ் வேதம் ஆகும்.

'தமிழ்வேதம் பாடினர் தாளம் பெற்ருர்'

திருஞானசம்பந்தர் புராணம் 260.

'வேதம் தமிழால் விரித்தார்'

திருஞானசம்பந்தர் புராணம் 289.

திருமுறைகள் முதலிலும் ஈற்றிலும் பிரணவ ஒலியுடைய வடமொழி வேதம் போல விளங்குவன. தமிழ் வேதமாகிய முதல் திருமுறையின் முதற் பாவின் முதல் "தோடுடைய செவியன்" என்பது. அதனுள் முதலெழுத்து 'த்' என்ற மெய் யெழுத்தின் மேல் பிரணவத்தின் (ஓங் காரத்தின்) முதலெழுத்து ஓ என்ற எழுத்து வந்துள்ளது. 'பன்னிரண்டாம் திருமுறை யாகிய திருத்தொண்டர் புராணத்தின் இறுதிப்பாவின் இறுதி 'உலகெல்லாம்' என்பது. அதனுள் இறுதி எழுத்து 'ம்' என்ற எழுத்து வந்துள்ளது. ஆகவே திரு முறை முதலிலும் இறுதியிலும் 'ஓம்' என்ற பிரணவத்தைப் பெற்றுத் திகழ்கின்றது.

வேதங்கள் இறைவனைக் காணமுடியாமல் இன்னும் ஓலமிடுகின்றன. தமிழ் வேத மாகிய திருமுறைகளோ இறைவனைக் கண்டேன் எனக் கூறுகின்றன.

"தேடிக் கண்டு கொண்டேன்–திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக்கண்டு கொண்டேன்"

என்பது நான்காம் திருமுறை.

வடமொழி வேதமும் தமிழ் வேதமாகிய திருமுறைகளும் ஒரு பொருளையே குறிப் பனவாம்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்–கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் (று) உணர்"

என்பது ஔவையார் அமுதமொழி.

### திருமுறைகள் சிவபெருமான் திரு வாக்கே :

பேயினுல் பீடிக்கப்பட்டவன் வாய்ச் சொற்கள் எல்லாம் அவன் சொற்கள் ஆகாமல் பேயின் சொற்களே ஆவன போலச் சிவபெருமானுல் அருளப்பெற்ற திருஞானசம்பந்தர் முதலாயினேர் வாய்ச் சொற்களாகிய திருமுறைகளெல்லாம் சிவ பெருமான் திருவாக்கே அன்றி அவர்கள் வாக்கு ஆகாவாம்.

திருஞானசம்பந்தர் முதலாயினேர் பசு கரணம் நீங்கிச் சிவகரணம் உற்றவர்கள், ஆகையால் அவர்கள் வாக்கு சிவபெரு மான் திருவாக்கே ஆகும். இதனை,

"...எனதுரை தனதுரையாக நீறணிந்(து)
ஏறுகந்(து) ஏறிய நிமலன்"

எனவரும்சம்பந்தர்-இலம்பையங்கோட்டூர்ப் பதிக அடியால் அறியலாம்.

சிவபெருமானே 'சுந்தரருக்குப் பித்தா' எனவும் 'தில்லைவாழ்ந்தணர் தம் அடியார்க் கும் அடியேன்' எனவும், சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்' எனவும் அடி யெடுத்துக் கொடுத்த சிறப்புடையது திருமுறை. பதினேராம் திருமுறையிலுள்ள திருமுகப்பாசுரம் சிவபெருமானே அருளிச் செய்தது.

### சிவபெருமான் திருமுறையிடத்து மிக விருப்புடையவர் :

ஒரு காமுகன் தன்வாய்ச் சொல்லினும் தன்னல் விரும்பப்பட்ட இளம் பாவை போல்வாளின் வாய்ச் சொல்லிலே மிக விருப்புடையவனய் மகிழ்வன். அதுபோலச் சிவபெருமானும் தன்வாய்ச் சொல்லாகிய வேத சிவாகமங்களினும் தம்மால் விரும்பப் பட்ட அடியவர்களின் வாய்ச் சொல்லாகிய தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதக் கேட்டலிலே மிக விருப்பம் உடையவர்.

" பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை "

5-ஆம் திருமுறை—திருக்கடம்பந்துறை.

" பண்ணிற் பாடல்கள் பத்தி செய்வித்ததர்க்(கு)
அண்ணித் தாகும் அமுதினை "

5-ஆம் திருமுறை—திருஆமாத்தூர்.

" நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்(கு)
அரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை "

7-ஆம் திருமுறை—திருவலிவலம்.

" ...நான்மறை யோர்க்கிட மாய திருமிழலை,
இருந்து நீர்தமி ழோடிசை கேட்கும்
இச்சையாற் காசு நித்தல் நல்கினீர் "

7-ஆம் திருமுறை—திருவீழிமிழலை.

**திருமுறை ஓதுதல் ஞானபூசை :**

சிவபெருமான் விருப்பு வெறுப்பு இல்லாத முதல்வன். ஆயினும் அவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் செய்யும் பூசையில் மிகவிருப்புடையவன் :

" ...விருப் பொன்(று) இல்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை
புரிந்து கொள்..."

என்பது சிவஞான சித்தியார்.

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறையினை "புனற் காழிச் சம்பந்தன், தன்மாலை ஞானத் தமிழ்" என்று கூறுவதால் திருமுறைகள் ஞானநூல் ஆகும்.

ஞானநூலாகிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டினையும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுதலும், பிறரை ஓதும் படி செய்தலும், பிறர் ஓதத்தாம் கேட்டலும், பிறரைக் கேட்கும்படிச் செய்தலும், கேட்டவற்றை இடைவிடாது சிந்தித்தலும் ஆகிய இவ்வைந்தும் இறைவன் திருவடியை அடைவிக்கும் ஞானபூசை ஆகும்.

திருவடிப் பேற்றிற்குச் சிறந்த சாதனம் சிவஞானம். அது திருமுறை ஓதுதல் முதலியவற்றுல் உண்டாகும்.

" திருஞானசம்பந் தனசெந் தமிழ்கள்
உருஞான முண்டாம் உணர்ந்தார் தமக்கே "

—2-ஆம் திருமுறை—திருஅழுந்தூர்.

திருமுறை ஓதின் சிவஞானம் உண்டாம் என்பதை அறிந்த சைவப்பெரியோர்கள் சிலர் நாடோறும் பன்னிரு திருமுறைகளையும் விதிப்படி பூசித்து ஓதிவருகின்றனர். அவர்கள் நாடோறும் வரிசையாகத் திருமுறையினை இயன்றவாறு ஓதிக்கொண்டு வந்து ஒரு ஆண்டுக்குள் பன்னிரு திருமுறை முழுவதும் ஓதி முடிக்கின்றனர் என்பது அறிந்த செய்தி ஆகும்.

திருமுறைகளைப் பண்ணோடாவது அல்லது சுத்தாங்கமாவது பிழையின்றி ஓதுபவர் மேலோர் ஆவர். அவரை எவ்விதமான பாவமும் பற்றி நிற்காது. அதனல் அப்புனிதரை ஈசன் என்றே கருதி வழிபடுதல் முறையாம்.

" பண்கொளப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே "

—2-ஆம் திருமுறை—திருக்கோழம்பம்.

" பண்ணுரப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே "

—2-ஆம் திருமுறை—திருமணஞ்சேரி.

" இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில்
ஈசனெனும் இயல்பினோரே "

—1-ஆம் திருமுறை—திருவீழிமிழலை.

திருமுறைகளை ஓதுகின்றவர் ஒருவராகவே இருந்தும் ஓதலாம்; அல்லது பலர் சேர்ந்து நின்றும் ஓதலாம்.

" ...காழி ஞானசம் பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்க ளாகிலும் உரைசெய்வார்
உயர்ந்தார்களே "

—3-ஆம் திருமுறை—திருக்கண்டியூர்.

திருவிழாவில் இறைவன் திருவீதிகளில் வலம் வரும் போது ஓதுவார்கள் பின்சென்று தேவாரம் திருமுறைகளை ஓதிக்கொண்டு வருவார்கள். உடன் செல்லும் அன்பர்கள் தேவாரம் முதலிய திருப்பாடல்களிடத்துக் கொண்ட பெருவிருப்பாகிய பக்தியினல் தன்னை மறந்து மயங்கி நின்று கேட்டு மகிழ்வர்.

" விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்த போது "

3-ஆம் திருமுறை—திருப்பூவணம்.

இதனல் மக்கள் திருமுறையினிடத்துக் கொண்டுள்ள பக்தி நன்கு விளங்கும்.

**திருமுறை ஓதுதலின் பயன் :**

உணவு உடலை வளர்ப்பது போல உயிரை ஆன்மஞான உணர்வைத் திருமுறைப்

பாடல்கள் வளர்க்க வல்லன. அவற்றை இடைவிடாது ஓதுபவரின் பிணி நீங்கும்; அவர் பக்தராக விளங்கி முக்தி பெறுவர்;

" ஒழித்திடும் பவப்பகை விரைந்து உள்ளமே!
ஓதமுமுணர்வோர் முற்பழிச்சு பாடலே "

—வைராக்கிய சதகம்.

" பாரூரும் பரவித் தொழவல்லார் பத்தராய்
முத்திதாம் பெறுவரே "

7-ஆம் திருமுறை—திருநீடூர்.

திருமுறை ஓதுதல், கேட்டல் முதலிய வற்றால் சிவபோகம் விளைய வல்லதாயினும் இம்மையில் பொருட்செல்வம் கல்வி, வீரம், புகழ், நிலம், அடிமை முதலியவற்றை அளிக்கவல்லது. எல்லாராலும் போற்றும் பெருமையும் கொடுக்க வல்லது.

" ...சிரபுர நகரிறை தமிழ்விரகனதுரை ஒருபதும்
மனமகிழ் வொடுபயில் பவர் எழில் "

—மலர்கள் கலைமகள் சயமகள்.

" இனமலி புகழ்மகள் இசைதர
இருநில னிடை இனிது அமர்வரே "

1-ஆம் திருமுறை—திருவீழிமிழலை.

" ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித் திசை கற்றுவல் லார் சொலக்
கேட்டுகந் தவர்தமை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும்
வருத்தம்வந்து அடையாவே "

2-ஆம் திருமுறை—திருவலஞ்சுழி.

திருமுறை, வேண்டுவார் வேண்டியதைத் தரவல்லதோடு இல்வாழ்க்கை அளிக்கும், இடர்களையும், வினை தீர்க்கும், விஷசுரம் போக்கும், விஷம் போக்கும், உடல் நோய் நீக்கும், கோள்கள் நீக்கும் திருப்பதிகங்களை அறிந்து நாடோறும்பாராயணம் செய்யின் பெரும்பயன் பெறுவர்.

முடிவுரை :

நற்புண்ணியப் பேற்றால் சைவ நன் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் நாடோறும் திருமுறையினை ஓதி நற்பயன் பெறுதலும் சைவசித்தாந்த நுட்பங்களைக் கண்டுணர்ந்து ஆன்மஞானம் பெறுதலும் கடமையாகும்.

" ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசை பண்ணாய்;
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்;—சீ சீ
சினமே தவிராய்; திருமுறைகள் ஓதாய்;
மனமே! உனக்கென்ன வாய் "

சிவபோகசாரம்.

## அகிலாண்டநாயகி மாலை

பொறையரு ளடக்க மன்புப சாரம்
பொலியுமா சாரநல் வாய்மை
அறைதரு மின்ன குறையுளே னெனினு
மடிமையே நினக்கியா னுறுப்புக்
குறையுடை யாரு மக்களென் றெடுத்துக்
கூறுவ ருலகர்நீ யுணர்வாய்
கறையற விளங்கு மருட்டிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (62)

# திருவானைக்காவும் திருஞானசம்பந்தரும்

ஆ. மு. பரமசிவானந்தம்

இளமையிலேயே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர் ஞானசம்பந்தர். தன் கள்ளங்கொள்ளாப் பிள்ளை உள்ளத்திலே இறைவனைக் கண்டு கண்டு கசிந்து அன்பால் உருகிப் பாடிய பதிகங்கள் பல. ஊர் தோறும் சென்று உற்ற பெருந் தலைவனும் ஞானக்கொழுந்தை நாவாரப் பாடிய அந் நல்லவர்தம் பாடல்கள் அனைத்தும் இன்று கிடைக்கப் பெறவில்லையாகினும் கிடைத்த வற்றுள் அதிக எண்களைப் பெற்று நிற்பவை இவர் பாடல்கள். ஞானசம்பந்தர் தமிழ் விரகர்—முத்தமிழ்வல்லவர். எனவே ஊர் தோறும் இவர் பாடிய தமிழ்ப் பாடல்கள் மறை முழக்கமாகிச் சிறக்கின்றன. இப் பண்பாளர்தம் பாடலைப் பாடிப் பயன் பெற்றார் பலர்; பெறுகின்றார் பலர்.

ஞானசம்பந்தர் நல்வாழ்வை ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களால் அப்படியே நம் கண்முன் நிறுத்துகிறார் தெய்வச் சேக்கிழார். ஞானசம்பந்தர் அந்த இளமைக் காலத்திலேயே தந்தைதன் தோளில் அமர்ந்தும், பின் இறைவன் தந்த முத்துச் சிவிகையில் இருந்தும் ஊர்தோறும் சென்று இறைவனை வழிபட்டார். இன்னும் தமிழ்ப் பாடலுக்கு இரங்கும் இறைவனும் ஆங்காங்கே இவருக்கு வேண்டியவற்றையும் கேட்டவற்றையும் கரவாது அளித்துத் 'தொண்டர் வாழ்வின் திறத்தினை' உலகுக்கு விளக்கினர். இத்தகைய சம்பந்தர் கண்ட இடங்கள் பல. அவற்றுள் ஒன்று முக்கியமானது திரு ஆனைக்கா ஆகும்.

காவிரியின் வடகரையில் திருவரங்கத்துக்குக் கீழ்த்திசையில் அழகார் காவிரியுள்ள ஊர் ஆனைக்கா. இருபுறமும் ஆறுகள் அழகுறச் செல்ல, அருஞ் சோலைகளுக் கிடையில் அமைந்த இந்த ஊரினைக் கண்டார், இன்றும் தம்மையே மறந்து நிற்பதனைக் காண்கின்றோம். ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் இன்னும் வளமார்ந்து இயற்கை நலத்தோடு இவ்வூர் சிறந்து விளங்கியிருக்குமன்றோ! ஆம்! இளங் குழந்தையாகி இயற்கை நலம்பாடும் பண்பு வாய்ந்த ஞானசம்பந்தர் உள்ளத்தை இவ்வியற்கைச் சூழல் தொட்டிருக்காதோ! இவர் இத்தலம் பற்றிப் பலமுறை கேள்விப் பட்டிருப்பார் போலும். 'எப்படியாயினும்' இத்தலத்தைக் காணவேண்டும் என்று எண்ணி இருப்பார். அவ்விருப்பம் நாள் தோறும் மிக்கிழுக்க ஒருநாள் இத்தலத்தை வந்தடைந்தார். அவர் விருப்பின் நிலையையும் ஆனைக்கா அடைந்த வகையினையும்,

> 'மையார் கண்டர்தம் ஆனைக்காவை
> வணங்கும் விருப்போடு வந்தணைந்தார்' (344)

என்று சேக்கிழார் அழகுற எடுத்துக் காட்டுகின்றார்.

திருவானைக்காவில் சாதாரண மக்கள் மட்டுமின்றி மன்னவரும்—சிறப்பாகக் கோச் செங்கண்ணனும் வழிபாடியற்றிப் பயன் பெற்றுள்ளனர். மற்றும் ஆனை பணிந்து அருள்பெற்ற இடமும் இதுவாகும். ஞான சம்பந்தர் ஆனைக்கா அண்ணல் முன் நின்ற அதே வேளையில் இந்தக் காட்சிகள் எல்லாம் அவர் கண்முன் நிழல்பட்டன. இனிய பண் தோற்றிற்று. இதை எண்ணிய சேக்கிழார்,

> 'விண்ணவர் போற்றிசெய் ஆனைக்காவில்
> வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை

நண்ணி இறைஞ்சி முன்வீழ்ந்தெழுந்து
நாற் கோட்டு நாகம் பணிந்ததும்
அண்ணல் கோச்செங்கண்ணன் அரசன் செய்த
அடிமையும் அச்சொற் றெடையில் வைத்து
பண்ணுறு செந்தமிழ் மாலைபாடிப்
பரவினின் றேத்தினர் பான்மையினால். (345)

என்கின்றார். இறைவனை மெய்ப்பொருள் என்கின்றார். இதில் குறிக்கப் பெறும் 'கோச்செங்கணான்' கடைச்சங்க காலத்தை அடுத்த இருண்ட காலத்தில் வாழ்ந்தவனு வன். அவன் கட்டிய கோயில்கள் பல. வைணவ நல்லடியவரால்' எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபதுவேய்ந்தான்' எனப் பாராட்டப் பெற்றவன். ஆம்! அவனுடைய தொண்டே இன்றளவும் சைவ வைணவ சமயங்களை வாழ்விக்கிறது எனலாம். சேக்கிழார் உலகம் அறிய இவ்வுண்மையை உணர்த்துகிறார். சம்பந்தரும் இவ்வுண் மையைத் தம்பதிகத்தில் பாடுகிறார். இனி அவர்தம் பாடல் வழியே ஆனைக்காவைக் காண்போம்.

ஞானசம்பந்தர் ஆனைக்காவைப் பாடியன வாகக் கிடைக்கும் பதிகங்கள் மூன்றாகும். ஒரு பதிகம் இரண்டாந் திருமுறையிலும், இரண்டு பதிகங்கள் மூன்றாந் திருமுறை யிலும் உள்ளன இரண்டாம் திருமுறைப் பதிகம் அகப்பொருள் துறையில் அமைந்த தாகும். ஞானசம்பந்தர் இத்துறையில் அதிகமாகப் பாடவில்லையாயினும் தன்னை மறந்த உயர்நிலையில் இவ்வாறு பாடுவது இயற்கையாக அவரிடம் அமைந்துள்ளது. கிள்ளையைத் தூது விடுவதும் தன் உள்ளந் திறந்து காட்டுவதும் ஆகிய தலைவியின் வாக்காகச் சம்பந்தர் பாடியுள்ளாரன்றோ! உண்மையிலே தம்மை முற்றும் இறைவ னுக்கு ஒப்படைத்து உரிமையாக்கிய நிலை யிலே தன்னை மறந்து தன்னுமம் கெட்ட நிலையிலே—அடியவர் இறைவனை இந்த வகையில் பாடுவதுதான் மரபு என்பதைப் பல பாடல்களும் வரலாறுகளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எனவே ஆனைக் காவில் தன்னை மறந்து—தன்னை இறைவ னுக்கு ஒப்படைத்த ஞானசம்பந்தர்—அகப் பொருட் பாடலைப் பாடியது முறைதானே!

ஞானசம்பந்தரையும் அவருடன் நம்மை யும் ஆனைக்காவுக்கு அழைத்துச் சென்ற சேக்கிழார் முதலில் இறைவனுடைய தியாகக் கருணையினையே காட்டுகின்றனர். மெய்ச் சைவர் வாழவேண்டிய நெறியையும் இதன் வழியே வற்புறுத்துகின்றனர். 'தனக் கென வாழாப் பிறர்க்குரியாளரே' சைவர் என்பது மெய்வாக்கன்றோ. இறைவன் இவ்வுண்மையை உணர்த்தத்தான் போலும், தேவரும் பிறரும் வாடா வகையில்தான் நஞ்சினை உண்டு அதையும் கண்டத்தே வைத்து கறைமிடற்றண்ணலாகவே காட்சி யளிக்கின்றார். இத்தியாகத் தழும்பே சேக் கிழார் முன் நிழலாடுகின்றது. 'மையார் கண்டர்தம் ஆனைக்கா' என்கின்றார் அவர். ஞானசம்பந்தரும், 'மழை யார் மிடறு மழுவாளுடையாய்' என்று தன் அகப் பொருள் பதிகத்தைத் தொடங்குகின்றார்.

தன்னைத் தலைவன்பால் பறிகொடுத்த தலைவி எதை நினைக்கிறாள்? அவன் அழகை நினைப்பது தானே மரபு. ஆம்! சம்பந்தர் காட்டிய தலைவியும் அவன் அழகில் ஈடு பட்டதையே காண்கின்றோம். அவன் தன்மைகளைக் காட்டி, அவன் உண்மையின் தலைவன் என்பதையும் சுட்டி, வெண்ணாவல் விளக்கு, அத்தகைய அழகன் என்கின்றாள் தலைவி.

'மழையார் மிடரு மழுவா ளுடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழைவா ரும்வெண் ணு வலின் மேவியஎம்
**அழகா** எனும் ஆயிழையாள் அவளே'

என்பது அவர் வாக்கு.

இவ்வாறே இப்பதிகம் முழுதும் தலைவி அவனோடு பட்ட ஈடுபாட்டையும் அவர் பேசுவனவற்றையும் காட்டுகிறார் சம்பந்தர். காதல் வயத்தால் தம்மை மறந்த அந்தத் தலைவி. அக்காம இன்பத்தின் அடிப்படைக் காரணனாய மன்மதனை நீறுபடுத்தியவன் இறைவன் என்பதையும் ஓரடியில் உணர்த்து கிறார். அவனை நீறுக்கிய அவன்தன் காதலை முற்றுவிக்க முடியாதோ என்ற வினாவையும் உண்டாக்கி விடை கேட்கின் றாள். வெண்ணாவலில் விலங்காகிய யானைக்கு

அருள் செய்த ஆண்டவன் தன் வேண்டு கோளையும் ஏற்க மாட்டானோ என எண்ணு கிறாள். இவற்றை யெல்லாம் சம்பந்தர் உயிர்மேல் ஏற்றிக் காட்டுகின்றார்.

கறவைக் கொடி கொண்டவன் நீறதுவாய்
உறநெற்றி விழித்த எம் உத்தமனே
விறல்மிக்க கரிக் கருள் செய்தவனே
அறமிக்கது என்றும் என் ஆயிழையே.

என்ற பாட்டில் இறைவனை உரிமையால் தலைவி ' 'என் உத்தமன்' என்கின்றாள். அவன் அருள் செய்வதே அறம் என்பதை யும் சுட்டிக் காட்டுகின்றாள்.

இவ்வாறே இப்பதிகம் முழுதும் சம்பந்தர் செவிலித் தாயின் வாக்காகத் தலைவியின் தன்மையினையும் அரற்றலையும் காட்டுகின் றார். இதன் வழியே உயிர் எவ்வகையில் இறைவனை எண்ணிப் பற்றவேண்டும் என் பதையும் பற்றின் விளையும் பயன் எது என்பதையும் சம்பந்தர் சுட்டிக் காட்டுகின் றார் என்பதை உணரின் உய்தியுண்டு.

அடுத்துள்ள பதிகத்தில் இவ்வானைக் காவில் கோயில் கொண்டுள்ள அண்ணலைத் தம்மை மறந்து போற்றுவார் பயன் பெறுவர் என்பதைத் திட்டமாக விளக்கிக் காட்டுகின் றார். இருள்சேர் இருவினையும் சேராப் பெருவாழ்வை விரும்பும் நல்லுயிர்கள் வெண்ணாவல் வித்தகனைப் போற்றின் அன்றி உய்வில்லை என்பதை நன்கு சுட்டிக் காட்டுகின்றார்.

' வானைக் காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக் காவில் இன்மொழி தேவிபாக மாயினன்
ஆனைக் காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவோர்க்கு ஏதும் ஏதம்
இல்லையே '

என்று முதல் பாடலிலேயே சம்பந்தர் திட்ட வட்டமாக வற்புறுத்துகின்றார். அகிலாண்ட நாயகியோடு அருள்பாலிக்கும் ஆனைக் காவின் அண்ணல் திறனை இப்பதிகம் முழுதும் நன்கு காணலாம். இவர்தம் வாக்கைக் கேட்டும் கேளாதவராக யாராவது இருப்பார்களாயின் அவர்களை நேராகவே அழைத்துத் திரு ஆனைக்காவைச் சேருங் கள் என்று கட்டளை இடுகிறார் சம்பந்தர்,

' வெய்யபாவங் கைவிட வேண்டுவீர்கள் ; ஆண்டசீர்
மைகொள் கண்டன் வெய்யதீ மாலையாடு காதலான்
கொய்யவிண்ட நாண்மலர்க் கொன்றை துன்று
சென்னிஎம்
ஐயன் மேவு பொய்கைசூழ் ஆனைக்காவு
சேர்மினே '

என்பது அவர் வாக்கு.

நீர்த் தலமாகிய ஆனைக்காவில் நின்ற சம்பந்தர் உள்ளம் தமிழ்நாட்டு வடகோடி யில் உள்ள காற்றுத் தலமாகிய காளத்தி யைப் பற்றிற்றுப் போலும். ஆம்! அங்கும் ஆனை வழிபட்ட வரலாறு உண்டல்லவா! அந்தத் தலத்தை நினைக்கும் போது கண்ணப்பரும் சிவகோசரியாரும் முன் வந்தனர் போலும்.

' ஊனொடுண்டல் நன்றென ஊனொடுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினால் பேசநின்ற தன்மையான் '

என்று அவர் வாய் பாடுகின்றது. இவ் வாறே இப்பதிகத்தில் பல உண்மைகளை விளக்கி, பாடுவார். வினை தீர்க்கப் பெறு வார் என்ற உண்மையினையும் விளக்குகிறார் சம்பந்தர்.

இனி, அடுத்துள்ள பதிகம் கூட சதுக் கம் ஆகும். இதில் திருக்கயிலாயம், ஆனைக்கா, திருமயேந்திரம், திருவாரூர் ஆகிய நான்கு தலங்களும் பேசப் பெறு கின்றன. இப்பதிகம் முழுவதும் இறைவனை மாலும் அயனும் தேடிக் காணாத சிறப்பே பேசப்பெறுகின்றது. மேற்படி தலங்களை இப்பதிகத்தில் காட்டினாலும், அனைத்திடத் தும் தங்கி அருள் நலம் பாலிக்கும் இறை வன் தங்குமிடம் ஆனைக்காவே என வற்புறுத்துகின்றார் சம்பந்தர். இதிலும் ' கண்ணப்பர்க் கருள் செய்த கயிலை ' என்று கண்ணப்பர் புகழ்மையைப் பாடுகின்றார். இவ்வாறு யாண்டும் நீக்கமற நிறைந்த ஊர்தோறும் குடிகொண்ட அடியவர்களுக் கருளும் அண்ணலைச் சம்பந்தர் ஆனைக் காவில் கண்டு தம்மை மறந்து பாடுகிறார்.

நாமும் அவர் பாடலைப் பாடிப் பயன் பெறல் வேண்டும்.

இத்தகைய பெருந்தலத்தில் உள்ள கோச் செங்கணுன் ஆயிரத்து ஐநூறு ஆண்டு களுக்கு முன் கட்டிய திருக்கோயில் இன்று நல்லவர்களால் செப்பம் செய்யப் பெறு கின்றது. தெய்வநலம் சான்ற இத்திருக் கோயில்—வெண்ணுவல் அடியில் அமைந்து வளர்ந்தோங்கிய திருக்கோயில் இன்று புத்தொளி பெறுகின்றது. இறைவன் நீர்மையாளன் என்பதை என்றும் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் இத்தலம் இன்று செம்மை நலம் பெறுகின்றது. அகிலாண்ட நாயகி உலகுக்கு ஒரு தலைவி யோடு அமர்ந்த அண்ணலார் இத்திருக் கோயிலில் என்றென்றும் அமர்ந்து உயிர்கள் உய்யவழி காட்டுவார் என்பது உறுதி. இப் பெருஞ்செயல் போற்றும் குடமுழுக்கு விழா 5–7–70-ல் நடைபெறுவது நாட்டுக்கெல்லாம் நலம் விளைப்பதாகும். சிறப்பாக இந்நாள் குறித்து நான் என்னை மறக்கின்றேன். ஆம்! நான் பிறந்த நாள் அது. பிறந்த கிழமையும் அதுவே. எனவே என்னை மறக்காது இருக்க முடியுமோ!

என்னை மறந்த நிலையில் ஞானசம்பந்தர் வழியே இந்தச் சொன்மாலையை அம்மை யப்பர் அடியில் சார்த்தி அவரடி பரவு கின்றேன்.

## அகிலாண்டநாயகி மாலை

புண்ணிய வெள்ளை நாவலோ ரும்
பூண்டவ னெனும்பெயர் புனைந்தான்
தண்ணிய குணத்து நீயுமென் பாடல்
தழுவுபு பூணுவை யாயின்
அண்ணிய பாடல் பூண்டவ ளெனுமோர்
அரும்பெயர் நினக்குமுண் டாமே
கண்ணிய வரங்க டருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (64)

பிரம்படி பட்டுங் கல்லடி யேற்றும்
பிறைபொரு வில்லடி கொண்டும்
நிரம்புற வருள்வா னேங்குவெண் ணுவ
நிழலுறை பவனடி யார்பா
லுரம்பயி லவன்போ னீயவ்வா றேற்றின்
புதவுந லல்லண்மெல் லியனீ
கரம்பறு கழனி மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (66)

# அப்பர் அடிகளும் ஆனைக்கா அண்ணலும்

பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M.A.,
தமிழ்த்துறைத் தலைவர், W. G. C. பேராசிரியர், சென்னைக் கிறித்துவக் கல்லூரி

திருவானைக்காவுக்குத் திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் மூன்றும் திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் மூன்றும் சுந்தரர் திருப்பதிகம் ஒன்றும் ஆக மொத்தம் ஏழு திருப்பதிகங்கள் உள்ளன. திருவாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகப் பெருந்தகையார்,

"தென்ஆனைக் காவானைத்
தென்பாண்டி நாட்டானை
என்னானை யென்னப்பன்
என்பார்கட் கின்னமுதை
அன்னானை யம்மானைப்
பாடுதுங்காண் அம்மானாய்."[1]

என ஆனைக்கா அண்ணலைப் போற்றியுள்ளார். திருவானைக்கா திருக்குறுந் தொகையில் அப்பர் அடிகள் நமக்குப் பல அறவுரைகள் வழங்கியுள்ளார். அவர், யாக்கை நிலையாமையைத் தம் திருப்பாடல் மூலம் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். நமது உடல் ஒன்பது வாயில்களையுடைய வீடாகும். இந்த உடல் எப்போதாயினும் திடீரென அழிந்துபோகும். அப்போது இந்த உடலைச் சுற்றத்தார் சுடுகாட்டில் கொண்டு செல்வர். அங்குக் கழுகுகள் இந்த உடலைத் தின்னும். இந்த நிலை வருவதற்கு முன்பு நாம் இறைவன் திருவடிகளைத் தொழுது நமது கைகளால் தூய மலர்களைத் தூவி மனமுருகிப் பாடுவோமாகில் ஆனைக்கா அண்ணல் நமக்குத் திருவருள் பாலிப்பர். இதனை,

"ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலுங்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று
**அழும வர்க்கன்பன் ஆனைக்கா
அண்ணலே**"[2]

என்ற அப்பர் திருவாக்கு வலியுறுத்துதல் காண்க. "அழுமவர்க்கு அன்பன் ஆனைக்கா அண்ணலே" என்ற வரியால் இறைவனை மனமுருகிப் பாடினால்தான் அவன் திருவருளைப் பெறமுடியும் என்பது அறியக் கிடக்கின்றது. இதனையே அப்பர் அடிகள் மற்றோர் திருப்பாடலில்,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்"[3]

எனப் பாடியுள்ளார். இதே கருத்தினை மணிவாசகப் பெருந்தகையார்,

"யானே பொய்யென் னெஞ்சும்
பொய்யென் அன்பும்பொய்
ஆனால் வினையே னழுதா
லுன்னைப் பெறலாமே"[4]

எனப் பாடியுள்ளார். நாம் மனம் உருகி அழுதால்தான் இறைவன் திருவருளைப் பெறலாம் என்பதனைச் சுந்தரரும் தமது திருப்பாடலில் கூறியுள்ளது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

"செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
விரவிய சடைமுடி அடிகளை நினைந்திட்டு
அழுமலர்க் கண்ணிணை யடியவர்க் கல்லால்
அறிவரி தவன்திரு வடியிணை இரண்டும்"[5]

நாம் நாள்தோறும் மனமுருகி இறைவனை வழிபட்டால் இறைவன் நமக்கு இன்பம் பாலிப்பார் என்பதனைத் திருஞானசம்பந்தர்,

"வாராத நாடன் வருவார்தம் வில்லி
னுருமெல்கி நாளு முருகில்
ஆராத இன்ப னகலாத அன்ப
னருள்மேவி நின்ற அரனூர்"[6]

எனப் பாடியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

---

1. திருவாசகம் : திருவம்மானை–19.
2. திருவானைக்கா திருக்குறுந்தொகை–7.
3. தனித்திருக்குறுந்தொகை–9.
4. திருவாசகம் : திருச்சதகம்–90
5. சுந்தரர் தேவாரம்—திருக்கழுமலம்–10
6. திருஞானசம்பந்தர்—தென்திருமுல்லை வாயில்–3.

நமது திருத்தாண்டகத்தின் மூலமும் அப்பர் அடிகள் யாக்கை நிலையாமையினை நமக்கு நன்கு விளக்கியுள்ளார். நாம் இறக்கும் தருவாயில் தாய் தந்தை சுற்றத்தார் முதலியோர் நமக்கு உதவ இயலாது. செல்வமும் நிலையற்றது; அதுவும் நம்மோடு வராது. நாம் இறந்தவுடன் நம் உறவினர் நம் உடலைச் சுடுகாட்டில் வைத்துத் தீமூட்டிச் செல்வர். எனவே நாம் இறைவனை வாழ்த்தி அவன் திருவடியைப் பெறுவோமாகில் நமக்கு இப்பிறவியிலும் எப்பிறவியிலும் துன்பம் வாராது. இக்கருத்தினைக் கீழ்க்காணும் திருத்தாண்டகத்தில் காண்க.

"எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன்
என்செய் கேனே"[7]

"சித்தாய வேடத்தாய்" என்ற தொடரில் சித்து என்பது அறிவு. ஈண்டு அது சத்தியைக் குறிக்கும். இறைவனது வேடங்கள் எல்லாம் சத்தி வடிவமேயாதலால் "சித்தாய வேடத்தாய்" எனப் பாடினர். இதனை,

"மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவ மாகும்
மாய ஆணவ மகன்ற அறிவொடு தொழிலை ஆர்க்கும்
நாயகன் எல்லா ஞானத் தொழின்முத னண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்"[8]

என்று சிவஞான சித்தியார் விளக்குதல் காண்க. ஒருவன் இறக்கும் தருவாயில் உதவி செய்பவர் இறைவன் ஒருவனே என்பதையும், சுற்றத்தாரால் ஒன்றும் செய்ய இயலாது என்பதையும் திருநாவுக்கரசர்,

"உற்றார் ஆருளரோ—உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக் குற்றார்
ஆருளரோ"[9]

எனப் பாடியுள்ளார். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தாம் பாடியுள்ள க்ஷேத்திரத் திருவெண்பாவில் "மனமே! யாக்கை நிலையற்றது. நாம் இறக்கும்போது சுற்றத்தவர் நம் குணங்களைப் பாராட்டி வருந்துவர். அந்த நிலை வருவதற்குமுன் திருவானைக் காவிலுள்ள அண்ணலை நீ சென்று அடைவாயாக" எனக் கூறியதைக் கீழ்க்காணும் அவரது திருப்பாடல் விளக்குதல் காண்க.

"குழிஇருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழிஇருந்த அங்கங்கள் எல்லாம்—தழிஇருந்தும்
என்ஆனைக்கு ஆவா இதுதகா என்னாமுன்
தென்ஆனைக் கா அடைநீ சென்று"[10]

அப்பர் அடிகள் மற்றொரு திருவானைக்கா திருக்குறுந்தொகையில் நாம் இறைவனை நாள்தோறும் வஞ்சமின்றி வணங்க வேண்டும் என்றும், கொடிய சொற்கள் பேசாமல் இனிய சொற்களைப் பேச வேண்டும் என்றும், நாம் வீட்டின்பம் பெறுவதற்கு மனம் குளிர்ந்து மனம் உருகி இறைவனைப் பாடினால் ஆனைக்கா அண்ணல் அஞ்சல் என்று நமக்கு அருள் செய்வார் என்றும் பாடியுள்ளார். இதனை,

"வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே"[11]

என்ற திருப்பாடலால் அறிக.

இதுகாறும் கூறியவற்றால் நாம் யாக்கை நிலையாமை செல்வ நிலையாமை முதலிய நிலையாமைகளை உணர்ந்து யான் என்னும் அகப்பற்றினையும் எனது என்ற புறப்பற்றினையும் போக்கி இறைவனை மனத்தால் நினைத்து வாயால் மனமுருகிப் பாடி, காயத்தால் வணங்குவோமாகில் ஆனைக்கா அண்ணல் நமக்குத் திருவருள் பாலிப்பர். அதனால் நாம் வீடுபேறு அடையலாம் என்பது சுருக்கமாக விளக்கப்பட்டது. இதன் விரிவினைச் சைவசமய குரவர் பாடிய திருப்பாடல்களிலும், சந்தானாசாரியர் எழுதியுள்ள சாத்திரங்களிலும் கண்டு, கற்று இன்புறுக. இறைவன் திருவருள் கூட்டுவதாக.

7. திருவானைக்கா திருத்தாண்டகம்–1.
8. சிவஞான சித்தியார் சூ–1–41.
9. திருநாவுக்கரசர் : திருஅங்கமாலை—10.
10. 11ஆம் திருமுறை—ஐயடிகள் காடவர்கோன்.
11. திருவானைக்கா—திருக்குறுந்தொகை—5.

# திருவானைக்காவும் சுந்தரரும்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்

உலகில் பெரியது எது? என்று இறைவன் கேட்ட கேள்விக்கு ஔவை என்னும் அருந்தமிழ் மூதாட்டி தொண்டர் தம் பெருமையே உலகில் பெரியது என்று தொடுத்து முடித்த செய்யுளை உலகம் அறியும். தொண்டர் உள்ளமே இறைவற்குக் கோயிலென்றும், அத்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் தமக்கு எப்போது வாய்க்கும்? என்றும் அப்பர் உரைத்த செந்தமிழ்ச் செய்யுட்களை நாம் அறிவோம். தொண்டர்களை நடமாடும் கோயில்கள் என்று கூறுகின்றார் திருமூலர். இத்தகைய தொண்டர்களின் புகழ்பாடும் திருத்தொண்டத்தொகையை அருளிச் செய்யவே சுந்தரமூர்த்தி சுவாமிகளை மண்ணுலகிற் பிறக்குமாறு அருளிச் செய்தான் இறைவன் என்பார் சேக்கிழார்.

**தொண்டர்க்குத் தொண்டர் :**

திருவெண்ணெய் நல்லூரில் இறைவன் அற்புதப் பழ ஆவணங்காட்டி அடியவராய்ச் சுந்தரரைஆட்கொண்டு, 'அர்ச்சனைபாட்டே யாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று அருளாணையிட, சுந்தரர் தலங்கள் தோறும் சென்று திருப்பதிகங்களைப் பாடி இறைவனைப் பரவினர். திருவாரூரை யடைந்தார். திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தைக் கடந்து திருக்கோயிலுக்குட் செல்லும் சுந்தரர் அம்மண்டபத்தில் அடியவர் திருக்கூட்டம் உறைவதைக் கண்டு, இத்தொண்டர்க்குத் தொண்டராவதெப்போது என்ற சிந்தனையோடு திருக்கோயிலுக்குள் நுழைந்தார். பெருமான் "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்து தொண்டர்சீர் பரவுமாறு அருளாணையிட சைவசமயத்துக்கே மூல இலக்கியமாக விளங்கும் திருத்தொண்டத் தொகை பாடினர் சுந்தரர். அத்திருப்பதிகத்துள் அடியார் பெருமையை, அறுபான்மும்மை நாயன்மார்கள், தொகையடியார் ஒன்பதின்மர் ஆகியோர் புகழைப் பாடித் தனித்தனியே ஒவ்வொருவர் திருப்பெயர், ஊர், அவர் செய்த தொண்டு, பிற சிறப்புக்கள் இவைகளைச் சொல்லி அவ்வடியார்க்கு அடியேன் என்று கூறியருளிய சுந்தரர் திருப்பாட்டுக்கள் அடியவர்க்குள்ள தனிச் சிறப்புக்களை விளக்கும் அழகிய திருப்பதிகமாகும். இறைவனுக்குத் தொண்டு செய்வோர்க்குத் தான் அடியேன் என்று தொண்டர்க்குத் தொண்டர் என்ற சிறப்பைப் பெற்ற சுந்தரர் பொன்னிக்கரையின் இருமருங்கும் உள்ள தலங்களை வணங்கித் திருவானைக்காவை அடைந்தார்.

**எம்மையும் ஆளுடையார் :**

திருவானைக்காவுடைய பெருமானைப் பணிந்து தொழுத சுந்தரர் இறைவன்மேல் எழுந்த அன்புமிகுதியால் இறைவனுக்குத் தொண்டு படுபவரே எமக்கும் தலைவராவர் என்ற கருத்தமைந்த 'எம்மையும் ஆளுடையார்' என்ற தொடர் பாடல்தோறும் மகுடமாக வர 'மறைகளாயின' என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினர். அடியவரிடத்து அன்பில்லாதவர்கள் ஈசனிடத்தும் அன்பில்லாதவராவர், என்ற சிவஞான சித்தியார் பாடற்பொருளின் விளக்கமாக இத் திருப்பதிகம் விளங்குகிறது. இதனுனே இத் திருப்பதிகத்தை நிறையும் காதலுடன்

எடுத்த திருப்பதிகம் என்று அருளினர் சேக்கிழார்.

### அடியார் இயல்பு :

இத்திருப்பதிகத்தில் தம்மை ஆளாக உடைய அடியார்கள் சிவபெருமானே முழு முதல்வன் என்று அறிந்து அவனது அடி மலர் பணிகின்றவர்கள் என்றும், 'சிவனே எங்கள் ஈசன் என்பவர்கள்' என்றும், 'பொருந்தும் செயல் செய்வர்' என்றும், 'எந்தை என்று அவனடி சேர்பவர்' என்றும், 'இணைகொள் சேவடி சேர்பவர்' என்றும் 'நாடோறும் அவனை நினையுமாறு வல்லவர்' என்றும், 'அவனுக்கு ஈரமுள்ள நெஞ்சினராய் இருப்பவர்' என்றும், 'இரவிலும் பகலிலும் அவனைத் துதிப்பவர்' என்றும், 'அவனது இலங்கும் சேவடிகளை எண்ணுவர்' என்றும், அருளிச் செய்கிருர். இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் பிறவிகள் நீங்கப் பெற்றுத் தம்மையும் அடிமையாக உடையவராவர் என்றும் கூறுகிருர்.

### இறை இயல்பு :

ஆனைக்காவுடைய ஆதியாகிய முதல்வன் நான்கு வேதங்களாவும், மற்றுள்ள பொருள் களாகவும், பல சமயங்களாகவும், அவற்றில் புகழ்ந்து போற்றப்படும் கடவுளராகவும், பழமையின் பொருளாகவும், வீடுபேருகவும் உள்ளவன். திருப்பாற் கடலில் தோன்றிய நஞ்சினைத் தேவர்கள்வேண்டியபடி உண்ட ருளிய நீலகண்டன், ஆறு அங்கங்களை அருளிச் செய்தவன். கொன்றை மலர், கங்கை, பாம்பு, பிறை இவைகளைச் சூடியவன். கல்லால நிழலில் வீற்றிருப் பவன். தந்தையாய்த் தாயாய் விளங்கு பவன். உலகின் மெய்ப்பொருளாய் விளங்கு பவன். தவம் செய்வார்க்கு உறவினன். அன்பர்க்குத் தலைவன். நெருப்பு அம்பா கியும், பாம்பு நாணுகியும், மலைவில்லா கியும் நிற்க உலகம் உய்ய முப்புரங்களை எரித்தவன். பிறையைக் கண்ணியாகச் சூடியவன். விலைமதிப்பில்லாத அணிகலன் களை அணிந்த தூயவன். பண்போன்ற மொழியாலே பேசும் பார்வதி பாகத்தன். விடையேறி. சோழமன்னன் காவிரியில் தவறவிட்ட முத்தாரத்தை அவன் வேண்டு கோட்படி ஏற்றருளியவன். புலி மான் தோல் களை ஆடையாக உடையவன். பாம்பை உடலில் கட்டிக்கொண்டிருக்கும் பரமன். தன்னை வலம்வருவார்களின் வல்வினைகளா கிய நோய்க்கு மருந்து. காலனை உதைத் தவன். காமனைக் காய்ந்தவன். சக்கராயுதம் திருமாலுக்கு அருள் செய்தவன், என்று இறைவனது பல்வகை இயல்புகள் இத்திருப் பதிகத்துள் போற்றப்பட்டுள்ளன.

### முத்தாரம் அணிந்த வரலாறு :

இத்திருப்பதிகத்தில் சுந்தரர் திருவானைக் காவில் நிகழ்ந்த தலவரலாற்று அற்புத நிகழ்ச்சிகளில் ஒன்றைக் குறிப்பிட்டருளி யுள்ளார்.

சோழமன்னன் ஒருவன் ஆனைக்கா இறை வனிடம் பேரன்பு செலுத்தியவன். ஒருநாள் அம்மன்னன் முத்தாரமணிந்து கொண்டு காவிரியில் நீராடினன். நீராடும்போது கழுத்தில் அணிந்திருந்த மணியாரம் ஆற்றில் விழுந்துவிட்டது. அதையறிந்த மன்னன் மனம் வருந்தி, கரையேருது நீரில் நின்றபடியே ஆனைக்கா உடைய இறை வனின் அடிமலர்களைப் போற்றி 'இறை வனே எனது முத்துமாலையை ஏற்றுக் கொள்' என்று வேண்டிப் பணிந்து கரை யேறி, ஆனைக்காவிற்கு வந்து இறைவனை வழிபட்டான். அம்முத்தாரம் இறைவன் திருவருளால் காவிரித் திருமஞ்சனம் கொண்டு வருபவர் குடத்திற்குள் புகுந்து, நீராட்டும் போது இறைவன் கழுத்தில் மாலையாக விழுந்தது. அதைக்கண்ட மன் னன் இறைவன் திருவருளை அறிந்து வியந்து பரவினன். இவ்வரலாற்றைச் சுந்தரர்,

"தாரமாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்தும்
நீரில்நின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே
ஆரம்கொண்ட எம்ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே"

என்று இத்திருப்பதிகத்தில் பாடியுள்ளார். இத்திருப்பாடலிற் குறித்த வரலாற்றைச் சேக்கிழார்,

" வளவர் பெருமான் மணியாரம்
சாத்திக் கொண்டு வரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும்
வழுவிப் போகக் கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்துள்
அதுபுக் காட்ட அணிந்தருளித்
தளரும் அவனுக் கருள்புரிந்த
தன்மை சிறக்கச் சாற்றினர் ".

என அருளிச் செய்துள்ளார்.

**பதிகப்பயன் :**

இத்திருப்பதிகத்தைப் பாராயணம் செய்வோர், ஏழுவகைப்பட்ட அளவற்ற பல பிறவிகளையும் நீக்கப்பெறுவர் என்றும், எம்மையும் ஆளாக உடையவர் என்றும்,

" வாழவல்ல வன்றொண்டன் வண்டமிழ்
மாலை வல்லார்போய்
ஏழுமாபிறப் பற்று எம்மையும்
ஆளுடை யாரே ".

என அருளிச் செய்துள்ளார்.

**மகா கும்பாபிஷேக விழா :**

இத்தகைய சிறப்புக்களை உடையதும், பஞ்சபூதத்தலங்களில் ஒன்றாய் விளங்குவதும் ஆகிய இத்திருக்கோயில் தமிழ் நாட்டில் உள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. ஐந்து திருச்சுற்றுக்களை உடைய இத்திருக்கோயிலின் இராஜகோபுரங்கள், விமானங்கள், திருமதில்கள் முதலிய அனைத்தையும் பெரும்பொருட் செலவில் திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகம் நிகழ்த்துவது சிறந்த சிவபுண்ணியப் பணியாகும். இத்திருப்பணியில் ஈடுபட்டுள்ள அன்பர்கள் பலரும் ஆனைக்காவின் அண்ணல் அருளால் நலம்பல பெற்று நீடுவாழ்வார்களாக.

## அகிலாண்டநாயகி மாலை

தேவியோ டினிது வந்தருள் புரிந்தான்
சிவனடி யார்க்கென்ப தன்றி
ஆவிநேர் கொழுந னேடுவந் தாண்டா
ளம்மையென் பாரிலை யன்னே
மேவிய சீர்த்தி நினக்குரு விதமென்
விளம்பிட வேண்டுநா யேற்குக்
காவியார் தடஞ்சூழ் தருதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (68)

அடியவர் குறிப்போர்ந் தாண்பனை காய்க்க
வாற்றெதிர் செல்லவே டென்பின்
பொடிமட வரலா கக்கராம் விழுங்கும்
பொருடரச் செய்தனன் பரமன்
கொடியனேன் குறிப்போர்ந் துன்னடிக் கன்பு
கொளப்புரி வதுமுனக் கரிதோ
கடிமலர்த் தடங்கள் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (69)

# திருவானைக்காவும் அருணகிரிநாதரும்

கி. வா. ஜகந்நாதன்

முருகன் திருவருளால் அனுபூதி பெற்று ஆயிரக் கணக்கான திருப்புகழ்ப் பாடல்களையும், பிற நூல்களையும் திருவாய் மலர்ந்தருளியவர் அருணகிரிநாதப் பெருமான். தேவாரம் பாடிய மூவரைப் போல அப்பெருமானும் பல தலங்களுக்குச் சென்று முருகனைத் தரிசித்துப் பாடியவர். முருகப் பெருமான் தலைவனாக எழுந்தருளி யிருக்கும் ஆறுபடை வீடுகளையும் வேறு தலங்களையும் பாடியிருக்கிறார். அவற்றையன்றிச் சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும் பல தலங்களுக்கும் சென்று அங்கங்கே கோயில் கொண்டுள்ள முருகனையும் துதித்திருக்கிறார். இவ்வாறு அவர் பாடிய பாடல்களில் அவ்வத்தலங்களுக்குரிய சிறப்புக்களையும் அமைத்திருப்பார்.

பஞ்சபூதத் தலங்களில் அப்புத்தலமாக விளங்குவது திருவானைக்கா. அங்கே அருணகிரிநாதர் சென்று ஜம்புகேஸ்வரரையும் அகிலாண்ட நாயகியையும் முருகவேளையும் தரிசித்து இன்புற்றார். அப்போது அவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் பல. அவற்றில் இப்போது பதினான்கு பாடல்கள் மட்டும் கிடைக்கின்றன. அப் பாடல்களில் திருவானைக்காவிலுள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் பெருமைகளைக் குறிப்பிக்கிறார்.

கணநாதருள் ஒருவனாகிய புட்பதந்தன் என்பவன் ஆனையாகப் பிறந்து பூசித்ததால் இத்தலத்திற்குத் திருவானைக்கா என்ற பெயர் உண்டாயிற்று. மற்றொரு கணநாதனாகிய மாலியவான் என்பவன் சிலந்தியாகப் பிறந்து இங்கே இறைவன் திருவுருவுக்கு மேல் வலைபின்னி விதானம்போல அமைக்க, இறைவனைப் பூசித்த ஆனை அதை அழிக்க, சிலந்தி ஆனையின் துதிக்கையுட் புகுந்து கடிக்க ஆனை இறந்தது; துதிக்கையுட் புகுந்த சிலந்தி இறந்தபின்பு கோச்செங்கட் சோழனாகப் பிறந்து அரசாண்டதாகத் தல வரலாறு கூறும். இறந்த ஆனையை இறைவன் எழுப்பி மீண்டும் கணநாதனுக்கியதோடு ஊரின் பேர் ஆனைக்கா என்று வழங்கும்படி அருளினான். இதைத் திருவானைக்கா உலாச் சுருக்கமாகச் சொல்கிறது :

> " மிக்க களிறலறி வீழச் சிலந்தியுமங்
> கொக்க இறக்க உமைபாகர்—அக்கணமே
> வாரும் எனஎழுப்பி வாரணத்துக் கப்பொழுது
> சேரும் சிவலோகச் சீரருளி—ஊரின்பேர்
> ஆனைக்கா ஆக்கி அருள."
>
> (திருவானைக்கா உலா 49–51)

திருப்புகழில் திருவானைக்கா என்னும் தலப்பெயரை அருணகிரிநாதர் எடுத்து ஆளுகிறார்.

> " தென்திரு ஆனைக் காவுறை—பெருமாளே "
> " அழகிய ஆனைக் காவுறை—பெருமாளே "
> " ஆசைத் தோகை மார்கள் இசையுடன்
> ஆடிப் பாடி வருதிரு
> ஆனைக் காவில் மேவி யருளிய—பெருமாளே "
> " பொற்றிரு ஆனைக்காவி லப்பர்
> பிரியப்படு—பெருமாளே "

ஆனைக்கா என்பது மருவிக் காவை எனவும் வழங்கும். இந்த மரூஉ மொழியையும் அருணகிரிநாதர் திருப்புகழில் அமைத்துப் பாடியுள்ளார்.

பல தலங்களைத் தொகுத்துச் சொல்லும் போது திருவானைக்காவைக் 'காவை' என்று குறிப்பிடுகிறார்.

> " காவை மூதூர்அரு ணைக்கிரிதி
> ருத்தணியல்—செந்தில் நாகை "
> " கடற்கச் சாலைசி ராமலை
> காவைப் பொற் காழிவே ளூர்திகழ்
> கோடைக் கச் சூர் "

திருவானைக்காத் திருப்புகழிலும் இந்தப் பெயரை ஆன்றோர்,

> " மணத்த சோலை சூழ் காவை "
> " தமிழ்வேதச் சோதி வளர் காவைப்—பெருமாளே"

ஆனைக்காவின் பரியாயநாமங்கள் பல. அவற்றுள் கரிவனம் என்பதை,

> " கரிவனம் வாழ்சம்பு நாதர் நந்தருள் பெருமாளே "
> "கரிவனம் உறைஅகி லாண்ட நாயகி அருள்பாலா"

என்பவற்றிலும், கயப்பதி என்பதை,

" விய னலங் கயப்பதி வாழ்வான
தேவர்கள் தம்பிரானே "

என்பதிலும், அத்தியிற் கானம் என்பதை,

" கோவல் அத்தியிற் கானம் "

என்னும் இடத்திலும், கஜாரணியம் என்பதை,

" துங்க கஜாரணி யத்தில் உத்தம "

என்பதிலும் ஆள்கின்ருர்.

சிவபெருமான் சம்புமா முனிவர் வாயிலிருந்து முளைத்தெழுந்த நாவல் மரத்தடியில் எழுந்தருளியிருப்பதனுல் ஜம்புலிங்கம் என்னும் திருநாமம் ஏற்ருன். இத்தலம் ஜம்புகேஸ்வரம் என்னும் திருப்பெயரைப் பெற்றது. இந்தத் திருப்பெயரைப் பல தலங்களையும் தொகுத்துச் சொல்லும் திருப்புகழ் ஒன்றில் எடுத்துரைக்கிருர்.

" செம்பு கேசுரம் ஆடானை யின்புறு
செந்தில் ஏடகம் வாழ்சோலை யங்கிரி "

இந்தத் தலம் காவிரியின் கரையில் உள்ளது. அதோடு ஒன்பது தீர்த்தங்கள் இங்கே சிறப்பாக அமைந்துள்ளன. இந்தத் தீர்த்தங்களுள் அக்கினி திசையில் உள்ள தடாகத்தில் சம்பு முனிவர் புகுந்து ஆடினுர். அதனுல் அதற்குச் சம்புதீர்த்தம் என்ற பெயர் வந்தது. காவிரியாற்றையும் இந்தச் சம்பு தீர்த்தத்தையும் அருணகிரியார் பாடியிருக்கிருர்.

" மனித்த ராதி சோணுடு தழைக்க மேவு காவேரி
மகப்ர வாச பானீயம்—அலைமோதும்
மணத்த சோலை சூழ்காவை "

என்பதில் சோழநாடு தழைக்க மேவுகின்ற காவிரி வெள்ளத்தையும் அதன் நீர் அலையாக மோதும் சிறப்பையும் வருணிக்கிருர்.

" திரைக் காவிரிக்கே கரைக் கானகத்தே "

என்று மற்ருெரு பாடலில் காவிரி வருகிறது.

இத்தலத்தில் உள்ள மதில்களில் மூன்ருவது மதில் சுந்தரமாறனுல் கட்டப் பெற்றது. அதிலுள்ள கோபுரமும் அவன் கட்டியதே. அதையடுத்துச் சம்புதீர்த்தம் இருக்கிறது. அதன் கரையில் முருகப் பெருமானுடைய அழகிய திருவடிவம் இருக்கிறது. அந்த மூர்த்தியை ஒரு பாட்டில் பாடும்போது சுந்தரமாறன் மதிலையும் சம்புதடாகத்தையும் ஒருங்கு இணைத்துக் கூறுகிருர்.

" துங்க கஜாரணி யத்தில் உத்தம
சம்பு தடாகம டுத்த தக்ஷிண [பெருமாளே "
சுந்தரமாறன் மதிட் புறத்துறை

இந்தத் தலத்தில் மிகப் பெரிய திருமதிலாக இருப்பது திருநீறிட்டான் மதில். அது நான்காவது திருமதிலாக விளங்குகிறது. சிவபெருமான் சித்தராக எழுந்தருளி இந்த மதிலைக் கட்டுவித்தான் என்றும், அப்போது வேலை செய்தவர்களுக்குத் திருநீற்றையே கூலியாகக் கொடுத்தானென்றும், அந்த நீறு வீட்டுக்குச் சென்று பார்த்த போது அவரவர் செய்த வேலைக்குத் தக்க கூலிக்குரிய பொன்னுக இருந்ததென்றும் ஒரு வரலாறு வழங்குகிறது. அதனுல் அதற்குத் திருநீறிட்டான் மதில் என்ற பெயர் வந்ததாம். வரலாற்று ஆசிரியர்கள் திருநீறிட்டான் என்பது ஓர் அரசன் பெயர் என்றும், அவன் கட்டிய மதில் அதுவென்றும் கூறுவர். இந்த மதிலை அருணகிரிநாதர் ஒரு பாடலில் பாடியுள்ளார்.

" ஆழித் தேர்மறு கிற்பயில் மெய்த்திரு
நீறிட்டான் மதில் சுற்றிய பொற்றிரு
ஆனைக் காவினில் அப்பர்ப்ரியப்படு
பெருமாளே."

இங்கே அப்பர் என்று வருவது அப்பு வடிவாக இருந்து சிவலிங்கமான அப்புலிங்கத்தைக் குறிப்பிடுவதாகச் சொல்ல இடமுண்டு.

சம்புமுனிவர் வாயிலிருந்து தோன்றிய வெண்ணுவலே இந்தத் தலத்துக்குரிய விருட்சம். இந்த விருட்சத்தை,

" நம்பிரான் இனிது வைகி
நல்லருள் கொழியா நின்ற
அம்பொனு லயத்து மேலால்
அவர் மணித் தூவிப் பாங்கர்
உம்பர்வான் அளந்து நிற்கும்
உருகெழு நாவல் தாரு
செம்பொன்மால் வகையின் பாங்கர்ச்
சிவணிய நாவல் ஒக்கும் "

என்று திருவானைக்காப் புராணம் சிறப்பித்துக் கூறும்.

" ஏழிசைத்தமி ழிற்பயன் உற்றவெ
ணுவல் உற்றடி யிற்பயில் உத்தம [மாளே "
ஈசன் முக்கண் நிருத்தன் அளித்தருள் பெரு

என்பதிலும்,

"ஆலின் உதரமுள பைங்கரும்பு வெ
ணுவ லரசுமனே வஞ்சி தந்தருள் பெருமாளே"

என்பதிலும் இந்த விருட்சத்தை நினைப்பிக்கிருர் அருணகிரிநாதர்.

இத்தலத்தில் எழுந்தருளும் சிவபெருமானை மூவரும் தேவாரமாகிய தமிழ்வேதத்தாற் பாராட்டியிருக்கின்றனர். அதனுல் அப்பெருமானை; "தமிழ் வேதச் சோதி" என்கிருர். ஜம்புநாதர் என்பது அப்பெருமான் திருநாமங்களில் ஒன்று. இதனை,

"கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே"

என்ற இடத்தில் எடுத்தாள்கிருர்.

இங்கே சிவபெருமானுடைய சந்நிதிக்கு நேரே ஒரு பலகணி இருக்கிறது. பக்கவாட்டில் திருவாயில் இருக்கிறது. அந்தப் பலகணியில் ஒன்பது கண்கள் (துவாரங்கள்) உண்டு. அந்தச் சாளரத்தைத் திருச்சாலகம் என்று திருவானைக்கா உலாப் பாராட்டுகிறது.

"சேவிக்கும் எல்லேத் திருச்சா லகநவமும்"(57)

திருச்சாலகமாகிய சாளரத்தின் வழியே தரிசிக்கும் பெருமானுதலின் சம்புநாதரை அருணகிரியார், "திருச்சாலகச் சோதி" என்று போற்றுகிருர்.

"அருங்கூர் திருச்சாலகச் சோதி தம்பிரானே"

திருச்சாலகச் சோதியாகிய சிவபெருமானுக்குத் தம்பிரான், முருகன், இங்கே திருக்கோயில் கொண்டுள்ள அம்பிகையின் திருநாமம் அகிலாண்டேஸ்வரி. இது சத்தி பீடங்களில் ஒன்று.

"நாத வடிவி அகிலம் புரந்தவள்"
"கரிவனம் உறைஅகி லாண்ட
நாயகி அருள்பாலா"

என்பவற்றில் அம்பிகையின் திருநாமத்தைக் குறிப்பிடுகிருர்.

திருவானைக்காவும் சீரங்கமும் அடுத்தடுத்தே விளங்குபவை. காவிரியும், கொள்ளிடமும் சூழ்ந்த தீவினில் இந்த இரண்டு தலங்களும் இருக்கின்றன. ஆகவே, ஒரு திருப்புகழில் முதலில் சீரங்கநாதரைச் சொல்லி அவருக்கு மருகோனே என்றும், அடுத்து சம்புநாதரைச் சொல்லிவிட்டு அவருக்கு மைந்தனே என்றும் விளிக்கிருர்.

"கருதிய ஆறங்க வேள்வி அந்தணர்
அரிஹரி கோவிந்த கேச வென்றிரு [கோனே"
கழல்தொழு சீரங்க ராசன் அன்புறு மரு
கமலனும் அகண்ட லாதி யண்டரும்
எமது பிரானென்று தாள்வ ணங்கிய [மாளே"
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெரு

இந்தப் பாட்டில் இத்தலத்தில் பிரமதேவனும் இந்திரனும் பிற தேவர்களும் பூசித்துப் பேறு பெற்றதையும் சொல்லியிருக்கிருர். பிரமதேவன் ஆடிய பிரமதீர்த்தமும், இந்திரனுடிய இந்திர தீர்த்தமும் அவர்கள் இத்தலத்திற் பூசித்ததற்கு அறிகுறியாக விளங்குகின்றன.

"திரைக் கா விரிக்கே கரைக்கா னகத்தே
சிவத்யானம் உற்ருேர் சி லந்திநூல்செய்
திருக் கா வணத்தே இருப்பார்"

என்று சிவபெருமானைக் குறிப்பிக்கும்போது இவ்வரலாற்றை இணைத்திருக்கிருர்.

பொதுவாக இத்தலத்தின் சிறப்பைக் குறிக்கும் போது இது துங்கமான திருப்பதி என்றும், செந்தமிழிலே பாணரும் பாவலரும் யாழ்பாடி இறைவனை ஏத்தும் இடம் என்றும், மணம் மிக்க சோலேகளை உடைய தென்றும் பாடுவர். மூவர் இத்தலத்தைப் பாடின குறிப்பும், ஏழிசையாலும் தமிழ்ப் பாக்களைப் பாடி அதன் பயனுக இறைவன் திருவருளை அடியார்கள் பெற்றனர் என்ற கருத்தும், இத்தலம் இயற்கை யழகு நிரம்பியது என்ற செய்தியும், அன்புடைய மகளிர் ஆடியும் பாடியும் இறைவனை இறைஞ்சும் காட்சியும், தேர்விழா நடந்த சிறப்பும் ஆங்காங்கே வருகின்றன.

இவ்வாறு தலத்தின் சிறப்பையும் திருநாமங்களையும், திருமதில்களையும், தீர்த்தங்களையும், தலவிருட்சத்தையும், திருச்சாலகத்தையும், மூர்த்திகளையும் அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிப் பாடியிருக்கிருர். அவற்றிலிருந்து அப்பெருமான் இங்கே சிலநாள் தங்கி எல்லாவற்றையும் நுட்பமாகக் கண்டும் தலவரலாற்றைக் கேட்டும் அறிந்தார் என்பது புலனுகும்.

# திருவானைக்காப் புராணம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், தேவ கோட்டை.

அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து ஒடுக்கி ஆன்மாக் களுக்குப் பேரருள் புரிந்து வருகின்ற சிவ பெருமான், தம்மை வழிபாடு செய்து அவ் வான்மாக்கள் உய்தியடைய வேண்டுமென் னும் பெருங்கருணையால் இந்நிலவுலகில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக் கும் திருத்தலங்கள் எண்ணற்றனவாகும். சிவாலயப் பெருக்கத்தினுல் சிறப்புற்றுத் திகழுகின்ற நம்முடைய தென்னுட்டை "மாதவம் செய்த தென்திசை" என்று சேக்கிழார் பெருமான் பாராட்டிக் கூறுவார். நிலவுலகத்திலுள்ள எல்லாச் சமயத்தினரும் தத்தம் சமயக் கடவுளர்களாக வெவ்வேறு பெயர்கள் வைத்து அழைக்கப் பெறுகின்ற எல்லாத் தெய்வங்களும் சிவபெருமானது ஆணை வழி நிற்பனவே என்னும் குறிப் பைப் புலப்படுத்த மணிவாசகப் பெருந் தகையார், "தென்னுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று தமது திருவாசகப் போற்றித் திருவகவலில் அருளியுள்ளார்.

பொருட் பிரபஞ்சமாகிய திருக்கோயில் முதலியவற்றில் சிவபெருமானது அருள் வெளிப்பாடு நிகழுவது போலச் சொற் பிர பஞ்சமாகிய வேத சிவாகமங்களிலும் அவரது திருவருள் விளக்கம் நிகழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படை. இதனு லேயே நமது சைவ சம்பிரதாயம் திருக் கோயில்களோடு ஒப்ப வேத சிவாகமங்களை யும் தொன்று தொட்டு மதித்துப் போற்றி வருகிறது. சிவபெருமானது திருவாக்காகிய வேத சிவாகமங்களில் இல்லாத பொருள் எதுவுமில்லை. அவ் வேத சிவாகமங்களை முறைப்படி ஓதியுணர்ந்த மெய்ஞ்ஞானியர், ஞான நூற்கருத்துக்களைப் புலப்படுத்திக் கற்போரது பக்குவ நிலைக்குத் தக்க புடை நூல்களாகவும், சார்பு நூல்களாகவும் பல நூல்களை வழங்கியிருக்கின்ருர்கள். அங்ங னம் வந்த நூல்களில் புராணங்களும் ஒரு வகையினவாகும். இது "வேதாகம புராண இதிகாசங்கள்" என்று ஒன்ருேடு ஒன்றைத் தொடர்பு படுத்தி வழங்கும் சைவ மரபுச் சொற்ருெடரால் அறியப் பெறு கின்றது.

புராணங்கள் பதினெட்டு என்பது அனை வரும் அறிந்த ஒன்று. அவை முறையே சைவம், பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங் கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், விண்டு நாரதீயம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்கிநேயம், பிரம கைவர்த்தம் என்று சொல்லப்பெறும். இவற்றுள் சைவம் முதல் பிரமாண்டம் வரையுள்ள பத்தும் சிவ புராணங்கள். காருடம் முதல் பாகவதம் வரை உள்ள நான்கும் விண்டு புராணங்கள். பிரமமும், பதுமமும் பிரம புராணங்கள். ஆக்கிநேயம் அக்கினி புராணம் பிரம கை வர்த்தம் சூரிய புராணம் இவையன்றி உசனம், கபிலம், காளிசனற்குமாரம், சாம்பவம், சிவதர்மம், சௌரம், தூர்வாசம், நந்தி, நாரசிங்கம், பாராசாயம், பார்கவம், ஆங்கிரம், மாரிசம், மானவம், வாசிட்டம், இலயங்கம், வாருணம் என உபபுராணங் கள் பதினெட்டு உள்ளன.

சிவ புராணங்கள் பத்தும் இரண்டு லட்சத்து அறுபத்தெண்ணுயிரம் கிரந்தங் களையும், விண்டு புராணங்கள் நான்கும் ஐம்பத்தையாயிரம் கிரந்தங்களையும், பிரம புராணங்கள் இரண்டும் அறுபத்தையாயிரம் கிரந்தங்களையும் ஆக்கிநேயம் எண்ணுயிரம் கிரந்தங்களையும், பிரம கைவர்த்தம் பன்னீ ருயிரம் கிரந்தங்களையும் உடையன. இவை சர்க்கம், பிரதி சர்க்கம், மனுவந்தரம்,

வம்சம், வம்சானுசரிதம், ஸ்திதி, ரக்ஷணம், சமுஸ்தை, ஏது, ஆசிரயம் என்னும் பத்து இலக்கணங்களை உடையனவாய் முதலில் பிரம தேவனாலும், பின்னர் இருடியராலும், வியாச முனிவராலும் வகுத்துக் கூறப் பெற்றன.

சிவபெருமானது படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் அவரது பரத்துவ உண்மையையும் வலியுறுத்தி விரித்து அறிவிக்கும் சிறப்பினால் புராணங்கள் வேத சிவாகமங்களோடு ஒப்பத் தமது பிரமாண நூல்களாகத் தொன்று தொட்டு விளங்கிக் கொண்டிருக்கின்றன. சிவ புராணங்களைக் கேட்டலும், அவற்றை ஓதி உணர்ந்து, அவை கூறும் நெறியில் நின்று ஒழுகுதலும் சைவ சமயிகளாகிய நம்மனோரது கடமை களாகும்.

புராணப் படனத்தின் இன்றியமையா மையை எண்ணி நமது முன்னோர்கள் ஒவ்வொரு திருக்கோயிலிலும் நாள் தோறும் புராணப் படனம் நிகழுவதற்கு நிபந்தங்கள் ஏற்படுத்தியிருந்தார்கள் என்று பழைய வரலாறுகள் தெரிவிக் கின்றன. பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய பதும புராணத்துள் திருவானைக் காத் தலச்சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. வடமொழியிலுள்ள இப்புராணப் பகுதியைத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ கச்சியப்ப முனிவர் தமிழில் மொழி பெயர்த்து இனிய செய்யுள் வடிவில் வழங்கியுள்ளனர். தென்னாட்டிலுள்ள சிவத்தலங்கள் பல வற்றுள்ளும் சிறந்தன என்று பஞ்ச பூதத் தலங்களைப் பாராட்டிப் போற்றுவார். '' இரு நிலனாய்த் தீயாகி, நீருமாகி, இயமானனாய், எரியும் காற்றுமாகி அரு நிலைய திங்களாய்' ஞாயிறாகி, ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி ', விளங்கும் சிவபெருமான் தமது ஐம்பெரும் பூத நிறைவைக் காஞ்சிபுரம், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய திருத்தலங்களில் வெளிப்படுத்தி விளங்கிக் கொண்டிருக்கிறார். சித்தும் சடமுமாகிய எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிற அவர் இவ்வைந்து திருத்தலங்களிலும் நிலம், நீர், நெருப்பு காற்று வெளி ஆகிய பூதப் பொருள்களின் வடிவினராய் உயிர்களுக்கு உய்தியை வழங்குகிறார் என்று புராணங்கள் கூறு கின்றன.

காஞ்சிப் புராணம் மாதவச் சிவஞான முனிவராலும், கச்சியப்ப முனிவராலும், திருவானைக்காப் புராணம் கச்சியப்ப முனிவ ராலும், அருணாசலப் புராணம் சைவ எல்லப்ப நாவலராலும், திருக்காளத்திப் புராணம் ஆனந்தக் கூத்தராலும், சிவப் பிரகாச சுவாமிகள்—அவரது சகோதரர் இருவராலும், கோயிற் புராணம் உமாபதி சிவத்தாலும் செந்தமிழ்ச் செய்யுள் யாப்பில் இயற்றப் பெற்றுள்ளன.

திருவானைக்காப் புராணத்தைச் செந் தமிழ் ஆக்கி வழங்கிய கச்சியப்ப முனிவர் பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம் ஆகிய வேறு இரண்டு தல புராணங்களையும் ஆக்கி வழங்கியுள்ளார். திருத்தணிகையில் தொண்டைமண்டல வேளாளர் மரபில் அவதரித்த கச்சியப்ப முனிவர் திருவாவடு துறை ஆதீனத்தில் பதினொன்றாவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த பின், வேலப்ப தேசிக சுவாமிகளிடம் சைவ சந்நியாசமும் சிவ தீட்சையும் பெற்றவர். மாதவச் சிவஞான சுவாமிகளின் மாணவர் பன்னிருவருள் முதல்வர். செந்தமிழ்க் கடலையும், வடமொழிக் கடலையும் கரை கண்டு தங்குத் தடையின்றிச் செய்யுள் யாக்கும் திறம்படைத்து விளங்கியவர். மந்திர சித்தியும், சிவானுபவமும் மிகப் பெற்றவர். செந்தமிழ்ச் செய்யுட்களைச் சிவபெருமான்மீது பாடி வேண்டுவார்க்கு வேண்டிய பேறுகளை வழங்கியவர்.

சிவவாக்காகிய வேத சிவாகமங்களின் முடிந்த முடிபுகளை நமது புராண ஆசிரியர் பெரு நூலில் தெள்ளத் தெளிய அறிவுறுத்தி உள்ளார். சொற்பொருட்சுவை மலியப் புத்தம் புதிய கற்பனைகள் பலவற்றுடன் சிறந்து விளங்கும் திருவானைக்காப் புராணம் செந்தமிழ் இலக்கியங்களுள் சிறந்த ஒன்றா கும். இப் புராணத்தைச் சொற்பொழிவின் மூலம் முறையாகத் திருவானைக்காத் திருக் கோயிலில் சிந்தித்துச் சொல்லும் பேறு

நமக்கு வாய்த்தது. இப்புராணம் திரு நாட்டுச் சிறப்பு முதல் அமுதலிங்கேசர் அருள்முறை வரை பல படலங்களை உடையதாய் இருக்கின்றது.

முதற்கண் உள்ள காப்புப் பகுதியில் துதிப்பாடல்கள் உயர்ந்த நமது சமய உண்மைகளைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. நாட்டுச் சிறப்பில் இந்திரன் பணிய இருந்த தியாகேசப் பெருமான் சோழநாட்டைத் தேடி வந்து வீற்றிருக்கின்ற பெருமை குறிக்கப் பெறுகின்றது. நகரச் சிறப்பில் பொன்னியாற்றின் அகத்தில் திருவானைக்கா விளங்குவது போற்றப் பெறுகிறது. நைமிசப் படலம், திருவானைக்காச் சிறப்பைக் கேட்பதற்குப் பெருந்தவம் செய்திருக்க வேண்டும் என்று கூறுகின்றது. புராண வரலாற்றில் உமாதேவியாருக்கும், நந்தியம்பெருமானுக்கும் சிவபெருமான் திருவானைக்காத் தலச் சிறப்பை உபதேசித்தது உரைக்கப் பெறுகின்றது. சிறப்பில் இத்திருத் தலத்தில் பிறந்தவர் வாழ்ந்தவர், இறந்தவர் ஆகிய அனைவருக்கும் முத்தி சித்திப்பது பற்றியும், தீர்த்தச் சிறப்பில் தீர்த்தங்களில் விதிப்படி நீராடினோர் பெறும் நற்பேறுகள் பற்றியும், மூர்த்திச் சிறப்பில் அகிலாண்ட நாயகி தீம்புனலைத் திரட்டிச் சிவலிங்க வடிவாக்கிப் பூசித்த சம்புநாயகரின் அருள்நலம் பற்றியும் ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். சம்பு முனிவர் தவம் செய்து பேறுபெற்றதும், அகிலாண்ட நாயகி சிவாகம விதிப்படி பூசித்துப் பேறுபெற்றதும், அம்மையாருக்குச் சிவபெருமான் தமது யோகத்தின் உட்கிடையை உபதேசிக்கும் முகமாகச் சைவ சித்தாந்த தத்துவங்களை அறிவுறுத்தியதும் இந்தத் திருத்தலத்தில் தான் என்பதைப் புராணத்தின் முற்பகுதி அறிவிக்கின்றது.

திருவானைக்காத் திருக்கோயிலை எழுப்பி, நாள் விழா, திங்கள் விழா, ஆண்டுவிழா, பெருவிழா முதலியனவற்றைப் பிரமதேவன் செய்தான் என்பதும், இராமபிரான் இராவணனைக் கொன்ற பாதகம் நீங்க இத்தலத்திற்கு வந்து வழிபாடு செய்தான் என்பதும், பராசர முனிவருக்கு இங்கு வேண்டிய பேறுகளைச் சம்பு நாயகர் வழங்கினார் என்பதும், திருவரங்கத்தலத்தில் எழுந்தருளியுள்ள திருமால் சம்பு நாயகரை வழிபட்டே அன்றும் இன்றும் எல்லோராலும் போற்றப்பெறுபவராக இருக்கிறார் என்பதும் புராணத்திற்காணும் உண்மைகளாகும்.

சம்பு நாயகருக்கு அன்று சோழ மன்னன் எண்ணிய அவனது மனைவி கழுத்து முத்து மாலையைக் காவிரியாற்று நீர் கவர்ந்து செல்ல, அதனைச் சம்பு நாயகர் தமது திருமேனியில் விளங்கும்படி சோழ மன்னனுக்குக் காட்டிய வியப்புக்குரிய செய்தி இப்புராணத்தில் இடம் பெற்றுள்ளது. சம்பு நாயகருக்கு நாள்தோறும் பூசை செய்து வந்த யானை ஒன்று, அவருக்குத் திருப்பணி செய்ய எண்ணித் தன் வாய் நூலால் விதானம் அமைத்த சிலந்தியினிடம் அதன் அனுசிதம் கருதிப் பகைமை கொண்டு நூல் விதானத்தைச் சிதைக்க அதுபற்றி வருந்திய சிலந்தி யானையின் துதிக்கையுள் நுழைந்து கடித்துத் தானும் இறந்து, யானையையும் இறக்குமாறு செய்ய, யானைக்குச் சிவகணத் தலைமைப் பதவியை வழங்கிச் சிலந்திக்குச் சோழ மன்னனாகப் பிறக்கும் பேற்றைச் சம்பு நாயகர் தந்த உண்மை இதில் கூறப் பெறுகின்றது.

சோழ மன்னர் குடியில் கோச்செங்கட் சோழர் என்னும் பெயருடன் சிலந்தி பிறந்து சிறப்பாகத் திருவானைக்காவிலும், பொதுவாக மற்ற சிவத்தலங்களிலும் செய்த திருப்பணிகளைப் பற்றியும், கௌதம முனிவர் பூசித்துப் பெற்ற நற்பேறு பற்றியும், இராவணன் கவர்ந்து சென்ற புஷ்பக விமானத்தையும், மற்ற செல்வங்களையும் சம்பு நாயகரைப் பூசித்துக் குபேரன் மீளப் பெற்றுக்கொண்டமை பற்றியும், திருவானைக்காத் திருக்கோயிலில் திருநீற்று மதிலை சம்பு நாயகரே முன்நின்று திருப்பணி செய்வித்தமைபற்றியும், கோயில் பணி செய்வதில் குறையுடையவர்களாய் இருந்த ஆதிசைவ மரபினரைத் தண்டித்துத் திருக்கோயில் பூசைக்கு அந்தணோத்தமர்களை நியமித்தது பற்றியும் புராணத்தின் பிற்பகுதி அறிவிக்கின்றது.

இங்ஙனம் திருவானைக்காத் திருத்தலச் சிறப்பையும் பொன்னி நதி முதலாகிய தீர்த்தச் சிறப்பையும், சம்புநாயகர் அகிலாண்ட நாயகி ஆதிய மூர்த்திகளின் சிறப்பையும் தெளிவுற விளக்கிச் சைவர் பெருநூல்களுள் மேலானதாக விளங்குகின்ற திருவானைக்காப் புராணத்தை எல்லோரும் படித்துணர்ந்து இம்மை மறுமை நலங்களை எய்துவார்களாக.

# திருவானைக்காவும் காளமேகமும்

புலவர் கு. திருமேனி அவர்கள், எம்.ஏ., பி.ஓ.எல்.,
தமிழ்ப் பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சி.

உலகத்திலுள்ள புலவர் பெருமக்களை, கருவில் புலமைத் திருவைப் பெற்ருர் என்றும், முயன்று அத்திருவை ஈட்டினுர் என்றும், அருளால் அத்திருவிற்குரியார் என்றும் பலதிறப்படுத்துவர்.

காளமேகப் புலவர் இறுதியில் குறித்த அருளால் புலமைத் திருவைக் கைவரப் பெற்றவராவர். ஆழ்வார்களும் நாயன்மார் களும் எங்ஙனம் இறைவன் கோயில் கொண்ட தலங்கள் தோறும் சென்று பதிகம் பாடிப் பரவினுர்களோ, அவ்வாறே காள மேகப் புலவரும் சிவ வைணவத் தலங்கள் பலவற்றிற்கும் போந்து பலதிறப்பட்ட அணிவகையில் பாட்டியற்றிப் போற்றி யுள்ளார்.

அருளாளராயும், அருட் கவிகளாயும் விளங்கிய ஆழ்வார் நாயன்மார்கட்கு இறை வனுல் சோதனைகள் நிகழ்ந்தன. காள மேகத்திற்குப் புலவர் பெருமக்களால் அழுக் காறு காரணமாகப் பல சோதனைகள் நிகழ்ந் தன. இறைவன் சோதித்ததால் அவர்கள் வீடுபெற்றனர். புலவர்கள் சோதித்ததால் காளமேகம் அகிலாண்டேஸ்வரியின் துணை யால் அவர்கள் சோதனைகளில் வெற்றி பெற்ருரேயன்றி அவள் அருளை வீடுபேற் றிற்குரியதாகக் கொள்ளாது போனுர். அத் தகைய புலவரும் அருட்கவியும் மண்மாரி பெய்யுமாறு வசைபாட வல்ல கொண்டலும் ஆனைக்காவுடை அகிலாண்டேஸ்வரியைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டவரும் ஆனைக்கா உலா பாடியவருமான காளமேகத் தின் வரலாற்றைக் காண்போம்.

திருக்குடந்தை என்னும் கும்பகோணத் தைச் சார்ந்த வைணவன் ஒருவன் திருவரங் கத்துப் பெருமாள் கோயிலில் மடைத் தொழில் பூண்டு வந்தான். அவனுக்கும் திருவானைக்காவில் ஆடல் தொழில் பூண்டு இறைபணி புரிந்துவந்த மோகனங்கி என்ற கணிகைக்கும் காமத் தொடர்பு இருந்து வந்தது.

மார்கழித் திங்களில் திருவெம்பாவை பாடி அதற்குப் பதம்பிடித்துக் கோயிலில் சம்பு கேசுவரர் முன்பு ஆடுவது வழக்கம். 'உங்கையிற் பிள்ளை' என்ற பாட்டைப் பாடிப் பதம் பிடிக்கும்போது 'எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்ற வரியைப் பாடிப் பதம் பிடிக்கும்போது ஆடல் பிழைத்து வெட்கித் தலைகுனிந்து நின்றுவிட்டாள். இவ்வரியைப் பாடக் கேட்ட மற்ற கணிகையர்களும் இவள் சைவ சமயத்தளாய் இருந்து சிவனுக்குத் தொண்டு செய்தும் வைணவனுக்கு ஆட்பட்டது இழுக்கு என்பதுபோல நகைத்து இடித் துரைத்து விட்டனர். அதனுல் மோகனங்கி அன்று இரவு தன்னை நாடிவந்த திருவரங்க வைணவனை வாயிற்புறத்து நிறுத்தித் தன் கருத்தறிவித்துப் புறக்கணித்தாள். தீராக் காதலனுகிய அவ்வைணவன், அவளை விடுத் தற்கு இயலாதவனுகித் தான் மேற்கொண்ட வைணவ ஒழுக்கத்தைத் துறந்து சிவதீட்சை பெற்றுச் சைவனுக மாறி அகிலாண்டேஸ் வரி கோவிலில் மடைத்தொழில் புரிவானு யினன்.

அந்த நாளில் திருவானைக்காவில் ஒரு சைவ வேதியன் தனக்குக் கலைவன்மையும் புலமையும் நிகரில்லாது வேண்டும் என்று மந்திரயந்திரம் அமைத்துக்கொண்டு உருச் செய்து வந்தான். ஒரு நாள் அகிலாண் டேஸ்வரி, வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு தாம்பூலம் தரித்து வரங்கிடந் தான் முன்னர்ப்போந்து அவன் வாயைத் திறக்கச் சொல்லித் தன்வாய்த் தாம்பூலத்தை உமிழப் போமளவில் அவன் அதனை மறுத் துக் கடிந்துரைத்து அகன்ருன்.

அதுகாலை மோகனங்கியின் நண்பனுன மடையன், மோகனங்கியின் கடமை முடிந்த பின் அவளை அழைத்துச் செல்வதாகக் கூறிக் கோயில் மண்டபத்து ஒருசார் ஒதுங்கி உறக்கங் கொண்டான். மோகனங்கி கடமை முடித்து அவனைத் தேடிக் காணமாட்டாது

தானே தனித்து மனைபுகுந்தாள். கண் விழித்துப் பார்த்த மடைத் தொழிலோன் கோயில் பூட்டியது கண்டு ஆண்டே உறங்க, தன்னை நோக்கி வரங்கிடந்த சைவ வேதியன் அகன்றபின் ஆண்டு உறங்கும் மடைவலானை எழுப்பி அவன் வாயில் தன் தாம்பூலத்தை உமிழ அவனும் அம்மோகனுங்கி தரும் தாம்பூலமென்று அதனைக் கொள்ள அதுகாலை அவனுக்குக் கலைநலம் பெருக உணர்வு பெற்றுக் கவிபாடத் தலைப்பட்டான். அன்று தொட்டு அவன் கருத்து மழை தப்பாது பொழியும் மேகம்போல் நாற்கவியும் பாடத் தலைப்பட்டதோடு, யார் எச்சொல் தந்தாலும், எப்பொருள் தந்தாலும், எவ்வடி கொடுத்தாலும், எத்தொடை விழைந்தாலும் எவ்வணி நாடினும் அவற்றை அமைத்து அருங்கவிகள் பாடும் ஆற்றலைப் பெற்ருன். அதன் பிறகு அவன் மடைத்தொழில் விடுத்துக் கவித்தொழில் பூண்டு காளமேகப் புலவர் என்ற பெயரில் நிலவத் தலைப்பட்டான்.

காளமேகப் புலவரானதும் தமக்கு அருள் நல்கிய அகிலாண்டேஸ்வரியைப் போற்றித் ‘திருவானைக்கா உலா’ என்ற நூலை இயற்றி நன்றிக்கடன் ஆற்றிய பின் சேர சோழ பாண்டிய நாடுகட்குச் சென்று ஆண்டாண்டுக் கோயில் கொண்ட சைவ வைணவக் கடவுளர்களைத் தன்மையணியிலும், சிலேடை அணியிலும் பலவாறு பாடினர்.

காளமேகப் புலவர் முன்னம் வைணவராய் இருந்து பின்னர் சைவராக மாறியவராதலால் அவருக்குச் சமயப் பொதுமை பெரிதும் உண்டு.

ஒரு ஞான்று திருவரங்கத்துவாழ் வைணவர்களும், திருவானைக்கா வாழ் சைவர்களும் மதங் காரணமாகப் பெரும் பூசலிட அதுகாலைக் காளமேகப் புலவர் இரு சமயக் கொள்கையும் முரண்பட்டவை அன்று, ஒன்றே என்று சந்து செய்விப்பார் போல,

“சீரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன்—ஓரங்கள்
வேண்டா மிதுவென்ன விவரந் தெரியாதோ
ஆண்டானும் தாதனுமா னல்.”

என்று பாடியுள்ளார். ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டு உண்டு என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்த ஒரு கூற்று. ஜீவாத்மா பரமாத்மாவிற்கு அடிமையாக இருப்பதில் தவறு என்ன? ஜீவாத்மாவும் பரமாத்மாவும் எவ்வாறு ஒன்ருதல் கூடும்? அப்படி இருக்கும்போது அத்வைதமோ துவைதமோ விசிட்டாத்வைதமோ கற்பித்துப் பூசல் விளைப்பதில் பயன் என்ன? என்று கேட்பாரைப்போல் பாடியது கொண்டு இவர் மதப் பொதுமை உணரலாம்.

இவ்வாறு காளமேகப் புலவர் பல தலங்கட்கும் சென்று ஆண்டாண்டு இறைவழிபாடு மேற்கொண்டு கவி இயற்றி வரும்போது திருமலைராயன் பட்டினத்தில் அதிமதுரகவி என்ற புலவர், அரசனிடம் தண்டிகைப் பரிசு பெற்ற புலவர் அறுபத்து நால்வரைத் தலைவராகக் கொண்டு தமக்கு நிகரியோர் உலகத்திலில்லை என்று துணிந்து செருக்குற்று மற்றைய புலவர் எவராயினும் மதிக்காது மானக்கேடு செய்து வந்தார். இதனை அறிந்த காளமேகம் மனம் வருந்தி மதுரகவியின் மதமடக்கக் கருதித் திருமலைராயன் பட்டினத்திற்குப் போந்தார். மதுரகவி தன் புலவர் படைசூழ விருதுகள் தாங்கிப் பெருமிதத்தோடு எதிரே எல்லோரும் ‘அதிமதுர கவிராய சிங்கம் வாழ்க’ என்று வாழ்த்த வருவது கண்டு, அவரை மதியாது ‘காட்டுக் குன்றிமணி வேரையன்ருே அதிமதுரம் என்பார்கள் என்று பரிகசிப்பது போல் பாட அவன் அது கேட்டு வியந்து தன் இருப்பிடம் புகுந்த பின் ஆட்களை அனுப்பி காளமேகத்தைப் பற்றி அறிய முற்பட்டார். அப்பொழுது காளமேகம் தம் தகுதி முதலியவற்றை ஒரு கவியாக யாத்துக் கொடுத்தனுப்பினர். அதுகண்ட மதுரகவி அரசவையில் அவன் புகுந்து அரசனைக் காணுவகையில் தம்முடைய புலவர் குழாத்தை அமைத்து அரசனிடம் காளமேகத்தை முறைப்படி வரவேற்கக் கூடாது என்றும் வேண்டியிருந்தான்.

காளமேகம் அவை புகுமுன் ஓர் எலுமிச்சம்பழமொன்றை வாங்கி அதனைப் பிராமணன் ஆசீர்வாதம் செய்து கொடுக்

கும் முறையில் அரசன் முன் நீட்ட அவனும் அதை மறுக்கக் கூடாதாகையால் வாங்கிக்கொண்டான். எனினும், காள மேகம் அமர ஓர் இடம் தந்தானில்லை.

அப்போது காளமேகம் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரியை நினைத்துத் தொழுது கலைமகளைக் குறித்து,

> வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
> வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
> அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
> சரியா சனம் வைத்த தாய்.

என்று சரஸ்வதி மாலை என்ற முப்பது பாடல்களைப் பாடும்போது அரசனுடைய இருக்கைவரை அவ்விடத்தில் அரசனுக்கு ஒப்பாகக் காளமேகம் சென்று அமர்ந்து விட்டார். இதுகண்ட அவையோருக்கும் மதுரகவிக்கும் பெருவியப்புண்டாயிற்று. விழித்த கண் வாங்காது பார்க்கும் புலவர் பெருமக்களை நோக்கி நீங்கள் யார் என்று கேட்க அவரும் 'கவிராஜர்கள்' என்று கூற உடனே காளமேகம் 'கவி' என்றால் குரங்கு என்ற பொருள் கொண்டு உங்களுக்குரிய வாலெங்கே நீண்ட நகங்கள் எங்கே நாலு கால்கள் எங்கே என்றெல் லாம் நகைத்து இகழ்ந்தனர். அதுகேட்ட அவர்கள் காளமேகமென்றால் கருத்தமேக மென்று பொருளாயிற்றே நீர் பொழிய வந்தது என்ன என்று கேட்டனர். கவி மழை பொழிய என்று விடை கூறக் காளமேகத்திற்கும் மதுரகவியார் கூட்டத் திற்கும் சொற்போர் மூள இறுதியில் மதுரகவி காளமேகத்தைப் பார்த்து நீ அரிகண்டம் பாடு பார்ப்போம், என்றனர். அரிகண்டமென்பது வாளைக் கழுத்தில் கட்டிக்கொண்டு எதிரி குறிப்பு வழி பாட வேண்டும். தவறினால் தலை வெட்டுண்ணும். இதனைக் கேட்ட காளமேகம் இது எளி தானது. யமகண்டம் பாடுவதுதான் திறமை என்றனர். யமகண்டம் என்றால் பதினாறு அடி நீள அகலத்தில் குழிவெட்டி அதன் நான்கு மூலைகளில் இரும்புக் கம்பம் நட்டுச் சட்டங்கள் பரப்பி நடுச்சட்டத்தில் உறிகட்டிக் குழியின் நடுவில் நெருப்புண் டாக்கி அதன் நடுவில் எண்ணெய் சட்டி வைத்து எண்ணெயைக் காயவைத்து உறியில் புலவன் உட்கார்ந்து உறிக் கயிற்றைக் கூரிய அரிவாளில் கட்டி யானையிடம் கொடுப்பித்துக் கொண்டு சுற்றிலும் உள்ளோர் குறிப்பின் வண்ணம் பாடவேண்டும். குறி தப்பினால் யானையால் இழுப்பித்து உறிக்கயிற்றை அறுக்கச் செய்து காயும் எண்ணெயில் வீழ்த்தி இறக்கச் செய்வதாகும். இத்தகைய அரிய செயலைக் காளமேகம் செய்யட்டும் என்று மதுரகவி கூற அங்ஙனமே எல்லோரும் வியப்பக் காளமேகப் புலவர் அகிலாண்டேஸ் வரியின் அருளால் பாட, அங்கிருந்த புலவர்களும் அரசனும் அவ்வாறு பாடி முடித்தபின் அவரை மதியாமலும் பரிசிற் பொருள் தராமலும் புறக்கணிக்கக் கண்ட காளமேகப் புலவர் மனம் நொந்து அத் திருமலைராயன் மண்மாரியால் அழியும் வண்ணம்,

> "கோளர் இருக்கும் ஊர் கோள்கரவு கற்றவூர்
> காளைகளாய் நின்று கதறும் ஊர்—நாளையே
> விண்மாரி யற்று வெளுத்து மிகக்கருத்து
> மண்மாரி பெய்கவிந்த வான்"

என்று பாட அங்ஙனமே அவ்வூர் மண் மாரியால் அழிவுற்றது. பின் காளமேகம் பல ஊர்களுக்குப் போய்ப் பல பாடல்களைப் பாடிப் பின் திருவாரூரை அடைந்து இறைவன் திருவடியடைந்தார் என்பது இவர் வரலாறு.

இவ்வரலாற்றால் நாமறியும் செய்தி ஒன்றே ஒன்று. திருவானைக்கா வாழும் அகிலாண்டேஸ்வரியை வழிபட்டோர் உறுதி யாக எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்பதும், அவள் கண்கண்ட தெய்வமாய் ஏதம் வரும் இடத்தில் தோன்றி இடுக்கண் களைவாள் என்பதும், அவள் என்றும் நம்பியவரைக் கைவிடுவதில்லை என்பதும் ஆகும். அதனால் காளமேகப் புலவர் வரலாறு அறிந்த இனியேனும் அகிலாண் டேஸ்வரியின் அருளைப் பெற முயல்வோ மாக.

# ஸ்ரீ வித்யையும் ஸௌந்தர்ய லஹரியும்

டாக்டர் டி. எம். பி. மஹாதேவன் எம். ஏ., பிஹெச்டி

சக்தியே பரம்பொருள் என்பதும், சக்திக்கு ஆகமவிதிப்படி செய்யும் வழிபாடே ஆன்ம நிறைவுக்குத் தவருமல் கொண்டு செலுத்தும் வழி என்பதும் ஸ்ரீ வித்யையின் கருத்து. ஸ்ரீ வித்யை அத்வைதத்துக்கு உடன்பாடு. உலகத் தோற்றத்துக்கு அடிப் படையாக இருப்பது சக்தியே என்னும் தத்துவக் கொள்கையோ, சாக்த தியான முறையோ அத்வைதத்துக்கு முரணல்ல. இவ்வுண்மை தேவியின் புகழாக சங்கரர் பாடியுள்ள ஸௌந்தர்யலஹரியில் மிக நன்ருகத் தெரிகிறது. ஸௌந்தர்யலஹரி என்பதற்கு 'எழில் வெள்ளம்' என்பது பொருள். மிக அழகிய இக்கவிதை யில் தேவி அடிநிலை உண்மையாகவும், கடந்த நிலை உண்மையாகவும் புகழப் படுகிருள்; அவளைக் குறித்துச் செய்யும் தியானமும் வழிபாடும் பூர்ணனந்தம் அடைவதற்கு உதவும். அனைத்தாம் தெய் வங்களுக்கும் மேம்பட்ட பரதத்துவம் தேவி என்பது பல பாக்களில் கூறப்படுகிறது. அவள் ஆணையின் படியே தான் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்கின்ற மூன்று தெய்வங்களும் தத்தமக்குரிய பிரபஞ்சத் தொழிலான படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்றையும் முறையே செய் கின்றனர்; தேவியின் பாத தாமரையின் ஒரு சிறுதுகளே இவ்வுலகம்.

தேவியோடு சேர்ந்தல்லாமல் சிவனல் அசையவே முடியாது; ஹரி, ஹரன், பிரம்மா ஏனைய கடவுளர் அனைவரும் அவளைப் புகழ்கின்றனர். பிரம்மா, உலகத் தைப் படைக்கிருர். ஹரி அதனைக் காக்கின் ருர்; ருத்ரன் அதை அழிக்கின்ருர்; அனைத் தையும் மறையச் செய்து ஈசன் தம்முடைய உருவத்தையும் மறைத்துக் கொள்கிருர். கொடி போன்ற அவளுடைய புருவங்களில் நொடிப் பொழுது ஏற்பட்ட அசைவைக் கண்ணுற்ற சதாசிவர் இவையனைத்தின் மீதும் தம் அருளைப் பொழிகிருர். மேலே குறிப்பிட்ட பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகியோருடன் மற்ற இருவருமான ஐந்து பிரபஞ்ச கர்த்தாக்களாகத் தேவியே தோன்றுகிருள். இவ்வைவருள் ஈசன் மறைத்தல் தொழிலையும், சதாசிவர் அருட் டொழிலையும் செய்கிருர். இந்த உண்மையை லலிதாசஹஸ்ர நாமத்தில் பின்வருமாறு காண்கின்ருேம்.

ஸ்ருஷ்டி கர்த்ரீ பிரஹ்ம ரூபா கோப்த்ரீ கோவிந்த ரூபிணி
ஸம்ஹாரிணீ ருத்ர ரூபா திரோதானகரீஷ்வரீ
ஸதா ஷிவாநுக்ரஹதா பஞ்சக்ருத்ய பாராயணு.

பிரபஞ்ச கர்த்தாக்கள் மூவரின் சக்திகள் சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி ஆவர். ஒவ்வொரு சக்தியும் எழிலின் தோற்றமே. தேவியே இம்மூவராகவும் தோன்றுகின்ருள். அவளுடைய மகிமை இவர்களுக்கும் அப்பாற்பட்டது. ஏனெனில் அவள் விவ ரிக்க முடியாத 'நான்காவது' ஆவள். அடைவதற்கு அருமையானவள். எல்லை யற்ற மேம்பாடு உடையவள்; அவளே பெரிய மாயை, பரப்பிரம்மத்தின் துணைவி, உலக இயக்கத்திற்கு மூலமானவள்.

துரீயா காபித்வம் துரதிகம நி:ஸீம மஹிமா
மஹா மாயா விஷ்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷி.

இச் செய்யுளின் பொருளைத் தமக்கே யுரிய முறையில் விளக்குகையில் காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் தேவியை நோக்கிக் கூறுகிருர். "உன்னு டைய பெருமை மூன்று சக்திகளுக்கும் அப்பாற்பட்டது. உன்னுடைய மஹா மாயையால்தான் மூன்று பிரபஞ்சகர்த்தாக் களும் அவர்களுடைய சக்திகளும் தொழிற் படுகின்றனர். உன்னுடைய பெருமை மனத்தால் கற்பனை செய்யவும் முடியாத ஒன்று. மூன்று பிரபஞ்ச கர்த்தாக்களையும் படைத்த பிறகு நீ ஆளும் தெய்வமாக நிலைத்திருக்கிருய். இம்மூவருக்கும் அப்பாற் பட்ட நீ 'நான்காவது' ஆவாய்—பர ப்ரஹ்ம மஹிஷி. அங்கே யாதொரு தொழி லும் இல்லை. தொழிலுக்கு அப்பாற்பட்ட உண்மை பூர்ணனந்தமாகும்". அத்வைதம் கூறும் இரண்டின்மைக்கு மிக நெருங்கியது சிவனேடு பிரிக்கமுடியாது, இணைந்துள்ள தேவி பற்றிய ஸ்ரீ வித்யை கருத்து.



கங்காளர்



பிட்சாடனர்

அர்த்த நாரீஸ்வரர் பற்றிய கருத்து அத்வை தத்துக்கு மிக அணுக்கமானது. பார்வதி பரமேசுவரரின் சேர்க்கையைக் காளிதாசர் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர் போடு (வாகர்த்தாவிவ—ஸம்ப்ருக்தௌ) உவமிக்கிருர். சிவானந்த லஹரியின் முதல் செய்யுளில் சங்கரர் இருமையைச் சுட்டும் சொல்லாகச் சிவ, சிவா என்று இரண்டை யும் சேர்க்கிருர். ஸௌந்தர்ய லஹரியில் இச் சேர்க்கை ஏறத்தாழ இரண்டின்மையைக் குறிக்கும் வகையில் பேசப் பெறுகிறது.

''(சிவனின்) ஒருபாதி தன்னுள் அடக் கிக் கொண்டதோடு உள்ளத்தில் திருப்தி அடையாது, சம்புவின் உடலின் மறு பாதியையும் (நீ) எடுத்துக் கொண்டாய் என்று நினைக்கின்றேன் ; எனவே உன் உரு வம் ஒரே சிவப்பாக உள்ளது, மூன்று கண் களை உடையது, ஸ்தனபாரத்தால் சற்றே குனிவுடையது, பிறைத் திங்களால் அணி செய்யப் பெற்றது'' சிவனும் சக்தியும் ஒத்த அளவில் ஒருவரையொருவர் முழுநிறைவு செய்து கொள்ளுகின்றனர் ; இவர்களுள் எவர்க்கு முதன்மை என்று கூற இயலாது ; (அத: ஷேஷ: உற்–ஷேஷதி–அயம் உபய சாதாரண தயா ஸ்தத:) ; அவர்கள் பர மானந்தத்தை ஒத்தவகையில் ஒத்த சுவை யுடன் நுகர்கின்றனர். (ஸமரஸபரானந்தபர)

எழிலே உருவான தேவி ஒளியும் உயர்வும் மிக்க செய்யுட்களில் ஸௌந்தர்ய லஹரி யிலே வர்ணிக்கப் படுவதற்கு இணை காண் பது மிக அருமை. தியானத்தின் முதல் நிலைக்காக மனிதவகையில் பெண் உருவம் தேவிக்குத் தரப்பெறுகிறது—இவ்வுருவம் கடந்த நிலை எழிலுடையது.

''ஒலி செய்கின்ற ஒட்டியாணத்தை அணிந்து, யானையின் தலையை ஒத்த ஸ்தனங்களின் பாரத்தைச் சுமந்து, மெல்லிய இடையுடன் சரத்கால முழுநிலவை ஒத்த முகத்துடன் தன் கையில் வில், அம்பு, பாசம், அங்குசம் இவற்றைக் கொண்டு எம் முன்னே திரிபுரங்களை அழித்தவரின் மதிப் புக்குரியவளாய் உள்ளவள் அமர்ந்திருப் பாளாக.

ஸௌந்தர்ய லஹரியின் இரண்டாவது பகுதியில் அதாவது நாற்பத்தொன்றும் செய்யுளில் தொடங்கித் தேவியின் உருவத் தின் பல உறுப்புக்களும் அணிகளும் அவள் அணிந்துள்ள கிரீடம் முதல் அவள் பாதம் வரை வருணிக்கப்படுகின்றன. மனிதரோ தேவரோ கூட அவள் எழிலுக்கு நிகராக மாட்டார்கள். அவள் கை கால்களிலிருந்து கணக்கற்ற கதிர்களாக அமிர்தம் வீசப்படு கிறது. ஓய்வின்றி அவள் பாதங்கள் மலர் களின் தேனையொத்த எழிற்பெருக்குடன் பவழமரத்தின் மலர்க் கொத்தை யொத்த நல்வாழ்த்தைத் தருகின்றன. தேவியின் எழில் கவிஞனின் மிக நுண்ணிய கற்பனைக் கும் அப்பாற்பட்டது.

ஸௌந்தர்ய லஹரி மனித அளவான கற் பனையோடு நின்று விடவில்லை. தேவியைப் பிரபஞ்ச வகையான உருவத்துடன் நுண் ணிய உருவங்களிலும் தியானம் செய்ய வேண்டும். உலக பரிணமிப்பை ஏற்படுத் தும் பலவகையான தத்துவங்களாகவும், ஸ்ரீ சக்ரம் எனப்பெறும் மறைபொருள் யந்திர மாகவும் அவள் தோன்றுகிருள். மந்திரங் களாகவும் மனித உணர்வின் பலநிலைகளாக வும் அவள் தோன்றுகிருள். பிரபஞ்சத்தை உருவாக்கும் தத்துவங்களோடு அவளை இணைத்துப் பேசும் செய்யுளை இங்கே கூறு கின்றேன்.

''மனமும் நீ, இடமும் நீ, காற்றும் நீ, காற்றைத் தேரோட்டியாகக் கொண்ட ஒன் றும் (தீயும்) நீ, நீரும் நீ, நிலமும் நீ ; (இவ் வுருவங்களாக) நீ பரிணமிக்கும் போது உள் ளது வேறென்றும் இல்லை. சிவனின் இளமைவாய்ந்த துணைவியே, பிரபஞ்சமாக உன்னைத் தோற்றுவிப்பதற்காக நீயே உன் இயற்கையின் மூலமாக உணர்வும் இன்ப மும் ஆன உருவத்தைத் தாங்குகின்ருய்''.

லோகமாதாவைப் பற்றிய கருத்தில் எழில் உள்ளதும் கலக்கின்றன. எழில் உள்ள தைத் தியானிப்பதின் மூலமாக, எழிலையே அனுபவிக்கிருேம். இவ்வனுபவத்தில் வேற் றுமைகள் மறைந்து போகின்றன. தூய இன்பமும், அறிவு நிலைக்கப்பாற்பட்ட சாந்தியுமே நிலைத்து நிற்கின்றன.

# THE MYSTICISM OF MAANICKAVASAGAR

G. VANMIKANATHAN

WHO is a mystic? In the words of Thomas Merton, which I have slightly changed in the matter of tenses only to suit the context,

"a mystic is one who surrenders to a power of love that is greater than human and advances toward God in a darkness that goes beyond the light of reason and of human conceptual knowledge. Further more, there is no infallible way of guaranteeing the mystic against every mistake; he can never be perfectly sure of any human technique. Only the grace of God can protect him and guide him. In other words, when we speak of mysticism, we speak of an area in which man is no longer completely in command of his own life, his own mind and of his own will. Yet at the same time his surrender is to a God who is 'more intimate to him than his own self' and therefore mysticism precludes real alienation. In mystical union, God and man, while remaining no doubt metaphysically distinct, are practically and experimentally 'one Spirit".

Maanickavasagar, according to the above definition, is a mystic par excellence. His surrender to a love that is greater than human is something extraordinarily remarkable even in the history of mysticism. Kahlil Gibrat the Lebanese mystic of this century, speaking of love says:

> Like sheaves of corn he gathers you unto himself.
> He threshes you to make you naked,
> He sifts you to free you from your husks.
> He grinds you to whiteness.
> He kneads you until you are pliant.
> And then he assigns you to his sacred fire that you may become sacred bread for God's sacred feast,
> All these things shall love do unto you that you may know the secrets of your heart and in that knowledge become a fragment of Life's heart.

All this and more did love do unto Maanickavasagar. He sings:

> On the One without a peer coming Himself
> And relating His I alone am nature,
> That people like me may pay heed to it,
> And on His challengingly hailing me
> And assuming lordship over me,
> And in His grace, showing Himself to me
> In the guise of a brahmin,
> I, with uncloying love melting my bones,
> Wailed with loud lamentations,
> And, clamouring louder
> Than the surf of the billowing sea,
> Fell down with my head all topsy-turvy,
> And rolled and wailed:
> Madder than madmen, more gleeful than frenzied men,
> To the puzzlement of the citizens
> And the wonderment of the hearers,
> Worse than a rutting elephant,
> Which would not be mounted,
> I was besides myself. (lines 146 to 156 of 3rd decad)

In another context Maanickavasagar sings thus:

> When in the heart of contemplatives
> Thought of God was born,
> And on that Being, who is free from hate,
> Contemplation set in,
> Six crores of delusive powers
> Severally began their illusive play;
> Neighbours-close friends all-gathered round

And talked atheism till their tongues became calloused ;
Relatives, the ancestral herd of cattle,
Seized them, implored them,
And became impatient with them ;
By and large, penance itself as supreme,
Brahmins glibly proved by Vedic texts :
Sectarian disputants,
Claiming their respective creeds only as perfect,
Clamorously clashed (with each other) :
The tornado called staunch maaya-vaadam
(The dogma that the world is but an empty dream)
Swirled and blew and roared,
The while the conflicting cultural deadly poison
Of Epicurianism—the dazzling doughtly snake—
Came and joined forces.
While, thereby, several great delusions
Encompassed the contamplatives,
They swerved not,
But unflaggingly held on to their faith :
Like was faced with fire,
With melting heart they worshipped, wept, trembled,
Danced, shouted, sang, prayed :
Even like the artisan's vice and fools
Who never let go what they catch hold of,
Due to unintermitting pure love, Becoming firm in faith
Like a nail driven into a green tree,
With tear increasingly trickling,
And mind in a whirl like the sea,
With heart sore and body shivering in unison,
Eschewing shyness,
And assuming people's scornful words
As ornament verily,
Losing all casuistry, their intelligence in a whirl, with the aimed-at-goal
(Of deliverance from birth) as the supreme miracle,
They remained unswerving in mind :
And lowing and all at witter like a calved cow,
Not thinking of another god even in a dream,
Not despising as a little thing
The greatness of the grace of Him of unique heaven
In coming down on earth and becoming guru supreme,
His sacred twin feet,
Like their shadow which,
Now fore, nor aft, but never knows separation,
They never grew tired of :
Their very bones softened and melted,
Their hearts yearned with sigh after sigh,
The river called love overflowed its banks thither
Their goodly senses coalesced,
And they clamoured "Oh Lord, our Sire"
While their speech stumbled,
And the hair on their bodies stood on end,
Their hands, the flowers,
Folded in worship into shape of lotus-bud,
And their hearts flowers all, blossomed out :
Their eyes flushed with delight,
Droplets dewing on them :
Hile thus unswerving love all day long they cherished,
Their very mother, Oh Lord, you became
And brought them Up.

—(lines 42 to 86 of decad 4)

Maanickavasagar's incessant prayer to God was to grant him love towards Him. He sings :

In pretence, imitating your devotees,
Through their midst, I rush in a great hurry
To enter the land of deliverance :
Oh You, splendid gem-set golden hill,
Unintermitting love unto You
To take root in the core of my heart and melt it,
Do you grant in Your grace, Oh my Owner ! —(5-11)

If ever any contemplative can be said to have been totally and exclusively filled with the "blind stirring of love", which the author of the Cloud of Unknowing speaks of, we can unhesitatingly say that Maanickavasagar was so filled.

Of his surrender to a God who is more intimate to him than his own self, I need but quote only a few stanzas out of several which I can quote to establish this point. Maanickavasagar was a saivite saint, if any mystic, even after his immediate and intimate apprehension of the Real, can still be classified under the label of an institutional religion. But he surpasses even the Vaishnavites in the matter of surrender, saranagathi, to God. In two successive poems in the Kuzhaitha-paththu, a very highly significant decad in the Tiruvaacagam, he sings thus :

Me a cur, the basest of curs, you took a fancy for,
And of your own accord enslaved me ;
Other than leaving in your hands
This matter of delusive birth,
Is it for me to research into it ?
Is mine the authority here ?
Thrust me into a body
Or set me under Your anklet-girt feet (as you please)
Oh Lord with an eye in the forehead !

—(33-8)

He follows with another song which goes further than the former in surrender to the Divine will, He sings :

Oh Lord with an eye in the forehead,
I have, to the delight of my eyes,
Beheld your anklet-girt feet ;
Instead of meditating on them day and night
To the exclusion of all other thought,
Shall I, Oh my Father,
Brood on shedding this body on earth
And entering the heaven of Your feet ?
Fine, indeed, is my serfdom to You.

—(33-9)

Maanickavasagar's surrender was total without reservations. He sings:

Abide in me and enslave me,
Sell me, mortgage me, but this apart,
Do not turn me away,
A stranger who has sought your hospitality,
Oh Lord who ate the poison
An exceedingly sweet ambrosia !
Oh King of eternal uttirakosamangai !
Oh Medicine to those who are crippled
By the disease of birth ! —(6-18)

The Tiruvaacagam, then, is the story of Maanickavasagar's love for God—a love that is greater than human and of his surrender to a God who is more intimate to him than his own self. We saw earlier who a mystic is. He is one who surrenders to a love that is greater than human, and advances toward God......and whose surrender is to a God who is more intimate to him than his own self. On these premises, Ramachandra Deekshitar, the author of Studies in Tamil Literature and History is more than justified in calling The Tiruvaacagam a handbook of mystical theology. He says :

"The Tiruvaacagam relates an autobiographical story of the different stages of Maanickavasagar's spiritual life and experience which ultimately enabled him to attain bliss ineffable and eternal. It is a torrential outflow of ardent religious feelings and emotions in rapturous songs and melodies. The work may be regarded as a convenient hand book on mystical theology."

Dr. R. D. Ranade, in his book Mysticism in Maharashtra, says of Maanickavasagar :

"In him we see the upspringing of a natural devotion to God which, through a consciousness of his faults, rises by gradations to the apprehen-

sion of the Godhead. In his great poem he makes us aware, as Dr. Carpenter puts it, of his first joy and exaltation, his subsequent wave rings, his later despondencies, his consciousness of faults, his intensive shame and his final recovery and triumph."

*The Tiruvaacagam* is not merely a handbook of mystical theology, it is an Upanishad—as much an Upanishad as any of the ten principal Upanishads.

*The four*, As Maanickavasagar, Sambandar, Appar and Sundarar are lovingly called in Tamilnadu, were the spearheads of revolutionary movement in matters religious and spiritual in the south. A decadence had set in the life of the people. The apostles of other religions-Buddhism and Jainism-found their opportunity in this very favourable atmosphere and seized the minds of the people with their tenets and beliefs, and had very soon made converts of the kings of the land, after which conversion of the people was but the enforcement of a royal decree. The people were confused and torn among themselves. These four saints came to them as the leaders of a spiritual renaissance in Tamilnadu.

They did not come to establish any new institutional or revealed religion. They came to restate the great truth—the perennial philosophy—and to lead the people toward the Godhead. It is therefore that we find all their outpourings of song mystical in character.

R. D. Ranade, writing in his introduction to *Mysticism in Maharashtra*, says:

"A mystical vein on thought has been present throughout the development of Indian Philosophy from the age of the Upanishads downwards; but it assumes an extraordinary importance when we come to the second millenium of the Christian era which sees the birth of the practical spiritual philosophy taught by the mystics of the various provinces of India."

But even five to six centuries before this period, Tamilnad saw the birth of a mysticism with a genius of its own. Discussing the difference between the Upanishads and the Middle Age Ranade says:

"The mysticism of the Upanishads is different from the mysticism of the Middle Age, in as much as it was merely a tidal wave of the philosophy of the ancient seers while the other was the natural outcome of the heart, full of piety and devotion, the consciousness of sin and misery and final desire to assimilate with the divine. The Upanishadic mysticism was a naive philosophical mysticism; the mysticism of the Middle Age was a mysticism which hated all philosophical explanations or philosophical imaginings as useless, when contrasted with the appropriation of the Real. The Upanishadic mysticism was the mysticism of men who lived in cloisters of far away from the bustle of humanity, and who, if they permitted any company at all, permitted only the company of their disciples. The Mysticism of the Middle Age was a mysticism which engrossed itself in the practical upliftment of the human mind, based on the sure

foundation of one's own perfect spiritual development. The Upanishadic mysticism did not come forward with the delibearte purpose of mixing with men in order to ameliorate their spiritual condition. The business of the mystic of the Middle Age consisted in mixing with the ordinary run of mankind, with sinners, with pariahs, with women, with people who cared not for the spiritual life, with people who had even mistaken notions about it, with, in fact, everybody who wanted, be it ever so little, to appropriate the Real."

"We may say," concludes Ranade, "that as we pass from the Upanishadic mysticism to the mysticism of the Middle Age, we see the spiritual life brought from the hidden cloisters to the market place."

*Thus arose, as Ranade says*: "Democratic Mysticism which laid stress upon the vernaculars as the medium of mystical teaching as opposed to the classical mysticism of ancient times, which had Sanskrit as its language of communication. It was a democratisation not merely in language, but also in the spirit of teaching, and we see how mysticism became the property of all."

These differences should not be allowed, however, to lead us to the conclusion that Manickavasagar reveals something different from or antagonistic to the teachings of the world's earliest mystics—the Seers of the Upanishads.

*To quote Ranade again*: "The mystics of all ages and countries form an eternal divine society. There are no religions, no communal, no national prejudice among them. Time and place have nothing to do with the eternal and infinite character of their mystical experience. They have the same teachings about the name of God, the fire of devotion, the nature of Self-realisation, It is only due to oveweening superciliousness that people regard the mystics of one country as different from, or superior to, the mystics of other lands or faiths. If all men are equal before God and if men have got the same 'deiform faculty', which enables them to 'see God face to face' then, there is no meaning in saying that there is a difference between the quality of God-realisation of some as apart from the God-realisation of others. It is true that there may be physical, mental, and temperamental differences, but there is no difference in the quality of their mystical or intuitive realisation."

*The Tiruvaacagam*, therefore, makes available to the people of Tamilnadu the same pathway to the Godhead even as the Upanishads do. If there is a distinction, it is this, - the Upanishads state the proposition, *The Tiruvaacagam*, furnishes the proof.

*The Tiruvaacagam*, therefore, is not a mere *adhoc* collection of devotional poems. It is a treatise on the theology of mysticism. But treatises are usually extremely dull, but not so the *Tiruvaacagam*. The reason is that it is not an intellectual work, but a spontaneous outpouring of the heart's travail and triumph in most melodius song. The very elements of democratisation which are *The Tiruvaacagam*'s speciality are also

the cause of people's failure to realise as well its identity with the perennial truths revealed in the Upanishads, as the comprehensive system of thought—the book of mystical theology. The cadence of its songs, the unique sweetness of the Tamil language, the use of simple household words to whose pregnant and poignant thought-content the Tamil mind has become insensible through over-familiarity, these factors contrive to make us unaware of the great heritage we have in the *Thiruvaacagam*. Its flood of devotional outpourings has submerged the scintillating gems of spiritual teachings even as a torrent of tears hides the iris of the eyes. As Aldous Huxley says;

"Familiarity with traditional hallowed writings tends to breed, not indeed contempt, but something which, for practical purposes, is almost as bad, a stupor of the spirit, an inward deafness to the meaning of the sacred words."

If I can compare *The Tiruvaacagam* to any works in the English language, I can compare it only to the *Psalms* of David and to the *Imitation of Christ* by Thomas a Kempis. The entire *Tiruvaacagam* is in the form of direct speech, even like the *Psalms* of David and the entreaties of Thomas a Kempis. God is addressed in the second person. This enables us to appropriate the poems and make them our very own, identify ourselves with the thoughts of the poems and make them instruments of our personal appeal to God about our spiritual problems.

# பண்ணும் பரதமும்

# தேவாரப் பண்ணிசை

இசையரசு M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள், பேராசிரியர்,
அண்ணுமலேப் பல்கலேக் கழகம்.

குறிஞ்சி, முல்லே, பாலே, மருதம், நெய்தல் ஆகியவை பண்டைத் தமிழ் நாட்டின் பாகுபாடுகளாகும். குறவர், ஆயர், எயினர், உழவர், பரதவர் எனப்படும் அவ்வந்நில மக்கள் நிலத்திற்கேற்றவாறு தொழிலேயும், பழக்கவழக்கங்களேயும் மேற்கொண்டு வாழ்ந் தனர். உணவு வகைகளும் நிலத்திற்கேற்ற வாறு வேறுபட்டிருந்தது. மனவுணர்ச்சியை இனிய முறையில் வெளிப்படுத்தும் இசையும் தோன்றலாயிற்று. இதற்குத் துணைக்கருவி களும் பல தோன்றத் தொடங்கின. குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் குறிஞ்சிப் பண்ணேப் பாடி மகிழ்ந்தனர். முல்லே நிலத்து வாழ்ந்த ஆயர் தாம்பாடிய இசைக்கு முல்லேப்பண் அல்லது சாதாரிப்பண் எனப் பெயரிட்டனர். மருத நிலத்துப் பாடி மகிழ்ந்தோர்பண் மரு தப்பண்ணே. செவ்வழிப்பண் அல்லது நெய்தற் பண்ணேப் பாடி இன்புறுகிருர்கள், நெய்தல் நிலத்தார். பாலே நிலத்தோர்க் குரியதாக அமைந்தது பாலேப் பண். இவ்வாறு ஐவகை நிலத்தாரும், தம் மன வுணர்ச்சியைத் தாம் வாழ்ந்த நிலத்திற் கேற்றவாறு வெளிப்படுத்தி ஐவகைப் பண் களேக் கண்டார்கள்.

மனிதன் மலேயையும், கடலேயும், மற்ற வற்றையும் சார்ந்து வாழ்ந்த காலம் மிகப் பழைய காலமென்பதை நாம் நினேவிற் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு தமிழ் மக்கள் வாழ்ந்த காலத்தில் கண்ட பண்கள் தாம் குறிஞ்சிப்பண், பாலேப்பண், மருதப் பண், முல்லேப்பண், நெய்தற்பண் எனப் படுவன. இவ்வைந்துமே ஆதிப்பண்களா கும். இவற்றினின்றும் கிளேத்தவையே இன்று நாம் காணும் தமிழ்ப் பண்களனேத் தும். இந்தப் பண்ணினின்றுந் தோன்றி யவை இவை இவையென்று இன்று நம்மால் அறியக்கூடவில்லே. அந்தப் பாகுபாடு நமக்குத் தெரியுமாயின் பண்ணறிந்து பாடுதல் எளிதாக முடியும். பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களிலே பேசப்படும் பண் களேப் பெயரளவிலே தான் அறிகின்ருேம். அவற்றைப்பாடும் முறையையும் அவற்றிற் குரிய பாட்டுக்களேயும் நம்மால் அறிய முடிய வில்லே. வியாழக்குறிஞ்சி மேகராகக் குறிஞ்சி முதலியன குறிஞ்சிப்பண்ணின் வகையோவென்று கருத வேண்டியிருக் கிறது. இவ்வகையில் இசை வாணர்களின் ஆராய்ச்சியும் உழைப்பும் மிகுதியும் தேவைப்படுகின்றது.

பண்களேத் தோற்றுவித்தது போலவே ஐவகை நிலத்து வாழ்ந்தோரும் இசைக் கருவிகளேயும் தோற்றுவித்தார்கள். குறிஞ்சி நிலத்து வாழ்ந்தோர் (யாம) யாழினேயும், தொண்டகப்பறையினேயும் கண்டார்கள். முல்லே நிலத்தோர் முல்லே யாழினேயும், ஏறு கோட்பறையினேயும் மேற்கொண்டார்கள். மருத யாழும், மணமுழவும் மருத நிலத்திற் குரியவாயின. விளரியாழினேயும், மீன் கோட் பறையினேயும் நெய்தல் நிலத்தோர் கொண்டார்கள். பாலே நிலத்தோர்பாலே யாழினேயும், நிறைகோட்பறையினேயும் பெற்ருர்கள். இவையே ஆதிகால யாழ் வகைகளும் பறை வகைகளுமாகும். இவற்றி னின்றுங் கிளேத்தெழுந்து வளர்ந்தனவே இன்று நாம் காணும் இசைக்கருவிகளனேத் தும். இவை கண்டதுமின்றிப் பண்கள் பாடப் படுவதற்குரிய காலத்தையும் அவர் கள் கண்டறிந்தார்கள். குறிஞ்சிப்பண் பாடு வதற்குரிய காலத்தையும் அவர்கள் கண் டறிந்தார்கள். குறிஞ்சிப் பண் பாடுவதற் குரிய நேரம் யாமம் என்பதும், பாலேப்பண் பாடுவதற்குரிய நேரம் நண்பகல் என்பதும், சாதாரிப்பண் பாடுவதற்குரிய காலம் மாலே என்பதும், விளரிப்பண் பாடுவதற்குரிய

காலம் எற்பாடு என்பதும், மருதப்பண் பாடுவதற்குரிய நேரம் விடியல் என்பதும் அவர்கள் கண்டனவே.

இவ்வாறு பண்களைக் கண்டு அவற்றிற் குரிய இசைக் கருவிகளுடன் உரிய காலங் களில் அவற்றைப்பாடி இசையின்பம் பெற்று மகிழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். இவற்றிற் பிறழ்தலின்றிப் பாடுதலையும், அவர்கள் கடனாகக் கொண்டார்கள். பத்துப் பாட்டுக் களுள் ஒன்றாகிய மலைபடு கடாத்தில் பெருங் கௌசிகனார், கூத்தன் ஒருவனை ஆற்றுப் படுத்தும் பொழுது கூறுங்கால், "அடுக்கத் துக் குறிஞ்சிப்பாடி" யெனவும், "மருதம் பண்ணிசையினர் கழிமின்" எனவும், குறிஞ்சி நிலத்தில் குறிஞ்சிப் பண்ணையும், மருத நிலத்தில் மருதப் பண்ணையும் பாடிக் கொண்டு போகுமாறு அறிவுறுத்துவதும் இங்கு நினைவு கூர்தற்குரிய தொன்றாகும். இங்ஙனம் பாடுதல் தொழிலையே தம் தொழி லாகக் கொண்டு வாழ்ந்தவர்கள், பாணன் பாடினி யெனப்பட்டார்கள். அவர்கள் அரசர்களையும் வள்ளல்களையுமடைந்து திறங்காட்டிப் பரிசில் பெற்றனர் அரசர் களும், வள்ளல்களும், பாணர்களைப் பெரிதும் ஆதரித்தார்கள். அரசர்களுக்கும், பாணர் களுக்கும் நல்லுறவு ஏற்பட்டிருந்தது. இயற் புலவர்கள் தாம் அரசர்களைப் பற்றியோ வள்ளல்களைப் பற்றியோ பாடுவ தாகவிருந்தால் பாணன் கூற்றாகவோ, பாடினி கூற்றாகவோ, பாணனை ஆற்றுப் படுத்துவதாகவோ, விறலியை ஆற்றுப் படுத்துவதாகவோ பாடும் முறையை மேற் கொண்டிருந்தார்கள். தம்மைப் பாணனாக வும், பாடினியாகவும் படைத்துக் கொண்டு பாடியதற்குரிய காரணங்கள் பண்டைப் புலவர்க்கும், பாணர்க்கும் ஏற்பட்டிருந்த நல்லுறவும் பெருமதிப்புமே யாகும். ஆகவே தான் இயற் புலவர்கள் இவ்வாறு தம்மைப் பாணனாகவும், பாடினியாகவும் படைத்துக் கொண்டு செய்யுள் இயற்றினார்கள்.

இயற்றமிழின் பொற்காலம் சங்ககாலம் எனப்படும். இசைத் தமிழுக்கும் பொற் காலம் அதுவே யாதலை நாம் அறிதல் வேண்டும். முதல், இடை, கடைச்சங்கங் கள் முத்தமிழையும் வளர்த்தன. அகத்தியர், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க்கும் இலக்கணம் வகுத்தாரெனக் கேட்கின்றோம். இசை நூல்கள் எண்ணற்றவை தோன்றின. அச்சங்கங்களில் ஔவையார் விநாயகரைப் "பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருகி றேன்; நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றுந் தா" வெனக் கேட்கின்றார். இசையினையும் சங்கத்தார் வளர்த்தார்கள், என்பதனை இதனின்றும் நாம் அறியலாமல்லவா? இயற்றமிழை வளர்ப்பதற்குச் சங்கம் இருந் தது போன்றே இசைத்தமிழை வளர்க்கச் சங்கம் இருந்தது என்று கூறுவோரு முண்டு. திருக்கோவையாருள் வரும் பாட்டினை அவர்கள் மேற்கோளாகக் காட்டு வர். நினது உடல் இங்ஙனம் இளைத்துப் போகக் காரணம் என்னவெனத் தோழன் தலைவனைக் கேட்பதாக வரும், துறைப் பாட்டு அது.

[8] "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்து மென் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி
னாய்ந்த வொண்தீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ வன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு
என் கொலாம் புகுந்தெய்தியதே"

தமிழின் அகத்துறை, புறத்துறைகளை ஆய்ந்து கற்கப் புகுந்தாயோ, ஏழிசைச் சூழலை யெய்தினாயோ நினது உடல் இங்ஙனம் இளைத்திருக்கக் காரணமென்ன வென்று பாங்கன் தலைவனைக் கேட்பதாக மணிவாசகனார் பாடியிருக்கின்றார். இதனுள் ஏழிசை யெனக் குறிப்பிடுவது இசையே யாகும். சூழல் எனப்படுவது சங்கமே யாகும். இயலை வளர்த்தது போன்றே இசைக்கும் தனிச்சங்கம் வைத்து வளர்த் தார்கள் பாண்டியர்கள் எனக் கூறுவார்கள்.

இக்கருத்தினை வலியுறுத்துவது போன்று காணப்படுகின்றன நளவெண்பாவிற் காணப்படும் நல்லதொரு செய்யுள். சுயம் வரம் நடைபெறுகின்றது. தமயந்திக்கு அருகிலிருந்த தோழி, அரசர்கள் ஒவ்வொரு வரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு வரு

கின்றாள். பாண்டியனை அவள் அறிமுகப் படுத்தும் பொழுது :—

“ ஆழிவடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசை நூற் சங்கத்திருந்தானும்—நீள் விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாய் இச்சேய்—”

என அறிமுகப்படுத்துகின்றாள். ஏழிசை நூற் சங்கத்திருந்தான் பாண்டியன் என அறிமுகப்படுத்தும் வகையை நாம் ஆராய் தல் வேண்டும். இசைத்தமிழ் வளர்ச்சிக்குச் சங்கம் இருந்ததென்பதும், அதனையும் பாண்டியர்களே ஆதரித்தார்களென்பதும், இதிலிருந்து நாம் அறியக்கூடிய செய்தி களாகும். சிகண்டியார் என்பவர், தொல் காப்பியர் காலத்து வாழ்ந்தவர். அவரால் இயற்றப்பட்டது இசை நுணுக்கம் என்ப தாகும். இந்திர காவியம், பஞ்ச மரபு, செயிற்றியம் போன்ற இசை நூல்களும் சங்க காலத்தே தான் தோன்றின. ஏரணம் முதலிய நூல்களின் பெயரைக் கூறி அவை யனைத்தும் ‘‘வாரணம் கொண்டது அந்தோ வழி வழிப்பெயருமாள’’ வென்று வருந்து கின்றார் ஒரு புலவர். அவர் கூறும் நூல் களுள் பல இசை நூல்களாக இருக்கலா மெனத் தோன்றுகிறது. இயலிலும் இசை யிலும் வல்ல புலவர்கள் பலர் சங்கத்திருந் தார்களென அறிகின்றோம். அவர்களால் விடப்பட்ட அங்கொன்றும் இங்கொன்று மாகக் கிடைக்கின்ற செய்யுட்களே அதற்குச் சான்றாக விருக்கின்றன. எனவே முதல், இடை, கடைச் சங்கங்களில் முத்தமிழிலும் வல்ல புலவர்கள் ஒருங்கிருந்து முத்தமிழை யும் வளர்த்தார்களென்பதும், இசைத் தமிழில் நூல்கள் எண்ணற்று எழுந்தன வென்பதும், சங்க காலம் இசைக்குப் பொற் காலம் ஆக இலங்கிற்றென்பதும் அறியப் படும்.

கடைச்சங்க காலத்தை யடுத்து எழுந்தது எனக் கருதப்படும் சிலப்பதிகாரமும், முத் தமிழ்க் காப்பியமாகவே காணப்படுகின்றது. இசையாசிரியரின் அமைதி, தண்ணுமை யாசிரியரின் அமைதி, அரங்கின் அமைதி முதலியன கூறும் அரங்கேற்றுக் காதை இசைக்கு இலக்கணக்காதையாக அமைந் திருக்கின்றது. கானல் வரியும், ஆய்ச்சியர் குரவையும், வாழ்த்துக்காதையும் அவ்விலக் கணங்கட்கேற்ற இலக்கியங்களாகக் காட்சி யளிக்கின்றன. சிறப்பாக வரிப்பாடல்கள் நிரம்ப மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அடிகளால் வரிப்பாட்டுக்கள் திணை நிலை வரி, கிணை நிலைவரி, முகமுடைவரி, முக மில்வரி, படைப்பு வரியெனப் பல வகைப்படு மென்பர். அவையனைத்தும் இந்நூலுள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

கானல் வரி முதலியன திணை நிலை வரியின் பாற்பாடும். ஆற்றுவரி, ஊர்வரி முதலியன கானல் வரியின் பிரிவுகளே. இவையனைத் தையும் அடிகளார் சிறப்புறக் கையாண்டிருக் கிறார். தம் கருத்தினைக் கூறுவதை முக முடை வரி யென்பர். காவிரியை முன்னிலைப் படுத்தித் தன் கருத்தைக் கோவலன் கூறிய தாக இளங்கோவடிகளால் கூறும் திறம் மகிழ்தற்குரிய தொன்றாம்.

“ திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோலது வோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி ”

என்பது முகமுடை வரிக்கு எடுத்துக் காட் டாகும். சிலம்பினை யடுத்தும் அதே காலத் தும் தோன்றிய நூல்களுள்ளும் இசையின் பெருமையை ஆசிரியர்கள் விளக்கி யிருக் கிறார்கள்.

உதயணனுடைய வரலாற்றைக் கூறுவ தாகிய பெருங்கதை யென்னும் பெருநூலில் உதயணனை இசையின் வடிவமாகக் காட்டி யிருக்கும் திறம் அறிந்து மகிழ்தற்குரியதாம். அஃறிணைப் பொருளாகிய யானையையும், தனது இசைத்திறத்தால் தன் வயப்படுத்தித் தனது ஏவல் செய்யுமாறு ஆக்கிக் கொண் டான் உதயணன் என்பது பெருங்கதையுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

திருத்தக்கதேவர் இயற்றிய சிந்தாமணி யுள்ளும் இசைத்திறம் சிறப்பாகப் பாடப் பட்டிருக்கின்றது. காந்தருவ தத்தையார் பாடிய முறை பின்வருவோர் அனைவருக்கும்

வழி காட்டியாக இருக்குமாறு அதனுள் ஆசிரியரால் காட்டப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு காப்பியம் பாடிய புலவர்களே வரும் இசைத்தமிழை வளர்த்தலும் தம் கடனெனக் கருதிப் போற்றினர்கள். இவையனைத்தும் (கி. பி.) மூன்று அல்லது நான்காம் நூற்ருண்டு வரை இசைத்தமிழ் வளர்ந்த வரலாற்று விளக்கங்களே.

தமிழக வரலாற்றுள் (கி. பி.) நான்காம் நூற்ருண்டிலிருந்து ஏழாம் நூற்ருண்டு வரையுள்ள இடைப்பட்ட காலத்தை இருண்ட காலம் என்பர். அக்காலத்து ஆண்ட அரசர்களைப் பற்றியோ, வள்ளல்களைப் பற்றியோ, வாழ்ந்த மக்களைப் பற்றியோ யாதொன்றும் அறியப்பட்டிலது. ஆகவே அக்காலத்திய இசை வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ளவும் இயலவில்லை.

(கி. பி.) ஏழாவது நூற்ருண்டிலிருந்து, பதின்மூன்ரும் நூற்ருண்டு வரை தெய்வீக இசை, தமிழகத்தில் தோன்றிச் செழிப்புற்றிருந்தது. இக்காலத்தின் முற்பகுதியைத் தெய்வீக இசைத் தோற்றத்தின் காலமாகவும், பிற்பகுதியை அதன் வளர்ச்சிக்குரிய காலமாகவும் கொள்ள வேண்டும். ஏழாம் நூற்ருண்டிலிருந்து பத்தாம் நூற்ருண்டு வரை நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பினர்கள். பத்தாம் நூற்ருண்டிலிருந்து பதின்மூன்று அல்லது பதினன்காம் நூற்ருண்டு வரை சோழவரசர்கள் சிவநெறிச் செல்வராயிருந்து தேவாரங்களை நாடு முழுதும் பரப்பினர்கள். இடைக் காலத்தில் தோன்றிய அடியவர்கள் அனைவரும் இன்னிசையால், இனிய தமிழைப் பரப்பினர்கள். இன்னிசையோடு பாடல்களைப் பாடவேண்டிய சூழ்நிலை அன்றிருந்ததென அறியக் கிடக்கின்றது. இசையில் மக்கள் பெரு விருப்பமுடையவர்களாக அன்றிருந்தமையால் அதனையே கருவியாகக் கொண்டார்கள் அடியார்கள் என்று கொள்ளுதல் தகும். அவ்வாருயின் இருண்ட காலமெனப்படும் காலத்திலும் இசை தடையேதுமின்றி வளர்ந்து வந்தது என்று கொள்ளல் வேண்டும். மக்கள் இசையே இன்ன தென்றறியாதிருந்த காரணத்தினுல்தான் அதனையே கருவியாகக் கொண்டு அடியார்கள் தம் கருத்தைப் பரப்பினர்கள் என்றுங் கொள்ளலதகும். எது எவ்வாருயினும் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்வது இசையென்பதை யுணர்ந்து அதனைக் கருவியாகக் கொண்டார்கள் அடியவர்கள். அனைவரும் என்பது மட்டும் உறுதியாக அறியக் கிடக்கின்றது. சமணம் போன்ற பிறசமயங்களினின்றும் மக்களை விடுவிக்க அடியார்கள் முயன்ருர்களாதலின் அனைவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் இசையே அம் முயற்சி முற்றுப்பெறுதற்கேற்ற கருவியென்றும் அடியார்கள் கருதியிருக்கலாம். எனவே, இயற்றமிழும் இசைத்தமிழும் அடியார்களால் பரப்பப்பட்ட காலம் இதுவேயாகும்.

மக்களின் உள்ளத்துறும் உணர்ச்சிகளை மட்டும் வெளியிட்டு வந்த இசை, அகப்பாட்டாக மட்டும் இருந்த இசை தெய்வத்தைப் பற்றிய கருத்துக்களையும் வெளியிடுவதற்குரியதாக ஆயிற்று. அடியவர்கள் தெய்வீக இசையாக அதனை மாற்றி யமைத்தார்கள். இசை வளர்ச்சியில் இக்காலம் சிறந்ததொரு காலமாகவிருந்தது. பாடப்படுகின்றபொருளில், மாற்றங் கண்டார்கள் அடியவர்கள்.

காதலுணர்வைப்பற்றி மட்டும் விளக்கிய இசை, கடவுள் உணர்வையும் விளக்கும் இசையாக மாறிற்று. சிலவிடங்களில் முன்னேர் கண்ட முறையும் விடாது, தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனுகவும் கொண்டு அடியவர்கள் இன்னிசை பாடி மகிழ்ந்து மிருக்கின்ருர்கள். வண்டு, கிளி முதலியவற்றைத்தாம் இறைவன்பால் தூது விடுவதாக அடியவர்கள் பாடியிருக்கும் பாடல்கள் அதற்கு எடுத்துக்காட்டாக அமையும்.

அடியவர்களனைவரும் ஓரிடத்திலிருத்தலின்றி நாடு முழுவதுமிருந்த தலங்களனைத்திற்குஞ் சென்று இறைவனை இன்னிசை பாடித் துதித்து மகிழ்ந்தனர். அடியார்கள் கூட்டம் தம்மைச் சூழ்ந்துவர ஊர்தோறும் சென்று இறைவனை இன்னிசையால் பாடி

மகிழ்ந்தார்களாதலால் மக்களனைவரும் அவர்கள் நெறியிற் சேர்ந்ததன்றி இசையுணர்ச்சி யுடையவர்களாகவும் ஆயினர். இம்முறையில் அடியவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் அனைவர்க்கும் இசையறிவு உண்டாகும் வகையிலும் பெருந்தொண்டு செய்திருக்கின்ருர்கள். தேவாரப் பாடல்கள் இடைக்காலத்தில் தோன்றிய இன்னிசை மலர்களாம். "நாளும் இன்னிசையால் நற்றமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்" எனச் சிறப்பிக்கப்பட்ட ஆசிரியர் தேவார மூவர் களில் தலைசிறந்தவராவர். சூலைநோயால் துடிப்புற்ற பொழுது நாவுக்கரசர் தாம் செய்து வந்த தொண்டினைச் சொல்லு கின்ருர்.

"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"

என்று. இவர் தேவார ஆசிரியர்களிலே இரண்டாவது வைத்து எண்ணத்தக்கவர். தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தியும் தேவார ஆசிரியரேயாவர். இம்மூவரும் இடைக்காலத்தில்—இசை வளர்ச்சிகுன்றிய காலத்தில் இன்னிசைபாடி இசைத்தமிழை வளர்த்தார்கள். இவர்களுடைய பாடல் களிலே வரும் பண்கள் பலவாம். நட்ட பாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்மூரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், செவ்வழி, காந்தார பஞ்சமம், கொல்லி, சாதாரி முதலியன இவர்களுடைய பாடல்களில் பயின்று வந்திருக்கின்றன. இவையேயன்றித் திரு நேரிசை, திருவிருத்தம், திருக்குறுந் தொகை, திருத்தாண்டகம் முதலியனவும் இருக்கின்றன. இவையனைத்தும் இன்று வழக்குகளில் இசையுள் எப்பண்களை ஒத்திருக்கின்றனவென்பதனையறிந்தால் அவற்றை அம்முறையோடு பாடமுடியும். பண்டைத்தமிழ்ப்பண்கள் இன்று வழக்கில் இல்லாமையால் அவற்றை இன்று வழங்கும் பண்களோடே ஒப்பிட்டு அறிய வேண்டி யிருக்கின்றது.

வள்ளல் இராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களாலும், அவர்களின் திரு மகனுராகிய உயர்திரு இராஜா சர், முத்தையா செட்டியார் அவர்களாலும் தோற்றுவிக்கப் பெற்று வளர்ந்து வருகின்ற சென்னைத் தமிழ் இசைச் சங்கத்திலும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும், இப்பெருந்தொண்டு நடைபெற்று வரு கிறது. இவை பாராட்டிற்குரியது. அத் தொண்டு மேலும், மேலும் வளரத் தேவாரப் பண்களின் இயல்பை யுள்ளபடி யறிந்து அனைவரும் ஓதி மகிழும் நாள் விரைவில் வந்தெய்துமாக.

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரேயன்றி மணிவாசகனுரும் இசைக்குப் பெருந்தொண்டு, புரிந்தாரென்பதை நாம் இங்கு உணரவேண்டும். திருவெம்பாவைப் பாட்டு, அம்மானைப்பாட்டு, ஊசற்பாட்டு, குயிற் பாட்டு, முதலியனவும் இசைக்கு உரிய பாட்டுக்களே யாகும். இவற்றையும் அவற்றைப் பாடுமியல்பறிந்து பாடி மகிழ்தல் நம் கடனுகும்.

சைவ அடியவர்களேயன்றி (வைணவ) அடியவர்களும் இம்முறையை மேற்கொண்டு இறைவனைத் துதித்தனர். நம்மாழ்வார் பக்தியிலேயன்றிப் பண்களையமைத்துப் பாடுதலிலும் சிறந்தவராய் விளங்கினர்.

பழந்தமிழ்ப் பண்களும் பழைய இலக் கணத்திற்கேற்ற தாளமும் அவருடைய பாசுரங்களில் அமைந்திருப்பதை அறிய லாம். வைணவப் பெரியார்கள் அதனைத் தேவகானம் எனப் பாராட்டுவர். தேவாரத் திற் காணப்படும் தக்கராகம், காந்தாரம், நட்டபாடை, இந்தளம் முதலிய பண்கள் திருவாய் மொழியிலும் காணப்படுகின்றன. தேவாரத்திற் காணப்படாத பண்கள் சிலவும் இதனுள் காணப்படுகின்றன. அவை செருத்தி, முதிர்ந்த விந்தளம், வியந்தம், நாட்டம் முதலியனவாம்.

பாணர் குலத்திற் பிறந்து பரந்தாம னுடைய அழகைப் பாதாதி கேசமாக வருணித்து இசையின் பெருமையை எல்லோருமறியச் செய்த திருப்பாணுழ் வாரின் வரலாற்றை யறியாதார் யார்?

இங்ஙனம் நாயன்மார்களும் ஆழ்வார் களும் இடைக்காலத்தில் தோன்றிச் சைவ வைணவங்களை வளர்த்ததோடன்றி இசை

யையும் வளர்த்தார்கள் என்பது இதுகாறுங் கூறியவற்ருல் அறியப்படும்.

தோன்றிய இன்னிசைப் பாடல்களை நாடு முழுதும் பரவச் செய்த பெருமை சோழர் களையே சாரும். சோழர்கள் ஆட்சியினுல் தமிழகம் அடைந்த நன்மை சொல்லுந் தரத்தன்று. அரசியல் அமைப்பிலே பிற நாட்டாரோடு செய்த வணிகத்திலே, வீரத்திலே, கலை வளர்ச்சியிலே பிறவற்றிலே தன்னிகரற்று விளங்கியகாலம், சோழர் காலமேயாகும். மண்ணுலும் செங்கற் களாலும் இருந்த கோவில்களைக் கருங்கற் கோவில்களாகச் செய்த பெருமை சோழர் களையே சாரும். இறைவன் உறையும் கோவிலைக் கலைகள் உறையுங் கோவிலாகச் சிற்பம், சித்திரம் ஆகியவையமையச் செய்த பெருமையும் சோழர்களையே சாரும். தோன்றிய சைவ வைணவ சமயங்களை எஞ்ஞான்றும் நிலைநிறுத்துவார் போன்று சிவன் கோவிலும் திருமால் கோவிலும் அவர்களால் நாடு முழுவதும் கட்டுவிக்கப் பட்டன. நாள் விழாவும், ஆண்டு விழாவும் சிறப்பாக நடைபெற அவர்கள் கோவில் களுக்கு நிலதானமும் செய்தனர். சுருங்கச் சொல்வதானுல் சைவ வைணவ சமயங்கள் இந்நாட்டில் நிலைத்திருக்க நிலையான வழிகோலியவர்கள் சோழர்களே என்று கூறலாம்.

சிவனுக்கும், திருமாலுக்கும் கோவில்கள் எடுத்ததோடு மட்டுமின்றிச் சைவ வைணவ சமயங்களின் நூல்களையும் அவர்கள் போற்றி ஆதரித்தார்கள். மறைந்து அழிந்து பட்ட தேவார ஏடுகளைக் கண்டெடுத்தவர் யார்? திருமுறைகண்ட சோழ தேவரி லிருந்து குலோத்துங்க சோழன் வரையில் வாழ்ந்த சோழமன்னர்கள் சமயங்கட்குச் செய்த தொண்டுகளை எவ்வாறு எடுத் துரைக்க இயலும்?

பொன்னேடு வேய்ந்து-சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமாக்கிய பெருமை யாரைச் சாரும்? முன்னும் பின்னும் இல்லாத வகையில் தஞ்சையிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும் இறைவனுக்குக் கோவில் களெடுத்த பெருமை இராச இராசனையும், அவன் மகன் இராசேந்திரனையுமன்ருே சாரும்! அரசர்கள் மட்டுமல்லர்: அரசிகளும் இப்பணியில் சிறந்திருந்தார்களென்பது அறிந்து மகிழ்தற்குரியதொன்ரும். குந்தவை போன்றவர்கள் கோவிலுக்கு அளித்த நந்தா விளக்குகள் எத்தனை? அளித்த அணி வகைகளின் மதிப்பு என்ன? எனவே சோழர்கள் குடும்பமே சமயங்களை வளர்த்த குடும்பமாகக் காட்சியளிப்பதையறியலாம். தேவாரங்களைப் பரப்புவதற்குச் சோழர்கள் செய்த தொண்டு சொல்லுந்தரமன்று. தேவாரப் பண்களிலே சிலவற்றைப் பற்றி யாவது நாம் இன்று அறிந்து கொள்கின்ருே மென்ருல் ஓதுவார்கள் சிலராவது இங்கு மங்குமாகக் காணப்படுகின்ருர்களென்ருல் அவையனைத்திற்கும் காரணமாக விருந்த வர்கள் சோழர்களே என்பதை நாமுணர வேண்டும்.

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய சோழப் பேரரசன் இராசராசனே யாவன். அவன் சைவத்திடத்தும், தமிழிடத்தும் நிறைந்த அன்புடையவன். அவன் தஞ்சைக் கோவிலுக்கேயன்றி மற்றைய கோவில்களுக்கும் அளித்த நிலதானங்கள் அளவில. தஞ்சைப் பெரிய கோவிலிலே நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்ய நாற்பத்தொன்பதின்மரை நியமித் திருந்தான். அதன் பொருட்டு அவர் களுக்கு நிலதானமும், வழங்கியிருந்தான். இச்செய்தி இராசராசனுடைய கல் வெட்டுக் களிலிருந்து நாமறியக் கிடக்கின்றது.

இராசராசன் மட்டுமன்று அவன் மகன் இராசேந்திர சோழனும் இம்முறையையே மேற்கொண்டு தேவாரப் பண்களை வளர்த் தான். அவனுல் கட்டப்பட்ட கோவில் தஞ்சைப் பெரிய கோவிலை யொத்த கங்கை கொண்ட சோழீச்சரமாகும். அதன்கண் நாள்தோறும் தேவாரம் ஓதப்பட்டு வந்தது. தேவாரம் ஓதுவார் இருந்து பாட மண்டபம் ஒன்று கோவிலினுள் அமைத்திருந்தான். அது தேவார மண்டபம் என வழங்கப் பட்டது.

இராசேந்திரனுடைய கல்வெட்டு ஒன்ருல் இச்செய்தி அறியப்படுகின்றது. இவர்

களின் பின்வந்த சோழர்களும் இம்முறை யிலேயே கோவில்களிலே தேவாரம் ஓதப் படவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

குலோத்துங்க சோழன் பெரிய புராணம் பாடக் காரணமாகவிருந்த பேரரசன். அவனுடைய தேவியர்களில் ஒருவர் ஏழிசை வல்லபி யென்னும் பட்டப் பெயரை யுடையவர். குலோத்துங்க சோழன் இசை யிடத்துப் பெற்றிருந்த பேரன்பால் ஏழிசை வல்லபி என்னும் இசைவிருது பெற்ற மங்கையை மணந்து வாழ்ந்தான் என்று கூறுவர்.

இங்ஙனம் சோழர்கள் இன்னிசை பரவச் செய்த தொண்டுகள் எண்ணில. எனவே சோழர்களைச் சமயங்களையும் இசையையும் வளர்த்த பேரரசர்கள் எனலாம்.

ஆகவே, இடைக்காலத்தில் தோன்றியது தெய்வீக இசையே என்பதும், அதனை நாட்டில் நிலைபெறச் செய்தவர்கள் சோழர் களே என்பதும் இதுகாறும் கூறியவற்றால் பெறப்படும். அத்தகைய தெய்வீக இன் னிசையை, தேவாரப் பண்களைத் திரு முறைகளை வளர்க்க அனைவரும் தங்களால் ஆன தொண்டுகளைச் செய்ய வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன். வாழ்க தெய்வீக இசை''.

## அகிலாண்டநாயகி மாலை

பரவுவெண் ணுவ னீழலோ னிடத்தாள்
பற்றிய வென்முனங் குறுக
உரவுசெய் தண்ட தரனுள நடுங்கு
முதைத்ததத் தாளென வுன்னி
விரவுமப் பதநின் பதமன்றோ வதனை
மென்பத மென்பதென் விளம்பாய்
கரவுருப் புலவர் புகழ்திரு வானைக்
காவகி லாண்ட நாயகியே. (75)

ஒருகருங் கேழ லுருவெடுத் திணையி
லுன்பதி யடிமலர் காண்பான்
பெருநில மகழ்ந்த மாயவ னினது
பிறங்குபே ராலயஞ் சூழ்ந்த
பொருவினீ றிட்டான் மதிலடி கண்டாற்
போதுமே புண்ணியக் கொழுந்தே
கருள்கடிந் தொளியின் மலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (76)

# பண்ணார் தமிழ்

வித்துவான், திரு க. வெள்ளைவாரணன், துணைப்பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

இயல் இசை நாடகம் என்னும் மூன்று துறைகளிலும் வளம் பெற்று வளர்ந்த தமிழ் மொழியானது, பழத்தினிற் சுவையும் கண்ணிடை மணியும் போன்று இசை வளர்ச்சிக்கு இன்றியமையாத தாய்ப் பண்ணிடையே கலந்து நின்று இசைக்குச் சுவையும் தரவல்லதாகும். இந்நுட்பம்,

" பண்ணினுர் பாடலாகிப் பழத்தினில் இரதமாகிக்
கண்ணினுர் பார்வையாகி " (4–70–4)

எனத் திருநாவுக்கரசரும்,

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற்சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் (7–29–6)

என நம்பியாரூரரும் இறைவனை உவமித்துப் போற்றுதலால் இனிது விளங்கும். ஞானத்திரளாய் நின்றபெருமான் பண்ணாகவும் பண்ணகத்தே இனிய ஓசையினையுடைய தமிழின் உருவாகவும் திகழ்கின்றான் என்பது,

" பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும் முழு தானனிடம் வீழிம்மிழ லையே "
(1–11–4)

" எண்ணனவன் இசையானவன் " (1–16–6)

" இயலும் இசையானை "

" பாவின் இசைக் குழகர் " (3–46–3)

என ஆளுடைய பிள்ளையாரும்,

" பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை " (5–47–8)

" பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும் " (6-15–1)

' மருவற்கினிய
பண்ணகத்தான் பத்தர் சித்தத்துளான் ' (4–112–6)

" சந்திருவம் பாட்டிசையிற்காட்டுகின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலானன்காண்"
(6–52–1)

" முத்தமிழும் நான்மறையும் ஆனன்கண்டாய் "
(6–23–9)

என ஆளுடை அரசும்.

" ஏழிசை யாய் இசைப்பயனய் " (7–51–10)

" பாட்டகத்து இசையாகி நின்றனை " (7–62–3)

" வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசையேழ் நரம்பின் ஓசையை " (7–83–6)

என ஆளுடைய நம்பியும் தமது அருள் வாழ்வில் கண்டுணர்த்திய அநுபவ உண்மையாகும்.

எங்கும் நீக்கமற நிறைந்து விளங்கும் முழுமுதற் கடவுளை வழிபட்டு இன்புறுதற்கேற்ற சாதனமாவன, இறைவனது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் தோத்திரங்களாகிய இனிய இசைப்பாடல்களே யாகும். திருக்கோயில்களில் நாள் வழிபாட்டில் இறைவனுக்குத் திருமஞ்சனமும், நறுமலரும், திருவமுதும், தீப தூபமும், நான்மறை முழக்கமும், அந்தணர் வேள்வியும் இன்றியமையாதவாறு போலவே இறைவனது மெய்ம்மையான புகழ்த்திறங்களைப் பரவிப் போற்றும் செந்தமிழ்க்கீதமாகிய தெய்வப் பாடல்களும் மிகவும் இன்றியமையாதனவாகும். இவை திருக்கோயில்களில் இறைவனை வழிபட்டுநலம்பெறக் கருதிவரும் பல்லாயிரவராகிய மக்களது உள்ளத்தை நெகிழ்வித்து ஆன்றோருள்ளத்தில் அருளாளனாகிய இறைவன் கோயில் கொண்டு விளங்கும் வண்ணம் பேரன்பாகிய பத்தியை விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்தன. ஆதலின் அண்ணலாகிய இறைவனைப் போற்றிய இசைத் தமிழ்ப் பாடல்களாகிய இவற்றைப் 'பத்திமைப் பாடல்' என வழங்குவர் சான்றோர். இறைவன் திருக்கோயில்களில் இன்றியமையாது இடம் பெறத்தக்க வழிபாட்டு முறைகளில் பாடுதலாகிய இத்திருத்தொண்டு மிகவும் சிறந்ததாகும். இனிய இசைத்தமிழ்ப் பாடல்களாகிய தோத்திரங்களைத் தாளத்தோடும் யாழ், வீணை, முழவு, மொந்தை முதலிய இசைக் கருவிகளோடும் அன்புடைய அடியார் பலர் கூடிப்பாடும் கூட்டத்தை விட்டு

இறைவன் கணப்பொழுதும் பிரியாது உடனிருந்து அருள் புரிவான் என்பது ஆன்றோர் துணிபாகும்.

" தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணைபண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல் செய்கையிடம் ஓவார்
(1–73–8)

' வந்த ஊணந் தின்னிசை பாடுவார்பால் மன்னினர் '
(1–8–5)

என ஞானசம்பந்தரும்,

' யாழின் பாட்டையுகந்த அடிகளே ' (5–41–5)

' மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் ' (6–8–5)

என நாவுக்கரசரும் அருளிய திருப்பாடல்கள், பத்தராய்ப்பாடுவார் எல்லார்க்கும் இறைவன் எளிவந்து அருளுந் திறத்தை இனிது புலப்படுத்துதல் அறிந்து மகிழத் தக்கதாகும்.

வெண்ணெய் நல்லூர்ப் பெருமான், நம்பியாரூராகிய சுந்தரரது திருமணத்தின் போது முதுவேதியர் கோலத்துடன் வந்து 'ஆரூரனே, எனக்கு உன் குடிமுழுதும் அடிமை' எனக் கூறி, அதற்குச் சான்றாக எழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி ஆரூரரை அடிமை கொண்டருளி அவரை நோக்கி, 'நீ நம்முடன் வன்மொழிகளைப் பேசினை ஆதலால் 'வன்றொண்டன்' என்ற பெயரைப் பெற்றாய். நமக்கு அன்பினாற் செய்யத்தக்க வழிபாட்டிற்குரிய மந்திரம் இசைநலம் வாய்ந்த இனிய தமிழ்ப்பாடலே ஆகும். ஆதலால் இந்நிலவுலகில் இயலிசைத் தமிழ்ப் பாடல்களால் நம்மைப் பாடிப் போற்றுவாயாக' எனப் பணித்தருளினர், என்பது வரலாறு. இந்நிகழ்ச்சி,

' மற்றும் நீ வன்மை பேசி
வன்றொண்ட னென்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார்
தூ மறை பாடும் வாயார் ' (தடுத்–70)

எனத் திருத்தொண்டர் புராணத்தில் தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் முதலிய அருளாசிரியர்கள் காலத்தில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் நிகழும் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் தமிழ்மொழியே முதலிடம் பெற்று விளங்கியது. இறைவனது பெருங் கருணைத் திறத்தை வியந்து போற்றும் பத்திமைப் பாடலாகிய இசைத்தமிழ்ப் பாடல்கள் அக்காலத்தில் சிறப்பிடம் பெற்றன. இச்செய்தி,

' செந்தமிழோர்கள் பரவியேத்தும்
சீர் கொள் செங்காட்டங் குடியதனுள்
' கந்தம் அகிற்புகையே கமழும் கணபதி யீச்சரம் '
(1–6–9)

எனவும்,

' தம்மலரடியொன் றடியவர் பரவத்
தமிழ்ச் சொலும் வடசொலுந் தாள்நிழற்சேர
அம்மலர்க் கொன்றை யணிந்தஎம் அடிகள்
அச்சிறு பாக்கம தாட்சி கொண்டாரே ' (1–77–4)

எனவும்,

' செந்தமிழர் தெய்வமறை நாவல்செழு
நற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர்...வீழிநகரே.' (3–80–4)

எனவும்,

' பண்ணியல் பாடலறாத ஆவூர்ப் பசுபதியீச்சரம் '
(1–8–1)

' பத்திமைப் பாடலறாத ஆவூர்ப் பசுபதியீச்சரம் '
(1–8–2)

எனவும் வரும் தமிழ் ஞானசம்பந்தர் வாய்மொழிகளால் நன்கு விளங்கும். மேற்காட்டிய தொடர்களைக் கூர்ந்து நோக்குங்கால், ஆளுடைய பிள்ளையார் காலத்தில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழ்மொழிப் பாடல்களும் வடமொழி நான்மறைகளும் இறைவழிபாட்டிற்கு இன்றியமையாத மறைமொழிகளாக ஒப்ப ஆளப்பெற்ற திறம் இனிது புலனாதல் காணலாம்.

பத்தராய்ப் பணியும் மெய்யன்பினராகிய அடியார் பலர். பரமனையே பாடும் இசைத் தமிழ்ச் செல்வர்களாய்த் திருக்கோயில்களில் தங்கியிருந்து உமையொருபாகனாகிய இறைவனை இன்னிசைப் பாடல்களாகிய தெய்வப் பாடல்களாற் பரவிப் போற்றியும், அச்செழும் பாடல்களின் பொருள் நலங்களில்

திளைத்தும், தம்மையொத்த மெய்யடியார்களுடன் இறைவனது அருளியல்பினை யெடுத்துரைத்து அன்பினுல் அளவளாவியும், நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர்வார முழுமுதல் கடவுளை இடைவிடாது தியானித்தும் வழிபட்டிருந்தனர். இச்செய்தி,

'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்'
(2–43–5)

'பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்
(2–43–8)

'பாடுவாரிசை பல்பொருட் பயனுகந் தன்பாற்
கூடுவார் துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித்
தேடுவார் பொருளானவன் செறிபொழில் தேவூர்
ஆடுவானடி யடைந்தனம் அல்லலொன் றிலமே'
(2 82–5)

'தென்தமிழ்க்கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடியடைந்தனம் அல்லலொன்றிலமே'
(2–82–7)

'கலவமாமயி லாளொர் பங்கனைக்
கண்டு கண்மிசை நீர்நெகிழ்த்திசை
குலவுமா று வல்லார் குடிகொண்ட கோட்டாற்றில்'
(2–52–7)

என வரும் திருப்பதிகத் தொடர்களால் இனிது விளங்கும்.

தமிழ்நாட்டில் இறைத்திறத்தில் வல்ல ஆடவரும் மகளிரும் நாட்காலையே துயிலெழுந்து நீராடித் தூய சிந்தையுடன் திருக்கோயிலை யடைந்து இறைவனது அருளியல்பினை நினைந்து ஆரா அன்பினுல் நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் மல்கி இனிய இசைப் பாடல்களைப் பாடியும், யாழ் வீணை முழவு மொந்தை முதலிய இசைக் கருவிகளை வாசித்தும், இசைப் பாடல்களின் சுவை நலங்கள் புலப்படும் வண்ணம் விறல்பட ஆடியும் தெய்வ வழிபாட்டில் மகிழ்ந்தார்கள்.

'துன்னிய மாதரும் மைந்தர் தாமுஞ்
சுனையிடை மூழ்கித்துதைந்த சிந்தைப்
பன்னிய பாடல்பயிலும் ஆரூர்ப் பசுபதியீச்சரம்'
(1–8–10)

'புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துடனேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாடலெடுக்குங் கூடலாலவாய்'
(1–7–3)

'அஞ்சுடரோ டாறுபத மேழினிசை
யெண்ணரிய வண்ணமுளவாய்
மஞ்சரொடு மாதர்பலருந் தொழுது
சேரும் வயல்வைகாவிலே'
(3–71–6)

'இசைவரவிட்டியல் கேட்பித்துக்கல்ல வடமிட்டுத்
திசை தொழுதாடியும் பாடுவார் சிந்தையுட்சேர்வரே'
(3–9–6)

'பண்ணிய நடத்தொடிசை பாடும் அடியார்கள்
நண்ணிய மனத்தின் வழிபாடு செய் நள்ளாறே'
(2–33–2)

எனவரும் திருப்பதிகத் தொடர்கள் பண்டை நாளில் இசையில் வல்ல ஆண்களும், பெண்களும் திருக்கோயில்களிற் சென்று இறைவன் புகழைப் பண்ணுர்ந்த பாடல்களால் பாடி வழிபாடு செய் திறத்தை நன்கு புலப்படுத்துவன.

தமிழேயன்றிப் பிற மொழியாகப் பெற்று வேறு திசையில் வாழும் ஆடவரும் மகளிரும் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களை வழிபட்டு இங்குப் பாடப்பெறும் இசைத் தமிழ்த் திறங்களை நன்குணர்ந்து பாடும் பயிற்சியைப் பெற்றனர். பொழுது புலர்வதன் முன்னரே துயிலெழுந்து நீர் மூழ்கித் திருக்கோயிலில் வழிபட வரும் மாந்தரது மனவிருள் நீங்கும் வண்ணம் தாம் பயின்ற இசைத் தமிழ்ப் பாடல்களையும் முன்னரே கற்றுணர்ந்த வடமொழித் தோத்திரங்களையும் ஏனைத் திசை மொழியிசைப் பாடல்களையும் வீணை முதலிய நரம்புக் கருவிகளில் வைத்து வாசித்து மகிழ்ந்தார்கள். இந்நிகழ்ச்சி,

'ஊறுபொரு ளின்றமி ழியற்கிளவி
தேருமட மாதருடனர்
வேறுதிசை யாடவர்கள் கூறஇசை
தேருமெழில் வேதவனமே'
(3–76–4)

எனவும்,

'தென்சொல்விஞ்சமர் வடசொல்
திசைமொழியெழில் நரம்பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு
தொல்புகலூ ரில்'
(2–92–7)

எனவும் வரும் திருஞானசம்பந்தர் தேவாரத் தொடர்களால் நன்கு புலனுதல் காணலாம்.

இசைத்திறத்தில் நன்கு தேர்ந்தவர்களேயன்றி இசைத்துறையிற் போதிய பயிற்சியும், குரல் வளமும் பொருளுணர்ந்து பாடும்

மொழிப் பயிற்சியும், உடல் வன்மையும் நன்கு வாய்க்கப்பெருத முதியவர்களும் இறைவன்பாற் கொண்ட பேரன்பாகிய பத்தியினுல் தம்மால் இயன்ற அளவு பத்திமைப் பாடல்களாகிய இசைப் பாடல் களைப் பாடி இறைவனை வழிபட்டு மகிழ்ந் தார்கள். இச்செய்தி,

'கோழை மிடருகக் கவிகோளுமிலவாக
இசைகூடும் வகையால்
ஏழையடியாரவர்கள் யாவைசொன
சொன்மகிழும் ஈசன்' (3-71-1)

எனவரும் திருப்பாடலால் இனிது புலனுகும்.

பண்டைநாளில் தமிழகத்திலுள்ள திருக் கோயில்களில் தெய்வப் பாடல்களை இசை யுடன் பாடுவோரும் யாழில் இசைப்போரும் ஆகிய இசைவாணர்கள், அழுக்கேருத தூய உடையும் நோயின்றித் தூய்மை வாய்ந்த உடல் வனப்பும் மாசற்ற தூய நன்னெஞ்சும் உடையராய் விளங்கினர் என்பதனை,

'புகை முகந் தன்ன மாசில் தூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலையர் இன்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க'
(திருமுருகு 138—147)

எனவரும் தொடர்களால் சங்கப் புலவராகிய நக்கீரர் விரித்துக் கூறியுள்ளார்.

இங்ஙனமே தேவார ஆசிரியர்கள் காலத் தும் தென்னுட்டுத் திருக்கோயில்களில் இறைவனைச் சேவித்துத் தெய்வப் பாடல் பாடும் மகளிர், இனிய இசை மொழியும் உடல் வனப்பும் தூய்மையும் நற்குணங்க ளெல்லாவற்றுக்கும் இடனுகிய உள்ளத் தூய்மையும் ஒருங்குடையராய், எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளது அருள்மேனி வண்ணங்களும் வரம்பிலாற்றலும் நலம் வளர் ஞானவுரைகளும் ஆகிய பெருஞ்சீர்த்தி களைப் பொருளாகக் கொண்ட இன்னிசைச் செழும் பாடல்களை இறைவன் திருமுன் னர்ப் பாடிப் போற்றினுர்கள். இச்செய்தி யினை,

'பண்ணினல்ல மொழியார் பவளத்துவர் வாயினர்
எண்ணினல்ல குணத்தார் இணைவேல்
வென்ற கண்ணினுர்
வண்ணம்பாடி வலிபாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுகந்தானும் ஐயாறுடை ஐயனே'
(2-6-4)

என வரும் திருப்பாடலில் ஆளுடை பிள்ளை யார் அழகுறக் குறிப்பிட்டுள்ளார்.

பண்ணுர்ந்த பாடல்களால் இறைவனைப் பாடிப் போற்றுதலாகிய இத்திருப்பணி யாவராலும் விரும்பி மேற்கொள்ளத்தக்க எளிமையும் இனிமையும் ஒருங்குடைய தென்பதும், இவ்வினிய சாதனத்தை மேற் கொள்ள மனமில்லாதார் இதனின் மிக்க மற்றைத் தொண்டுகளை மேற்கொண்டு பத்தி செய்ய இயலாதென்பதும் அருளநுபவ முடைய அடியார்களின் துணிபாகும்.

'பத்தனுய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினுற் பத்திசெய்கேன் என்னைநீ யிகழ வேண்டா'

என அப்பரடிகள் தில்லைச் சிற்றம்பலவனை யிறைஞ்சிக் கூறும் இவ்வேண்டுகோள், இறைவன்பாற் பத்தி செய்தற்கு இன்றி யமையாத எளிய சாதனம் பாடும்பணியே என்ற இவ்வுண்மையினை நன்கு வலியுறுத் தல் காணலாம்.

திருக்கோயில்களில் திருவலகிடுதல், மெழு குதல், நறுமலர்மாலை தொடுத்தல் என்ற இச்சரியைத் தொண்டுகள் ஒன்றினுக்கு ஒன்று பத்து மடங்கு மேற்பட்ட நற்பயன் களைத் தருவன. திருக்கோயிலில் திருவிளக் கிடுவோர் உண்மை நெறியாகிய சிவஞானத் தைப் பெறுவர். இறைவனது மெய்ப்புகழை விரித்துரைக்கும் இன்னிசைப் பாடலாகிய கீதத்தை மிகப்பாடும் அடியார்களுக்கு இறைவன் அருளுந்திறம் மேற்குறித்த தொண்டுகளால் விளையும் நற்பயன்களைக் காட்டிலும் அளவற்றனவாகும். இத்தகைய

திருத்தொண்டின் பயன்களை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது,

'விளக்கினுற் பெற்றஇன்பம் மெழுக்கினுற் பதிற்றியாகும்
துளக்கில் நன்மலர் தொடுத்தால் தூய விண்ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னுர்க்கு அடிகள்தாம் அருளுமாறே'

என வரும் திருநேரிசையாகும். இதன் ஈற்றடியினை

'கீதஞ் சொன்னுர்க்கு அடிகள் அருளுமாறு அளப்பில'

என இயைத்துப் பொருள் காண்க. (தாம்—அசை) இனி, இத்திருப்பாடலில் திருவலகிடுதல் முதலிய திருப்பணிகளைச் செய்தார் பெறும் பேறு இவ்வளவு இவ்வளவு என உணர்த்திய அடிகள், புகழ்த்திறத்தால் அளவில்லாதனவாகிய இசைப்பாடல்களால் இறைவனைப் போற்றினுர்க்கு அவற்றிலும் மேலாகத் தரத்தக்க பெருமையுடைய பொருள் பிறிதின்மையின், பரமனையே பாடுவாராகிய அவ்வடியார்களுக்கு இறைவன் தன்னைத்தானே பரிசிற் பொருளாக வழங்கியருள்வான் என்பார், 'அளப்பில கீதஞ் சொன்னுர்க்கு அருளுமாறு (கைம் மாருக நல்கத் தக்க பொருள் அடிகள் தாம் (இறைவனே) என்ருர், எனக் கொள்ளுதற்கும் இடமுண்டு. இத்திருப் பாடல், இறைவனை அன்பினுல் வழிபடுதற்கு இனிய சாதனமாக விளங்குவன இசைப்பாடல்களேயென்ற உண்மையினை நன்கு வலியுறுத்தல் காணலாம்.

## அகிலாண்டநாயகி மாலை

பிழைபல வுடையே ஞயினு மவற்றைப்
பேதைநீ யென்பதற் கிணங்கக்
குழைமனத் தகற்றி யாளவே வேண்டுங்
கூர்ந்தினி தாண்டிடா யென்னின்
மழைமலர்க் கூந்தற் கங்கையைப் புகழ்வேன்
வைவரே நொந்தவர் தாயே
கழைமலி கழனி சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (85)

சடைமிசை மாதை நோக்கியா ரெனினீ
சங்கர னீரென்பான் முகமுன்
இடைதெரி தரலென் னென்னிழேக் குறுநின்
னெழின்முக முதனிழ லென்பன்
உடையநா யகிநீ மறுத்திடிற் பிறரா
லுணரென்பா னுணரவல் லவர்யார்
கடையுற லொழிந்த வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (86)

# நட்டபாடைப் பண்

பண்ணாராய்ச்சி வித்தகர், ஏழிசைத் தலைமகன்,
குடந்தை ப. சுந்தரேசன்

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவும் தீப்பிணிநோய் காப்பான் தன்னை
இசையானை எண்ணிறந்த குணத்தான் தன்னை
இடைமருதும் ஈங்கோயும் நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலும் மண்ணும் விண்ணும்
மிகுதீயும் புனலெரிகாற் றுகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றுடி னேனே.

—திருநாவுக்கரசர்

இமிழ்கடல் வரைப்பில் தமிழ் முழுதுமறிந்த தன்மையாளர் பலரும் வாழ்ந்த நம் தமிழகத்தே சிவநெறி போற்றிப் பரப்பிய திருவுடை அடியவர்களாம் அருளாளத் தமிழோரால், இசைவடிவாயும் நிற்பவன் இறைவன்; அவனே சிவனெனும் நாமம் தனக்கேயுரிய செம்மேனி எம்மான் என்றும் உணரப்பெற்று உள்ளது. நம் திருவானைக்கா திருத்தாண்டகத்தில் அப்பர்பெருமான் இசையானை என்றும் அருளியிருத்தல் காண்க. இறை எனப்படும் சிவன் ஓசையாயும், ஒலியாயும் திகழ்கின்றனும். பண்டைய இசைத் தமிழிலும் இசை ஏழு என்பதை வலியுறுத்திக் கூறப்பெற்றுள்ளதை அறியலாம். 'ஏழுகொலாம் இசையாக்கினதாமே' என்றார் நாவுக்கரசர். ஏழிசைகளும் இருபத்தி ரண்டு ஒலி நுண்ணலகுகளால் நடப்பனவென்பது இசைவல்லாரறியும் உண்மையாகும். பண்டைய முத்தமிழின் நீர்மையில் இவற்றையெல்லாம் நன்குணர்ந்து சேர்த்துச் செறியவே அறியப்பெற்றுள்ளன.

நட்டபாடைப் பண்ணினைத் தனித்தறியுமுன் பொதுமுறையில் பண் பற்றியறியும் பெற்றிமை சிலவுள. ஒலிகளாலாயது இசை. இசைகளாலாயது பண். ஒரோவழி தமிழகத்து இசைத்தமிழ்ப் பண்கள் நூற்றுமூன்று என்பது ஒரு தொகுதி ஆகும். அத்தகைய பண்களும் பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் என நால்வகைக் கூறுபாட்டானே விளங்குவனவாகும். இக் காலத்தும் அவ்வாறே விளங்கிவருகின்றன. இசைகள் பல்வேறுய தொகுதிப்பட நின்று பண்ணினைக் காட்டும். 'பண்காட்டும் இசை யானும்,' என்று பாடி அருளினர் திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசரும், 'கந்திருவம்' பாட்டிசையிற் காட்டுகின்ற 'பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலானுன்காண்,' எனப் பாடியருளினர். மேலும் ஒரு பதிகத்தில் திருஞானசம்பந்தர், ஏழிசை எட்டிருங் கலைசேர் பண் எனவும் அருளியிருப்பது அறியலாம்.

| | |
|---|---|
| ஏழிசைகளையுடையது | பண் |
| ஆறிசைகளையுடையது | பண்ணியற்றிறம். |
| ஐந்திசைகளையுடையது | திறம். |
| நான்கிசைகளையுடையது | திறத்திறம். |

இவ்வாருன கூறுபாட்டுள்ளும் நுண்ணிய அலகுகளால் அதாவது இன்னின்ன இசைக்கு இத்துணையித்துணையலகு என்று அறிந்து வரையறை செய்யப்பெற்றுணர்ந்து

பல்வேறு வகைப் பண்களைப் புலப்படுத்தும் இசை ; ஒவ்வொரு பண்ணிற்கும் ஒரோவழி எண்களில் அலகுகளை உடைத்தாயிருந்தும் பண்முறையில் அவற்றிற்கே உரிய தனித் தொரு நீர்மை இருக்கவேண்டி அதனதன் போக்குமுறையைத் தனித்துக்காட்டுவதால், 'பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி' எனத் திருநாவுக்கரசரால் இறைவனுக்கு அருச்சனை பாட்டாக அருளிச் செய்யப்பெற்றது. ஏழிசைகளைக் கொண்ட தொகுதிக்கே பண் என்ற பெயர் கூறப்பெற்றும், குறிக்கப்பெற்றும், மற்றவற்றைப் பொதுப்பட கூறுபாடு என்ற பொருளில் 'திறம்' என்றே கூறும் வழக்கும் நிலவுவதாயிற்று. பின்னரே, பண்ணிற் குரிய பாடல்களின் தலைப்பில் பண் பெயர் குறிக்கின்ற காலத்து, அது பண்ணுயினும், பண்ணியற்றிறம் ஆயினும், திறமாயினும், திறத்திறமாயினும் எல்லாவற்றையுமே பண் எனக் குறித்தெழுதும் பழக்கமும் எழுத்தளவில் தோன்றிவிட்டன.

இசைகள் ஒன்ருய், மூன்ருய், ஐந்தாய், ஏழாய் உணரப்பெற்றன. 'முதலும் இறுதியும் தாமே போலும்' என்பதும் இசைக்கலைக்கு மிகவும் பொருந்துவதாகும். இசைகளின் கணித முறையை அறிவுறுத்துமிடத்து, சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரென்பார் ; இவற்றுள் முற்ருேன்றியது தாரம். அது வந்த வழிக் கண்டுகொள்க ; எனக் குறித்துள்ளார். அதனையுணர்ந்த அருட்டிரு விபுலாநந்த அடிகளார், 'தாரநரம்பே முதலிற்ருேன்றியதென்பது பழந்தமிழிசை நூற்றுணிபு' எனக்கூறி, 'இது ஆடவர் குரலிலும், குரல் எனப் பெயரிய நரம்பு, மகளிருடைய குரலிலும் இயல்பாகத் தோன்றுவன' என்றே குறித்தார்.

ஆகவே, முதலேழிசைகள், தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி என்ற நிரலாய் நிற்பது அறியக்கிடக்கின்றது. இதனை நாமும் ஆக்கப்பாடு கருதி,

**தேர்ந்த முதலேழிசை தெளிவுறக் கிளப்பின்**
**தாரங் குரல்துத்தங் கைக்கிளை யோடே**
**ஓரும் உழையிளி விளரி யெனவே**
**ஆர்ந்த நிரலாய் அமைத்தனர் பழையோர்**

எனக்கூறி உணரலாம். இவ்வேழிசையமைதியே மிகப் பழைய பேரியாழ்க் கருவியில் இருபத்தொரு நரம்புகளைக் கட்டித்தெறித்து உணரப்பெற்றதென்பர். முதலிசையாகிய தாரத்தினை மந்தாரம் தாரம் முரல்வன என்றும், ஏழாமிசையாகிய விளரியினை அளிதேர் விளரி எனத் திருவாசகமும் குறிக்கிறது. இவை ஒவ்வொன்றும் முதலிசையாக நின்று ஏழு பாலையான அமைதிகளையுடையதாகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி |
| குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் |
| துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் |
| கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் |
| உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை |
| இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை |
| விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி |

இவ்விசைகளின் பிறப்பு முறையை,

**தாரத்துட் தோன்றும் உழையுழை யுட்டோன்றும்**
**ஓருங் குரல்குரலி னுட்டோன்றிச்—சேருமிளி**

**யுட்டோன்றுங் துத்தத்துட் டோன்றும் விளரியுட்**
**கைக்கிளை தோன்றும் பிறப்பு.**

என்று கூறப்பெற்றது. இவற்றுள்,

| | | |
|---|---|---|
| தாரம் முதலாக வருவது மேற்செம்பாலை | | |
| குரல் | ,, | செம்பாலை |
| துத்தம் | ,, | படுமலைப்பாலை |
| கைக்கிளை | ,, | செவ்வழிப்பாலை |
| உழை | ,, | அரும்பாலை |
| இளி | ,, | கோடிப்பாலை |
| விளரி | ,, | விளரிப்பாலை |

இவ்வேழு பாலைகளில் செம்பாலையின் திறமான அதாவது பண்ணியற்றிறமான நைவளமே நட்டபாடைப்பண் எனப்படும். மிகப் பழங்காலத்திய இசைத் தமிழின் இசைமுறையாகவும் குழல்வழியும், யாழ்வழியும் உணரப்பெற்றுப் பின்னர் அவற்றின் போக்கு முறைமையையும் நீர்மையையும் ஓர்ந்துணர்ந்து குரலால் அதாவது கண்டத்தால் நன்ருகப் பாடிப் பழகப்பெற்று அம் மூவகையாலும் பல்வேறு பாணியில் சிறப்புற்றன. இக்காலத் தமிழ் நாட்டில் இன்றும் தனித்த நீர்மையில் இசைக்கலை விளங்கி வருதற்கு இதுவே அடிமணை ஆகும் என்பதை நன்கறியலாம்.

நால்வகையாழா நாற்பெரும்பண்ணே, என்ற வகைமுறையிலும் பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், நெய்தலியாழ் என்ற நால்வகைக் கருவிகளில் மேற்கூறிய ஏழு பாலைகளில் சிறப்பான நான்கு பாலைகளை நிறுவியறிந்தனராம் பழந்தமிழர். இம் முறையை,

**தாரத் துழை தோன்றப் பாலையாழ் தண்குரல்**
**ஒரும் உழைதோன்றக் குறிஞ்சியாழ்—நேரே**
**இளிகுரலிற் ரேன்ற மருதயாழ் துத்தம்**
**இளியிற் பிறக்கநெய்த லியாழ்**

எனக் கூறப் பெறுகிறது.

இவற்றுள்ளும் குறிஞ்சியாழில் கட்டப்பெற்ற செம்பாலையின் பண்ணியற்றிறமான நைவளமே நட்டபாடைப்பண் எனப்படும், யாழ் எனுஞ் சொல், நரம்புக் கருவியைக் குறித்துக் குறிப்பிட்ட அக்கருவியில் நரம்புகளின் தொகுதியில் எழும்பாலையையும் குறித்து, அப்பண்ணினையும் குறிக்கும் சொல்லாகவே இலக்கியங்களில் வழங்கப் பெற்றது.

நட்டபாடைப் பண்ணினை நாம் நூல்வழியே அறிதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுவது குறிஞ்சியாழாகும். இது குறித்து ஏழு பாலைகளையும் முன்தோன்றிய தார முறையில் அறிந்து, அவற்றுள் நால்வகை யாழ்களுக்குரிய பாலைகள் எதுவெது என்பதை எடுத்துக்காட்டி, குறிஞ்சி யாழிற்குரிய செம்பாலையினை உணர்ந்து, எல்லாவற்றிற்கும் உடனுக்குடன் அலகு முறைகளையும் காட்டி, செம்பாலையின் முதற் பண்ணியற்றிறமான நைவளத்தினை அறிந்து அது நட்டபாடை எனப் பெயர் திரிந்தமையும் அறிந்து பிற் காலத்தில், நைவளமாகிய நட்டபாடை கர்நாடக சங்கீதமுறையில் என்ன இராகப் பெயர் பெற்று விளங்கிற்று எனவும் உணர்ந்து குறித்தாலன்றி, பழைய நட்டபாடைப் பண்ணின் தூய உருவத்தினைக் காணுதல் அரிதாகிவிடும். இவ்வாறு உணரவேண்டிய நுண்கருத்துக்கள் யாவற்றையும் அருட்டிரு விபுலாநந்த அடிகளார் தமது யாழ்நூலில் நன்கு குறித்துக் காட்டி அவரே எடுத்துக் காட்டியுள்ளார். அவர் வழிநின்று யாமும் உணருமாறுணர்ந்து குறிப்போமாக.



துவார பாலகர்

ஆயிரக்கால் மண்டபத் தூணிலுள்ள அருமையான சிற்பம்.
இதன் அணி வகைகளையும் முடியழகையும் நேரிற்கண்டு களியுங்கள்.

முன்ரேன்றிய தாரமுறையில் ஏழு பாலைகளும் அதன் அலகு முறைகளும் :

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேற்செம்பாலை | — | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி |
| அலகுகள் : | | 0 | 4 | 8 | 12 | 13 | 17 | 21 |
| செம்பாலை | — | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் |
| அலகுகள் : | | 0 | 4 | 8 | 9 | 13 | 17 | 18 |
| படுமலைப்பாலை | — | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் |
| அலகுகள் : | | 0 | 4 | 5 | 9 | 13 | 14 | 18 |
| செவ்வழிப்பாலை | — | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் |
| அலகுகள் : | | 0 | 1 | 5 | 9 | 10 | 14 | 18 |
| அரும்பாலை | — | உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை |
| அலகுகள் : | | 0 | 4 | 8 | 9 | 13 | 17 | 21 |
| கோடிப்பாலை | — | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை |
| அலகுகள் : | | 0 | 4 | 5 | 9 | 13 | 17 | 18 |
| விளரிப்பாலை | — | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி |
| அலகுகள் : | | 0 | 1 | 5 | 9 | 13 | 41 | 18 |

| | | | |
|---|---|---|---|
| பண்டைய | மேற்செம்பாலை | பிற்காலத்தில் | மேசகல்யாணி எனப்பட்டது. |
| ,, | செம்பாலை | ,, | அரிகாம்போதி எனப்பட்டது. |
| ,, | படுமலைப்பாலை | ,, | நடபைரவி எனப்பட்டது. |
| ,, | செவ்வழிப்பாலை | ,, | ஒரு மேளமாகக்கொள்ளாது விடப்பட்டது. |
| ,, | அரும்பாலை | ,, | தீரசங்கராபரணம் எனப்பட்டது. |
| ,, | கோடிப்பாலை | ,, | கரஹரப்பிரியா எனப்பட்டது. |
| ,, | விளரிப்பாலை | ,, | அனுமத்தோடி எனப்பட்டது. |

அலகு முறைகள் நுண்மையான இசைக்கலை முறையில் தொடக்க [ஆதார] இசையிருந்து,

| | |
|---|---|
| 1, 2, 3ஆம் அலகுகள் வரை | சுத்தருஷபத்தானமாகும் |
| 4ஆம் அலகு தனியே | சதுச்ருதிருஷபத்தானமாகும் |
| 5, 6, 7ஆம் அலகுகள் வரை | சாதாரணகாந்தாரத்தானமாகும் |
| 8ஆம் அலகு தனியே | அந்தரகாந்தாரத்தானமாகும் |
| 9ஆம் அலகு தனியே | சுத்தமத்யமத்தானமாகும் |
| 10, 11, 12ஆம் அலகுகள் வரை | பிரதிமத்யமத்தானமாகும் |
| 13ஆம் அலகு தனியே | பஞ்சமமாகும் |
| 14, 15, 16 அலகுகள் வரை | சுத்ததைவதத்தானமாகும் |
| 17ஆம் அலகு தனியே | சதுச்ருதிதைவதமாகும் |
| 18, 19, 20ஆம் அலகுகள் வரை | கைசிகிநிஷாதத்தானமாகும் |
| 21ஆம் அலகு தனியே | காகலிநிஷாதத்தானமாகும் |

நரம்பு நீளத்தில் மட்டும் அளவு, முழுநீளம் சரிபாதி (செம்பால்) என்ற முறையில் தொடக்க இசையும் 22ஆம் அலகு நிலையும் ஒன்றேயாம்.

## நால்வகையாழ்

பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ். (நெய்தலியாழ்)

தாரத்துழை தோன்றப் பாலையாழ் ஆனமையால் முற்கூறிய அட்டவணையில் உழை முதலாய அரும்பாலை இங்குக் கொள்ளப்பெறவேண்டும்.

சங்கராபரணம்

| [1] | உழை | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை |
|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 4 | 8 | 9 | 13 | 17 | 21 |

உழைமுதற்கைக்கிளையிறுவாய்க்கட்டிய, என்ற பழந்தமிழ்ச் சொற்றொடர்கள் இந் நீர்மையினை நன்கே புலப்படுத்துவனவாகும்.

தண்குரல், ஓரும் உழைதோன்றக் குறிஞ்சியாழ். அதாவது உழையில் குரல் தோன்றக் குறிஞ்சியாழ் என்பதாம். முற்கூறிய அட்டவணையில் குரல் முதலாய செம் பாலை இங்குக் கொள்ளப்பெறவேண்டும். இப்பாலையே நட்டபாடையை அறிவுறுத்தும்.

அரிகாம்போதி

| [2] | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 4 | 8 | 9 | 13 | 17 | 18 |

நேரே இளி குரலிற்றோன்ற மருதயாழ் அதாவது குரலில் இளிதோன்ற மருதயாழ் என்பதாம். மேற்கூறிய அட்டவணையில் இளி முதலாய கோடிப்பாலை இங்குக் கொள்ளப் பெறவேண்டும்.

கரஹரப்பிரியா

| [3] | இளி | விளரி | தாரம் | குரல் | துத்தம் | கைக்கிளை | உழை |
|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 4 | 5 | 9 | 13 | 17 | 18 |

துத்தம் இளியிற் பிறக்க நெய்தலியாழ் அதாவது செவ்வழியாழ் இளியிருந்து துத்தம் தோன்ற செவ்வழியாழ் என்பதாம். முற்கூறிய அட்டவணையில் துத்தம் முதலாய படுமலைப்பாலை இங்குக் கொள்ளப்பெறவேண்டும். செவ்வழியாழ் வேறு. செவ்வழிப்பாலை வேறு. யாழ் என்பது கருவி. பாலையென்பது இசைப் பகுதி.

நடபைரவி

| [4] | துத்தம் | கைக்கிளை | உழை | இளி | விளரி | தாரம் | குரல் |
|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 4 | 5 | 9 | 13 | 14 | 18 |

இதுகாறும் நன்றாக உளங்கொள வேண்டிக் குறித்துள்ளமை யாவும் ஏழுபாலைகள் எவையென்பதையும், நான்கு யாழ்க்கருவிகள், எவையென்பதையும், ஏழுபாலைகளில் நான்கு யாழ்க்கருவிகளுக்குரிய பாலைகள் மட்டும் எவையெவை என்பதையும் உணர்த்துவதாகும்.

குறிஞ்சியாழ் என்ற கருவியில் குரல் குரலாய (முதலாய) செம்பாலைக்குரிய நரம்புகள் கட்டப்பெற்றிருந்தன என்பதே நன்கு விளங்கும். பண்டைய உரையாசிரியர்கள் இம் முறைகள் யாவற்றையும் மடியின்றி நன்கே எழுதிப் பாதுகாத்துவைத்தனர். செம்பாலைக் குரிய இசைகளையும் அதன் அலகு முறைகளையும் நன்கு இசை பயின்ற முறையில் உணரு மிடத்து. ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம் கைசிகிநிஷாதம் என நின்று அரிகாம்போதி, இராகமாதலை, தெள்ளத் தெளிவின் உணர்ந்து கொள்ளலாமன்றோ! திருத்தாண்டகப் பதிகங்களை இந்தப் பாலையிற்றான் பாடிவரும் வழக்குமுறை இன்றும் நம்மிடையே உள்ளது.

செம்பாலையின் முதல் பண்ணியற்றிறம், கிளை நீங்கிய திறமாகி ஆறிசைகளைக் கொண்டு விளங்கும். கிளையிசை என்பது ஏழிசைகளில் ஐந்தாமிசையைக் குறிக்கும். இங்கு நாம் செம்பாலையின் இசைகளை அலகுகளுடன் மீண்டும் எழுதி ஐந்தாமிசையை அடித்துக் குறித்து, அது நீங்கிய உருவத்தினைக் காட்டி இக்கால இசைப் பெயர்களைக் குறித்தல் வேண்டும்.

செம்பாலையின் இசைகளும், நீக்க வேண்டிய ஐந்தாம் இசையின் அடித்தற்குறிப்பும்

| குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | விளரி | தாரம் |
|---|---|---|---|---|---|
| 0 | 4 | 8 | 9 | 17 | 18 |

நைவளமான நட்டபாடையாம் பண்ணியற்றிறம்

| குரல் | துத்தம் | கைக்கிளை | உழை | ∴ | விளரி | தாரம் |
|---|---|---|---|---|---|---|
| 0 | 4 | 8 | 9 | ∵ | 17 | 18 |

என அமைந்து நிற்கும்.

இதன் பிற்கால இசைப் பெயர்கள் ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம் சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் எனப்படும். அதாவது அரிகாம்போதி ராகத்தில் பஞ்சமம் நீங்கியதாகும். சரிகமதநிச், ச்நிதமகரிச என்ற இசைநிலை கொண்ட உருவாகும். பழகியறிந்தார்க்கு இவை யாவும் எளிதே. பிங்கலந்தை நூலாசிரியர் சில திறங்களுக்குப் பரியாயப் பெயர்களுந் தருகின்றார் அவற்றுளொன்று '' **நைவளமென்பது நட்டபாதை** '' என்பதாம்.

பரியாயப் பெயர்கள் உடைமையின் அகநிலைத்திறங்களே முதலில் வழக்கில் இருந்தவெனக் கொள்ளல்வேண்டும் என்பதையும், நைவளமென்பது பழைய பெயர் என்பதையும், இப்பெயரே சங்ககால இலக்கியங்களில் வழக்கு முறையில் கையாளப் பெற்றது என்பதையும் இசைமுறையிலும் சாதி வகுத்த காலத்திற்றான் **நைவளம் நட்டபாடையாயிற்று** என்பதையும் குறித்த விபுலானந்தர், சங்கீதரத்னகரம் இருந்தும் ஒரு பெருங்குறிப்பினை எடுத்துக்காட்டி நட்டபாடை பிற்காலத்தில் எந்த இராகப்பெயரைக் கொண்டது எனக் குறித்து நிறுவியுள்ளார். அப்பகுதி வருமாறு :

'' பழந்தமிழ் நூல்களாகிய பத்துப்பாட்டினும், பரிபாடலினும் **நைவளம்** என்னும் பெயர் பயின்று வருதல் காணலாம். **நைவளம்** பழுநிய நயந்தெரிபாலை, **நைவளம்** பழுநிய பாலைவல்லோன், **நைவளம்** பூத்த நரம்பியை சீர்ப் பொய்வளம் பூத்தன பாண நின் பாட்டு, என வழங்கி வருதல் காண்க. தமிழர் வழங்கிய **நைவளம்** என்னும் பண்ணினை வடநாட்டார் கைப்பற்றி வேசரஷாடவத்திற்குப் பாஷாங்க ராகமாக்கி நாட்யா எனப் புனைந்தார்கள். வேற்றுமொழியிலிருந்து எடுத்து வடமொழி வழக்கிற் சேர்க்கப்பட்ட தெனக் குறிப்பதற்காக. இது ' **நாட்ய பாஷா** ' எனவும் வழங்கப்பட்டது.

'' தமிழர் தாம் இழந்த பொருளினை அடையாளம் கண்டறிய மாட்டாதாராய் **தமிழ்** என்பதைக் குறித்துநின்ற **பாஷா** என்னும் சொல்லைப் **பாடை** ஆக்கி நட்டபாடைப் பெயர் வழங்கி இடர்ப்படுவராயினர். இனி இப்பண்ணினை **நைவளம்** என வழங்குவதே முறையாகும்.''

**நைவளப் பண்,** காலை நேரத்தில் தமிழகத்துச் சிவன் திருக்கோயில்களில் பாடப் பெறுவதும், அப்பண்ணில் அமைக்கப்பெற்ற பாடல்களைப் பாடப்பெறுவதும் அப்பாடல் களின் பொருளுக்கேற்ப ஆடப்பெறுவதும் வழக்கிலிருந்தன. (ஒரு காலத்தே) அதனாலேயே அப்பண், **நாட்யா** எனப்பட்டும் **நாட்யம்** எனப்பட்டும் **நாட்ய பாஷா** எனப்பட்டும் **நாட்ய பாடையாகி, நாட்யம் நட்டம்** எனக் குறித்த காலத்தில் **நாட்ய பாஷா, நாட்ய பாஷை, நாட்யபாடை, நட்டபாஷா, நட்டபாஷை நட்டபாடை** என்று மனம் போனவாறு ஆனல் ஒலித்தொகுதி மட்டும் மாறுதல் அடையாது கூறி எழுதத்தொடங்க நேரிட்டது, என நாமும் நன்குணர்ந்து எடுத்து எழுதலாம். எங்கும் எடுத்துக்கூறி விளக்கமும், தரக்கூடுமன்றோ ! இவையெல்லாம் **நைவளம் நட்டபாடையான** விந்தையை யன்றோ காட்டுகிறது !

மேலும் விபுலாநந்தரால், '' மத்திமமாதியான மூர்ச்சனை என்பது குரல் குரலாகிய செம்பாலையைக் குறிக்கும் எனவும், இக்காலத்தவர் இதனை அரிகாம்போதி மேளமென்பர் எனவும் கூறப்பட்டது. பின்னரும் அவராலேயே 'இனிவேசரஷாடவத்தின் பாஷாங்க மாய் நாட்யா' எனப் பெயர்பெற்று நின்ற இராகம், ஷட்ஜத்தைக் கிரகசுவரமாகவும் மத்தியமத்தை நியாச சுவரமாகவும் பெற்றது. மேலும் இது மத்திமத்தை நிறையாகப் பெற்றுப் பஞ்சமத்தைத் தள்ளி விடுகிறதெனக் கூறப்பட்டிருத்தலின் இதனுருவம் ரி. கி. ம. தி. ந. என்பதாகும்'' எனவும் நன்கு குறிக்கப்பெற்றுளது. [இக்குறியீடுகள் சதுச்ருதிஷப அந்தரகாந்தார சுத்தமத்தியம, சதுச்ருதிதைவத கைசிக நிஷாதக் குறியீடுகளாகும்.]

அங்ஙனமாதலின் இக்காலத்தார் இப்பண்ணுக்குரியதாக வழங்கும் நாட்டைக் குறிஞ்சி என்னும் இராகம் பொருத்தமானதேயாம்; என மேலும் அவரால் தக்க சான்று களோடு கூறப்பெற்றிருப்பதால் பண்டைய நைவளமான நட்டபாடை இக்காலத்தில் நாட்டைக் குறிஞ்சியே என்பது மிகவும் தெளிவாக அறிந்துணரக்கிடக்கிறது.

தமிழ் முறையிலுங்கூட, குறிஞ்சியாழில் தோன்றிய நைவளம், நட்டம், நாட்யம், நாட்டை என்ற சொல்திரிபு பெற்றபோதும் குறிஞ்சி என்ற சொல் விடுபடாது சேர்க்கப் பட்டு, நாட்டைக் குறிஞ்சி எனக்கூறப்பெற்றிருத்தல் எத்துணைப் பொருத்தமாக உள தென்பதை நாம் நன்கே சிந்தித்தறிதல் வேண்டும். காலச்சூழ்நிலையில் குறிஞ்சி என்ற சொல்லை நீக்கி, நாட்டை என்ற சொல்லினை மட்டும் பயன்படுத்தி வந்தமையால், பண்டைய நைவளமான நட்டபாடை நாட்டையா? நாட்டைக்குறிஞ்சியா? என்ற பொரு ளற்ற வாதத்திற்கு இலக்காகும் நிலைமையினை எய்தியது.

தமிழகத்தில் சோழநாட்டில் தலைசிறந்த திருமடமான சிவநெறித் திருவாவடுதுறை ஆதீனத் திருமடத்து வழக்குமுறை, அதாவது பழைய ஓதுவாமூர்த்திகள் கைக்கொண்ட முறை நட்டபாடை, நாட்டைக் குறிஞ்சியே என்பதாகும். இதனை அவ்வாதீனத்து ஏட்டுப் பிரதிகளிற் காணலாம் என்பர். வழக்கு முறையும் அவ்வாறே எனவும், திருவாரூ ரில் வாழ்ந்த பழைய ஓதுவாமூர்த்திகளும், நட்டபாடையில் அமைந்த தேவாரத் திருப்பதி கங்களை, நாட்டைக்குறிஞ்சியில் பாடும் பழக்கத்தையே கொண்டிருந்தனர் எனவும் சில சான்றோர்கள் கூறக்கேட்டிருக்கின்றோம்.

நைவளம் என்ற சொல் திவ்வியப்பிரபந்தத்திலும் ஆழ்வார்களால் கைக்கொள்ளப் பெற்றுளது. நம்மாழ்வார் அருளிய பாசுரங்கள் பல நட்டபாடையிலும் உள்ளன. நட்டபாடைப் பண்ணிலமைந்த திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்கள் 22-ம், சுந்தரர் அருளிய சில பதிகங்கள் நட்டபாடைப் பண்ணில் அமைந்தனவாக நமக்கு இக்காலம் வழக்கிலிருப்பவை பல. அதனை நாம் உணர்ந்து போற்றுதல் தூயமுறைமையில் பாடுதல் எனும் வழக்கினைக் கைவிடாது இருப்போமானால், நமது சமயம், கலை, நாகரிகம், பண்பாடு எல்லாம் நம் வழித்தோன்றல்களுக்கும், ஏனைய நாட்டினருக்கும் நன்றாக விளங் கும் என்பது ஒருதலை. ஆனைக்கா அண்ணலின் திருவருள் என்றென்றும் நம்மைக் காக்கும். இதற்கும் இத்துணை ஆராய்ச்சி தேவைப்படுகிறது. காரணம் பழைய வழக் கினை கைவிட்டமையே.

**நட்டபாடை நாட்டைக் குறிஞ்சியே!**

வழக்குமுறை மாறுபடுங்காலத்து நூன் முறையே துணை செய்யும் என்பதும் இதனானே விளங்கும்.

# ஆனந்த தாண்டவத்தின் அபிநயச் சிறப்பு

சித்தாந்தச் செல்வி, சிவ பிருந்தாதேவி, புதுக்கோட்டை.

"ஆதிபரன் ஆட அங்கை கனலாட
ஓதுஞ் சடையாட உன்மத்த முற்ருடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினுன் நாதாந்த நட்டமே."

—திருமந்திரம்

இறைவன் எளிவந்த வான்கருணை உடையவன். தீயினும் வெய்யனுகத் தீயோருக்குக் காட்சி தருபவன். புனலினும் தண்ணியனுக நல்லோர்க்கு நலமுடன் விளங்குகிருன். நன்றுடையான் அவன். அவனைச் சென்று நாம் அடைந்தால் நாம் பெறும் இன்பங்களுக்கு ஈடு இணை தானுண்டோ ?.

உலகில் நாம் இதுவரை அனுபவித்த இன்பங்கள் எல்லாமே தினையளவுதான். எப்போதும் நிலைத்த இன்பத்தை—எதனுலும் மாருத பேரின்பத்தை ஆண்டவன் தந்தருள்கின்ருன். இதனை நன்ருக உண்டு சுவைத்துச் சுவைகண்ட மணிவாசகர்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினுள் தேனுண்ணுதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு
மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்ருர்.

அந்த இன்பத்தை நாமும் பெற இறைவனுடைய ஆனந்த தாண்டவத்தை—அதன் அற்புதச் சிறப்பை அறியப்புகுமுன், அந்த மகேஸ்வரனுடைய வடிவங்களைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியமாகும். லிங்கோற்பவர், சுகாசனர், சக்திதரமூர்த்தி, கல்யாணசுந்தரமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், சோமாஸ்கந்தர். சக்ரவரதர், திரிமூர்த்தி, ஹரிஅர்த்தர், தக்ஷிணுமூர்த்தி, பிக்ஷாடனமூர்த்தி, கங்காளர், காமாரி, காலசம்ஹாரமூர்த்தி சலந்தராரி, திரிபுராரி, சரபமூர்த்தி, நீலகண்டர், திரிபாதர், ஏகபாதர், பயிரவர், இடபாரூடர், சந்திரசேகரர், நடராஜமூர்த்தி, கங்காதரமூர்த்தி என்ற இருபத்தைந்து வடிவங்களாகும்.

இதிலே நடராஜமூர்த்தி, பிரணவம், திருவாசியாகவும், பஞ்சாக்ஷரம் திருவுருவாகவும், பராசக்தி சிற்சபையாகவும் கொண்டு டமருகத்தால் சிருஷ்டியும், அபயஹஸ்தத்தால் திதியும், எரியால் சம்ஹாரமும், ஊன்றிய திருவடியால் திரோபவமும், ஸ்ரீ குஞ்சிதபாதத்தால் அனுக்கிரகமும் ஆகிய பஞ்சகிருத்திய தாண்டவஞ் செய்யும் மூர்த்தியாம்.

"அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாத தோர் கூத்து" இறைவனது கூத்து! அறியப்படாத இக்கூத்தை அறியும்வகையில் நடராஜமூர்த்தி அமைந்துள்ளது.

சிவபெருமானுக்குத் திருமேனி சிவசக்தியே ஆகும். அச்சிவனின் அருளாற்றல் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அச்சிவபெருமான், தான் செய்யும் திருவருள் தொழில்களை எல்லாம் சிவசக்தியின் வாயிலாகவே செய்தருள்கின்ருர். அச்சிவபெருமானும் திருவருளும், நுண்ணறிவு அம்பலமாம் திருச்சிற்றம்பலத்திலே விளங்கி அருள்கின்றனர். அதனுல் எங்கும் சிதம்பரம் என்றனர். அவன் செய்யும் திருக்கூத்தும் எங்கும் நிறைந்ததே.

திருவருள் எப்பொழுதும் ஒப்பில்லா இன்பவடிவாகவே இருக்கும். அத்திருவருளின்மேல் திருவடிச் செந்தேன் முந்திப் பொழியும். அங்குச் சிவபெருமான் இன்பத் திருக்கூத்து—ஆனந்த தாண்டவம் இயற்றி

அருள்கின்றார். சுட்டுணர்வு, சிற்றுணர்வு, அவற்றால் அறியப்படும் பொருள்நிலை, எல்லாம் கடந்தநிலை, திருவருள் நிலையாகும். அந்நிலையில் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் இயற்றியருள்கின்றார். அங்ஙனம் இற்றியருளும் திருப்பேர் நம்பி. அத்தகைய நம்பிக்கு அத்திருவருள் நிலையே ஆனந்தக் கூத்தாடற்குரிய ஆடரங்காகும்.

" தானந்தம் இல்லாச் சதானந்த சக்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்கு
ஆனந்தக் கூத்தாட ஆடரங் கானதே "

என்பர் திருமூலர்.

ஆனந்த தாண்டவத்தின் பயனைத் திருமந்திரம்,

" ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமுங் கருத்துறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தே "

என அருள்கின்றார். ஆனந்த தாண்டவ தரிசனத்தால் மலமகலும், மாசு நீங்கும் அலகிலா விளையாட்டுடையான் அடிக்கமலம் அடைய முடியும் என்பது மேலோராகிய நூலோர் கருத்து.

சிவபெருமான் முறையாக ஆடலுக்கு வேண்டிய பதினோரு உறுப்பும் குறைவில்லாமல் நடித்தருள்கின்றார். திருவடியிலே மறைச்சிலம்பும், திருக்கையில் உடுக்கையும், என்றும் பொன்றாது நின்று "ஓம்" என்னும் நுண்ணிய ஒலியினை நன்றாக ஒலிக்கும். "மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய" இயற்கை உண்மை அறிவுடன் இன்ப வடிவத்தே நின்று திருக்கூத்தருள்கின்றான். அத்திருக்கூத்து புறமாகிய அண்டத்துள்ளும், அகமாகிய உடம்பினுள்ளும் அவனருளால் ஓவாது இயற்றப்படுகின்றது.

" ஆடல் பதினோ ருறுப்பும் அடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகை கொள்துடி
நீடிய நாதம் பராற்பர நேயத்தே
ஆடிய நந்தி புறமகத் தானன்றே "

என்பது திருமந்திரம். இக்கூத்து வகையினைச் சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையிலே, அடியார்க்கு நல்லார்,

" கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடி மா லல்லியமல் கும்பம்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து."

என விவரிக்கின்றார்.

எக்கூத்தினை எவர் ஆடினும் அவை அத்தனையும் சிவபெருமான் ஆடிய திருக்கூத்திலிருந்து தோன்றியவையாகும்.

இறைவனுடைய திருவுருவம் மூன்று வகையின்பாற் பட்டது. போக வடிவம், யோகவடிவம், வேக வடிவம். இந்த மூன்று வகைக்குள் முற்பகுதியில் கூறிய 25 மூர்த்தங்களும் அடங்கும்.

நாம் மனைவி மக்களோடு எல்லா இன்பங்களும், எல்லாச் செல்வங்களும் எய்தி இன்புற்று வாழ்வதற்காக—நமக்காகவே இறைவன் உமாமகேசுவரராய், சோமாஸ்கந்தராய், கல்யாண சுந்தரராய்ப் போகத் திருமேனி தாங்கி வந்து போகத்தை அருள்கின்றார்.

நாம் செய்யும் தீமைகளை விலக்கி, நமக்கு நல்லருள் பாலிக்கக் கால சம்ஹாரமூர்த்தியாக யானையை உரித்த கடவுளாக—காமனை எரித்த கண்ணுதற் கடவுளாகத் திருவுருவம் தாங்கி வந்து நம்மை அத்தீமைகளிலிருந்து விலக்குகிறார். இது இறைவனது வேக வடிவமாகும். இனி,

ஞானத்தை நமக்கு ஊட்டி நம் மனம் அடங்க நல்லருள் பாலித்துத் தென்முகக் கடவுளாக—தக்ஷிணாமூர்த்தமாகத் திருவுருத் தாங்கி வருகிறார். இது யோக வடிவமாகும்.

இம்மூன்று நிலைகளையும் ஒரே திருமேனியில் தாங்கி தாண்டவமூர்த்தியாகத் தான் ஆடி நின்று, உலகையும் ஆட்டுவிக்கின்றார்.

கலைக்கும், கடவுளுக்கும், உயிர்க்கும், உள்ள தொடர்பினை நடராஜரின் திருவுருவத்தின் மூலம் நாம் நன்கு தெளியமுடியும்.

"அருவத் திருமேனியுடைய பரசிவம், தாண்டவமூர்த்தியாக உருவந் தாங்கியது ஏன்?" என்பது ஆராய்ச்சிக்குரிய செய்தி தான். வாதுள சுத்தாக்கியம் என்னும் ஆகமம், "சிவயோகிகட்கும், துறவிகட்கும், ஞானிகட்கும், தியானிப்போர்க்கும்; தியானம் பூஜை இவற்றின் நிமித்தம் நிஷ்கள

சிவம், சகளத் திருமேனி தாங்கியது எனப் பட்டது '' என்றும்,

அப்படியாயின், சதாசிவ மூர்த்தியே தியானத்தாலும் பூஜையாலும் வழிபடத் தக்கவராகட்டும், பின் தாண்டவ வடிவங் கொள்வானேன் ?

ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்பப் பரசிவம், நவந்தருபேதம் தாங்கியதுபோல இங்கும் பரசிவம், தாண்டவ வடிவம் தாங் கியது. பரசிவம் ஐந்தொழில் இயற்ற, ஆனந்த நடராஜ வடிவு தாங்குகின்றது.

'' சிதம்பரமான்மியம் '' என்னும் பெரு நூல், '' பரசிவம் சண்டதாண்டவ மூர்த்தி யாய் உலகத்தை அவ்வவற்றின் காரணத் தொடுக்கி, காரணங்களை மாயையில் ஒடுக்கி, மாயையைச் சக்தியில் ஒடுக்கிச் சங்கரிக் கின்றார். அவரே மீளவும் உண்டாக்க உளங்கொண்டபோது ஆனந்த தாண்டவ மூர்த்தியாய், நாதாதி பஞ்ச தத்துவங்களைப் படைக்கின்றார் '' என்று கூறுகின்றது.

ஐந்தொழில் இயற்றும் லயசிவத்தின் அருள்மேனி, ஐந்தெழுத்தின் வடிவே யாகும்.

| | | |
|---|---|---|
| அகாரம் | — | சத்யோஜாத முகம் |
| உகாரம் | — | வாமதேவ முகம் |
| மகாரம் | — | அகோர முகம் |
| பிந்து | — | தத்புருஷ முகம் |
| நாதம் | — | ஈசான முகம் |

இந்த ஐம்முகங்களோடு கூடிய நிலையைக் கடந்தது நாதாதீதமான நடேசத் திரு மேனி. இங்ஙனம் சூட்சும பஞ்சாக்கர வடிவமானது கூத்தனது திருமேனி :

இறைவனது ஆடல்களில் மிகவும் சிறப் புடையது ஆனந்த தாண்டவம். ஐந்து தொழில்களையும் ஒருசேர இயற்றுகின்ற ஆடல் இது என்பதை.

> '' தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதி ரோதம் முத்தி
> நான்ற மலர்ப் பதத்தே நாடு ''

எனப் பெரியோரும் உண்மை விளக்கத்தில் உரைக்கின்றனர்.

எல்லா உயிர்களுக்கும், அவரவர் பரிபாக நிலைக்கேற்ப ஆணவமல இருளைப் போக்கி, வினைகளை நுகர்வித்துப் பேரின்ப நிலையை எய்துவிக்கின்ற பெருங்களிப்பால் இறைவன் ஆடுகின்ற தாண்டவம்—ஆனந்த தாண் டவம்.

இத்தாண்டவமே உலகம் படைக்கவும், வினைப்போகம் உள்ளளவும் காக்கவும், பின்னர் ஒடுக்கவும், வினைகளை மறைத்தல் தொழிலால் நுகர்விக்கவும், பின் அருளவும் பயன்படுகின்றது என்பதைத் திருமூலர்,

> '' அரன் துடி தோற்றம் அமைப்பில் திதியாம்
> அரன் அங்கி தன்னில் அறையில் சங்காரம்
> அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
> அரனடி என்றும் அனுக்கிரகம் என்னே ''

என அருளினர்.

இந்தத் தாண்டவ நிலையில் சடைமுடி யாகவும், விரிந்து பரந்த சடையாகவும், இருப்பதுண்டு. சடைமுடி, ஞானத்திற்கு அடையாளம் என்பர். '' நுண்சிகை ஞான மாம் '' என்பது திருமந்திரம். சடையில் கங்கை, ஊமத்தம்பூ, பிறைமதி, கபாலம் இடையிடையே பாம்பு இவை விளங்கும். திருச்செவிகளில் ஒன்றில் பாம்பு குண்டல மும், மற்றொன்றில் தோடும் விளங்கும். சில உருவங்களில் இரண்டும் குழையாக இருப்பதுண்டு.

தாண்டவப் பெருமானின் திருக்காது ஓங்காரத்தைக் குறிக்கும். இறைவன் தமது கையில் உள்ள துடியை ஒலித்து உண்டாக் கும் ஓசை என்னும் நாதம் ஓங்கார வடிவை உடையது. அந்த ஓங்காரத்தைத்தான் இறைவனது திருச்செவி குறிக்கின்றது. ஞானசம்பந்தர் '' தோடுடைய செவியன் '' என்று திருச்செவியை முதன் முதலில் எடுத் தோதியதும் ஓங்காரத்தையே தான் எனக் கூறுவர்.

புன்சிரிப்போடு அம்மையை ஏறிட்டாற் போன்ற மலர்ந்த முகம், '' இவை முக அமைப்பில் விளங்கும் அழகுகள். சிவன் தமது சடாமுடியில் அணிந்துள்ள நிலாப் பிறை அவரது முற்றறிவை (பேரறிவை)க் குறிக்கிறது என்று காமிகாகமம் கூறு கின்றது.

நான்கு கைகள் : வலது கையில் பின் னதில் துடியிருக்கும் முன்னது அபய

ஹஸ்தமாகப் பாம்புக் கங்கணத்துடன் விளங்கும். இடதுகை பின் கையில் தீச் சுடர் விளங்கும். இது சுடர் மட்டுமாகவும், தீயகலாகவும், கட்டை விரல் மோதிர விரல் நுனிகளிலும், உள்ளங்கையிலும் பொருந்தி விளங்குவதாகும். இடது கையில் மற்றொன்று வீசிய கரமாகத் திருவடியைக் குறிக்கும். இது கஜஹஸ்தம், கரிகரம் என வழங்கப்பெறும். அபய ஹஸ்தம், பதாகை முத்திரையாகவும், கரிகரம் திரிபதாகை முத்திரையாகவும் இருக்கும்.

இடுப்பிற்கு மேலே கட்டப்பட்டுள்ள ''உதரபந்தனம்'' என்னும் ஆடை, இடது பக்கமாகப் பறந்து கொண்டிருக்கும். மார்பில்பூணூல் விளங்கும். அதுவும் பாம்பாகும். கை, கால், தோள், காது, இடுப்பு, மார்பு முதலிய இடங்களில் உரிய அணிகள் விளங்குகின்றன. அவையும் பெரும்பாலும் பாம்புகள் தாம் அரையில் அரைஞாணாக விளங்கும் பாம்பு, வலப்பக்கமாகப் படமெடுத்து ஆடிக் கொண்டிருக்கும்.

இடதுகால் குஞ்சிதபாதமாக, அதாவது தூக்கிவளைத்த பாதமாக விளங்கும். கரிகரத்தில் விரல் நுனியும், குஞ்சிதபாதத்தின் மையமும் நேராக அமைந்திருக்கும். வலது கால், முயலகன் மீது ஊன்றப் பெற்றிருக்கும். அக்கால் அர்த்தசம பாதமாகவாவது, பெருவிரலின் நுனிமட்டுமாவது உள்ளங்கால் மட்டுமாவது முதுகின்மீது பொருந்தியிருக்கும். விரல்களில் விரலாழியும் உருட்டும் விளங்கும். கணைக்காலில், ஆடுகின்ற வேகத்தில் சிலம்புகள் மேலேறி நிற்கும். தூக்கிய திருவடியில் காற்சிலம்பு பாதத்தோடு பொருந்தி விளங்கும்.

முயலகன் குறட்பூத வடிவுடன், சிறியமயிரும், கோரப்பற்களும், உருட்டிப் பிதுங்கிய விழிகளும் உடையவனாய்க் குப்புறக் கிடப்பான். அவன் கால்கள் இரண்டும் மேல் நோக்கி வளைந்திருக்கும். அவன் கை, சர்ப்ப முத்திரையாக அமைந்திருக்கும். அவனுக்கு அடியில் பாம்பு ஒன்று நீளத்தில் படுத்திருக்கும். அது படமெடுத்து ஆடுவது போலிருக்கும். முயலகன், ஆணவத்தின் வடிவென்றும், இறைவன் ஆணவமலத்தின் வன்மையை வாட்டி, அது தலையெடா வண்ணம் உயிர்களைக் காக்கின்றார் என்றும் குறிக்கவே வலது திருவடி அவன் மேல் ஊன்றப் பெற்றுள்ளது.

பெருமான் அப்படி மிதித்திருந்தும் தலை தூக்கி நிற்பது, முத்தி நிலையிலும் வாசனை மலம்–தலைகாட்டும். அப்போது இறைவன் வடிவாகிய ஐந்தெழுத்தைப் பிரணவத்துடன் தியானிக்க, வாசனையுங் கெட்டுப் பேரின்பம் எய்தலாம் என்பதைச் சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறும்.

தாமரை வடிவமான பதுமபீடம். அது எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாக அமைந்திருக்குமாயினும் தாண்டவமூர்த்திக்கு அமைந்தது மிகச் சிறப்பும் கருத்துப் பொலிவும் கொண்டதாகும். பதுமம் பதினாறு இதழ் உடையது. அது சிதய கமலத்தைக் குறிப்பது. அதுவே இதாகாசம்–சிற்சபை எனக்குறிப்பிடத்தக்கது. ஆதலால் பதுமபீடத்தில் உறையும் இறைவன் இருதயத் தாமரையில் இருப்பவராக எண்ணி வழிபடத் தக்கவராகிறார். இவ்வண்ணமே தாண்டவ மூர்த்திக்குத் திருவாசியும் அவசியமாகின்றது.

திருவாசி — பிரணவம்
நடராஜர் — ஸ்ரீ பஞ்சாக்கரம்

பிரணவமில்லாமல் ஸ்ரீ பஞ்சாக் கரத்தை ஜெபித்தல் கூடாது. திருவாசியில்லாமல் நடராஜ மூர்த்தம் அமைக்கக்கூடாது.

திருவாசியின் மீதுள்ள அனற்கொழுந்துகள் இறைவன் பேரொளி வடிவானவன் என்பதை உணர்த்துவதோடு, உருவத்திலிருந்து உயர்ந்த அருவத் தியானத்திற்கு நம்மை அழைத்துச் சென்று, அருவத் தியானத்திலிருந்து மந்திரத் தியானத்திற்கும் நமக்கும் மார்க்கம் காட்டி, அதிலிருந்தும் மேலான அநுபவத்திற்கும் நம்மை அழைத்துப்போகும் சாதனங்களாக அமைந்துள்ளன.

ஆனந்த தாண்டவ மூர்த்தியின் முகத்தில் அபிஷேகம் செய்தால் அந்நீர் மூக்குநுனி வழியாக வழிந்து, அது கரிகரத்தின் விரல் நுனி வழியாகத் தூக்கிய திருவடியின் விரல்

நுனியில் வழிந்து கீழே சொட்டுமேயானுல் அவ்வுருவமே சிறந்த இலக்கணம் கொண்டது என்று சில்பரத்ஞகரம்–கூறு கின்றது. இத்தகைய ஆனந்த தாண்டவம் பலகோயில்களில் உண்டு என்ருலும், தில்லேப்பதியில் உள்ள திருவுருவம், '' கைபு னைந்தியற்ருக் கவின் பெறு வனப்பாக '' அமைந்துள்ளது. பூசனைப் பொருளாக உள்ளதால் பல்லோரும் பக்கலில் சென்று பார்த்தல் அரிது. அவ்வுருவில் உள்ள 'குமிண் சிரிப்பு' வேறெங்கும்காணெ ணுதது. இது கருதியே,

'' குனித்த புருவமும், கொவ்வைச்
செவ்வாயிற்குமி ண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம் போல்மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே ''

என்று அப்பர் அடிகளும் தம்முதிர்ந்து பழுத்த அனுபவத்தின் அருளை உரைக் கின்ருர்.

உயிர்களுக்கு ஏற்படுகின்ற ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்னும் மூன்று வகைத் துன்பங்களையும் தனது குமிண் சிரிப்பாகிய புன்முறுவலினுல் ஆனந்த தாண்டவமூர்த்தி கெடுத்தருளுகின்ருர் என் பது இதன் தத்துவப் பொருள். '' இடம் மூன்றும் இழித்தருளும் இளமுறுவல் முக மலரிலங்க '' என்பது சிவதருமோத்திரம்.

வலது காலேத் தூக்கி–இடது காலே முயல கன்மீது ஊன்றி ஆடுகின்ற திருவுருவம் மதுரையிலே உண்டு. குலசேகரப்பாண்டி யன் வேண்டுதலுக்காக–இறைவன் கால் மாறி ஆடுகின்ருன் என்று கான்மாறி ஆடிய திருவிளையாடல் கூறுகின்றது. கான்மாறி ஆடியதைச் 'சந்தியாதாண்டவம்' எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

பஞ்சாக்ஷரம் தாண்டவமூர்த்தியின் அமைப்பாகும். பஞ்சாக்ஷரத்திற்கும், தாண் டவமூர்த்திக்கும், உயிர்களாகிய நமக்கும் நிறையத் தொடர்புண்டு.

துடி —சிகரம். இது சிவ பரம்பொருள்
வீசுகரம் —வகரம். இது சிவ சித் சக்தி
அபயகரம்–யகரம். இது உயிர்கள்
அங்கி —நகரம். இது மறைப்பு
முயலகன் —மகரம். இது மலங்கள்

'' சேர்க்குந்துடி சிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்–பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனுர்
தங்கும் மகரமது தான் ''

இப்படி உணர்த்துகிறது உண்மை விளக்க வெண்பா :

'' யார்க்கும் யகரம் அபயகரம் ''–ஆம். ஆனந்த தாண்டவ மூர்த்தியின் அபயகரம் ; மலமகற்றி, மாசுநீக்கி, பேரின்பம் காண, '' என்னிடம் எப்போது வந்தாய் ?'' என்ற பரதகுறிப்பையும், '' நலந்தானே ?'' என்று வினவுகின்ற குறிப்பை அபிநய–அதிவிநயக் குறிப்பையும் நமக்குணர்த்துகின்றது.

'' ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலர்
ஆனந்த மாநட மாரும் அறிகிலர்
ஆனந்த மாநட மாரும் அறிந்தபின்
தானந்தம் அற்றிடம் ஆனந்த மாகுமே ''

—திருமந்திரம்

# நாதசுரத்தின் பெருமை

இசைப்பேரறிஞர், P. வீருசாமிப் பிள்ளையவர்கள், திருவிடைமருதூர்.

ஏழிசையாகவும், இசைப் பயனாகவும் உள்ள இறைவன் இசைக்கு வயப் பட்டவன் என்பது நாம் அறிந்ததே. இறைவன் சன்னிதியில் வாசிக்கப்பட வேண்டிய வாத்தியம் நாதசுரமாகும்.

தேவேந்திரன் வழிபட்ட தியாகேசப் பெருமானை முசுகுந்த சக்கரவர்த்தி தவ மிருந்து பூலோகம் கொண்டுவந்தார். பெருமான் ஆரூர் எழுந்து அருளியபோது அவருடன் 32 அல்லது 34 வகை வாத்தியங் களும் பூவுலகு வந்ததாகப் புராணம் கூறு கிறது. திருவாரூர் செப்புப்பட்டயத்திலும் இச்செய்தி கூறப்பட்டுள்ளது.

உலகம் தோன்றிய நாளில் மனிதனுக்குத் தேவைகள் குறைவு. அவற்றை எளிதாக குறைந்த நேரத்தில் பூர்த்தி செய்து கொள்ளமுடிந்தது. ஓய்வு மிகுதி. கலை யுணர்வும் மிகுந்து இருந்தது. காட்டு மூங் கிலில் வண்டுகள் தொளைசெய்து இருந்தன. காற்று வீசியபோது நாதம் எழுந்தது. இசைக்கருவியை மனிதன் கண்டான். குழலும், நாதசுரமும் பிறந்தன. சிலப்பதி காரம், திருவாரூர்த் தேவாரம் முதலிய நூல் களில் நாதசுரம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த நாதசுரத்தின் தோற்றம் தமிழ் இசை யின் பிறப்பு ஆகிய காலங்களை யாரும் அறுதியிட்டு உரைக்க இயலாது.

இந்த நாதசுரத்தின் மாறுபட்ட வடிவத் தை நாம் எல்லா நாடுகளிலும் காணலாம். நம்நாட்டில் பாரிநாயனம், திமிரி, முகவீணை முதலிய வகைகள் உண்டு.

இன்று நாம் கேட்டு மகிழும் நாயனம் பாரி வகையைச் சேர்ந்தது. திமிரி சற்றுக் குட்டையானது. பாரிநாயனத்தை விடக் கூடுதலான சுதி உடையது. முகவீணை மிகவும் சிறியது. ஆனால் திமிரியை விடச் சுதி அதிகம். இது பரத நாட்டியத்திற்குப் பக்கவாத்தியமாகவும், கோவில்களில் புனித வாத்தியமாகவும் பயன்பட்டு வந்தது.

நம்நாடு இசைக்கும், இசைக்கருவிகளுக் கும் ஒரு களஞ்சியம் போன்றது, என்பதைப் பழந்தமிழ் நூல்களால் அறியலாம். நாத சுரம் மங்கல வாத்தியமெனக் கருதும் நிலையில் இசையையும், பக்தியையும் பல்லா யிரம் மக்களுக்கு ஊட்டும் வல்லமை உடை தாய் இருக்கிறது. இல்லறவாழ்க்கையையும், அறக்கோவில்களையும் இணைத்து மனிதனை ஆன்மீக வாழ்வில் உயர்த்தும் திருத் தொண்டு நாதசுரத்தின் பெருமையாகும். இசையும், ஆண்டவனும் இணைந்த நாதோ பாசனையை இவ்வாத்தியமே பெரிதும் வளர்க்கும் தன்மையுடையது. ஆண்டவன் திருவீதி உலாவின் போது இசைக்கப்படும் இசை நாதசுரத்தின் தனி உரிமை.

எந்த இடத்தில் எந்த ராகம் வாசிக்கப்பட வேண்டும் என்பதற்குச் சட்ட திட்டங்கள் உண்டு. திருவாரூரில் இன்றும் அம்முறை கள் பின்பற்றப்படக் காணலாம். மற்ற சில கோவில்களிலும் அரசு ஆணைப்படிப் பழைய முறையில் வாசிக்கப்படுகிறது.

இந்த இசையின் இலக்கணம் எழுதாக் கிளவி எனவே கொள்ள வேண்டும். இதற் கான முறையை நாதசுரப் புலவர்கள் தலை முறை தலைமுறையாகச் செயல் முறையில் நடத்தி வருவதால் இவ்வாத்திய இசை பற்றிய பண்டைய நூல்கள் ஏதும் இல்லை. குரு சிஷ்ய பரம்பரையில் வருவது இக்கலை யாகும்.

ஆனால் இந்த வாத்தியத்தின் பெருமை இடைக்காலத்தில் சற்று மங்கியது. தேவைகள் பெருகிக் கவலைகள் மனிதனை அமைதி அற்றவனாக்கின. பரபரப்பு மிகுந்த சூழ்நிலை கலைக்கு எதிரியாக அமைந்தது. கலையைக் கட்டிக்காத்த மன்னர்களும் இல்லை. இக்கலை வாழ்ந்த கோவில்களும் மங்கி இருந்த வேளையில் இதற்குப் புத்துயிர் ஊட்டியவர் செட்டி நாட்டரசர் அவர்கள் ஆவார்கள்.

தோன்றிய நாள் முதல் ஆண்டு தவறாமல் பல நாதசுரக் கலைஞர்களை அழைத்து வாசிக்கச் செய்து பெருமதிப்பும் அளித்து வருவது தமிழிசைச் சங்கம் மட்டுமே ஆகும். இக்கலைக்குப் புதுவாழ்வு அளித்த பெருமை தமிழிசைச் சங்கத்தைச் சேரும்.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் மத்திய அரசும், மாநில அரசும் இதற்கு உரிய இடம் அளித்தனர். கலைஞர்களைச் சிறப்பித்தனர். பழனி, திருவையாறு, திருப்பதி, சென்னை, வலிவலம் முதலிய இடங்களில் அரசினர் நாதசுரம் தவில் கல்லூரிகளை ஏற்படுத்தி மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். நம் மாநில அரசு அன்றும் இன்றும் இக்கலையை வளர்க்க, கலைஞர்களுக்கு உதவ அருந்தொண்டு ஆற்றி வருகிறது. சமுதாயத்தில் இக்கலைஞர்கள் நிலை உயர இன்னும் செய்ய வேண்டிய பணிகள் பலவுள. அவைகள் படிப்படியாக நம் அரசு நிறைவேற்றித் தரும் என நாம் நம்பிக்கையோடு இருக்கலாம்.

பெருமக்கள் ஆசியோடு, கலைஞர்கள் முயற்சியால் இக்கலை நீடு வாழ்ந்து மக்கள் கவலையைப் போக்கிக் களிப்பூட்டிப் பக்தி மணம் பரப்பி உலகில் உயர்தனிச் சிறப்பிடத்தை அடையத் திருவானைக்கா அண்ணலும், அகிலாண்ட நாயகியும் அருளைப் பெரிதும் வேண்டுகிறேன்.

## அகிலாண்டநாயகி மாலை

எனக்கருள் செயினின் கொழுநனைப் புகழ்வே
    னிமயநின் றந்தையைப் புகழ்வேன்
மனக்கினி தாநின் மைந்தரைப் புகழ்வேன்
    மலரினின் றோழியர்ப் புகழ்வேன்
நினக்கினி யவரா மடியரைப் புகழ்வேன்
    னின்னையும் புகழுவேன் றுயே
கனக்கடி மதில்சூழ் தருதிரு வானைக்
    காவகி லாண்டநா யகியே. (87)

# சிற்பம்

# திருவானைக்கா கோயிலின் சிற்பங்கள்

## அன்றும் இன்றும்

திரு. பட்டாபிராமன் B.A., பிரஞ்ச் தொல்பொருளாராய்ச்சித்துறை, புதுச்சேரி.

திருவானைக்கா கோயிலின் தெற்கு உட்பிரகாரத்தில் வடக்கு நோக்கி முற்காலத்திய சோழர் கலைப்பாணியில் இருக்கும் சிற்பங்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருக்கின்றன. அச்சிற்பங்களில் சில இங்குக் குறிப்பிடத்தக்கன.

கீழ்புறத்திலிருந்து மேற்புறம்: தக்ஷிணா மூர்த்தி, உமாமகேஸ்வரமூர்த்தி, பாலசுப்ரமணியர், நின்றசிவன், நின்ற பிரம்மன், அர்த்தநாரீஸ்வரமூர்த்தி, சுகாசனத்தில் சிவன், இச்சிற்பங்கள் முற்காலத்திய சோழர் கலைப்பாணியில் உள்ளன என்பதை ஊர்ஜிதப்படுத்துகின்றன.



படம் 1. உமாமகேசர்

உமாமகேஸ்வர மூர்த்தி—சிரசு: ஜடா மகுடம், இடக்காதில் சங்கபத்திர குண்டலம், வலக்காது தொங்கும் நிலை—கழுத்தில் ஹாரங்கள், தோளில் தடித்த பூணூல் (யக்ஞோபவீதம்) மேல் இடக்கையில் மான்,



படம் 2. பாலசுப்பிரமணியர்

கீழ் இடக்கை அம்மன் தோளை அணைத்த நிலை, மேல் வலக்கையில் பரசு, கீழ் வலக்கையில் தானமுத்திரை, இடது தொடையின் மேல் அம்மன் இருந்த கோலம், கால்கள் சுகாசனத்தில் அமைந்த நிலை.

அம்மன் சிரசில் கரண்ட மகுடம். காதுகளில் குண்டலங்கள், கழுத்தில் ஹாரங்கள்,



படம் 3. நின்ற பிரமன்



படம் 5. கங்காள மூர்த்தி



படம் 4. வீரபத்திரர்



படம் 6. நாகராஜன்



படம் 7. நாகர்கள்



படம் 9. நாரத முனிவர்



படம் 8. அக்கினிதேவன்



படம் 10. ஏகபாத திரிமூர்த்தி

கைகளில் கடகங்களும் வளையல்களும் உள்ளன. (படம் 1)

பாலசுப்பிரமணியர்—சிரசில் மகுடம், காதுகளில் குண்டலங்கள், கழுத்தில் ஹாரங்கள், மார்பில் சன்ன வீரம், மேல் வலக்கையில் அக்ஷமாலை கீழ் வலக்கை அபய ஹஸ்தநிலை, மேல் இடக்கையில் கமண்டலம், கீழ் இடக்கையில் தொடையின் மேல் வைத்திருக்கும் நிலை. பாலசுப்பிரமணியர் சுகாசனத்தில் வீற்றிருக்கிறார். (படம் 2)

இக்கோலம் கந்தபுராணத்தில் குறிக்கப்படும். சுப்பிரமணியர் பிரம்மனுடைய சின்னங்களை தரித்துக்கொண்டு சிருஷ்டி நிலையில் உள்ள கோலம். இத்தகைய சிற்பங்கள் முற்காலத்திய சோழர்கலைகளிலும், அவர்களைத் தொடர்ந்து இராஜராஜ சோழர்காலம் வரையிலும் காணப்படுகின்றன.

நின்ற பிரமன்—நான்கு முகம், சிரசுகளில் மகுடம், மேல்வலக்கையில் கமண்டலம், கீழ் வலக்கை அபய ஹஸ்த நிலை, மேல் இடக்கையில் அக்ஷமாலை, கீழ் இடக்கை கடியவலம்பித நிலை. (படம் 3)

சுகாசனத்தில் சிவன்—சிரசில் ஜடா மகுடம், நெற்றியில் மூன்றாவது கண், இடக்காதில் சங்கபத்திர குண்டலம், வலக்காதில் குண்டலம், கழுத்தில் ஹாரங்கள், தோள்களில் ஸ்கந்த மாலைகள், மார்பில் தடித்த பூணூல் (யக்ஞோபவீதம்) வயிற்றில் உதரபந்தம், இடுப்பில் கீர்த்திமானம், மேல் இடக்கையில் சூலம், கீழ் இடக்கை அபய ஹஸ்தநிலை, மேல் வலக்கையில் அக்ஷ மாலை, கீழ் வலக்கையில் மற்றொரு சூலம்.

சிவன் சுகாசனத்தில் வீற்றிருக்கிறார், சிலர் இச்சிற்பத்தை வீரபத்திர மூர்த்தியென்றும் சொல்லுகிறார்கள். (படம் 4)

உற்சவர் :

கங்காளமூர்த்தி—சிரசில் ஜடாபந்தம் இடது காதில் சங்கபத்திர குண்டலங்கள், கழுத்தில் ஹாரங்கள், வலக்கையில்



படம் 11. நரசிம்ம மூர்த்தி

உடுக்கை, இடக்கையில் கபாலம், இவ்விருக்கைகளுடன் பத்மபீடத்தில் நின்றிருக்கிறார். (படம் 5)

இத்தகைய கங்காள மூர்த்தி வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணமலை தாலுகா, நார்த்தாம் பூண்டியில் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் காணப்படுகிறது.

தென்னாட்டில் இரண்டு கோபுரங்கள் பாண்டியர் காலத்துக் கலைப்பாணியாகக் காணப்படுகின்றன. ஒன்று திருவானைக்கா

விலும், (ஜம்புகேஸ்வரம்) மற்றொன்று சிதம்பரத்திலும் உள்ளன. இரண்டு கோபுரங்களின் அமைப்புகளும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன.

நாகராஜன் (படம் 6)
நாகங்கள் (படம் 7)
அக்கினி (படம் 8)
நாரதர் (படம் 9)

அம்மன் சன்னிதி முன்பாக இருக்கும் தூண்களில் முக்கியமானதொரு சிற்பம் காணப்படுகிறது ; ஏகபாத திருமூர்த்தி.

சிவன் ஒற்றைக் காலோடு காணப்படுகிறார். அக்காலின் மேல் பாகத்திலிருந்து வலப்புறம் பிரம்மனும், இடப்புறம் விஷ்ணுவும், தோற்றமளிக்கின்றனர். இது மிக அழகான பிற்காலத்திய ஏகபாத திருமூர்த்தியாகும். (படம் 10) இம்மூர்த்தம் சிவ பராக்கிரமத்தில் விரிவாக குறிக்கப்பட்டிருக்கிறது.

சுவாமி சன்னிதி மண்டபத் தூண்களில் சில முக்கியமான சிற்பங்கள் வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டிருக்கின்றன. அச்சிற்பங்களில் ஒன்று நரசிம்மர் வீராசனத்தில் இருந்த கோலத்தை குறிக்கிறது. இது பிற்காலத்தியது. (படம் 11)

இத்தலம் பஞ்சபூதத்தலங்களில் ஒன்றாகும்.

முற்காலத்திலும், பிற்காலத்திலும் கோயில் நிர்மாணத்திற்கும் அதனுள் சிற்பங்கள் அமைப்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதைத் திருவானைக்காக் கோயில் சிற்பங்களின் வாயிலாக நாம் நன்கு அறிகிறோம்.

## அகிலாண்டநாயகி மாலை

பூவண நகரிற் பொன்னனை யாளிற்
புகுந்தனன் முன்புகா மாரி
தூவண வன்பின் னைந்திணை யெனுநூல்
சொற்றதை விளக்கின னென்னின்
மாவணத் தளிர்நேர் மேனியா யுலக
மாதுகொ ணீவிடை யிதற்கென்
காவண நிறைவீ தித்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (88)

# THE GREAT WALL OF THIRUVANAIKA TEMPLE

BY

A. V. JEYECHANDRUN, M.A., B.L.

THE great wall around the famous Thiruvanaika temple, measuring in perimeter 7858 feet, in breadth 6 feet and in height 35 feet, has always baffled people, for there is no need for such a massive structure around the simple temple complex of Thiruvanaika. Examining closely, apart from the temple complex that is now under venerated worship, one finds another small group of temples, named as 'Palaya Jambukeswarar temple', meaning old Jambukesvarar temple. The great wall encompasses all these and is also known as 'Thiruneetran Mathil'- In other words, the wall of the holy-ashed person.

The real need or significance for such a wall is to be examined from several angles. One such is the 'agamic texts.' Karana agama lays down the dimensions of a wall in temples with 'Pancha Prakara.' Jambukesvarar Temple is one such and hence the existence of the wall is justified. The second angle is the traditions and rituals in vogue within the temple. The temple is under agamic worship and the rituals and festivals give no clue either. Inscriptional evidence, a surer method, does not also help us, except in the case of a few inscriptions. Most of the earlier inscriptions evidently have suffered damage by the renovation conducted by the 'Nattukkottai Chettiars.' The religious fervour and zeal possessed by the community in the matter of renovation have blinded them to the historical importance of the inscriptions and the distinct contribution they could make in reconstructing the history of Tamil Nadu during several periods.

Yet another way of assessing truth is to examine the oral traditions in relation to other corroborative evidence like, sculpture etc. The present article tries to find out whether the walls of Thiruvanaika, so much celebrated by Thevaram hymnist downwards, could have served in a much earlier period, even prior to the period of Thevaram as a fort to ensure secrecy to certain religious practices, like human sacrifice. Thiruvanaika temple, oral traditions disclose, has been the place of worship for goddess 'Akilandeswari' (goddess of earth), Jambukesvarar (Lord of Water) and Narayana (Lord reposing, in water-Naram—ayanam). Goddess Akilandeswari, as earth goddess, confers bountiful prosperity to the devotees. Lord Jambukeswarar, being associated with water, is the Lord who gives 'prana' or life force to humanity, for water is symbolised as 'Prana.' Vishnu is the protective god in the Hindu scriptures and he rests on the life force-water. Thus

all the two gods and a goddess, associated with this temple, have been those who would bestow benefit to the people materially.

Vedas and other texts refer to many forms of sacrifices : Aja bali (goat), Gaja bali (elephant), Aswa bali (horse), Varaha bali (boar), Kukuda bali (cock) and above all these Nara bali (Human). Human sacrifice is also referred to in inscriptions as 'Medhavam' (highest penance). Human sacrifice has been of several forms and one such is giving up one's life in the act of 'nava Kandam', namely offering eight parts of the body and finally the head.

**Narayana Bali :**

Let us consider human sacrifice as a ritual followed in the world over. The sects or cults who have been practising human sacrifice met at secluded corners and entire ritual was shrouded in mystery, with the result many were ignorant of it. Let us take for an instance the cult of 'Vasudeva.' Satapatha Brahmana identifies Narayana with 'with Purusha', the Primeveal man and describes him as 'Purusha Narayana.' The text narrates that Purusha Narayana conceived the idea of 'Pancharatra Sattra' with a desire to overpass all beings and become everything here on the universe. The five-day sacrificial session (pancharatra sattra) is described as the 'Purushamedha', the immolation of man (Satapatha Brahmana, Chapter XIII). Although the gigantic array of human victims listed in this text suggests that the sacrifice had by then become symbolical, the passage, undoubtedly, discloses Narayana's connection with the institution of human sacrifice. The ritual killing of a man was a universal development from cannibalism through which human civilization had to progress and Narayana's connection with it indicates his hoary antiquity. If Narayana signified the collectivity of man, it was for the good of the whole tribe that a human being was killed, originally to provide food for the entire community of men, and later for ritual ('medha' literally means 'food', hence 'Purushamedha' human food) (The origin and development of Vaisnavism—Dr. Suvira Jaiswal)

The Brahmana emphasises the communal character of the sacrifice in which there were no priests and the performers themselves acting as sacrificial priests. Original association of Narayana with human sacrifice is also preserved in the ritual of Narayana bali described in some 'Grahya Sutras' (Baudh. Grahya Sutra, Chapter III verse 20–21 ; Vaikhanasa Smarta Sutra IX–9 ; Asvalayana Grahya Parisistam, Chapter III, 15 ; Vishnu Dharmottara Purana, Chapter II—76–20). It is also stated that the rite of 'Narayana bali' an offering to Narayana should be performed for those who die an unnatural death, commit suicide or are slain, and for all those persons for whom cremation is forbidden. It was specially ordained for those who committed the five kinds of great crimes (Mahapathaka) (Manu Smriti, Chapter XI–55). Even in the middle ages, the victims of human



தட்சிணாமூர்த்தி
சுவாமிகோயில் தென்புறம் உள்ளது.
அருள்வழிய அமைதியே வடிவான குருமூர்த்தம்



சங்கமேஸ்வர கோபுரம்
நூற்றுக்கால் மண்டபத்துடன்

sacrifice were criminals and theoretically, it was held that the execution of a criminal cleansed his soul of guilt (A. L. Basham—The Wonder That Was India—page 336). It is likely that the Jambukeswarar temple complex, where worship to Lord Narayana had taken place, as confirmed by a presistant oral belief, was used in hoary past as a centre for 'Narayana bali.'

**Nava Kandam** :

The cutting of one's neck as part of an offering to gooddess has been referred to in inscriptions. Even sculptural representations of a devotee offering his head to goddess 'Durga' are found in a number of places. Durga's figure in 'Dhraupathi Ratha' at Mamallapuram, the Durga's sculpture at Tiruchirapalli Rock Cut Temple and the Durga's sculpture at Thirupparankundram temple are a few of the evidences still remaining to confirm the performance of 'medhavam.'

An inscribed slab in the Subramaniya Temple in Mallam (Gundur Taluk, Nellore) of the Pallava period (968 A. D.) contains a sculpture of a decapitated man, his right hand holding a sword and the left holding his own severed head by its locks. The inscription refers to the devotee's name as 'Okkandanagan Okkatindan Patti Pottan' and that he severed his own head as the final offering and placed it on the altar, after offering 'nava kandam', i.e. flesh from nine parts of his body and an endowment of lands was made to his relative, Patti Pottan, in recognition of the act and a stone monument was erected as a memorial (South Indian Inscriptions—Vol. XII No. 106). Similar slabs of this type are found in the vicinity of Tiruvotriyur Temple. (Religion as revealed by Early Monuments—K. R. Srinivasan, The Madras University Journal—Vol. XXXII No. 1, July 1960).

Descriptions of the act of head offering to Durga and the worship of Durga by the warriors (Maravar, Eyinar or Mallar) as prize for the victory vouchsafed by the goddess in the 'Vettuvavari' and Indravilavur edutha kathai of Silappathikaram (XX and V—11, 75-90) seem to be a pen-portrayal of the story related in the sculptures. The head offerings are described in Kalingathuparani (Koil 21) and in the Sanskrit work 'Dasa Kumara Sarita' in Vrittanta of Upakaravarma, and the Kalika Purana (Chapter 70).

Recently, during my visit to the temple, I discovered a 'Navakandam offering' sculpture in the garden on the southern side. The sculpture lay buried in the garden. It is likely that the temple was the venue of 'Navakandam' offering. Adi Sankara, who visited this great temple during the 9th century is said to have changed the worship at this temple from 'vamachara marga' to 'samayachara' form. It is probable that the Ganesa temple in front of Devi's shrine is built over the sacrificial altar. The successors of the Kama Koti Sankara Mutt still continue to attend to the repair of the Sri Vidya Thattanka of the goddess Akilandeswari, originally donated by Sankara.

**Pasupathas :**

The votaries of the Pasupatha cult were connected with this temple. Pasupatha was the oldest form of Saivism. It is referred to in Mahabharatha in Narayaniya section. The tenets of the sect of Pasupathas are summed up by Madhava in his Sarvadarsana-Sangraha under the name Nakulisa-Pasupatha. D. R. Bhandarkar has done most to elucidate the history of the Pasupatha cult. The votaries of the cult hold Siva as the Isvara (Supreme Being). He is Pasupati (Lord of Beasts). He is the creator and ruler of the world, but not its material cause. With the Sankhya they admit the notion of a plastic material cause, the Pradhana; while they follow Patanjali in maintaining the existence of a Supreme Being. Pasupati Vrata (vow) calculated to release the pasu from the pasa includes the wearing of the holy ashes—vibhuti or thiruneeru. It would be pertinent to remind ourselves that the name ef the wall is 'Thiruneetran Madhil'. The story goes that an ascetic built it by distributing vibhuti as wages to workers. Surely this is task of a pasupatha performed as a pasupatha vrata.

Much of the earlier connection of the pasupathas with the temple may have become obliterated, but the fact of pasupathas' association with the temple from 13th century is known from inscriptions.

A section of Pasupathas may have settled down in Tamil country giving up their repulsive practices, particularly after the storming influence of the Bhakti cult heralded in Tamil Nadu by the Alwars and Nayanmars. They established a mutt known as 'Akilandanayaki Thirumadam' at Thiruvanaika or Jambukesvaram. The history of the mutt can be at present traced back to the second quarter of the 13th century A. D., when it is said to have been presided over by one of the 'Jiyar Visvesvara Sivacharya', the Head of the Golaki Matha, a migrant from the province of Radha and the preceptor of the Kakkatiya King, Ganpathi. In 1240 A. D., a village called Kumaramangalam in the former Pudukkottai State was granted to Akilandanayaki Thirumadam as Madapuram (inscription from the former Pudukkottai State No. 196).

The Head of the Mutt of Jambukesvaram was celibate like the heads of the other mutts. He was in charge of temple at Jambukesvaram enjoying the rights of 'Archana', Thirukkan sathu, kovil kelvi, Kanakkeluthu, muddirai, mura suvanthiram. In A. D. 1584, an important change occurred. The 'Thirumugam' issued by 'Candesvara' records the appointment of Chandrasekara Guru Udaiyar, a Pasupatha Grahastha as manager of the temple. (A. R. S. I. E. 1936-37 No. 135 Part II, Para 79). According to this inscription, the Pasupatha Vratham and the six rights conferred, so far in the enjoyment of the head of the mutt in lineal succession of Guru to Shisya now passed on to a Grahastha and his sons. The change from a celibate to a Grahastha is to be noted. It was also provided in the Thirumugam that the elder, both by age and learning

should be the head of the mutt and maintain the brotherhood of the disciples of the mutt. This change seems to be novel at that time and hence in the Thirumugam, elaborate references to several authorities were made to justify the change.

One of the most note-worthy among the Pasupathas, who held sway over the temple, was the Pasupatha Grahastha named Chandrasekara Guru Udaiyar. He was also known as Srikantha Akasavasi (64 of 1937–38), Chandrasekara Vajapeya Yaji. After his death, his son, Sagnijith Savajit Mahavratha Yaji Mahadev Makkim succeeded. After him, Siddhasiva Makkim also known as Sadasiva Diksita or Sadasiva Vajapeya was appointed as 'Dharmakartha' of Jambukesvara temple in the cyclic year of Jaya about the year 1654. Sadasiva Diksita was a great votary of Sambu or Siva and believed in the spiritual efficacy of sivananaraya (Siva, Sambu and Mahadeva). He is known from inscriptions, as Sivanamatry a Prakasakala (15, 53, 256 of 1937–38) He erected pillars 'Sivanamatraya Jayasthambam' in utsava mandapa. He was responsible for a number of works like construction of 'Mandapas', erection of pillars and installation of some of the edifices in the temple complex of Jambukeswaram. Records at Sankaracharya Mutt at Kumbakonam also disclose the recognition by the successors of the Pasupatha Grahasthas, the right of the Head of the Mutt to do tattanka pratistha to Goddess Akilandeswari in the temple at Thiruvanaika (Journal of Oriental Research, Madras Vol. XXV, Parts I–IV, page 82).

All these accounts show that the great temple of Jambukesvaram set amidst sylvan surroundings on the bank of the river Cauvery, with considerable sprouting springs, served as a great centre of secret worship resorted to by the votaries of the Narayana, Devi and Pasupatha cults. The great earth mound which was in existence is likely to have been replaced at a later period by a great wall.

People often repeat the story that the figure of Vishnu was removed from the venue of Tiruvanaika temple to Srirangam. There may not be any truth in it. Sangam literature mentions Tiruvarangam. The Tiruvaranga Vimanam also provides, by its elliptical shape, an evidence of its antiquity. Elliptical forms are noticed in Buddhist temples during the 1st century B. C. to 2nd century A. D. The elliptical form of the temple was known as 'Andakrithi' and during the later days with a view to avoid the smack of Buddhism, the Vimanam may have acquired its present name 'pranavakrithi'. The Lord at Srirangam should have been in existence from the sangam age and the Narayana bali that has been in practice at Jambukesvaram should have been to an earlier form of Narayana.

# THIRUVANAIKKA (JAMBUKESVARAM) THE CENTRE OF JAMBULINGAM OR APPULINGAM

BY

Dr. T. N. RAMACHANDRAN, F.A.S. (Padma Bhushanam)

TIRUVANAIKKA or the "grove or forest of elephants", three miles north of Tiruchi, one mile east of Srirangam and on the north bank of River Kaveri is celebrated for its temple called Jambukesvaram. It is one of the five element-shrines or **Pancha-bhoota sthalams** renowned for the worship of Siva as representing the element of water (*appulinga*). Here Siva is in the form of a linga in the *garbha griha* of the temple below ground level and is always surrounded by water, a curious phenomenon indeed! An arrangement has been made, as the temple priest informs us, by which though water is baled out from around the *Linga*, water surrounds it again very soon. The Puranic version (*Padma Purana*) is that there was a forest *Jamboo* trees (*Eugenia Jambolana*) near Chandratirtha tank here which was filled with kaveri water. In this forest appeared Siva under a while *Jamboo* tree. A penitent saint here swallowed a jamboo fruit with its seed after offering it to God Siva as *Nivedana*. The seed sprouted and became a tree in the very body of the saint. At the request of the saint Siva took his place as a *linga* under the tree. Thus both the *linga* and the saint found their due places under the *jamboo* tree. Hence the local *Siva-linga* came to be called Tiruvennayiludaiyar, Jambunathar, and Jambu-lingam. Two Siva Ganas called Pushpadanban and Malyavan were born in this *kshetra* by a curse, one as a white elephant and the other as a spider. Beholding the *linga*, the elephant began a daily worship of Siva with flowers (archana) and offered a shower of water (abhisheka) with its trunk. Hence the shrine came to be called the forest of the elephant (Thiruvanaika). The spider also worshipped the same linga, its service being in the nature of spreading its web over the *linga* with its threads in the manner of a canopy over the linga so as to check the fall on it of dry leaves from the tree. Taking the spider's web as unclean moss or cobweb, the elephant destroyed it and proceeded with its own worship in the manner detailed above. The spider spun its next again and again over the *linga* and the elephant removed it relentlessly again and again. Neither the spider nor the elephant understood that the worship of Siva was each other's common motive but mistook each other's intension. They became violent opponents. One day the spider made its way into the elephant's trunk and bit it frequently. Unable to bear the pain the elephant dashed its trunk on the ground and fell down

dead. The spider which was lying hidden within the elephant's trunk living it all the time was also killed as the elephant was dashing its trunk. Admiring their devotion God Jambunatha gave them salvation (*moksha*).

Malyavan who was the spider of the story, took rebirth in this world, this time in the royal chola family. Subhadeva was then the chola king. Having no children he and his wife Kamalavati were doing penance before Nataraja of Chidambaram. The kind God granted them their desire. The spider of the former birth entered the queen's womb. When child-labour approached the queen was told by astrologers that if the delivery of the child could be delayed by one *naligai* (24 minutes) the child would rule over the 3 worlds. With the longing and ambition of a fond mother the queen bade her attendants tie her legs and hang her head down with feet up till the auspicions hour approached. This was done. When she was let loose at the correct time she gave birth to a boy of ravisting beauty but with red eyes as a result of forced stay in the womb on beholding whom she cried out of joy "Oh! my dear Ko-chen-Kannan?" "my king of red eyes", and so crying died immediately. King Subhadeva crowned the boy king when he came of age and himself went to the forest for penance Kochenkannan who had prescience or knowledge of his previous birth and service to *Jambulinga* began building this temple and endowed it with jewels. He built other shrines also, in all 70, and going to Chidambaram built houses for the *Tillai andanars*.

Tamil literature hails him as "endol-isarku elil madam 70 seydu ulagamanda Kochenganan". This story is referred to by Saint Appar (600 A. D.) in his *Tirumurai, IV, Padigam* 49, and by Sambandar (7th century A. D.) in *II Tirumurai*, Padi gam63-7. Though earlier references to this story and Tiruvanaikka (Gajaranya) are found in *Padma Purana*, historical significance is shed by Appar, who while singing on this shrine and its god in his *Tevaram* (Tiruthandagam, 6862, 6866, 6871) draws our pointed attention to the outer prakara wall, now called Vibhuti (Tiruniritten) madil, during the erection of which God Siva came as a Siddha and paid the workmen sacred ash (vibhuti, Tiruneeru) as wages. The spider becoming the Chola King is also recorded in Kalingattupparani, Kulothunga-cholanula, Tiruvandadi of Nambiandar Nambi and Sekkilar's Periya Puranam. It is also recorded in the Tiruvalangadu copper plate grant of Rajendra Chola I (1014 A. D.) and in two stone inscriptions of later date found in the Tiruvanaikka temple. Tirumangai Alvar (8th cent. A. D.) also hails the king as "Irukkilangu Tirumani Yendolisarku elil madam 70 ceydulagamanda tirukkulattu valachcholan" (Periya Tirumoli, 6-6, Ambaram 1498-1507). This temple is one of the 70 shrines raised by Kochchenkannan as referred by Tirumangai. It has 5 prakaras or courtyards and the outermost is called Tiruneerittan madil. Tradition has it and Appar bears

testimony to it that in this temple Siva came as a Siddhar and erected a prakara evidently the outermost one (the 5th) giving to the labourers as wages Siva's sacred ash (vibhuti). Hence this prakara came to be called Vibhuti or Tiruneerittan madil. Another version is that Siva in the form of a Mestri supervised the construction and gave a packet of vibhuti towards the labourer's cooly, and when the packet was opened to! it contained the daily wages of the labourer. The temple has got 5 prakaras symbolically standing for the 5 human Kosas or covers and it is the 5th prakara that is called Tiruniritian madil. Tiruppugazh (15th cent.) has the following song on this temple. Alitter marukir payilmeyttiruririttan madil Surriya porriru Anaikka, ' Saint Arunagiriyar also refers to the famous seuephire of God Shanmukha worshipped on the southern bank of the temple tank called Sambhutatakam as "Tungagajaranyattil uttama Sambhutatakamadutte."

Dakshina Sundara Maran madit purатturai Perumane (Tiruppugal 13) Arunagiriyar calls this Kshetra, Gajaranya and refers to the outermost prakara as *Sundara Maran madil*. As Appar (600 A. D.) has already referred to the existence of this madil for erecting which Siva gave vibhuti as wages to the workmen, Arunagiriyar (15th century) calling it *Sundara Maran-madil* only refers to the time-honoured privilege of the sequence of ruling dynasties associating their names with an event of merit such as repair or renovation of the prakara rendered sacred by Siva's labour fee of vibhuti or Tiruneeru. Sundara Maran bore the honorific- name Tiruneerru Sundara Pandyan. In the 11th and 12th centuries A.D., the later chola kings Kulothunga I and II bore the title "Tiruneerruchcholan" obviously for honouring the time honoured custom of doing some repair to this sacred Vibhuti prakaram. In an inscription on the north side of Vibhuti Prakaram it is recorded as "Svasti Sri Tirunirrucundara pandiyan tirumaligai Sri", which shows that it has a reference to the fifth prakara. The Pandya symbols, two fishes and the ankusa, are also carved by the side of this inscription. The Pandyan king who raised this wall was also called "Tirunirruc Sundara Pandiyan" (13th century A.D.). Inside this court is the Ayirakkal Mandapam or the hall of 1000 pillars" with fine carvings. The Tevaram records that a chola king who had his capital at woraiyur was bathing in the River Kaveri, when his necklace with pendant Padakkam fell into the water. The King prayed that the lost necklace should find its way eventually to God Siva. No sooner did he pray than it was caught as though accidentally but surely by God's will in an *abhisheha* pot while the temple priest was collecting water from the river and while abhisheka to the linga was being performed with that water, the King saw the necklace falling from the pot on the Linga and adorning the God. Thereby the king received divine blessing. In this temple Ambika is called Akilandanayaki who, by worshipping Siva, had

jnanopadesa from him. The fact that devi worshipped the God is even now remembered in the temple daily-worship ritual by the priest of the Devi temple dressed in woman's attire going to the temple of the God during mid-day *puja* and doing *archana* to the God. The Utsava mandapa in front of the Devi Shrine within the second prakara was raised in the 17th and 18th century. Among noteworthy carvings here mention may be made of the one showing the elephant worshipping the Jambu-Linga and another representing Ekapada Trimurti or Aja Ekapada, i.e. the Trimurti standing on one leg. In the latter Siva is shown standing erect in the centre with Brahma and Vishnu issuing from him to his right and left respectively, while their vahanas, the bull, swan and Garuda are shown in the foreground below them.

Surrounded as it is by 5 prakaras the garbhagriha of this temple would appear to have been made of stone in the early chola period as shown by inscriptions of Parantaka Chola I found on the walls of gurbhagriha. Subsequently as temple rituals increased and the place began to attract pilgrims in large numbers, the temple was enlarged by the later Cholas, Pandyas, Hoysalas, Vijayanagara Kings and the Nayake Chiefs. Many gifts of lands and ornaments are attributed to them in the temple inscriptions. Recently, within 50 years, a celebrated Nattukkottai Nagarattar renewed the mandapas and inner structures of the temple.

The shrine of Devi (Tirukkamakottam) came into existence during the period of the later cholas (1070 A. D. onwards). It has however been recently renewed with shining black stone (basalt) in the modern style of temple architecture. There is also a temple of Adi Sankaracharya located within the fourth prakara of this big temple. The goddess was worshipped by Adi Sankara himself, who decorated the image of the goddess with two ear-rings or tatankas bearing chakras. It is said that once the deity was so powerful that impure devotees met with some mishap or other and to mitigate the wrath of the deity, Sankaracharya provided the Goddess with the tatankas bearing chakras. An image of Ganesa was also set up in front of the deity. In 1923, these original tatankas having become old, were renewed by the present Jagad Guru Kamakoti Sankaracharya. The Sankaralaya within the 4th prakara and some other mandapatirthas were erected by local Pasupata Sivacharya. Rajarajesvaram within the 5th prakara is a shrine by the northern side of this temple erected by the chola king Rajaraja III. In one of its cells is a panchamukha-linga standing for Sadasiva, with carvings of the 5 faces of Siva, Satyojata, Vamadeva, Tatpurusha, Aghora and Isana, the last one occupying a higher place than the other four. It is of excellent Hoysala workmanship. Between this temple and the Akhilandanayaki temple is a temple called Pasupatisvaram octagonal in base and circular above, which looks like a granary, the Srirangam temple granary, on the analogy of a similar shrine at Negapa-

tam. This Pasupatisvaram was erected in the reign of Hoysala Vice Ramanatha Devar (1255-95 A.D) whose portrait sculpture with his hands held in anjale can be noticed here. Vestiges of Hoysala occupation here are Visvesvara Devaby named after Visvesvara Sivacharya who lived in the Akhilandesvarimatham, Prasannesvara to west of Ramatirtha and a pamadhi temple of Sowaladevi on the outskirts of the temple. From 13th century onwards several Saiva mathas including Sangama deva matha by the side of the temple of Sangamadeva came into existence here. Visvesvara Sivacharya-matha belonging to Golaki Santanam of Lakshadhyayimatha of Sad-bhava Sambhu has been flourishing here for a long time. A stone record of 1240 A.D. from Pudukkottai called this திருவானைக்கா லட்சாத்தியாயி கோலகி பிட்சாமடம். Hoysala Vira Ramanatha in 1258 A.D. erected a matha in Tiruvanaikka for the use of Tatpurusha Sivacharya who bore the title of சைவசித்தாந்த வியாகயாதா and endowed it with lands.

In 1235 A.D., Hoysala Vira Somesvara built 4 small temples within the temple enclosure and named them after his grandfather, grandmother, father and aunt as Vattalesvaram, Padmalesvaram, Narasimhesvaram and Somalesvaram. In the 13th century the Hoysalas interfered in the feuds of the Cholas and Pandyas and began to claim friendship with them by inter-marrying. Slowly they raised their own capital city at Kannanur near Samayapuram, 8 miles to the north of Tiruchy and were governing the locality. Vira Somesvara was an important member of this Hoysala family who figures prominently in the history of the temple of Jambukesvaram. Similarly Hoysala generals and merchants of the times also raised shrines here such as Tyaga Vinodisvaram erected by Kalavakkur Tyaga Perumal and temple of Nataraja alias Sri Padamudaiyur erected by Karuppur Jnana Sambandar. The Western Gopuram was built prior to 1178 A.D. during or slightly prior to Kulothunga III's time. The Eastern Gopuram called Sundara Pandya Gopuram is of great artistic interest and contains carvings bespeaking the excellence of 13th century art in the tranisition between Chola and Pandya. This gopuram was begun in 1216 A. D. during Maravarman Sundara Pandya's time. It was completed by Hoysala Virasomesvara as an inscription here refers to this gopuram as வீரசோமஸ்வரன் திருநிலை ஏழு கோபுரம். Sundara Pandya (Maravarman) ruled in Madurai ; His victories are proclaimed in his inscriptions found on the eastern gopuram of Sundaresvara temple, Madurai. When he ascended the Pandya throne Rajaraja III was the Chola King. Even as a lad he was resenting the conquest of the Pandya land by the Chola Kulothunga III. Finding that Rajaraja III was weak, Sundara invaded and conquered the Chola capitals of Tanjore and Woraiyur and coronated himself at Pataiyarai, another Chola head quarters and worshipped Ponnambalam of Chidambarm. On his way back to Madurai be camped at Pon Amaravati and sending for the defeated

Chola gave him back the Chola kingdom in return for an annual tributary tax. Out of gratitude, the Chola named his son after the Pandya. After some time the chola stopped paying his tribute. Sundara invaded again the Chola land and drove the Chola out of his kingdom. The tunning Chola was imprisoned by Kopperunjinga at Sendamangalam. In celebration of this victory the Pandya anointed himself at Mudikondacholapuram. Later, in 1232 A. D. Hoysala Vira Narasimha released the Chola from prison and after defeating Sundara Pandya in battle restored the Chola to his throne that he had lost to the Pandya.

Sundara Pandya's works are in Madurai the Eastern Gopuram of 9 tiers before Sundaresvara Sannidhi, Sundara Maran Tirumadil of Swami temple, Sundara-Pandya-Mandapam of Minakshi Amman Koil and Immaiyil-nanmai-taruvar koil in Mela Masi vidhi, Madurai. His works in Tiruvanaikka are the Eastern Gopuram called Sundara Pandya Gopuram of 7 tiers which he began in 1216 A. D. but which was completed by Hoysala Vira Somesvara and the Vibhuti Madil. As the name in the inscription on the madil reads as Tirunirru Sundara Pandyan it follows that this Pandya associated his name also with the sacred ancient madil by effecting some repairs to it.

The Gopuram, which is in 7 tiers, has its lower part (janga) all in fine granite, while the upper part is of brick and fine stucco work. The cosmic significance of this Gopuram with every nook and corner richly decorated poems to be that the visitor should be instructed ocularly in the doctrine of Hindu mythology, iconography, fine arts, the Muses, in short of every day life. The sculptured panels of this Gopuram, is placed end to end, would extend for long. The sculptures bespeak a luxurious experience and open out an encyclopaedia of edifying legends told with moving eloquence and in the plastic language of a singularly chaste and refined dicton, elaborated with rich and exquisite imagery. Incidentally these speaking pictures afford glimpses into the details of the life of the times (13th century A. D.) Humble huts, pompous temples and mansions, musical and dance scenes including those of Siva and his ganas, assemblies of both spiritual and worldly minded human beings, vahanas, forest scenes, window scenes of variety and intricacy, flora and fauna, everything is here pictured in stone eloquently and profusely, yet with refined restraint. In contrast to the moving compositions of life (terrestrial, aerial and celestial) in its variety are the static images of a series of Surya, Ditapalas, navagrahas, sages like Narada and Agastya, Kshetrapalas, Brahma, Vishnu, Siva, Harihara, and Traipurushadeva, and the dynamic images of a series of Ganapati dancing, of Siva in a variety of dances including Gajasankara, Kalasamhara, Urdhvatandava, Kali-tandava, Gauritandava, chanda-tandava, and ananda-tandava and of Mahishasuramardini in tryalidha flexion. Blessing forms of Siva such as Uma-

sahita, Chandrasekhara, Gangadhara, Vrishabavahana, Bhikshadana, Somaskanda, Kankalamurti, Lingodbhava, Kalyanasundara, Chandesanugrahmurti, Kiratamurti and Tripurantakamurti are in evidence. A Chandrasekharamurti in particular is in the role of blessing obvisouly Sundara Pandya with a sword, with which the Pandya obtained his victory. In contrast to the benign forms are the forms of Siva in his dynamic role of dancer, whether he is subduing Kala, peeling off the skin of the elephant, burning the 3 cities or spinning himself in the delightful gyration of ananda-tandava, or winning an easy victory over kali with a lightning-flash of urdhva tandava or lalata-tilake recourse. Among Devs occur Sarasvati, Lakshmi, Parvati, Durga, Akilandanayaki and Mahishasuramardini, the last mentioned in dynamic role. Whoever is the deity (sculpture) depicted, whatever is the background or following of the deity or the architecture of it, the artist has succeeded in his object of representing here sculpture and architecture in mutual complement and blend and thereby converting the gopuram into a veritable Museum, a picture gallery, a wonder land where traversing culturally, men can forget momentarily their physical moorings and run a godly race. Musical scenes occupying the lower sediment in which dwarfish games take part with a variety of musical instruments and dances take us away to a world of retreat and relaxation, to return from which would create a void. The Kiratamurti, Bhikshatana, Gajasamharamurti, Gangadhara, Chandesanugrahamurti, Sarasvati, Urdhavatandava Natesa and Ananta-tandava Natesa forms portrayed in the Sundara Pandya gopuram gallery bring out the best specimens of chola art comparable to the masterpieces of Darasuram, Gangaikondacholapuram, Tiruvenkada and the Brihadisvara of Tanjore. These, surely the products of religion and faith, instil in the spectator's mind the truth that religion is a never failing source of inspiration to the arts and that by religion is not meant mere ritual or dogma but that innate latent quality or virtue in Man that finds tongues in trees, books in running brooks, sermons in stone and good in everything.

A four pillared mandapa called Kuratti-Mandapam in the 3rd prakara is of untold ethnological and musical interest not to speak of the high mark of sculptural art that its sculptures portray kurathis dancing Kathakali, Kudakuttu, buffoons (Komalis) dancing in imitation of Arjuna and woman, Devadasis dancing Bharata-natyam, a whiskered lady dancing with horn and sword, komali-kuttu, Muruga, Virabhadra, Daksha and musicians being the subject matter of these sculptures, this mandapam affords food for merriment and research study.

The Utsava Mandapa within the 2nd prakara was raised in the 17th, 18th century A. D.

The God of Tiruvanaikka has been sung in padmapuranam, in Tevaram, Tiruvachagam, Divya-prabandham

and later on by Arunagirinathar in Tiruppugazh, by Kalamegappulavar, the twin pulavars, Mudusuryar and Ilanjuryar, popular as Irattaiyar, Tayumanaswamigal (18th cent. A.D.) Kacchiyappa Muni and recently by Mahavidwan Minakshisundaram Pillai. The glory of having made Kavi Kalamegam great goes to devi Akhilandanayaki. Saluva Thirumalayya Deva of Vijayanagara the son of Saluva Gopa and brother of Tippa was a patron of Tamil literature. He was visited by Kalamegar who composed a poem on Tiruvanaikka called Tiruvanaikka Ula. Kalamegar lived in the first hay of the 15th century A.D. Besides *Tiruvanaikka Puranam* by Kacchiyappa Muni who was proficient in Sanskrit and Tamil, we have also songs on Goddess Akhilanda Nayaki by Venkatarama Bharati of the 19th century. In short Tiruvanaikka temple is hallowed by antiquity, by Sthalamahatmya puranas, by the visits of Appar, Sambandar and other celebrated Nayanars, and of Adi Sankaracharya and other Sivacharyas, Arunagiriyar and great poets including Kalamegar and by its architectural and sculptural wealth. It witnessed constructions and donations at the hands of a sequence of dynasties that ruled the land-the Chola, Pandya, Hoysala, Vijayanagara Kings and Nayak Chiefs.



இடது கையிலே கரும்பு வில். அதிலே கணுக்கள் ; கணுவிலே வேர் வலக்கையிலே அம்பு. கண்டசரம் மதாணி உதரபந்தம் கிரீடம் முதலான நகை வகைகளுடன் உயிர்கள் மனத்தை ஒழுக்கம் நழுவச் செய்து தான் மட்டும் ஏகபத்தினி விரதனாக விளங்கும் காமதேவன். ஆயிரக்கால் தூண் சிற்பம்



வலக்கையிலே, ‘வந்தால் ஒரே அடிதான்!’ என்று குறித்து நிற்கும் ஓங்கிய கதை. ஆண்முகம் சிங்கக்கால் இவற்றுடன் கூடிய புருஷாமிருகம். மகாபாரதத்தில் ஆரண்ய பருவத்தில் வீமனைக் காட்டில் எதிர்த்த விலங்கு. ஆயிரக்கால் மண்டபத் தூண் சிற்பம்.

# வரலாறு

# திருவானைக்கா

இரா. நாகசாமி, எம். ஏ.

## ஆனைக்கா என்னும் பெயர் :

சைவப் பெருங்கோயில்கள் மல்கும் பொன்னியாற்றின் கரையில், சந்திர தீர்த்தத்தின் அருகில் குளிர்ந்த சோலை ஒன்றில் வெண்ணாவல் மரத்தின் கீழ், அருளினால் வெளிப்பட்ட மெய்ப்பொருளாம், சிவபரனை மிக்க தவம் செய்த நான்கு தந்தங்களை உடைய யானை ஒன்று பூம்புனல் முகந்தாட்டி பூங்கொத்தும் அணிந்து இறைஞ்சி நாள்தோறும் வழிபட்டு ஒழுகிய செயலால் திருவானைக்கா என்று அதற்குப் பெயர் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பர்.

அப்பூங் கானில் வெண்ணாவல்
அதன்கீழ் முந்நாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும்
மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டி
கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை
நாளும் வழிபட் டொழுகுமால்

ஆன செயலால் திருவானைக்கா என்றதற்கு பெயராக இதிலிருந்து இங்குத் தோன்றிய மூர்த்தி சுயம்பு என்பது வெளிப்படை.

தலவரலாறு: ''துளையிற் புறவின் நிறையளித்த சோழர் உரிமை சோணாட்டில்'' இவ்வாறு ஆனை வழிபடச் சிலந்தி ஒன்று பெருமான் மீது சருகு உதிராவண்ணம் கூடு கட்டியதும், அதை யானை அனுசிதமென அழிக்க, சிலந்தி யானையின் துதிக்கையில் உள்புக, யானை கரத்தை நிலத்தில் அறைந்து இறக்கச் சிலந்தியும் இறந்தது. இரண்டும் சிவனருள் பெற்றன என்பது தலவரலாறு. இவ்வரலாறு கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே சிறப்பாக இருந்தது என்று அப்பர் பெருமான் திருப்பதிகத்திலிருந்து அறியலாம்.

'' சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தல் செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்கணானுமாக
கலந்த நீர் காவிரி சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே ''

இதிலிருந்து மற்றொரு உண்மையும் புலனாகும். அச்சிலந்தியே சோழர் குலத்தில் பிறந்து கோச்செங்கணானாகத் திகழ்ந்தது என்றும் அறிகிறோம்.

## கோச்செங்கணான் :

கோச்செங்கணான் சிறந்த வீரன். சிவ பெருமான் அடியை மறவாத சிந்தையான். அவன் பெருந்திருக்கோயில்கள் பல இயற்றியுள்ளான். அவற்றில் அவன் முதலில் எடுப்பித்ததே திருவானைக்கா கோயில் என்று சேக்கிழார் வாக்கால் அறியலாம்.

'' ஆனைக்காவில் தாம் முன்னம்
அருள்பெற்றத னை அறிந்தங்கு
மானைத்தரித்ததிருக்கரத்தார்
மகிழும் கோயில் செய்கின்றார்
ஞானச்சார்வாம் வெண்ணாவல்
உடனே கூட நலஞ்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான்
அமருங்கோயிற் பணிசமைத்தார்.''

சுயம்புவாக விளங்கிய எம்பெருமானுக்கு முதன் முதலில் கோயில் சமைத்தவன் கோச்செங்கணான். அதுவே ஆனைக்கா கோயிலின் தோற்றமாம்.

இச்சிறப்பு வாய்ந்த பெரும் மன்னனின் வரலாற்றை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். இம் மன்னனைச் சேக்கிழார் 'சிலம்பி குலவேந்தன்' என்றே குறிப்பர். இது தல வரலாற்றின் அடிப்படைக் குறிப்பு. செங்கணான் தமிழ் நாட்டு அரசர்களில் வீரம் மிக்கவனாக ஆண்டிருக்கிறான் என அறிகிறோம். அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களிலும், பின்னர்த் தோன்றிய இலக்கியங்களிலும் அவன் புகழப்படுகிறான்.

செங்கண்ணான் எனில் சிவந்த கண்ணை உடையவன் எனப் பொருள் கொள்வர். 'செய்ய கண் இறை' என்று சம்பந்தர் இவனைப் பாடுவதிலிருந்து இதை அறியலாம். இவன்மீது பாடப்பட்ட களவழி என்ற நூலிலிருந்து, வரால் மீன் ஒன்று செங்கண் என அழைக்கப்பட்டது என்று அறிகிறோம்.

"………செங்கண்
வரி வரால் மீன் பிறழும் காவிரி நாடன்" (7)

இவனுக்குச் செம்பியன், கோச்சோழன், பொன்னி நாடன், தென் தமிழன், வடபுலக் கோன், தென்னாடன், குடகொங்கன், தெய்வவாள் வலங்கொண்ட சோழன், சிலைத் தடக்கைக் குலச் சோழன், திருக்குலத்து வளச்சோழன், செங்கண்மால் எனப் பல பெயர்கள் காணப்பெறுகின்றன. இவன் தந்தையின் பெயர் சுபதேவன் என்றும், தாய் கமலவதி என்னும் மாதேவி என்றும் அறிகிறோம்.

**செங்கண்ணான் வீரம் :**

இவன் உரிய காலத்திலே முடி சூட்டப் பெற்றான். இவனுக்குக் கீழ்ப் படிந்து பழையன் என்பான் திருப்போர் என்னும் ஊரின் தலைவனாக விளங்கினான். அவன் மீது சேரமன்னன், கணைக்கால் இரும் பொறை என்பான் போர்தொடுத்தான். சேரனுக்கு உதவியாக நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, வல்வில் புன்துறை என்ற வீரர்கள் வந்தனர். கட்டூர் என்ற இடத்தில் நடந்த போரில் பழையன் வீழ்ந்து பட்டான். தன் சிற்றரசு வீழ்ந்ததைக் கேட்ட செங்கண்ணான் வெகுண்டெழுந்து போர் தொடுத்தான். சேரமன்னன் கழுமலம் வரை கைப்பற்றி முன்னேறினான். கழுமலம் என்பது சீகாழிப் பதியாகும். கோச்செங் கண்ணானுக்கும், சேரன் கணைக்காலிரும் பொறைக்கும் கடும்போர் கழுமலத்தில் நடந்தது. அதில் சேரன் தோல்வியுற்றுக் கைதியானான். அவனுடன் வந்த கொங்கு நாட்டு மன்னன் தலத்தில் இறந்தான்.

"நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன் அருங்கடுந்திறல் கங்கன் கட்டி
பொன் அணி வல்வில் புன்துறை என்று அங்கு
அன்று அவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்து படப்பண்ணி பழையன் பட்டென
கண்டது நோனானாகி திண்தேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையல் அம் கண்ணி பெரும்பூட் செல்வி"

(அகம் 44)

'சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கண்ணானோடு திருப்போர் புரிந்தபொழுது, பற்றுக்கோட்டுப்பட்டு, குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர்தா என்று கேட்டுப் பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்னும் குறிப்போடு குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்...எனப் புறநானூற்றில் ஒரு பாட்டு (74) உள்ளது. இதிலிருந்து சேரமான் சிறையில் சிலகாலம் வாடினான் என்பது தெளிவு. சேரமான் வெளியேறியபோது, அவனைப் புலவர் புகழ்ந்து பாடியுள்ளார். சேரமான் வெளியேறக் காரணமாயிருந்தவர் பொய்கையார் என்ற புலவர் ஆவர். பொய்கையார் சேரநாட்டைச் சேர்ந்தவர். தொண்டி என்ற ஊரில் பிறந்தவர். அவர் சோழன் கோச்செங்கண்ணானின் வெற்றியைப் புகழ்ந்து பாடிய பாடல்களே களவழி நாற்பது என்பது. சிறந்த வீரனான செங்கண்ணான் தமிழ்ப் பாடலுக்காக, தன் மாற்றானான கணைக்கால் இரும்பொறையை விடுவித்தான். இதிலிருந்து செங்கண்ணானின் வீரமும், இலக்கியத்தின்கண் உள்ள ஈடுபாடும், கருணையும் வெளிப்படும். இதனைப் பின்வந்த ஜெயங்கொண்டார், ஒட்டக்கூத்தர் போன்ற பெரும்புலவர்கள் எல்லாம் போற்றியுள்ளனர்.

களவழி கவிதை பொய்கை உரைசெய்ய உதியன்
கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட அவனும்

—கலிங்கத்துப்பரணி 182

"மேதக்கப் பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்"

—விக்ரம சோழன் உலா 14

"சேரமான் தன்னடிக்கு அண்டு தளைவிடுத்தாய் ஏழ்தலை [உன்
பொன்னடிக்கு உண்டு என்பது என்ன புத்தியோ"

—தமிழ் விடுதூது

" செய்கை உரிய களவழிப்பா முன் செய்த
பொய்கை ஒருவனல் போம்தரமோ "...

—நச்சினுர்க்கினியர் மேற்கோள்

செங்கண்ணுன் கழுமலம் என்ற இடத்தில் நடந்த போர் தவிர, வெண்ணி என்ற இடத்தும், அழுந்தை என்ற இடத்தும் போரிட்டு மாற்றலரை அழித்தான் என்று அறிகிரேம். 'வெண்ணி' என்பது தஞ்சை மாவட்டத்தில் கோயில் வெண்ணி என அழைக்கப் பெறும் ஊர். அழுந்தை என்பது திருஅழுந்தூர் (தேரழுந்தூர்) ஆகும்.

" வெங்கண் மா களிறு உந்தி வெண்ணி ஏற்ற
விறல் மன்னர் திறல் அழிய வெம்மா
உய்த்த செங்கணுன் "......
" மின்னுடு வேலேந்து விளைத்தவேளை
விண்ணேறத்தனிவேலுய்ந்து உலகமாண்ட
தென்னுடன் "
பாராளர் அவரிவர் என்று அழுந்தை ஏற்ற
படை மன்னர் உடல் குனியப் பரிமாவுய்த்த
தேராளன்......

என்றும் இம்மன்னனைத் திருமங்கை ஆழ்வார் பாடுகின்றுர். இவன் பட்டத்திற்கு வந்ததும் மாற்றுருடன் கடும்போர் புரிந்து தன் ஞட்டை மீட்கவேண்டியிருந்தது என அறிகிரேம். ஆதலின் இவன் வெற்றிகள் புகழப்பட்டுள்ளன.

**செங்கண்ணுன்—சிவநெறி :**

இவன்பெரும் வெற்றிகள் பலகொண்ட போதிலும், சிவபெருமான்மீது பக்திபூண்டு ஒழுகுவதிலேயே சிறப்புற்றுன். இப்பெரு மன்னன் எப்போது ஆண்டான்? எவ்வளவு காலம் ஆண்டான்? என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. எனினும் இம்மன்னன் சங்க காலத்தைச் சேர்ந்தவன் என்பது திண்ணம். திருவானைக்காக் கோயிலை முதலில் தோற்றுவித்தவன் கோச்செங்கண்ணுன் எனக் கூறினேம். இதன் பிறகு இம் மன்னன் தன் அமைச்சர்களை ஏவி சோழ நாட்டில் பல சிவாலயங்களைத் தோற்றுவித்தான் எனச் சேக்கிழார் குறிப்பார்.

" பூதநாதன்தான் மகிழ்ந்து
பொருந்தும் பெரும் தண் சிவாலயங்கள்
காதலோடும் பல எடுக்கும்
தொண்டுபுரியும் கடன்பூண்டார்."

" மந்திரிகள் தமை ஏவி
வள்ளல் கொடை அனபாயன்
முந்தைவரும் குலமுதலோர்
ஆயமுதற் செங்கணுர்
அந்தமில்சீர் சோனுட்டில்
அகனுடு தொறும் அணியார்
சந்திரசே கரன்அமரும்
தானங்கள் பல சமைத்தார் "

சுந்தர சோழர் அளித்த அன்பில் செப்பேடுகள் கோச்செங்கண்ணுன் நாடு முழுவதும் உமைபாகருக்குக் கோயில் எடுப்பித்தான் என்று குறிக்கிறது. இச்சைவப் பெருந்தகையை, வைணவப் பெரியாரான திருமங்கை மன்னன்,

" எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது செய்து
உலகமாண்ட செங்கணுன் "

என்று பாடுகிருர் எனின் அவன் பெருமை என்னே! முதன் முதலில் தமிழகத்தில் பெருங்கோயில்கள் பல எடுப்பித்த மாமன்னன் அவனே.

" பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினேடெட்டும் "

என்று அப்பர் பெருமான் பாடும் எழுபது பெருங்கோயில்களும் இம்மன்னன் எடுப்பித்தவையே.

**ஆனைக்கா கோயிலில் பேரடியார் :**

இம்மன்னன் எடுப்பித்த திருவானைக்கா கோயிலைப் பல பெரியார்கள் சென்று வணங்கியிருக்கின்றனர். கி. பி. ஆரும் நூற்றுண்டில் வாழ்ந்தவனுகக் கருதப்படும் ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ மன்னன், 'க்ஷேத்திரத் திருவெண்பா' என்னும் பதிகத்தில் இக்கோயிலைப் பாராட்டியுள்ளான்.

" குழிஇயிருந்த சுற்றம் குணங்கள் பாராட்ட
வழிஇயிருந்த அங்கங்கள் எல்லாம் தழீஇயிருந்தும்
என்னு ஊனக்காவா இது தகா என்னு முன்
தென்னு ஊனக்கா அடை நீ சென்று "

கி. பி. ஆரும் நூற்றுண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ மன்னன் திருச்சி வரை கைப்பற்றினுன். அவன் மகனும் புகழ் பெற்ற மஹேந்திரவர்மன் திருச்சி மலையில் குடைதளி ஒன்று அமைத்துள்ளான். அவன் காலத்தில்தான் அப்பர்

பெருமான் வாழ்ந்தார். அம்மன்னன் சமண மதத்தவனாயிருந்து பின்னர் அப்பர் பிரானால் சைவத்திற்கு மாற்றப்பட்டான். தான் சைவனாக மாறியதைத் திருச்சிக் குகைக் கோயில் கல்வெட்டில் குறித்துள்ளான். அம்மன்னன் ஆட்சியின் கீழ்த் திருவானைக்கா இருந்தது. அது முதல் கி. பி. 850 வரை இது பல்லவர் ஆட்சியின் கீழிருந்தது. அக்காலத்தில் அப்பர் பெருமான், திருஞான சம்பந்தர், சுந்தரர் முதலிய சைவப் பெரியார்கள் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டுள்ளனர்.

இலக்கியத்தில் ஆனைக்கா :

ஞானசம்பந்தப் பிள்ளையார் திருவானைக்கா அடைந்து, அங்குறைகின்ற ஆதியைப் போற்றியுள்ளதைச் சேக்கிழார்,

" விண்ணவர் போற்றி செய் ஆனைக்காவில்
வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி இறைஞ்சி முன் வீழ்ந்தெழுந்து
நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச்செங்கண் அரசன் செய்த
அடிமையும் அஞ்சொற்றொடையில் வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலைபாடிப்
பரவி நின்றேத்தினர் பான்மையினால் "

என்று போற்றுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இங்குற்றதை,

" செய்ய சடையார் திருவானைக்
காவில் அணைந்து திருத்தொண்டர்
எய்த முன்வந்தெதிர் கொள்ள
இறைஞ்சிக் கோயிலுட் புகுந்தே
ஐயர் கமலச் சேவடிக்கீழ்
ஆர்வம் பெருக விழுந்தெழுந்து
மெய்யும் முகிழ்ப்ப கண்பொழிநீர்
வெள்ளம் பரப்ப விம்முவார் "

எனச் சேக்கிழார் போற்றுவார்.

அத்வைத தத்வத்தை நிலைநாட்டிய ஆதி சங்கர பகவத்பாதர் இக்கோயிலில் வந்து தாடங்கபிரதிஷ்டை செய்துள்ளார் என்றும், அதுமுதல் அன்னை அகிலாண்டநாயகி அருட் கருணை அனைவர்க்கும் அளவிலாது கிடைத்து வருகிறது என்றும் ஆன்றோர் கூறுவர்.

கி. பி. 850-ல் விஜயாலயன் என்னும் சோழ மன்னன் தஞ்சையைக் கைப்பற்றிச் சோழப் பேரரசை நிலைநாட்டினான். அது முதல் கி. பி. 13ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் இப்பகுதி சோழர் வசம் இருந்தது. சோழப் பேரரசர்கள் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளனர். அவற்றில் செங்கண்ணான் எடுப்பித்த செங்கற் கோயில், முற்றும் கல்லால் கற்கோயிலாக எடுப்பித்தது சிறந்ததாகும். இது ஆதித்த சோழன் காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். கோச்செங்கண்ணானைப் போல் இம்மன்னனும் காவிரிக் கரையின் இருமருங்கும் சிவபிரானுக்கு ஏராளமான கோயில் எழுப்பினான் என்றும், அவை கற்கோயிலாகக் கட்டப்பெற்றன என்றும் அன்பில் செப்பேடுகளிலிருந்து அறிகிறோம். அக்காலத்தில் திருச்சுற்று மாளிகைகள், பிரகாரங்கள், கோபுரங்கள் எழுப்பப்பெற்றன.

கபிலதேவர் என்னும் சைவப் பெருந்தகையே இன்னாநாற்பது இயற்றியவர் என்றும் அவர் சங்ககாலத்தைச் சேர்ந்தவரென்றும் சிலர் கூறுவர். மற்றும் சிலர், இவர் பிற்காலத்தே வாழ்ந்தவர் என்றும், சங்கப் புலவரினின்றும் வேறானவர் என்றும் கூறுவர். அவருடைய திருப்பதிகங்கள் 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 'சிவபெருமான் திருவந்தாதி' என்னும் பதிகத்தில்,

மாதரங்கத் தன்னரங்கஞ் சேர்த்திவளர் சடைமேல்
மாதரங்கக் கங்கைநீர் மன்னுவித்து—மாதரங்கத்
தேரானை யூரான் சிவற்காளாஞ்சிந்த னையே
தேரானையூரா னைத் தேர்.

என இக்கோயிலைப் பாடுகிறார். கி. பி. 13ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியிலும் வாழ்ந்த அருணகிரி வள்ளல் இக்கோயிலில் உறையும் முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடியுள்ளார். இப்பெரியார் பிரபுட தேவராயன் என்ற விஜயநகர மன்னன் காலத்தவர். அம்மன்னருடைய கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் உள்ளது.

விஜயநகர மன்னன் திருமலைதேவன் காலத்தில் கவி காளமேகம் திகழ்ந்தார். அவர் ஆனைக்காவில் அகிலாண்டநாயகியின் அருள்பெற்று 'திருவானைக்கா உலா'

பாடியுள்ளார். தாயுமான சுவாமிகள் அகிலாண்ட நாயகிமீது பதிகங்கள் பாடியுள்ளார். இதுபோன்று இன்னும் அருள் பெற்றுப் பெரியோர் பலரால் பாடப்பட்டுள்ள பதி ஆனைக்கா.

ஆனைக்கா கட்டிட அமைதி :

செங்கண்ணன் காலத்தில் ஆனைக்கா கோயில் சிறப்பாகக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அக்காலத்தில் கோயில்கள் முழுமையும் கல்லாலேயே கட்டப்பெறும் வழக்கம் இல்லை. அதிட்டானம் கல்லாலும், மேல்பகுதி செங்கல், சுதை, மரம் முதலிய கொண்டும் எடுக்கப் பெறுவது மரபு. செங்கண்ணனுக்குப் பின்னர் ஆனைக்கா அண்ணலுக்கு அருள்பெற்றோர் பலர் அவ்வப்போது திருப்பணிகள் நடத்தியிருக்க வேண்டும். அதன் பயனாக அழகிய மலர் போல் இன்று தோன்றும் ஆனைக்கா கோயிலில் மூலத்தான விமானம், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டுக்கோட்டை நகரப் பெருமக்களால் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கும் முன்னர் அண்ணலுறைந்த கோயில் யாரால் கட்டப்பட்டிருந்தது ? எவ்வாறு இருந்தது என்ற வினாவுக்கு ஒருவாறு ஊகித்துத்தான் பதில் சொல்ல முடியும், காரணம் அன்று திகழ்ந்த கோயிலின் வரைப்படமோ, நிழற்படமோ இல்லை.

ஆனைக்கா கோயிலின் உள்சுற்றில் தரையில் மதுரைகொண்ட பரகேசரி, பராந்தக சோழனின் கல்வெட்டுத்துண்டு ஒன்றுபாவப்பட்டுள்ளது. இதிலிருந்து பராந்தகன் காலத்தில் கற்கோயில் ஒன்று இங்கு இருந்தது என அறியலாம். செங்கண்ணனுக்குப் பிறகு பராந்தகன் காலத்திலோ அதற்கும் முன்போ இது கற்கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. அப்பெரும்பணி எக்காலத்தில் நடந்தது ?

இவ்வினாவிற்கு விடையளிக்கும் வகையில் திருச்சுற்றில் ஏழு சிற்பங்கள் உள்ளன. எழில் வாய்ந்தவை இச்சிற்பங்கள். பார்க்கப் பார்க்கப் பக்திக் கனலை ஊட்டுபவை. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை கூட. இவற்றில் மூன்று சிற்பங்கள் சற்றுப் பெரியவை. நின்ற நிலையில் உள்ளவை. ஒன்று நான்முகனின் உருவம், கமண்டலம், அக்கமாலை, அபயம், தொடைமீதமர்ந்த கரங்களுடன் காட்சியளிக்கின்றார். இது கோயிலின் வடபுறக் கோட்டத்தை அலங்கரித்த உருவம். மற்றொன்று உமையொரு பாகனும் அர்த்தநாரீச்வர உருவம். வலப்புறம் அண்ணல் உருவம், இடப்புறம் அன்னையின் உருவம் கொண்டது. வலப்புறம் மழுவும், தொடைமீதமர்ந்தும் விளங்கும் இரு கரங்கள், இடப்புறம் வளையுண்டு தாமரை மலர்த் தாங்கி நிற்கும் அன்னையின் ஒரு கரம் ; வலப்புறம் சடைமுடி. இடப்புறம் எழில்முடி ; வலப்புறம் மகரக்குழை ; இடப்புறம் தோடு. வலப்புறம் ஆடை, இடப்புறம் துகில் புடவை. எழிலே உருவான அற்புதத் திருமேனி, இவ்வுருவம் மூலத்தான விமானத்தில் பின்புறக் கோட்டத்தை அலங்கரிப்பதை (கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில்) இன்னும் காணலாம்.

மூன்றாவது நின்றநிலையில் உள்ள சிவபிரானின் உருவம் : கேசம் சுழல்முடி, நான்கு கரங்கள், வலக்கரங்கள் சூலமும், அபய முத்திரையும் கொண்டுள்ளன. கீழ் இடைக்கரம் குரக்கம் சேர்ந்துள்ளது. மேற்கரத்தில் கபாலம் உள்ளது. இது க்ஷேத்திர பாலர் உருவம். தென்புறக் கோட்டத்தை அலங்கரித்தது. தென்புறக் கோட்டத்தில் பெரும்பாலும் தக்ஷிணாமூர்த்தி உருவம் விளங்கும். ஆயினும் க்ஷேத்திரபாலர் உருவமும் வைப்பது மரபு என்று காஞ்சியில் பல்லவர் கோயில் ஒன்றில் காணலாம்.

இம்மூன்று சிற்பங்களைத் தவிர அமர்ந்த நிலையில் இருக்கும் நான்கு சிற்பங்களில் ஒன்று முருகப்பெருமான் உருவம். மற்றது உமாமகேசுவரரின் அழகுத் திருமேனி. இதில் அன்னை அமர்ந்துள்ள நிலை அனைவரையும் கவரும். மூன்றாவது ஆலின் கீழமர்ந்த பெருமானின் எழில் உருவம். நான்காவது சிவபிரானின் உருவமே. இவை நான்கும் மூலத்தான விமானத்தின் கிரீவம் என்ற பகுதியை, (விமானத்தின் மேல் கழுத்து என்னும் பகுதி) அலங்கரித்த சிற்பங்கள்.

இச் சிற்பங்களின் அமைதிகளிலிருந்து ஒன்று தெளிவாகக் காணலாம். இவை கி. பி. 9, 10ஆம் நூற்றாண்டில் ஆதித்தன், பராந்தகன் ஆகிய இரு சோழர்கள் ஆண்ட காலத்தில் கட்டப்பட்ட பல கோயில் சிற்பங்களையே ஒத்து உள்ளன.

இவை தவிர இக்கோயிலில் ஆடவல்ல பெருமானின் சிற்றாலயத்தின் சுவரின் புறத்தில் இரண்டு சிறிய சிற்பங்கள் உள்ளன. இவை மிகவும் எழில் வாய்ந்தவை, ஒன்று அன்னை, காளி உருவில் நிசும்பா சுரனுடன் வீரச் சமர்புரியும் அழகிய உருவம். இதுபோன்ற சிற்பங்களும் 10ஆம் நூற்றாண்டுக் கோயில்களை அலங்கரிக்கின்றன.

இதிலிருந்து மூலத்தான விமானம், இன்றுள்ள விமானம் போன்றே சிறிய அளவில் கற்றளியாகக் கட்டப்பெற்றிருந்த சோழர் கோயிலாகும், எனத் துணியலாம். இச் சிற்பங்களில் ஒன்றிரண்டு பின்னம் அடைந்துள்ளதால் திருப்பணியின்போது திருச்சுற்றாலையில் வைக்கப்பட்டு உள்ளன.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயிலிலிருந்து இதுவரை 131 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டு உள்ளன; இவை 1905, 1908, 1936–37, 1937–38ஆம் ஆண்டுகளில் படி எடுக்கப்பட்டவை. இவற்றின் முழு வாசகங்கள் இன்னும் அச்சாகவில்லை. இக் கல்வெட்டுக்களில் சோழர், பாண்டியர், பாணர், போசளர், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர் முதலிய மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன. இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகளில் மதுரைகொண்ட பரகேசரி வர்மனாகிய பராந்தக சோழனின் கல்வெட்டுகளே மிகத் தொன்மையானவை. ஆயினும் அவை துண்டுகளாகப் பிராகாரத் தரையில் பாவப்பட்டுள்ளன. இதிலிருந்து பல திருப்பணிகளின்போது சிதைந்து, மறைந்து போய்விட்டன என்பது தெளிவு. முழுமையாகக் கிடைக்கும் கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளே மிகத் தொன்மையானவை. ஆதலின் குலோத்துங்கன் காலத்திலும் பின்னரும், எழுப்பிய கட்டிடங்களே இப்போது உள்ளன. மற்றவை திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் அரசியல், இக்கோயிலில் நடந்த வழிபாடு, திருவிழாக்கள், கட்டப்பட்ட கட்டடங்கள், இங்கு வாழ்ந்த பெரியார்கள் ஆகியோரைப்பற்றிக் குறிக்கின்றன.

**அரசியல் :**

திருவானைக்கா சங்க காலத்தில் சோழ மன்னர் ஆட்சியிலிருந்தது என்று கண்டோம். கி. பி. 600-லிருந்து 800வரை பல்லவர் கீழிருந்தது. திருச்சி மலைக்குடைதளியில் மகேந்திரனின் கல்வெட்டு உள்ளது. ஆனைக்காவுக்கு அருகில் உள்ள திருவெள்ளறை என்ற இடத்தில் பல்லவ மன்னன் தந்திவர்மன், தெள்ளாறெறிந்த நந்தி ஆய மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன. அவை அங்குள்ள பெருமானையும் ஆனைக்காப் பெருமான் என அழைக்கின்றன. எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இப்பகுதி சில காலம் பாண்டியர் வசம் இருந்தது. அவர்களில் சிறந்தவன் கோமாறஞ்சடையன் என்பவன் ஆகும். 850-ல் விஜயாலயன் சோழப்பேரரசை நிலை நிறுத்திய பிறகு சோழராட்சியில் இப்பகுதி திகழ்ந்தது. 1178-ல் அரசு கட்டில் ஏறிய மூன்றாம் குலோத்துங்கன் வரை ஆண்ட மன்னர்களின் கல்வெட்டுகள் இங்கு இல்லை. (ஒரு சில துண்டுகள் உள்ளன.) அம்மன்னனின் 7ஆம் ஆண்டுக் கல்வெட்டு (1185-ல்) உள்ளது. இம்மன்னன் சிறந்த வீரன். பல போர்களில் வெற்றி கண்டு திரிபுவன வீரன் என்று பெயர் பெற்றவன். ஆயினும் மாபெரும் நிலப்பரப்பை சுமார் 200 ஆண்டுகள் ஆண்டுவந்த சோழப் பேரரசின் ஆட்சியில் தளர்வு இம்மன்னன் காலத்தில் காணப்பட்டது. பல குறுநில மன்னர்கள் இன்னல் விளைத்தனர். பல முகங்களில் போரிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவன் ஆட்சிக்குட்பட்ட சிலர் மாற்றாருக்கு உதவத் தலைப்பட்டனர். ஆதலின் அவ

னுக்குப் பின்வந்த மூன்றும் இராஜராஜன், மூன்றும் இராஜேந்திரன் ஆய மன்னர்களின் காலத்தில், பல வீரர்கள் ஒருவரோடு ஒருவர் பூசல் இன்றி, இணைந்து, அரசைக் காக்கப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். அந் நிலையைக் குறிக்கும் பல கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.

இம்மன்னனின் ஏழாம் ஆண்டில் வீற்றிருந்தான் சேமன் ஆன அகளங்க நாடாள்வான் என்பவனும், அரயதேவன் மூவாயிரத்தொருவன் ஆன வீரராஜேந்திர பிரும்மாதிராயன்என்பவனும், அரயதேவன் திருவெண்காடு உடையான் விக்ரம சோழ பிரும்மாதராய முத்தரையன் என்பவனும் ஒருவரோடொருவர் நண்பராகி இணைந்தே செயல்பட பிரதிக்ஞை கொண்டனர். இதுபோன்று இன்னும் நான்கு ஒப்பந்தங்கள் இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இம்மன்னன் (1178–1218) ஆட்சியின் இறுதியில் மாறவர்மன் சுந்தரபாண்டியனிடம் தோல்வியுற்றான். அம்மாறவர்மன் சுந்தரபாண்டியனின், 3, 4, 7ஆம் ஆண்டுகளைச் சார்ந்த கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. சோழரைத் தோற்கடித்து ஆயிரத்தளியில் விசையாபிஷேகம் செய்துகொண்ட அம்மன்னன் தன் மூன்றும் ஆண்டில் தன் கல்வெட்டை மூன்றும் பிராகார கீழைக் கோபுரத்தில் பொறித்து வைத்தான் என்று கல்வெட்டுக் கூறுகிறது. அவனுக்குப் பாண மன்னன் உறுதுணையாக நின்றான். சோழ மண்டலத்தையே அப்பாண மன்னனுக்குத் தானமாகக் கொடுத்தான் என்று மேலைக் கோபுரக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

மூன்றும் குலோத்துங்கனின் மகன் மூன்றும் இராஜராஜன் 1216-ல் முடிசூடினான். சோழ அரசர்களிலேயே, பல போர்களில் தோற்றவன் இவனே. இவனுடைய கல்வெட்டுகள் பல இக்கோயிலில் உள்ளன. இவன் 16ஆம் ஆண்டில் பல்லவக்குரிசில் கோப்பெருஞ்சிங்கன் என்பவனால் கைது செய்யப்பட்டான். மைசூர்ப் பகுதியை ஆண்ட போசள மன்னன் வீரநரசிம்மன் என்பவன் இராஜராஜனுக்குத் துணையாக ஸ்ரீரங்கம் வரை படையெடுத்து வந்தான். கோப்பெருஞ்சிங்கனை வென்று இராஜராஜனை விடுவித்தான். தெற்கில் பெரும் வெற்றி கண்ட மாறவர்மன் சுந்தரபாண்டியனையும் வென்ற அவன் திருஆனைக்காவுக்கு அருகில் உள்ள கண்ணபுரத்தில் தங்கள் சேனையை நிறுத்தி அங்கு ஒரு நகராக்கினான். இராஜராஜன், அவன் உதவி கொண்டு நெடிது ஆண்டான். இராஜராஜன் விடுதலை அடைந்த ஆண்டு 16ஆம் ஆண்டு (1231) ஆனைக்கா கோயிலுக்குப் பல நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜராஜன் ஆண்ட காலத்தில், போசள நரசிம்மனின் மகன் வீரசோமேச்வரன் பட்டம் எய்தினான். அவனுக்குக் கண்ணனூர் ஒரு தலைநகராகயிருந்தது. அம்மன்னனுடைய பல கல்வெட்டுகள், ஆனைக்கா கோயிலிலும், திருவரங்கம் கோயிலிலும் உள்ளன. அம்மன்னன் காலத்தில் இங்குப் பல சிற்றாலயங்கள் கட்டப்பட்டன. அவன் கண்ணனூரில் போசளீச்வரம் என்னும் கோயிலை எடுப்பித்தான். அம்மன்னனும் தன் ஆட்சியின் இறுதியில் பாண்டியப் பேரரசன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனுடன் போரிட்டுக் கண்ணனூரில் மாண்டான்.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு இக்கோயிலில் உள்ளது. மூன்றும் இராஜராஜனும், அவனுக்குப் பின் ஆண்ட மூன்றும் இராஜேந்திர சோழனும், சுந்தர பாண்டியனுக்குக் கப்பம் கட்டிச் சில காலம் ஆண்டனர். மூன்றும் இராஜேந்திரன் 1246-ல் அரசு கட்டில் ஏறி இராஜராஜனுடன் 1256 வரை இணைந்து ஆண்டான். பின்னர் 1279 வரை ஆண்டான் அப்பொழுது போசள சோமேச்வரிரனின் மகன் வீரராமநாதன் என்பவன் கண்ணனூரிலிருந்து ஆண்டான். இவ்விரு மன்னர்களின் கல்வெட்டுகளும் ஆனைக்காவில் உள்ளன. மூன்றும் இராஜேந்திரன் 1279ஆம் ஆண்டில் மாறவர்மன் குலசேகரன் என்ற பாண்டிய மன்னனுடன் நடந்த போரில் மாண்டான். வீரராமநாதனும் இதே போரில் தோற்றுத் தன் பகுதியை இழந்து மைசூர்ப் பகுதியை மட்டும் ஆண்டான். ஆயினும் குலசேகரனுடைய கல்



வேடர் தலைவனுகிய—கிராதமூர்த்தி

இது ஆயிரக்கால் மண்டபத்து முகப்புத்தூண் ஒன்றில் உள்ளது

வெட்டுகள் இக்கோயிலில் இதுவரை காணப்படவில்லை.

14ஆம் நூற்றாண்டில் இப்பகுதி விஜயநகர மன்னர்கள் கைக்கு மாறியது. பிரௌட தேவராயர், தேவராய மகாராயர், கிருஷ்ண தேவராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் இங்கு உள்ளன. பிரௌடதேவராயர் காலத்தில்தான் திருப்புகழ் அமிழ்தம் தந்த அருணகிரியார் வாழ்ந்தார். தேவராயரின் அவையைக் கவிகாளமேகம் அலங்கரித்தார். கிருஷ்ணதேவராயரின் நன்மைக்காக இங்குப் பல வழிபாடுகள் நடத்தப்பட்டன.

மதுரையை ஆண்ட நாயக்கர்களில் விஸ்வநாத நாயக்கர், விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஆகியவர்களின் கல்வெட்டுகள் இங்கு உள்ளதிலிருந்து இப்பகுதி நாயக்கர்களால் பெரிதும் போற்றப்பட்டது என்பது திண்ணம்.

கட்டடங்கள் :

இங்குள்ள கல்வெட்டுகளிலிருந்து, பல கட்டடப்பகுதிகள் எப்போது எடுக்கப்பட்டன என அறிகிறோம். இரண்டாம் பிராகாரமும், மூன்றாம் பிராகாரமும் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டவை. அவற்றில் சோழர் கல்வெட்டுகள் உள்ளன. நான்காம் பிராகாரம் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோற்றுவிக்கப்பட்டது. முதல் பிராகாரம், இந்நூற்றாண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் திருத்தியமைக்கப்பட்டது. மூன்றாம் பிராகாரத்தை அலங்கரிக்கும் கார்த்திகைக் கோபுரமும் மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தவை. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டவை. நான்காம் பிராகாரத்தை அலங்கரிக்கும் கீழைக் கோபுரம். ஜடாவர்மன் சுந்தரபாண்டியனால் எழுப்பப்பெற்றது. சுந்தரபாண்டியன் திருக்கோபுரம் என இன்றும் வழங்கப்படுகிறது. இங்கு உள்ள மேற்குக் கோபுரத்தை சக வருடம் 1357-ல் (கி. பி. 1435)-ல் வசிஷ்ட கோத்திரத்தைச் சேர்ந்த ஆதித்யதேவன் என்பாரின் மகன் சந்திரபேந்திரன் என்பவர் கட்டினார் என்று கல்வெட்டுக் கூறுகிறது. இதையே மல்லப்பன் கோபுரம் என இப்போது அழைப்பர்.

விபூதிப் பிராகாரம் என அழைக்கப்பெறும் திருமாளிகை, திருநீற்றுச் சுந்தர பாண்டியன் என்பவனால் கட்டப்பட்டது. இதையே சிவபெருமான் திருநீறளித்து அருளால் தோற்றுவித்தார் என்று தல வரலாறு கூறும். இங்குள்ள நான்கு வாயில்களும் சுமார் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியிருக்க வேண்டும்.

இங்குப் பல சிறு கோயில்களும், மண்டபங்களும் உள்ளன. நான்காம் பிரகாரத்தில் அகிலாண்டநாயகி அம்மன் கோயிலின் எதிரில் கோசாலையில் பசுபதீச்வரம் உடையாரை, போசள வீரராமநாதன் ஆட்சியில் 14ஆம் ஆண்டு பலப்பள்ளி நீலகண்ட நாயக்கர் எடுப்பித்தார். மும்மடிதிம்மரசர் என்பவரும் அவர் மகனும் இக்கோயிலில் வலம்புரி விநாயகர், சுப்ரமண்யர் முதலிய உருவங்களைப் பிரதிஷ்டை செய்து வழிபாட்டுக்கு வகைசெய்தனர். 8ஆம் நூற்றாண்டில் (மன்னர் பெயர் தெரியவில்லை) திருவறத்தீச்வரம் உடையார், கங்காதீச்வரம் உடையார் கோயில்கள் (13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டன.)

உற்சவமண்டபத்தின் வடக்கில் உள்ள மண்டபத்தில் மேல் உள்ள உத்திரத்தில் வியவருஷம் ஸ்ரீமத் திருப்பராசரர் மகனார் அண்ணப்பய்யன் அருளிச் செயல்படிக்குச் சங்கணர் வைப்பித்த திருமண்டபம் என 17ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. இதன் உள் உள்ள மற்றொரு மண்டபம் சதாசிவ மஹீந்திரரால் கட்டப்பட்டது. சதாசிவசுவாமி மண்டபம் எனக் கல்வெட்டுக் கூறுகிறது. உற்சவ மண்டபம் சதாசிவ சுவாமியால் கட்டப்பட்டதுதான். இதையே அய்யன் மண்டபம் என்று கல்வெட்டுக் கூறுகிறது. சதாசிவ மஹீந்திரர் இக்கோயில்களில் பல கட்டடங்கள் எழுப்பியுள்ளார்.

முதல் பிராகாரத்தில் வடகிழக்கில் எழுந்தருளிய ஸ்ரீ பாதீசவரமுடையார்க்குக் கோயிலை, கருப்பூரைச் சேர்ந்த திருஞான சம்பந்தர் எடுத்தார். எடுத்தகாலம் போசள

வீரராமநாதன் காலம் 6ஆம் ஆண்டு. மூன்றும் பிராகாரத்தில் வடகிழக்கில் உள்ள மண்டபம், கோபாலய்யன், அவன் மகன் ஆன 'ஐஞ்சு சாதியர்' (தச்சர் குடி) களால் எடுக்கப்பட்டது.

ஜம்பு தீர்த்தத்தின் அருகில் உள்ள மண்டபம், விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் நாடகசாலையில் நாட்டியாசாரியனை, வெங்கடேச்வரய்யன் மகன் வைத்தியப் பய்யன் என்பவரால் கட்டப்பெற்றது. நான்காம் பிராகாரத்தில் வடசுவரில் நுழையும் வழி நிலை, லிங்கராகூவி மகன் அகிலாண்டய்யன் என்பவனுல் எடுக்கப் பட்டது என அறிகிரேம்.

போசள மன்னர் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. போசள மன்னன் வீரசோமேச்வரன் கண்ணனூரில் போசளீச்வரம் என்னும் கோயில் எடுத்தான். அதற்கு மூன்றும் இராஜேந்திரசோழன் நிலங்கள் இறையிலியாக அளித்தான். சோமேச்வரனின் 22ஆம் ஆண்டு, கல்வார்க்கூர் தியாகப் பெருமாள் என்பவர் இக்கோயிலின் மூன்றும் பிராகாரத்தில் தியாகவிநோதேச்வர முடையார் கோயில் ஒன்றை எடுப்பித்தான். சோமேச்வரன் வடதிருவானைக்காவில் வீர சோழீச்வரம், பதுமாலீச்வரம், வீரநரசிங்கேச்வரம் சோமலீச்வரம் என்னும் கோயில்களுக்கு நிலம் அளித்தான். அதே மன்னன் கண்ணனூர் போசலீச்வரம் உடையார் கோயிலில், தன் தாய் கமலா தேவியாரின் நன்மைக்காக சிறப்பு வழிபாடு நடத்த வழி செய்தான். புரசைக் குடி என்னுமிடத்தில் சோமலீச்வரம் உடையார் கோயிலில் தேவியாருக்குப் பள்ளிப்படை எடுத்தான். அதே மன்னன் ஆட்சியில் அவ்வை சோமலமாதேவி, சங்கமாலீச்வரம் என்னும் கோயிலுக்கு நிலம் கொடுத்தாள்.

மூன்றும் ராஜேந்திரனுடைய 6ஆம் ஆண்டுக் கல்வெட்டு சித்தீச்வரம் உடையார் கோயிலை சிங்கண்ண தண்டநாய்க்கன் என்பவன் கட்டினுன் என்று குறிக்கிறது. மூன்றும் பிராகாரத்தின் கோபுர வெளியில், சங்கராலயத்தையும், ஹரிஹரர் ஆலயத்தையும், சதாசிவகுரு தீக்ஷிதர் 17ஆம் நூற்ருண்டில் தோற்றுவித்தார்.

**வழிபாடு :**

இக்கோயிலில் வழிபாட்டுக்காகக் காணி கொடுக்கப்பட்டதைப் பல கல்வெட்டுகள் குறிக்கின்றன. சகவருஷம் 1441-ல் கிருஷ்ணதேவராயரின் அதிகாரி, வாசல் மல்லப்ப நாயக்கர் மகன் திம்மப்ப நாயக்கர், திருவானைக்கா பெருமானுக்கும், அகிலாண்ட நாயகிக்கும் நித்தியபடி வழிபாட்டுக்கு வேண்டும் நிவந்தங்கள் அளித்தார். பிரௌடதேவராயர் காலத்தில், திருவானைக்கா கோயிலில் வழிபடும் உரிமையையும், மனைகளையும் நான்குதரத்து தானிகர்களும், தொண்டை மண்டலத்து கைதவநல்லூர் பகவானுரால் ஆண்ட பெருமாள் என்பவர்க்கு விற்றுவிட்டனர். வீரபிரதாப தேவராயர் தனக்கு வரவேண்டிய எல்லா இறைகளையும் (விபூதிகாணிக்கை தவிர) விஷ்ணு கோயில்களுக்கும், சிவாலயங்களுக்கும் கொடுத்து முன்போல் இங்கு வழிபாட்டு வகை செய்தார். வீரசோமேச்வரர் நான்காம் பிராகாரத்தில் சங்கர நாயனுர்க்கு நித்த வழிபாட்டுக்கு நிலங்கள் அளித்தார். மாறவர்மன் சுந்தர பாண்டியன், கோயிலில் தன் பெயரால் ஒரு சந்தி வழிபாடு நடத்த நிலம் அளித்தான். சகவருஷம் 1764-ல் (1862) அகிலாண்டேச்வரி அம்மன் கோயிலில் அர்த்தஜாம கட்டளைக்காக காஞ்சி வள்ளல் பச்சையப்ப முதலியார் ஒரு லக்ஷம் வராஹன் கொடுத்துள்ளார்.

இக்கோயில் கல்வெட்டுகள் பல திருவிழாக்களைக்குறிக்கின்றன. கிருஷ்ணதேவராயரின் அதிகாரி திம்ம நாயக்கர், மன்னரின் நன்மைக்கு, ஆண்டு விழாவில் இரண்டாம் நாள் வேண்டும் நிவந்தங்களுக்கு ஒரு வேலி நிலம் கொடுத்தார். மாசிமாதத்தில் திருவானைக்கா உடையார்க்கு ஒரு திருவிழா, சோமேச்வர மன்னன் பெயரில் எடுக்க வேண்டும் என்று நிலங்களை அம்மன்னன் கொடுத்தான். ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் பிறந்த சித்திரை மாதம் மூலநக்ஷத்திரத்தன்று, சேரனை வென்ற திருநாள் என்ற பெயரில் திருவிழா எடுக்கப் பாண்டிய மன்னன், பல இறைகளை அளித்தான்.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் பொன்

ஆபரணங்களின் பட்டியல் ஒன்று கொடுக்கிறது. மூன்றும் இராஜராஜன் 20ஆம் ஆண்டில் இக்கோயிலுக்கு 18 மெய்க்காப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வானதரையன் என்பவன் இக்கோயிலுக்கு ஒரு நந்தவனம் அமைத்தான்.

மடங்கள் :

கோயிலின் வடபுறத்தில் ஆவூருடையான் சோழக் கோன் என்பவன் நாற்பத்தெண்ணுயிரவன் மடம் ஒன்றைத் தாபித்தான். போசளமன்னன் வீரராமநாதன் காலத்தில் சுவாமிதேவரின் சிஷ்யரின் சிஷ்யர் கௌதம சிவராவலர் என்பவருக்கு ஒரு மடம் கட்ட நிலம் விற்கப்பட்டது. வீரசோமேச்வரன் காலத்தில் திருவானைக்கா கோயிலில் அவ்வை சோமலாதேவி என்பவளால் சங்கமதேவர் மடம் என்னும் மடம் கட்டப்பட்டது.

சதாசிவகுரு :

திருவானைக்கா கோயிலில் 17, 18ஆம் நூற்றுண்டில் மிகச் சிறந்த பணிகள் பல புரிந்த பெரியார் சதாசிவ தீக்ஷிதேந்திரர் என்று அழைக்கப்படுபவர் ஆவர். இக்கோயிலில் உள்ள பல கல்வெட்டுகள், அவருடைய வாழ்க்கையைப் பற்றியும், அவர் இக்கோயிலுக்குச் செய்த கட்டட தொண்டுகள் பற்றியும், சிவபெருமான் வழிபாட்டுக்கும், சைவத்துக்கும் செய்த அருந்தொண்டுகள் பற்றியும், இவருடைய இலக்கிய அறிவு பற்றியும், இவர் ஆக்கியுள்ள பல நூல்களைப் பற்றியும் குறிக்கின்றன. சதாசிவ தீக்ஷதர், மகாதேவ தீக்ஷதர் என்பவரின் மகன். ஸ்ரீகண்ட ஆகாசவாசி சந்திரசேகர வாஜபேயயாஜி என்பவரின் பெயரன். சந்திரசேகர வாஜபேயயாஜி, சந்திரசேகர குரு என்றும் அழைக்கப்பட்டார். அவர் திருவானைக்கா கோயிலில் ஒரு பாசுபத மடத்தின் தலைவராகச் சகவருடம், 1506 (கி. பி. 1584)-ல் நியமிக்கப்பட்டார். கோயிலில் அர்ச்சனை, திருக்கண்சாத்து, கோவில் கேள்வி, கணக்கெழுத்து, முத்திரை முதலிய வற்றிற்கு உரிமை அளிக்கப்பட்டார். சந்திரசேகர குரு ஒரு இல்லறம் நடத்தும் பெரியார். மடங்களின் தலைவர்களாகத் துறவிகளையே நியமிப்பது அக்காலத்து வழக்கம். ஆயினும் இல்லறம் நடத்தும் பெரியார்களும் மடத்தலைவர்களாகத் திகழலாம் என்பதற்குப் பல பண்டைய நூல் சான்றுகள் இருந்தன. இம்மேற்கோள்கள் கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பராசர சம்ஹிதை, காலாக்னிருத்ரோபநிஷத், சனத்குமார சம்ஹிதை, யக்ஞகரணம் முதலிய நூல்கள் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன. இவற்றில் பராசரர், உபமன்யு, ததீசி, அகத்தியர், இராமர், கிருஷ்ணர் ஆகியோர் இல்லறம் நடத்தியவர்களென்றும், பாசுபத விரதம் மேற்கொண்டவர்கள் என்றும் குறிக்கப்படுகின்றனர். சந்திரசேகர குரு கோயிலில் யக்ஞங்கள் நடத்துவதற்கும், இன்னும் பல செயல்கள் செய்யவும் உரிமைகள் வழங்கப்பட்டார். வாஜபேய யாகம் செய்த காரணத்தினுல் வாஜபேய யாஜி என்று குறிக்கப்பட்டார். ஆதலின் இவர், பாசுபத சமயத்தில், வைதிக பாசுபத வழியைப் பின்பற்றியவர் என்பது தெளிவு. சந்திரசேகரருக்குப் பிறகு அவர் மகன் மகாதேவ மகின் என்பவர் அப்பதவியில் நியமிக்கப்பட்டார். அவரும் பல யக்ஞங்கள் புரிந்தார். சாக்னிஜித், சர்வஜித், மகாவிரதயாஜி என்றும் அழைக்கப்பட்டார். இவருக்கு மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் பல நிலங்களை அளித்துள்ளார். இவர் மகன்தான் சதாசிவ மகின் என்றும், சதாசிவ தீக்ஷதேந்திரன் என்றும், சதாசிவ சுவாமி என்றும், சதாசிவ வாஜபேஜீயர் அய்யன் என்றும் புகழ்பெற்றவர். இவர் கி. பி. 1654-ல் திருவானைக்கா கோயிலின் தர்மகர்த்தாவாக நியமிக்கப் பெற்றுர். இவருடைய தந்தை மகாதேவமகின் கி. பி. 1665-ல் சிவபதம் பெற்றுர். அன்னை 1678-ல் அண்ணலின் அடி சேர்ந்தாள்.

சதாசிவமகின் தன் முன்னேர்களைப் போலப் பல யக்ஞங்கள் புரிந்தார். கி. பி. 1674-ல் திருவானைக்காக் கோயிலில் பாசுத சாதுர்மாஸ்யம், வாஜபேய யாகம் இரண்டையும் புரிந்தார். இதையொட்டிக் கோயிலில்

சிறப்பாக வழிபாடு நடத்தப் பிரதோஷக் கட்டளை ஒன்று நிறுவி நிலங்களை அளித்தார். கல்வெட்டுகளிலிருந்து இவர் திருவானைக்கா கோயிலில் பல மண்டபங்களையும் பிற கட்டடங்களையும் எழுப்பினுர் என்று அறிகிருேம். தாருகாவன விலாசம் போன்ற மண்டபங்கள் இவரால் நிறுவப் பெற்றன. உற்சவ மண்டபம் என்று அழைக்கப்பெறும் மண்டபம் இவரால் கட்டப்பட்டது. இதை அய்யன் மண்டபம் என்று கல்வெட்டுகள் கூறும். இதற்கு எதிரில் உள்ள மண்டபத்தைச் சங்கணன் என்பவர் கட்டினுர். அதன் பின் புறத்தே உள்ள மண்டபம் சதாசிவரால் தோற்றுவிக்கப்பட்டது. சதாசிவ சுவாமி மண்டபம் என்று பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது. மூன்ரும் பிரகாரத்தில் சங்கராலயம் இவரால் கட்டுவிக்கப்பெற்றது.

**சிவாத்வைதம் :**

இவர் ஸ்ரீகண்ட சிவாச்சாரியருடைய சிவாத்வைத வழியைப் பின்பற்றியவர். இவருடைய பெற்ருேர்கள் ஸ்ரீகண்ட ஆகாச வாசி சந்தானத்தைச் சேர்ந்தவர் என்று முன்னர் குறிப்பிட்டோம். சதாசிவ தீக்ஷதர் கவைப்பதி (திருவானைக்கா) சிவபெருமான் மீது பல தோத்திரப்பாக்கள் இயற்றியுள்ளார். அவற்றில் பல இக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு செய்யுள் ' ஓங்காரத்தின் உட்பொருளை எவனெருவன் அத்வைத பரமாக விளக்குகின்ருனே அவனே அறிஞர்களில் சிறந்தவன் ' எனக் குறிக்கிறது. மற்ருென்று சிவபெருமானின் முப்பெரும் பெயர்களைக் குறிக்கிறது. இவர் பரப்பிய சைவசமயக் கொள்கைகளைப் பிற செய்யுட்கள் கூறுகின்றன. சதாசிவருடைய இலக்கியத்திறனை இன்னும் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவர் ஆனைக்காவில் ஒரு புதிய வெற்றித்தூணை நிறுவினுர். சிவபெருமானின் முப்பெரும் பெயர்களைக் குறிக்கும் வெற்றித்தூண் என்று ' சிவநாமத்ரய ஜயத்தம்பம் ' என்பது அதன் பெயர். அத்தூண் இன்னும் கோயிலில் இருக்கிறது.

இந்தப் புகழ்வாய்ந்த பெரும் சைவப் பெரியார் சதாசிவ பிரம்மேந்திர சத்குரு சுவாமி என்று புகழ்பெற்றவரே ஆகும். சாதாசிவ பிரம்மேந்திரரை இதுகாறும் அத்வைத சமயப் பெரியார் எனக் கருதினர். கல்வெட்டுகளிலிருந்து அவர் ஸ்ரீகண்டாச்சாரியரின் சிவாத்வைத வழியைப் பின்பற்றியவர் என்பது தெளிவாகிறது. இவர் பிரம்ம சூத்திரத்திற்குப் பிரம்மதத்வப் பிரகாசிகை என்ற உரை நூலும், பதஞ்சலி சூத்திரத்திற்கு யோக சுதாகரம் என்ற நூலும், இயற்றியுள்ளார். இவர் இயற்றிய தகர வித்யா பிரகாசிகை என்ற நூலும், சிவ கீதையின் உரையும், சிவபெருமானின் பெருமையைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இந்நூல்களில் திருமாலையும் இவர் போற்றியுள்ளார். பல கீர்த்தனங்களைப் பாடித் தமிழகத்தில் பக்திச் செல்வத்தை இவர் பரப்பியிருக்கிருர். ''மானசசஞ் சரரே', 'சர்வம் பிரம்ம மயம்', 'சிந்தா நாஸ்தி கில' முதலிய கீர்த்தனங்கள் இவர் இயற்றியவை. இவர் காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த 57வது பெருந்தகையான பரமசிவேந்திர சரஸ்வதி என்பவரின் சீடர் என்று ஒரு வரலாறு கூறும். பாசுபத சமயத்தைப் பின்பற்றியவர் ஆதலின் மாயையை ஏற்றுக்கொண்டு அகிலாண்ட நாயகியிடம் அளவிலா அன்புகொண்டவர். பசுபதியின் பதும மலர்களை மறவாத பெரியாராகத் திகழ்ந்தவர். 60 ஆண்டுகள் (கி. பி. 1714) வரை ஆனைக்கா அண்ணல் ஆலயத்திற்குப் பணிபுரிந்தவர். அவர் வாழ்வின் இறுதியில் அவதூதராகத் திகழ்ந்து கருவூருக்கு அண்மையில் நெரூர் என்ற இடத்தில் சிவப்பேறு பெற்ருர்.

ஆனைக்கா அண்ணலின் பெருமையை அவர் உறையும் கோயிலின் வரலாற்றை இச்சிறு எழுத்துரையில் எடுத்துரைக்கப் பாலதே! ஆயினும் அக்கோயிலின் வரலாற்றையும், பணிபுரிந்த பெரியார்களையும், இலக்கியங்களையும், அங்கு அருள் பெற்ற அடியார்களையும் நினைவிற்கொண்டு அண்ணலுறையும் இடமடைந்தால் அதனினும் அடையும் அருட்பேறு வேறுமுண்டோ!

# திருவானைக்காவில் சோழர் திருப்பணிகள்

ஔவை. துரைசாமி.

சோழர் என்ற பெயரைக் காணும்போது சங்ககாலச் சோழரா, இடைக் காலச் சோழரா என்ற கேள்வி தமிழும் வரலாறும் பயின்றோர் உள்ளத்தில் எழும். சங்க காலம் என்பது தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்து கி. பி. முதல் நூற்றுண்டு வரை நிலவிய காலமாகும். அக்காலத்தில் தமிழகம் சோழ பாண்டிய சேர நாடு என்று மூன்ருகப் பிரிந்து மூன்று தமிழ் வேந்தர் குடியினரால் ஆளப்பெற்று வந்தது. அந்நாளைய சோழரைச் சங்க காலச் சோழர் என்பர். அவர்களைப் பற்றி அறிதற்குதவும் தமிழ் நூல்கள் சங்க இலக்கியங்கள் எனப்படும். அவை எட்டுத் தொகை பத்துப்பாட்டு என இருவகைப் பட்ட பதினெட்டாகவுள்ளனவாகும். இடைக் காலச் சோழர் பல்லவர் காலத்துக்குப் பின் தோன்றித் தமிழகத்தை ஆண்டவர். இவர்களை விசயாலயன் வழி வந்த சோழ வேந்தர் என்பது வழக்கம். இவர்களையும், இவர்கட்கு முன்னே விளங்கிய பல்லவர்களையும் அறிதற்கு உதவுவன கி. பி. 1880 முதல் இன்றுவரை சுமார் 100 ஆண்டுகளாகப் படி எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களும் செப்பேடுமாக உள்ளவை. இது வரை சுமார் 25,000 படிகள் கிடைத்துள்ளன வெனினும், அன்புடைய மக்கள் அறிய வெளிவந்துள்ளவை சுமார் 5000 ஆகும்.

சங்க இலக்கியங்களில் தமிழகத்தின் வட வெல்லையாகக் கூறப்படும் வடவேங்கடத்தில் திருமாலுக்குக் கோயில் கிடையாது. இப்போது கோயிலுள்ள இடத்தில் புல்லி என்னும் வேந்தன் இருந்தான். அவனது ஆட்சி வேங்கடமலையடியில் சித்தூர் மாவட்டத்தின் மேலைப் பகுதியில் பரவியிருந்தது. அப்பகுதியை ஆங்குக் காணப்படும் கல்வெட்டுக்கள் புலிநாடு என்று குறிக்கின்றன.

அதுபோல, காவிரியின் ஆற்றிடைக் குறையாகிய திருவரங்கத்தில் திருமாலுக்கோ, சிவனுக்கோ திருக்கோயில் இருந்ததாகச் சங்க இலக்கியம் கூறவில்லை. எனினும், சங்க காலத்தை ஒட்டி வாழ்ந்த இளங்கோவடிகள் காலத்தில் வேங்கடத்திலும் திருவரங்கத்திலும் திருமாலுக்குக் கோயில்கள் தோன்றிவிட்டன.

"வீங்குநீர்அருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத்துச் சிமிமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக் கோடியுடுத்து விளங்கு விற்பூண்டு
நன்னிறமேகம் நின்றது போல
பகையணங்காழியும் பால்வெண்சங்கமும்
தகைபெறுதாமரைக்கையினேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூவாமையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

என்றும், இவ்வாறே திருவரங்கத்தில் திருமாலுக்குக் கோயில் தோன்றி, அங்கே அவர் கிடந்த வண்ணம் காட்சியளிப்பதை,

"நீலமேக நெடும் பொற் குன்றத்துப்
பால்விரிந்தகலாது படிந்ததுபோல
ஆயிரம் விரித் தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழுதேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர்மார்பன் கிடந்த வண்ணமும்"

என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

அந்நாளில் வேங்கடக் கோட்டத்தில் திருக்காளத்தியும் திருவரங்கத்தில் திருவானைக்காவும் இருந்ததில்லையோ எனின் இருந்திருக்கலாம். எடுத்துரைப்பதற்கேற்ற இயைபு வரலாற்று நிகழ்ச்சியில் இல்லாமையால், சமயக் காழ்ப்பிலாச் சான்றோராகிய இளங்கோவடிகள் கூருமல் விட்டிருக்கலாம்.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் விளங்கிய திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்காளத்தி திருவானைக்கா இரண்டையும்

சிறப்பித்து இனிய இசைப் பாட்டுக்களால் சிறப்பித்திருக்கின்றார்கள். இவ்வகையில் திருவானைக்கா மிக்க தொன்மை வாய்ந்து புலவர் பாடும் புகழ்பெற்றது என்பது நன்கு மனங்கொள்ளற்பாற்று.

திருவானைக்கா இந்து அறநிலையத்தவரும், கல்வெட்டுத் துறையினரும் சம்புகேசுரம் என்றே குறிக்கின்றார்களே எனின், இது இடையிலே தோன்றிய மாற்றம். இடைக் காலச் சோழ பாண்டியர் ஆட்சி வீழ்ந்ததும் விசயநகர வேந்தரது ஆட்சி தமிழகத்தில் பரந்து இடம் பெற்றது; முன்னைய ஆட்சியில் ஊர்தொறும் தோன்றித் திருக்கோயில்களைக் கண்காணித்து வந்த திருவுண்ணாழி கையுடையார். மாகேசுரக் கண்காணிகள், ஊர் மகா சபையினர் மறைந்தனர். கோயிற் பூசைத் திருப்பணிக்கெனச் சோழ பாண்டிய மன்னர் நிறுவியிருந்த சிவ வேதியர் பண்டு தொட்டு நிலவிய தமிழ்ப் பெயர்களை வட மொழிப் படுத்தும் புதிய புதிய கதைகளைத் தொடுத்தும் தொன்மை வரலாற்றை மறைக்கும் செயலை மேற்கொண்டனர். தமிழரல்லாத விசயநகர வேந்தரது ஆட்சி அதற்கு இடையூறு செய்யவில்லை. அடுத்து வந்த ஆட்சிகளும் அவ்வியல்பினவேயாக இருந்தமையின், வடமொழிப்படுத்தும் செயல் வெற்றி கண்டது. வழிபாடுகளும் செயல் வகைகளும் வடமொழியிலேயே சமைக்கப் பெற்றன. இன்னோரன்ன மாறுதல்களால் திருவானைக்கா என்ற பெயர் பொதுமக்களிடையிலும், சம்புகேசுரம் என்ற பெயர் கற்றோர் சிலரிடையிலும் வழங்குகின்றன.

திருக்கோயில்கள், பல்லவர் காலத்தில் கருங்கற்களால் அமையும் திருப்பணிச் சிறப்புப் பெற்று, வழி வழி வந்த வேந்தர்களாலும் செல்வர்களாலும் கற்றளிகளாக உருக் கொண்டன. பண்டைய வேந்தர் ஆட்சியில் திருமாலுக்குக் கோயிலைச் சிவன் கோயிற்குள்ளேயே அமைத்திருந்தமையின், தனிக் கோயில்கள் அருகியே இருந்தன. திருமால் கோயிலைத் தன்னகத்தே கொள்ளாத சிவன் கோயிலுக்குச் சிறப்பில்லை; சிவாகமங்கள் அவ்வாறே விதிக்கின்றன. இச்சிவன் கோயில்கள் பலவும் அமைப்பிலும் வழிபாட்டிலும் பிற நிகழ்ச்சிகளிலும் சிவாகமங்களின் நெறியில் அமைந்தன என்பதைப் பல்லவர் காலக் குறிப்பேடுகளாலும், சேக்கிழார் முதலியோருடைய நூல்களாலும் அறிகின்றோம். எனினும் கிடைத்துள்ள பல்லாயிரம் கல்வெட்டுக்களில் ஒன்றிலேனும் இன்ன கோயில் இன்ன சிவாகமப்படி அமைந்தது என்ற குறிப்பே காணப்படவில்லை. அவ்வக் கோயில்களிற் பணிபுரியும் சிவ வேதியர் காரணம், காமிகம், வாதுளம் எனச் சிவாகமங்களைக் கூறுகின்றனரேயன்றி அவற்றைக் காட்டென்றால் காட்டுவார் இல்லை.

இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு முன் தோன்றிய அறிஞர் சிலர் வகுத்தளித்த செயல்முறைகளை (பத்ததிகளை) ஆகமம் முறையாகக் கொண்டு சிவவேதியர் தம் கோயிற் பணிகளை (கிரியைகளை)ச் செய்து வருகின்றனர். உண்மையை ஆராய்ந்த போது, கழிந்த நூற்றாண்டுகளில் வைதிக வேதாந்திகள் 'சிவாகம மக்கள் பிரமாண மாகார்' எனவும் 'ஆகம வழி யொழுகுவோர் மூடர்' எனவும் பழித்தும் இகழ்ந்தும் பேசியும் எழுதியும் வந்தமையாலும், அவர் கூட்டம் தொகை மிகுதியும் செல்வாக்குப் பெற்றிருந்தமையாலும் சிவவேதியர் தம்முடைய சிவாகமங்களைக் கைசோரவிட்டனர் என்பது தெரிந்தது. இந்நாளில் கிடைக்கும் சிவாகமங்களில் ஞானபாதம் கூறுவனவொழிய லோகபாதம் கூறுவன அறவே இல்லை எனலாம். கிரியா பாதம் கூறுவனவற்றுள் பல அவரவரால் காலப்போக்கில் பொருந்தாதனவும், வேண்டாதனவும் எழுதிச் சேர்க்கப்பட்டுப் போலிகளாய் ஒழிந்தன.

இனி, இக்கோயில்களில் பல்லவர், பாண்டியர், விசயநகரவேந்தர், நாயக்க மன்னர் காலங்களில் நாட்பூசனைக்கும், திருப்பணிக்கும் எனப் பல நிவந்தங்கள் அமைந்துள்ளன. கருவறை சீர் செய்தல், மண்டபங்கள் அமைத்தல், கோபுரத் திருப்பணி, புறமதில் திருப்பணி, திருவாபரணம் முதலியன செய்தளித்தல் முதலிய திருப்பணிகள் மிகுதியாகச் செய்யப்பட்டுள்ளன.

கோப் பெருஞ்சிங்கன் முதலிய காவல் குலத்தவர் செய்து வைத்துள்ள திருவாபரணக் கல்வெட்டுக்கள் அழகிய பாட்டுருவில் படிப்பவர் மனம்மகிழத்தக்க வகையில் உள்ளன. ஈங்கு எடுத்துக் கொள்ளப்படுவது திருவானைக்காவில் சோழ வேந்தர் செய்த திருப்பணியாகும்.

சங்க காலச் சோழ வேந்தருள் ஒருவன் சோழன் செங்கணான். இடைக்காலச் சோழர் காலச் செப்பேடுகள், பெருநற்கிள்ளி, கரிகாலன் முதலிய வேந்தர் வழியினன் இச் செங்கணான் என்று கூறுகின்றன. கழுமலப் போரில் சேரமானை வென்று அகப்படுத்திச் சான்றோரான பொய்கையார் பாடிய களவழி என்ற நூலை வியந்து சோழனை விடுவித்தான் என்று கலிங்கத்துப் பரணியால் அறிகின்றோம். இவ்வேந்தர் பெருமானுக்கு நல்லடி என்றொரு மகளுண்டெனச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

திருவானைக்காவில் நாவல் மரத்தடியில் விளங்கிய சிவபெருமானுக்கு முதன் முதலில் திருக்கோயிலெடுத்தவன் சோழன் கோச்செங்கணான் என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார். இவ்வேந்தனை நம்பி ஆரூரர். ''தென்னவனாய் உலகாண்ட செங்கணார்'' என்று சிறப்பிக்க, இவ்வரலாற்றைச் சிறிது விரித்த நம்பியாண்டார் நம்பிகள்,

> '' மைவைத்த கண்டன் நெறியறி
> மற்றோர் நெறிகருதாத்
> தெய்வக் குடிச் சோழன் முன்பு
> சிலந்தியாய்ப் பந்தர் செய்து
> சைவத்துருவெய்தி வந்து தரணி
> நீடாலயங்கள்
> செய்வித்தவன் திருக்கோச்செங்
> ணான் என்னும் செம்பியனே ''

என்று பாடிப் பரவியுள்ளனர்.

சுந்தரமூர்த்திகள், இச்செங்கணான், பிறப்பாற் சோழனான தொருபுறம் நிற்க, ''தமிழ் கூறும் நல்லுலகத்தை''த் தென்னவனாகவும், சேரலனாகவும் ஆண்டமை புலப்பட, ''தென்னவனாய் உலகாண்ட'' என்ற தொடர் நிற்கிறது. இதற்கொப்ப, இவன் கட்டிய சிவன் கோயில்கள், பாண்டி நாட்டிலும் சேரநாட்டிலும் இருந்துள்ளன. சேரநாட்டில் இவன் திருப்பெயரமைந்த தொன்மைச் சிறப்புடையவூர்கள் இருப்பதே தக்க சான்றுபகர்கிறது. ''தரணியில் நீடு ஆலயங்கள் பல செய்வித்தவன்'' என நம்பியாண்டார் உரைப்பதும், திருமங்கை மன்னனார் தமது பெரிய திருமொழியில் ''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது'' செய்தான் என்று விளம்புவதும் உண்மை யொளி பரப்புகின்றன.

செங்கணான் திருவானைக் காவில் சிவன் இருந்த வெண்ணாவல் மரத்தில் சிலந்தியாய் இருந்து மறுபிறப்பில் சோழனாய்த் தோன்றினான் என்றொரு வரலாறு உண்டு. இதனைத் திருநாவுக்கரசர்,

> '' சிலந்தியும் ஆனைக்காவில்
> திருநிழற்பந்தர் செய்து
> உலந்து அவன் இறந்தபோது
> கோச்செங்கணானுமாகக்
> கலந்த நீர்க்காவிரி சூழ்
> சோணாட்டுச் சோழர் தங்கள்
> குலந்தனில் பிறப்பித்திட்டார்
> குறுக்கை வீரட்டனாரே ''

என்று தெரிவிக்கின்றார். இச்செய்தி, திருவானைக்காக் கோயிற் கல்வெட்டொன்றில் ஒரு தோப்புக்குப் பெயராய் ''உள்ளூர் புதுப்புடை விளாகத்துச் சிலந்தியைச் சோழனாக்கினான் திருத் தோப்பு'' (கல். தொ. 4, 426) என்று போற்றிய மக்களின் சமயவுணர்வின் சால்பை விளக்கி நிற்கிறது.

செங்கணான் திருவானைக்காவில் தொடங்கிய கோயில் திருப்பணி செங்கல்லாலும், மரத்தாலும் ஆகியிருத்தல் வேண்டும். அதன் அமைப்பு தென்னார்க்காடு மாவட்டத்துத் திருமுட்டம் சிவன் கோவில் போன்றிருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இப்போதுள்ள கற்றளியில் காணப்படும் கல்வெட்டுக்களில் மிகப் பழமையானது முதற் பராந்தகனுடைய 40ஆம் ஆண்டுக் கல்வெட்டு எனத் தெரிகிறது. இதற்கு முன்னைய வாய்ப் படி எடுக்கப்பட்டவை என எவையும் காணப்படாமையால் இப்போதுள்ள கோயில் கி.பி. 907-க்கு முன்னே கட்டியதென்று தெரிய நிற்கிறது.

இடைக்காலச் சோழ வேந்தருள் ஆதித்தன் மகனாகிய முதற் பராந்தகனது 40ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று இக்கோயிலில் உளது; எனினும் அது குறைவாகவும், சிதைந்தும் உளது; அதன் கண் ஆனைக்காவுடைய சிவபெருமான் மகாதேவ படாரர் என்று பெயர் குறிக்கப்படுகின்றார். தோன்றுதலும் இறத்தலும் இல்லாதவர் என்ற பொருள் தரும் இச்சொல் இடைக்காலத்தில் சிவனுக்கு வழங்கியதில் வியப்பில்லை. இளங்கோவடிகளும் திருமுறையாசிரியர்களும் சிவனைப் பிறப்பும் இறப்பும் இலாப் பெருமையன் எனப் பாராட்டியுள்ளனர். இவ்வேந்தன் கி. பி. 907-ல் சோழ அரசு கட்டிலேறியவன். இங்குள்ள கல்வெட்டு, 40ஆம் ஆண்டைய தாதலால், இது கி. பி. 947-ல் பிறந்தமை தெளிவாம்.

இப்பராந்தகனுக்குப் பின் வந்த சோழருள் முதல் இராசராசன், முதல் இராசேந்திரன் முதலியோர் மிக்க சிறப்பு வாய்ந்தவராக இருந்தும், அவர்களுடைய கல்வெட்டுக்கள் இக்கோயிலிற் காணப்படவில்லை. இவ்வாறே பின்வந்த சோழர் காலத் திருப்பணிகளும் நிவந்தங்களும் இக்கோயிற் கல்வெட்டுக்களில் இடம் பெறவில்லை. 1917 ஆம் ஆண்டில் கல்வெட்டுத் துறையினர் சிறு கல்வெட்டுக்களைப் படி எடுத்துள்ளனர். அவை அத்துறையினரிடமே புதைந்து கிடக்கின்றன. இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் இக் கல்வெட்டுக்கள் வெளிவர முயல்வார்களானால் நன்று. வெளிப்படுத்தும் செயலை இடித்துரைத்து வற்புறுத்தினாலன்றி வெளியிடும் பணியை இந்தியப் பேரரசு மேற்கொள்வதாகத் தோன்றவில்லை.

முதற் குலோத்துங்கனது ஆட்சி 40ஆம் ஆண்டில் வில்லவரையன் என்னும் தலைவன் ஆனைக்காவுடைய பெருமானுக்குக் காளையூர்தி ஒன்றைச் செய்து வைத்து, திருப்பணிக்காக நிலங்கள் சில விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்துள்ளான்.

(வால். 3, எண். 76)

இரண்டாம் குலோத்துங்கன் மகனான இரண்டாம் இராசராசன் கி. பி. 1146-ல் அரசனானான். "தந்தை யில்லோர்க்குத் தந்தையாகியும், தாயில்லோர்க்குத் தாயாகியும் மைந்தரில்லோர்க்கு மைந்தராகியும் மன்னுயிர்கட்கு உயிராகியும்" நாட்டவர் வியந்து போற்ற வாழ்ந்தான் என இவனுடைய மெய்க் கீர்த்தி விளம்புகிறது. "மலைக்கொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன் வரராசராசன்," என்று தக்கயாகப் பரணி இவ்வேந்தனைப் புகழ்கின்றது.

இவ்வேந்தன் கி. பி. 1146-ல் அரசு கட்டிலேறினான் என்பர். நான்கு ஆண்டுக்குப் பின் கி. பி. 1150-ல் இவனது கல்வெட்டொன்று இத்திருவானைக்காக் கோயிலில் உளது. அதன்கண், அரையன் கந்தனான வாணகோப்பாடியன் என்ற செல்வன் பூசைத் திருப்பணிக்காக ஊரவர்பால் நிலம் வாங்கிக் கோயிற்குக் கொடுக்கிறான். (27/1937–38)

மூன்றாம் குலோத்துங்கன் கி.பி. 1178-ல் சோழ வேந்தாயினான். தன்னொடு மாறுபட்ட பாண்டிய சேரரை வென்று மேம்பட்டமைபற்றி இவன் திரிபுவன வீரதேவன் என்ற சிறப்பெய்தினான்.

"அறந்தரு திருவாலவாயில்
அமர்ந்தவர்க்குத் தன்பேரால்
சிறந்த பெருந்திருவீதியும்
திருநாளும் கண்டருளிப்
பொருப்பு நெடுஞ்சிலையால் முப்
புரமெரித்த சொக்கர்க்குத்
திருப்பவனி கண்டருளித்
திருவீதியில் சேவித்துத்
தென்மதுரைத் திருவாலவாய்ப்
பொன்மலை எனப் பொன் வேய்ந்து"

(என—என்று கண்டோர் வியந்து புகழுமாறு) என வரும் குடுமியான் மலைக் கல்வெட்டு, இவ்வேந்தர் பெருமானுடைய திருப்பணியார்வத்தைப் புலப்படுத்துகிறது. மேலும், சுந்தரமூர்த்திகளைச் சிவன் தோழனாகக் கொண்டதுபோல, இக் குலோத்துங்கனையும் திருவாரூர் இறைவன், "நம் தோழன்" எனச் சிறப்பித்தார் என்று திருவாரூர்க் கல்வெட்டொன்றால் அறிகிறோம்.

சிவநெறிச் செம்மலாகிய இச் சோழ வேந்தன் கல்வெட்டுக்கள் சில திருவானைக் காத் திருக்கோயிலில் இருப்பது வியத்தகு செய்தியன்று. இவ்வேந்தனுக்கு வீரராசேந்

திரன் என்ற சிறப்புமுண்டு. இச்சிறப்பு விளங்கிய 7ஆம் ஆட்சி ஆண்டில் இவனது நன்முயற்சியால், மாறுபட்டு நின்ற இரு கட்சியினர், திருவானைக்காவுடைய நாயனர் திருமுன் முரண்பாடு நீங்கி ஒன்றிய உறவினராயினர். அவருள் ஒரு கட்சிக்குத் தலைவன், வீற்றிருந்தான் சேமனுன அகளங்க நாடாள்வான்; மற்றென்றிற்குத் தலைவர்கள் அரைய தேவன் மூவாயிரத் தொருவனுன வீரராசேந்திர பிரமாதராய முத்தரையனும், அரையதேவன் திருவெண் காடுடையனுன விக்கிரம சோழப் பிரமாத ராய முத்தரையனுமாவர். (20/1937–38) இவனது 18ஆம் ஆட்சி ஆண்டில் இராசராச தேவன் பொன் பரப்பியவனுன வாணகோ வரையனும் சீயன் உடைய பிள்ளையான அகளங்க நாடாள்வானும் தம்முள் வேறுபாடு நீங்கி ஒருவர்க்கொருவர் துணையாவதாக ஆனைக்காவுடைய அண்ணல் திருமுன் உடன்படிக்கை செய்து கொள்கிருர்கள்.

(483/1908)

இதற்கு அடுத்த ஆண்டில் மேலே கண்ட அரசியல் தலைவனுன சீயன் உடைய பிள்ளையோடு தொண்டன் சேமனுன இராசராச மூவரையன் துணையாவதாக உடன்பாடு செய்துகொள்கிருன்.

(480/1908)

இம் மூன்ரும் குலோத்துங்கனுக்குக் ''கோனேரின்மை கொண்டான்'' என்ற சிறப்புப் பெயரும் உண்டாதலால், திருவானைக்காவலில் காணப்படும் இவனது 21ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள், மதுரையும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்தி என்பதோடு கோனேரின்மை கொண்டான் குலோத்துங்க சோழ தேவர் எனக் குறிக்கின்றன. கோனேரின்மை கொண்டான் என்ற சிறப்புப் பாண்டியர்களுக்கே சொல்லப்படுவது.

இவ்வேந்தனுடைய தலைமையதிகாரிகளில் மீனவன் மூவேந்த வேளாண் முன்னிற்க. திருவானைக்கா திருக்கோயில்களில் இருந்து தொண்டைமான் வேண்டி விண்ணப்பிக்க. பழுவூரான இராசேந்திர சோழ நல்லூரில் சில நிலங்களையும் ஏனுதிமங்கலத்தில் சில நிலங்களையும் தொகுத்துக் குலோத்துங்க சோழன் பழுவூர் என்று பெயரிட்டுப் பழுவூருடையான் நன்கன் அறவன் என்பானுக்கு ''ஜன்மக்காணியாக''த் தருகின்றனர். மற்ற மூன்று கல்வெட்டுக்களில் இந்த ஏற்பாட்டின் சார்பாக வரிவகைகள் முறை செய்யப்படுகின்றன. (38–41/1937–38)

இச்சோழ வேந்தனுக்குப் பின் அரசு கட்டிலேறியவன், மூன்ரும் இராசராசன். இவன் கி. பி. 1216-ல் இளவரசாயவன். இவன் காலத்தில் திருவானைக்காவில் பல கல்வெட்டுக்கள் தோன்றியுள்ளன.

இவனுடைய 20ஆம் ஆண்டுக் கல்வெட்டுத் திருவானைக்காவை, பாண்டிய குலாசனி வளநாட்டு விளா நாட்டுத் திருவானைக்கா என்று குறித்து, இராசராச வளநாட்டுப் பாச்சிற் கூற்றத்துக் கீழ்ப்புல்லாற்று (சங்க காலப் புல்லாற்றூர்; இது பில்லாறு எனவும் கல்வெட்டுக்களில் வழங்கும்) காரிசாத்தான் குறையிற் பொல்லாதான் செல்வனுன பொன்னி மழநாடாள்வான், உடையான் நஞ்சுண்டியான நெற்குப்பை அரையன், குன்றன் சீகயிலாய முடையானுன திருவரங்க நாடாள்வான் என்ற மூவரும் கோயில் ஆதிசண்டேசுரதேவ கன்மிகளுக்கு நிலம் விற்று விலைப் பிரமாண இசைவுத் தீட்டு நல்குவதைத் தெரிவிக்கின்றது.

இவ்வாறே 22ஆம் ஆண்டுக் கல்வெட்டில், காரிசாத்தன் குறையில் காணியுடைய ஓடமுடையாரில் கூத்தன் குன்றனுன கீழாற்றூர் அரையன், இவன் தம்பி ஆரம்பூண்டான், இவன் தம்பி தாழியும் விடங்கன் உடையனுன மழநாட்டு விழுப்பரைய நாடாள்வான், இவன் தம்பி திருவரங்கன், பேராயிரமுடையான் ஆகியோர் கோயிற்கு நிலம் விற்று விலைப் பிரமாண ஓலையெழுதித் தருகின்ருர்கள்.

24ஆம் ஆண்டுக் கல்வெட்டில் போகைய தண்டல் நாயகர் ஆணைப்படி இருவர், கோயிற்கு நிலம் விற்று ''திரவியச் செலவு கையீடு'' தருகின்ருர்கள். (13–4/1937–38)

29ஆம்ஆண்டில் பிறந்த கல்வெட்டொன்று பாச்சிற் கூற்றத்துக் கீழ்ப்புல்லாற்றுத் துறை

யூருடையான் அரையன் நித்த கல்லியாண ஞன பாண்டிராசன், திருவானைக்காவுடைய நாயனுர் கோயில் ஆதி சண்டேசுரதேவர் கன்மிகட்குத் தங்களுடையதும், தங்கள் மாதாக்கனதுமான நிலத்தை அவர் (மாதா இறந்து பட்டமையில் தன்மதானமாகக் கொடுப்பதைக் கூறுகிறது. (337/8) வேறே இரண்டு கல்வெட்டுக்களில் பாச்சிற் கூற்றத் துக் கீழ்ப்புல்லாற்று ஈசனைக் குறையூர வரும், அவ்வூர் கழனி வாயிலுடையான் அனுமனமுடையானும், அவன் தம்பி நம்பி யும், திருவானைக்கா கோயிற்கு நிலம் தருகின்றுர்கள். (338–9/8)

இனி, காலம் புலப்படாதபடி இவ்வேந்த னுடைய கல்வெட்டுக்கள் சில இக்கோயிலில் உள. அவற்றிலும் ஆனைக்காவுடைய பெரு மான் கன்மிகட்கு நிலம் விற்ற செய்தியே காணப்படுகிறது.

இவ்விடைக்காலச் சோழராட்சியின் வீழ்ச்சிக் காலத்து இறுதியில் இருந்தவன் மூன்றும் இராசேந்திரன் ; 1246-ல் இளவரச ஞகி, அப்பொழுதே அரசினை ஏற்று நடத்தி ஞன். இவனைச் '' சமஸ்த ஜகதேக வீரன் '' என்றும், '' இருவர் பாண்டியர் முடித்தலை கொண்டருளிய மகாராசாதிராச நரபதி '' என்றும் மெய்க் கீர்த்திகள் புகழ்கின்றன. இவனது மூன்றும் ஆண்டுக் கல்வெட்டொன் றில் திருவானைக்காத் திருக்கோயிலுக்கு அரையன் நித்திய கல்லியாணனை துறை யூர் பாண்டியராயன் நிலம் தருகிருன். (29/1937–38)

ஆரும் ஆண்டில் திருவானைக்காவுடைய அண்ணல் கோயிற்கெனத் திருநந்தவனம் அமைக்கப்படுகிறது. (484/1908) அதே ஆண்டில் சிங்கண்ண தண்ட நாயகர் திருவானைக்காத் திருக்கோயிலில் சித்த வீச்சுரத்தைக் கட்டி அதன் பூசைத் திருப்ப பணிக்கெனப் பாச்சில் கூற்றத்துத் திரு வெள்ளறையில் சில நிலங்களைக் கொடுக் கிருர். (73/1937–38)

இங்ஙனம் சங்க காலச் சோழனை செங் கணன் முதல் இடைக்காலச் சோழர் பலரும் திருவானைக்காவுடைய பெருமானுக்கு அரிய திருப்பணி புரிந்த திறத்தை ஒருவாறு கண் டோம். இப்பெருமக்களின் திருப்பணி நலங்களை அறிந்து கோடற்கேற்பப் பல்லா யிரக் கணக்கான கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் அரசின் கல்வெட்டுத் துறையினர் படியெடுத்துள்ளனரே ஒழியப் பொதுமக்கள் இனிதின் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளியிடச் சுணங்கு கின்றனர். இந்தியப் பேரரசு இவ்வகையில் கருத்தைச் செலுத்தியிருக்குமாயின் நம் தமிழ்நாட்டுக் கோயில்களின் வரலாறும், சிறப்பும் நாடறிய விளங்கியிருக்கும். கோயில் வரலாற்றிலும், தமிழகத்தின் சமு தாய வளர்ச்சி வரலாற்றிலும் தெளிந்த அறிவுடைய நன்மக்களைத் தேர்ந்தெடுத்து இந்திய அரசியற் பேரவைக்கு அனுப்பாத பெருங்குறையே இன்று நாம் நமது வீழ்ச்சிக்குரிய காரணத்தை நினைத்துப் பார்க்க இயலாமைக்குரிய தடைகளுள் ஒன் ருகும். கல்வெட்டுத் துறையினர் தமது பணியைத் தொடங்கிச் சுமார் 100 ஆண்டு கள் ஆகின்றன. நாம் அரசியல் உரிமை பெற்றுச் சுமார் 25 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் நாம் நமது பழமையும் புதுமையும் கலந்த வாழ்க்கை வரலாற்றை உணர்ந்து செம்மை செய்துகொள்ளும் திறமின்றி யிருப்பது, நினைக்கும்போது மனத்துக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா ? எண்ணுமின்.

# சோழன் கோச்செங்கணன் திருக்கோயில்கள்

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், வருங்காலத்தின் இயல்புமறிந்த சிவஞானச் செல்வனுவான் சோழன் கோச்செங்கணன். காலத்திற்கெட்டா தொல் குடியில் தோன்றித் தென்னுடாண்ட முடியுடை மூவேந்தருள் சிபிச் சக்கரவர்த்தி, மனுநீதிச்சோழன், முசுகுந்தச் சக்கரவர்த்தி மரபிலே சோழவள நாட்டின் தலைநகராம் உறந்தையின் இரண்டு மைலுக்கப்பாலுள்ள பொன்னியாம் காவிரி சூழ்ந்த நீர்ப் பொதும்பில் ஒரு வெண்ணுவலின் கீழ் சுயம்பு இலிங்கமாக வீற்றிருந்த எம்பெருமானுக்கு அவர்மேல் இலைகள் விழாதவாறு தன் வாய் நூலாற் பந்தரிட்ட சிலந்தியின் அருமைப் பேற்றிற்காக அச்சிலந்தியே இக்கோச் செங்கட் சோழனுகப் பிறக்க அருள் செய்து, எம்பெருமான் தமக்கே உரிமையாகத் தானுறையும் கோயில் இஃது என அவனலமைக் கப்பெற்ற திருக்கோயில் இதுவேயாகும். இதனுல் இவன் சிலந்திச் சோழன் எனப் பெயரும் தாங்கினுன்.

கோச் செங்கட்சோழன் இப்புராணச் சிறப்பினைப் பெற்றும், சரித்திர சங்க காலச் சேரன் கணைக்காலிரும்பொறையை வென்றும், அக்காலப் புலவராகிய பொய்கையாரால் "களவழி நாற்பது" என்னும் நூலில் போற்றப்பெற்றும், ஏழாம் நூற்றுண்டில் இவனுல் எடுக்கப்பட்ட பெருங்கோயில்கள் அப்பரது பாடல் பெற்றும், எட்டாம் நூற்றுண்டில் சுந்தரமூர்த்தி நாயனுரது திருத்தொண்டத் தொகையில் அவரை ஒரு சைவ நாயன்மாராகக் கருதி,

"தென்னவனய் யுலகாண்ட செங்கணுர்க் கடியேன்"

என நாயன்மாருள் ஒருவராக ஆக்கப்பெற்ற பெருமையும் உடையவன்.

கருவிற்றிரு வுடையான் ஆனமையின் இவன் இப்பெருங்கோயிலை மாடக்கோயிலாக எடுத்ததுமன்றித் தன் நாட்டில் மக்கள் சிவனருள் பெற்றுய்யுமாறு எழுபது சிவனுறையும் கோயில்களையும் இன்னும் திருமாலுக்கும் திருநறையூரில் ஒரு விண்ணகரினை எடுத்த பெருமையினையும் ஒன்பதாம் நூற்றுண்டிரான ஆழ்வார் திருமங்கை மன்னன் பெரிய திருமொழிப் பாசுரம் ஒன்றில்,

'எண்டோளீசர்க் கெழின் மாடம் எழுபது செய்துலகாண்ட செங்கட் சோழன்"

என்று கூறும் சொற்களால் அறியப் பெறுகிறது.

இப்பெருங் கோயில்கள் ஆயிரத்து அறுநூறு ஆண்டுகட்கிடைக் கால வெள்ளத்தால் பழுதுபட எஞ்சி நின்ற சிலவற்றையே ஏழாம் நூற்றுண்டினரான அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகியோரது வாக்குகளால் அறியக்கிடக்கின்றது.

"சிலந்தி செங்கட் சோழனுகச் செய்தான்"

எனத் திருஞானசம்பந்தரும்,

"தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென வியற்றச்
சுருண்ட செஞ்சடையாய் அது தன்னைச்
சோழனுக்கிய தொடர்ச்சிகண் டடைந்தேன்"
(7–66–2)

"திருவும் வண்மையுந் திண்டிற லரசும்
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு
மருவுகோச் செங்கணன் றனக்களித்த
வார்த்தைகேட்டு நுன்மலரடி யடைந்தேன்"
(7–65–1)

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மேலும் திருநாவுக்கரசரும் போற்றியுள்ளமை காணலாம்.

அப்பெருங்கோயில்களுள் அக்காலத்திலும் இக்காலத்திலும் நின்று நிலவுபவை திருவம்பர்ப் பெருந்திருக்கோயில், வைகல் மாடக்கோயில், தண்டலை நீணெறி, நன்னிலத்துப் பெருங்கோயில் முதலிய மாடக்கோயில்களைத் தமிழகத்தில் முதன் முதலில்

கட்டிய பெருமை கோச் செங்கட் சோழர்க்கே உரியதாகும். இக்கோயில்களின் விவரங்களைச் சிவநேசச் செல்வர் வா.தா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்களதருமை எழுத்துக்களாலேயே கீழே வரையலுறுகின்றேன்.

அம்பர்: (சோ; ச; பிரமபுரீசுரர்—பூங்குழலம்மை; பிரமதீர்த்தம்; புன்னை விருட்சம்)

பேரளம் ஜங்க்ஷனுக்கு அடுத்த பூந்தோட்டம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்கிழக்கு 2-மைல், அம்பர் மாகாளத்திற்குக் கிழக்கு முக்கால் மைல்.

சோமாசி மாற நாயனர் முத்தியடைந்த தலம்.

ஸ்வாமி சந்நிதி கட்டுமலை மேல் இருக்கிறது. ஸ்வாமிக்குப் பின்புறத்திற் பார்வதி பரமேசரர்களுடைய உருவங்கள் இருக்கின்றன. இங்குள்ள ஆலயத்திற்குப் பெருந்திருக்கோயில் என்று பெயர். 'அம்பர் நகர்ப் பெருங்கோயில் அமர்கின்ருன்காண்' என்பது தேவாரம். இத்தலத்திலுள்ள ஆலயம் கோச்செங்கட் சோழ ராஜாவாற் கட்டப்பட்டது.* இவர் திருவானைக்கா முதல் அம்பர் பெருந்திருக்கோயில் ஈருகவுள்ள 64-மாடக் கோயில்கள் கட்டுவித்தார்.

'மாடக்கோயில்' என்பது கட்டுமலையையும் யானைகள் செல்லக்கூடாதிருக்குஞ் சந்நிதிகளையும் உடையது.

மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பாடிய ஸ்தல புராணமுமுள்ளது.

**வைகல்மாடக் கோயில்:** (சோ; ச; வைகனுதர்—வைகலாம்பிகை)

ஆடுதுறை ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தெற்கு 2-மைலிலுள்ள திருநீலக்குடிக்குத் தென்கிழக்கு 3-மைல்.

'வைகல்' என்னுமிடத்திற்குத் தென்மேற்கு $\frac{1}{8}$ மைலில் 'மாடக்கோயில்' இருக்கின்றது. **இரண்டிடங்களிலும் கோயில்கள் உள்ளன. இவ்வாலயம் கோச்செங்கட் சோழராற் கட்டப்பட்ட மாடக்கோயில்களுள் ஒன்று.†

மேலும் இச்சிவாலயம் உயர்ந்த மாடங்களையுடையதாய் ஓங்கியதென்பதை,

"துளமறி யுடைமதி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே"

—சம்பந்தர்

என்பதனுல் அறியலாம்.

**தண்டலை நீணெறி:** என்பது தண்டலைச் சேரி.

(சோ; ச; நீணெறி நாகேசுரர்—ஞானம்பிகை)

இது மணலி ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம். திருத்தருப்பூண்டி ரெயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கு $2\frac{1}{2}$ மைல்.

கூர்மாவதாரங் கொண்ட விஷ்ணு அகங்கரித்துக் கடலைக் கலக்கச் சிவபெருமான் அக்கூர்மத்தின் அகத்தையடக்கி அதன் ஓட்டை யணிந்தருளிய ஸ்தலம். அரிவாட்டாய நாயனர் செந்நெலரிசி, மாவடு, செங்கீரை, முதலிய நிவேதித்து வந்து முத்தியடைந்த ஸ்தலம். அவர் ஊராகிய கணமங்கலம் கிழக்கே $\frac{1}{2}$ மைலிலிருக்கின்றது. விருட்சம்—குருந்தம்; இலைகளில் ஒரே இதழ் உள்ளது.

கருவ ருந்தியி ருன்முகன் கண்ணனென்
றிருவ ருந்தெரி யாவொரு வன்னிடஞ்
செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீணெறி காண்மினே.

—சம்பந்தர்

---

* எரிதர அனல்கையி லேந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவார்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே".

—சம்பந்தர்

† கொம்பியல் கோதைமுன் னஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகன் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணுன்செய் கோயிலே.

நன்னிலம் : (சோ ; சு ; மதுவனேசுரர்—மதுவன நாயகி)

ரெயில்வே ஸ்டேஷன். ஊர் ஸ்டேஷனுக்கு மேற்கு 3 மைல், வழியில் $1\frac{1}{2}$ மைலில் திருக்கொண்டீச்சுரம் இருக்கின்றது.

ஸ்தலத்துக்கு 'மதுவனம்' என்றும் பெயர். ஸ்வாமி சந்நிதி கட்டுமலைமேலிருக்கின்றது. இக்கோயில் பெருங்கோயில்களுள் ஒன்று ; கோச்செங்கட் சோழர் திருப்பணி செய்த ஸ்தலம். "கோச்செங்கணன் செங்கோயில், நாடிய நன்னிலத்துப் பெருங் கோயில்"—என்பது தேவாரம். சூரியன் பூஜித்த ஸ்தலம்.

தேவியார் சந்நிதியும், அகத்தீசுரர் சந்நிதியும் கீழே இருக்கின்றன. கோயிலுக்கு வடக்கிற் பிரமதீர்த்தம் இருக்கின்றது.

கருவரை போல ரக்கன் கயி லைம்மலைக் கீழ்க்க தற
ஒருவிர லாலடர்த்தின் னருள் செய்த வுமாப திதான்
திரைபொரு பொன்னி நன்னீர்த் துறை வன்றிகழ் செம்பியர்கோ
னரபதி நன்னிலத்துப் பெருங் கோயி னயந்தவனே.

—சுந்தரர்

திருஆனைக்கா என்பது ஜம்புகேசுவரம். (சோ ; மு ; சோழ நாடு. மூவரும் பாடியது ; ஜம்புகேசுவரர் - அகிலாண்ட நாயகி; காவிரி நதி ; வெள்ளை நாவல் விருட்சம்)

ஸ்ரீரங்கம் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கு $\frac{1}{2}$ மைல்.

வெள்ளை யானை வழிபட்ட ஸ்தலமாதலால், இதற்கு 'ஆனைக்கா' (யானைவனம்) என்றும், ஸ்வாமி, ஜம்பு நாவல் (வெள்ளை நாவல்) மரத்தடியில் எழுந்தருளியிருப்பதால் 'ஜம்புகேசுவரம்' என்றும் பெயர் உண்டாயின.

"விறன் மிக்க கரிக்கருள் செய்தவனே'
'வெண்ணாவலின் மேவிய எம்மழகா'

என்பர் திருஞானசம்பந்தர். ஜம்பு நாவல் மரம் ஸ்வாமிக்குச் சமீபத்திற் கருப்ப கிரஹத்துக்கு வெளியிலிருக்கின்றது.

பஞ்சபூத ஸ்தலங்களில் 'ஒன்றாகிய அப்பு ஸ்தலம். கோயில் மிகப் பெரிது. கோயிலின் மூலஸ்தானத்தில் எப்பொழுதும் ஜலம் நிரம்பியிருக்கும்.

'செழுநீர்த் திரளைச் சென் றாடி னேனே'

என்னும் தேவாரம் இங்கு உணரற்பாலது. முன் ஜன்மத்திற் சிலந்தியாயிருந்து சிவபெருமானை வழிபட்டு, அப்பெரும் புண்ணியத்தினால் அரசராய்ப் பிறந்த‡கோச்செங்கட் சோழ நாயனாராலே கட்டுவிக்கப்பட்ட ஆலயத்தையும், அவ்வாலயத்திலே சிவபெருமான் சித்தராயெழுந்து, அருளிவந்து திருநீற்றையே கூலியாகக் கொடுத்து கட்டுவித்த காரணத்தால் 'திருநீறிட்டான் மதில்' என்று சொல்லப்படும் திருமதிலையும் உடைய விசேஷமான ஸ்தலம்.

"திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாட்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலுங்
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே"
'அகில காரணர் வினைஞர்பால் பூதியு மளித்து
முகில் உலாவ நன்கிழைத்த மாமதில்.'

—திருவானைக்காப்புராணம்
ஆரஞ்சாத்துப் படலம்

'ஆழித் தேர்மறு கிற்பயில் மெய்த்திரு-
நீறிட் டான்மதில் சுற்றிய பொற்றிரு ஆனைக்கா'

(திருப்புகழ்)

ஸ்வாமியை அம்மன் பூஜித்த ஐதிஹ்யத்தைக் காட்ட, இன்றும் உச்சிக் காலத்தில் அம்மன் கோயில் குருக்கள் அம்மனைப் போல வேஷந்தரித்து ஸ்வாமி கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்கிறார்.

உறையூர் சோழ மகாராஜா முத்தாரந் தரித்துக் கொண்டு காவிரியில் ஸ்நாநஞ் செய்த பொழுது அது நதியில் விழுந்துவிட, அவர் 'சிவபெருமானே ஆட்கொண்டருளும்' என்று பிரார்த்திக்க, அந்தப் பதக்கம் திருமஞ்சனக் குடத்தில் அகப்பட்டு அபிஷேகத்தின்போது ஸ்வாமி மேல்விழ, அதனை ஸ்வாமி அணிந்து, அரசருக்குத் திருவருள் புரிந்த ஸ்தலம். இதனைச் சுந்தர மூர்த்தி நாயனார் இத்தல தேவாரப் பதிகத்

‡ சிலந்தியும் ஆனைக் காவிற் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவ னிறந்த போதே கோச் செங்க ணனு மாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே,"

தில், ஏழாம் பாசுரத்தில் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

'ஆர நீரோ டேந்திழ ஞானைக் காவு சேர்மினே'

என்பர் சம்பந்த ஸ்வாமிகள்.

வளவர் பெருமான் மணியாரஞ்
சாத்திக் கொண்டு வரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும்
வழுவிப் போகக்கேதமுற
அளவில் திருமஞ் சனக்குடத்து
ளதுபுக் காட்ட அணிந்தருளித்
தளரு மவனுக் கருள் புரிந்த
தன்மை சிறக்கச் சாற்றினர்.

—பெரியபுராணம் : ஏயர்கோன்

யாற்றில் மிதந்துவந்த நாவற்பழத்தைச் சம்பு முனிவர் உண்ண அது அவர் வயிற்றின் முளைத்துக்கபாலங்கிழித்து மரமாக வளர்ந்தோங்க, அதன் பாரம் பொருது, அவர் சிவபெருமானை வேண்ட, ஈசனும் அவரை அங்கிருக்கச் செய்து அம்மர நிழலில் தாமும் வீற்றிருப்பதாக ஐதிஹ்யம். கோயிற் சுவரிலும், வெளிக்கம்பத்திலும் இவ்வுருவங்களைக் காணலாம்.

ஸ்தலத்தின் ஐதிஷ்யம், பெருமை முதலிய வற்றைக் காட்டும் பாடல்கள் :—

'ஆனைக்காரருட் புரிதலி ஞானைக்கா வாயிற்று'

—திருவானைக்காப்புராணம்
—கஜாரணியப் படலம்

முடங்குகாற் சிலந்தி யானை மலைமகள் முளரி நாட்டத்,
தடங்கடல் வண்ண னேற்ற தவநக ரிது'

—திருவிளையாடற் புராணம்
—அருச்சனைப் படலம்

சம்பு மாதவன் பராசரன் கிழவன்
கும்ப மாமுநி திருநகரன் குளிர்மதி யிராமன்
உம்பர்கோ னழற் கடவுளென் றிவர்க்கெலா முவந்து
தம்பிரா னருள் தழைதரக் கொடுத்ததித் தலமே.

—திருவானைக்காப் புராணம்
—திருமால் வழிபடு படலம்

வன்றிவலம் புரிதோகை ஞமலியென்ரு
கழுதைவா யசங்க ளென்ரு
கொன்றுதசை தின்றுழலும் புலையரென்ரு
வெவரேனுங் கோல மார்ந்த
வென்றிபுனை ஞானத்தலத் திருப்பரெனின்
விண்ணவருள் மேலாய் வாழ்வர்
கன்றெறிந்து கனியுகுத்தோன் சகோதரியென்
றுலகியம்புங் கடிப் பூங்கோதாய் !
மேதகைய பயன் விழைவோர் ஞானதலத்
துறைகவது மேவா தாயின்
ஓதுக அத்தலப் பெயரை யாங்கதுவு
முற்றாதே லுரைப்பக் கேட்க
காதலொடு கேட்டவரு மூவகைய
பாதகமுங் கடந்து மேலாம்
போதமுணர்ந் தெமதடியிற் புக்கிருப்ப
ரிஃதுண்மை பொலங்கொம்பன்னாய் !

—திருவானைக்காப் புராணம்
—தலவிசேடப் படலம்

கச்சியப்ப முனிவரருளிய திருவானைக்காப் புராணம் அச்சிடப்பட்டுள்ளது.

§ செங்கட்பெயர் கொண்டவன் செம்பியர்கோ
னங்கட்கரு ணைபெரி தாயவனே
வெங்கண் விடையா யெம்வெண்ணுவலுளா
யங்கத் தயர் வாயின ளாயிழையே.

ஒழுகு மாடத்து ளொன்பது வாயிலுங்
கழுக ரிப்பதின் முன்னங் கழலடி
தொழுது கைகளாற் றூமலர் தூவிநின்
றழும வர்க்கன்ப ஞானைக்கா வண்ணலே.

இப்பெருந் தலங்களுக்கு அன்பர்கள் சென்று வணங்கிச் சிவப்பெரும் பேற்றினைப் பெற்று என்றும் இனிது வாழ்வார்களாக!

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே !

*Ref* :

1. Sewells' Antiquities Vol. I. P. 267.
2. Fergussons' Indian and Eastern Architecture P. 365.
3. Moorss' Trichinopoly Manual P. 341, 342.
4. Trichinopoly gazr, P. 321, 323.
5. Madras Epi. Reports 1891, 1903, 1905, 1908, 1910.

§ தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரி னின்றடி போற்றி நின்மலா கொள்ளென வாங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளு
மீர முள்ளவர் நாளு மெம்மையு மாளுடை யாரே.

# ஹொய்சள மன்னரும் திருவானைக்காவும்

ச. திருஞானசம்பந்தன், M.A., Lecturer in History

பொன்னிவளங்கொழிக்கும் சோழவள நாட்டில் வானைஅளாவிய கோபுரங்களையும் பெரிய மண்டபங்களையும் கொண்ட சைவத்திருப்பதிகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. அவற்றுள் பல தேவாரம் பெற்ற சிறப்பு உடையனவாகும். சைவசமய குரவர்களாலும், இடைக்காலப் பிற்காலச் சான்றோர்களாலும் பாடிப் பரவப் பெற்ற அத்தகைய திருத்தலங்களில் திருவானைக்காவும் ஒன்று. காவிரிக்கு வடகரையில் உள்ள பாடல்பெற்ற நூற்றுத் தொண்ணூறு பேரூர்களில் அறுபதாவது இடத்தைப் பெற்றுள்ள திருவானைக்கா சங்ககாலந்தொட்டுப் புகழுடன் விளங்கிவந்துள்ளது. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த திருசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டு இறைவியின் பேரில் அகிலாண்டேஸ்வரி பிள்ளைத் தமிழைத் தமது இளம் பருவத்தில் பாடியுள்ளார்கள். சங்ககாலப் பேரரசன் கோச்செங்கணானல் அமைக்கப்பெற்ற திருவானைக்காத் திருக்கோயில் தனது பெருமை குன்றாமல் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் சோழர், பாண்டியர், ஹொய்சளர், மதுரை நாயக்கர்கள் ஆகிய பல மன்னர்குடியினர்களால் தொடர்ந்து ஆதரிக்கப்பட்டு வந்துள்ளதை இக்கோயிலில் காணப்படும் பல கல்வெட்டுக்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இக்கல்வெட்டுக்கள் மேற்கண்ட மன்னர் குலத்தினர்கள் அவ்வப்போது கோயிலுக்குச் செய்த அறச்செயல்களைக் குறிப்பிடுவதோடு பல வரலாற்றுச் செய்திகளையும் நமக்கு உணர்த்துவது இங்கே கருதத்தக்கது[1]. பல்வேறு குலங்களைச் சேர்ந்த மன்னர்களின் பேராதரவைப் பெற்ற சிறப்பு திருவானைக்காவுக்கு உண்டு.

தமிழகத்தில் ஹொய்சள மன்னர்கள் செல்வாக்குடன் கி.பி. பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் விளங்கினார்கள். அவர்கள் கல்வெட்டுக்கள் அம்மன்னர்களைப் போசளர் என்றே குறிப்பிடுகின்றன. காஞ்சி முதல் திருநெல்வேலி வரை உள்ள பரந்த நிலப்பரப்பில் பல ஊர்களில் அவர்கள் கல்வெட்டுக்கள் தமிழ், கிரந்தம் ஆகியவற்றில் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. வீரசோமேஸ்வரன், அவன் புதல்வன் வீரராமநாதன் ஆகிய மன்னர்களும் அவர்தம் உரிமைச் சுற்றத்தினரும் அதிகாரிகளும் திருவானைக்காவுடன் பெரும் தொடர்பு கொண்டு அரிய தொண்டுகள் பல செய்துள்ளார்கள். அவற்றைக் காணுமுன் தமிழகத்தில் ஹொய்சளர், சோழர், பண்டியர் ஆகியோர்களுக்குள் இருந்த தொடர்பைச் சுருக்கமாக அறிந்துகொள்வது இயல்புடையதேயாம்.

பிற்காலச் சோழர்களில் இறுதிப் பேரரசனாக விளங்கிய மூன்றாங் குலோத்துங்கன் (1078–1218) காலத்தில் மைசூர் வேந்தன் இரண்டாம் வல்லாளன் (1173–1220) சோழர் குலப் பெண்மணி ஒருத்தியை மணந்திருந்தான். அவளைச் சோழமாதேவி என்று வரலாறு குறிப்பிடுகிறது. மூன்றாம் குலோத்துங்கச் சோழனுக்குப்பின் வந்த மூன்றாம் இராசராசன் (1216–1256) காலத்தில் சோழர் பேரரசு வீழ்ச்சியுறத்தலைப்பட்டது. பாண்டியர், வாணாதிராயர், பிற்காலப் பல்லவர்குலத்தலைவன் முதற்

---

1. ARE for 1936–37, ARE for 1937–38, தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் நான்காம் தொகுதி ஆகியவற்றில் காணலாம்.

கோப்பெருஞ்சிங்கன் ஆகியோர்[2] அடிக் கடிச் சோணாட்டின் மீது படையெடுத்து அதன் சீரழிவுக்குக் காரணமாயினர். இவ்வாறு சோணாடு பல இன்னல்களுக்கு ஆளாகித் தவித்த காலத்தில்தான் ஹொய் சளர் தலையீடு தமிழக அரசியலில் முதன் முதலில் ஏற்பட்டது. அத்தலையீட்டுக்குக் காரணங்கள் இரண்டு ஆகும். ஒன்று, மூன்றாம் இராசராசன் ஹொய்சளரோடு உறவின்மூலம் பிணிக்கப்பட்டிருந்தமை.[3] இரண்டாவது தமிழகத்தில் சோழர் ஆதிக் கம் குறைந்து பாண்டியர் ஆதிக்கம் வளர்ந் தால் இறுதியில் அது தமக்கு ஊறுவிளைக்கும் என்று ஹொய்சள மன்னர்கள் கருதியமை.[4] பாண்டிய வேந்தனாகிய முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216–1238) சோழ நாட்டின் மீது 1219ஆம் ஆண்டில் படை யெடுத்துப் பல அழிவு வேலைகளை நிகழ்த்திய போது மூன்றாம் இராசராசனின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாயிருந்தது. இந் நிலையைக் கேள்வியுற்ற இரண்டாம் வல்லாளனும் (1173–1220) அவன் புதல்வன் இரண்டாம் நரசிம்மனும் (1220–1239) குறுக் கிட்டுப் பாண்டியரின் வெற்றி ஓர் எல்லைக்குள் நிற்குமாறும் சோழர் அரசு மறைந்தொழி யாதவாறும் பார்த்துக் கொண்டனர். இதை ஹொய்சளர் கல்வெட்டுக்களும், ஜகந்தாத விஜயம் என்ற வடமொழி நூலும் தெளிவாக உணர்த்துகின்றன. சோழராஜ்ய பிரதிஷ் டாசாரியன் சோழ குலஏகரக்ஷகன்,[5] பாண்டிய கஜகேசரி என்ற பல பட்டங்களை ஹொய்சள மன்னர்கள் புனைந்து கொண் டனர். வலி குன்றிய சோழமன்னன் அடிக் கடி வாணராலும், கோப்பெருஞ்சிங்கனாலும் துன்புற்றபோது அவர்களை யெதிர்த்து வெற்றி காணப் பல ஹொய்சள படைத் தலைவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து இங்கேயே தங்கிவிட்டனர். பிறகு கி. பி. 1231ஆம் ஆண்டில் நிகழ்ந்த பாண்டியர் படை யெழுச்சி நிகழ்ந்த போது மைசூர் வேந்தனாக இருந்த இரண்டாம் நரசிம்மன் சோழராஜ்ய பிரதிஷ்டாசாரியன் என்னும் பட்டத்தை மீண்டும் நிலைபெறச் செய்யாமல் காளம் ஊதுவதில்லை என்று சூளுரைத்து, தன் தந்தைவழியைப் பின்பற்றித் தக்க நடவடிக்கைகள் எடுத்துச் சோழ அரசு அழியாமல் காத்தனன். அவன் படைத் தலைவர்கள் முதல் கோப்பெருஞ்சிங்கனை வென்று சோழர் அரசை நிலைநிறுத்திய போது இரண்டாம் நரசிம்மன் திருச்சி ஜில்லாவுக்கு வந்து பாண்டியனை மகேந்திர மங்கலம் என்னும் ஊரில் தோற்கடித்து மூன்றாம் இராசராசன் ஆட்சி மீண்டும் நிலைபெற உதவினான்.[6] இதைக் 'கத்திய கர்ணாமிருதம்' என்னும் கன்னட நூல் கூறு கின்றது. இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஹொய்சளரின் ஆதிக்கம் தமிழகத்தில் சோணாடு, பாண்டியநாடு ஆகியவற்றில் வலுப்பெற்றுவிட்டது. வலிமையின் சம நிலைக் கொள்கையை (Balance of Power) அவர்கள் பற்றி நின்று தமிழ்நாட்டு மன்னர் கள் தம்மை மீறி வலிவடையாத வகையில் திட்டங்கள் தீட்டி, அவர்கள் நடக்க ஆரம் பித்தார்கள்.[7] திருச்சி ஜில்லா கண்ணனூர் (தற்போதைய சமயபுரம்) அவர்களின் தமிழகத் தலைநகராயிற்று.

இதனால் தமிழ்நாட்டில் குழப்பமே நிலவி யது. மூன்றாம் இராசராசன் ஆட்சியின் பிற்பகுதியில் இளவரசுப் பட்டம் பெற்ற மூன்றாம் இராசேந்திரன் (1246–1279) இதை மாற்ற முயன்று அப்போதிருந்த ஹொய்சள மன்னனான வீரசோமேசுவரனிடம் (1239–

2. ARE 1912, Part 2, Part 30.

3. பிற்காலச் சோழர் சரித்திரம் II. பக்கங்கள் 189, 19-0.

4. பிற்காலச் சோழர் சரித்திரம் II. பக்கம் 188.

5. ஆராய்ச்சிப் பேரறிஞர் டி. வி. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 2-பக்கம் 187.

6. ஆராய்ச்சிப் பேரறிஞர் டி. வி. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி பக்கம் 193. கடலூருக்கண்மையில் உள்ள திருவயிந்திரபுரக் கல்வெட்டு பல உண்மைகளைத் தெளிவாகக் கூறுகிறது. EI XXIII No, 27

7. இது ஹொய்சள மன்னர்கள் இழைத்த பெருந்தவறு என்றும் அவர்கள் இறுதி அழிவுக்கு அடிகோலியது என்றும் ஓர் அறிஞர் கூறியுள்ளார். The Hoysalas Anediaeval South Indian Dynasty P. 95.

1260) பகைமை பாராட்டி அவனைப் போர்கள் பலவற்றில் தோற்கடித்தான். இப்போது வீரசோமேசுவரன் இராஜேந்திரனுக்கு எதிராகப் பாண்டியர்களுடன் சேர்ந்து கொண்டான். இந்த நிலை வெகு காலம் நீடிக்கவில்லை. கி.பி. 1251ல் பட்டம் பெற்ற பாண்டியர் குலத்தோன்றல் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் தென்னிந்தியப் பெரு வீரர்களில் சிறப்பிடம் பெற்றவன். ஆற்றல், சூழ்ச்சித்திறன் போன்ற அருங்குணங்கள் பல பெற்ற இவ் வேந்தன் சோழர், ஹொய்சளர் ஆகிய இரு குலத்தினருமே அஞ்சி நடுங்கக்கூடிய பெருவீரம் படைத்தவன். அவனுடைய போர்ச் செயல்கள் காரணமாக முரண்பட்ட நிலையில் இருந்த சோழரும் ஹொய்சளரும் மீண்டும் ஒன்றுசேர்ந்து பாண்டியரை எதிர்க்க முனைந்தனர். ஆயினும் அவர்கள் முயற்சி பயனளிக்கவில்லை. பேராற்றல் படைத்த பாண்டிய குலத்தோன்றல் அவர்கள் இருவரையுமே தோற்கடித்துப் பாண்டியர் பேரரசைத் தோற்றுவித்துப் புகழுடன் விளங்கினான்.[8] ஹொய்சளரின் தமிழகத் தலைநகராகிய கண்ணனூர் அவன் வசமாயிற்று. மூன்றாம் இராசேந்திரன் குறுநில மன்னன் நிலையை எய்தினான். வீரசோமேசுவரன் போரில் தோல்வியுற்றோடினான். தன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இம்மன்னன் தனது அரசைத் தன் புதல்வர்கள் மூன்றாம் நரசிம்மன், வீரராமநாதன் ஆகியவர்கட்குப் பிரித்துக்கொடுதான். தமிழகப் பகுதி வீரராமநாதன் வசமிருந்தது. அதை அவன் பாண்டியருக்கு அடங்கியே ஆண்டுவந்தான்.[9] பிறகு பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் பிரிவுபட்ட ஹொய்சளர் அரசு மூன்றாம் வல்லாளன்[10] (1291–1342) நான்காம் வல்லாளன் (1342–1346) காலங்களில் ஒன்றுபட்டது. பிறகு பல காரணங்களால் அழிந்துவிட்டது. அவர்கள் பேரூராகிய கண்ணனூரும் முஸ்லீம்கள் வசம் ஆகிவிட்டது. அதை மீட்கும் முயற்சியில் மூன்றாம் வல்லாளன் வீரமரணம் 1342-ல் எய்தினான்.

## திருவானைக்காப் பதியில் ஹொய்சளர் தொண்டுகள்

இவற்றை நாம் காணக் கல்வெட்டுக்கள் பல உதவி புரிகின்றன. வீரசோமேசுவரன் ஆழ்ந்த சைவசமயப் பற்றுள்ளவனாகத் திகழ்ந்தான். இம்மன்னன் திருவானைக்காத் திருக்கோயிலில் ஆற்றிய தொண்டுகளில் சிறந்தது கோபுரம் ஒன்றை அமைத்ததேயாகும். தற்போதுள்ள கீழைக் கோபுரம் பாண்டியர் சிற்பத்திறனை யொட்டிப் படிமங்கள் பலவற்றுடன் ஏழுநிலைக் கோபுரமாக இவனால் அமைக்கப்பெற்றது வீரசோமேசுவரன் திருநிலை ஏழுகோபுரம் என்று அது கல்வெட்டில் குறிப்பிடப் படுகின்றது. மேலும் தனது முன்னோர்களை நினைவுகூறும் வகையில் வட திருவானைக்காவில் வல்லாளீசுவரம், பத்மாவதீஸ்வரம், நரசிம்மேஸ்வரம், சோமலீஸ்வரம் என்ற கோயில்கள்[11] அமைக்கப்பெற்றன. இவை சோமேசுவரனின் பாட்டன் இரண்டாம் வல்லாளன், பாட்டி பத்மாவதி, தந்தை நரசிம்மன், நெருங்கிய உறவினன் சோமலதேவி ஆகியோர் நினைவாக அமைக்கப் பெற்றவையாகும். இவற்றுக்கு அளிக்கப் பெற்ற இறையிலி நிலங்களைத் தக்க முறையில் பாதுகாப்பதற்கும், கோயில்களைக் கண்காணிக்கவும் திருவானைக்கா, கண்ணனூர், திருச்சி ஆகிய ஊர்களில் உள்ள கோயில் தானத்தார்கள் உரிமை பெற்றனர். இவற்றுக்கு மீண்டும் நிலங்கள் வழங்கப்பட்டதாகச் சோமேசுவரனின் மற்றொரு கல்வெட்டுக் கூறுகின்றது. கோயிலில் நான்காம்

7. பிற்காலச் சோழர் சரித்திரம் 2 பக்கங்கள் 207, 208. 8. பாண்டியர் வரலாறு பக்கங்கள் 126, 131.

9. பாண்டியர் வரலாறு பக்கங்கள் 129.

10. இம்மன்னர்கள் கண்ணனூரை விடுத்து வட ஆர்க்காடு ஜில்லா திருவண்ணாமலையைத் தமது தமிழகத் தலைநகராகக் கொண்டு பல திருப்பணிகளை அண்ணாமலையார் கோயிலில் செய்துள்ளார்கள்.

11. Ins. 19 of 1291 S. II vol. No. 420 (ARE for the year 1936–37 Part II. P. 78, K. R. Venkataraman, Hoysalas in the Tamil Cuntry) P. 75.

பிரகாரத்தில் உள்ள சங்கரநாயனுர் பூசைக்கும் திருவமுதுபடிக்கும் நிவந்தமாக இராஜ கம்பீர வளநாட்டுக் கொற்றமங்கலம், அழகிய மணவாள நல்லூர் ஆகிய ஊர்களிலிருந்து ஆயிரம் கலம் நெல் அளிக்கப்பட்டதை இம்மன்னனின் நான்காம் ஆண்டுக்[12] கல்வெட்டொன்று கூறுகின்றது. இம்மன்னனது மூன்றும் ஆண்டுக் கல்வெட்டொன்று [13] திருக்கோயிலில் வீரசோமேசுவரன் திருநாள் என்ற திருவிழாவொன்று மாசி மாதத்தில் நடைபெற மன்னன் நிவந்தம் வழங்கியதைத் தெரிவிக்கின்றது. மன்னனின் அரசி சோமலதேவியார் என்பார் தமது கணவரது 25ஆம் ஆண்டில் வல்லாளீஸ்வரம், பதுமலீஸ்வரம், நரசிங்கீஸ்வரம் ஆகியவற்றின் திருப்பணிக்கும், தம் பெயரால் திருவானைக்கா உடையார்க்குத் திருவாபரணங்கள் செய்து சாத்துவதற்கும் வெள்ளான் வெள்ளூர், பொய்கைப் புத்தூர் முதலான ஊர்களினின்றும் கிடைக்கும் தொகையைக் கொடுத்து, ஏற்பாடு செய்துள்ளார்.[14]

இக் கோபுரத்தின் மேல்தளத்தில் பாண்டியர் இலச்சினையான கயல்களும் அங்குசமும் பொறிக்கப்பட்டுள்ளமையால் அது முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனுல் தொடங்கப்பட்டது என்றும் சோமேசுவரனுல் முடிக்கப்பட்டது என்றும் கருதப்படுகின்றது.

இது பிழையெனத் தோன்றுகின்றது. முதற் கோப்பெருஞ்சிங்கன் தில்லையில் அமைத்த தெற்குக் கோபுரத்திலும் பாண்டியர் பேரரசுக்குட்பட்ட பின்னர் அவர்களால் அமைக்கப்பெற்ற கோபுரங்களில் பாண்டியர் இலச்சினை பொறிக்கப்பெற்றது.

தேவியார் சோமல தேவியார் இறந்த பின்னர் பள்ளிப்படைக்கோயில் ஒன்றும் இம்மன்னன் காலத்தில் இராஜராஜ வளநாட்டுப் பாச்சில் கூற்றத்துப் புரோசைக்குடியில் எடுப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தப் போசனக் குலத்துக் கோமகள் மூன்றும் இராஜராஜ சோழனுடைய அரசியாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிருர்கள்.[16] எனினும் தேவியார் என்ற சொல் கல்வெட்டில் காணப்பெறும் அரசனுடைய அரசியாரைக் குறிப்பதாகக் கொள்வதற்கும் இடமுள்ளது. மேற்குறித்த பள்ளிப்படை சோமேசுவரனுடைய ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. இக் கோயிலில் பூசை, திருவமுதுபடி ஆகியவை நடைபெறப் பலவிதமான நிலங்களிலிருந்து நெல்லாயம் கிடைக்குமாறு வீரசோமேசுவரன் ஏற்பாடு செய்துள்ளான். மேலும் இம்மன்னன் தன் அவ்வை சோமல மகா தேவியார் திருவானைக்காவில் சங்கமல்லீசுவரம் (சங்கமேஸ்வரம்) உடைய நாயனுர் கோயிலுக்கும், சங்கமதேவர் மடத்துக்கும் அளித்திருந்த நிலங்களுக்குத் தனது ஆருவது ஆண்டு முதல் இறை நீக்கியதை[17] ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இதில் குறிப்பிடப்பெறும் சோமல தேவியார் வீரவல்லாளனுடைய மகள் என்று மற்ருெரு கல்வெட்டு[18] அறிவிக்கின்றது. இவை தவிரத் தனிப்பட்ட செல்வர்களும் அறச்செயல்கள் பல புரிந்துள்ளார்கள். எடுத்துக்காட்டாகப் போசள வீரநரசிம்மச் சதுர்வேதி மங்கலத்துக் கல்லக்கூர்த்தியாகப்பெருமாள் என்பார் திருவானைக்காக்கோயில் மூன்றும் பிரகாரத்தில் அமைத்திருந்த தியாகவினேதீஸ்வரம் உடையார் வழிபாடு திருவமுதுபடி, சண்டேசுவரருக்குத் திருவாசி செய்தல் ஆகியவற்றுக்காக நாற்பதினுயிரம் காசு முதல் வைத்ததை சோமேசுவரனது இருபத்திரண்டாம் ஆண்டில் வரையப்பட்ட ஒரு கல்வெட்டு மூலம் நாம் அறியலாம். இதைக் கூறும் கல்வெட்டு[19] வீரசோமேசுவரனைச் 'சார்வபௌம சக்கரவர்த்தி' என்று சிறப்

12. Ins. 18 of 1871 S. II vol. IV No. 419, 119 of 1936-37.
13. Ins. 120 of 1936-37. 14. Ins. 121 of 1936-37. 15. Ins. S. II of vol. IV No. 423.
16. Ins. 124 of 1936-37 17. ARE 1936-37, Part II Para 48, Page 79.
18. Ins. 5 of 1937-38.
19. Ins of 1937-38. இது நிகழ்ந்தது. 1238ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமையாகும். (ARE 1936-37. Page 62.)

பித்துக்கூறுவது இங்கே நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

வீரசோமேசுவரனுக்குப் பின் தமிழகத்தில் திருச்சிப் பகுதியில் ஆட்சி புரிந்த வீர ராமநாதன் என்னும் ஹொய்சள வேந்தனும் திருவானைக்கா கோயிலில் அறங்கள் பல புரிந்துள்ளான்; பாண்டியர் குலத்தோன்றல் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்குக் களிறுகளைத் திறைப் பொருளாகக் கொடுத்த கருநாட வேந்தன் இவனேயென்று ஆராய்ச்சியாளர்[20] கருதியுள்ளனர். கோயில் நான்காம் பிரகாரத்தில் அகிலாண்டநாயகி சன்னிதிக்கெதிரில் இருந்த கோசாலை 'பாலப் பள்ளி நீலகண்ட நாயக்கர்' என்பார் அமைத்து அங்கே பசுபதீஸ்வரம் உடையாரை எழுந்தருளுவித்துப் பூசைக்கும் திருவமுதுக்குமாக முதற்பொருள் வழங்கியுள்ளார்.[21] இக்கோயிலில் உள்ள முகலிங்கம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், ஈசானம் ஆகிய ஐந்து சிவ தத்துவங்களைக் காட்டுவதாக அமைந்துள்ளது.[22]

வீரராமநாதனின் ஏழாம் ஆண்டில் தேவர் அரசியாரில் அரிய பிள்ளை மகளார் கமலா தேவியார் தங்கையார் சிக்க சோமல தேவியார், கோயிலில் சிங்காசனம் ஒன்று அமைத்தனவும், உச்சிச் சந்தியில் நாள்தோறும் திருவமுது படைக்கவும் முதற்பொருள் நாற்பதினாயிரம் காசு வைத்ததும்[23] ஒரு கல்வெட்டால் புலனாகின்றன. உடையார்சுவாமி தேவரின் சீடரின் சீடரான கௌதமசிவர் என்பார் கோயில் மனையில் மடம் கட்டிக் கொண்டதை ஒரு கல்வெட்டு[24] உணர்த்துகின்றது. இது வீரராமநாதனின் இரண்டாம் ஆண்டில் நிகழ்ந்ததாகும். ஹொய்சளரின் ஆதரவு பெற்ற லட்சாத்யாயி கோளகிபிட்சா மடம் ஒன்று திருவானைக்காவில் இருந்தது.[25] சைவசித்தாந்த வியாக்யாதர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவரும் சுவாமி தேவர் என்பாரின் சீடருமான தத்புருஷ சிவாசாரியாருக்குத் திருமடம் ஒன்றை வீரராமநாதன் கட்டிக் கொடுத்து இறையிலி நிபந்தங்களும் வழங்கியுள்ளார். இவற்றைத் தவிர, சிவபக்திச் செல்வம் படைத்த பெருமக்கள் சிலரின் தொண்டுகளையும் நாம் இங்கே கருதலாம். வீரராமநாதனின் ஆறும் ஆண்டில் புள்ளலூரைச் சேர்ந்த சங்கர பட்டன் என்பான் திருவானைக்கா அகரமாகிய வீரநரசிம்ம சதுர்வேதி மங்கலத்தில் சங்கமதேவர் கோயில் கீழைப் பிரகாரத்தில் விசுவேசுவர தேவரை எழுந்தருளுவித்து நிவந்தம் அளித்துள்ளான்.[27] அதே ஆட்சியாண்டில் கருப்பூர்த் திருஞானசம்பந்தர் என்பார் திருவானைக்காக் கோயிலின் முதற் பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் எழுந்தருளிய ஸ்ரீ பாதீஸ்வரம் உடைய நாயனாரை எழுந்தருளுவித்து நிலம் வழங்கியதைப் பிறிதொரு கல்வெட்டு[28]க் கூறுகின்றது.

இதுகாறும் கண்டவாற்றால் ஹொய்சள மன்னர்கட்கும் திருவானைக்காவுக்கும் நெருங்கிய தொடர்பு கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் இருந்தமை ஒருவாறு அறியப்படும். ஹொய்சள மன்னர்கள் இந்நகரில் எடுப்பித்த கோயில்கள் கலையழகு குறைந்துள்ளவை என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.[29]

20. Ins. 118 of 1936-37. 21. பாண்டியர் வரலாறு பக்கம் 129.
22. Ins. 41 of 1937-38 ARE 1937-38. Part II Para 53. Page 97. இது 1269ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் நாள் புதன்கிழமை அன்று நிகழ்ந்தது. இக்கல்வெட்டு சிலந்தியைச் சோழனுக்கினன் என்பது திருத்தோப்பு என்பதைக் குறிப்பிடுவது சிறப்பானதாகும். பெரிய புராணத்தில் கோச்செங்கணானின் புகழ் நாட்டில் பரவி இருந்ததைக் காட்டுவதாகக் கருதலாம். 22a. Hoysalas in the Tamil Country, Page 76.
23. SII vol IV No. 427. 24. Ins. 125 of 1936-37.
25. K. R. Venkataraman, Hoysalas in the Tamil Country. Page 73.
26. Ins. 21 of 1891 S. II vol. IV No. 227. இதனால் குறிப்பிடப்படும் சுவாமி தேவர் என்னும் பெயர் இயற்பெயர் அல்ல என்றும் வணக்கத்தைக் காட்டும் பெயர் என்றும் கருதப்படுகிறது. (Hoysalas in the Tamil Country Page 74)
27. Ins. 12 of 1937-38. காலம் கி. பி. 1260ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15ஆம் நாள் புதன்கிழமை.
28. Ins. 25 of 1937-38. காலம் கி. பி. 1260ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 30ஆம் நாள் வியாழக்கிழமை.
29. ARE 1936-37. Part II Para 48, Page 79.

# மதுரை நாயக்க மன்னர்களும் திருவானைக்காவும்

எஸ். திருஞானசம்பந்தம்

நம் தமிழகத்தைச் சிறப்புற ஆண்ட தமிழ் வேந்தர் மரபுகள் வலுவிழந்த பின் நிகழ்ந்த அரசியல் மாறுதல்களால் வேறு மொழி பேசும் புறமதத்தினர் நாட்டில் சிறிது காலம் ஆதிக்கம் பெற்றனர். அவ்வாறு புறமதத்தினர் ஆதிக்கம் பெற்ற காலமாகிய பதினான்காம் நூற்றாண்டில் நாடும் மொழியும் சமயமும் மிகவும் சீர்கேடடைந்தன. தமிழகத்தின் இரண்டாவது இருண்ட காலம் என்று இக்காலத்தைக் குறிப்பிடுவதிலும் தவறில்லை. இந்தக் காலத்தின் பின்பகுதியில் விசயநகர வேந்தர்கள் தென்னாட்டில் பேரரசு ஒன்றை ஏற்படுத்தி வீழ்ந்த சமயம் மொழி ஆகியவற்றுக்குப் புத்துயிரூட்ட முயற்சித்து அதில் பெருமளவுக்கு வெற்றியும் கண்டார்கள். தமிழகமும் அவர் ஆட்சிக்கு உட்பட்டது. தமிழகத்தைத் தங்கள் பேரரசின் ஒரு பகுதியாகக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதில் அம்மன்னர்கள் பல முறைகளைக் கையாண்டு இறுதியில் தங்கள் பிரதிநிதியாக விசுவநாத நாயக்கர் என்பாரை மதுரைக்கு அனுப்பி வைத்து, அவர் மூலம் தமது அரசியல் ஆதிக்கத்தை உறுதி செய்து கொண்டார்கள். விசுவநாத நாயக்கர் தென் தமிழ் நாட்டின் தலைவராகப் பதவியேற்றது கிருஷ்ணதேவராயர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் நிகழ்ந்ததாகும்.[1] (1510–1530) மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் விசுவநாத நாயக்கர் மரபினரின் ஆளுகையின் கீழிருந்தன. இம்மரபினர் ஆரம்பகால முதல் திருமலை நாயக்கர் காலம் முடிய சைவ சமயத்தைச் சார்ந்து இருந்தனர்; பின்வந்தோர் தீவிர வைணவர்களாக இருந்தனர்.[2] திருவரங்கம் அவர்களால் பலவகையிலும் ஏற்றம் பெற்றது. இம்மன்னர்கள் தமது பேரரசர்களைப் பின்பற்றி மொழி, சமயம் ஆகியவற்றைப் போற்றிப் புரந்து கல்வி, கலைகள் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி இறவாப் புகழைப் பெற்றவர்களாவர்.

இனி, இம்மன்னர்களுக்கும் திருவானைக்காத் திருக்கோயிலுக்கும் இருந்த தொடர்பைக் காணலாம். கி. பி. 1572-க்கும் 1595-க்கும் இடையில் ஆட்சிபுரிந்த வீரப்ப நாயக்கர் ஆழ்ந்த சைவ சமயப்பற்றுள்ளவர். தில்லையம்பதியிலும் மதுரை மாநகரிலும் அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் பல. தில்லைப் பெருங்கோயிலைச் சுற்றி அவர் அமைத்த திருமதில் வீரப்ப நாயக்கர் மதில் என்று வழங்கப் பெறுகின்றது. மதுரையில் வெள்ளியம்பலம் அமைத்தும் வடக்கே கோபுரம் கட்டியும், ஆயிரக்கால் மண்டபம் கட்டியும், இன்னபிற திருப்பணிகள் பல ஆற்றியும் அவர் சிறப்புற்றதை மதுரைத் திருப்பணி மாலை விளக்கிக் கூறுகின்றது. இவ்வேந்தர் திருவானைக்காப் பெருங்கோயிலில் சகம் 1517-ல் கங்காள நாதரை எழுந்தருளுவித்துப் பிரம்மோத்ஸவத்தின்போது ஒருநாள் வழிபாட்டுக்கும், திருவமுது படிக்கும் திருச்சிராப்பள்ளிக் கொண்டையம் பேட்டையில் புதிதாகக் குடியேறிய வலைக்காரர் குடும்பங்கள் தமக்கு ஆண்டுதோறும் இறுக்கவேண்டிய 47 பொன்னை முதற் பொருளாக அளித்தார்.[3] இந்நிகழ்ச்சி 20–11–1595-ல் நிகழ்ந்ததாகத் தெரிகின்றது. இவர் ஆட்சிக் காலத்தில் கணக்கராகப் பணியாற்றிய ஒரு பெருமகன் வெண்கலத்தாலான துவாரபாலகர் சிலைகள் இரண்டைக் கர்ப்பக்கிரகத்தின் நுழைவாயிலில் அமைத்ததை அவற்றின் பீடங்களில் உள்ள இரு

---

1. விசுவநாத நாயக்கர் 1529ஆம் ஆண்டு தென்னாட்டின் தலைவராகப் பதவியேற்றார். பின்னர் அந்தப் பதவி சில இன்னல்களுக்கு உள்ளாயிற்று. 1533-ல் உறுதி செய்யப்பெற்றது.

2. ARE 1937–38, Part II, Para 75, Page 108.

3. Ins 136 of 1936–37 வீரப்பநாயக்கர் 1595ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் உயிர்நீத்தார் என்று பேராசிரியர் ஆர். சத்தியநாத அய்யர் அவர்கள் தமது மதுரை நாயக்கர் வரலாற்றில் கூறியுள்ளார்கள். நாம் மேலே கண்ட கல்வெட்டினின்றும் வீரப்பநாயக்கர் மேலும் இரண்டு மாதங்கள் உயிர்வாழ்ந்திருந்தார் என்பதை உய்த்துணரலாம். (ARE for the year 1936–37, Part II, Para 65, Page 86)

கல்வெட்டுக்கள்[4] கூறுகின்றன. இருங்கோளப் பாண்டி வளநாட்டுக் கருப்பூரைச் சேர்ந்த இளையநாயனுர் என்பவரின் புதல்வன் தெய்வங்கள் பெருமாள் என்பவன் (விசுவநாத வீரப்ப நாயக்கர் அய்யனின் கரணிகள்) அமைத்த அந்தப் படிமங்கள் 18" உயரமுள்ள பீடங்களில் உள்ளன. இவற்றின் உயரம் 4'. பதினாரும் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற உலோகச் சிற்பங்களில் இவை சிறப்பானவை. இவை வைக்கப்பெற்ற காலம் வீரப்ப நாயக்கர் காலம் ஆகலாம்.[5].

கி. பி. 1623ஆம் ஆண்டில் பட்டம்பெற்ற திருமலைநாயக்கர் சகம் 1584-ல் வெளியிட்டதாகக் கூறப்படும் செப்பேடு[6] ஒன்று இத்தலத்தோடு தொடர்புடையது. தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்ற வடமொழி, தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் எழுதப்பெற்ற அச்செப்பேடு கௌண்டில்ய கோத்திரத்து ஸ்ரீ கண்டாகாச வாசி பரம்பரையினராகிய மகாதேவ தீட்சிதர் என்னும் மன்னனின் குருவுக்குப் பல ஊர்களில் நிலங்கள் வழங்கப்பட்டன என்றும், ஜம்புகேஸ்வரம், மாத்ரு பூதேஸ்வரம், ராமேஸ்வரம், சொக்கநாதபுரம் ஆகிய திருக்கோயில்களில் பல உரிமைகளும் சிறப்புக்களும் மன்னரால் அளிக்கப்பெற்றன என்றும் தெரிவிக்கின்றது.

கி. பி. 1659-ல் பட்டத்துக்கு வந்த சொக்கநாத நாயக்கர் வெளியிட்டதாகக் கூறப்படும் செப்பேடு ஒன்றும் இத்தலத்தோடு தொடர்புடையது. சகம் 1574ஆம் ஆண்டில் (நந்தன) இச்செப்பேடு[7] தெலுங்கில் எழுதி வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. வேங்கடராம மாஹூத் தன்னுடைய உடன்பிறந்தான் ராமகிருஷ்ணமாஹூத்தன் என்பான் ஸ்ரீரங்கம், ஜம்புகேஸ்வரம், மாத்ரு பூதேஸ்வரம், மீனாட்சியம்மை கோயில் ஆகியவற்றில் மாஹூத்தர் காணியாட்சி உரிமையையும், அதற்குரிய வருவாய்களையும் மன்னரிடம் இருந்து பெற்றதாக இச் செப்பேட்டிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். ராஜாதிராஜன், பாண்டியதாரா மண்டலேஸ்வரன், தக்ஷிணமூர்த்தி, சிம்மாசனத்யக்ஷன் என்ற சிறப்புப் பட்டங்கள் சொக்கநாத நாயக்கருக்கு இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தைச் (1706–1732) சேர்ந்த ஆண்டு வரையப்படாத கல்வெட்டொன்று[8] இம்மன்னர் திருவானைக்கா உடையாரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியைக் குறிப்பிடுகின்றது.

வேறு இரு கல்வெட்டுக்கள் இம்மன்னன் காலத்தில் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் நாடார்சாலை ஆசிரியன் வைத்தியப் பையன் (வேங்கடேஸ்வர அய்யாவின் புதல்வன்) செய்த அறச்செயல்களைக் கூறுகின்றன. இவை வைத்தியப் பையன் நான்காம் திருச்சுற்று மாளிகையில் ஜம்புதீர்த்தக்கரையில் உள்ள மண்டபத்தையும் படிக்கட்டுகளையும் குளத்தின் கிழக்குக் கைப்பிடிச் சுவரையும் கட்டினன் என்று தெரிவிக்கின்றன.

நாம் இதுவரை கண்டவாற்றல் மதுரை நாயக்கர்கட்கும் திருவானைக்காவுக்கும் இருந்த தொடர்பு ஒருவாறு விளங்கும்.

---

4. Ins. 1 & 2 of 1937–38. The images are 4 feet high and stand on Pedestals about 18" high and are good specimens of the metalic sculptural art of the 16th Century A. D. (are for the year 1937–33. Port II, Para 74, Page 107.)

5. Do Do Do Do

6. C. D. 25 of 1937–38. இதில் குறித்துள்ள காலம் (சகம் 1584, கலி 4763. சுபகிருது சைத்ரமாதம், திங்கட்கிழமை) 1662ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24ஆம் நாள் திங்கட்கிழமை ஆகின்றது. ஆனல் 1659ஆம் ஆண்டிலேயே திருமலைநாயக்கர் இறந்துவிட்டார். ஆகவே இச்செப்பேடு உண்மையானதன்று என்று கருதப்படுகின்றது. இல்லையென்றால் இதில் கூறப்பட்டுள்ள உரிமைகள் திருமலைநாயக்கர் காலத்திலேயே அளிக்கப்பட்டு அவர்காலமான சில ஆண்டுகள் கழித்துச் செப்பேடு வாயிலாக உறுதி செய்யப்பட்டிருக்கலாம். இந்த ஒரு செப்பேட்டைக் கொண்டு மட்டும் நாயக்கரின் ஆட்சிக்காலத்தை நீடிக்க இயலாது. (ARE for the year 1937–38, Part II Para 75 Page 108)

7. C. P. 10 of 1950–51....இச்செப்பேடு உண்மையானதன்று. ஏனெனில் 1859-ல் பட்டம் பெற்ற சொக்கநாத நாயக்கர் 1653-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3ஆம் நாள் தம் பெயரால் செப்பேட்டை வழங்கியிருக்க இயலாது. (ARE for the year 1950–51, Page 2.)

8. Ins. 42 of 1937–38.

# கவிதைகள்

# சாகாக்கலை

கவியோகி சுத்தானந்த பாரதியார்

**1**

அகிலாண் டேஸ்வரி கருணை யிருந்தால் அமரத் தன்மை பெறலாம்
பகையிரு ளச்சம் பந்த வினைகள் பகல்முன் இரவென விலகும்
குகையில் வளரும் குண்டலி யுடனே கூடிக் குழையும் யோகி
தக தக வென்னத் தணலும் சுத்த சந்திக் கதிர் மணி யாவான் !

**2**

பேச்சைச் சுருக்கிப் பேரின் பத்தைப் பிரியாச்சிவ துணர் சீவன்
மூச்சை முற்றும் உள்முக மாக்கி மூலக் கனலுற வாழ்ந்தால்
சீச்சீ என்றே ஆசை யாணவச் சிறுமனப் பேயைச் செற்ருல்
ஏச்சில் லாத சம்யோ கத்தில் இறப்பையும் வென்றே வாழ்வோம் !

**3**

ஊனுக் குள்ளே உயிராடும் உயிருக் குள்ளே உணர்வாடும்
தேனுக் குள்ளே தித்திப்பாடும் தித்திப்புக் குள்ளே சிவமாடும்
நானும் அதுவும் ஒன்றெனவே நன்ரு யறியும் அறிவுடனே
வானும் கடலும் சூழுலகில் வாழ்வோம் அன்பே சூழ்வோமே !

**4**

சக்திக் கன்னை வளர்கலையே சாவை வெல்லும் சமயோகம்
பக்தி ஞானப் பணி நலமே பதியோ டொன்றும் பரமநிலை
சித்த சுத்தி பெற்றுள்ளே திகழும் சோதிக் கண்ணுடி
அத்தன் அருளை அகத்தடக்கி அதுநான் என்றும் அறிவோமே !

**5**

ஆக மத்தும் வேதத்தும் அதுநான் என்னும் அறிவுடனே
தேகந் தேகி கலந்திங்கே திகழும் புகழே முத்திநிலை
சாகாக்க லையும் அதுவாமே சாந்தச் சிவமங் களமாமே
ஏக மான சிவசக்தி இதயக் கலையும் அதுவாமே.

# அன்னையின் அருள்வேட்டல்

ஆ. வெ. ரா. கிருஷ்ணசாமிரெட்டியார்.

அப்புலிங்க நாதருக்குத் துணைவி யாகி
அகிலத்தில் சீவர்கட்குத் தாயு மாகி
முப்போதும் தொழுபவர்க்குக் கதியு மாகி
முச்சுடராய் விளங்குகின்ற தவத்தின் செல்வி
இப்புவியிற் கண்கண்ட தெய்வம் நீயே
இருதயத்தில் விளங்குகின்ற ஜோதித் தாயே
செப்பரிய தமிழ்தந்து மேகம் என்னச்
செந்தமிழைப் பாடவைத்த தெய்வம் நீயே.

அகிலத்தைக் காப்பதற்கே ஆனைக் காவில்
அருந்தபசு செய்யவந்த ஞானத் தாயே
நிகரில்லாத் தவச்செல்வி அனற்பி ழம்பாய்
நிறைசிவ னைத் தண்ணளியாற் குளிர்வித் திட்டாய்
தகத்தகவே அடியார்க்கிங் கருளைக் கூட்டத்
தயாபரிநீ அகத்தகத்தின் உள்ளே நின்றுய்
அகத்துள்ளே குகைவழியே புகுந்தோ ருக்கே
ஆனந்தப் பால்சுரக்கும் அன்னை நீயே.

உலகெல்லாம் உனதுதிரு வடியின் எச்சம்
உயிரெல்லாம் உனைச்சுமக்கும் அமுத கும்பம்
தலமெல்லாம் நின்னடியின் விளக்கம் ஆகும்
தண்ணீரும் நின்கருணைத் திறத்தைக் காட்டும்
குலமெல்லாம் செய்கைக்குத் தெளிவை நல்கும்
குணமெல்லாம் நின்மகிமை புகழ்ந்தே பேசும்
திலதமெனும் இடகலையில் நின்ற போதும்
தேவியக முகத்தினிலே சிவமே யானுய்.

இடப்பாகம் சிவனிடத்தே பெற்ருய் என்பார்
இடவலமாய் மாறுகின்ருய் எதுநின் பாகம்?
படமாடும் அரவணிந்த ஈசன் தன்னைப்
பார்வதிநீ பார்வையினுற் கனியச் செய்தாய்
சுடராடும் நினதுதிரு அடிசி வக்கச்
சிவந்த னையே எதிர்கொள்ள எழுவாய் என்று
தடமறிந்து தஞ்சமுனை அடைந்த மேலோர்
சாற்றியதோர் நயமறிந்து சரண்பு குந்தேன்.

அகிலாண்ட ஈஸ்வரியே ஆனைக் காவில்
அரனுரும் தவசிருக்க அன்னை யேநீ
மகிதலமே கொண்டாட அடியார்க் கெல்லாம்
வற்ருமல் அருள்சுரக்கும் கருணைத் தாயே!
முகில்சூழும் சிரகிரியில் அன்னை நீயும்
மேதினிக்காய்த் தவமிருக்கச் சிவன்க னிந்து
மகிழ்வோடு திரியாகி அருள்சு ரக்கும்
மகத்துவத்தை எடுத்துரைக்க வார்த்தை யுண்டோ?

ஆனைமுதல் எறும்புகடை சீவர்க் கெல்லாம்
அனுதினமும் பவக்கட லைக்கடக்க வென்றே
மோனநல்முத் திரைகாட்டும் ஞான மூர்த்தி
விரல்காட்டும் சிறுதோணி வழியிற் சென்று
ஞானமுடி தனில்நின்று வழியும் கங்கை
நதிமூழ்கி சுயம்ஜோதி வடிவத் தோடுன்
வான்நிறைந்த ஒளிமலர்கள் தமைத்தொ டுத்தே
மலரடிக்குச் சாற்றிநினை வணங்கி நிற்பேன்.

பந்தத்தால் பாழ்பட்டே நொந்த தேகம்
பற்றதனுற் சிதையுண்ட சொத்தைத் தேகம்
சிந்தனைகள் பலவற்ருற் சிதைந்த தேகம்
செய்தவமே இல்லாத ஏழைத் தேகம்
கந்தையெனக் கசங்கியவித் தேகந் தன்னில்
கால்கொண்டு கண்களிக்கக் கனிவாய் அம்மா
சிந்தனையும் கூராகத் தவம்ப லிக்கத்
தேகமதும் பொன்னுகும் ஒளியால் அம்மா.

சொல்பிறந்த இடமறிந்(து) ஓங் கார வீட்டில்
சுதிகூட்டும் சொல்லருமை உணர்வாற் பெற்ற
நல்லவர்க்கே நந்தியினே விலகச் செய்து
ஞானத்தால் தீட்சைசெயும் கருணைத் தாயே
நில்லாது சுழன்ருேடும் மனமும் நின்னே
நேர்சந்தி செய்திட்டால் நிலேயும் பெற்று
வல்லமைகள் சேர்ந்திடவான் வீதி யெல்லாம்
மனத்துக்குள் தானடைக்கும் வலிமை கொள்ளும்.

செந்தமிழின் சொல்விளங்க விளக்கம் காட்டிச்
சொற்பொருளாய்ச் சிவசக்தி நாவில் தோன்றி
மந்திரமாய் வாக்கியங்கள் பலிதம் ஆக
வையகத்தில் அவைநிலேத்துச் செயற்படுத்த
சிந்திப்போர் சிந்தனேகள் தெளிவைக் கொள்ளச்
செந்தமிழின் விடையேறித் தோன்று கின்ற
தந்திரத்தை எனக்கருளி அமுதம் ஊட்டத்
தாயேநீ கனிவுகொள்வாய் சரண்பு குந்தேன்.

ஊழியதில் அனேத்துயிருன் பாதம் சேர
உந்தனுடைக் கருணேவிழிப் பார்வை தன்னுல்
வாழ்வளிக்கும் மாசக்தி நின்தாள் பற்றி
மனத்தீயால் ஒளிமலர்கள் தொகுத்துப் போற்றி
ஆழ்ந்திருக்கும் நிலேபேற்றை எனக்கு நல்கி
ஆட்கொள்ளும் நின்புகழைப் பாடிப் போற்றி
வாழ்ந்திருக்கக் கவிகாள மேகத் திற்காய்
மனங்கனிந்த நின்னருளே வேட்டு நின்றேன்.

# திருவானைக்காவின் இயற்கை எழில்

கலைவாணன் அப்புலிங்கம்

பாயிருள் கிழக்கு வாயிலின் கதவைப்
பரிவுடன் திறந்துவைத் தொளிரும்
ஆயிரம் கிரணக் கரங்களை நீட்டி
ஆதவன் பூசனை புரிய
தாயினும் சாலப் பரிந்தருள் சுரக்கும்
தண்புன லதன் திருவுருவ
மாயிதோ ! நிற்கும் மாதிடப்பாக
மாம்பெருங் கடவுளைக் காணீர் !

உமையவள் கந்த னுடனணை ந் திருக்கும்
ஒப்பிலா அற்புதக் கோலத்
தமைவினை விளக்கும் ஆன்ற கொள்ளிடத்தோ
டான காவிரியத னிடையே
சமயமஞ் சனப்பூம் பொன்னியும் மிக்க
சதுருடன் இல்லறத் திடையே
நமையெலாம் ஊக்கும் நளினம் இவ்வூரின்
நதிகளும் காட்டுதல் பாரீர் !

அடுத்ததோர் பூசைக் கருள்திரு வுருவத்(து)
அலங்கரித் திடுவதற் கென்றே
தொடுத்தபூச் சரங்கள் தோளினில் சுமந்த
தொண்டர்தம் குழுவென மலர்க
ளொடுத்தலை நிமிர்ந்த கொன்றையம் தருக்கள்
ஓங்கிஎங் கெங்கும் நிற்பதனல்
மடுத்திடல் தெய்வ மணத்துடன் வாச
மலர்மணக் கின்றதும் நுகரீர் !

ஆற்றல்கொண் டெழுந்தீ யாகில்எந் தாய்தொட்
டணைத்திடத் தகாது (உ)வந்தாடும்
காற்றெனில் கூடிக் களிப்புறக் கடிதாம்
கடுவளி தொடவரி திம்மண்
ஏற்றணைத் திடமா செய்திடும் என்றிங்
கினிய தண்ணீர் தனுருவில்
ஊற்றெடுத் தெந்தை உதவிடப் புகுந்த
ஊர்ச்சிறப் போதிடற் கெளிதோ !

வெள்ளிவெண் கோட்டு வேழமொன் றென்றே
வேண்டி வந்தரும்புன லாட்டக்
கொள்ளரும் பதம்முன் கொடுத்தனன் தெய்வக்
குறியினும் சிவமெனும் கருணை
வள்ளலென் றாசை உள்ளம்முன் தூண்ட
வான்முகில் வேழமோர் கோடி
கொள்ளிடப் புதுநீர் கொணர்ந்திதோ கோயில்
கோபுரக் கும்பநீ ராட்டும்.

தக்கசெங் கனியாம் அக்கமா மணியின்
தாழ்வடம் சூழ்திரு மேனி
புக்கதோர் பத்திப் பரவசத் தாக்கில்
புளகமுற் றிலைக்கரம் குவித்துத்
திக்குடை புனையும் திகம்பரக் கோலத்
தெய்வீகச் சம்பு மாதவர்கள்
சொக்கி நிற்பதனால் சிவமணங் கமழும்
சோலை இந்நாவலங் காடு.

பூம்புனல் தவழும் பொன்னி வெண்மணலில்
பொலியுமாம் பொழில்களில் யாண்டும்
மாம்பல மரங்கள் தாம்சிவ லிங்கம்
ஆனதன் கிளைக்கரம் தாங்கும்
தீம்பழங் களும்ஏன் ? தேங்கிஆங் கதனுள்
திகழ் விதை யதும் சிவலிங்கம்
ஓங்குமிக் காவைக் குள்உள வெல்லாம்
உண்மையில் ஆம்சிவ லிங்கம்.

ஒள்ளெரிச் சுடர்ஓர் ஆயிரம் துள்ள
உதயகா லப்பெரும் பூசைக்(கு)
உள்ளுவப் புடனிவ் உலகெடுத் திடத்தன்
ஓதிரு கரத்தினும் தாங்கற்(கு)
அள்ளிடும் அகிலக் கோயிலின் புதிய
அடுக்கு தீபத்தினைப் போல
முள்ளில வத்தின் கொம்பெலாம் பூக்கள்
முறுவலிக் கின்றதோர் விந்தை.

விந்தையில் புனைவோர் சிந்தையின் தெளிவை
விளக்கும் வெண்ணீற் றொளிபோலும்
நந்தன வனத்து நந்தியா வர்த்த
நளிர்மண மலர்பல விரியும்
வந்ததைத் தனக்கே சொந்தமென் றணையும்
வாழ்வினால் சைவ மங்கையர் தம்
சொந்த இல்லதுவாம் விந்தையில் முல்லைச்
சூழலில் சொலித்திடும் கொல்லை.

சிலம்பிசெய் பந்தர்ச் சிறப்பினுக் கீடாய்ச்
சிவமுயர்ந் தோங்கிடும் செழியர்
குலந்தனில் பிறப்பைக் கொடுத்தருள் புரியும்
குழைனிணைத் தாமும் மேற்கொண்டு
நலம்பெரும் கருத்தில் நாகண வாயும்
நல்லிசைக் குயிலொடு கிளியும்
கலந்துற வாடிக் கவிமழை பொழியக்
கைகொடுத் துதவும் வெண்ணுவல்.

அறுத்தெடுத் தமுதோ(டு) அடியவர்க் கூட்டும்
ஆதுரத் தோடுஅழைத் தேவ
மறுத்திடத் துணியா மனத்துடன் தனதோர்
மகனுடல் தனைச்சமைத் தெடுத்துச்
சிறுத்திருத் தொண்டர் பெருமனைக் கரசி
செங்கரத் தேந்தியுள் துயரம்
பொறுத்தி ருப்பதுபோல் செம்பருத் திகள்தம்
பூக்களைக் கொம்பின்வாய் பொழியும்.

குருவடி வாய்முன் பரமசிவம் அருள
குருந்தடி யதில் மனம் குழைந்து
திருவடி தீட்சை பெறும்மணி மொழியார்
தெய்வீகப் பெருநிலைக் காட்சி
அருமையை விளக்கும் ஆவல் மீதுற்ற
தால்வரும் செந்தமிழ்ப் பொன்னி
தருபுனல் படவெந் தழலறிந் தாகம்
தளிர்த் திடும் மேட்டினில் துவரை.

அவரையும் புடலும் ஆன்றெ ழும்பீர்க்கும்
ஆடிமென் காற்றினில் அழகுக்
கவரி நின்ருட்டக் கனிவுடன் தென்னைக்
கரங்கொடு விசிறிட முல்லை
அவனியில் தாழா தறக்கொடி எடுக்க
அரஹரா என்ற புள்ளரவம்
சிவபுரத் திடையும் சென்றெதி ரொலிக்கச்
செய்வதிச் செந்தமிழ்க் காவை.

குளிர்புனல் உருவம் கொண்டு வந்தருளக்
கோயில் கொண்டி ருக்கு மாண்டவனை
ஒளிர்இதழ் முல்லை உடுக்களைத் தூவி
உம்பர்கள் அருச்சனை புரிய
களிமிகும்பூத கணங்களோர் கோடி
கார்முகில் உருவில்நின் ருங்கே
வளியில் நின்ருடும் தெளிவிலாக் கூத்துஎன்
வாய்ச்சொலும் வார்த்தையுட் படுமோ ?

மாசுளத் தறியா மாண்புடைச் சைவர்
மனத்தெழில் விளக்க மெய்எங்கும்
பூசுவெண் ணீற்றின் புண்ணியப் பொலிவைப்
புலிக்குணர்த் திடுவதே போலும்
தேசுடைக் கனிந்த பூசணிக் கொல்லைத்
திடர்ப்புறத் தெங்கனும் கிடைக்க
வீசுமென் காற்றில் வெண்டை கைகூப்பி
வினயமோ டதனரு கிருக்கும்.

சித்தம் முற்றிலுமே சிவமுறப் பெற்ற
சீவியப் பேறென வளர்ந்த
கத்தரிச் செடியின் காயெலாம் பார்க்கும்
கண்வழிச் சிவநினைப் பூட்ட
ஒத்திணை ந் திழையும் பாகலின் பசிய
உருத்திராக் கம்பல புனை ந்த
கொத்தவரைகை கூப்பிடும் பத்தர்
கூட்டமே போல்வதும் காணீர்.

ஏற்றவர்க் கெதிராள் ஏவல்கேட்டு என்றும்
இணையடித் தொண்டு செய் திடவே
மேற்றிசை வாயில் மேட்டில் எம்இறைவன்
மேனி ஊர்ந் திடும்அரி விடைதன்
மாற்றில் பொன் னரங்க மத்தியில் துயிலும்
மாண்பினைக் கண்டலைக் கையால்
போற்றிடும் பொன்னிப் போக்கினில் தோய்ந்த
புவிமகள் குழைந்திடு கின்ருள்.

பேதுளும் சில வீண் பேய்க்குணத் தவர்தம்
பிழைசெயும் சிறுமதிப் பிரிவு இங்(கு)
ஏதும் இல்லாமல் இவ்வுலகு உழைப்பின்
ஏற்றமும் தூய்மையும் காணத்
தோதுசெய் பவர்போல் துணைக்கிரண் டுஏறு
துடிப்புடன் நடக்க தூமறைகள்
ஓதுவார் எல்லாம் உளைய நஞ்செய்யில்
உழுந்திருத் தொண்டுடைத் திவ்வூர்.

காழியின் புனிதக் கான்முளையதன்பூங்
காலடித் தொடர்பில்வந் தவரும்
ஆழியில் கல்தூண் அதைப் புணையாக்கும்
அப்பர்தம் சீடரும் தம்முள்
தாழிரும் புனல்சூழ் தமிழ்ப் புகலூரில்
தம்மிடைப் பணிந்த அக்காட்சிச்
சூழலைக் காணவச் சூழ்ந்தநன் செய்க்குள்
சூலுளைநெற் பயிர் விளக்கும்.

இருவினை ஒத்துஉள் மலபரி பாகம்
எய்திய சக்தி நிபாதர்
திருவுள முறுமெய்த் தெளிவெனப் பொன்னித்
திரைக்கரம் தீண்டவும் குழைந்த
உருவுடைப் பரந்த மருத மண்ணகத்தின்
ஊடெழுந் தோங்கு பைங்கூழின்
பெருமையில் பசந்த காவையின் புகழைப்
பேசஎன் நாத்திற முடைத்தோ!

கற்ற பௌதீகம் சுற்றி வந்தறிவுக்
கைகுவித் தேத்திடச் சிறந்து
மற்றுமிங் குள்ள மண்முதல் நான்கில்
மடுத்துஉயிர் களித்திட வென்றே
உற்ற தண்ணீரின் உருவினில் தனக்கென்(று)
ஒன்று மில்லாப் பரசிவமே
பற்றுடன் அமர்ந்த பவித்திர மதற்கிப்
பாரினில் ஈடிணை உளதோ?



இடக்கையிலே ஓலைக்கூடை. வலக்கையிலே குழந்தை இவற்றுடன் சதுர பாதத்தில் நிற்கும் அழகே வடிவான குறத்தி. மூன்றும் பிரகாரம் (குறத்தி மண்டபத் தூணில்) உள்ள சிற்பம்.



இவ்வுருவத்திலே முடிமுதல் அடிகாணும் அக்கால அணிவகைகள் அழகு செய்கின்றன. முகத்திலே ஒருவகைக் களையோடு நிற்பதைப் பாருங்கள். முடியை அடுக்கடுக்காக முடிக்கும் முறை இச்சிற்பத்தின் தனிச் சிறப்பு.

# போற்றி போற்றி

சௌந்திரம் கைலாசம் அவர்கள்.

**1**

கடந்ததாய்ச் சிறக்கும் அந்தக் கடவுளை மறக்கும் வாழ்க்கை
அடர்ந்ததோர் இருட்கா டாகும்; அல்லலே வருவா யாகும்
கிடந்தது கிடக்க ஞானக் கிறுக்கதே பிடிக்க என்று
முடிந்தது யாவும் செய்ய முனைந்தனை போற்றி போற்றி!

**2**

புலன்வழிச் சென்று சென்று புரள்வதோ? பொய்மைச் சேற்றை
நிலையென எண்ணி எண்ணி நெறிவதோ? அகங்கா ரத்தின்
அலையெனப் பொங்கிப் பொங்கி அழிவதோ? துரியா தீத
மலையென இருவா என்று வாய்மலர்ந் தருள்வாய் போற்றி!

**3**

வேறுவே றென்று பேசிப் பொழுதினை விரயம் செய்யும்
தாறுமா றனபோலித் தத்துவம் தன்னை விட்டு
மாறுமா(று) நன்று தந்த சங்கரர் மலர்த்தாள் பற்றி
ஏறுவா கரையென் றெம்மை ஈர்த்திடும் துரையே போற்றி!

**4**

பலகிளை காட்டும் பேற்றைப் பரம்பொருள் உண்மை சொல்லி
உலகினைத் துயிலெழுப்ப உதித்தசங் கரர் கொடுத்த
விலையினை அறியா ரான விளக்கினை ஏற்றி, மாய
வலையினில் வீழா தெம்மைக் காத்திட வந்தாய் போற்றி!

**5**

வயதினில் சிறியா ராக வாழ்ந்திடும் போதே, தெய்வத்
தயவினில் பெரியா ராகத் தனபுத்த சங்கரர மைத்த
நயனுடைப் பீட மொன்றின் ஞானநாய கனே! கல்விப்
பயனுடை யவனே! வைய பாதுகா வலனே போற்றி!

**6**

அன்னையார் தவத்தி னாலே அவதரித் தவனே! இந்தச்
சென்னையார் காணவந்த செழுங்கருணைக் கடலே தேவே
தன்னையார் என்று கண்ட தலைவனே! நாடி வந்திங்
குன்னையார் கண்டா லும்நெக் குருகுவார் உண்மைதானே!

7

நான்என விதிவிலக்கா ? நைந்துநைந் துருகிப் போனேன்
தேன்எனச் சிந்துஞ் சொல்லில் சிந்தையே குளிர லானேன்
மான்எனத் துள்ளி ஓடும் மனமது குவியப் பெற்றேன்
ஏன்எனக் கேட்டால் மற்ருேர்க் கெவ்விதம் சொல்வேன் நானே !

8

மொழியதும் மனமும் மெய்யும் கடந்துறை முதல்வன் தன்னைத்
தொழுதிட நம்மை யெல்லாம் தூண்டியே பழைய பாவக்
குழியிலே வீழா வண்ணம் குறுக்கிலே வேலி கட்டும்
விழியதில் உள்ள இந்தச் சக்தியை விளக்கப் போமோ !

9

பாவடிவில் மொழியை வைத்தேன் பார்புகழும் காஞ்சி பீடச்
சேவடியில் விழியை வைத்தேன் சிந்தினேன் நீரைத்தானே !
நோவடியில் பிறக்கும் ஞான நோக்குதவும் நின்முன் ஞலே
ஆவடியில் கன்ருய் ஆனேன் அருட்பாலுக் கேங்கினேனே !

10

திகழ்வேன்நான் மேலும், மேலும் திருந்தியே நித்தம் உன்னைப்
புகழ்வேன்நான் நெஞ்சில் பக்தி பொருந்திய துன்பம் வேரோ(டு)
இகழ்வேன்நான் ஞாஞ மிர்தம் அருந்துவேன் ; மாயக்கள்ளை
இகழ்வேன் நான் ஏற்றித் தள்ளி, அருளுவாய் எனக்கு நீயே !

# பொதுக் கட்டுரை

# பழமொழியும் சமய உண்மைகளும்

பேராசிரியர் பெருமான், M.A.

தமிழ்ப் பழமொழியிலுள்ள சமயக் கருத்துக்களையும் மெய்ப்பொருள் உண்மைகளையும் இங்கு ஆராய்வோம்.

தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு பாசம் எனப்படும். உலக வழக்கிலுள்ள தாய்ப்பாசம் என்னும் சொல் இங்கு நோக்கத்தக்கது. ஒருவன் தன் உறவினர்பால் கொண்டுள்ள தொடர்பு அன்பு எனப்படும். இரு நண்பர்களுக்குமிடையே உள்ள தொடர்பு நட்பு எனப்படும். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பு காதல் எனப்படும். எனவே அவர்கள் காதலர்கள் எனக் குறிக்கப் பெறுகிறார்கள். அளவு கடந்த விருப்பத்தின் காரணமாக மனிதன் பொருள் மீது கொள்ளுவது பற்று. அறிவு சிறிது மயங்கிய நிலையில் மக்கள்மீதும் பொருள் மீதும் கொள்ளுகின்ற தொடர்பு ஆசை. அறிவு பெரிதும் மயங்கிய நிலையில் கொள்கின்ற தொடர்பு மோகம் எனப்படும். ''ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்'' என்பது பழமொழி. பிறர் பொருள் மேல் கொள்கின்ற விருப்பம் பேராசை. இறைவன் மக்கள்பால் பொழிகின்ற தெய்வீக உணர்ச்சி அருள் எனப்படும். 'தெய்வ அருள் இருந்தால் செத்தவனும் பிழைப்பான்' என்பது பழமொழி. மனிதன் இறைவனுக்குச் செலுத்துகின்ற அகங் கனிந்த உணர்ச்சி பக்தி எனப்படும். பக்தி உள்ளவன் பக்தன். இறைவன்பால் அச்சத்துடன் செலுத்தப்படுகின்ற பக்தி பயபக்தி எனப்படும். 'பக்தி இருந்தால் முக்தி கிடைக்கும்' என்பது பழமொழி.

மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள ஆன்மீக உறவை விளக்குவது சமயம். அரிசியையும் பச்சைக் காய்கறிகளையும் உண்பதற்கு ஏற்ற முறையில் பக்குவப்படுத்தும் கலையைச் சமையல் என்று குறிப்பிடுறோம். 'சமை' என்னும் சொல் பக்குவப்படுத்து என்னும் பொருளைக் குறிக்கும். 'சமை' அடிப்படையாகப் பிறந்த சமைதல் என்னும் சொல் அமைதல், ஆயத்தமாதல், பூப்படைதல், பக்குவமடைதல், முதலிய பொருளைக் குறிக்கும். 'சமை' என்னும் அடிச் சொல்லிலிருந்து தோன்றியதுதான் சமயம். அரிசியையும், பச்சைக் காய்கறிகளையும் பக்குவப்படுத்தும் கலைக்குச் சமையல் என்று பெயர். அதுபோலவே விலங்குணர்ச்சியுள்ள கொடிய மனிதனைத் தெய்வீகப் பண்புள்ள சான்றோனாகப் பக்குவப்படுத்தும் ஆன்மீகக் கலைக்குச் சமயம் என்று பெயர். சுருங்கக்கூறின் பொல்லாதவனை நல்லவனாக மாற்றுவது சமயம். மருள்நெஞ்சத்தையும் இருள் நெஞ்சத்தையும் அருள் நெஞ்சமாக ஆக்குவது சமயம். பகைமையைப் போக்கி ஒற்றுமையை உண்டாக்குவது சமயம். கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள ஆன்மீக உறவாகிய பக்தியை மனிதனின் உள்ளத்தில் ஊட்டுவது சமயம். 'எம்மதமும் சம்மதம்' என்பதே சமயத்தின் குறிக்கோள்.

இறைவன் ஒருவனே என்னும் அடிப்படைக் கொள்கை கடவுள்மீது நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோருக்கும் உடன்பாடாவது. இறைவனைப்பற்றிக் குறிப்பிடுகின்ற பழமொழிகள் யாவும் இறைவனை ஒருமையில் குறிப்பிடுகின்றன.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது
அவன் அசையாமல் அணு அசையாது
அவன் அவன் எண்ணத்தை ஆண்டவன் ஆக்கினாலும் ஆக்குவான், அழித்தாலும் அழிப்பான்.
அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா?
எல்லோரையும் காக்க ஓர் ஈசன் இருக்கிறான்.
ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்
தெய்வமே துணை
தெய்வமே துணைகொள் தேகம் அநித்தியம்
சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்க மாட்டான்

சத்தியத்திலே சாமி சாட்சி என்கிற சத்தியம் பெரிது
அரசன் அன்று கொல்லுவான் தெய்வம் நின்று கொல்லும்

முதலிய பழமொழிகள் இறைவன் ஒருவனே என்பதைத் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்துகின்றன. இறைவனைப்பற்றியும் நிலைத்த உண்மைகளைப் பற்றியும் அறிவதே மெய்ப்பொருள்.

தமிழர் கண்ட சமயமும் மெய்ப்பொருளும் இரண்டறக் கலந்திருக்கின்றன. அவ்விரண்டையும் சேர்த்து ஆராய முடியுமே தவிரத் தனித் தனியாய்ப் பிரித்து ஆராய இயலாது.

இறைவன் ஒருவனே ஆனால் பெயர்கள் பல. குறிக்கோள் ஒன்றே ; ஆனால் நெறிகள் பல. வீட்டிலுள்ள மின்சாரம் ஒன்றே ; ஆனால் வெளிப்படும் முறைகள் பல. விளக்கின் வழியாக மின்சாரம் வெளிப்படும் போது ஒளியாகக் காட்சியளிக்கிறது. வானொலிப் பெட்டி வாயிலாக வெளிப்படும் போது இசையாகக் காட்சியளிக்கிறது. விசிறிகள் மூலமாக வெளிப்படும்போது வெம்மையாகத் தென்படுகிறது. மின்சாரத்தின் வெளிப்பாடுகள் பல வடிவங்களில் இருந்தாலும் மின்சாரம் ஒன்றே என்பதை நாம் மறக்கவோ மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அதுபோல அருள், ஆற்றல், அறிவு முதலிய பலவேறு வடிவங்களில் கடவுள் வெளிப்பட்டாலும், கடவுள் ஒருவனே என்னும் பேருண்மையை நாம் உள்ளத்தில் நன்கு பதிய வைத்தல் வேண்டும். ‘அரியும் சிவனும் ஒண்ணு, அதை அறியாதவர் வாயிலே மண்ணு’ என்பது பழமொழி.

உலகம் தோன்றுவதற்கு மூலகாரணமானவன் இறைவன். இறைவனுக்கு ஆதி என்னும் பெயரும் உண்டு. ‘ஆதி’ என்னும் சொல் தொடக்கத்தைக் குறிக்கும். சாகப் போகிற காலத்தில் சங்கரா, சங்கரா என்பதைவிட வெள்ளம் தலைக்குமேல் ஓடும் போது அணைபோட முயல்வதைவிட, ஏற்ற காலத்தில் ஆண்டவனைத் தொழுதல் வேண்டும் என்னும் சமய நீதியை நம் பழமொழி உணர்த்துகிறது. ‘ஐந்து வயதில் ஆதியை ஓது’ என்பதே அந்தப் பழமொழி. ஒரு கருத்தை அறிவதற்கும் உணர்வதற்கும் உரிய காலமும் ஏற்ற பருவமும் அதுவேயாகும். அதாவது ஐந்து வயது. ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?’ ‘ஐந்தில் அறியாதவன் ஐம்பதில் அறிவானா’ இந்தப் பழமொழிகள் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

சமயம் என்பது கல்வியின் ஒரு பகுதியன்று. அது வாழ்க்கையின் அடிப்படையான நெறி. வழக்கறிஞர் வழக்குகளையும் சட்டத்தையும் அறிந்திருந்தால் போதும். அவர் வழக்கறிஞராகத் தொழில்புரிந்து வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற அவசியம் இல்லை. அதைப்போலவே ஏனைய துறைகளில் உள்ளவர்களும் தத்தம் துறைகளைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தால் போதும். அவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்று அவசியம் இல்லை. ஆனால் சமயம் அவ்வாறன்று. சமயம் என்பது வெறும் ஏட்டு நெறியோ அறிவு நெறியோ அன்று ; அது வாழ்க்கை நெறி. சமயமும் வாழ்க்கையும் இணைந்தே செல்லவேண்டும். இல்லாவிட்டால், ‘படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில், ‘படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோவில்’ என்னும் பழமொழிகளுக்கேற்ப வாழ்க்கை அமைந்துவிடும்.

தமிழகத்தில் தோன்றிய சமயப் பெரியார்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். இவர்களைச் சமய குரவர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடுவதுண்டு. இறைவனை ஆண்டவனாகவும் தம்மை அடிமையாகவும் கருதி உழவாரப் படைகொண்டு உள்ளன்புடன் தொண்டு புரிந்தார் அப்பர். ‘என் கடன் பணிசெய்து கிடப்பதே’ என்னும் உயர்ந்த கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர் அப்பர். அவர் பின்பற்றிய நெறி அடிமை நெறி அல்லது தாசமார்க்கம். இளம் வயதில் இறைவன் அருள்பெற்றவர் ஞானசம்பந்தர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய பெருமை ஞானசம்பந்தரைச் சாரும். அவர் இறைவனைத் தந்தையாகவும்

தம்மை மகனாகவும் கொண்டு ஒழுகினார். அவர் கடைப்பிடித்த நெறி தந்தை மகன்மை நெறி அல்லது சத்புத்திர மார்க்கம். சுந்தரர் இறைவனைத் தம் தோழனாக மதித்து ஒழுகினார். 'ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர் உரிமையுடன் பாடுவது இங்கு நோக்கத்தக்கது. அவர் பின்பற்றிய நெறி தோழமை நெறி அல்லது சன்மார்க்கம். அறிவின் வடிவமாக விளங்கும் இறைவனை அறிவு நெறியில் வழிபட்டவர் மாணிக்கவாசகர். அவர் இயற்றிய திருவாசகத்தின் இனிமையை இராமலிங்க அடிகள் உளம் உருகிப் பாடுகிறார்.

> வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
> நான்கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே
> தேன் கலந்து பால் கலந்து செழுங் கனித்தீம் சுவை
> கலந்து என்
> ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி. மாணிக்கவாசகர் பின்பற்றிய நெறி அறிவு அல்லது ஞானமார்க்கம். அப்பர், சம்பந்தர், சுந்தரர் மாணிக்கவாசகர் முதலிய நால்வரும் முறையே அடிமை நெறி, தந்தை மகன் நெறி, தோழமை நெறி, அறிவு நெறி ஆகிய நெறிகளைப் பின்பற்றியவர். நாலு பேர் போன வழியில் நாமும் போக வேண்டும் என்பது பழமொழி. நாலுபேர் என்பது சமய குரவர் நால்வரைக் குறிக்கும். அந்த நால்வரும் போன வழி நல்ல வழி.

பற்று இருவகைப்படும். ஒன்று அகப் பற்று; மற்றொன்று புறப்பற்று. நான் என்பது அகப்பற்று. 'நான் உயர்ந்தவன்' நானே தலைவன் என்பவை அகப்பற்றிலிருந்து எழுந்த ஆணவமொழிகள். 'என் பொருள், என் வீடு, எனது சொத்து முதலியவை புறப்பற்றுக் காரணமாக எழுந்த ஆசைமொழிகளாகும். இவ் விருவகைப் பற்றையும் செருக்கையும் அறவே ஒழித்தவன் உயர்நிலையை அடைவான்.

> யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்.

என்று குறள் பாடுகிறது. இருவகைப் பற்றையும் மூவகை ஆசையையும் அறவே துறந்தவனே துறவி. மனத்தை அடக்கிய துறவியுடன் உலகத்தையே வென்ற வேந்தனை ஒப்பிட்டுப் பார்த்தால் வேந்தன் துறவிக்கு முன்பு துரும்பாகக் காட்சியளிப்பான். துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது பழமொழி.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் நம்முன்னோர் உறுதிப் பொருளாகக் கருதினர். ஒருவன் வீடு பேற்றை அடைய தவம்புரியவேண்டிய தில்லை. காவி உடை அணிந்து கொண்டு கானகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. பற்றை அறவே நீக்கிவிட்டால் வீடுபேறு தானாகவே கிடைக்கும். இந்தப் பேருண்மையை 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் பழமொழி நன்கு தெளிவாக்குகிறது.

'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்பது அனைவரும் நன்கறிந்த பழமொழி. காற்று அடிக்கும் போதே நெல் முதலிய தானியங்களை நன்றாகத் தூற்றிக் கொள்ள வேண்டும் என்பது பழமொழியின் சொற்பொருளாகும். வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; வாய்ப்பை நழுவ விடக் கூடாது, என்பது இதன் உட்பொருள். ஆன்மீகக் கண்கொண்டு இந்தப் பழமொழியை ஆராய்ந்தால் இதன் சொற்பொருள் உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் நுண்பொருள் புலனாகும். காற்றுள்ள போது நெல்லைத் தூற்றினால் தூவிய நெல் மட்டும் நிலத்தில் தங்கிவிடும். பதர், தூசி முதலியவை காற்றோடு போய் விடும். அதைப் போலவே ஒருவன் தன் மூச்சுக் காற்று உள்ளபோதே காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களையும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் போக்கிக் கொள்ள வேண்டும். நெல்லைத் தூற்றும்போது நெல் மட்டும் தங்கிப் பதர் நீங்குவதுபோல் தூய அறிவு மட்டும் நிலைபெற்று நின்று அறியாமை முதலியவை நீங்கிவிடும். காற்று நின்று விட்டால் தூற்ற முடியாது. மனிதனின் மூச்சுக் காற்று நின்று விட்டால் அவன்

தன்னிடமுள்ள குற்றங்களைப் போக்கிக் கொள்ள இயலாது. இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான் என்பது மற்றொரு பழமொழி. ஒருவனுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால் அவன் எல்லாவற்றையும் கேட்பான் என்று நாம் இந்தப் பழமொழிக்குப் பொருள் கூறுகிறோம். இந்தப் பழமொழியை 'இருக்க இடம் கொடுத்தால் படுக்கப்பாய்க் கேட்பான்'. 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது', ஆகிய பழமொழிகளுக்கு இணையாகக் கருதுகிறோம். இந்தப் பழமொழியை ஆழ்ந்து நோக்கினால் இதன் ஆன்மீக நுண் பொருள் தெளிவாகும். இறைவனுக்கு நம் உள்ளத்தில் இருக்க இடம் கொடுத்தால் அவன் நம் அறியாமையைப் (மடம்) பிடுங்குவான், என்பதே இப் பழமொழியின் மெய்ப்பொருள். அத்தகைய பழமொழிகள் இன்னும் பல இருக்கின்றன. இவற்றைத் தத்துவக் கண் கொண்டு ஆராய்ந்தால் இவற்றின் சொற் பொருள், உட்பொருள் ஆகியவற்றைக்கடந்த நிலையில் மெய்ப்பொருள் புலனாகும்.

ஆற்றல் இருந்தால் செய் இயலாவிட்டால் சும்மா இரு என்று சொல்வதற்கு பதிலாகச் 'சத்தியிருந்தால் செய் இல்லாவிட்டால் சிவனே என்று இரு' என்னும் பழமொழியைப் பயன்படுத்துகிறோம். பெண்ணின் வடிவாக விளங்கும் சக்தி இயக்குகின்றாள். ஆணின் வடிவத்தில் இருக்கும் சிவன் இயங்குகின்றான். பெண்மையையும் தாய்மையையும் போற்றும் வகையில் அமைந்துள்ள இந்தப்பழமொழி சிலேடை நயத்துடன் சிறந்து விளங்குகிறது.

பாரதியார்,

நல்லதோர் வீணை செய்தே—அதை
நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?
சொல்லடி சிவசக்தி—எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.

என்று சிவனையும் சக்தியையும் இணைத்துப் பாடுகிறார்.

தமிழில் சமயத்தைப் பற்றிப் பழமொழிகள் மிகுதியாக இருக்கின்றன. இவையாவும் சிந்தனையின் சாரமாக அறிவின் பிழிவாக அமைந்து கற்போருக்குப் பெருவிருந்து அளித்த வண்ணமிருக்கின்றன. இந்தப் பழமொழிகளை நன்கு அறிந்து தெளிந்து பயனடைதல் தமிழரின் தலையாய கடமையாகும்.

## அகிலாண்டநாயகி மாலை

பேயொடு நடிக்கும் பித்தனே யென்றோ
பெருங்கதி யிலியிவ னென்றோ
தாயொடு தந்தை யில்லவ னென்றோ
தம்பிரா னொருதிரு மேனி
நீயொரு பாதி நின்முனோர் பாதி
நிலவுறக் கொண்டது நன்றே
காயொரு வாத்தென் பொலிதிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (89)

# திருவானைக்கா திருப்பணி

ஜி. வரதராஜன், பி. ஏ., தலைவர், ஆனைக்கா அறங்காவலர் குழு.

திருவானைக்கா ஒரு சிறந்த புண்ணிய தலம். பஞ்சபூதத் தலங்களுள் இது அப்புத்தலமாகும். அம்பிகை ஞானுபேதேசம் பெற்றமையால் இது ஞானதலம் எனப்பெறும். ஆனை வழிபட்டமையால் ஆனைக்கா எனப்பெற்றது. தேவார ஆசிரியர்கள் மூவராலும் பாடப்பெற்ற பெருமையுடையது இது. பின்னே வந்த காளமேகப் புலவர் இங்கேதான் அருள்பெற்ருர்.

இனி, ஆனையும் சிலந்தியும் இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானை வழிபட்டுப் பேறுபெற்றன என்பது புராணவரலாறு. இச்சிலந்தியே மறுபிறப்பில் சோழர் வம்சத்தில் தோன்றிய கோச்செங்கண்ணுன் என்று கூறுவர்.

"சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்சென்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங்க ணுனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனுரே."

என்ற அப்பர் சுவாமிகள் தேவாரத்தால் இனிது விளங்கும்.

"தாரமாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரினின்றடி போற்றி நின்மலா கொள்ளென வாங்கே
ஆரங்கொண்ட வெம்மா னைக் காவுடை யாதியை நாளும்
ஈரமுள்ளவர் நாளும் எம்மையு மாளுடையாரே"

என்ற சுந்தரர் வாக்கால் இவ்வூர்ப் பெருமான் சோழன் காவிரியில் நீராடும் பொழுது நழுவி விழுந்த முத்து மாலையை அவன் வேண்டியவண்ணம் திருமஞ்சனக் குடத்தின் மூலமாக ஏற்றுக்கொண்ட செய்தி புலப்படும். "வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவான்" அல்லவா!

அடுத்து, தீர்த்தத்தாலும் சிறப்புடையது திருவானைக்கா. இங்கு நவதீர்த்தங்கள் உண்டு.

அவையாவன;

"காமரு பிரம தீர்த்தம் இந்திர
புட்கரணியே சம்பு புட்கரணி
தேமலி இராமதீர்த்தமே சீதமத்
தீர்த்தமே அக்கினி தீர்த்த
மாம கத்தியநற்றீர்த்தமே சோம
தீர்த்தமே அலரியின் தீர்த்தம்
வாம மேக லையாய்மேலவாந் தீர்த்தம்
மருவிய பெயரிவை காண்டி"

—திருவானைக்காப்புராணம்

அலரி—சூரியன்

தேவர் முனிவராதியோர் இத்தீர்த்தங்களில் நீராடி நன்மை பெற்றனர். ஆதலின் இத்தலம் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றிலும் விசேட மகிமையுடையது.

இத்துணைப் பெருமை வாய்ந்த தலத்தில் உள்ள கோயிலை முதன்முதலில் எடுப்பித்தவன் கோச்செங்கண்ணனுவான். சங்ககாலத்தரசன். அக்காலத்தில் இது செங்கல்லால் கட்டப்பட்டது. கருவறை ஆனைபுகா வாயிலாக அமைந்திருத்தலின் கோச்செங்கண்ணுன் பூர்வஜென்ம வாசனையோடு செய்துள்ளான் என்பது விளங்குகிறது. இரண்டாவது சுற்றில் தென்புறமுள்ள ஏழு சிலைகளைக் காணும்பொழுது, இம்மூலவர் எழுந்தருளியிருக்கும் விமானத்தை 9ஆவது நூற்றுண்டில் வாழ்ந்த ஆதித்த சோழனுல் கருங்கல்லால் கட்டப்பட்டிருத்தல்வேண்டும் என்பது புலனுகிறது. இரண்டாவது பிரகாரமும் மூன்ருவது பிரகாரமும் கி. பி. பதின்மூன்ருவது நூற்ருண்டில் எழுப்பப்பட்டவை. இவை சோழர் திருப்பணியாகும். மூன்ருவது பிரகாரத்தை மேல்புறம் அலங்கரிக்கும் கார்த்திகை கோபுரமும் கீழ்ப்புறம் அலங்கரிக்கும் சங்கமேசுரர் கோபுரமும் குலோத்துங்கன் காலத்தவை. நான்காவது பிரகாரம் 13ஆவது நூற்ருண்டின் இறுதியில் தோற்றுவிக்கப்பட்டது. நான்காவது பிரகாரத்தை அலங்கரிக்கும் கீழைக் கோபுரம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுல் எழுப்பப்பெற்றது. இது சுந்தரபாண்டியன்



**அம்மன் கோவில் சந்நிதி வலதுகைப் பக்கத் தூணில் ஏகபாத மூர்த்தி**

அயன் அரன் அரி என்னும் மூன்றுருவங்களும் மூவர் வாகனங்களும்,
மூவுருவும் ஒருருவாய் நிற்பதால் எப்படிச் சுமப்பது என்று எண்ணி நிற்கின்றன.

கோபுரம் என இன்றும் வழங்கப்பெறுகிறது. இக்கோபுரத்தை நிறைவு செய்தவர் போசளர். நான்காவது பிரகாரத்தில் மேல்புறம் உள்ள கோபுரம் கி.பி. 1435-ல் வசிட்டக் கோத்திரத்தைச் சேர்ந்த ஆதித்ய தேவன் என்பாரின் மகன் சந்திரபேந்திரன் என்பவர் கட்டினார் என்று கல்வெட்டுக் கூறுகிறது. இதை 'மல்லப்பன் கோபுரம்' என இப்போது அழைப்பர். விபூதிப் பிரசாதம் என்ற ஐந்தாவது பிரகாரம் சிவபெருமானால் சித்த வேடந் தாங்கி விபூதியைக் கூலியாகக் கொடுத்துக் கட்டப்பெற்றது என்று தலவரலாறு கூறும். இது திருநீற்றுச் சுந்தர பாண்டியன் என்ற மன்னனால் பழுது பார்க்கப்பெற்றது என்று வடமதில் சுவரில் காணப்பெறும் அடையாளத்தினால் அறியப்பெறுகிறது. இங்குள்ள நான்கு வாயில்களும் 16, 17ஆவது நூற்றாண்டுகளில் தோன்றியிருக்க வேண்டும். வட திருவானைக்காவல் மூன்றாவது இராஜராஜன் இராஜேஸ்வரம் என்ற கோயிலை எழுப்பினான். அங்குள்ள ஐம்முகலிங்கம் மிகச் சிறப்புடையது. போசளமன்னர் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பெற்றன. கண்ணனூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த வீரசோமேசுரன் இக்கோயிலுள் நான்கு கோயில்கள் அமைத்தான் எனக் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன.

கோயில்கள் பலவற்றைப் பலர் பலகாலத்தில் கட்டியது போன்று மண்டபங்கள் பலவற்றைப் பலர் பலகாலத்தில் கட்டினர். சுவாமிகோயில் முன்னேயுள்ள உற்சவ மண்டபத்தைச் சதாசிவசுவாமி கட்டியதாகக் கூறப்பெறும். அதன் எதிரே வடபால் உள்ளேயுள்ள மண்டபம் இவரே கட்டியது தான். மூன்றாவது பிரகாரத்தில் வடகிழக்கில் உள்ள மண்டபம் குறுச்சேடை சேர்ந்த கோபாலய்யன், அவன் மகன் ஆன இரு "ஐஞ்சு சாதியார்" (தச்சர்குடி) கல்எடுக்கப்பட்டது, ஜம்புதீர்த்தத்தின் அருகில் உள்ள மண்டம், விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் நாடக சாலையில் நாட்டிய ஆசிரியனான வெங்கடேசுரய்யன் மகன் வைதியப்பய்யன் என்பவரால் கட்டப்பெற்றது.

இனி, நகரத்தாருள் தனவணிகரும் சிவ பக்தருமான கானாடுகாத்தான் திரு. சா. ராம. சித. சிதம்பரஞ்செட்டியார் அவர்கள் இக்கோயிலைப் புதுப்பிக்க எண்ணி 1900ஆம் ஆண்டில் திருப்பணி தொடங்கி 1908ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார்கள். சிறப்பாகக் கீழ்க்கண்ட திருப்பணிகள் நடைபெற்றன. இவருக்கு உறுதுணையாக இவரது மூத்த மகனார் திரு. சா. ராம. சித. ராம. இராமசாமி செட்டியார் அவர்கள் இருந்தார்கள்.

சுவாமி கோயில் கர்ப்பக்கிரகம், முதல் பிரகாரம், மூன்றாவது பிரகாரத்தில் எட்டு சிங்கக்கால் மண்டபம், அம்மன்கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், ஸ்தபன மண்டபம், மகா மண்டபம், முதல் பிரகாரம், இரண்டாவது பிரகாரத்தில் முன் மண்டபம் ஆகிய முழுவதும் கட்டப்பெற்றவை. மற்றும் இரண்டாவது மூன்றாவது பிரகார மதில்கள் பழுதுபார்க்கப்பெற்றன. இத் திருப்பணிக்குச் சுமார் 15 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கும் என்று தெரிகிறது. அதற்குப் பின்பு அவரது குமாரர்கள் திருவாளர்கள் சபாரத்தினஞ் செட்டியார், ஜம்புலிங்கம் செட்டியார், பழனியப்பச் செட்டியார், அண்ணாமலைச் செட்டியார் ஆகியோர் திருப்பணியைத் தொடர்ந்து 1950 வரை செய்து வந்தனர்.

பிறகு 1963-ல் திருச்சிராப்பள்ளிக்கே தந்தைஎன்றுபோற்றப்பெறுபவரும், ஒழுக்க சீலருமான திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்களின் தலைமையில் தனித் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு தற்போதைய திருப்பணி நடந்து 1970 ஜூலை மாதம் 5-ந் தேதி மகாகும்பாபிஷேகம் நடந்தேறியது. ஏழு பெரிய கோபுரங்களும் சிறிய கோபுரங்களும் திருப்பணி செய்யப்பெற்றன. ஆயிரக்கால் மண்டபம் மேல்தளம் போடப்பெற்றது. நான்கு தீர்த்தங்கள் தூய்மை செய்யப் பெற்றன. திருநீற்றான் மதில் மேல்புறமும், கீழ்ப்புறமும் திருப்பணி செய்யப்பெற்றன.

தென்புறம் ஒழுங்கு செய்யப்பெற்று வருகிறது.

1. இராஜகோபுரம்—கீழ் நீளம் 60 அடி, அகலம் 45 அடி. உயரம் 88 அடி 6 அங்குலம். செலவு ரூ. 97,500.

2. மல்லப்பன் கோபுரம்—கீழ் நீளம் $39\frac{1}{2}$ அடி, அகலம் 37 அடி, உயரம் 60 அடி 6 அங்குலம். செலவு ரூ. 50,200.

3. கார்த்திகைக் கோபுரம்—கீழ் நீளம் 62 அடி, அகலம் 52 அடி 6 அங்குலம், உயரம் 98 அடி 6 அங்குலம். செலவு ரூ. 1,48,400.

4. அரிவிட்டான் கோபுரம்—கீழ் நீளம் 35 அடி, அகலம் 23 அடி, உயரம் 68 அடி. செலவு ரூ. 31,900.

5. மணிமண்டபம் கோபுரம்—கீழ் நீளம் 23 அடி, அகலம் 22 அடி, உயரம் 46 அடி 6 அங்குலம், செலவு ரூ. 11,800.

6. சங்கரேசுரர் கோபுரம்—கீழ் நீளம் 43 அடி, அகலம் 35 அடி 6 அங்குலம், உயரம் 77 அடி. செலவு ரூ. 48,000.

7. சுந்தரபாண்டியன் கோபுரம்—கீழ் நீளம் 99 அடி, அகலம் 55 அடி 6 அங்குலம், உயரம் 135 அடி. செலவு ரூ. 2,00,000.

விமானங்கள் 13. செலவு : ரூ. 38,000.

ஆயிரக்கால் மண்டபம் செலவு ரூ. 56,900.

### தீர்த்தங்கள்

| | | செலவு ரூபாய் |
|---|---|---|
| சூரிய தீர்த்தம் : | ... | 5,400 |
| இந்திர தீர்த்தம் : | ... | 300 |
| ஜம்பு தீர்த்தம் : | ... | 700 |
| பிரம தீர்த்தம் : | ... | 700 |

கீழ் மதில் : நீளம் 1335 அடி, அகலம் 6 அடி, உயரம் 30 அடி. செலவு ரூ. 2,05,000.

மேல் மதில் : நீளம் 1425 அடி, அகலம் 6 அடி, உயரம் 30 அடி. செலவு ரூ. 1,37,500.

தெற்கு மதில் : நீளம் 2350 அடி, அகலம் 6 அடி, உயரம் 30 அடி. செலவாகிய தொகை ரூ. 65,000.

இன்னும் ஒரு சில மாதங்களில் கையிலுள்ள நிதியைக் கொண்டே தெற்கு மதில் திருப்பணி நிறைவேறிவிடும். வடக்கு மதில் திருப்பணிக்கு ரூ. 3·4 லட்சம் தேவைப்படுகிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பால் இத்தொகையும் வசூலாகி முழுத்திருப்பணியும் அன்னையின் அருளால் பூர்த்தியாகும். நிதி அளித்தோர்க்கும், உடல் உழைப்புத் தந்தோர்க்கும், அறிவு தானம் செய்தோர்க்கும் நன்றி.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

### அகிலாண்டநாயகி மாலை

இறையவன் வாமத் துறையுநீ தொழில்செ
யிமையவர் தருப்பணங் காட்ட
மறைவின்மற் றதனை நோக்கியவ் விறைவன்
வலப்புறத் தொருமடக் கொடிநன்
குறைவதென் னெனமற் றவனெடு பிணங்கே
லுற்றுநோக் கிடிற்பிழை யில்லான்
கறைமலி களத்தன் வளத்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (95)

# அகிலாண்டநாயகி அருட்பிரசாதம்

திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள், M.A., B.L.

ஆனைக்காவிற் குடிகொண்டிருந்து அவனி முழுதும் அருட்செங்கோல் ஓச்சிவரும் அருள் தெய்வமாகிய ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஆனைக்கா அண்ணலின் அற்புதமான ஆலயத்தின் திருப்பணிகள் முடிவுற்று 5–7–70 அன்று குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது. இத்தகையதோர் இணையற்ற வைபவம் இத் தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் ஏற்றமானதோர் இடம்பெற்றுவிட்டது என்பதில் ஐயமில்லை. இதன் திருப்பணிக் குழுவின் இணையற்ற தலைவராக இருந்து இரவு பகல் பாராது இடையறாது கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக உழைத்தும் பாடுபட்டும் ஒப்பற்றத் திருத்தொண்டு ஆற்றி வந்துள்ள உயர்திரு தி. மு. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், தமிழ் நாட்டில் 'ஆலயம் அமைத்த ஆன்றோர்கள்' (Temple Builders of Tamil Nadu) ஒரு சிலருள் ஒருவராகப் புகழ்பெற்றுவிட்டமை கண்கூடு. இக்குழுவில் அடியேனும் அங்கம் வகிக்கும் பேறு பெற்றிருப்பதும் அன்னையின் திருவருளாலேதான். இம்மகத்தான திருப்பணியில் பங்கு கொண்ட மக்கள் அனைவர்க்குமே இறைவியின் திருவருள் வாய்க்கப் பெறுதல் நிச்சயம்.

இக்கோயில் மிகமிகப் பழமை வாய்ந்ததாகும். சைவ நாயன்மார்களால் பாடப்பெற்ற பெருமையையுடைய கோயில். சங்கராச்சாரியசுவாமிகள் போன்றோரின் ஆன்மாக்களையும் ஈர்த்துப் பிணைத்துள்ளது.

"தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன்என்பார்கட் கின்னமுதை"

என இச்சிவபிரானை மணிவாசகர் பாடிப் பணிந்துள்ளார். ஊனொடும் உண்பவர்கட்கும், ஊனை விடுத்துண்பவர்கட்கும் ஒக்கவே அருள்வர் இப்பெருமான் என்று பாடியுள்ளார் திருஞானசம்பந்தர்.

"புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
பொதுப்பந்தர் அது இழைத்துச் சருகான்மேய்ந்த
சித்தியினால் அரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப் பெய்தார் திறலான் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை..............."

எனத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

அண்மையில் வாழ்ந்த அருங்கவிப் புலவர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ்நூல் ஒன்றும் முறையே பாடியருளியுள்ளார்கள்.

கோச்செங்கண்ணான் என்னும் சோழ மன்னர்க்குத் தண்ணருள் பாலித்த தயாநிதியாகியவள் அன்றோ எம் தயாமூலத்தன்மத்தின் தலைசிறந்த அன்னை அகிலாண்ட நாயகி? அரசன் இழந்த ஆபரணத்தைக் காவிரியில் தீர்த்தம் எடுத்த குடத்தின் வழியாகத் தான் பெற்று அணிந்த பீடுடையான் அன்றோ இப்பெருமான்?

ஆலயத்தின் சமையல் தொழில் புரிந்து வந்த சோழனாகிய காளமேகனுக்கு ஓர் இரவில் எதிர்பாராவண்ணம் தனது தாம்பூலப் பிரசாதத்தைத் தானாகவே வழங்கி அவனைத் தண்டமிழ்க்கவியிலும் தன்னிகரில் ஆசுகவி ஆக்கியவள் அல்லவா நம் அன்னை அகிலாண்ட நாயகி?

இவ்வாறு சர்வஜீவராசிகளையும் தடுத்தாட்கொண்டு அவற்றுள்ளும் ஒவ்வொருவரின் தகுதியும் பக்குவமும் நோக்கித் தண்ணருள் சுரப்பதே நம் தாயின் தனிப்பட்ட தன்மை. அதனாலன்றோ,

"ஆட் பாலவர்க்கு அருள் செய்யும் வண்ணமும்
ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை, கிளக்க வேண்டா"

என்று திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாய்மலர்ந்தருளி இருக்கின்றார்.

சுமார் இருபது ஆண்டுகட்கு முன்பு ஒரு நாள் அடியேன் திருச்சி ஜங்ஷன் மாடியிலுள்ள பிரயாணிகள் விடுதியில் தங்கியிருந்

தேன். அப்போது யான் சென்னையிலிருந்து திருச்சிக்கு வந்திருந்தேன். அன்று சாயங்காலம் ஆறுமணி சுமாருக்குத் திடீரெனத் திருவானைக்காப் பெருமானையும் அகிலாண்ட நாயகியையும் தரிசிக்கும் பேராவல் என்னை உந்திற்று. உடன் இருந்த நண்பர் முன்பிருந்த ரெயில்வே ஹெரால்ட் (Railway Herald) என்னும் பத்திரிகாசிரியர் கே. ஆர். வெங்கட்ராமய்யர் என்பவர். அவரும் யானும் உந்து வண்டி ஒன்றில் திருஆனைக்கா ஆலயம் போந்தோம்.

கோயில் வாயிலில் நுழையும் முன்னம் அந்த நண்பரிடம் எச்சரித்தேன். "நீர் இக்கோயில் வழிபாடு முடிந்து வெளிவரும் வரையில் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசுதல் கூடாது." என்று

அதன்படியே அவர் பாட்டுக்கு வேகமாகச் சென்று சிவபிரானைத் தரிசித்தார். பின்னர் அகிலாண்ட நாயகி சந்நிதிக்குள் புகுந்தார்.

நானோ, சற்று நிதானமாகவும், மனத்தை இறைவனிடம் இடையறாது பதித்தவாறும் ஆனைக்கா அண்ணலைத் தரிசித்த பின் தேவியின் திருக்கோயிலுட் புகுந்தேன். அப்பொழுது கோயிலில் கூட்டமே இல்லை. நான் நேராக அம்பிகை சந்நிதிக்குள் நுழையாமல், அவரது பிரகாரத்தை வலம் வரும் பொருட்டுச் சென்றேன். அன்று என் மனம் எதிர்பாராத விதமாக இறையருளிற் பதிந்து பேரின்ப வெள்ளத்தைப் பருகிய வண்ணம் திகழ்ந்தது. சுற்றுப் பிரகாரத்தில் அம்பிகைக்கு நேர்ப் பின்புறம் போனவன் அங்கேயே நின்று விட்டேன். அங்கே வேறு ஓர் ஆள்கூட இல்லை. அவ்வமயம், என் மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்திக் கண்ணீர் வார அகிலாண்ட நாயகியிடம் இவ்வாறு சற்று உரக்கவே ஆனால் உருக்கமாக முறையிடல் ஆனேன். "தேவி, அகிலாண்ட நாயகி, உனது திருமுலைப் பாலை ஞானத்தில் குழைத்து ஊட்டப் பெறுதற்குக் காழி ஞானசம்பந்தர் ஒருவர்தான் அருகதையுள்ளவரோ? அப்படியானால் உன்னையே முற்றிலும் உறுதியாக நம்பிச் சரண் அடைந்து வாழும் நாயினேன் போன்ற மக்களின் கதிதான் என்னவது? அதே முறையில் எனக்கு அருள் செய்யாவிட்டாலும் அடியேற்குகந்த முறையில் அருள் பாலித்தல் ஆகாதா, தாயே?

இவ்வாறு அழுது அரற்றி வரம் வேண்டி ஓர் ஐந்து நிமிஷமாவது அங்கே நின்றிருந்திருப்பேன். பின் திடீரென அங்கிருந்து புறப்பட்டு அன்னையின் திருமுன் செல்வதற்குமுதற்படிமீது கால் வைத்து ஏறினேன். அதே சமயம் எனக்காக ஆவலுடன் காத்திருந்தவர்போல் வேகமாக வந்த என் நண்பர் திரு. வெங்கட்டராம ஐயர் "ஏய், பாலு இந்தா வாங்கிக்கோ" என்று உரக்கக் கூவி என் கையில் பெரியதொரு பித்தளை டம்பளரை வைத்தார். ஆச்சரியத்தில் அதைப் பெற்று அதனுள் நோக்கினேன். அது நிறையப் பாயஸம் இருந்தது. அதிர்ச்சியடைந்தேன். அதிசயம் தாங்க முடிய வில்லை. ஒரு நிமிஷம் மௌனமாக நின்றபடி, கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியோட, கேள்விக் குறியுடன் என் நண்பரை நோக்கினேன்.

அப்போது அவர் கூறினர்: "இன்று ஏதோ விசேடம் போலிருக்கிறது. நான் வந்தவுடன் எனக்குத் தெரிந்த பட்டர் இதனை எனக்கு வழங்கினர். ஆனல் இதை நான் குடிக்க விரும்பாமல் உனக்குக் கொடுக்கவே இதுவரை காத்திருந்தேன்."

தேவியின் கருணை மழை பொழியும் பூரணமதித் திருமுகத்தைக் கனிவுடன் நோக்கினேன். கண்ணீர் மழை இன்னும் அதிகரித்தது. நாக்குழற "அன்னையே, வரம் வேண்டி முடிப்பதற்குள் என் சிறுமைக்கேற்ற பாலமுதத்தை வாரி வழங்கி விட்டாயே, யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்" என்று கூறி, மீண்டும் என் நினைவுக்கு வந்த திருவாசகச் சொற்களையும் பாடினேன்.

> "வழங்குகின்றாய்க்குன் அருளார முதத்தை
> வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்."

இவ்வடியைப் பாடியபடியே, என் அருளன்னை வழங்கிய அமுதத்தை என் வாயில் ஊற்றி விழுங்கினேன். ஆனந்த வாரியில் மூழ்கினேன். கண்டறியாதன கண்டு களிப்புமிகுந்து பூரித்தேன். அன்னையின்

திருவருள் எனக்கும் பாலித்தது. இவ்வாறு, அந்த நாளில் நான் அன்னையைத் தரிசிக்க விரும்பியதும், அப்போது பாலமுதம் நுகர ஆசைப்பட்டதும், அதன்படியே அன்னையின் பாயசப் பிரசாதம் என்னைத் தேடி வந்து கிடைத்தனவும் இவையெல்லாம் தேவியின் திருவிளையாடல் அன்றோ?

இதில் மற்றொரு விசேடமும் உளது. இன்று நான் இதை எழுதுவதற்கு முன்பு மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் அகிலாண்ட நாயகி மாலை என்ற நூலைத் திறந்தேன். அதில் என் கண்ணிற் பட்ட பாடல் ஒன்று மிகவும் என்னைக் கவர்ந்தது. அந்த நல்ல நாளில் அடியேனுக்கு ஏற்பட்டதோர் எண்ணமும் ஆசையும் ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன்பு பிள்ளை அவர்களுக்கும் ஏற்பட்டிருந்துள்ளமையை அப்பாடல் புலனாக்கியது. இதுவும் ஓர் ஒப்பற்ற அதிசயமும் ஆச்சரியமும் ஆகும்.

அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழில் அன்னையைப் பார்த்து,

> "அமுதப் பெருமா னொடுவரும் பெண்
> இதுமாடுக பொன் அம்மனையே"

எனப்பாடிய பிள்ளை அவர்கள், மீண்டும் தம் அகிலாண்ட நாயகி மாலையில் பின் வருமாறு பாடுகின்றார்.

> "உலகிடை யமுத பிள்ளைபால்
> குடிக்கும் உண்மை யென்றுரைப்பதற்கேற்ப
> இலகுசீ காழி மழவழ
> அளித்தாய் இன்முலைப்பால் அழாவிடினும்
> மலகற இரங்கி யளிப்பவரிலையோ
> அத்தகு மழவியான் அருள்வாய்
> கலகமில் கழகம் சூழ்திரு
> ஆனைக் காவகி லாண்டநா யகியே!"

அடியேன் திருச்சியிலேயே மாணவனாக இருந்து வாழ்ந்தவன். என் இளவயதில் வாரம் ஒருமுறை அல்லது பக்ஷத்திற் கொரு முறை வெள்ளிக்கிழமைதோறும் ஆனைக்கா சென்று அம்மையப்பனை வழிபட்டு வருவதை நியமமாகக் கொண்டிருந்தவன். பின்னர் கல்லூரி வாழ்க்கை அப்பழக்கத்தை அழித்தது. அதன்பின் யான் அரசியலையும் விடுத்து அரண் இரவில் நுழைந்தது முதல் கடந்த இருபது ஆண்டுகளாக மீண்டும் அகிலாண்ட நாயகியின் அடிமலரிற் சரண் புகுந்துதான் தொண்டாற்றி வருகிறேன். இப்போது இத்திருப்பணியிலும், குட முழுக்கு விழாவிலும் ஓரளவு என்னை நம் அன்னை தொடர்பு படுத்தியதும் அவளது திருவருள்தான்.

மலேயாவிலிருந்து இந்நாட்டிற்கு ஸ்தல யாத்திரையாக இரண்டாண்டுகட்கு முன்பு வந்திருந்த என் விருந்தினர். திருவருட் செல்வி திருமதி சரளாதேவி ராஜசுந்தரம் அம்மையார் ஒருநாள் அகிலாண்ட நாயகிக்குப் பட்டாடை யுடுத்திப் பொற்றாலிபூட்டி வழிபட்டார். அவ்வமயம் உடனிருந்த அடியேன் தேவியின் அருளால் பல பாடல்கள் பாடிப் பரவினேன். நல்ல சகுனம் என்று கருதப்படும் தீச்சுடர் பொறியும், தேவியின் திருமேனி மலரும் கீழே விழுந்து அவளது திருவருட் பிரசாதத்தை வழங்கின. நாயினும் கடையனாகிய அடியேற்கும் நாயகியின் அருள் கிடைத்தல் அதிசயமன்றோ? அதனால் அடியேற்கும் அதிசயமன்றோ?

# திருவானைக்கா உலா

புலவர், S. சீனிவாசன், சென்னை.

ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினால்—வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்திவரும் தான்.

—காளமேகப் புலவர்

உலா என்பது தமிழ் மொழிக்குரிய தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இதனை உலாப்புறம் என்றும் வழங்குவதுண்டு.

" சேரர் காவலர் விண்ணபஞ்
செய்த அத்திருவுலாப்புறமன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற்
கேட்டமா சாத்தனுர் "

—சேக்கிழார்-4285

ஒரு தலைவன், பேதைமுதல் பேரிளம் பெண் ஈருக ஏழு பருவ மகளிர்களும் தன்னைக்கண்டு காதல் கூரும்படி வீதியில் பவனி வந்தான் என்று கலிவெண்பாவாற் பாட வேண்டும் என்பது உலாவிற்குரிய இலக்கணமாகும்.

" திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்—றறைந்தகலி
வெண்பா வுலாவாம் "

—வெண்பா பாட்டியல்

ஏழு பருவ மகளிராவார்

' பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணென
எழுவகைப் பருவப் பெண்பாற் கெய்தும் '

எனத் திவாகரம் கூறும்.

' ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப '

—தொல்-பொருள் 85

என்னும் நூற்பாவுரையில், 'பக்குநின்ற காமம் ஊரிற் பொதுமகளிரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர் என்றும், 'தோற்றமும்' என்றது அக்காமந் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை; அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம் என்றும், இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாது என்றும் நச்சினர்க்கினியர் கூறியுள்ளார். இதனுல் உலா நூல் என்பது பாடாண்டிணையின் பாற்படும் என்பதும் இந்நூலிற் கூறப்படும் மகளிர் குல மகளிர் அல்லர் என்பதும் பெறப்படும்.

தாம் வணங்கும் கடவுள் மீதும் தம்மை ஆதரித்த வள்ளல்கள் மீதும் பல உலாக்கள் புலவர்களால் பாடப்பட்டுத் தமிழகத்தில் வழங்கிவருகின்றன. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய சேரமான் பெருமாள் நாயனர் இறைவன் மீது பாடிய உலா திருக்கைலாய ஞான உலா எனப்படுவதாகும். இவ்வுலா பதினேராம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வுலாவே முதலிற்றேன்றியமையால் ஆதி உலா என்றும் வழங்கப்பெறும்.

தம்மை ஆதரித்த வள்ளல்கள் மீது பாடப்பட்டதற்கு மூவருலாவை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இம்மூவருலா என்பது 'கோவை யுலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்'—எனப் புகழப்பெறும் கௌடப் புலவர் ஒட்டக்கூத்தரால் இயற்றப் பட்டது.

திருவானைக்கா உலா என்பது ஆனைக்கா என்னும் தலத்தில் வீற்றிருக்கும் வெண்ணுவலீசர் மீது ஆசுகவி காளமேகப் புலவரால் இயற்றப்பட்டது. இந்நூல் 461 கண்ணிகளை உடையது. விரைந்து சிலேடை பாடுவதிலும் வசைபாடுவதிலும் காளமேகப்

புலவர் ஈடு இணையற்றவர் என்பது யாவரும் அறிந்த உண்மை. பல்வகை அணிநலன் களும் பொருந்த, தம் புலமை நலம் முழு தும் கனிய இவ்வுலாவை இயற்றியுள்ளார். எவ்வளவோ உலாக்களைக் கற்றும் பதிப்பித் தும் வந்த டாக்டர்-உ. வே. சா. அவர்கள் இவ்வுலாவையே மிகுதியும் பாராட்டிக் கூறி யுள்ளார். காளமேகப் புலவர் திருவானைக் காவிலேயே நெடுங்காலம் வாழ்ந்திருந்தவர். இவர் அகிலாண்டநாயகியின் அருள்பெற்றுக் கவிபாடும் ஆற்றல் பெற்றவுடன் முதன் முதலில் பாடிய நூல் இவ்வுலா என்பர். இத் தலத் தொடர்பாக அவ்வப்போது பாடிய பல தனிப்பாடல்களும் உண்டு. அவற்றுள் ஒன்று :

'' கல்லால் அடித்ததற்கோ காலால் உதைத்ததற்கோ
வில்லால் அடித்ததற்கோ வெட்கினீர்—சொல்வீரால்
மஞ்சுதனைச் சூழும் மதிலானைக் காவாரே
நஞ்சுதனைத் தின்றதென்முன் னுள் ''

காளமேகப் புலவர் உலாநூலைத் தொடங் கும்போது ஆனைக்கா தலத்தின் சிறப்பைக் கூறத்தொடங்குகிறுர். பின்னர் சம்பு முனி வர் வழிபட்டது, அகிலாண்டநாயகி நீரைத் திரட்டி இலிங்கமாக அமைத்து வழிபட்டது, இந்திரன் அக்கினி சந்திரன் அகத்தியன் முதலியோர் வழிபட்டது முதலிய வரலாறு களை 39 கண்ணிகள் வரை விவரிக்கிருர். அதன்பின் சோழ அரசர்களுள் மிகப் பழமை யானவனும், அறுபத்துமூன்று நாயன் மார்களுள் ஒருவனும், தேவார ஆசிரியர் களாலும் திருமங்கையாழ்வாராலும் புகழப் பட்டவனும், இத்தலத்தில் முதன் முதல் திருப்பணி செய்தவனுமாகிய கோச்செங்கட் சோழன் வரலாறு கூறப்படுகிறது. சிலந்தி யாகப் பிறந்து ஆண்டவனுக்குத் தொண்டு செய்து மறுபிறவியில் சோழனுகப் பிறந்து பாராண்டு பல தலங்களுக்குத் திருப்பணி செய்த வரலாறு பிறநூல்களாலும் இவ்வூர்த் தலபுராணத்தாலும் அறியப்படும். காள மேகப்புலவரும் இவ்வரலாற்றைத் தம் உலாவில் விரிவாகக் கூறுகிருர்.

அதன் பின், சிறந்த சிவபத்தனுன கும்பகருணனைக் கொன்ற பாவம் நீங்க இராமன் இத்தலத்திற்கு வந்து இலிங்கம் அமைத்து வழிபட்டான் என்று ஒரு குறிப்புத் தரப்படுகிறது.

இத்தலத்தில் மணலெல்லாம் சிவலிங்கம் எனவும், அதை மிதித்தல் தகாது எனவும் எண்ணித் தேவார ஆசிரியர்கள் சேய்மை யில் நின்றே இறைவனை எண்ணிப் பாடினர் என்று கூறப்படுகிறது.

'' இந்நகரின்,
மண்ணுஞ் சிவலிங்கம் என்றெண்ணி வாராமற்
பண்ணுந்து சொல்மூவர் பாங்காகக்—கண்ணுற்று
நின்றேத்தும் பாக்கொண்டோன் '' (63–64)

இவ்வரலாறு பெரிய புராணம் முதலிய வற்றில் காணப்படவில்லை. அறுபத்தைந் தாவது கண்ணி முதல் நான்கு கண்ணி களில் சோழன் ஆரத்தை இறைவன் ஏற்றருளிய வரலாற்றைக் கூறுகிருர். இவ் வரலாறு சுந்தரர் தேவாரத்தாலும் அறியப் படும்.

இதன்பின்னர் 111ஆவது கண்ணிகள் வரை இத்தலத்தின் வேறு பல சிறப்புகளை யும் வேறு பல தலங்களையும் அணிவகை களில் குறிப்பிடுகிருர். இவ்வரலாறு களனைத்தும் பிறநூல்களாலும் பிறர் கட்டுரைகளாலும் அறியப்பட்டமையின் அதனை மீண்டும் கூருது சுருக்கி உரைக்கப் கப்பட்டது.

112ஆவது கண்ணி முதல் இறைவன் திருவிழா தொடங்குகிறது. இறைவர் பல வித மங்கல ஒலிகளைக் கேட்டுத் துயிலெழு கிருர், காவிரி நீரால் அபிடேகம் கொண்டார். முன்னர் தன்னைப் பூசித்துவந்த யானை முத்தி அடைந்துவிட்டமையால் இப்போது வேதியர் பூசிக்க அப்பூசனையை ஏற்றுக் கொண்டார். மூவர் தேவார இசையினையும் வேத ஒலியையும் கேட்டு ஆனந்திக்கிருர். பின் நீர்மயமான தம் தவிசில் வந்தமர்ந்து தம்மைப் பலவிதமாக ஒப்பனை செய்து கொள்கிருர். சாந்தும் நீறும் அணிந்து கொண்டு பல்லக்கில் ஏறி, கணபதி, முருகன், நான்முகன், திருமால் முதலிய தேவர்களும், அடியார்கள், சோழன், சேரன், பாண்டியன், பிற பரிவாரத்தார் முதலி யோரும் தத்தம் ஊர்திகளில் சூழ்ந்துவர, சின்னங்கள் ஆரவாரிக்க இறைவர் திருவீதி

யில் உலாவருவாராயினர். அதுபொழுது விண்ணுலக மங்கையர் முதலான பல திற மகளிரும் கூடி வீதியில் உலாவரும் இறைவரைத் தரிசித்து, அவருடைய திரு மேனி வனப்பில் ஈடுபட்டு மால்கொண்டு தம்வசமிழந்து நின்றனர்.

இவ்வாறு மயங்கி நின்றோர் பலருள் இளம் பருவத்தினளான பேதைப் பருவத் தாள் ஒருத்தி. மழலைமொழி மாறுதவள், நந்தா விளக்கைச் செந்தாமரை மலர் என எண்ணுவாள். வானத்துப் பிறையை விளையாட அழைப்பாள், முல்லைக்கொடியா லான பந்தலின்கீழ் மணல் அரிசியால் சிறு சோறுக்கத் தொடங்குகிறாள், அயல் இல்லத் தாரை விருந்துக்கு அழைப்பாள். அப் பொழுது வீதியில் இறைவன் உலா வரு கிறான். தாய்மார் முதலியோர் சென்று பெருமானை வணங்கியது கண்டு தானும் வணங்கினாள். பெருமானின் திருவுருவத் தைக் கண்டு விருப்பங்கொண்டாள். தான் சமைத்த சிறு சோற்றை உண்ண புதிதாக வந்த இவரை அழையுங்கள் என்றாள். அதைக்கேட்ட அன்னைமார் மகிழ்ச்சி மிகுந்து, ‘தாருகாவனத்து முனி பத்தினி யர் விருந்திட அதனை உண்டு அனுபவித்த வனல்லவா இறைவன்? உன் விருந்தை ஏற்றுக்கொள்ளமாட்டான்; அவ்விருந்தை எங்களுக்கு இடு’—என்று சொல்லி இல் லிற்கு அழைத்தேகினர்.

அப்பால், பெதும்பைப் பருவத்தாள் ஒருத்தி குளிர்ந்த சோலையிலே, தென்றற் காற்று ஊடாடும் மாதவிமர நிழலிலே, பாங்கியரும் அன்னையரும் காண ஒரு பாவையுடன் கழங்காடத் தொடங்கினாள். நவமணிகளுள் ஏழை மட்டும் எடுத்துக் கொண்டு, ‘கயிலையை இராவணன் எடுத்த காலத்து அவன் உடல்சரிய ஊன்றியதாள் ஒன்று; திருவானைக்காவில் உறையும் மூர்த்தியின் உரு இரண்டு (சத்தி, சிவம்); அவர் செய்யும் படைத்தல் காத்தல் அழித்த லாகிய செயல் மூன்று; அடைக்கலம் புகுந் தாரை ஏழு பிறப்பில் வீழாமல் காத்தெடுக் கும் கரம் நான்கு (மான், மழு, வரதம், அபயம்); உலகைக் காத்துவரத் திருமாலுக் குத் தந்த படை ஐந்து (சங்கம், சக்கரம், கதை, சாரங்கம், கட்கம்); இறைவர் திருவடியை அடையத் தவம் புரிவோர் வெல்லும் பகை ஆறு (காமம், குரோதம், லோபம், மதம், மாற்சரியம்); இறைவர் விடங்கர் என (சுயம்புலிங்கம்) இருக்கும் இடம் ஏழு (ஆரூர், நாகை, நள்ளாறு, மறைக்காடு, காறாயில், வாய்மூர், கோளிலி)– எனச் சொல்லி உயர எறிந்து அவள் விளை யாடும்பொழுது செம்பொற்றேரில் இறைவன் உலா வந்தான். உடனே பெதும்பை, கழங் காடலை விட்டுவிட்டுப் பெருமானைக் காணத் திருவீதி சென்றாள். மற்றைய மாதர் இறை வனை வணங்கத் தானும் வணங்கினாள். இறைவன் திருக்கோல அழகு இருவிழிக்கு அடங்காது என்றாள். ‘அன்னைமீர், என்னை இவர் தேர்மீது ஏற்றி வையுங்கள்’ என்றாள். உடனே அன்னையர், இறைவன் தேர்மீது நான்முகனல்லது வேறொருவர் அமரலாகாது என்றனர். அத்துடன் இறைவ ரிடம் தீ உளது, பாம்பு உளது, எருது உளது என அச்சுறுத்தினர். உடனே பெதும்பை, அன்னைமாரைப் பார்த்து, பார்வதி மட்டும் பாகத்தில் அமர முடி யுமோ? என்றனள். அன்னையர், ‘இவள் பார்வதிக்குப் போட்டியாக வந்துவிட்டாள்; மோகம் குடிபுகுந்து விட்டது’ எனச் சொல்லி நகைத்தனர். அவ்வளவில் இறைவர் தேர் அயல் வீதிக்குச் சென்றது. பெதும்பையை இல்லிற்கு அழைத்தேகினர்.

பின்னர், மங்கைப் பருவத்தினள் ஒருத்தி தன்னை ஒத்த பருவ மங்கையரோடு பந்தாடிக் கொண்டிருந்தாள். தோழியர் வந்து, மங்கையைப் பார்த்து, நீ ஆடியது போதும், உன் பந்தாட்டத்தை யாமா புகழ வல்லோம்? திருவானைக்கா ஈசரே புகழ வல்லவர் என்றனர். அதனைக் கேட்ட மங்கை, ‘அங்ஙனமானால் அவரே என்னை மணஞ்செய்யத் தக்கவர்’ என்றனள். அப்போது இறைவன் பவனி வந்தான். இவள் இறைவனிடம் சென்று வணங்கி, காதல் மிகுதியால் ‘உம்முடைய மாலையை அடியேனுக்கு இரங்கி அளித்தால் என்ன? நான் மிகவும் கலங்கினேன். என்னை உம்

இடப்பாகத்தில் இருத்துவீரானுல் பார்வதியைப் போல உம்மைப் பிச்சையெடுக்க விடமாட்டேன் ; தேவி முப்பத்திரண்டு அறங்களை வளர்த்துங்கூட உம்மை நஞ்சுண்ணுமாறு விட்டுவிட்டாள் ; நான் அவ்வாறு செய்யமாட்டேன் ; உம்முடைய திருக்கூத்திலும் கீதங்கள் பாடித் துணையாக இருப்பேன் ; வருவீராக ' என அழைத்தாள். அவ்வளவில் இறைவன் உமையவள் முகத்தை நோக்கிப் புன்முறுவல் கொண்டான். மங்கையை யாவரும் நகைத்தனர். தேர் வீதியைவிட்டு அகன்றது.

இறைவன் சென்ற வீதியில் மடந்தைப் பருவத்தாள் ஒருத்தி இருந்தாள். அவள் முன் ஒரு விறலி வந்து மடந்தையை இசை பாட எண்ணி, அவளைப் பார்த்து, அன்னமே, மாதர்க்கு அரசே, அமுதமே ' கருணைக்கு நீயே உமை '—எனப் புகழ்ந்து கூறினுள். அதைக் கேட்ட மடந்தை, நான் உமையவளானுல் அச்சிவபிரானைச் சேர மாட்டேனே? என்று கூறி இரங்கினுள். விறலி, ' நீ கங்கை ' என்ருள். மடந்தையானவள், ' நான் கங்கையானுல் இறைவன் தலைமீது இருப்பேனே ' என்ருள். மீண்டும் விறலி ' உன் கொங்கை மலையோ ' என்றனள். அதற்கு மடந்தை ' மலையானுல் அவ்விறைவனுக்கு உறைவிடம் (கயிலை) ஆவேனே ' என்ருள். ' உன் புருவம் வில்லோ ' என்றனள் விறலி. அதனைக் கேட்ட மடந்தை, ' வில்லானுல் இறைவன் எடுத்து வளைப்பானே ' என்ருள். ' உன் நெற்றிப் பிறைமதியோ' எனப் புகழ்ந்தனள் விறலி. பிறையானுல் இறைவன் சடையில் சூடிக்கொள்வானே '—என்ருள் மடந்தை. மீண்டும் விறலி ' உன் கண் மானே விடமோ ?' என்றனள். ' மானுனல் இடக் கையிலும் விடமானுல் மிடற்றிலும் தரித்திருப்பானே இறைவன் ' என்றனள் மடந்தை. அதைக் கேட்ட விறலி, நீ சிவன் ஆகத்திற்கு ஏலாதவளோ? எனப் புகழ மடந்தை அவளுக்குப் பரிசில் ஈந்து அனுப்பினள். பின்னர் தான் சிவன்பால் கொண்ட காதல் விஞ்ச ஆற்ருளாயினுள். அதனையறிந்த அன்னையர் அவள் நிலை யறிந்து, ' நீ வருந்தற்க, ஆனைக்கா இறைவன் உன் மீது காதல்கொண்டு நாளையே உன் வாசல் வருவார் என்று சொல்ல, ஒருவாறு அவள் ஆறுதல் அடைந்து இராப்பொழுதை அரிதாகக் கழித்து, மறுதினம் தன்னை ஒப்பனை செய்துகொண்டு எதிர்பார்த்து நிற்க, இறைவரும் அந்நேரம் வீதியில் உலா வந்தார். இறைவரைக் கண்டதும் மகிழ்ந்து, ' வெண்ணுவல் ஈசரே! உம்மை நினைத்த அளவிலே உணவு கொள்ளவில்லை ; நஞ்சாயிற்று ; உம் பிறை மதியைப்போல் என் மெய்யும் பாதியாயிற்று ; மன்மதனும் எனக்குப் பகையாகி விட்டான் ; உறக்கமும் வருவதில்லை; என்னை ஆதரியும்' என வேண்டினள். இறைவரோ மாலையை வழங்காமல் அகன்ருர். மடந்தையோ, தான்கொண்ட காதலால் வளையும் கலையும் இழந்து நின்ருள்.

அடுத்த வீதியில் அரிவைப் பருவத்தாள் ஒருத்தி மாடத்துச்சியில் தோழிமாரோடு மாணிக்கத்தாலான அம்மனை ஏழினையேந்தி ஆடிக்கொண்டிருந்தாள். விண்ணில் எறிந்தும் ஏற்றும் விளையாடும்போது, எறிந்த அம்மனைகளில் சில புயலில் சென்று மறைந்து விட்டன. அம்மனைகளைக் காணுதவளாகி, தோழியர்களே! நாம் எங்கே சென்று தேடுவது? என்று வினவினுள். அவர்கள், ' புயலில் மறைந்த அம்மனைகளை மேகம் மழையோடு குடகுமலையில் உகுத்துவிடும் ; காவிரியில் இவை வந்து, நீரில் வீழ்ந்த சோழனது ஆரம் இறைவரை அடைந்ததைப்போல இறைவரை அடையும் ' என்ருர்கள். தோழியர் கூறியதைக் கேட்ட அரிவை, இவர்கள் கூறியதைச் சோதிக்க வேண்டும் என எண்ணி கோயிலுக்குச் சென்ருள். எதிரே பெருமான் பவனி வந்தார். இறைவனைக் கண்ட அரிவை, தான் கொண்ட நினைவை மறந்தாள். நினைவு ஒன்று செயல் ஒன்ருயிற்று. செயலழிந்து நின்ருள். இறைவர் வீதி கடந்தார்.

அடுத்தாற்போல் தெரிவைப் பருவத்துப் பெண்ணொருத்தி வனிதையர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க மலர்ப் பீடத்தின் கண் வீற்றிருந்தாள். காமவேள் அவளைப் பார்த்து

வணங்கி நின்றான். தெரிவையானவள் காமனைப் பார்த்து, "இன்றளவும் உன்னை ஏவிப் பணி கொண்டோம்; நீ விரும்புமாறு உனக்குச் செய்யும் கைம்மாறு யாதுளது? கூறுக" என்றனள். அதற்கு மன்மதன் தெரிவையை வணங்கி "என்னை எரித்த ஆனைக்கா ஈசரை வெல்வது எவ்வாறு என ஆய்ந்தாய்ந்து பார்ப்பேன்; ஒன்றும் தோன்றவில்லை; நீங்கள் எனக்குப் படைத் துணையாக வந்தால் பஞ்சபாணத்தாலே இறைவனோடு போரிட்டு வெற்றி பெறு வேன்; வெற்றிபெற்ற அக்கணமே இறைவ ரின் வலப்பாகம் உமக்காகும், கிளம்புங்கள்" எனக் கூறினான். அதனைக் கேட்ட தெரிவை, 'இதுவோ அரிய செயல்?' என்று எண்ணி எழுந்து, 'நீ என் தேரின் பின்னே வா' எனச் சொல்லி வீதிக்கு வந்தாள். தேரில் வந்த இறைவனைத் தெரிவை கண் டாள். நினைத்த கருமத்தை மறந்தாள். காதல் கொண்டாள். உடல் புளகம் அடைந் தாள். இறைவனைப் பார்த்து, "ஆதி நாதனே! ஆனைக்கா ஈசனே! பவள வண்ணனே! மன்மதனைக் காய்ந்த கண்ணை உடையவனே! அடியேனைக் காப்பாயாக" என வேண்டினாள். போரிட வந்த தெரிவை போற்றுவதைக் கேட்டுப் பொருதவனாகிய மன்மதன், பின்னால் இவள் என்னை அலர்தூற்றுவாளோ என எண்ணி அவள் மிது அலர் தூற்றினான். தன்னை அடைந்தவர்க்குத் தவறு வர விடுவானோ இறைவன்? தெரிவை மீது உவந்து கடைக் கண் நோக்கினான். இதன்பின் மன்மதன் என்ன செய்வான்? தானும் போர் செய்யும் எண்ணத்தைவிட்டு இறைவனோடு இணங் கிச் சென்றான். இறைவனும் அடுத்த வீதிக்குச் சென்றான்.

அடுத்த வீதியிலே பேரிளம்பெண் ஒருத்தி இருந்தாள். இவள் இறைவனை முந்திய ஆறு பருவங்களிலும் தொழுது பெருகிய அன்புகொண்டவள். தோழி ஒருத்தி பேரிளம்பெண்ணைக் கண்டு 'பூஞ்சோலையைப் பார்க்கவா' என அழைத் தாள். இவளும் தோழியோடு சேர்ந்து சோலைக்குச் சென்றாள். அச்சோலைக்கண் தேமா, மகிழ், கல்லால், மருது, ஆத்தி, பாலை, வேய், பலா, வாழை, புன்னை, வில்வம், புன்கு, கடம்பு, வன்னி, கொன்றை, பாதிரி, தில்லை, பனை, இலந்தை, குருந்து, ஆகிய தருக்களைக் கண்டாள். இத்தருக்க ளெல்லாம் வெவ்வேறு தலங்களில் இறை வனுக்கு நிழல் அளித்தமை கருதி அவற்றைப் பணிந்தாள். பின் வெண்ணு வல் கண்டாள். தன் ஆவல் தீரத்தழு வினாள். தன்னிலை மறந்து நின்றாள். 'என் தலைவன் நீ யல்லவோ?' என்றாள். சிவன் மீது மருள்கொண்டு நிற்பவளைத் தோழியர் "உன் அறிவு நீங்கிற்றே? உன் அறிவு வெண்ணுவலீசரிடம் சேர்ந்து விட்டதோ? வா அவரை வணங்கலாம்" என்று ஆறுதல் கூறி அழைத்து வந்தனர். அப்பொழுது பெருமான் வீதியில் உலா வந்தார். உடனே தோழியர் பேரிளம்பெண்ணிடம், "இந்தா, தொழு பவனி" என்றுரைத்தனர். இறை வனைக் கண்டதும் விரகதாபம் தணிந்தாள். பேரழகரே! என்று சொல்லிக் கைகூப்பி னாள். ஆறுதல் கொண்டாள். 'பித்தரே, பெருஞ்செல்வரே, மடவார்களை ஏமாற்று பவரே, வெண்ணுவல் ஈசரே, ஆரம் பூண்ட வரே, உம்மீது பேரன்பு கொண்டேன்; என்னை ஆதரிப்பீராக; மன்மதன் என்னைக் காய்ந்து ஒழித்து விடுவானாகில் அனைத் துலகும் ஆள்பவர் என்னும் பேர் உமக்குப் பொருந்துமோ? அருள்வீராக' எனத் துதித்து நின்றாள். சிவபிரானும் இவளைத் துன்புறுத்த வேண்டா எனக் காமனுக்குக் கூறிக் காத்தார். பேரிளம்பெண்ணும் சோர்வு நீங்கினாள்.

இவ்வாறு பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள ஏழு பருவ மகளிரும் காதலுற்று மயங்க ஆனைக்கா ஈசர் திருவுலாப் போந் தார் எனக் காளமேகப் புலவர் தம் நூலைக் கூறி முடித்தார்.

# ‘என் கடன் பணிசெய்து கிடப்பதே’

சங்கீதபூஷணம், புலவர், திரு. மு. கு. புண்ணியகோடி, சென்னை.

உலகில் தோன்றிய உயிர்களுக்குள்ளே மனிதப் பிறவிதான் சிறந்த பிறவியாகக் கருதப்படுகிறது. காரணம், நினைக்கவும், நினைத்ததைச் சொல்லவும், சொன்னதைச் செய்யக்கூடிய ஆற்றலும், அறிவும் உள்ளமையேயாகும். ஆறுவது அறிவாகிய பகுத்தறிவைப் பெற்ற மனிதன், நன்மை, தீமை, உயர்வு தாழ்வு, மெய்ப்பொருள், பொய்ப்பொருள் என்பனவற்றை அறிந்து தெளிந்து, நல்வழியில் ஈடுபடுகின்ருன். ‘மக்கள் தாமே ஆறறிவுயிரே’ என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதற்குரிய சிறப்பையும் பெற்றிருக்கிருன். ‘எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண் இப்பிறவி தப்பிஞல் எப்பிறவி வாய்க்குமோ ஏதுவருமோ’ என்று மனிதப் பிறவியின் ஏற்றத்தையும் தோற்றத்தையும் தெளிவுபடுத்துகின்ருர் தாயுமானவர்.

இம்மனிதப் பிறவி ஏன் வேண்டும் எப்போது வேண்டும் என்பதற்கு விளக்கம் தருவார் போன்று திருநாவுக்கரசர் ஒரு கருத்தைச் சொல்லுகின்ருர். அது,

> ‘ குனித்த புருவமும் கொவ்வைச்
> செவ்வாயில் குமிண்சிரிப்பும்
>
> பனித்த சடையும் பவளம்போல்மேனியில்
> பால் வெண்ணீறும்
>
> இனித்த முடைய எடுத்தபொற்
> பாதமுங் காணப்பெற்ருல்
>
> மனித்தப் பிறவியும் வேண்டுவதே
> இந்தமா நிலத்தே ’

என்பதாகும்.

இத்தகைய பிறவியைப் பெற்ற மனிதன் அதனுலாம் பயனைப்பெருமல், உள்ளத்தோர் கொடுமை வைத்துக் கூடாகிய உடலை வாளா ஓம்பி, வாழ்நாளை வீழ்நாளாக்கி வீணே அழிந்துபோகும் நிலையை நினைத்து வருந்துகின்ற பதினெண் சித்தர்களுள் ஒருவரான கடுவெளிச்சித்தர் என்பவர் நகைச்சுவையாக ஒரு பாடலைப் பாடுகின்ருர். அது,

> ‘ நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
> நாலாறுமாத மாய்க் குயவனைவேண்டிக்
> கொண்டுவந்தான் ஒரு தோண்டி—அதைக்
> கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி ’

என்பதாகும். இப்பாடலால் நாம் அறிந்து கொள்ளும் படிப்பினை என்னவென்ருல், இப்பிறவி உள்ளபோதே மெய்ப்பொருளையுணர்ந்து, பிறவா நெறியருளும் பெருமானின் திருவடிப்பேற்றைப் பெறுவதேயாகும்.

இதற்குப் பெருந்துணையாக இருப்பன, நம் நாட்டில் தோன்றிய அருளாளர்களால் அருளிப்போந்த சாத்திரங்களும் தோத்திரங்களுமாகும். இத்தகைய சிறந்ததும், சீரியதுமான நூல்களைக் கற்றவர்களே மீண்டும் பிறவாத பேற்றினைப் பெறுகின்ருர்கள். இக்கருத்தைத் திருவள்ளுவர்,

> ‘ கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி ’

என்று அறிவுறுத்தியதோடமையாது ; ஆறுவது அறிவாகிய பகுத்தறிவைப் பெற்றதனுடைய பயனே, பிறப்பை அகற்றிச் செம்பொருளைக் காண்பதேயாகும் என்னுங் கருத்தினை அறிவுறுத்துபவர்,

> ‘ பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப(து) அறிவு ’

எனக் கூறுகின்ருர். எனவே, உயர்ஞானம்

பெற்று உண்மைப் பொருளான இறைவனுடைய இன்னருளைப் பெற மனிதப் பிறவிதான் முதற் காரணமாக இருக்கின்றது என்று கண்டோம்.

இனி, இறைவன் அருளைப்பெற நம் பெருமக்கள் எத்தகைய பணியினை மேற்கொண்டார்கள் என்பதனைக் காண்போம்.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று கூறிய திருநாவுக்கரசர், தாம் மேற்கொண்ட பணிகள் இரண்டு. அவற்றுள் ஒன்று; இசை வடிவாகவுள்ள இறைவனைத் தம் சொன்மாலைகளால் போற்றிப் புகழ்வது; மற்றொன்று, தன் அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்கும் முழுமுதற் பரம்பொருளாக விளங்கும் இறைவன் உறையும் திருக்கோவில்களிலுள்ள கல்லையும், முள்ளையும் களைந்தெறியும் பணியான உழவாரப் பணியாகும். இவ்விரண்டனுள், அப்பர் பெருமான் சிறப்பாக மேற்கொண்ட பணி பாடும்பணியேயாகும். காரணம், இறைவன் இசைவடிவாகவுள்ளான் என்பது மட்டுமன்று; இனிய இசைபாடும் அடியார்களின் அல்லலைப்போக்கி அருள் செய்யும் அன்புடையவன் என்பதுமாகும்; இதற்கு ஒரு சான்றைப் பார்ப்போம்.

சமயகுரவர் நால்வருள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருமணத்தில், வலியவந்து தடுத்தாட்கொண்ட இறைவன், திருவெண்ணெய்நல்லூருக்கு அழைத்துச் சென்று பழ ஆவணங்காட்டித் தன்னடியவனாக ஆக்கிக்கொள்ளுகின்றார். பின்னர் உண்மையுணர்ந்த சுந்தரர், இறைவனுடைய இன்னருளை நினைத்து மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்துகின்றார். இங்ஙனம் தன்னை மறந்து நின்ற சுந்தரரை நோக்கி, 'நாம் விரும்புவது இசைப்பாட்டே யாகும் ஆதலால் நீ நம்மீது இனிய பாடலைப் பாடுக' என்னும் பொருள்தரும், 'அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனைப் பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று அருளிச் செய்தார்.

இனிய பாட்டைக் கேட்கும் எண்ணத்தோடு இறைவன் சுந்தரரை வலியவந்து தடுத்தாட்கொண்டதோடமையாது, பரவையிடத்துத் தூது சென்றார்; சுந்தரரின் பசியைப் போக்க உணவு கொண்டுவந்து கொடுத்தார்; இதனால் இறைவன் இசைக்கு வசப்பட்டவன் என்பதனை அறிந்தேன் என்று, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு பாடலைப் பாடுகின்றார். அது;

'படியிலா நின்பாட்டில் ஆரூர
நனிவிருப்பன் பரம னென்ப
தடியனேன் அறிந்தனன் வான் தொழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டுமன்றித்
தொடியுலா மென்கைமடமாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகள் தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்குமாறே'

என்பதாகும். மேலும், அதே சுந்தரர், இறைவனைக் குறிக்கும்போது 'ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி' என்று கூறுகின்றார்.

இனி, இறைவனை அணுகி வரம் கேட்ட பெருமக்கள் என்ன விரும்பினார்கள் என்று காணும்போது, முதலாவதாக நம் கண்முன் நிற்பவர் புனிதவதியார் என்ற காரைக்காலம்மையார் ஆவார்கள். அறுபத்து மூவருள் ஒருவராக விளங்கும் பேறுபெற்றவரும், மூத்த திருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை முதலான அருள் நூல்களை இயற்றியவரும், சைவசமய குரவர் நால்வர்களுக்கு முற்பட்டவரும், தலையாய அன்பினால் தலையாலே நடந்து கயிலாயம் சென்றவரும், அம்மையே வருக என ஆண்டவனால் அழைக்கப்பட்டவருமான புனிதவதியாரை நோக்கி இறைவன், 'இங்கு நம்பால் வேண்டுவதென்'? என்று கேட்டபோது, அம்மையார் வேண்டியவரம், 'இறைவா! நீ ஆடும்போது நான் மகிழ்ந்து பாடவேண்டும்' இதுவே நான் வேண்டுகின்ற வரம் என்கிறார். இதனைச் சேக்கிழார்

பெருமான் அழகிய ஒரு திருப்பாடலாக யாத்துத் தருகின்ருர். அது,

‘ இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்ருர்
பிறவாமை வேண்டும் ; மீண்டும்
பிறப்புண் டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் ; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன்
அடியின் கீழ்இருக்க என்ருர் ’

என்பதாகும்.

இனி, கந்த புராணத்திலுள்ள ஒரு கருத்தைப் பார்ப்போம், ஆயிரமாயிரமாண்டுகள் தவஞ் செய்து, ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டுயுகம் ஆளக்கூடிய ஒப்புயர்வற்ற வரத்தைப் பெற்றவன் சூரபத்மன் ; இவன், தனது வரத்தின் வலிமையினுல் அஷ்டதிக்குப் பாலகர்களையெல்லாம் தம் இஷ்டப்படி ஏவல் கொள்ளும் திறன் பெற்றவன் ; தேவர்களைச் சிறையினின்றும் மீட்கும் பொருட்டு வந்துள்ள முருகப் பெருமானேடு பெரும் போர் புரிகின்ருன் ; போர்க்களத்தில் தன்னேடு நிற்கும் சூரபத்மன், பெருந் தவஞ் செய்து, அதனுல் உயர்ந்த வரத்தைப் பெற்றவன். அதனுல், அவனை ஒரே அம்பினுல் கொன்றுவிடுவது நீதியும் நேர்மையும் ஆகாது என்று எண்ணிய முருகப் பெருமான், அப்போர்க்களத்திலேயே தமது சுயவுருவைக் காட்டிச் சூரபத்மனுக்குச் சிறிது ஞான உணர்வையுங் கொடுக்கின்ருர். அப்போது, சூரபத்மனுடைய வாயினின்றும் வருகின்ற சொற்கள், முருகப் பெருமானை இனிய இசையால் பாடி வழிபட்டால் இதுவரையில், நாம் செய்த தீமைகளெல்லாம் அகன்று அம்முருகப் பெருமானுக்கு அடியவனுக வாழமுடியும் என்பதாகும். இக்கருத்தைக் கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள், செய்யுளாக வடித்துத் தந்துள்ளார்கள். அது,

‘ சூழுதல் வேண்டுந் தாள்கள்
தொழுதிடல் வேண்டும் அங்கைத்
தாழுதல் வேண்டும் சென்னித்
துதித்திடல் வேண்டுந்தாலும்
ஆழுதல் வேண்டுந் தீமை
அகன்று நான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் ’

என்பதாகும்.

(சென்னி - தலை ; துதித்திடல் - இசையால் வழிபடல் ; தால் - நாக்கு)

இதனுல் பகைவனுக இருந்தாலுங்கூட, முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமான், தன்னை இன்னிசையால் போற்றி வழிபாடு செய்வோர்க்கு இன்னருள் புரியும் இயல்பினன் என்பது நன்கு போதருமன்றே !

இனி, காலமெல்லாம் காமவெள்ளத்திலே ஈடுபட்டுத் தமது உடலையும், உணர்வையும் கெடுத்துக் கொண்டு பின்னர், திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தர் அலங்காரம், வேல் வகுப்பு, மயில்வகுப்பு முதலான அருள் நூல்களைப் பாடிய அருணகிரியார், முதன் முதலாக முருகனிடம் வேண்டிய பணி,

‘ ஆடும்பரிவேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய் ’

என்பதாகும். மேலும், அருட்பிரகாச வள்ளலாரான இராமலிங்க அடிகள், தமது சொல் மாலையாகிய இசைப் பாடலை ஏற்றுக் கொள் என்று இறைவனை நோக்கிப் பாடுவது,

“ ஆடையிலே எனை மணந்த மணவாளா
என் அலங்கல் அணிந்தருளே ” என்பதாகும்.

(அலங்கல் - இசைப்பாமாலை)

‘ என்கடன் பணிசெய்து கிடப்பதே ’ என்று கூறிய திருநாவுக்கரசர், தாம் சொன்னதைப் போலவே செயலிலுங் காட்டி மற்றவர்களுக்கு வழி காட்டும் வான் பொருளாக விளங்கினுர் என்பதை அவருடைய வாழ்க்கையின் வாயிலாக அறிகின்ருேம். அவர் கூறுவது,

‘ சலம் பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் ’

என்பது. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனுகிய இறைவனைச் சூழ்த்த மாமலர் தூவி அவனுடைய புகழைப் பாடித் துதிக்

கும் பணியே சிறந்த பணியாகும் என்பது அவர் கருத்து. அங்ஙனமின்றிப் பூக்கைக் கொண்டு அரன் பொன்னடியைப் போற்ருது, நாக்கைக் கொண்டு இனிய இசையால் அவனைத் துதிக்காது, ஆக்கைக்கே இரை தேடி அலமந்து காக்கைக்கே இரையாகிக் கழியும் மக்களைப் பார்த்துப் பரிதாபப் படுகின்ருர் நாவுக்கரசர். அவர், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறியது இறைவனைப் பாடுகின்ற பணியே என்பது உணரப்படும். இங்ஙனம் பாடித் தம் வாழ்க்கையில், இன்பமே எந்நாளும் துன்பமில்லாமல் வாழ்ந்ததுபோல, நாமும் ஆனைக்காவிலுறையும் அண்ணலைப் பாடிப் பரவுவோமாயின், ஆனைக்கும் சிலந்திக்கும் அருள் சுரந்த அண்ணல், நமக்கும் செய்யாமலா போவான்?

எனவே நாமும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி நன்னெறி பெற்றுய் வோமாக.

"வான்முகில் வழாதுபெய்க ;
மலிவளஞ் சுரக்க; மன்னன்
கோன்முறை அரசுசெய்க ;
குறைவிலாது உயிர்கள்வாழ்க ;
நான்மறை அறங்கள்ஓங்க ;
நற்றவம் வேள்விமல்க ;
மேன்மை கொள்சைவநீதி
விளங்குக ; உலகமெல்லாம்."

## அகிலாண்ட நாயகி மாலை

மாயவ ஞயோர் பாதியில் லவளாய்
மற்ருேர்பா தியுங்கவர்ந் தனையால்
நாயகன் மேனி யெனினவன் வடிவ
நாடொறு மறைந்ததா யிருக்கச்
சேயமண் சத்தி மயமெனு தந்தோ
சிவமய மென்பதென் னுரையாய்
காயமீ தெழுந்த மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே. (99)

## அருகு நின்றிடும் அண்ணல்

திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்து
உருகி நைபவர்க்கு ஊனமொன் றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே.

—திருநாவுக்கரசர்

## இன்பம் வேண்டுமா ?

துன்ப மின்றித் துயரின்றி யென்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவனென் றுள்குவார்க்கு
அன்ப ஞயிடும் ஆனைக்கா அண்ணலே.

—திருநாவுக்கரசர்

# கல்வெட்டுகளின் குறிப்புகள்

[மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டுப் பகுதியினுல் 1905, 1908, 1936–37, 1937–38 ஆண்டுகளில் படியெடுக்கப்பட்டவை]

1905/499 On the east wall of the third prakara in the Jambukeswara temple near Trichinoply – Chola – Tribhuvanachavartin Rajarajadeva – 20th year – Tamil – Sale of land.

1905/500 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – 29th year – Tamil – Gift of land.

1905/501 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – 26th year – Tamil – Sale of dry land.

1905/502 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – 26th year – Tamil – Sale of dry land.

1905/503 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – Lost – Tamil – Damaged Appears to record a sale of land.

1905/504 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – Lost – Tamil – Damaged. Appears to record a sale of land.

1905/505 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – Lost – Tamil – Sale of land.

1905/506 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – 29th year – Tamil – Sale of dry land 1 plus 1/20 plus 1/20 veli of land for 2125 kasu.

1905/507 On the west wall of the kitchen in the same temple – Tribhuvanachakravartin Rajarajadeva – 20th year – Tamil – Sale of land.

1905/508 On the same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – 24th year Ananda – Tamil – Gift of money by certain merchants of Conjeevaram.

1908/480 On the west gopura of the Jambukesvara temple at Tiruvanaikkaval, right of entrance – Chola – Tribhuvanachakravartin Kulottunga Choladeva, 'who was pleased to take Madura and the crowned head of the Pandya'. – 19th year – Tamil – Damaged. Seems to register a political compact between Siyan Udaiyapillai alias Pillai Akalanka Nadalvan and Tondan Seman alias Rajarajamuvarayan.

1908/481 On the west gopura of the Jambukesvara temple at Tiruvanaikkaval, right of entrance – .............. Tamil (verse) Records the gift of the Chola country by Sundara Pandya to the Bana King.

1908/482 On the west gopura of the Jambukesvara temple at Tiruvanaikkaval, right of entrance – ......... – ......... – ......... – Tamil and Grantha – A verse in the Vamsasthametre in praise of the Bana king, evidently called Viramagadan as indicated by the single Tamil line at the top. Another damaged inscription of two verses refers to the same Bana king.

1908/483 In the same gopura, left of entrance – Chola – Tribhuvana-chakravartin Kulottunga Choladeva – 18th year – Tamil – Damaged. Renewal of a political compact between Rajaraja-devan Ponparappinan Vanakovaraiyan and Siyan Udayapillai alias Akalanka – Nadalvan.

1908/484 In the same place – Chola – (Tribhuvanachakravartin) Rajendra Choladeva – 6th year – Tamil – Damaged Renewal of a political compact between Rajarajadevan Ponparappinan Vanakovaraiyan and Siyan Udayapillai alias Akalanka Nadalvan. Gift of land for a flower-garden.

1908/485 On the wall of the Ganesa Shrine in the same temple – Hoysala – Vira Ramanathadeva – 14th year – Tamil – Fragments. Refer to the temple at Tiruvanaikkaval in Tenkarai Pandikulasani Valanadu.

1908/486 On the west wall of the Sankaracharyaswami matha in the same village – ...... – Tribhuvanachakravartin Konerinmaik-kondan – ...... – Tamil – Refers to the building of the matha called Narpattennayiravan madam by Avurudaiyan, Solakon, on the northern side of the temple at Thiruvanaikkaval and provides for the feeding of the ascetics.

1908/487 On the same wall – ........... – Tribhuvanachakravartin Konerinmaikondan – ...... – Tamil - Refers to the building of the same matha.

1936-37/103 North wall of the second prakara in the Jambukesvara swami temple – ...... – ...... – Saka 1394, Khara (expired) Nandana (current) Ani 2. – Tamil – Purports to be an order issued by god Alagiya Tiruvanaikka Udaiyar to Sundara-Pandya Brahmarayar transferring to him 2 veli of land in Kurrur belonging to his brother Urutirasiva (Rudrasiva) Brahmarayar.



ஸ்வஸ்திக பாதத்தில், வலக்கை ஊருஹஸ்தமாக,
இடக்கையைத் தலைக்கு மேல் தூக்கி இளமை நலம்
கொழிக்க நிற்கும் எழில் மங்கை இவள் தலைக்கு மேல்
உள்ள கொடிக்கருக்கு அன்னவேலை அற்புதமானது



வீரபத்திரக் கடவுள்
கையில் சூலம் தாங்கி வீராவேசத்துடன்
தட்சயாகத்தில் நடக்கும் நிலையில் உள்ள சிற்பம்
ஆயிரக்கால் மண்டபத்தில் காணலாம்

1936–37/104 Same wall – ...... – ...... – Jaya (expired) Manmatha (current) Ani. 12 – Tamil – Engraved in continuation of the previous inscription. Registers sale of the 2 veli of land by Sundar-Pandya Brahmarayar mentioned above for 600 panam to the temple to pay off the fine imposed on him by Tirumalai deva Maharaja for some crime.

1936–37/105 Same wall – Vijayanagara – ...... – Saka 1441, Pramadi, Vrischika, su. paurnami, Sunday Krittika – Tamil – Records gift of 12 veli of land in 3 villages to the temple for the daily requirements of worship to the god and goddess by Timmappa Nayaka, son of Vasal Mallappa Nayaka, an officer of Krishnadeva Maharaya, whose nayakkattanam comprised Tiruchirapalli sirmai in Sola-mandalam.

1936–37/106 Same wall – Vijayanagara – Praudhadeva-Maharaya, son of Mallikarjunadeva-Maharaya, 'who witnessed the elephant hunt' – Saka 1392, Vikriti, Makara, su. 7, Friday, Uttirattadi – Tamil – Registers sale of the right of worship in the temple at Tiruvanaikka with its privillages including house-sites, by the four sets of Sthanikas to a certain Bagavanar Andaperumal of Kaitavanallur in Tondai-mandalam.

1936–37/107 Same wall – Vijayanagara – ...... – Saka 1441, Pramadi, Dhanus, su. paurnami, Tuesday, Tiruvadirai – Tamil – Records gift of 1 veli of land at Vadavur in Rajagambhira-valanadu, for the expenses of worship and offerings on the second day of the annual festival in the temple by Timmappa-Nayaka mentioned in No. 105 above, for the merit of king Krishnadevaraya.

1936–37/108 South wall of the same prakara – Chola – Tribhuvana-chakravartin (Raja) – 13th year, Vrischika, su. 3, Monday Rohini – Records sale of some lands in Vikramasolanallur and Anapayamangalam to the temple by Tiruvanaikka-velan of Seyyamangalam.

1936–37/109 Same wall – ...... – ...... – dasami, Monday As ...... – Tamil – Stones lost. Records sale of land to the temple by Govardhanan Kunikkumpiran Bhattan of Tirunalam.

1936–37/110 Same wall – Chola – Tribhuvanachakravartin Rajaraja deva – 13 the year, Vrischika, su. 3, Monday Rohini – Tamil – Records another sale of land to the temple by Tiruvalan Tiruvennaval Velan, the headman of Karumbanur.

1936–37/111 Slab set up in the verandah of the same prakara – ...... – ..... – ...... – Sanskrit in Telugu. – In praise of Sadasiva Makhindra. Above the inscription are cut in relief the figures of a linga

and parvati holding a lotus in her right hand. In modern characters.

1936-37/112 Another slab bearing the figure of a linga, set up in the same place - ...... - ...... - ... .. - Telugu - In modern characters, States that this is the channel of Ayyagalayya.

1936-37/113 West wall of the third prakara - Vijayanagara - Virapratapa Devaraya Maharaya - Plavanga, Margali 15 - Tamil - Records an order of the king to Sirupparasar to revive worship in the Vishnu and Siva temples in the kingdom by remitting taxes other than the usual vibhuti kanikkai due to the king from the devadana lands. Also records a further order reviving worship in the temple at Tiruvidaimarudur as in the time of king Bhupati and in two other temples at Tirumadukkam in Tirukkaraypparru and at Valudilampattu.

1936-37/114 Same wall - Chola - Tribhuvanachakravartin Rajendra Choladeva - 3rd year, 220th day - Tamil - Records an order of the king granting an ulvari for the remission of the taxes on 36 and odd (veli) of land belonging to the temple of Tiruvanaikka - Udaiyar to provide for the requirements of worship, etc.

1936-37/115 Same wall - Chola - Tribhuvanachakravartin - Konerinmaikondan - 5th year, 142nd day - Tamil - Damaged. Records an order of the king making into a tax free devadana, 25 veli of land in Muttam alias Villavanallur in Nittavinoda - valanadu granted as tirunamattukkani to the temple by Tripuradeviyar, the aunt of the king. The royal secretary was Rajendrasimha - Muvendavelan.

1936-37/116 Same wall - Chola - Tribhuvanachakravartin Konerinmaikondan - 5th year, 142nd day - Tamil - Highly damaged. Seems to give effect to the royal order mentioned above.

1936-37/117 Same wall - Chola - Tribhuvanachakravartin Rajendra Choladeva - 5th year, 115th day - Tamil - Records a royal order granting, as tax free devadana, lands in seven different villages, for worship and offerings in the temple of Posalisvaram Udaiyar built by Mamadi Virasomesvara at Kannanur, a hamlet of Tiruvellarai, which was a brahmadeya in Pacchchirkurram, a subdivision of Rajaraja - valanadu. The royal secretary was Neriyudayaichchola Muvendavelan.

1936-37/118 North wall of the same prakara - Hoysala - Sarvabhaumachakravartin Vira Somesvaradeva - 22nd year (in words) Kumbha, ba. 6, Saturday, Svati - Tamil - Records sale of land

belonging to the temple for 40,000 kasu, to Kalvakkur Tyagapperumal of Posala Vira Narasimhachaturvedimangalam, who endowed the same for worship and offerings in the shrine of Tyagavinodisvaram Udaiyar, built by him in the third prakara of the temple, and for making a tiruvasi (aureole) for Chandesvara.

1936-37/119 Same wall - Hoysala - Vira Somesvaradeve - ...... - Tamil - Begins with the introduction Samastabhuvanasraya etc., Records remission of taxes from the 3rd year of the king on 32 veli of devadana land belonging to the temple and to the shrines of Viracholisvara, Padumalisvara, Vira Narasingesvara and Somalisvara in Vada Tiruvanaikka and their consequent conversion into tirunamattukkani land, for the consideration of a lump payment of 110,000 kasu.

1936-37/120 Same wall - Hoysala - Vira Somesvaradeva - 4th year - Tamil - Commences with the same introduction. Records the assignment of 1,000 kalam of paddy by the king from the villages Korramangalam and Alagiyamanavalanallur in Rajagambhira valanadu, for worship and offerings to god Sankara Nayanar enshrined in the fourth prakara of the temple.

1936-37/121 Same wall - Hoysala - Vira Somesvara - 3rd year - Tamil - Records a similar grant by the king from certain specified lands, for conducting in the name of the king, a festival in the temple of Tiruvanaikka Udaiyar in the month of Masi.

1936-37/122 Same wall - Hoysala - Vira Somesvaradeva - 25th year - Tamil - Incomplete. Records a similar grant made by the king, of paddy derived as tax from the villages Narasingamangalam, Kannanur, Ottanur, Sengavur, etc., in Rajarajavalanadu 'on the northern bank' for the merit of his mother Kalaladeviyar, for worship in the temple of Posalisvaram Udaiyar (at Kannanur) consecrated by him. Refers to the damaged and neglected state of some lands caused by the breach of the Kaveri, and their reclamation in this year.

1936-37/123 Same wall - Hoysala - Vira Somesvara - 27th year - Tamil - Records another gift of the same kind made by the king for the merit of his mother Kalaladeviyar.

1936-37/124 Same wall - Hoysala - Vira-Somesvara - 5th year - Tamil - Gives details of income in paddy from different kinds of lands made over by the king to provide for worship and offerings to the deity in the temple of Somalisvaram Udaiyar at Purasaikkudi in Pachchilkurram, a subdivision of Raja-raja-valanadu, built by him as a pallippadai for Deviyar.

1936–37/125 Same wall – Hoysala – Sarvabhaumachakravartin Vir Ramanathadeva – 2nd year, Karkataka su. 15, Sunday Tiruvonam – Tamil – Registers a sale of house-sites by the temple of Tiruvanaikka-udaiya-Nayanar to a certain Gautamasiva-Ravalar, the disciple of a certain Udaiyar Svamidevar, for building a matha.

1936–37/126 Same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva. 22nd year – Tamil – Records an agreement of surety (*kili-punai tittu*) given to the temple by a certain Kunranpiran alias Manatungapperaiyan, a ferryman, who had the Kani right of Kari-Sattankurai in Kilpilaru, a subdivision of Pachchil-kurram in Rajarajavalanadu for 40,000 kasu due from 3 other ferrymen to the temple for four shares purchased by them.

1936–37/127 East gopura leading to the third prakara – ...... – ...... – ...... – Sanskrit in Telugu – States that the adherents of Advaita philosophy attain beatitude.

1936–37/128 Slab set up on the east side of the fourth prakara – ...... – ...... – ...... – Sanskrit in Nagari – States that pavement of the temple of Jambunatha and Akhilandesvari was the work of Bhaskararaya Bharati Dikshita.

1236–37/129 Pillar at the southern entrance into the same prakara – ...... – ...... – ...... – Telugu in Grantha – Modern and badly engraved. States that Sadasiva-Dikshitendra planted a pillar with the three names of Siva (on it) and consecrated a linga in the vicinity of the Sankaresvara (shrine)

1936–37/130 Right door – jamb of the same entrance – ...... – ...... – ...... – Tamil – Modern. States that Sadasiva-Dikshita ruled (in the pontifical seat) with benignity for sixty years.

1936–37/131 Left door jamb in the same place – ...... – ...... – ...... – Telugu and Sanskrit in Grantha – Two verses in Praise of Sadasiva Dikshita.

1936–37/132 South wall of the same prakara (out side) left of entrance – ...... – ...... – ...... – Telugu – Modern – States that Sadasiva Dikshita planted the pillar of Sivanamatrayam which established his fame.

1936–37/133 Same wall – ...... – ...... – ...... – Tamil – States that this is the linear measure for measuring the wet lands of Tiruvanaikka. The length is indicated by two plus marks at either end and measures about 4 feet.

1936-37/134 Same wall right of entrance - ...... - ...... - ...... - Telugu - States that this wall and the entrance were the gift of Anna Chaundappa-Udaiyar, son of Aditta-Udaiyar. The wirting belongs to the 15th century A. D.

1936-37/135 Slab set up near a dilapidated matha near the outermost eastern gopura - ...... - ...... - Saka 1506, Tarana, Panguni 6 - Sanskrit in Grantha and Tamil - Purports to record an order of god Chandesvara conferring upon Chandrasekharaguru-Udaiyar the headship of the Pasupata-matha with the right of worship and management of the temple of Tiruvanaikka-Udaiyar.

1936-37/136 Slab set up near the outermost western gopura - Madura - Nayaka - Visvanatha Krishna Virappa-Nayaka - Saka 1517, Manmatha, Vrischika, ba. 14, Thursday, Anusa - Tamil - Records the gift of the annual income of 47 pon due to the chief from the valaikkara (fishermen) families settled in Trichinopoly, for worship and offerings to god Kankalanatha, set up by him in the temple, on one of the days during the principal festival.

1937-38/1 Pedestal of a metallic Dvarapalaka image placed in the first prakara of the Jambukesvara temple - ...... - ...... - Tamil - States that the image is the gift of Deyvangalperumal, son of Ilaiyanayinar of Karuppur in Irungolappandi-valanadu, a Karanika (Accounts Officer) of Visvanatha-Nayakar Virappa Nayakkarayyan.

1937-38/2 Another image in the same place ...... - ...... - Tamil - States that the image is the gift of Deyvangalperumal, son of Ilaiyanayinar of Karuppur in Irungolappandi-valanadu, a Karanika (Accounts Officer) of Visvanatha-Nayakar Virappa Nayakkarayyan.

1937-38/3 Inner wall of the north verandah containing the utsava images in the same temple - Pandya - Maravarman alias Tribhuvanachakravartin Sundara-Pandyadeva who was pleased to take sonadu. - 4th year, 154th day - Tamil - Seems to enumerate the ornaments, etc., belonging to god Tiruvanaikka-Udaiyar. The king is mentioned as staying at Madura.

1937-38/4 Inner wall of the north verandah of the second prakara of the same temple. - Hoysala - Vira Ramanathadeva - 14th year, Mithuna, su. 11, Wednesday, Visakha - Tamil - States that the trustees of the temple of Tiruvanaikka-Udaiyar, sold a bit of land for the money endowed by Nilakantha Nayakkar of

Palapalli for offerings and worship to the god Pasupatisvaram-Udaiyar which he had consecrated in the gosala erected by him in front of the Akhilandanayaki shrine in the fourth prakara of the temple.

1937-38/5 Same wall - Hoysala - Vira Somesvaradeva - ...... - Tamil - Registers exemption of taxes granted by the king from his 6th year on the land endowed by Avvai Somala Mahadevi to the temple of Sangamallesvaram-Udaiya-Nayanar and to the Sangamadevar matha at Tiruvanaikka.

1937-38/6 Same wall - Hoysala - Sakalabhuvanachakravartin Vira-Somesvaradeva - 6th year, Dhanus, su. 3, Friday, Uttiradam. Tamil - Connected with the above record. Registers purchase of land in Perur Sirudavur alias Palurchcheri in Kilpalaru in Pachchil-kurram, a subdivision of Rajaraja valanadu by Somala Mahadevi, daughter of the Hoysala king Vira-Vallaladeva, from two persons.

1937-38/7 Base of the same verandah - ..... - ...... - Kshaya, Asvija, su. 10, Monday - Telugu - Incomplete. Stones misplaced and missing. States that Mummadi Timmarasa and his son installed the images of Valampuri-Vinayaka, Subrahmanya, etc., as the gift of Mahapradhana Vira......Dannayaka Udaiyar. A Tamil version of the record is engraved in continuation of this inscription.

1937-38/8 On the wall of the east verandah in the same prakara-Chola - Maduraikonda Parakesvarivarman - 40th year - Tamil - Incomplete, Mentions god Mahadeva-Bhatara at Tiruvanaikka.

1937-38/9 Same place - Chola - Parakesarivarman ...... - Uttiradam - Tamil - Fragment.

1937-38/10 Stone built into the pavement in the north side of the same prakara - Chola - Parakesarivarman - 3rd Year - Tamil - Fragment. Mentions Malai-nadu.

1937-38/11 Stones built in the same pavement - ...... - ...... - ...... Tamil - Fragments of different inscriptions engraved in characters of the 13th century A. D. One of them mentions Tiruvarattisvaram-Udaiyar and Gangadisvaram - Udaiyar consecrated in the 8th year of a king whose name is lost.

1937-38/12 South wall of the same prakara - Hoysala - Vira Ramanathadeva - 6th year, Karkataka, su. 5, Wednesday, Uttiram - Tamil - Registers gift of land by purchase by Sankara bhatta of Pullalur for offerings and worship to god Visvesvaradeva situated in the eastern prakara of the temple of god Sangamisvaram-Udaiyar at Vira-Narasimhachaturvedimangalam, an agaram situated in Tiruvanaikka.

1937-38/13 Same wall - Chola - Tribhuvanachakravartin Rajarajadeva - ...... su. 11, Saturday, Tamil - Stones lost in the middle. Registers sale of land by two persons to the temple of Tiruvanaikka-Udaiyar-Nayanar.

1937-38/14 Same wall - Chola - Tribhuvanachakravartin Rajarajadeva - 24th year, Mithuna su. 11, Saturday Sodi - Tamil - Connected with the previous inscripticn and engraved in continuation of it. Registers a *dravyachchelavu-kaiyidu* given by the above two persons for the amount received by them for the sale of their lands. Mentions Bogaya-Dandanayaka.

1937-38/15 South wall of the Utsava-mandapa (inside) in the same prakara - ... - ...... - ...... - Grantha and Tamil - In characters of the 18th century A. D. States that Sadasiva Vajapeyayaji-Dikshitarayyan built the mandapa and provided for offerings to god Chandrasekara on amavasya and sankranti days.

1937-38/16 Same wall - ...... - ...... - Ananda - Sanskrit in Grantha - In characters of the 18th century A. D. States that Sadasiva Makhin performed the Vajapeya sacrifice.

1937-38/17 Pillar in the same mandapa - ...... - ...... - Telugu - In characters of the 18th Century A. D. States that this Pillar commemorating the three nemes of Siva was planted by Sadasiva-Dikshita.

1937-39/18 Another pillar in the same place - ... - ... - ... Tamil-built in at the bottom. States that Sadasiva-Dikshitendra made provision for offering 1 taligai on every Sankranti day.

1937-38/19 Another pillar in the same place - ... - ... - ... - Tamil - Gives the name of the mandapa (containing this pillar) as Ayyan-mandapa.

1937-38/20 Inside the west wall of the mandapa in front of the Nataraja shrine in the same prakara - Chola - Virarajendradeva - 7th year - Tamil - Registers a pact of political alliance entered into between Virrirundan Seman alias Akalanka Nadalvan on the one hand and Arayadevan Muvayirattoruvan alias Virarajendra Brahmadaraya-Muttaraiyan and Arayadevan Tiruvenkadudaiyan alias Vikramasola - Brahmadaraya Muttaraiyan on the other.

1937-38/21 Same wall - Pandya - Maravarman Sundara-Pandyadeva - 7th year (in words), 70th day - Tamil - Begins with the introduction Pumaruviya, etc., Registers a tax-free gift of land in Rachchimangalam, a hamlet of Maraneri alias Dinachintamani-chaturvedimangalam in Eyi-nadu for

offerings and worship during the sandi (service) instituted by the king in his name in the temple, and for special festivals, on the day of Avittam, the asterism of the king, in the month of Avani.

1937–38/22 Beam in the same mandapa – ...... – ...... – Vyaya – Tamil – In characters of the 15th century A.D. States that the mandapa was constructed by Sankana at the instance of Annappayyan, son of Sirupparasar.

1937–38/23 Pillar in another mandapa within the same mandapa – ...... – ...... – ...... – Tamil – Gives the name of the mandapa as the "Sadasivasvami-mandapa".

1937–38/24 West Wall of the third prakara (right of entrance) in the same temple – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva – 20th year – Tamil – Registers the appointment of 18 persons as watchmen of the temple.

1937–38/25 Same place – Hoysala – Vira-Ramanathadeva – 6th year, Dhanus, ba. 1, Tuesday, Svati. – Tamil – Built in at the right end. Registers gift of land by purchase by Tirujnana-sambandar of Karuppur to the God Eduttarulya-sripadisvara-nam-udaiya-Nayanar consecrated by him in the north eastern corner of the first prakara of the temple.

1937–38/26 Same place – ...... – ...... – 6th year, Margali 5 – Tamil – Built in at the bottom. Engraved in continuation of the previous inscription. Relates to the same transaction.

1937–38/27 Same wall, left of entrance – Chola – Parakesarivarman-Tribhuvanachakravartin Rajendra Choladeva – 4th Year Mina, ba. 6, Wednesday, Anilam – Tamil – Damaged. Beginning of lines built in. Contains a portion of the historical introduction of the king. Registers sale of land to the temple by Araiyan Sundalvan alias Seraman of Vanakoppadi.

1937–38/28 Same place – Pandya – Jatavarman Tribhuvanacha – (Lost) Tamil – Begins with the introduction Samasta-jagadadhara, etc., of Jatavarman Sundara-Pandya I. Registers an exemption of taxes granted from the 21st year and 103rd day of the king's reign on the villages Muttaipadi, Viratonga-puram and Pagankudi which had already been endowed by him, for offerings and worship to the god during the festival called *Seranaivenran-tirunal* instituted in the temple to be conducted on the day of the king's asterism Mula in the Chittirai month.



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் விமான மகா கும்பாபிஷேகம்



யாகசாலையின் தோற்றம்

1937-38/29 Same place - Chola - Tribhuvanachakravartin Rajendracholadeva - 3rd Year, Makara, ba. 14 (Thursday) Uttiradam - Tamil - Registers sale of land to the temple by Araiyan Nityakalyanan alias Pandyarayan of Turayur.

1937-38/30 Same place - Pandya - Maravarman Tribhuvanachakravartin - ...... ndyadava, who took solanadu and was pleased to perform the anointment of heroes and victors at Mudikondasolapuram - 11th year, Mesha, ba. 11, Wednesday - Tamil - Registers gift of land after purchase, for a flower - garden to the god, by a certain Venadudaiyar and his brother Maduraipperumal alias Magadarayar.

1937-37/31 South wall of the third prakara of the same temple - Chola - Rajakesarivarman alias Tribhuvanachakravartin Rajarajadeva - 28th year, Dhanus, ba. 2, Monday ...... Tamil - Begins with the introduction Sirmanni-irunangu, etc. Registers sale of land in Sembiyanallur in Pachchil-kurram, a subdivision of Rajaraja-valanadu, to the temple, by the person mentioned in No. 29 above.

1937-38/32 Same wall - ...... - Rajakesarivarman alias Tribhuvanachakravartin Rajarajadeva - 16 plus 1st year (kanni) ba. 11, Sunday Pusam. Tamil - Begins with the same introduction. Registers a similar sale of land in Rajarajan-Kurrangudi by several persons of Turaiyur to the temple. Mentions a Jain temple (Amanapalli) named Kavirajapperumballi.

1937-38/33 Same wall - ...... - Lost - 16 plus 1st year ... Sunday - Tamil Registers sale of land in Kilarrur alias Rajarajan-Kurrangudi, to the temple, by, two persons of Turaiyur.

1937-38/34 Same wall - Chola - Tribhuvanachakravartin Rajarajadeva - 16 plus 1st year (Kanni) 11, Sunday Pusam - Tamil - Registers sale of another piece of land in the same village to the temple by Nityakalyanan Tillaikkuttan alias Alvar Malanattu - Vilupparaiyan of Turaiyur.

1937-38/35 Same wall - Chola - Rajakesarivarman alias Tribhuvanachakravartin Rajarajadeva - 16 plus 1st year (kanni ba.) 11 Sunday Pusam - Tamil - Registers similar sale of land in the same village to the temple by several persons of Turaiyur.

1937-38/36 Same wall - Chola - Rajakesarivarman alias Tribhuvanachakravartin Rajarajadeva - 16 plus 1st year (Kanni ba.) 11 Sunday Pusam - Tamil - Registers similar sale of land in the same village to the temple by several persons of Turaiyur.

1937–38/37 Same wall – Chola – Rajakesarivarman alias Tribhuvana-chakravartin Rajarajadeva – 16 plus 1st year (Kanni ba.) 11 Sunday Pusam – Tamil – Registers sale of land in the village Valadi in Kil-Pilaru of Pachchil-Kurram, a sub-division of Rajaraja valanadu by Sendan alias Alavandan of Dharma-puram in Mulayur-nadu, a subdivision of Uyyakkondarvala-nadu 'on the southern bank'

1937–38/38 Same wall – ...... – Tribhuvanachakravartin Konerinmai-kondan – 21st year 316th day – Tamil – Registers that at the instance of Tondaiman, some lands in Paluvur alias Rajendrasolanallur and Enadimangalam were clubbed together into a village called Kulottungasolan Puluvur and given as jammakkani to Nakkan Aravan, the headman of Paluvur. Mentions the royal secretary Minavan-Muvenda-velan.

1937–38/39 Same wall – Chola – Tribhuvanachakravartin Kulottunga-Choladeva 'who took Madura, Karuvur and the crowned head of the Pandya' – 21st year 300th day – Tamil – Engraved in continuation of the above inscription, Registers the ulvari relating to the same transaction.

1937–38/40 Same wall – Chola – Tribhuvanachakravartin Konerinmai-kendan – 21st year, 316th day – Tamil – Registers the assignment of certain other lands as janmakkani to the person mentioned in No. 38 above.

1937–38/41 Same wall – Chola – Tribhuvanachakravartin Kulottunga choladeva 'who was pleased to take Madura, Ilam and the crowned head of the Pandya' – 21st year – Tamil – Registers the ulvari relating to the transaction mentioned in No. 40 above.

1937–38/42 Loose stone lying in the same prakara – Madura Nayak Vijayaranga-chokkanatha-Nayaka – ...... – Telugu – Records the perpetual devotion of the king (to the god). The name of 'Multan Apa Kale' is also engraved in Devanagari script at the proper right end of the stone.

1937–38/43 Another stone in the same place – ...... – ...... – ...... – Tamil – Gives the name Tachi-Nachyarakka.

1937–38/44 Another stone in the same place – ...... – ...... – ...... – Sanskrit in Nagari – Records the perpetual devotion (to the god) of Gangori-Nayak (Khide) and his wife, whose representations are also engraved on the stone.

1937–38/45 Another stone in the same place – ...... – ...... – ...... – Sanskrit in Nagari – Records the perpetual devotion (to the god) of

Bapurav Raghunath. The figure of a lady in a worshipping posture is engraved on the same stone. A record on another slab in Telugu characters mentions Tirumalamma.

1937–38/46 Slab in the mandapa in the north-east corner of the same prakara – ...... – ...... – ...... – Tamil – Modern. States that this (probably the mandapa) was the gift of the five classes of artizans (anju-jatiyar) Another slab in the same mandapa contains an incomplete inscription in Telugu, dated in Sarvadhari, Pushya, sul. 4, Monday, and mentions a certain Gopalayya of Kuruchedu and his son.

1937–38/47 East wall of the east gopura in the third prakara of the same temple – ...... – ...... – ...... – Tamil verse – Incomplete–States that the Pandya king Maran who was crowned at Ayirattali, had this (inscription) engraved in the 3rd year of his reign.

1937–38/48 Two slabs built into the floor of the mandapa near the Jambutirtha tank on the eastern side of the fourth prakara – Madura Nayaka – ...... – Sobhakrit – Telugu States that the steps and the mandapa were the gift of Vaidyappaya, son of Venkatesvaraya, an instructor in natakasala of Vijayaranga-Chokkanathan-Nayaka.

1937–38/49 Slabs built into the eastern parapet wall of the same tank – Madura Nayaka – Madurai Nayaka – ...... – Plava, Vaiyasi 5 – Telugu – States that this (parapet wall) was the gift of the same person.

1937–38/50 West wall of the Sankaralaya in the same prakara – ...... – ...... – ...... – Sanskrit in Telugu – In characters of the 17th Century A.D. States that Mahadeva-Makhin died in (the year) Visvavasu.

1937–38/51 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – In characters of the 17th century A. D. States that Mahadeva–Makhin died in (the year) Visvavasu Contains some laudatory verses, apparently composed by Sadasiva–Makhin, on god Siva.

1937–38/52 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – In praise of Sadasiva Makhindra who expounded the sanctity of the three names of Siva (Siva–nama–trayam)

1937–38/53 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – Verse in praise of Sadasiva–Vajapeyayaji, who built the shrine of Harihara and several mandapas and tanks.

1937–38/54 Same wall – ... – ... – ... – Telugu Verse – Another verse in praise of Sadasiva and his literary attainments.

1937–38/55 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – States that he alone is a learned man who interprets pranava in the Advaitic sense.

1937–38/56 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – A verse in praise of the three names of Siva.

1937–38/57 Same wall – ... – ... – Jaya ... – Sanskrit in Grantha – States that Sadasiva Makhin became the dharmakarta (of the temple)

1937–38/58 Same wall – ... – ... – ... – Telugu in Grantha – Records the perpetual devotion of Mahavrata – Ayya Subramanya, son of Ramakrishna Dikshita.

1937–38/59 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – States that two pillars were set up by Sadasiva Makhin in the temple of Sankaresa and Matribhutesvara.

1937–38/60 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – Verses in praise of God Sankaresa.

1937–38/61 Same wall – ... – ... – ... – Sanskrit Telugu – Contains some of the laudatory verses (given in No. 51 above) on god Siva, apparently composed by Sadasiva–Makhindra.

1937–38/62 South wall of the same shrine – ... – ... – Sanskrit in Telugu – Verses in praise of Sadasiva Makhin and of the Siva cult which he propagated.

1937–38/63 Same wall – ... – ... – ... – Sanskrit in Grantha – Three verses in praise of Sadasiva Makhin.

1937–38/64 Same wall – ... – ... – Saka 1596, Pramadicha, Vrichika, su. 2, Friday – Tamil – registers gift of land by Sadasiva Vajapeyayajilar Ayyan on the occasion of his performing a Vajapeya–yaga in the temple, for a twillight service (*pradosha-kattalai*). The donor was the son of Mahadeva Dikshita and the grandson of Srikantha – Akasavasi Chandrasekhara – Vajapeyayaji.

1937–38/65 Same wall – Chola – Tribhuvanachakravartin Rajarajadeva Lost. Tamil – Built in in the middle. Registers a pact entered into by some chiefs, one of whom was ...... Rajendra-solan alias Uraiyur – Nadalvan.

1937–38/66 East wall of the same shrine – ... – ... – Vikramavaisakha, Sanskrit in Telugu – States that Sadasiva–Makhin installed a Jayastambha embodying the three great names of Siva.



யாகசாலையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி புதுப் பெரியவர்களும்
ஏனைய பிரமுகர்களும்



பிரதான கலசங்கள் யாகசாலையிலிருந்து புறப்படுகின்றன

1937–38/67 North wall of the same shrine – ...... – ...... – ...... – Sanskrit in telugu – Records the setting up of a pillar containing the three names of Siva, in the presence of Matribhutesvara, apparently by Sadasiva-Dikshita.

1937–38/68 Same wall – ...... – ...... – Sanskrit in Grantha – Contains verses in praise of Sadasiva-Dikshita and refers to the completion of the temple, probably the Sankaralaya.

1937–38/69 Same wall – ...... – ...... – ...... – Sanskrit in Telugu – Refers to the death of the wife of Mahadeva-Makhindra in the year Kalayukti.

1937–38/70 Same wall – ...... – ...... – ...... – Tamil verse – States that Sadasiva-Makhin, son of Mahadeva-Dikshita, built several structures such as Darukavana-Vilasam, etc.

1937–38/71 Same wall – ...... – ...... – ... .. – Tamil verse – Damaged and built in. Refers to the composition of several prabandhas on the god at Kavai (Tiruvanaikkavu)

1937–38/72 Door-jamb at the northern entrance into the fourth prakara – ...... – ...... – Plava, Margali – Telugu – In modern characters. States that the gate was erected by Akhilandayya, son of Lingaraju, for the goddess Akhilandesvari. On the opposite jamb is found another record in Telugu mentioning the perpetual devotion of this Akhilandayya.

1937–38/73 South outer wall of the fourth prakara, inside (in the Kolaikarantoppu) – Chola – Tribhuvanachakravartin Rajendra Choladeva (III) – 6th year (in words) Kanni, ba. 3, Monday, Asvati – Tamil – Registers a gift of land in Tiruvellarai in Pachchil-kurram, by purchase, by Singanna-Dandanayaka for offerings and worship to god Sidevisvaram – Udayar consecrated by him.

1937–38/74 Jamb of the west gopura at the entrance into the third prakara – ...... – ...... – ...... – Sanskrit Grantha – A verse in praise of Sadasiva-Makhin.

1937–38/75 Inner wall of the west gopura at the entrance into the fourth prakara, proper left – ...... – ...... – Saka 1357 (express in chronogram) Rakshasa, Tula, Krishnarkka-tithi (ba. 7) aditi-dina (Punarvasu) Mantrivara (Friday) – Sanskrit in Grantha – Incomplete. States that the gopura was built by Chandra-pendra, son of Adityadeva of the Vasishtha-gotra to the god Jambunatha.

1937–38/76 Same gopura, proper right – ...... – ...... – Tamil – States that this is the gift of the person mentioned above.

1937–38/77 North wall of the Vibhuti-prakara, right of entrance – ...... – ...... – ...... – Tamil – In characters of the 14th Cenrury A.D. States that the wall (tirumaligai) is (the gift of) Tirunirru-Sundara-Pandyan.

1937–38/78 Niche containing an image in the wall of the mandapa near the temple car in the fourth prakara – ...... – ...... – ...... – Tamil – Gives the name of the figure as 'Ariganda Tambiran-swami'.

1937–38/79 Slab set up in front of the outermost western gopura – ...... – ...... – Saka 1764, Subhakrit – Tamil – Records the institution of the *ardhajamakkattalai* in the shrine of the goddess Akhilandesvari-Amman from a portion of the interest on a trust-fund of a lakh of varahan endowed by Pachayappa Mudaliyar of Kanchipuram.

# நிகழ்ச்சி

# நன்ருக நடைபெற்றது.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளே வடிவான அன்னே. அவர் கையில் அங்குசம் பாசம் முதலான கொலேக் கருவிகள் இல்லே. தாமரை மலர்கள் உள்ளன. மற்ற இரண்டு கைளில் ஒன்று 'அஞ்சாதே' என்று அடைக்கலம் அருளும் அபயஹஸ்தம். மற்றென்று 'இந்தா வேண்டியதை எல்லாம் பெற்றுக் கொள்' என்னும் வரதஹஸ்தம். முகத்திலே கருணே ததும்பும் சாந்தம்; கண்களிலே வருகிற அன்பர்களே 'வா அப்பா' என்று வரவேற்க எதிர்நோக்கியிருக்கும் இனிய பார்வை. இத்தனே எண்ணங்களேயும் எல்லோருக்கும் எப்போதும் உண்டாக்குகிற நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இந்த அன்னேக்குக் கல்வெட்டுக்களிலே 'உலகம் முழுதும் உடையாள்' என்பது பெயர். இப்படிக் கருணே ததும்ப இருந்தால் உலகம் முழுதும் அன்னேக்கு உடைமையாகக் கேட்பானேன்?

ஐயா ஸ்ரீ ஜம்புநாதரோ ஒரே நீர்த்திரள்; எப்போதும் 'குளுகுளு' என்றிருக்கும் நிலே. கண்ட அன்பர்கள் 'சோதியே சுடரே' என்ருர்களே! 'இருநிலனய்த் தீயாகி' என்ருர்களே. பெருமான் யாரும் அணுகமுடியாத அண்ணுமலேயாகத் தீப்பிழம்பாகச் சுட்டுப் பொசுக்கும் திப்பிழம்பாக இருப்பாரோ என்ற அச்சத்துடன் அணுகிஞல் நம் உடம்பு குளிருகிறது; உள்ளம் குளிருகிறது. எல்லாம் குளிருகிறது. இங்ஙனம் எதிர்பாராத தண்ணளி.

இவர்களுடைய மூத்த பிள்ளே ஓங்காரப் பிள்ளே. அவரோ அப்பாவையும் அம்மாவையும் உரித்து வைத்ததுபோன்ற இரண்டுபேருடைய உருவமும் குணமும் ஒத்து விளங்குகிருர். அம்மாவையும் அப்பாவையும் போலத்தானே பிள்ளேயிருக்கும். ''ஆத்மா'வை' புத்ரோபவதி'' என்பதுதானே உபநிடதம். அப்பா அகரவடிவு அம்மா உகரவடிவு. அகர உகரம் இணே ந்த வடிவு ஓ. 'யாரும் அறிவர் அகரம் அவன் என்று' திருமூலர். உகரம் சிவசக்தி. ஓங்காரம் பிள்ளேயார். ஸ்தல விநாயகர் ஓங்காரப் பிள்ளேயார். இவரே தாயின் எதிரே யிருக்கும்போது பெரியவராகப் பிரஸந்ந விநாயகர் ஆகிவிட்டார். தாயின் பார்வையிலே இருந்தால் பிள்ளே பெருக்கத்தானே செய்யும். பிரசன்னம் - கருணே. பிரசந்ந விநாயகர் - கருணேயை வணங்கும் கணபதி.

இளேய பிள்ளே, இரண்டு மனேவிகளுடன் இருக்கிருர். இளேயபிள்ளே என்றும் இளேய பிள்ளேதான் 'என்றும் இளேயாய் அழகியாய்' என்றுதானே போற்றிப் புகழ்ந்து புலவர்கள் பேசுகிருர்கள்? இளமையும் அழகும் மணமும் சேர்ந்த ஒரு வடிவம்.

ஜம்புநாதருக்குப் பின்பக்கத்திலே, முதலாளிக்கு அடங்கி ஒடுங்கிப் பின்புறத்திலே யிருக்கும் அடியார். அவர்தான் சண்டேசர். கோயில் சொத்துக்களேப் பாதுகாப்பவர். அன்பர்கள் வழங்கும் பொருள்களே ஏற்றுக் கணக்கு எழுதுபவர் சண்டேசுர தேவகன்மி என்று கல்லெழுத்துக்களிலே பொறிக்கப் பட்டவர். கொடுக்கல் வாங்கல் முதலான சகல கோயில் நிர்வாகங்களும் அவர் பொறுப்பில்தான் நடைபெறுகின்றன. ஆதலால் அவர் கையிலே மழுவையும் தாங்கியிருக்கிருர். ஆனல் அந்த மழு ஏதோ ஆரம்பகாலத்திலே தன் தந்தையின் காலே வெட்டப் பயன்படுத்தப்பட்டதே தவிர வேறு எங்கும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லே. ஆதலால் கோயிலிற் போய் வழிபட்டு வருகின்ற நாம் அவர் முன்பு சென்று மெதுவாக மூன்றுமுறை கைதட்டிச் சிவதரிசன பயனேக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்து வருகிருேம்.

தென்பக்கத்திலே கும்பிட்டு நிற்கின்ற அடியார் கூட்டங்கள். அவர்களுக்கு எதிரிலே சாந்தமே வடிவாய் கல்லால



ஸ்ரீ ஜம்புகேஸ்வர ஸ்வாமி விமான மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது

விருட்சத்தினடியிலேயே விளங்கும் தென் முகக் கடவுளாகிய உபதேச குருமூர்த்தி.

இப்படியாகப் பெரிய சிவகுடும்பம் வாழ்கின்ற பெரிய அரண்மனை திருக்கோவில். அதிலும் திருவானைக்காக் கோவிலாகிய அரண்மனைக்கு ஏழு கோட்டைச் சுவர்களும் பதிஞேரு கோபுரவாயில்களும் இருக்கின்றன.

இத்தகைய சிவ அரண்மனை அப்போதைக் கப்போது சோழபாண்டிய சேர ஹொய்சள நாயக்க மன்னர்கள் பலராலும் சீர்திருத்தப் பெற்றது. இந்தக்கோயிலைக் கட்டுவதற் கென்றே நீர்த்திரள்நாதர் ஒரு சிலந்திப் பூச்சியைச் சோழனுகப் பிறக்கச் செய்தார். இதுபோல இன்னும் எழுபத்திரண்டு கோயிலைத் தமிழகத்திலே கட்டச்செய்தார். அங்கெல்லாம் ஒரு காலத்திலே ஒருசேர எழுந்தருளியிருக்கின்ருர் என்ருல் இவருடைய பேரன்பைப் பாருங்களேன். இந்த அரண்மனையும் கோட்டைச்சுவர்களும் கோட்டைவாசல்களும் கோபுரங்களும் இப்போது சுமார் 22 லட்சம் ரூபா வரையில் செலவழித்துப் புதுக்கப் பெற்றது. அந்தக் காலத்திலே அரசர்கள் ஊரிலே பஞ்சம் போக்கவும்—மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும், செயலிலே ஈடுபடுத்தித் தெய்வ அன்பை வளர்க்கவும் கட்டினுர்கள். இந்தக்காலத்திலே நாம் எல்லாரும் இந் நாட்டு மன்னர்கள் ஆகையால் நாமே பொன்னுக—பொருளாக உழைப்பாக— உள்ளமாக எல்லாம் கொடுத்து இக்கோயிலை இன்று புதுக்கினேம்: புதுக்குகிறேம் என்னலாமே.

புதுக்கிய அரண்மனைக்கு நம் அரசர் பெருமக்களாகிய ஜம்புநாதனையும் உலக முழுதுடையாளையும் எழுந்தருளச் செய்ய வேண்டாமா? அப்படி எழுந்தருளச் செய்யும் கிரியைகளே மகாகும்பாபிஷேகம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ‘பெருமானே! உம்முடைய அருளால் இந்த அரண்மனையைப் புதுக்கப்போகிறேம்; கொஞ்சம் திருவருள் சுரந்து தாங்கள் இந்த இடத்தை விட்டு நாங்கள் அமைத்துத்தரும் சிறிய கோயிலில் எழுந்தருளவேண்டும்; நாங்கள் பெரிய கோவிலைத் திருப்பணி செய்து முடித்த பின்பு அங்கு எழுந்தருளலாம்; அதுவரை இங்கிருந்து எங்களுக்கெல்லாம் அருள் செய்யவேண்டும்’ என்று வேண்டிக் கொள்வதே பாலாலய பிரதிட்டை. அல்லது இளங்கோயிலில் எழுந்தருளச் செய்கின்ற ஆமகமுறை.

இப்படி இளங்கோவிலில் எழுந்தருளிய பெருமானையும் பெருமாட்டியையும் எப் போதும் உள்ள பெருங்கோவிலில் குடும்பத் துடன் எழுந்தருளச் செய்வதே மகா கும்பாபிஷேகம்.

உலகமுழுதுடையாள் குடும்பம் மிகப் பெரியது. ஆதலால் எல்லோரையும் ஒரே நாளில் ஒரே முகூர்த்தத்தில் எழுந்தருளச் செய்ய இயலாதோ என்ற எண்ணம் உண் டாயிற்று திருப்பணிச் செல்வர்களுக்கு. அதனுல் சாதாரண ஆண்டு ஆனித்திங்கள் 17உ புதன்கிழமை ஈசானிய விநாயகர் முதலான சகல பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் செய்ய எண்ணினுர்கள். அவர்களுக்குத் திருவருள் வாய்ப்பும் கிடைத்தது. அதற்காக ஆனி மீ 14உ ஞாயிற்றுக்கிழமையே நாள்கொள்ளத் தொடங்கினுர்கள். அன்று காலை 6 மணிக்கே காவேரியிலிருந்து திருமஞ்சனம் எடுத்து வந்தார்கள். இந்தவூர் யானைக்குத்தான் திருமஞ்சனத்தை எடுத்துவரும் புண்ணியம் கிடைத்தது. நல்ல கூட்டம். எல்லாரும் நீராடி வீபூதி தரித்துக்கொண்டு தூய்மை யுடன் வாயும் சிந்தையும் சிவத்துதிகளை முழங்க, சகல வாத்தியங்களும் ஒலிக்கத் திருக்கோயிலுக்குக் கொண்டுவந்தார்கள்.

ஓங்கார கணபதிதானே ஸ்தல விநாயகர். அவர் முன்னிலையிலே அதாவது சுவாமியின் உள் தெற்குப் பிரகாரத்திலே மாவிலைத் தோரணங்கள் கட்டப்பெற்றிருந்தன. வாழைமரங்கள் கட்டப்பெற்றிருந்தன. விநாயகர் சந்நிதியிலே ஒரு குண்டம் போடப்பெற்றிருந்தது. யாகத்திற்கும் அபிஷேகத்திற்கும் வேண்டிய திரவியங்கள் அனைத்தும் குறைவில்லாமல் வந்திருந்தன. சர்வசாதகம் அல்லூர் சிவாகம பாடசாலை ஆசிரியர் ஆகமபிரவணை விஸ்வநாத

சிவாசாரியார் அவர்கள் தமது சிவாசாரிய பரிவாரங்களுடன் நியமநிஷ்டையுடன் வந்திருந்தார்கள். உள்ளூர் ஸ்தானிகரான பண்டிதர்களும் நித்யகர்மானுட்டானங்களை முடித்துக்கொண்டு வந்திருந்தார்கள். ஓங்கார கணபதிக்கு விசேஷ அபிஷேக அலங்காரங்கள் நடந்தன. பெருமான் முன்னிலையிலே மகாகும்பாபிஷேகத்திற்கு உரிய சில ஆயிரம் ரூபாய்களை வெள்ளித் தட்டிலே சிவப்புப் பட்டை விரித்து அதிலே கொட்டிவைத்தார்கள். அதன்மேல் மகா லட்சுமியை ஆவாகனம் செய்து பூசித்து ஆராதித்தார்கள்.

பின்பு காலை 7–45 மணிக்கு ஓங்கார விநாயகப்பெருமானிடத்திலே பெருமானே ! விக்கின விநாயகரே ! தேவரீர் திருவருளாலே இந்தப் பெரிய காரியத்தை சிவானுக்கிரகத்தோடு தொடங்குகிறோம். காரியமோ மிகப் பெரியது. இது உலகமக்களுக்கே நன்மை தரக்கூடியது. இதிலே எங்களுடைய அறியாமையாலே—மறதியாலே—சூழ்நிலைக் கேட்டாலே—காலவேற்றுமையாலே இடையூறுகள் உண்டாகக்கூடும். கடைசிவரையில் ஒருவித இடையூறும் உண்டாகாத வண்ணம் நித்யமங்களமாக இந்த வைபவத்தை நடத்தி வைத்துக்கொள்ள வேண்டியது தேவரீர் கடமை. நாங்கள் சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய உயிர்கள். பேரறிவும் பெருந்தொழிலும் கைம்மாறு வேண்டாத கருணையும் உடைய தங்கள் காரியமாகிய இதற்கு நாங்கள் எம்மாத்திரம் ? ஆதலால் நாங்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்தருளி இந்த மகோற்சவம் நன்றாக நடக்க அநுமதிதரவேண்டும் என்று அனுக்ஞை பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பிறகு தேச மங்களகாரியமாகிய இது நடப்பதற்கு இடத்தூய்மைக்காக வாஸ்து சாந்தி முதலான சாந்திகள் நடந்தன. விதிப்படி கணபதி ஹோமம் நடைபெற்றது. பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை பரிவார தேவதை யாகசாலையில் மண்டபாலங்காரம் முதலான முன்னணிக் காரியங்கள் நடந்தன.

யாகசாலை உட்பிரகாரத்தில் வடபாலுள்ள மண்டபத்தில் அமைக்கப் பெற்றிருந்தது. வைதிக ஆசாரப்படி அமைதியான முறையில் அமைந்திருந்தது. பின்பு மாலை 7 மணியளவில் மந்திரலோபம் கிரியாலோபம் இன்றி ஆசாரியரட்சாபந்தனம் கலசஸ்தாபனம் கலாசர்ஷணம் முதலான கிரியைகள் நடைபெற்றன. இரவு $10\frac{1}{2}$ மணிக்குப் முதற்கால பூரணாகுதி நடந்தது. காலையிலிருந்து தொடர்ந்து வேலையிருந்தும் பரிவார கும்பாபிஷேகத் தொடக்கமாக இருந்தும் கோயில் கொள்ளாமல் அன்பர்கள் கூடியிருந்தது மக்கள் மனநிலையை அறிந்து இன்புறத்தக்கதாக இருந்தது.

தொடக்கத்திலிருந்தே அறுபதுக்கும் மேற்பட்ட வேதபாரகர்கள் வேதாத்தியயனம் செய்தார்கள். நான்கு வேதங்களும் தனித்தனியே நடந்தன. ஆகம சிவாசாரியர்களில் சுமார் நூறு பேருக்குமேல் வந்திருந்தார்கள். அத்தனை பேரும் ஆகமக் கிரியைகளைச் சரிவரக் கவனித்துக் கொண்டார்கள். அறுபதிற்கு மேற்பட்ட ஓதுவா மூர்த்திகள் பல ஊர்களிலிருந்து வந்திருந்தார்கள். கானத்திற் சிறந்தவர்கள். சிறந்த சிவவேடத்தோடு அவர்கள் யாகசாலை முன்பிருந்து தேவாரம் ஓதினார்கள்.

அடுத்து மூன்று நாட்கள் யாகசாலையில் காலை மாலை இரு வேளைகளிலும் யாக பூசையும் அந்தந்த மூர்த்திகளின் விமானம் மூர்த்திகளுக்குரிய கலசங்களிற் பூசையும் அக்னிகாரியமும் பூர்ணாகுதிகளும் நடந்தன.

ஆனி மீ 17உ (1–7–70) புதன்கிழமை காலை 7 மணியளவில் ஈசானிய விநாயகருக்கு மகாகும்பாபிஷேகம் நடந்தது. மூர்த்திகட்கும் நடந்தது. தீபாராதனை நடந்தவுடன் மக்கள் மகிழ்ச்சியால் 'மகாதேவா' என ஆரவாரித்தனர். இப்படி அதிக ஆடம்பரமும் போதுமான முன்னறிவிப்பும் இல்லாமல் நடந்த பரிவார கும்பாபிஷேகத்திற்கே அதுவும் மகா கும்பாபிஷேகத்திற்கு 8 நாள் முன்கூட்டியே மகாஜனங்கள் திரள்திரளாக வந்து கூடியிருந்து தரிசித்ததும், தேவார திருவாசக பாராயணங்களிற் கலந்து கொண்டதும்

தெய்வ பக்தி சமுதாயத்தில் செழித்து வளர்ந்து இருப்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளும் பெரிய வாய்ப்பாக இருந்தது.

பரிவார தேவதைகட்கு நடந்த கும்பாபி ஷேக வைபவத்தைத்தரிசித்த மக்களுக்கும் அவர்கள் வாயிலாகக் கேட்ட பொதுமக்க ளுக்கும் பெரிய கும்பாபிஷேகம் எப்போது எப்போது என்ற அவாவே தலைதூக்கி நின்றது. ஒவ்வொரு நாளும் மக்கள் வெள் ளம் வந்துவந்து வடிந்துகொண்டிருந்தது.

வந்தது 1–7–70 புதன்கிழமை. புதன் ஞானகாரகன் அல்லவா? பொன் அகப்பட் டாலும் புதன் அகப்படாது என்பார்களே! அதுபோல அகப்படாத அருமையான புதன்கிழமை வந்தது. காலையிலே பிரஸந்ந விநாயகர் பூசை, அனுக்ஞை, தனபூசை என்ற செய்தி பத்திரிகைகள் வாயிலாக வும், செய்தித்தாள்கள், சினிமா சிலைடுகள், சுவரொட்டிகள், பஸ் தட்டிகள் வாயிலாகவும் தமிழ்நாடு எங்கும் பரவியிருந்தது. மக்க ளுக்கும் 7 ஆண்டுகளாக நடக்கும் திருப் பணி எப்போது முடியப்போகிறது கும்பாபி ஷேகம் எப்போது என்று எதிர்நோக்கிக் கொண்டேயிருந்த நேரம். அதனால் முதல் நாளே கோயில் கொள்ளாத பெருங்கூட்டம். மாலை 5 மணியிருக்கும். திருப்பணி அலு வலகத்திலிருந்து வெள்ளித்தட்டு நிறையப் பணத்தைக் கொட்டி எடுத்துக்கொண்டு மற்றைய வரிசைகளுடன் மேளதாள முழங்க குடைகொடி ஆலவட்டங்கள்வர யானை முன்னே செல்ல யாகசாலையை நோக்கித் திருப்பணிக்குழுத் தலைவர்களும் அறங் காவலர்களும் ஏனைய நகரப் பிரமுகர் களும் புறப்பட்டனர். வலமாகக் கோயி லுக்குப் பின்புறமுள்ள யாகசாலையை யடைந்தார்கள்.

யாகசாலையோ புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற பெரிய அழகான கோவில்போல இருந்தது. யாகசாலைக்குள்ளே சுவாமி அம்மன் பிரஸந்ந விநாயகர், சண்டேசர் கந்தர் முதலானவர்களுக்குத் தனித்தனியே வேதிகைகள் இருந்தன. அவரவர்கள் விமானங்களுக்கும் தனிவேதிகைகள் இருந் தன. யாகசாலையமைப்பு முழுதும் செய்து செய்து கைதேர்ந்த சென்னை வாணி ஆர்ட்ஸ் நிறுவனத்தாரால் செய்யப்பெற் றவை. சுமார் பத்து நாளைக்குள் சுருங்கிய செலவில் ஆகம விதிப்படியான ஒரு கோவிலையே கட்டிவிட்டார்கள் எனலாம்.

அங்குச விக்னேஸ்வர பூசை அனுக்ஞை தனபூசை எல்லாம் தொடங்கப்பெற்றது. தனபூசை என்றால் நான் நினைத்துக் கொண்டிருந்தேன் பணத்தைக் கொட்டி வைத்துப் பூசை பண்ணுவது தானே என்று. பணம் இல்லாமல் கும்பாபிஷேகம் நடக்குமா! இதை ஏன் கொட்டிக் கொட்டி ஆடம்பரப்படுத்தவேண்டும். யாகத்திரவி யங்களையும் காட்டவேண்டுமா! என்று நான் எண்ணியதுண்டு. உண்மையில் நடந்த காரியத்தைப் பார்த்தால் என் கருத்து மாறிவிட்டது.

தனபூசை முடிந்ததும் சுவாமிக்கு ஒரு விண்ணப்பம் போட்டார்கள். பெருமானே! இந்தத்தனம் என் முயற்சியால் சம்பாதிக்கப் பட்டவையல்ல; நான் எம்மாத்திரம்? பெருமான் உலகமுழுதுடையாள் கணவன் அல்லவா? தேவியாருக்கு எங்கள் பணத் தைக் கொண்டா கும்பாபிஷேகம் நடத்த முடியும்? எல்லாம் நீர் தந்தது; உம் செல்வம்; நீரே கொடுப்பவர்; நீரே பயன் படுத்திக் கொள்ளப்போகிறீர்! இதில் எனக்கு ஒரு சிறிதும் உரிமையில்லை. ஆதலால் இது சிவ திரவியம்: சிவமாகிய நீரே ஏற்று எங்கள் முயற்சியாலும், பக்தி யாலும், சிரத்தையாலும் கொஞ்சமும் குறைநேராதபடிக் காத்தருளும். மகா சாந்தியாகிய இதனை ஏற்றருளும். மகிழ்ந் தருளும் எல்லா உலகங்களிலும் உள்ள எல்லா உயிர்களும் வாழப் பெருங்கருணை செய்யும். இடைவிடாமல் காப்பாற்றி வாரும் என்று வேண்டிக்கொண்டார்கள். அப் போதுகூட நான் சந்தேகப்பட்டேன். இது என்ன உபசாரவார்த்தை? ஏன் சொல்ல வேண்டும்? என்று. அப்போது மாணிக்க வாசகப் பெருந்தகையருளிய வாசகவரி ஒன்று என் நினைப்பில் உதயமாயிற்று. அது 'ஏற்றறியாக்கையானை' என்பது,

அப்போதுதான் நினைவுவந்தது பெருமான் எல்லாருக்கும் பொன்னும் மெய்ப்பொருளும் தருபவனேயல்லாமல் 'தா' என்று கேட்பவனல்லனே என்று. அதனுல்தான் ஆகமம் எல்லாவற்றையும் சிவார்ப்பணம் செய்து செலவழி. அதனுல் வருகிற புண்யங்கூட உனக்குச் சொந்தமில்லை; அதையும் அவனுக்கே தத்தம் செய்துவிடு என்று சொல்கிறது என்று உணர்ந்தேன். சிவபுண்யம் செய்கிற வகையில்கூட பார்! அந்த ஊரிலே இந்த ஊரிலே நடந்த கும்பாபிஷேகங்களை விட நான் நன்ருக நடத்திவிட்டேன். நான் செய்தது யார் செய்கிற்பார்? என்று தன் முனைப்பாகிய செல்வச் செருக்கு அதிகாரச் செருக்கு தலைக்காட்டிவிடும். அதனையும் அடக்கினுல்தான் மனிதன் உயரமுடியும். செயல்களை எல்லாம் சிவச் செயலாக மாற்ற இதுதான் வழி என்று ஆகம விதியை அருளிய பரமகருணையைப் போற்றிப் புகழ்ந்தேன். கசிந்து கண்ணீர்மல்க நின்றேன்.

இப்படி வந்திருந்த அத்தனைபேரும் கண்ணீரும் கம்பலையுமாக அவன்பாற் கசிந்து நிற்கத் தனபூசை நடந்தது. பிறகும் வழக்கம்போல மறுநாள் காலை 9 மணிக்கு விநாயகப் பெருமானை வழிபட்டனர். திருவருளாணையைப் பெற்ருர்கள். உடனே ஸ்தான சுத்தமாகிய வாஸ்து வழிபாடு தொடங்கியது. வாஸ்து புருஷனுக்குச் சாந்தி செய்தார்கள். பிறகு அம்மன் கோவிலுக்கு எதிரிலுள்ள வில்வமரத்தடியை அடைந்தார்கள். அந்த இடம் சோழ மன்னர்கள் காலத்தில் கோசாலை என்கிற பசுத்தொழுவமாக இருந்த இடமாம். உலகமுழுதுடையாள் தன் முலைப்பாலையுண்ண ஞானசம்பந்தப் பிள்ளை ஒன்றே தகுதியுடையது. நாமோ அனேக கோடிப் பிள்ளைகளைப் பெற்றுவிட்டோம் என்று பால் பண்ணையும் வைத்து அந்த நாளிலே நடத்தியிருப்பார் போலிருக்கிறது. எல்லாருக்கும் பால் வழங்கிப் பசியைப் போக்கியிருப்பார்போலிருக்கிறது. அங்கேயுள்ள வில்வமரத்தடியிலே கொத்திக் கிளறி கலசநீராகிய மந்திரநீரை வார்த்தும் கோஷ்டங்கீறி அதன் மேலே அரிமா மஞ்சள்பொடி யிவற்ருல் பெண்ணுருவம் ஒன்று எழுதி அதிலே பூமிதேவியை மந்திரபூர்வகமாக ஆவாகனஞ் செய்தார்கள் பூசித்தார்கள். யாகசாலைக்கு வேண்டிய மண்ணைப் பூமிதேவியின் கருணையைப் பெற்றுத் தோண்டி எடுத்துக் கொண்டார்கள். யாகசாலைக்கு மேளதாள மரியாதைகளுடன் வந்து பூசித்து யாகசாலையில் சம்பிரதாயமாகப் பயன்படுத்திஞர்கள். அதன் பிறகு விதை தெளித்தல் என்ற கிரியை நடந்தது. அம்மை மிகச் சாமர்த்தியமான உழத்தியல்லவா? இதுவரை வந்த—இனி வரப்போகிற எத்தனை தானிய வகைகள் உண்டோ அத்தனைக்கும் விதை கொடுத்தவள் அவள்தானே! மூலவிதையையும் காஞ்சியிலே மாவடிமகேசனுர் அருளிய இரண்டு படி நெல்லையும் மூலதனமாக வைத்து 32 அறங்களையும் செய்ய முயன்றவள் அல்லவா? வேளாளர்கள் கையிலே கொடுத்துப் பசுமைப்புரட்சி செய்தவள் அல்லவா? ஆதலால் அவளருளால் அங்குரார்ப்பணம் செய்தார்கள். பிறகு காப்புக் கட்டுதல், கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம் முதலியன நடந்தன.

பிறகு பிம்பத்திலிருந்து கும்பத்திற்குப் பெருமான் எழுந்தருள்வதற்காக யாத்ராதானம் யாத்ராஹோமம் முதலியவற்றைச் செய்தார்கள். சுவாமி அம்மன் குடும்பத்துடன் யாகசாலையில் நுழைந்தார்கள். அவர் அவர்களுக்குரிய குடும்பங்களில் எழுதிஞர்கள். மந்திரமயமான பாவனைகள் பாவகமாகக் கலசங்கள் சிவமயமாயின. யாகபூசை முதலாயினவற்றைச் செய்து, சுமார் இரவு $10\frac{1}{2}$ மணியிருக்கும். பூர்ணுகுதி செய்து தீபாராதனை, 16 வகை யுபசாரங்கள் வேதசிவாகம தேவார திருவாசக தோத்திரங்கள், ஆசீர்வாதங்கள் இவற்ருல் பெருமானையும் பெருமாட்டியையும் களிப்பூட்டிஞர்கள். இப்படி முதற்கால யாகசாலை பூசை நன்ருக முடிந்தது.

வெள்ளி விடிந்தது. வழக்கம்போல காலை மாலை இரு வேளையும் விசேஷமான பக்தி சிரத்தையுடன் மக்கள்திரள் கூத்தாடிக் கும்பிட யாக பூசைகள் நடந்தன. 4–7–70




மகா கும்பாபிஷேக சமயப் பேரவையில்
திருச்சி மாவட்டக் கலெக்டர் திரு. சுந்தரராஜ், I.A.S. அவர்கள்
பாராட்டுப் பெறுகிருர்கள்



திருப்பணிக் குழுத் தலைவர் திரு. தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை
அவர்களை திரு. முருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள்
பொன்னுடை போர்த்திப் பாராட்டுகிருர்கள்

சனிக்கிழமையும் அப்படியே. நாள் ஆக ஆக, மந்திர பாவனு சாந்நித்தியம் ஏற ஏற, மக்கள் சமுதாயத்தின் பக்திப் பெருக்கு மிக மிக, குண்டம், கும்பம், பிம்பம் இவற்றில் ஒருவகை ஏதோ கோடி சூரியன் முழு ஒளியையும் காட்டி எரிப்பது போன்ற ஓரொளி யாகசாலை எங்கும் பரவியிருந்தது. இதிற் பங்குகொள்ளும் ஸ்தானீகர்களாகிய பண்டிதமூர்த்திகளும் சாதகம் சர்வசாதகம் செய்யும் சிவாசாரியர்களும் தங்கள் நிலையை மறந்து சிவோசம்பாவனையிற் சிறந்து, பதிசரணம் மேவரப்பெற்றுக் கிரியைகளைச் செய்துவந்தார்கள்.

5–7–70 ஞாயிறு விடிந்தது. காலை 4 மணிக்கே யாகபூஜை தொடங்கியது. 7½ மணிக்கெல்லாம் கடைசிகால பூஜையும் முடிந்து பூர்ணுகுதி நடந்தது. காஞ்சி காமகோடி பீடாதிபதி புதுப் பெரியவாளும் பரிவாரங்களுடன் எழுந்தருளியிருந்தார்கள். 7¾ மணிக்குத் தீபாராதனை, வேத சிவாகம தேவார ஆசீர்வாதங்கள் நடந்தன. விமான கலசங்களுக்கும், மூலத்தானகலசங்களுக்கும் யாத்ராதான முதலான மரியாதைகள் செய்யப்பட்டன. கலசம் முறையாகப் புறப்பட்டு வலமாக அந்தந்த இடத்தை யடைந்தன.

மக்கள் வெள்ளம் அங்கங்கே லக்னம் எப்போது வரப்போகிறது? காலை 9–45 ஏன் இன்னும் ஆகவில்லை என்று அத்தனையாயிரம் மக்கள் கண்களும் கோபுரத்தையும் விமானத்தையும் நோக்கியவண்ணம் இருந்தன. காலை 9½ மணி. அப்போது வெயில் கொளுத்தவேண்டும். அன்று மப்பும் மந்தாரமுமாக ஏதோ திரையிட்டதுபோல இருந்தது. சரியாக 9¾ மணியளவில் கோபுர விமானங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே காலத்தில் மகாகும்பாபிஷேகம் நடந்தது. அப்போது மக்களுக்கு ஒருவகையான ஏமாற்றம். இந்தப் பெருமான் இரண்டு கண்ணைத்தான் கொடுத்திருக்கிறார். அப்படிக் கொடுத்தவராவது ஒவ்வொரு கண்ணும் ஒவ்வொரு பொருளைத் தனித்தனியாகப் பார்க்கக்கூடிய சக்தியுடையதாகப் படைத்திருக்கக்கூடாதா? கண்ணிரண்டும் ஒன்றையே காணப் படைத்துவிட்டாரே! என்ற ஏமாற்றம்.

அப்போது என்னைப்போலச் சிலபேருக்கு 'மாணிக்கவாசகர் உச்சியளவும் கண்ணுருகாதா' என்று கேட்டாரே! அப்போதே நம் அனைவருக்கும் அளித்திருந்தால் இத்தனை கும்பாபிஷேகத்தையும் ஒவ்வொரு கண்ணுற்கண்டு மனம் உருகிக் கண்ணீர் கசிந்து போற்றியிருக்கலாமே என்ற எண்ணமும் உண்டாயிற்று.

விஷயம் தெரிந்தவர்கள் சிலபேர்; விமான தீபாராதனைகளை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருக்காமல் 'விடு விடு' என்று மண்டபத்தை விட்டிறங்கிக் கீழே மூலத்தானத்திற்கு முடிந்தவரை வந்துவிட்டார்கள். அப்போது மணி சுமார் 10 இருக்கும். மூல மூர்த்திகளுக்கு முறையாக மகாசாந்தி அபிஷேகம் நடைபெற்றது. இவை எல்லாவற்றையும் பார்க்கக்கூடிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்திருக்க முடியாது. சிவ புண்ய சீலர்கள் சிலருக்கே கிடைத்ததாம்.

இவ்வண்ணம் அன்னையின் அருளால், நீர்த்திரள்நாதருடைய பேரருளால் பிரசன்னவிநாயகர் துணையால் மகாகும்பாபிஷேகம் எந்தவிதமான குறையும் இல்லாமல், நன்றாக நடைபெற்றது. கண் பெற்ற பயனையடைந்தேன். அடைந்தோம்.

இனிக் கும்பாபிஷேக காலங்களில் காது பெற்ற பயனையுங்கேளுங்கள்.

பரிவார கும்பாபிஷேக யாகசாலை தொடங்கிய அன்று முதலே அதாவது 28–6–70 ஞாயிறு முதல் 5–7–70 ஞாயிறு முடிய வேதாத்யயனம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வந்தது. அங்கங்கே அந்தணப் பெருமக்களும் ஆஸ்திக சிகாமணிகளும் இருந்து கேட்டனர்.

தென்னாட்டில் திருவருள் வாய்ப்பும் பேரும் புகழும் பெற்ற ஓதுவா மூர்த்திகள் சுமார் 60 அல்லது 70 பேர் வந்திருந்தார்கள். நிர்வாக அலுவலர்கள் அத்தனை பேரையும் யாகசாலைக்குப் பக்கத்தில் இருந்து முறையாகத் திருமுறை ஓதச் செய்தார்கள். திருப்பணிக் குழுத் தலைவர் முதலான நிர்

வாகஸ்தர்கள்கூட மெய்ம்மறந்து இருந்து கேட்டு இருமைப்பயனையும் எய்தினர்கள்.

யாகசாலையில் மகாகும்பாபிஷேக மந்திரங்களும், கிரியைகளுக்கு உரிய வசனங்களும், அலங்கார ஆசீர்வாத முதலானவைகளும், தியான ஸ்தோத்திரங்களும் சுருதி லயம் குறையாமல் கானஞ் செய்யப்பெற்றன. இவற்றைக் கானம் செய்தவர்கள் ஆதிசைவ மரபிலேவந்த சிவாசாரியார்கள்.

யாகக்கிரியைகளின் நடைமுறைகளும், அவற்றின் தத்துவங்களும் பொதுமக்களும் தெரிந்து தரிசிக்கக்கூடிய நிலையில் விளக்கமாக ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப் பெற்றது.

28–6–70 முதல் 5–7–70 வரை ஒன்பது நாட்களும், தோத்திர சாத்திரப் பெருமைகளையும், கிரியா தத்துவங்களையும் சிற்ப சித்திர ஆலய நிர்மாண உண்மைகளையும் வேதாந்த சித்தாந்த சமய உண்மைகளையும் வழிபாட்டு முறைகளையும், அன்பர் அடியார் வரலாறுகளையும் அறிந்து மக்கள் அனைவரும் உண்மையான அன்பில் திளைக்க வேண்டும். வழிவழி மீளா ஆளாதல் வேண்டும் என்ற நோக்கத்துடன் சமயப் பிரசாரம் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணி முதல் பிரசங்க மேடையில் தவருமல் நடைபெற்றன. அவற்றை அறங்காவலர் தலைவர் அவர்கள் மிகுந்த பக்திசிரத்தையுடன் மேற்பார்த்து நடத்திவைத்தார்கள். ஒவ்வொருநாளும் திருப்பணிக்குழுத் தலைவரும், அறங்காவலர்களும் தவருமல் வந்து கௌரவித்தார்கள். இந்த மாநாட்டில், திருமந்திரம் பெரியபுராணம், சிவஞான போத முதலான சமய சாத்திரங்கள் தக்க அறிஞர்களாற் பேசப்பட்டன. மக்கள் அனைவரும் அன்பு மனத்துடன் ஈடுபட்டுக் கேட்டு மகிழ்ந்தார்கள். நாளுக்குநாள் கேட்பார் தொகை பெருகிவந்தது.

இதன் நடுவிலே 28–6–70, மாலை 6 மணியளவில் நமது தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு K. V. சுப்பையா அவர்கள் வந்திருந்து ஆயிரக்கால் மண்டபத்துக் கலைக்கண்காட்சியைத் திறந்து வைத்துச் சுமார் 2 மணி நேரம் பேசினர்கள். அன்றுதான் சமயச் சொற்பொழிவுகளின் தொடக்கமும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சு வரலாற்றுச் சாரமாக அமைந்திருந்தது. சிற்ப சித்திரத் திறங்களையும் ஆலய நிர்மாண தத்துவங்களையும் பற்றித் திரு. நாகசாமி M.A., அவர்களும், R. ஜயச்சந்திரன் M.A., அவர்களும் பேசினர்கள். அடுத்து, தொடர்ந்தாற்போல திருமந்திரம் ஐந்து நாளும், பெரிய புராணம் நான்கு நாளும், திருவானைக்காப் புராணம் ஒரு நாளும் நடைபெற்றன. 1–7–70 முதல் மூன்று நாட்கள் மிக உயர்ந்த அருமையான சமயச் சொற்பொழிவுகளைத் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள் நடத்தினர்கள்.

மகாகும்பாபிஷேகத்தன்று மாலை மகாபிஷேக தீபாராதனை முடிந்ததும் எம்பார் விஜயராகவாசாரியார் அவர்கள் குழுவினர் ஸ்ரீ பார்வதிகல்யாண கதாகாலட்சேபம் நடத்தினர்கள். திரளான ஜனங்கள் கேட்டுச் சுவைத்தார்கள்.

மகாகும்பாபிஷேகத்தன்று காலை 6 மணிக்கே திருவிடைமருதூர் நாதசுர கலாநிதி P. வீருசாமிப் பிள்ளையவர்கள் வந்து யாகசாலையின் முன்பு இருந்து தேவாரம் திருவாசகம் முதலான பக்திப் பாடல்களைத் தமது கருவியின் மூலமாகப் பரப்பி மகாஜனங்களின் மனத்தைக் கசிந்துருக வைத்தார்கள்.

ஒருநாள் ஏழிசை வல்லபி, முருக பக்த சிரோன்மணி K. B. சுந்தராம்பாள் அவர்கள் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளையே பெரும் பொருளாகக் கருதித் தமது கானமழையால் ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருவுள்ளத்தைக் குளிர வைத்தார். எல்லாரையுங் குளிரவைக்கும் நீர்த்திரள்நாதரையும் குளிரவைப்பது கானமுதம் ஒன்றுதான் என்பதை அன்று மக்கள் கண்டு கொண்டாடினர்கள்.

கிளாரினெட் எவரெஸ்ட் உயர் திரு. நடராஜன் அவர்கள் கிளாரினெட் கச்சேரி பிரசார மண்டபத்தில் நடந்தது. அதிற் பெருந்திரளான மக்கள் கேட்டின்புற்றனர்.

இப்படி வேத சிவாகம தேவார திருவாசக பாராயணங்களாலும் சமய சம்பந்தமான

சாத்திர தோத்திர புராணச் சொற்பொழிவு களாலும், கதாகாலட்சேபங்களாலும், நாத மயமான வாத்ய கீத கோஷங்களாலும், பூஜா கைங்கரியங்களாலும், மந்திர தந்திர பாராயணங்களாலும், அடியார்களுடைய அரஅர முழக்கங்களாலும் திருவானைக்கா திருக்கயிலாயமாக இரண்டு வாரம் விளங் கிற்று எனலாம்.

மகா கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்தவர் கள் அத்தனை பேருக்கும் ராஜா ஸர். சிதம் பரம் அவர்களால் செட்டியார் சத்திரத்தில் 3 நாட்கள் எப்போதும் உணவளிக்கப் பெற்றது.

நிர்வாகத்துறையில் வந்தவர்களுக்கும், வேத சிவாகம வல்லுநர்கட்கும், தேவார ஓதுவா மூர்த்திகட்கும் திருப்பணிக் குழு வினராலும், ஊரிலுள்ள சிவபக்த சிரோமணி கள் சிலராலும் உணவளிக்கப் பெற்றது.

திருப்பணிக் குழுவால், வணிகப் பெரு மக்கள் ஆதரவில் வேதாத்யயனம் தேவார பாராயணம், ஆசாரியத்வம் செய்தவர்கள் அத்தனை பேருக்கும் வஸ்திராதானமும் செய்யப்பெற்றது. சம்பாவனைகளும் தக்க வகையில் வழங்கப் பெற்றன.

இந்த மகா கும்பாபிஷேகத்திற்காக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீமத் புதுப் பெரியவாள் எழுந்தருளி மூன்று நாட்களும் யாகசாலைக்கு விஜயம் செய்து, அகிலாண் டேஸ்வரி அருளையும் பெற்றுப் பொதுமக்க ளுக்கு வழங்கியது ஈடும் இணையுமில்லாத சிறப்பாகும். அத்துடன் அவர்கள் 51 பொற் காசுகளில் 51 அட்சரங்கள் எழுதிய கல் லிழைத்த அக்ஷரமாலிகை யொன்றை அம்பாளுக்குச் சாத்தினார்கள். பின்பு திருப் பணிக் குழுத் தலைவர் தி. மூ. நாராயண சாமிப் பிள்ளையவர்களுக்கு வெண் பட் டாடை சூட்டி நவரத்னமாலை ஒன்றையும் அணிவித்தார்கள். இது அகிலாண்டேஸ்வரி சந்நிதியில் நடந்ததால் ஸ்ரீமான் பிள்ளை யவர்கள் செந்தமிழ் கேட்டு ஸ்ரீ மீனாட்சியே வந்து முத்தாரம் சாத்தியதுபோல என் தாய் அகிலாண்டேஸ்வரியே ஆசாரியமூர்த்தியாக வந்து அருட் பிரசாதம் வழங்கினார்கள் என்று மக்கள் ஸ்ரீமான் பிள்ளையவர்களைப் பாராட்டினார்கள். கோயில் மதில்களுக்குள் இருப்பதால் கோயிலுக்குள் வரமுடியாத மக்களும் கும்பாபிஷேக வைபவச் சிறப் புக்களை அறிந்துகொள்ள—அனுபவிக்கத் திருச்சி வானொலி நிலையத்தார் நிகழ்ச்சி களை ஒன்று விடாமல் நேர்முக வருணனை செய்தார்கள். கண்ணுற் காணவேண்டிய நிகழ்ச்சிகளைக் காதாற் கேட்டு எல்லாரும் பயன் பெற்றார்கள்.

கும்பாபிஷேகத்தன்று மாலை 4 மணி யளவில் மகாபிஷேகம் நடந்தது. பின்னர் இரவு 11 மணிக்கு பஞ்சமூர்த்திகளும் இடபவாகனத்தில் வீதியுலா எழுந்தருளினர். வீருசாமிப் பிள்ளையவர்கள் நாதவெள்ளத் தில் ஜம்புநாதனையழைத்துச்சென்றார். பெரு மானே பின்வரும் தெய்வத்திருநெறிய தமிழிசை வெள்ளத்தில் ஈடுபட்டுப் பின்னும் போகமுடியாமல் முன்னும் போகமுடியாமல் மிகமிக மெதுவாக உலாப்போந்த காட்சி மக்கள் மனத்தைப் பாகாய் உருக்கிப் பக்குவப்படுத்தியது.

மக்கள் அனைவரும் ‘ இந்த ஆண்டு கண்ட இந்த ஒரு காட்சியே போதும் நாங்கள் பிறவிக்கடலிலிருந்து கரையேற ’ என்று கனிந்து கூறினார்கள்.

இவ்வண்ணம் எல்லாவகையிலும் சிறப் பாக மக்கள் மன ஒருமைப்பாட்டாலேயே உருவாகிய திருப்பணி மகா கும்பாபி ஷேக வைபவத்துடன் இனிது நிறை வேறியது.

“ என்றும் இன்பம் பெருக இருக்கலாம் ”

—சேக்கிழார்

சிவம்

### சித்தாய வேடத்தன்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார் எம்மாடு
சும்மாடாம் ஏவர்நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை சிறுவிறகால்
தீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித் திருவானைக்
காவுடைய செல்வர்என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய்கேனே.

### திருவானைக்காவிலுறைதேன்

உரையாரும் புகழானே யொற்றியூராய் கச்சியே
கம்பனே காரோணத்தாய்
விரையாரும் மலர்தூவி வணங்குவார்பால் மிக்கானே
அக்காலம் ஆரம்பூண்டாய்
திரையாரும் புனற்பொன்னித் தீர்த்தம் மல்குதிருவானைக்
காவிலுறை தேனேவானோர்
அரையாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய்கேனே.

### ஆனைக்காவுள்மேய அண்ணா

விண்ணாரும் புனல்பொதிசெஞ் சடையாய் வேதநெறியானே
யெறிகடலின் நஞ்சமுண்டாய்
எண்ணாரும் புகழானேஉன்னை யெம்மான் என்றென்றே
நாவினில்எப் பொழுதும்உன்னிக்
கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப் போதுங்கடிபொழில்சூழ்
தென்னானைக் காவுள்மேய
அண்ணாநின் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்லகண்டங்
கொண்டடியேன் என்செய்கேனே.

—திருநாவுக்கரசர்

# விளம்பரங்கள்

Standardise on

# PERKINS 6.354V

**VEHICLE DIESEL ENGINE**

## the most reliable and inexpensive power unit

**Why is one engine preferred? For clear exhaust, fast travelling with maximum load, smoothness, manoeuvrability and ease of operation.**

**Perkins is the ideally suited truck diesel engine because it ensures these regular features with other plus features. For example:—**

Direct injection combustion system with distributor type fuel injection pump. Automatic advance and retard of the injection system and hydraulic governing ensure exceptionally low fuel consumption under all operating conditions.

Timing drive through helical gears.

Low weight per unit power and compactness mean extra payload.

All components that require routine service are easily accessible.

12 volt electrical equipment ensures positive and instant starting under normal conditions.

*· AND SIMPSONS ENSURE GENUINE REPLACEMENT PARTS ARE ALWAYS AVAILABLE READILY*

for PERKINS Engines
Simpsons Genuine Spare Parts

Simpson & Co Ltd

**202/203, Mount Road,**
**Madras-2.**
Branches at: Ootacamund, Bangalore, Tiruchirapalli, Secunderabad.



S. 352

Telephone: 4164

# YESODHAI PAPER STORES

37, CHINNAKADAI STREET

TIRUCHIRAPALLI-2

*Head Office:*

REDDIAR BANGALOW, SRIRANGAM

Phone: 4742

*

*Distributors:*

M/s. Seshasayee Paper & Boards Ltd.

*Dealers:*

West Coast Paper Mills

*Stockists:*

Mysore Paper Mills

Andhra Pradesh Paper Mills

Arvind Straw Boards

Tamilnad Card Boards

BHOR BOOK BINDING CLOTHS

etc. etc. etc. etc.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருவருளால் அடியிற்கண்ட பாதைகளில் நாங்கள் மக்கள் நல்லாதரவுடன் பஸ் சர்வீஸ் நடத்தி வருகிறோம் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

1. பெரம்பலூர் — சீர்காழி
2. பெரம்பலூர் — பாலப்பட்டி
3. பூலாம்பாடி — மோகனூர்
4. விருத்தாசலம் — மூவானூர்
5. அரியலூர் — நல்லப்ப நாயக்கன்பட்டி

**பாரத் டிரான்ஸ்போர்ட்ஸ்**

**பெரம்பலூர் திருச்சி ஜில்லா**

பருக பருக குதூகலம் அளிக்கும்
கனிரச பானங்கள்
ரொட்டி, கேக், பன், பிஸ்கட்களுக்கு
60 ஆண்டுகளாகப் புகழ் பெயர்
பெற்ற ஸ்தாபனம்
**வின் ஸென் ட்**

தயாரிப்பாளர்கள் :

**வின்ஸென்ட் & கம்பெனி பிரைவேட் லிமிடெட்**

**திருச்சி & கிளைகள்**

*With the best compliments of*

# JUPITER FLOUR MILLS (P) LTD.

18, SUB-JAIL ROAD, TIRUCHIRAPALLI-8

*Tel*: MAIDA *Phone*: 3514

*With the best complements of*

POPULAR AUTOMOBILES (P) LTD.

4, McDONALD'S ROAD

CANTONMENT, TIRUCHIRAPALLI-1

Phone : 5155



## To get reliable auto spares to you, wherever you are, TVS reach you through 16 offices and over 1,000 outlets.

Precisely why leading makers of auto spares associate themselves with TVS to reach their products to you.

A far-reaching distribution network of 16 offices and over 1000 outlets in the 4 Southern States.

Regular supply of quality spares at reasonable costs.

A stock of spares worth Rs. 20 million maintained at all times for instant availability.

**You can be sure of reliable and regular supplies of all auto spares marketed by TVS.**

**Dependable auto spares marketed by TVS, Sundaram Motors and Madras Auto Service:**

Wheels India - Commercial vehicle, tractor and car wheels; Lucas-TVS - Automobile electrical equipment; Brakes India - Hydraulic brake system; Sundaram Clayton - Compressors and servos; Sirubber - Engine mountings and bushing kits; Sunkast - Clutch housings, brake drums and king pins; TVS-Hydraulic brake parts; Standard - Battery; Mico - Fuel injection parts; KAP - Auto parts; Rolon - Timing chains; QHR - Tie rod ends; Hella - horns; Banco Royal - Gaskets and Radiators; Tranco - Valves; Allite - Bulbs; Fenner - Fan belts; NBC - Ball bearings; Ferodo - Brake linings and clutch facings; AP - Lubrication fittings; Double Life - Precision parts; Fritz - Filter elements; ABC - Roller bearings; TEX - Wiper arms and blades; Torsion-TVS - Springs and leaves.

**Dependable auto spares marketed by IMPAL:**

Torsion-TVS - Springs and leaves; Swastik-TVS - Oil seals; Brakes India - Girling Brake equipment and linings; Sunkast - Clutch housings, brake drums and king pins; Sirubber - Engine mountings and bushing kits; Demm-India - Transmission gears; MJC - Automobile switches; ABC - Bearings; Autolec - Auto parts; Imported roller and taper roller bearings.

GM spares for Chevrolet, Buick, Oldsmobile, Pontiac, Cadillac, GMC trucks, Vauxhall cars, Bedford trucks and Opel; Delco products; AC - Fuel pumps, TRW-Toledo - Engine and chassis parts; Kent-Moore - Tools and garage equipment; Pedric - Piston rings.

**You can trust TVS**

**T V SUNDRAM IYENGAR & SONS PRIVATE LIMITED**
Madurai – Tiruchi – Tirunelveli – Pudukkottai – Salem – Coimbatore – Trivandrum – Ernakulam

**SUNDARAM MOTORS PRIVATE LIMITED**
Madras – Bangalore – Secunderabad – Visakhapatnam

**MADRAS AUTO SERVICE PRIVATE LIMITED**
Madras – Bangalore – Vijayawada

**INDIA MOTOR PARTS & ACCESSORIES LTD.**
Madras

TVS-5279

தந்தி : 'கோஆப் பாங்கு' தபால் பெட்டி எண் : 324 தொலைபேசி எண் : 4189

## திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்

### திருச்சிராப்பள்ளி–2

**கிளைகள் :**

கரூர், அரியலூர், மணப்பாறை, துறையூர், லால்குடி, பெரம்பலூர், தில்லைநகர் (திருச்சி), ஜெயங்கொண்டம், குளித்தலை, முசிரி, வேலாயுதம்பாளையம்.

தலைவர் : திரு. அ. பெ. தர்மலிங்கம்

**பாங்கு பெறும் வைப்புகளுக்குக் கொடுக்கப்படும் வட்டி விகித விபரம்**

நிரந்தர வைப்புகள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 91 நாட்கள் | முதல் | 6 மாதங்களுக்குட்பட்டு | | ... | 4·5% |
| 6 மாதங்கள் | முதல் | 12 | ,, | ... | 5% |
| 12 | ,, | 24 | ,, | ... | 5·75% |
| 24 | ,, | 36 | ,, | ... | 6·25% |
| 36 | ,, | 60 | ,, | ... | 6·75% |
| 60 | ,, | 70 | ,, | ... | 7% |
| 70 மாதங்களுக்கும் அதற்கு மேலும் | | | | ... | 7·25% |

நடப்புக் கணக்குக்கு 0·5%ம், சேமிப்புக் கணக்கிற்கு 3·5%ம், மாதாந்திர வைப்புக்கு 6·5% தனி வட்டியும், பாதுகாப்பு வைப்புக்கு 6·5% கூட்டு வட்டியும் கொடுக்கப்படுகிறது.

பாங்கு மேலும் பல சிறப்புச் சேவைகளும் செய்து வருகிறது. விபரங்களுக்கு செயலாளருக்கு எழுதவும்.

வே. முருகேசன்,
செயலாளர்.

தினமலர்

வியாபாரத்தைப் பெருக்க விளம்பரம் செய்யுங்கள்

தமிழ் நாட்டின் காலைத் தமிழ்த் தினசரிகளில்
விற்பனையில் மூன்றாவது இடத்தைப் பெற்றது
என அத்தாட்சி பெற்றது

# தினமலர்

திருநெல்வேலி, திருச்சியிலிருந்து ஒரேநேரத்தில் வெளிவருகிறது

விளம்பரம் செய்யத் தொடர்பு கொள்க :

விளம்பர நிர்வாகி,
தினமலர்,
த. பெ. எண் : 4
திருநெல்வேலி–3

விளம்பர நிர்வாகி,
தினமலர்,
த. பெ. எண் : 43
திருச்சிராப்பள்ளி–1

TSRM

We congratulate the Members of Renovation Committee who have organised the Ashta Bandhana Maha Kumbabishekam in Sri Akilandeswari Jambukeswarar Temple. We join them in their efforts to make it a grand success. We wish the function a **Grand Success.**

We serve the building industry by supplying 10 to 20 mm. rounds in Mild Steel Grades. Low Alloy grade steels will also be rolled on specific orders. We have done our bit in exporting MS Rounds of over 12,500 tonnes to countries in Middle East and South East Asia. For reliable and quality product you can depend on us.

★

# TRICHY STEEL ROLLING MILLS LIMITED

## SENTHANNIPURAM, TIRUCHIRAPALLI-4

(TAMIL NADU)

*Regd. Office:*

T. V. S. BUILDING, MADURAI-1

*Telex No.* 045-204
*Answer Back Code* ROLMILL-TR

*Grams:* ROLMILL
*Phone:* **Works:** 5301 (3 lines)
**Office:** 3220
**Regd. Office:** 24385

*With the best compliments of*

**Sri. D. RANGASWAMY UDAYAR**

**DHARMARAJA TRANSPORTS**

**TIRUCHIRAPALLI**

**அனைத்திந்தியாவிலும்**

சிற்றூர்ப் பகுதிகளை மின்சார மயமாக்குவதில்

**எங்கள் நிறுவனம்**

முன்னணியில் நிற்பதை அறிவர்

**மின்வழங்கும் பணியில்**

எங்கள் நிறுவனம் சென்ற 41 ஆண்டுகளாகத் தன்னால் இயன்ற உழைப்பைத் தளராது அளித்து வருகிறது. வீடுகள், வீதிகள், கடைகள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாய நிலங்கள் ஆகியவை இன்று மின்னொளியும் மின்சக்தியும் பெற்று வளமடைந்து வருகின்றன. எங்கள் பணியும் தொடர்ந்து மக்களுக்கு பயன்பெறுமென்று உறுதி கூறுகிறோம்.

**தி சௌத் மதராஸ்**

**எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்**

**தென்னூர், திருச்சிராப்பள்ளி-17**

*With the best complements of*

# THE METTUR CHEMICAL & INDUSTRIAL CORPORATION LIMITTED

*Registered Office:*

METTUR DAM, B.S.

(TAMIL NADU)

★

*Manufacturers of*

CAUSTIC SODA, STABLE BLEACHING POWDER, METHYL CHLORIDE METHYLENE DICHLORIDE, CARBON TETRACHLORIDE, CHLOROFORM, LIQUID CHLORINE, HYDROCHLORIC ACID, POTASSIUM CHLORATE, CALCIUM CHLORIDE, SULPHATE OF ALUMINA CHEMICAL LIME, COMMON SALT, VANASPATI, REFINED VEGETABLE OILS AND TOILET & WASHING SOAPS

கும்பாபிஷேகங் கொள்ளும்

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருவருளால் எல்லா

நன்மைகளும் பெருகப் பிரார்த்திக்கின்றோம்

கல்யாணப்பட்டு மற்றும் நயம் மிக்க ஜவுளிகள், அனைவருக்கும்

ஏற்ற தரம்மிக்க ரெடிமேடு ஆடைகள் வாங்கச் சிறந்த இடம்

நாகரிக தையலக வசதியும் உண்டு

# சாரதாஸ்

ஏர்கண்டிஷன் வசதியுள்ளது

போன்: 7077

32, என். எஸ். பி. ரோடு, திருச்சிராப்பள்ளி-2.

## கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்

(பதிவு அலுவலகம்: கரூர்)

*

டிபாசிட்டுகளுக்கு அளிக்கப்படும் அதிகப்பட்ச வட்டி 7½% பி. ஏ.

அறநிலையங்கள் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் நிதிகளுக்கு ½% கூடுதல் வட்டி உண்டு.

*

சேவிங்ஸ் கணக்கிற்கு 4% பி. ஏ. வட்டி.

வாரம் ரூ. 5000 வரை செக் மூலம் பெற வசதியுண்டு.

*

விபரங்களுக்கு அணுகவும்:

ஜி. எஸ். அண்ணுசாமி,

சேர்மன்.

*With the compliments of*

**DALMIA CEMENT (BHARAT) LIMITED**

**Dalmiapuram P. O., Tiruchirapalli Dist.**

(TAMIL NADU)

*Manufacturers of*

**'ROCKFORT' Brand**

**DALMIA Portland and Pozzolana Cements**

**Also**

**Mine-Owners and Suppliers of**

**High Grade Iron Ore for Export**

*Head Office*: 4, Scindia House, New Delhi-1

POST BOX No. 72 GRAMS: MURASU

**THANJAI MALAI MURASU**

[TAMIL DAILY]

**8, McDONALD'S ROAD, TIRUCHIRAPALLI-1**

பல்லாயிரக்கணக்கான, பல்வேறு வகையான வாசகர்களை விளம்பரங்கள் மூலம் கவர்ந்திழுக்க உங்களுடைய சேவையில் ஏழு பதிப்புக்கள் சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து வெளிவருகிறது.

**மாலை முரசு**
8, மக்டொனல்ட் ரோடு,
திருச்சி-1
போன்: 5173 and 7335

**மாலை முரசு குரூப்**
2/16, மவுண்ட் ரோடு,
சென்னை-2
போன்: 84605, 82405, 84211

போன் : { கடை : 4165
வீடு : 6856

திருச்சியில்
பட்டு ஜவுளிகளும்
மில் & கைத்தறி ஜவுளிகளும்
வாங்கச் சிறந்த ஸ்தாபனம்

**பேன்ஸி ஹால் (P.R.K.)**

*

**கிருஷ்ண அய்யர்**

பட்டு, கைத்தறி, மில் & ஜவுளி வியாபாரம்

33, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு

**திருச்சிராப்பள்ளி-2**

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் திருவருள்
எல்லா உலகங்களிலும் உள்ள
எல்லாப் படைப்புக்களுக்கும் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்

ஸ்ரீ சிதம்பர விலாஸ் மோட்டார் ஸர்விஸ், துறையூர்
துவாரகா டிரான்ஸ்போர்ட்ஸ், தஞ்சாவூர்
ஸ்ரீ சிதம்பர விலாஸ் ஏஜன்ஸீஸ்
ESSO: டீலர்ஸ், திருச்சி